# லெனின்

## என்ன செய்ய வேண்டும்?



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!


## வி. இ. லெனின்


# என்ன செய்ய வேண்டும்?

## நம் இயக்கத்தின் சூடேறிய பிரச்சினைகள்[1]


முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை



C-013.
N. C. B. H.
MADRAS-98
- ரூ 5.00.-

மொழிபெயர்ப்பாளர்: ஆர். கே. கண்ணன்

பதிப்பாளர் குறிப்பு

வி. இ. லெனினது "என்ன செய்ய வேண்டும்?" என்னும் நூலின் இந்த மொழிபெயர்ப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் கீழுள்ள மார்க்ஸிய-லெனினியக் கல்லூரி தயாரித்த வி. இ. லெனின் நூல் திரட்டின் 5ம் பதிப்பின் 6ம் தொகுதிப்படி செய்யப்பட்டுள்ளது.

© தமிழ் மொழிபெயர்ப்பு
"முன்னேற்றப் பதிப்பகம்", 1976

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102 - 808}{014(01) - 81}$ без объявл. 0101020000

பொருளடக்கம்

முகவுரை . . . . . . . . . . . . 7

I வறட்டுச் சூத்திர வாதமும் ''விமர்சனச் சுதந்தரமும்'' 11

அ. ''விமர்சனச் சுதந்தரம்'' என்பதின் பொருள் என்ன? . . . . . . . . . . . . . . 11

ஆ. ''விமர்சனச் சுதந்தரத்தின்'' புதிய பரிந்துரையாளர்கள் . . . . . . . . . . . . . 17

இ. ருஷ்யாவில் விமர்சனம் . . . . . . . . . 25

ஈ. தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எங்கெல்ஸ் . . . . . . 36

II மக்களின் தன்னியல்பும் சமூக-ஜனநாயகவாதிகளின் உணர்வும் . . . . . . . . . . . . . . 45

அ. தன்னியல்பான எழுச்சியின் தொடக்கம் . . 46

ஆ. தன்னியல்பை வழிபடுதல். ''ரபோச்சயா மிஸ்ல்'' . . . . . . . . . . . . . . 52

இ. ''சுயவிடுதலைக் குழுவும்'' ''ரபோச்சியே தேலோவும்'' . . . . . . . . . . . . 67

III தொழிற்சங்கவாத அரசியலும் சமூக-ஜனநாயகவாத அரசியலும் . . . . . . . . . 82

அ. அரசியல் கிளர்ச்சியும் அதைப் பொருளாதாரவாதிகள் கட்டுப்படுத்துவதும் . . . . . . 83

ஆ. பிளெஹானவின் அறிவை மார்தினவ் ஆழப்படுத்திய கதை . . . . . . . . . . . 100

இ. அரசியல் அம்பலப்படுத்தல்களும் ''புரட்சிகர மான நடவடிக்கைக்கான பயிற்சியும்'' . . . . 105
ஈ. பொருளாதாரவாதத்துக்கும் பயங்கரவாதத்துக் கும் பொதுவாக இருப்பது என்ன? . . . . . 115
உ. ஜனநாயகத்துக்கு முன்னணிப் போராளி தொழி லாளி வர்க்கம் . . . . . . . . . . . 120
ஊ. மீண்டும் ''தூற்றுவோர்'' ''மருட்டுவோர்'' எனும் பேச்சு . . . . . . . . . . . 145

IV பொருளாதாரவாதிகளின் பக்குவமின்மையும் புரட்சியாளர்களின் அமைப்பும் . . . . . . 150
அ. பக்குவமின்மை என்பது என்ன? . . . . . 152
ஆ. பக்குவமின்மையும் பொருளாதாரவாதமும் . 157
இ. தொழிலாளிகளின் அமைப்பும் புரட்சியாளர் களின் அமைப்பும் . . . . . . . . . . . 168
ஈ. அமைப்பு வேலையின் செயல் பரப்பு . . . . 193
உ. ''சதிவேலைக்கான'' அமைப்பும் ''ஜனநாயக வாதமும்'' . . . . . . . . . . . . 203
ஊ. உள்ளூர் வேலையும் அனைத்து ருஷ்ய வேலை யும். . . . . . . . . . . . . . 217

V ஓர் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகைக்கான ''திட்டம்'' . . . . . . . . . . . 233
அ. ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரை யால் கோபமடைந்தவர்கள் யார்? . . . . . 235
ஆ. கூட்டு அமைப்பாளராக ஒரு பத்திரிகை இருக்க முடியுமா? . . . . . . . . . . . . 243
இ. என்ன மாதிரியான அமைப்பு நமக்கு வேண் டும்? . . . . . . . . . . . . . . 262

முடிவு . . . . . . . . . . . . . . 273
பிற்சேர்க்கை. ''ரபோச்சியே தேலோவுடன்'' ''இஸ்க் ராவை'' ஒன்றுபடுத்தும் முயற்சி. . . . . . 278
''என்ன செய்ய வேண்டும்?'' ஒரு திருத்தம் . . . 289
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . 291
பெயர்ப் பட்டியல் . . . . . . . . . . . 329

''...கட்சிப் போராட்டங்கள் ஒரு கட்சிக்கு வலிமையும் உயிர்ச் சக்தியும் தருகின்றன; ஒரு கட்சி யின் பலவீனத்துக்கு அதன் செறி வின்மையும், தெளிவான எல்லைப் பாகுபாடுகளைக் குழப்புதலும் மிகப்பெரிய சான்ருகும்; தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதின் வழியே கட்சி மேலும் வலுப் பெறும்...''

*(1852 ஜூன் 24ல் லஸ்ஸால் மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்திலிருந்து)*

## முகவுரை

ஆசிரியரின் முதல் திட்டப்படி, ''எங்கிருந்து தொடங்குவது?''[2] (இஸ்க்ரா,[3] இதழ் 4, மே 1901) எனும் கட்டுரையில் வெளியிட்ட கருத்துக்களை விபரமாக விளக்குவதற்கு இக்குறுநூல் பயன்படுத்தப்படுவதாக இருந்தது. அந்தக் கட்டுரையில் நாம் கொடுத்த வாக்குறுதியை (தனிப்பட்ட பல உசாவல்களுக்கும் கடிதங்களுக்கும் மறுமொழியாகத் திரும்பச் சொன்ன வாக்குறுதியை) நிறைவேற்றுவதில் தாமதமானதற்கு முதற்கண் வாசகரிடம் மன்னிப்புக் கோரவேண்டும். இத்தாமதத்திற்கான காரணங்களில் ஒன்று, சென்ருண்டு (1901) ஜூனில் வெளிநாடுகளிலுள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்புகள் அனைத்தையும் ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சியாகும்.[4] இம்முயற்சியின் விளைவுகளுக்காகக் காத்திருந்தது இயல்பே. ஏனெனில், அது வெற்றிபெற்றிருந்தால் அமைப்பு பற்றிய இஸ்க்ராவின் கருத்தோட்டங்களைச் சற்று வேருன அணுகுவழியே தெளிவாக்குவது ஒருக்கால் அவசியமாகியிருக்கலாம்; எப்படி இருந்த போதிலும், அப்படிப்பட்ட வெற்றி ருஷ்ய சமூக-ஜனநாயகவாத இயக்கத்தில் இரண்டு போக்குகள் இருப்பதற்கு வெகு விரைவிலே முற்றுப்புள்ளி வைக்கும் வாய்ப்பு பெற்றிருந்தது. அம்முயற்சி தோற்றதை வாசகர் அறிவார்; ரபோச்சியே தேலோ[5] தனது 10ம் இதழில் ''பொருளாதாரவாதத்தின்''[6] திசையில் புதிதாகத் திரும்பிய பின் அம்முயற்சி தோற்றுத்தீரவேண்டியதாக இருந்தது, இதை நாம் கீழே விளக்கிக் காட்ட இருக்கிருேம். இந்தப் போக்கு செறிவின்றியும் வரையறை கெட்டும் இருந்தது.

அக்காரணம் பற்றியே நிலேப்பிடிப்புள்ளதாகவும் பல்வேறு வடிவங்களில் தன்னை மீண்டும் மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது, அதை எதிர்த்து உறுதி யான போராட்டம் நடத்துவது முற்றிலும் அவசியம் என்று தெரிந்தது. அதன்படியே, இக்குறுநூலின் முதல் திட்டம் மாற்றப்பட்டு கணிசமாக விரிவாக்கப்பட்டது.

இதன் முதன்மையான உரைப்பொருள், ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையில் எழுப்பிய மூன்று பிரச்சினைகள்—நமது அரசியல் கிளர்ச்சியின் தன்மையும் முதன்மையான உள்ளடக்கமும்; நமது அமைப்புத்துறைப் பணிகள்; ஒரேநேரத்தில் பல்வேறு புறங்களிலிருந்து ஒரு போராட்ட ஊக்கமுள்ள அனைத்து ருஷ்ய அமைப்பைக் கட்டுவதற்கான திட்டம்—என்று இருந்திருக்க வேண்டியது. இப்பிரச்சினைகள் வெகுகாலமாக ஆசிரியர் மனத்தைக் கவர்ந்திருந்தன; ரபோச்சயா கஸேத்தா[7] பத்திரிகையை மீண்டும் தொடங்குவதற்குச் செய்த, தோல்வியிலே முடிந்த, முயற்சிகளில் ஒன்றின்போது அதில் அவற்றை ஆசிரியர் எழுப்ப முயன்றார் (அத்தியாயம் V பார்க்க). இம்மூன்று பிரச்சினைகளை மட்டும் பகுத்தாய்வதோடு இக்குறுநூலை நிறுத்திக் கொள்வது, முற்றாகவோ அநேகமாகவோ சர்ச்சை யில் ஈடுபடாமலே முடிந்தவரை நேர்நிலையான வடிவிலே எமது கருத்துக்களை வெளியிடுவது என்றிருந்த முதல் திட்டம் அறவே சாத்தியமற்றது என்று தெரிந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு புறத்தில், நாம் நினைத்ததை விட எவ்வளவோ விடாப்பிடிப்புள்ளதாக ''பொருளாதாரவாதம்'' இருக்கக் கண்டோம் [''பொருளாதாரவாதம்'' என்கிற சொல்லை விரிந்த பொருளில் பயன்படுத்துகிறோம்; இஸ்க்ரா, 12ம் இதழில் (டிஸம்பர் 1901), ''பொருளாதாரவாதத்தின் ஆதரவாளர்களுடன் ஓர் உரையாடல்'' எனும் தலைப்பு கொண்ட கட்டுரையில் விளக்கியிருக்கிறபடி பயன்படுத்து கிறோம்; அந்தக் கட்டுரை இக்குறுநூலுக்கு ஒரு பொழிப்புரை என்று சொல்லலாம்]. மேற்குறிப்பிட்ட மூன்று பிரச்சினை களுக்குரிய தீர்வு சம்பந்தமான வேற்றுமைகளை விபரங்களைப் பற்றிய வேற்றுமைகளைக் கொண்டு விளக்குவதைவிட ருஷ்ய சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலுள்ள இரண்டு போக்கு களிடையே இருக்கும் அடிப்படையான எதிர்நிலையைக்

கொண்டு எவ்வளவோ மேலாக விளக்க முடியும் என்று ஐயத்திற்கிடமின்றி தெளிவாயிற்று. மறுபுறத்தில், இஸ்க்ராவில் உள்ள நம் கருத்துக்களின் நடைமுறைச் செயல்பாடு குறித்து ''பொருளாதாரவாதிகளுக்கு'' இருக்கிற மனக்கலக்கத்திலிருந்து நாம் உண்மையிலேயே அடிக்கடி வெவ்வேறு மொழிகளிலே பேசுகிறோம் என்றும், எனவே அடியிலிருந்து தொடங்காமல் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியாது என்றும், எல்லாப் ''பொருளாதாரவாதிகளுடனும்'' உள்ள நம் எல்லா அடிப்படையான வேற்றுமையம்சங்களையும் மிகமிக எளிய நடையில், எண்ணிறைந்த ஸ்தூலமான எடுத்துக் காட்டுகளைக் காட்டி, முறைமையாகத் ''தெளிவுபடுத்துவதற்கு'' முயற்சி செய்யப்படவேண்டும் என்றும் துல்லியமாகத் தெரிந்தது. இப்படிப்பட்ட ''தெளிவுபடுத்தும்'' முயற்சியை மேற்கொள்வது என்று நான் தீர்மானித்தேன்; அது அக்குறுநூலைப் பெரிதும் வளர்த்து விடும், பிரசுரிப்பதைத் தாமதப்படுத்தி விடும் என்பதையும் முற்றுக உணர்ந்திருந்தேன்; ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையில் நான் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேறு வழியொன்றும் எனக்குத் தென்படவில்லை. ஆக, தாமதத்திற்கு மன்னிப்புக் கோருவதோடு நான் இக்குறுநூலின் முக்கியமான இலக்கியக் குறைபாடுகளுக்காகவும் கூடுதலாக மன்னிப்புக் கோரவேண்டும். மிக்க அவசரத்துடனும், பிற பல்வகைப்பட்ட பணிகள் அடிக்கடி குறுக்கிட்டுவந்த நிலைமையிலும் நான் வேலை செய்ய வேண்டியிருந்தது.

மேற்சொன்ன மூன்று பிரச்சினைகளைப் பரிசீலிப்பதே இக்குறுநூலின் முதன்மையான உரைப்பொருளாக இன்னமும் இருந்து வருகிறது; எனினும், மேலும் பொதுப்படையான தன்மையுள்ள இரண்டு பிரச்சினைகளை—''விமர்சனச் சுதந்தரம்'' போன்ற ஓர் ''அப்பாவித்தனமான'' ''இயல்பான'' முழக்கம் ஏன் நமக்கு உண்மையாகவே ஒரு போர்க் குரலாக இருக்கவேண்டும், தன்னியல்பான வெகுஜன இயக்கம் சம்பந்தமாக சமூக-ஜனநாயகவாதிகளின் பாத்திரம் பற்றிய அடிப்படைப் பிரச்சினையிலுங்கூட நாம் ஏன் உடன்பாட்டுக்கு வர முடியாது, என்பவற்றை—வைத்துத் தொடங்குவது அவசியம் என்று கண்டேன். மேலும், அரசியல் கிளர்ச்சியின் தன்மை, உட்பொருள் மீதான நமது கருத்துக்

களைப்பற்றிய தெளிவுரையானது தொழிற்சங்க வகைப்பட்ட அரசியலுக்கும் சமூக-ஜனநாயகவாத அரசியலுக்கும் உள்ள வேற்றுமை பற்றிய விளக்கமாக வளர்ந்தது, அமைப்புத் துறைப் பணிகள் மீதான நமது கருத்துக்களைப் பற்றிய தெளிவுரையானது ''பொருளாதாரவாதிகளுக்குத்'' திருப்தியளிக்கிற தேர்ச்சிநயமற்ற வழிமுறைகளுக்கும் நாம் இன்றியமையாததாகக் கருதும் புரட்சியாளர்களின் அமைப்புக்கும் உள்ள வேற்றுமை பற்றிய விளக்கமாக வளர்ந்தது. மேலும், ஓர் அனைத்து-ருஷ்ய அரசியல் பத்திரிகைக்குரிய ''திட்டத்தை'' மேலும் வற்புறுத்தி முன்வைக்கிறேன்; காரணம், அதற்கெதிராக எழுப்பும் ஆட்சேபணைகள் நிலைக்கக் கூடியவையல்ல; மற்றொரு காரணம், நமக்கு வேண்டிய அமைப்பைப் படைப்பதற்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒரே காலத்தில் எப்படி நாம் வேலைதொடங்க முடியும் என்று ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையில் நான் எழுப்பிய கேள்விக்கு உண்மையான பதில் எதுவும் தரப்படவில்லை. இறுதியாக, ஈற்றுப் பகுதியில் நான் காட்ட நினைக்கிறேன், ''பொருளாதாரவாதிகளோடு'' நிர்ணயமாக முறித்துக் கொள்வதைத் தடுக்க நம்மால் முடிந்ததனைத்தையும் செய்தோம், எனினும் அந்த முறிவு தவிர்க்கவொண்ணாததாக நிரூபித்துக் கொண்டது, என்று; ரபோச்சியே தேலோ ஒரு தனிச்சிறப்பான குறிபொருள் பெற்றதற்கு, சொல்லப்போனால் ஒரு ''வரலாற்றுவகைப் பட்ட'' குறிபொருள் பெற்றதற்குக் காரணம் அது முழுமையாகவும் எடுப்பாகவும் வெளியிட்டது முரணற்ற ''பொருளாதாரவாதத்தை'' அல்ல, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வரலாற்றில் ஒரு மொத்தமான காலப்பகுதிக்கு இனங்காட்டத்தக்க முனைப்புக்கூறாக இருக்கும் குழப்பத்தையும் ஊசலாட்டத்தையுமேயாகும், என்று; எனவே, ரபோச்சியே தேலோ-உடன் நடத்தும் சர்ச்சை முதற்பார்வையில் மிதமிஞ்சிய விபரத்துடன் கூடியதாகத் தோன்றக்கூடும் என்றாலும் அந்த சர்ச்சை குறிபொருள் உள்ளதாக ஆகிறது, ஏனெனில் இந்தக் காலப்பகுதிக்கு முற்றாக முற்றுப்புள்ளி இடாதவரை நாம் முன்னேறவே முடியாது, என்று காட்ட நினைக்கிறேன்.

**நி. லெனின்**

*பிப்ரவரி 1902*

## I

## வறட்டுச் சூத்திர வாதமும் "விமர்சனச் சுதந்தரமும்"

### அ. ''விமர்சனச் சுதந்தரம்'' என்பதின் பொருள் என்ன?

''விமர்சனச் சுதந்தரம்'' தற்சமயம் மிகவும் ஃபேஷனுகி விட்ட முழக்கமாயுள்ளது, சோஷலிஸ்டுகளுக்கும் ஜனநாயக வாதிகளுக்கும் இடையே நடக்கும் சர்ச்சைகளில் மிகவும் அடிக்கடிப் பயன்படுத்தப்படுவதும் அதுவே, என்பதில் ஐயமில்லை. முதல் தோற்றத்திலே, வழக்காடும் தரப்புகளில் ஒரு தரப்பினர் முழுப்பற்றுடன் விமர்சனச் சுதந்தரத்துக்கு வேண்டுகோள் விடுப்பதை விட விநோதமானது வேறொன்று மில்லை என்று தோன்றக்கூடும். விஞ்ஞானத்துக்கும் விஞ்ஞான விசாரணைக்கும் சுதந்தரத்தை உத்தரவாதம் செய்யும் பெரும்பான்மையான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சட்டத்துக்கு எதிராக முன்னேற்றக் கட்சிகளில் குரல் எழுப்பியதுண்டா? வழக்காடுகிறவர்களிடையேயுள்ள பூசலின் சாராம்சத்தை இன்னமும் ஊடுருவியறியாத நிலையில் ஒவ்வொரு சந்துமுனையிலும் ஃபேஷனுகிவிட்ட இந்த முழக்கம் மீண்டும் மீண்டும் எழுப்பப்படுவதைக் கேட்ட பார்வையாளர் ''இதில் ஏதோ கோளாறு இருக்கிறது'' என்று சொல்வார், ''வழக்காற்றில் முறைமை பெற்று கிட்டத் தட்ட பிறப்புப்பெயர்களாகிவிட்ட செல்லப்பெயர்கள் மாதிரி இந்த முழக்கம் சம்பிரதாயச் சொற்றொடர்களில் ஒன்று போலும்.''

உண்மையிலே, இக்காலத்திய சர்வதேச* சமூக-ஜனநா

---

* இடையே சொல்லிவைப்போம்: நவீனகால சோஷலிஸ வரலாற்றில் இது ஒருக்கால் அலாதியான, தன் வழியிலே நிம்மதியளிக்கத்தக்க தோற்றமாக உள்ளது—அதாவது,

யகவாதத்தில் இரண்டு போக்குகள் உருப் பெற்றுள்ள விஷயம் ஒன்றும் இரகசியமல்ல. இவ்விரு போக்குகளிடையே அவ்வப்பொழுது சச்சரவு கொழுந்துவிட்டெரிவதும் அவ்வப் பொழுது அணைந்து படாடோபமான ''போர்நிறுத்த ஒப்பந் தங்களின்'' சாம்பலுக்கடியில் கங்காகக் கனிந்தெரிவதுமாக இருக்கிறது. ''காலாவதியாகிவிட்ட வறட்டுச் சூத்திர வகைப் பட்ட'' மார்க்ஸியத்தின்பால் ''விமர்சனரீதியான'' கண் ணோட்டத்தை மேற்கொள்ளும் ''புதிய'' போக்கின் சாராம் சத்தை பெர்ன்ஷ்டைன் போதுமான அளவுக்குத் தெளிவுடன் முன்வைத்தார், அதை மில்லெராண்ட் நிதர்சனப்படுத்திவிட்டார்.

சமூக-ஜனநாயகவாதம் சமுதாயப் புரட்சிக்கான கட்சி யாக இருப்பதை விட்டொழித்துச் சமுதாயச் சீர்திருத்தங் களுக்கான ஜனநாயகக் கட்சியாக மாறித் தீரவேண்டுமாம். இந்த அரசியல் கோரிக்கையைச் சூழ்ந்தவாறு நல்லிசைவான

---

சோஷலிஸ்டு இயக்கத்தினுள்ளே இருக்கும் பல்வேறு போக்கு களின் சச்சரவு தேசியநிலையிலிருந்தது போய் சர்வதேசநிலைக்கு வந்துள்ளது. முன்பெல்லாம், லஸ்ஸால் ஆதரவாளர்களுக்கும் ஐஸனுக் வழியினருக்கும்,[8] கெட்டு ஆதரவாளர்களுக்கும் சாத் தியப்பாடுவாதிகளுக்கும்,[9] ஃபேபியஸ்வாதிகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும்,[10] நரோத்னயா வோல்யா ஆதர வாளர்களுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும்,[11] இடை யேயுள்ள வழக்குகள் வெறுமே தேசிய வரம்புக்குள் கட்டுண்டு, வெறுமே தேசிய முனைப்புக்கூறுகளைப் பிரதிபலித்துகொண் டும் வெவ்வேறு மட்டங்களிலே என்று சொல்லக்கூடிய வகையில் சென்றுகொண்டும் இருந்தன. தற்காலத்தில் (இன்று வெளிப்படையாகியுள்ளபடி), ஆங்கிலேய ஃபேபியஸ்வாதி களும், பிரெஞ்சு அமைச்சரவைவாதிகளும்,[12] ஜெர்மன் நாட்டு பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களும்,[13] ருஷ்ய நாட்டு விமர்சகர்களும்[14]—இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத் தைச் சேர்ந்தவர்களாயுள்ளனர், ஒருவரை யொருவர் ஏற்றிப் போற்றிக் கொள்கின்றனர், ஒருவரிடமிருந்து மற்றவர் கற்கின்றனர், எல்லோரும் திரண்டெழுந்து ''வறட்டுச் சூத்திர வகைப்பட்ட'' மார்க்ஸியத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்துகின்றனர். சோஷலிஸ்டுச் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நடக்கும் இந்த முதன்முதலான, உண்மையிலே சர்வதேச ரீதியான போராட்டத்தில் ஐரோப்பாவில் நெடுங்காலமாக ஆட்சிபுரிந்துவரும் அரசியல் பிற்போக்கை வீழ்த்தி முடிக்கும் அளவுக்குப் புரட்சிகரமான சர்வதேச சமூக-ஜனநாயகவாதம் ஒருக்கால் வலிமை பெறும்.

''புதிய'' வாதங்களும் பகுத்தறிவாய்வுகளும் கொண்ட பீரங்கிப்படையை முழுசாக நிறுத்தியிருக்கிறுர் பெர்ன்ஷ்டைன். சோஷலிஸத்தை விஞ்ஞான அடிப்படையில் வைத்திடும் சாத்தியப்பாடு மறுக்கப்பட்டது, சோஷலிஸத்தின் அவசியத்தையும் தவிர்க்கவொண்ணுத் தன்மையையும் வரலாறு வழிப்பட்ட பொருள்முதல்வாதப் பார்வைநிலையிலிருந்து நிதர்சனப்படுத்தும் சாத்தியப்பாடும் மறுக்கப்பட்டது. வளர்ந்துவரும் வறுமையாக்கப்படல் எனும் விஷயமும், பாட்டாளிமயமாக்கும் நிகழ்வுப் போக்கும், முதலாளித்துவ முரண்பாடுகள் கடுமையாக்கப்படுதலும் மறுக்கப்பட்டது; ''இறுதி இலட்சியம்'' எனும் கருத்துருவமே தவறுனது என்று பிரகடனப்படுத்தப்பட்டது, பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் எனும் கருத்து முற்றுக நிராகரிக்கப்பட்டது. கோட்பாடு நிலையிலே மிதவாதத்துக்கும் சோஷலிஸத்துக்கும் இடையேயுள்ள எதிர்நிலை மறுக்கப்பட்டது. வர்க்கப் போராட்டம் பற்றிய தத்துவம் மறுக்கப்பட்டது; காரணம், பெரும்பான்மையினரின் சித்தப்படி ஆளப்பட்டுவரும் முற்றும் ஜனநாயக வழிப்பட்ட சமுதாயத்கோடு அதைப் பொருத்திச் செயற்படுத்த முடியாது, முதலியவையாம்.

இவ்வழியாக, புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதத்தை விட்டு முதலாளிவர்க்க சமுதாயச் சீர்திருத்தவாதத்துக்கு நிர்ணயமாகத் திரும்பவேண்டும் என்கிற கோரிக்கையோடு கூடவே மார்க்ஸியத்தின் எல்லா அடிப்படைக் கருத்துக்களைப் பற்றிய முதலாளிவர்க்க விமர்சனத்தின்பால் அதே நிர்ணயமான திருப்பம் ஏற்பட்டது. மார்க்ஸியத்தைப் பற்றிய இந்த விமர்சனம் நெடுநாளாக எண்ணிறைந்த குறுநூல்களிலேயும் வரிசைத்தொடரான புலமைமிக்க தனிநூல்களிலேயும் அரசியல் மேடையிலிருந்தும் பல்கலைக்கழகப் பதவிபீடங்களிலிருந்தும் நெறிப்படுத்தப்பட்டுவருவதைப் பார்க்கையில், படித்த வர்க்கங்களின் இளந்தலைமுறை முழுவதும் பல்லாண்டுகளாக இவ்விமர்சனத்திலே முறைமையுடன் வளர்க்கப்பட்டுவந்துள்ளதைப் பார்க்கையில், சமூக-ஜனநாயகவாதத்தில் இந்தப் ''புதிய விமர்சனப்'' போக்கு முழுமேனியுடன் உதித்ததிலே வியப்பேதும் இல்லை (ஜூபிட்டர் தலையிலிருந்து மினர்வா உதித்ததுபோல).[15] இப்புதிய போக்கின் உள்ளடக்கம் வளர்ந்து உருப்பெறத் தேவையின்றி,

முதலாளிவர்க்க இலக்கியத்திலிருந்து முழுசாக சோஷலிஸ்டு இலக்கியத்துக்கு மாற்றப்பட்டது.

மேலே போவோம். பெர்ன்ஷ்டைனின் தத்துவார்த்த விமர்சனமும் அரசியல் ஆவலாதிகளும் இன்னமும் யாருக்கேனும் தெளிவாகாமல் இருக்குமானால், அந்தப் ''புதிய வழிமுறையை'' நிதர்சனப்படுத்தும் சிரமத்தை பிரெஞ்சுக்காரர்கள் எடுப்பாக எடுத்துநிறைவேற்றிவிட்டார்கள். இந்த எடுத்துக்காட்டிலேகூட ''வேறெந்த நாட்டையும்விட இந்த நாட்டிலேதான் வரலாறுவழிப்பட்ட வர்க்கப் போராட்டம் ஒவ்வொரு தடவையிலும் முடிவு காணும் வகையில் நடத்தப்பட்டுள்ளது'' (மார்க்ஸ் எழுதிய 18ம் புரூமேர் எனும் நூலுக்கு எங்கெல்ஸ் எழுதிய அறிமுகம்) எனும் தனது பழம் புகழை பிரான்ஸ் நியாயப்படுத்தியுள்ளது. தத்துவம் பேசுவதிலே இறங்காமல் செயலாற்றத் தொடங்கிவிட்டார்கள் பிரெஞ்சு சோஷலிஸ்டுகள். எல்லாப் பின்விளைவுகளோடுகூட உடனடியாக ''பெர்ன்ஷ்டைன்வாதத்தைச் செயற்படுத்துவதற்கு'' பிரான்ஸில் ஜனநாயக வழியிலே மேலும் உயர்வாக வளர்ந்திருந்த அரசியல் நிலைமைகள் இடமளித்தன. நடைமுறை வகைப்பட்ட பெர்ன்ஷ்டைன் வாதத்துக்கு மில்லெராண்ட் சிறந்த எடுத்துக்காட்டு வழங்கியுள்ளார்; அவரைத் தாங்கவும் போற்றிப் பேசவும் எவ்வளவோ ஆர்வத்துடன் பெர்ன்ஷ்டைனும் வோல்மரும் ஓடிவருவதற்குக் காரணம் இல்லாமலில்லை. உண்மையிலே சொன்னால், சமூக-ஜனநாயகவாதம் சாராம்சத்திலே சீர்திருத்தத்துக்காக நிற்கும் ஒரு கட்சியாக இருந்து அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவும் போதிய தைரியம் பெற்றிருக்குமானால் ஒரு சோஷலிஸ்டு முதலாளிவர்க்க அமைச்சரவையில் சேருவதற்கு உரிமையுண்டு என்பது மட்டுமல்ல, அப்படிச் சேருவதற்கு எப்போதும் முயன்றும் வரவேண்டும். சாராம்சத்திலே ஜனநாயகம் என்பது வர்க்க ஆதிக்கத்தின் ஒழிப்பு என்று பொருள்படுமேயானால் ஏன் ஒரு சோஷலிஸ்டு அமைச்சர் வர்க்கப்பங்காளியுறவு பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி முதலாளித்துவ உலகம் முழுவதையும் வசியப்படுத்தக் கூடாது? தொழிலாளிகளைப் போலீஸ் சுட்டுத்தள்ளி நூற்றியோராவது தடவையாக, ஆயிரத்தியோராவது தடவையாக வர்க்கங்களின் ஜனநாயகப் பங்காளியுறவின் உண்மையான தன்மையை

வெளிப்படுத்திய பிறகும் அவர் ஏன் அமைச்சரவையில் நீடித்திருக்கக் கூடாது? தூக்குமரம் குண்டாந்தடி நாடுகடத்தலின் வீரன் என்கிற ஒரே பெயரால் பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் அழைக்கிறார்களே, அந்த ஜார் மன்னனை வரவேற்பதில் அவர் ஏன் நேரில் கலந்துகொள்ளக்கூடாது? உலகத்தின் எதிரே இவ்வாறு சோஷலிஸத்தை அவமானப்படுத்துவதற்கும் சுயமாக இழிவடைவதற்கும் பரிசாக, உழைக்கும் மக்களின் சோஷலிஸ்டு உணர்வை—நமது வெற்றிக்கு உத்தரவாதம் செய்யமுடிகிற ஒரே அடிப்படையை—கெடுப்பதற்குப் பரிசாக இருப்பது அற்பச் சீர்திருத்தங்களுக்குப் பகட்டான திட்டங்கள் போடுவதேயாகும்; அதைவிட எவ்வளவோ மேலாக முதலாளிவர்க்க அரசாங்கங்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறதே!

சோஷலிஸத்தில் உதித்துள்ள ''விமர்சன வகைப்பட்ட'' போக்கு ஒரு புது வகையான சந்தர்ப்பவாதம் தவிர வேறில்லை என்பதை வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டாலொழிய காணுமல் இருக்க முடியாது. அணிந்துகொள்ளும் பட்டுப் பீதாம்பரங்களை வைத்தோ சூட்டிக்கொள்ளும் படாடோபமான பட்டப்பெயர்களை வைத்தோ மனிதர்களை எடைபோடாமல் அவர்களின் செய்கைகளை வைத்தும் யதார்த்தத்தில் பரிந்துரைக்கிறவற்றை வைத்தும் எடைபோடுவதானல், ''விமர்சனச் சுதந்தரம்'' என்பதின் பொருள் சமூக-ஜனநாயகவாதத்தில் சந்தர்ப்பவாதப் போக்குக்கு வேண்டிய சுதந்தரம், சமூக-ஜனநாயகவாதத்தைச் சீர்திருத்ததுக்கு நிற்கும் ஜனநாயகக் கட்சியாக மாற்றுவதற்கான சுதந்தரம், சோஷலிஸத்தில் முதலாளிவர்க்கக் கருத்துக்களையும் முதலாளிவர்க்கப் போக்குள்ள நபர்களையும் புகுத்துவதற்கான சுதந்தரம் என்று தெளிவாகும்.

சுதந்தரம்—ஒரு மேன்மையான சொல்; எனினும் தொழில்துறைக்குச் சுதந்தரம் என்கிற பெயரால் மிகவும் கொள்ளைக்காரத்தனமான போர்கள் நடத்தப்பட்டுள்ளன, உழைப்புக்குச் சுதந்தரம் என்கிற பெயரால் உழைப்பாளி மக்கள் சூறையாடப் பட்டுள்ளனர். நவீனகாலத்தில் பயன்படுத்தப்படும் ''விமர்சனச் சுதந்தரம்'' என்கிற சொல்லிலும் இதே உள்ளார்ந்த பொய் குடிகொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தில் முன்னேற்றம் செய்திருப்பதாக உண்மையாகவே

உறுதியாக நம்புகிறவர்கள் புதிய கருத்துக்கள் பழைய கருத்துக்களின் பக்கத்திலேயே இருந்துவரட்டும் என்று சுதந்தரம் கோரமாட்டார்கள், பழைய கருத்துக்களுக்குப் பதிலாகப் புதிய கருத்துக்களை வைத்திடும் சுதந்தரமே கோருவார்கள். இன்று கேட்கப்படும் ''விமர்சனச் சுதந்தரம் நீடூழி வாழ்க!'' என்கிற முழக்கம் வெற்றுப் பீப்பாய் பற்றிய கதையைப் பலமாக நினைவுபடுத்துகிறது.

ஒரு செங்குத்தான, கடினமான பாதையிலே ஆளுக்கு ஆள் கை கோத்துக்கொண்டு ஒரு நெருக்கக் கட்டுள்ள குழுவாக நாம் நடையிட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லாப் பக்கங்களிலும் பகைவர்கள் நம்மைச் சூழ்ந்துள்ளனர், அவர்களின் அநேகமாக இடையறாத தாக்குக்கு எதிரே நாம் முன்னேற வேண்டியுள்ளது. சுயேச்சையாக எடுத்துக்கொண்ட முடிவுப்படி பகைவனை எதிர்த்துப் போராடுவதற்காக நாம் ஒன்றுசேர்ந்திருக்கிறோம், அருகாமையிலுள்ள சதுப்புக் குழியை நோக்கிப் பின்வாங்குவதற்காக அல்ல. சதுப்புக்குழி வாசிகள் துவக்கத்திலிருந்தே நம்மைக் குறை கூறி வந்துள்ளனர், நாம் ஒரு தனிக் குழுவாகப் பிரித்துக்கொண்டு போய் விட்டோம் என்று, சமரசப் பாதைக்குப் பதிலாகப் போராட்டப் பாதையைத் தேர்ந்து கொண்டோம் என்று. இப்போது நம்முள் சிலரே ''சதுப்புக்குழியில் இறங்கிவிடலாம், வாருங்கள்!'' என்று கூக்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். நாம் அவர்களின் மானத்தை வாங்கத் தொடங்கினுல் ''பத்தாம் பசலி ஆசாமிகளாக இருக்கிறீர்களே! இன்னும் மேலான பாதையில் செல்வோம், வாருங்கள், என்று அழைத்திடும் சுதந்தரத்தை எங்களுக்கு மறுக்கிறீர்களே, வெட்கமில்லையா உங்களுக்கு!'' என்று பதிலடி கொடுக்கின்றனர். சரிதான், சீமான்களே! எங்களை அழைக்கிற சுதந்தரம் உங்களுக்கு உண்டு; அது மட்டுமல்ல, நீங்கள் விரும்பும் இடத்துக்குப் போகவும் உங்களுக்குச் சுதந்தரம் உண்டு, சதுப்புக்குழிக்குங் கூடப் போகலாம். உண்மையாகச் சொன்னுல், சதுப்புக்குழி தான் உங்களுக்குத் தகுதியான இடம் என்று நினைக்கிறோம், அங்கே போய்ச் சேருவதற்கு உங்களுக்கு எல்லா உதவியும் செய்யவும் நாங்கள் தயார். எங்கள் கையை மட்டும் விட்டு விடுங்கள், இழுத்து நிறுத்தவேண்டாம், சுதந்தரம் எனும் மேன்மையான சொல்லையும் கறைப்படுத்தவேண்டாம்.

ஏனென்றல், நாங்கள் விரும்பும் இடத்துக்குப் போக எங்களுக்கும் ''சுதந்தரம்'' உண்டு, சதுப்புக்குழியை எதிர்த்து மட்டுமின்றிச் சதுப்புக்குழியை நோக்கித் திரும்புகிறவர்களை எதிர்த்தும் போராடும் சுதந்தரம் எங்களுக்கு உண்டு!

## ஆ. ''விமர்சனச் சுதந்தரத்தின்'' புதிய பரிந்துரையாளர்கள்

நிற்க. அண்மையில் இந்த முழக்கத்தை (''விமர்சனச் சுதந்தரம்'') ரபோச்சியே தேலோ (இதழ் 10) பக்திசிரத்தையோடு முன்வைத்திருக்கிறது; அது ''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் சங்கத்தின்''[16] பத்திரிகை; ஒரு தத்துவார்த்த முற்கோளாக அதை முன்வைக்கவில்லை, ஒரு அரசியல் கோரிக்கையாக, ''வெளிநாடுகளில் வேலை செய்து வரும் சமூக-ஜனநாயகவாத அமைப்புகளை ஒன்றுபடுத்துவது சாத்தியமா?'' என்கிற கேள்விக்கு ''நீடித்துப்பயன்படத் தக்க ஒற்றுமைக்கு விமர்சனச் சுதந்தரம் இருந்து தீரவேண்டும்'' என்று விடையளித்த முறையில் முன்வைத்திருக்கிறது (பக்கம் 36).

இக்கூற்றிலிருந்து இரண்டு திட்டமான முடிவுகள் தொடர்கின்றன: (1) பொதுவாக சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்தினுள்ளே இருக்கும் சந்தர்ப்பவாதப் போக்கைத் தனது பாதுகாப்பின்கீழ் எடுத்துக் கொண்டிருக்கிறது ரபோச்சியே தேலோ; (2) ரபோச்சியே தேலோ ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்திலே சந்தர்ப்பவாதத்துக்குச் சுதந்தரம் வேண்டும் என்று கோருகிறது. இவ்விரு முடிவுகளையும் பரிசீலிப்போம்.

''சர்வதேச சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலேயுள்ள மௌண்டன் என்பதற்கும் ஜிரோந்த் என்பதற்கும்[17] இடையே பிளவு ஏற்படும் என்று முன்கூட்டிச் சொல்லும் இஸ்க்ராவின், ஸார்யாவின்,[18] மனப்போக்கைப் பற்றி''* ரபோச்சியே தேலோ ''குறிப்பாக'' வெறுப்படைந்திருக்கிறது.

---

* புரட்சிகரமான பாட்டாளிவர்க்கத்துக்குள்ளே இருக்கும் (புரட்சிகரமானது, சந்தர்ப்பவாதப் போக்கானது எனும்) இரண்டு போக்குகளையும், பதினெட்டாம் நூற்றாண்டில் புரட்சிகரமான முதலாளிவர்க்கத்திற்குள்ளே இருந்த (மௌண்

2—543

ரபோச்சியே தேலோ ஆசிரியர் ப. கிரிச்சேவ்ஸ்கி எழுதுவதாவது: ''பொதுவாகச் சொன்னால், சமூக-ஜனநாயகவாத அணிகளிலே மௌண்டன் குறித்தும் ஜிரோந்த் குறித்தும் பேசப்படும் பேச்சு பொருளாழமற்ற வரலாற்று ஒப்புமையாகும், அது ஒரு மார்க்ஸியவாதியின் பேனமுனையிலிருந்து வருவது வேடிக்கையே. சமுதாயச் சிந்தனை பற்றிய சரித்திராசிரியர்கள் நினைக்கக் கூடிய மாதிரி மௌண்டனும் ஜிரோந்தும் வெவ்வேறான மனப்பாங்குகளையோ அறிவுத் திறப் போக்குகளையோ பிரதிநிதித்துவப் படுத்தவில்லை, வெவ்வேறான வர்க்கங்களை அல்லது மக்கட்பகுதிகளையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன—ஒரு புறத்தில் நடுத்தர முதலாளி வர்க்கம், மறுபுறத்தில் சிறுமுதலாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும், என்றபடி. ஆனபோதிலும், நவீன கால சோஷலிஸ்டு இயக்கத்தில் வர்க்க நலன்களின் சச்சரவு ஏதுமில்லை. பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களையும் உள்ளிட்டு அத்தனை வெவ்வேறான வடிவங்களையும் (கொட்டையெழுத்துக்களில் போட்டது கிரிச்சேவ்ஸ்கி) கொண்டிருக்கும் சோஷலிஸ்டு இயக்கம் முழுவதும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்கள், அரசியல் பொருளாதார விடுதலைக்காக நடக்கும் அதன் வர்க்கப் போராட்டம், எனும் அடிப்படையில் நிற்கிறது'' (பக்கம் 32-33).

துணிவுள்ள வன்கூற்று! அண்மையாண்டுகளில் சோஷலிஸ்டு இயக்கத்தில் ''படிப்பறிவுள்ள'' ஒரு மக்கட்பகுதி விரிவாகக் கலந்துகொண்டு வருவதே இவ்வளவு விரைவாக பெர்ன்ஷ்டைன் வாதம் பரவுவதற்குக் காரணம்; நெடுங்காலத்துக்கு முன்பே குறித்துக் கொள்ளப்பட்ட இந்த விஷயத்தை

---

டன் என்று அறியப்பட்டிருந்த ஜாகொபின் போக்கு, ஜிரோண்ட் என்று அறியப்பட்டிருந்த மற்றொரு போக்கு ஆகிய) இரண்டு போக்குகளுடன் ஒப்புநோக்கி இஸ்க்ரா இதழ் 2ல் (பிப்ரவரி 1901) தலையங்கக் கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. அதை எழுதியவர் பிளெஹானவ். இன்றைய நாள் வரைக்குங்கூட ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்திலே ''ஜாகொபின் போக்கைக்'' குறிப்பிட்டுச் சொல்வதில் கடேட்டுகளும்[19] ''பெஸாகிளாவ்ட்ஸியும்''[20] மென்ஷிவிக்குகளும்[21] ஆசைகொண்டுள்ளனர். சமூக-ஜனநாயகவாதத்தின் வலது சாரிப் பிரிவுக்கு எதிராக முதன்முதலாக இந்தக் கருத்துருவத்தை எப்படி பிளெஹானவ் பயன்படுத்த நேர்ந்தது என்பதைப் பற்றி மட்டும் மௌனம் சாதிக்கவோ மறக்கவோ விரும்புகிறார்கள் அவர்கள். (1907ம் வருடப் பதிப்புக்கு ஆசிரியர் வரைந்த குறிப்பு.—ப-ர்.)

கிரிச்சேவ்ஸ்கி கேள்விப்பட்டதில்லையா? மற்றும் மிக முக்கியமானது என்னவென்றல்—''பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள்'' கூடப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல், பொருளாதார விடுதலைக்காக நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் அஸ்திவாரத்தில் நிற்கிறர்கள் என்கிற அவரது கருத்துக்கு ஆதாரம் என்ன? யாருக்கும் தெரியாது. பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களை இத்துணை முனைப்புடன் தாங்கிப்பேசுவதற்கு ஆதரவாக எந்த வாதமோ பகுத்தறிவாய்வோ தரப்படவில்லை. பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்வதையே இவ்வாசிரியர் திரும்பச் சொன்னல் போதும், அதற்குச் சான்று தேவையில்லை என்று நம்புகிறர் போலும். அந்தப் போக்கின் பிரதிநிதிகள் தங்களைப் பற்றிச் சொல்வதை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருக்கும் இந்த முழுப்போக்கைப் பற்றிய தீர்ப்பை விட ''பொருளாழமற்ற'' விஷயத்தை நினைத்துப் பார்க்க முடியுமா? அதைப் பின்தொடர்ந்து, கட்சி வளர்ச்சியின் இரண்டு வெவ்வேறன,நேரெதிரானவையாயும் இருக்கிற, மாதிரிகள் அல்லது பாதைகள் பற்றி அளிக்கப்படும் ''அறிவுரையை'' விட பொருளாழமற்ற விஷயத்தை நினைத்துப் பார்க்க முடியுமா? (ரபோச்சியே தேலோ, பக்கங்கள் 34-35.) அதாவது, ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் முழு விமர்சனச் சுதந்தரத்தை அங்கீகரிக்கிறர்கள், பிரெஞ்சு சமூக-ஜனநாயகவாதிகள் அங்கீகரிக்கிறதில்லை; அவர்களின் இந்த எடுத்துக்காட்டுதான் ''சகிப்புத்தன்மையின்மையின் தீமையை'' நிரூபித்துக் காட்டுகிறது.

இதற்கு நாம் சொல்லக் கூடியது ஒன்றுதான்: ப.கிரிச்சேவ்ஸ்கி தரும் எடுத்துக்காட்டு, வரலாற்றை உள்ளபடியே ''இலொவைஸ்கி பாணியில்'' கருதிக் கொள்ளும் நபர்கள் சில சமயங்களில் மார்க்ஸியவாதிகள் எனும் பெயரை எடுத்துக் கொள்வதற்குச் சான்ருக உள்ளது. ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சியின் ஒற்றுமையையும் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் ஒற்றுமையின்மையையும் விளக்குவதற்கு இந்நாடுகளின் வரலாற்றிலேயுள்ள தனிச்சிறப்பான முனைப்புக்கூறுகளிலே புகத்தேவையில்லை, ஒன்றில் நிலவும் இராணுவ வகைப்பட்ட அரைகுறையான எதேச்சாதிகார முறை

யின் நிலைமைகளை மற்றொன்றில் நிலவும் குடியரசு வகைப்பட்ட நாடாளுமன்ற முறையின் நிலைமைகளோடு வேறுபடுத்திக்காட்டவும் தேவையில்லை, பாரிஸ் கம்யூனின்[22] பாதிப்புகளையும் சோஷலிஸ்டுகளுக்கெதிரான தனிவிலக்கான சட்டத்தின்[23] பாதிப்புகளையும் பகுத்தாய்வதும் தேவையில்லை, இரு நாடுகளின் பொருளாதார வாழ்க்கையையும் பொருளாதார வளர்ச்சியையும் ஒப்புநோக்கவும் தேவையில்லை, அல்லது ''ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின் ஈடிணையற்ற வளர்ச்சியோடு'' கூடவே, சோஷலிஸத்தின் வரலாற்றிலேயே அலாதியான ஒரு கடுமையான போராட்டம் தவறான தத்துவங்களை (மியுல்பெர்கர், டூரிங்,* கதீடர்-சோஷலிஸ்டுகள்[26]) எதிர்த்து மட்டுமின்றித் தவறான போர்த்தந்திரங்களையும் (லஸ்ஸால்) இன்னோரன்ன பிறவற்றையும் எதிர்த்து

---

* டூரிங்கை எதிர்த்து எங்கெல்ஸ் தாக்குகள் நடத்தி வந்த காலத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின் பல பிரதிநிதிகள் டூரிங்கின் கருத்துக்கள்பால் நாட்டம் கொண்டிருந்தனர்; எங்கெல்ஸ் வெடுவெடுப்புக் காட்டுகிறார், சகிப்புத் தன்மையற்றிருக்கிறார், தோழமையுணர்ச்சியற்ற சர்ச்சை நடத்துகிறார் என்றெல்லாம் பகிரங்கமாகக்கூட ஒரு கட்சிக் காங்கிரஸில் எங்கெல்ஸ் மீது குற்றச் சாட்டுகளைப் பொழிந்தனர். 1877ல் நடந்த காங்கிரஸில்,[24] Vorwärts[25] பத்திரிகையில் எங்கெல்ஸின் கட்டுரைகளை வெளியிடக்கூடாதென்று தடை செய்யவேண்டும், ஏனெனில் ''வாசகர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களுக்கு அவற்றில் அக்கறை கிடையாது'' என்று கூறும் தீர்மானம் ஒன்றை மோஸ்த் என்பவரும் அவரது ஆதரவாளர்களும் கொண்டுவந்தனர், மற்றும் அவற்றை வெளியிட்டதால் கட்சிக்குப் பெரும் நாசம் ஏற்பட்டிருக்கிறதென்றும் டூரிங்கூட சமூக-ஜனநாயகவாதத்துக்குச் சேவைகள் புரிந்துள்ளார் என்றும் வால்டைஹ் என்பவர் பிரகடனப்படுத்தினார்: ''கட்சியின் நலன்களுக்காக நாம் அனைவரையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், விரும்பினால் சர்ச்சைகளைப் பேராசிரியர்கள் நடத்திக் கொள்ளட்டும், ஆனால் அவற்றை நடத்துவதற்கான இடம் Vorwärts அல்ல'' (Vorwärts, இதழ் 65, ஜூன் 6, 1877). ''விமர்சனச் சுதந்தரத்தை'' பாதுகாக்கிறதற்கான மற்றொரு எடுத்துக்காட்டு இங்கே கிடைக்கிறது; ஜெர்மானியர்களின் உதாரணத்தைக் குறிப்பிடுவதில் மிகவும் விருப்பம் காட்டுகிற நமது சட்டசம்மதமான விமர்சகர்களும் சட்டவிரோதமான சந்தர்ப்பவாதிகளும் இதைப் பற்றி ஆழச் சிந்திப்பது நலம்!

நடந்து வந்ததை நினைவூட்டிக்கொள்ளவும் தேவையில்லை. இவை அனைத்தும் தேவையற்றவையாம்! பிரெஞ்சுக்காரர்கள் சண்டையிட்டுக் கொள்ளக் காரணம் அவர்கள் சகிப்புத் தன்மை இல்லாதவர்கள்; ஜெர்மானியர்கள் ஒன்றுபட்டிருக்கக் காரணம் அவர்கள் நல்ல பிள்ளைகள்.

கவனியுங்கள்: நேர்நிகரற்ற கருத்தாழத்தைக் காட்டும் இந்தத் துணுக்கின் நோக்கம் பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களைத் தாங்கிநிறுத்துவதை முறியடிக்கிற உண்மையை ''மறுத்து நிரூபிப்பது'' என்பதே. பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப்போராட்டம் எனும் அடிப்படையில் நிற்கிறார்களா இல்லையா என்கிற கேள்விக்கு வரலாற்றின் அனுபவத்தைக் கொண்டு மட்டுமே முழுமையாகவும் திண்ணமாகவும் விடையளிக்க முடியும். எனவே, இவ்விஷயத்தில் பிரான்ஸின் எடுத்துக்காட்டு தலையாய குறிபொருள் உள்ளது. காரணம், பிரான்ஸிலே மட்டுந்தான் பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள் தமது ஜெர்மன் சகபாடிகளின் உற்சாகமான ஒப்புதலுடன் (ஓரளவுக்கு ருஷ்யச் சந்தர்ப்பவாதிகளின் ஒப்புதலுடனும்; பார்க்க: ரபோச்சியே தேலோ, இதழ் 2-3, பக்கங்கள் 83-84) சுதந்தரமாக, தமது சொந்தக் காலிலே, நிற்க முயன்றார்கள். பிரெஞ்சுக்காரர்களின் ''சகிப்புத்தன்மையின்மை'' பற்றிய சுட்டுக்குறிப்பு—அதன் ''வரலாற்று வகைப்பட்ட'' (நொஸ்திரியோவ் அர்த்தத்திலான)[27] குறிபொருள் ஒருபுறமிருக்க—வெறுப்பூட்டும் உண்மைகளை ஆத்திரமிக்க வசைமாரி பொழிந்து மூடிமறைக்கும் முயற்சியே தவிர வேறில்லை என்று காட்டிக்கொள்கிறது.

மேலும், கிரிச்சேவ்ஸ்கிக்கும் ''விமர்சனச் சுதந்தரத்தின்'' எண்ணிறைந்த பிற வெற்றிவீரர்களுக்கும் ஜெர்மானியர்களை அன்பளிப்புச் செய்யும் விருப்பம் எனக்குக் கிடையாது. ''பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள்'' இன்னமும் ஜெர்மன் கட்சியின் அணிகளிடையே சகித்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றால் அது அவர்கள் ஹனோவர் தீர்மானத்துக்கும்[28] லியுபெக் தீர்மானத்துக்கும் கீழ்ப்படிந்திருக்கும் அளவுக்குத்தான்; ஹனோவர் தீர்மானம் பெர்ன்ஷ்டைனின் ''திருத்தங்களை'' உறுதியுடன் நிராகரித்தது. லியுபெக் தீர்மானம்[29] (இராஜதந்திரமுள்ள சொற்களில் அது

எழுதப்பட்டிருந்த போதிலும்) பெர்ன்ஷ்டைனுக்கு நேர் முகமான எச்சரிக்கை விட்டிருக்கிறது. ஜெர்மன் கட்சியின் நலன்கள் பற்றிய பார்வைநிலையிலிருந்து பார்க்கும் போது, இராஜதந்திரம் பொருத்தமானதுதானு என்பதும், இவ் வழக்கில் நல்ல சண்டையை விட கேடான சமாதானம் மேலா என்பதும் வாதிக்கத்தக்கவை; சுருங்கச் சொன்னுல், பெர்ன் ஷ்டைன்வாதத்தை நிராகரிப்பதற்குப் பயன்படுத்திய வழி முறைகளில் தகுதியானது எது என்பது பற்றிக் கருத்துக்கள் வேறுபடக்கூடும், என்ருலும் இரண்டு சமயங்களில் ஜெர்மன் கட்சி பெர்ன்ஷ்டைன்வாதத்தை நிராகரிக்கத்தான் செய்தது என்கிற விஷயத்தை யாரும் பார்க்காமலிருக்க முடியாது. ஆகவே, ''பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதர வாளர்கள் பாட்டாளிவர்க்கத்தின் அரசியல், பொருளாதார விடுதலைக்காக நடக்கும் வர்க்கப் போராட்டம் எனும் அடிப் படையில் நிற்கிருர்கள்'' எனும் ஆய்வுரையை ஜெர்மன் எடுத்துக்காட்டு உறுதிப்படுத்துவதாக நினைப்பது, நம் கண்ணெதிரே நிகழ்கிறவற்றைப் புரிந்துகொள்ள அறவே தவறுகிறதாகத்தான் பொருள்.*

---

* ஜெர்மன் கட்சியிலுள்ள பெர்ன்ஷ்டைன் வாதத்தைப் பற்றிய விஷயங்களை மொட்டையாகச் சொல்வதோடு எப் போதுமே ரபோச்சியே தேலோ நிறுத்திக்கொள்கிறதையும் தனது சொந்தக் கருத்தை வெளியிடாமல் முற்ருக ''ஒதுங் கிக்கொள்கிறதையும்'' கவனிக்கவேண்டும். எடுத்துக்காட் டாக, இதழ் 2-3, பக்கம் 66-ல் ஸ்டுட்கார்ட் காங்கிரஸைப்[30] பற்றிய செய்தியுரைகளைப் பார்க்க. அவற்றில் எல்லாக் கருத்து வேறுபாடுகளும் ''போர்த்தந்திரமாகத்'' தாழ்த்தப் படுகின்றன. மிகப் பெரும்பான்மையானவர்கள் முந்தையப் புரட்சிகரமான போர்த்தந்திரத்துக்கு உண்மையாயிருந்து வருகிருர்கள் என்று மட்டும் அவை கூறுகின்றன. அல்லது, இதழ் 4-5 (பக்கம் 25 முதலியவை) பார்க்க. அதில் ஹனேவர் காங்கிரஸில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளைப்பற்றிய பொழிப்புரையும் பேபெல் தீர்மானத்தின் மறுபதிப்பும் தவிர வேறென்றும் இல்லை. பெர்ன்ஷ்டைனின் கருத்துக்களைப் பற்றிய விளக்கமும் விமர்சனமும் ஒத்திப் போடப்படுகின்றன (இதழ் 2-3ல் செய்துள்ளதுபோல), ஒரு ''தனிச்சிறப்பான கட்டுரையில்'' அவை எடுத்துக் கொள்ளப்படும் என்பதோடு சரி. இதில் வேடிக்கை என்னவென்ருல், இதழ் 4-5, பக்கம் 33ல் நாம் காண்கிறதாவது: ''...பேபெல் விளக்கிய

இத்துடன் முடியவில்லை. ரபோச்சியே தேலோ ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் முன்னே ''விமர்சனச் சுதந்தரத்தைக்'' கோருகிறதையும் பெர்ன்ஷ்டைன்வாதத்தைத் தாங்கிப்பிடிப்பதையும் நாம் பார்த்தோம். நம் ''விமர்சகர்கள்'', பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள் ஆகியோர் விஷயத்தில் நாம் நேர்மை காட்டவில்லை என்கிற துணிபுக்கு அது வந்துவிட்டதுபோலும். ஆனால் அவர்களில் யாரிடம், யார், எங்கே, எப்பொழுது நேர்மை காட்டவில்லை? நேர்மையின்மை எதைக் குறிக்கிறது? இது பற்றி ஒரு வார்த்தை கிடையாது. பெயரைச் சொல்லி ஒரு ருஷ்ய விமர்சகரையாவது ஒரு பெர்ன்ஷ்டைன் ஆதரவாளரையாவது ரபோச்சியே தேலோ குறிப்பிடவில்லை! சாத்தியமான இரண்டு அனுமானங்களில் ஒன்றை நாம் எடுக்கவேண்டியிருக்கிறது. ஒன்று, நேர்மையின்றி நடத்தப்பட்ட தரப்பு ரபோச்சியே தேலோ தவிர வேறில்லை (இதழ் 10ல் உள்ள இரண்டு கட்டுரைகளில் இஸ்க்ராவும் ஸார்யாவும் ரபோச்சியே தேலோவுக்கு இழைத்த தீங்குகள் மட்டுமே குறிப்பிடப்படுகிறதிலிருந்து இது உறுதிப்படுகிறது). அப்படியானால், இந்த விநோதமான விஷயத்தை எப்படி விளக்குவது—அதாவது, பெர்ன்ஷ்டைன் வாதத்துடன் தனக்கு ஒட்டுறவு ஏதுமில்லை என்று எப்போதுமே ஆத்திரத்துடன் விலகிக் கொள்ளும் ரபோச்சியே தேலோ ''பச்சையிலும் பச்சையான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களையும்'' விமர்சனச் சுதந்தரத்தையும் தாங்கிப்பிடித்து ஒரு வார்த்தையாயினும் சொல்லாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடியாதிருப்பது ஏன்? அல்லது, யாரோ மூன்றும் பேர்வழிகள் நேர்மை

---

கருத்துக்களைக் காங்கிரஸில் மிகப் பெரும்பான்மையானவர்கள் ஆதரிக்கிறார்கள்'' என்று; சில வரிகளுக்குப்பின் ''... பெர்ன்ஷ்டைனின் கருத்துக்களை டேவிட் தாங்கிப்பேசினார்... முதலாவதாக, என்னவாயிருந்தபோதிலும் (உண்மைதான்!) பெர்ன்ஷ்டைனும் அவருடைய நண்பர்களும் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படை மீது நிற்கிறார்கள்... என்று அவர் காட்ட முயன்றார்...'' என்று. இது 1899 டிஸம்பரில் எழுதப்பட்டது, 1901 செப்டம்பரில் ரபோச்சியே தேலோ தனது சொந்தக் கருத்துகள் போல் டேவிட்டின் கருத்துக்களைத் திருப்பிச் சொல்கிறது, மேற்கொண்டு பேபெல் சொல்வது சரி என்று நினைக்கவில்லை போலும்!

யின்றி நடத்தப்பட்டுள்ளனர். அப்படியானல், அவர்களின் பெயரைச் சொல்லாமல் இருக்கக் காரணங்கள் என்னவாக இருக்கக்கூடும்?

எனவே, ரபோச்சியே தேலோ நிறுவப்பெற்ற காலத்திலிருந்து ஆடிவந்திருக்கிற கண்ணுமூச்சி விளையாட்டை (இதைக் கீழே காட்டவிருக்கிறோம்) தொடர்ந்து ஆடிவருகிறதைப் பார்க்கிறோம். மேலும், ஏற்றிப்போற்றிப் பேசப்படும் ''விமர்சனச் சுதந்தரத்தின்'' முதன்முதலான நடைமுறைச் செயல்பாட்டையும் பார்ப்போம். உண்மையிலே, விமர்சனச் சுதந்தரம் எனப்பட்டது எடுத்த எடுப்பிலேயே எல்லா விமர்சனத்திலிருந்தும் ஒதுங்கிநிற்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டது மட்டுமல்ல, சுதந்தரமான கருத்துக்களை வெளியிடுவதிலிருந்தும் அறவே ஒதுங்கிநிற்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறது. ருஷ்ய பெர்ன்ஷ்டைன்வாதத்தை ஒரு வெட்கப்படத்தக்க நோய்போல் (ஸ்டரொவேரின் பொருத்தமான சொல்லைப் பயன்படுத்துகிறோம்) குறிப்பதைத் தவிர்க்கும் இதே ரபோச்சியே தேலோ இந்த நோயைக் குணப்படுத்துவதற்கு இந்த நோயின் ஜெர்மன் வகைக்குரிய ஜெர்மன் மருந்துக்குறிப்பை வார்த்தைக்கு வார்த்தை காப்பியடிக்கலாம் என்று முன்மொழிகிறது! விமர்சனச் சுதந்தரத்துக்குப் பதிலாக—அடிமைப்புத்தியுள்ள (இன்னும் மோசம்: குரங்குத் தனமான) போலிவேடம்! நவீனகால சர்வதேசச் சந்தர்ப்பவாதத்தின் இதே சமுதாய-பொருளாதார உள்ளடக்கம் தேசியச் சிறப்பியல்புகளுக்கேற்ப பல்வேறு வழிகளில் தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது. ஒரு நாட்டில், சந்தர்ப்பவாதிகள் வெகுகாலத்துக்கு முன்பே தனிக் கொடியின் கீழ் வெளிவந்துள்ளனர்; இன்னொரு நாட்டில், அவர்கள் தத்துவத்தைப் புறக்கணித்துள்ளனர், உண்மையிலே தீவிர-சோஷலிஸ்டுகளின் கொள்கையைப் பின்பற்றினர்; மூன்றாவதொரு நாட்டில், புரட்சிக் கட்சியின் சில உறுப்பினர்கள் சந்தர்ப்பவாத முகாமுக்கு மாறிப் போயுள்ளனர், கோட்பாடுகளுக்காகவும் புதிய போர்த்தந்திரத்தாகவும் நடக்கும் பகிரங்கமான போராட்டத்திலே தங்களுடைய குறிக்கோள்களை அடைய முயல்வதற்குப் பதிலாக, படிப்படியாகவும், கண்ணுக்குப் புலப்படாத முறையிலும், சொல்லப்போனல் தண்டிக்கப்படமுடியாத முறையிலும் தங்கள் கட்சியைக்

கெடுப்பதின் வழியே அடைய முயல்கிறுர்கள்; நான்காவதொரு நாட்டில், இதேபோன்ற கட்சிமாறிகள் அரசியல் அடிமைத்தனத்தின் இருளில், ''சட்ட சம்மதமானதும்'' ''சட்ட விரோதமானதும்'' ஆன நடவடிக்கையின் ஒரு புத்தம் புதிய கூட்டுடன், இதே வழிமுறைகளேப் பயன்படுத்துகின்றனர்; முதலியவாறு. ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளே ஒன்றுபடுத்துவதற்கு ஒரு நிபந்தனேயாக விமர்சனச் சுதந்தரம் பற்றியும் பெர்ன்ஷ்டைன்வாதம் பற்றியும் பேசுவதும், ருஷ்ய வகைப்பட்ட பெர்ன்ஷ்டைன்வாதம் தன்னே எப்படி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது என்ன தனிக் குறிப்பான பலன்களே விளேத்திருக்கிறது என்று விளக்காமல் இருப்பதும்—இது எதையும் சொல்லாமலிருக்கும் நோக்குடன் பேசிக்கொண்டிருப்பதற்குச் சமம்.

ரபோச்சியே தேலோ சொல்ல விரும்பாததை (அல்லது, ஒருக்கால் அதனுல் புரிந்துகொள்ள முடியாதிருப்பதை) ஒரு சில வார்த்தைகளிலேயாயினும் நாமே சொல்ல முயல்வோம்.

### இ. ருஷ்யாவில் விமர்சனம்

நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் விஷயம் சம்பந்தமாக ருஷ்யாவின் முதன்மையான தனித்துக்காட்டும் முனேப்புக்கூறு இதுதான்: ஒரு புறத்தில் தன்னியல்பான பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தொடக்கமாகட்டும், மறுபுறத்தில் மார்க்ஸியத்தை நோக்கி முற்போக்கான மக்கள் திரும்பியதின் தொடக்கமாகட்டும், பொதுவான பகைவனே (காலாவதியாகிவிட்ட சமுதாய, அரசியல் உலகப் பார்வையை) எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு பொதுவான கொடியின் கீழ் வெளிப்படையாகவே பலபடித்தான நபர்களின் கூட்டு அமையப் பெற்றிருந்ததைக் காட்டுகின்றன. நாம் ''சட்ட சம்மதமான மார்க்ஸியத்தின்''[31] உச்சிப்பருவத்தைக் குறிப்பிடுகிறோம். பொதுவாகச் சொன்னுல், இது ஒரு முற்றும் வேடிக்கையான நிகழ்ச்சித்தோற்றம், 1880களிலோ 1890களின் துவக்கத்திலோ இது சாத்தியம் என்று யாரும் நம்பியிருக்க மாட்டார்கள். எதேச்சாதிகாரமுறை ஆட்சிபுரியும் ஒரு நாட்டில், பத்திரிகைத் துறை முற்றுக அடிமைப்படுத்தப்பட்

டுள்ள நிலைமையில், அரசியல் அதிருப்தியின், கண்டனத்தின் சின்னஞ்சிறு முளைகூட வளராதபடி அடக்கிவரும் கொடிய அரசியல் பிற்போக்கு நிலவிய காலத்தில், திடீரென்று புரட்சிகரமான மார்க்ஸியத் தத்துவம் தணிக்கைக்குட்பட்ட இலக்கியத்தில் முட்டிக்கொண்டு மேலேறுகிறது, அதை ஒரு ஈசாப் பாணியில் அமைந்த மறைவான மொழியிலே விளக்கியபோதிலும் ''சம்பந்தப்பட்டவர்கள்'' அனைவரும் அதைப் புரிந்து கொள்கிறார்கள். (புரட்சிகரமான) நரோத்னயா வோல்யா தத்துவத்தையே ஆபத்தானதாக அரசாங்கம் கருதப் பழக்கப்பட்டிருந்தது; வழக்கம்போலவே அதன் உள் நிகழும் பரிணும வளர்ச்சியை அது கவனிக்கவில்லை; அதை எதிர்த்து எய்த விமர்சனம் எதுவாக இருந்தபோதிலும் அரசாங்கம் மகிழ்ச்சி கொண்டாடியது. மிகக் கணிசமான காலம் கழிந்தபிறகு தான் (நமது ருஷ்ய வரையளவுகள்படி) என்ன நடந்துவிட்டது என்று அரசாங்கம் உணர்ந்தது; தணிக்கையாளர்களை யும் போலீஸ்காரர்களையும் கொண்ட செயற்சுளுவற்ற பட்டாளம் புதிய பகைவனைக் கண்டுபிடித்து மேல்விழுந்து தாக்கியது. இதற்கிடையே, ஒன்றன்பின் ஒன்ருக மார்க்ஸிய நூல்கள் வெளியிடப்பட்டன, மார்க்ஸியப் பத்திரிகைகளும் செய்தித்தாள்களும் நிறுவப்பெற்றன, கிட்டத்தட்ட அனைவருமே மார்க்ஸியவாதிகள் ஆயினர், மார்க்ஸியவாதிகளைப் புகழ்ந்தார்கள், மார்க்ஸியவாதிகளின் தயவை நாடினர், அசாதாரணமான முறையிலே மார்க்ஸிய இலக்கியம் சுடச்சுட விற்பனையானதிலே நூற்பதிப்பாளர்கள் களியாட்டம் போட்டனர். எனவே, இந்தச் சூழலில் அகப்பட்டுக் கொண்ட புதிய மார்க்ஸியச் சிடகோடிகளிடையே ஒன்றுக்கு மேலாகவே ''தலைகனத்துப்போன ஆசிரியர்கள்...''[32] இருந்தது இயல்பு.

நடந்துபோன நிகழ்ச்சி போல் இக்காலப்பகுதியைப் பற்றி அமைதியுடன் நாம் இப்போது பேசமுடியும். நம் இலக்கியத்தின் மேற்பரப்பில் மார்க்ஸியம் மலர்ந்த அந்தக் குறுகிய காலத்தை உதிக்கச் செய்தது தீவிரமான கருத்துக்கள் வைத்திருந்தவர்களுக்கும் மிகவும் மிதமான கருத்துக்கள் வைத்திருந்தவர்களுக்கும் இடையேயிருந்த கூட்டணி தான். உண்மையிலே, பின்சொல்லப்பட்டவர்கள் முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளேயாவர். ''கூட்டணி'' திடமாக

இருந்த காலத்திலேயே இந்த முடிவுக்குச் சிலர் வரலாயினர் (பிற்காலத்தில் அவர்களின் ''விமர்சன வகைப்பட்ட'' வளர்ச்சி இந்த முடிவை எடுப்பாக உறுதிப்படுத்தியுள்ளது).*

அப்படியானல், எதிர்காலத்திய ''விமர்சகர்களோடு'' கூட்டணியில் சேர்ந்த புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள்தானே பின்வந்த ''குழப்பத்துக்கு'' முக்கியமாகப் பொறுப்பேற்கவேண்டும்? இந்தக் கேள்வியும், கூடவே ஆம் என்கிற விடையும், நெளிவுசுளிவற்ற பார்வையுள்ள நபர்கள் சில சமயம் சொல்லக் கேட்கிறோம். அவர்கள் சொல்வது முற்றும் தவருகும். தன்னையே உறுதியாக நம்பாதவன்தான் நம்பமுடியாத நபர்களோடுங்கூடத் தற்காலிகமான கூட்டணிகளில் சேருவதற்குப் பயப்படமுடியும்; அப்படிப்பட்ட கூட்டணிகளில் சேராமல் எந்த ஒரு அரசியல் கட்சியும் இருக்க முடியாது. சட்டசம்மதமான மார்க்ஸியவாதிகளோடு கூட்டு சேர்ந்தது, அதன் வழியிலே ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் செய்துகொண்ட முதன்முதலான, உண்மையிலே அரசியல் வழிப்பட்ட கூட்டணியாகும். இக்கூட்டணியின் பயனுக, வியப்பூட்டும் வேகத்திலே நரோதியத்தை வென்று தீர்த்தோம், மார்க்ஸியக் கருத்துக்கள் (கொச்சைப்படுத்தப்பட்ட வடிவத்தில் இருந்த போதிலும்) மிக விரிவாகப் பரவின. மேலும், ''நிபந்தனைகள்'' இல்லாமலே இந்தக் கூட்டணி செய்துகொள்ளப் படவில்லை. இதற்குச் சான்று: 1895ல், **ருஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைக்குரிய விஷயாதாரங்கள்**[33] எனும் மார்க்ஸியத் தொகுப்பை அரசாங்கத் தணிக்கையாளர் எரித்துவிட்டார். சட்டசம்மதமான மார்க்ஸியவாதிகளோடு செய்த இலக்கிய உடன்பாட்டை ஒரு அரசியல் கூட்டணியோடு ஒப்பிடமுடியுமானுல் அந்தப் புத்தகத்தை ஒரு அரசியல் ஒப்பந்தமாக ஒப்பிடமுடியும்.

உண்மையே, ''கூட்டாளிகள்'' முதலாளிவர்க்க ஜனநாயகவாதிகளாகக் காட்டிக்கொண்டதே பிளவு ஏற்படுவதற்குக்

---

* ஸ்துருவேயை எதிர்த்து கே. தூலின் எழுதிய கட்டுரை குறிப்பிடப்படுகிறது. இது ''முதலாளிவர்க்கப் போக்கான இலக்கியத்தில் மார்க்ஸியத்தின் பிரதிபலிப்பு'' என்று தலைப்புள்ள கட்டுரையை அடிப்படையாகக் கொண்டது. (1907ம் வருடப் பதிப்புக்கு ஆசிரியர் வரைந்த குறிப்பு.—ப-ர்.)

காரணம் அல்ல. மாறாக, ருஷ்யாவில் நிலவும் நிலைமை முன்னணியில் கொணர்ந்து நிறுத்தியுள்ள தனது ஜனநாயகக் கடமைகளைப் பொறுத்தவரை சமூக-ஜனநாயகவாதத்துக்குப் பின்குறிப்பிட்ட போக்கின் பிரதிநிதிகள் இயல்பான, விரும்பத்தக்க, கூட்டாளிகளேயாவார்கள். எனினும் அப்படிப்பட்ட கூட்டணிக்கு ஒரு அவசியமான நிபந்தனை, பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு நேர் எதிரானவை என்று பாட்டாளி வர்க்கத்துக்குக் காட்டுவதற்கு சோஷலிஸ்டுகளுக்கு முழு வாய்ப்பு இருந்து தீர வேண்டும். ஆனால் பெரும்பான்மையான சட்டசம்மதமான மார்க்ஸியவாதிகள் தழுவிக்கொண்ட பெர்ன்ஷ்டைன்வாதம், ''விமர்சன வழிப்பட்ட'' போக்கு இந்த வாய்ப்பை சோஷலிஸ்டுகளிடமிருந்து பறித்துவிட்டன; மற்றும், சமுதாய முரண்பாடுகளை மழுங்கடிப்பது பற்றிய தத்துவத்தைப் பரிந்துரைத்தும், சமுதாயப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கருத்து அபத்தம் என்று பிரகடனப்படுத்தியும், பாட்டாளி வர்க்க இயக்கத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் குறுகிய தொழிற்சங்கவாதத்துக்குத் தாழ்த்தியும்,அற்பமான படிப்படியான சீர்திருத்தங்களுக்காக நடத்தும் ''யதார்த்த வழிப்பட்ட'' போராட்டத்துக்குத் தாழ்த்தியும்—இவ்வழிகளிலே மார்க்ஸியத்தைக் கொச்சைப் படுத்தி சோஷலிஸ்டு உணர்வை உறுதிகுலையச் செய்தன. இது சோஷலிஸத்துக்குள்ள சுதந்தர உரிமையையும், எனவே சோஷலிஸம் இருந்துவருவதற்கான உரிமையையும் முதலாளிவர்க்க ஜனநாயகம் மறுப்பதற்கு ஒப்பாகும்; இதன் பொருள், பிறந்தநிலையிலிருக்கும் பாட்டாளி வர்க்க இயக்கத்தை மிதவாதிகளின் தொங்குசதையாக மாற்றிவிடப் பார்க்கும் முயற்சியே.

இச்சூழ்நிலைமைகளில் பிளவு அவசியமாயிருந்தது இயல்பு தான். ஆனால் ருஷ்யாவின் ''விசேதமான'' முனைப்புக்கூறு இப்படித் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது: அதாவது, இந்தப் பிளவுக்குப் பொருள், எல்லோருக்கும் எட்டக்கூடிய, பரவிப்படர்ந்திருந்த, ''சட்டசம்மதமான'' இலக்கியத்திலிருந்து சமூக-ஜனநாயகவாதிகள் நீக்கப்பட்டுவிட்டார்கள் என்பது தவிர வேறில்லை. ''விமர்சனம்'' எனும் கொடியைக் கைகளில் ஏந்திக் கொண்டு மார்க்ஸியத்தை ''ஒழித்துக்

கட்டுவதை'' அநேகமாக ஏகபோகமாகப் பெற்றுவிட்ட ''முன்னாள் மார்க்ஸியவாதிகள்'' இந்த இலக்கியத்திலே பல மாகக் காலூன்றிவிட்டார்கள். ''வைதிகத்தை எதிர்ப்போம்'', ''விமர்சனச் சுதந்தரம் நீடூழி வாழ்க'' போன்ற பிடிப்புச் சொற்கள் (இப்போது ரபோச்சியே தேலோ திருப்பிச் சொல்கிறவை) உடனே ஃபேஷனாகிவிட்டன. இந்த ஃபேஷனைத் தணிக்கையாளரோ போலீஸ்காரர்களோ எதிர்க்கமுடியவில்லை; புகழ்பெற்ற (ஹிரோஸ்ட்ராடஸ் பொருளில் புகழ்பெற்ற) பெர்ன்ஷ்டைனின்[34] நூலின் மூன்று ருஷ்யப் பதிப்புகள் வெளியிடப்பட்டதிலிருந்தும், பெர்ன்ஷ்டைன் திரு. புரொகபோவிச் முதலியவர்களின் நூல்களை ஸுபாத்தவ் சிபார்சு செய்திருப்பதிலிருந்தும் (இஸ்க்ரா, இதழ் 10) இது விளங்கும். சமூக-ஜனநாயகவாதிகள் ஒரு கஷ்டமான பணியை—இந்தப் புதிய போக்கை எதிர்த்துப் போராடும் பணியை—மேற்கொள்ளவேண்டியதாயிற்று; அது தன்னளவில் கஷ்டமான பணி மட்டுமல்ல, முற்றும் வெளிப்புற வகைப்பட்ட முட்டுக்கட்டைகளால் நம்பவொண்ணாத அளவுக்கு மேலும் கஷ்டமானதாயிற்று. இப்போக்கு இலக்கியத் துறையோடு நின்றுகொள்ளவில்லை. ''விமர்சனத்தின்'' திசையில் திரும்புவதோடு கூடவே ''பொருளாதாரவாதத்தின்'' மீது ஒரு மோகமும் சமூக-ஜனநாயகவாத ஊழியர்களிடையே ஏற்பட்டது.

சட்டசம்மதமான விமர்சனத்துக்கும் சட்டவிரோதமான ''பொருளாதாரவாதத்துக்கும்'' இடையே தொடர்பும் பரஸ்பரச் சார்பும் தோன்றி வளர்ச்சிபெற்ற வகைமுறையே ஒரு சுவையான உரை பொருளாகும், அதைப் பற்றியே ஒரு தனிக் கட்டுரை எழுதலாம். ஐயத்திற்கிடமின்றி இந்தத் தொடர்பு இருந்ததை மட்டும் இங்கே குறித்துக்கொண்டால் போதும். "Credo"* தனக்குரிய கெட்ட பெயர் எடுக்கக் காரணமே அது இந்தத் தொடர்பைப் பச்சையாக வகுத்தளித்து, ''பொருளாதாரவாதத்தின்'' அடிப்படையான அரசியல் போக்கை—தொழிலாளிகள் பொருளாதாரப் போராட்டத்தை (தொழிற்சங்க வகைப்பட்ட போராட்டத்தை என்று சொல்வது மேலும் சரியாயிருக்கும், ஏனெனில் பின்சொன்

---

* நம்பிக்கைச் சின்னம், வேலைத்திட்டம், உலகப் பார்வை பற்றிய விளக்கம்.— (ப-ர்.)

னதும் தனிக் குறிப்பான பாட்டாளி வர்க்க அரசியலைத் தழுவிநிற்கிறது) நடத்திக் கொண்டிருக்கட்டும், மார்க்ஸியப் படிப்பாளிப்பகுதியினர் அரசியல் ''போராட்டத்துக்காக'' மிதவாதிகளோடு ஒன்றுகலந்து விடட்டும் என்று—உளறிக் கொட்டிவிட்டதுதான். ஆக, ''மக்களிடையே'' தொழிற் சங்க வகைப்பட்ட வேலை என்பதின் பொருள் இப்பணியின் முதற்பகுதியை நிறைவேற்றுவது என்ருயிற்று, சட்டசம்மத மான விமர்சனம் என்பதின் பொருள் இரண்டாம் பகுதியை நிறைவேற்றுவது என்ருயிற்று. இக்கூற்று ''பொருளாதார வாதத்துக்கு'' எதிராக மிகச்சிறந்த ஆயுதமாகியது—"Credo" அசலில் இல்லாதிருந்தால் அதைப் புனைவதில் இலாபம் இருந் திருக்கும் என்று சொல்லும் அளவுக்கு.

"Credo" புனையப்படவில்லை, அதன் ஆசிரியர்களின் ஒப்புதல் இன்றியே, ஒருக்கால் அவர்களின் சித்தத்துக்கு எதிராகவே, அது வெளியிடப்பட்டது. எப்படியிருந்தபோதி லும், இந்தப் புதிய ''வேலைத்திட்டத்தை''* வெட்ட வெளிச்சத்திற்குக் கொணர்வதில் கலந்துகொண்ட இந்நூலின் ஆசிரியர் முறையீடுகளும் குறைகளும் கேட்டிருக்கிருர்— பேச்சாளர்களுடைய கருத்துக்களின் தொகுப்பு ''Credo'' என்று பெயரிடப்பட்டு அதன் பிரதிகள் வினியோகிக்கப்பட்டன, கண்டனத்தோடு கூடவே அது பத்திரிகைகளிலும் வெளியி டப்பட்டது, என்று! இந்தக் கதையைக் குறிப்பிடுவதற்குக் காரணம் நமது ''பொருளாதாரவாதத்தின்'' ஒரு மிக விநோ தமான முனைப்புக்கூறு—விளம்பரமாவதைக் கண்டு அஞ்சு

---

* "Credo"வுக்கு எதிரான பதினெழுவரின் கண்டனம் இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்தக் கண்டனத்தை (1899ம் ஆண்டின் இறுதியில்)[35] எழுதி உருவாக்குவதில் இந்நூலின் ஆசிரியர் கலந்து கொண்டார். கண்டனமும் "Credo"வும் வெளிநாட்டில் 1900 வசந்த காலத்தில் வெளியிடப்பட்டன. திருமதி குஸ்கோவா (புலோயி பத்திரிகையில், என்று நினைக் கிறேன்) எழுதிய கட்டுரையிலிருந்து அந்த அம்மையாரே ''Credo''வின் ஆசிரியை என்றும் அக்காலத்தில் வெளிநாட்டி லிருந்த ''பொருளாதாரவாதிகளிடையே'' திரு. புரொக போவிச் மிக முக்கியமானவராக இருந்தார் என்றும் இப்போது தெரிகிறது. (1907ம் ஆண்டுப் பதிப்புக்கு ஆசிரியர் வரைந்த குறிப்பு.—ப-ர்.)

வது—இதில் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த முனைப்புக் கூறு "Credo"வின் ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி "பொருளாதாரவாதத்துக்கும்" பொதுவாக இருக்கிறதாகும்; "பொருளாதாரவாதத்தின்" மிக வெளிப்படையாகப் பேசும், நேர்மையான, பரிந்துரையாளனாகிய ரபோச்சயா மிஸ்ல்[36] எனும் பத்திரிகையும், (Vademecum* சஞ்சிகையில்[37] "பொருளாதாரவாத" ஆவணங்களை வெளியிட்டதைப்பற்றி ஆத்திரமடைந்த) ரபோச்சியே தேலோவும், கீவ் குழுவும் (இது இரண்டு ஆண்டுகளுக்குமுன் தன்னுடைய Profession de foi-யை[38] அதன் மறுப்போடு கூடவே வெளியிட அனுமதி மறுத்துவிட்டது),** "பொருளாதாரவாதத்தின்" பிறபல தனித்தனி பிரதிநிதிகளும் இந்த அச்சத்தைக் காட்டிக் கொள்கின்றனர்.

விமர்சனச் சுதந்தரத்துக்கு வாதாடுகிறவர்கள் விமர்சனத்துக்குப் பயப்படுவதின் காரணத்தைத் தந்திரப் புத்திக்கு மட்டும் கற்பிக்க முடியாது (எனினும் அவ்வப்போது தந்திரப் புத்தி வேலைசெய்யாமல் இல்லை: புதிய போக்கின் இன்னும் பலம் பெறுமலிருக்கும் குருத்துக்களை எதிர்ப்பாளர்கள் தாக்க விடுவது எதிர்காலத்தை எண்ணிப் பார்க்காமல் காரியம் செய்வதாக ஆகிவிடும்). இல்லை, எல்லாத் தத்துவார்த்த சர்ச்சைகள், கருத்துப் பிரிவுகளின் வேற்றுமைகள், விரிவான அரசியல் பிரச்சினைகள், புரட்சியாளர்களை அமைப்பில் திரட்டும் திட்டங்கள் முதலானவற்றைப் பெரும்பான்மையான "பொருளாதாரவாதிகள்" நேர்மையான வெறுப்போடு பார்க்கிறார்கள் (பார்த்துத்தீரவேண்டும், அதுவே "பொருளாதாரவாதத்துக்குரிய" இயல்பு). "அவற்றையெல்லாம் வெளிநாட்டில் உள்ளவர்களிடம் விட்டுவிடுங்கள்!" என்று ஓரளவுக்கு முரணற்ற "பொருளாதாரவாதி" ஒருவர் ஒரு நாள் என்னிடம் சொன்னார்; அதன் வழியே மிகப் பரவலாக இருக்கும் (மீண்டும் முற்றும் தொழிற்சங்க வகைப்பட்ட) கருத்தை அவர் வெளியிட்டார்; இங்கே, எங்கள் உள்ளூர்களில் இருக்கும் பாட்டாளிவர்க்க இயக்கம்,

---

* —"வழிகாட்டியில்".—(ப-ர்.)

** நமக்குத் தெரிந்தவரை, அதன் பிறகு கீவ் குழுவின் உறுப்பினர் அமைவு மாறிவிட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் அமைப்புகள் பற்றித்தான் எங்களுக்கு அக்கறை, மற்றதெல்லாம் வெறுமே தத்துவச் சழக்கர்களின் புனைவே—ரபோச்சியே தேலோ இதழ் 10க்கு இசைவாகக் குரல் கொடுத்து இஸ்க்ராவின் இதழ் 12ல் வெளியான கடிதத்தை எழுதியவர்கள் சொன்னதுபோல ''தத்துவத்துக்கு மித மிஞ்சிய மதிப்புக் கொடுப்பதாகும்''.

இப்போது கேள்வி எழுகிறது: ருஷ்ய ''விமர்சனத்தின்'', ருஷ்ய வகைப்பட்ட பெர்ன்ஷ்டைன்வாதத்தின் விநோதமான முனைப்புக்கூறுகள் இப்படி இருக்கையில், சொல்லளவிலே மட்டுமின்றிச் செயலிலேயும் சந்தர்ப்பவாதத்தை எதிர்க்க முயன்றவர்களின் பணி என்னவாக இருந்திருக்கவேண்டும்? முதலாவதாக, சட்டசம்மதமான மார்க்ஸியத்தின் காலப் பகுதியில் சற்றே தொடங்கியிருந்த தத்துவார்த்த வேலையை, தலைமறைவாக வேலை செய்யும் தோழர்கள் மீது புதிதாக விழுந்த இந்தப் பணியை, திரும்ப மேற்கொள்வதற்கு அவர்கள் முயன்றிருக்கவேண்டும். அப்படிப்பட்ட வேலையைச் செய்யாமல் இயக்கம் வெற்றிகரமாக வளர்வது சாத்திய மில்லை. இரண்டாவதாக, மக்களின் மனத்தைக் கணிசமான அளவுக்குக் கெடுத்துவந்த சட்டசம்மதமான ''விமர் சனத்தை'' அவர்கள் செயலூக்கத்துடன் எதிர்த்துப் போராடி யிருக்கவேண்டும். மூன்றாவதாக, நடைமுறை இயக்கத்திலே குழப்பத்தையும் ஊசலாட்டத்தையும் அவர்கள் செயலூக் கத்துடன் எதிர்த்திருக்கவேண்டும், நம் வேலைத்திட்டத்தை யும் நம் போர்த்தந்திரத்தையும் இழிவுபடுத்தத் தெரிந்தோ தெரியாமலோ செய்கிற முயற்சிகளை அம்பலப்படுத்தி நிரா கரித்திருக்க வேண்டும்.

ரபோச்சியே தேலோ இவற்றில் எதையும் செய்யவில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள்; எல்லோரும் அறிந்த இவ்விஷயத்தை விபரமாகவும் பல்வேறு அம்சங்களிலிருந் தும் கீழே கவனிக்கப் போகிறோம். எனினும், இப்போதைக்கு ஒன்று மட்டும் காட்ட விரும்புகிறோம்: ''விமர்சனச் சுதந்த ரம்'' எனும் கோரிக்கைக்கும், நம் நாட்டு விமர்சனத்தின் ருஷ்யவகைப்பட்ட ''பொருளாதாரவாதத்தின்'' தனிக்குறிப் பான முனைப்புக்கூறுகளுக்கும் இடையே பச்சையான முரண் பாடு இருக்கிறதைக் காட்ட விரும்புகிறோம். ரபோச்சியே தேலோவின் பார்வைநிலையை ஒப்புக்கொண்டு ''வெளி

நாட்டு ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகள் சங்கம்'' போட்ட தீர்மானத்தின் வாசகத்தைப் பார்த்தாலே போதும்.

''சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவார்த்த வளர்ச்சி மேலும் முன்னேறுவதின் நலன்களை முன்னிட்டு, இந்தத் தத்துவத்தின் வர்க்கத்தன்மைக்கும் புரட்சிகரமான தன்மைக்கும் எதிராகப் போகாதிருக்கிற அளவுக்குக் கட்சி இலக்கியத்தில் சமூக-ஜனநாயகவாதத் தத்துவத்தை விமர்சிப்பதற்குரிய விமர்சனச் சுதந்தரம் முற்றிலும் அவசியம் என்று நாங்கள் அங்கீகரிக்கிறோம்'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 10).

இதன் உள்நோக்கம் என்ன? தீர்மானத்தின் ''முதற்பகுதி பெர்ன்ஷ்டைன் பற்றிய லியுபெக் கட்சிக் காங்கிரஸின் தீர்மானத்துடன் பொருந்தியுள்ளது''... இப்படிக் காப்பியடிக்கிறதிலே தங்களுடைய testimonium paupertatis (வறிய நிலைக்குச் சான்றிதழ்) கொடுத்துக் கொள்வதை இந்த ''சங்கத்தினர்'' தமது அப்பாவித்தனத்திலே பார்க்கத் தவறினர்.... ''ஆனால்... அதன் இரண்டாம் பகுதியில் லியுபெக் கட்சிக் காங்கிரஸ் செய்ததை விட மேலாக அது விமர்சனச் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துகிறது.''

அப்படியென்றால், ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' தீர்மானம் ருஷ்யவகைப்பட்ட பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களுக்கு எதிராகப் போடப்பட்டதா? இல்லையென்றால், லியுபெக்கைப் பற்றிக் குறிப்பிடுவது சுத்த அபத்தமாகும். ஆனால் அது ''விமர்சனச் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துகிறது'' என்று சொல்வது உண்மையல்ல. ஜெர்மானியர்கள் தமது ஹனோவர் தீர்மானத்தை நிறைவேற்றியதில், ஒவ்வொரு அம்சமாக எடுத்து பெர்ன்ஷ்டைன் முன்மொழிந்த திருத்தங்களைக் குறிப்பாக நிராகரித்தனர், தங்கள் லியுபெக் தீர்மானத்திலோ பெர்ன்ஷ்டைனைப் பெயரைச் சொல்லி நேரிடையாக எச்சரித்தனர். ஆனால், நமது ''சுதந்தரமுள்ள'' காப்பியடிக்கிறவர்கள் தனிக்குறிப்பான ருஷ்ய வகைப்பட்ட ''விமர்சனத்தின்'', ருஷ்யவகைப்பட்ட ''பொருளாதாரவாதத்தின்'' எந்த ஒரு வெளிப்பாடு பற்றியும் எந்த ஒரு சுட்டுக்குறிப்பும் அளிப்பது கிடையாது. இப்படி விட்டுவிடுவதை முன்னிட்டு, குறிப்பாக ''வெளிநாட்டுச் சங்கம்'' ''பொருளாதாரவாதம்

எனப்படுகிறதை'' சந்தர்ப்பவாதத்தோடு ஒன்ருக்கிக்காட்ட மறுக்கிறபொழுது, தத்துவத்தின் வர்க்கத்தன்மை புரட்சிகரமான தன்மை பற்றி மொட்டையாகக் குறிப்பிடுவதானது தவருன வியாக்கியானத்துக்கு எவ்வளவோ விரிவான செயல் எல்லையை விட்டுவைக்கிறது (இரண்டு மாநாடுகள், பக்கம் 8, பாரா 1). இதெல்லாம் போகிற போக்கில் பார்க்கிறவை. முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம், புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் சம்பந்தமாக ருஷ்யாவிலுள்ள சந்தர்ப்பவாதிகள் எடுத்துக்கொள்கிற நிலைகள் ஜெர்மனியில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலைகளுக்கு நேர் எதிரானவை என்பதே. நமக்குத் தெரியும்: ஜெர்மனியில் புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் உள்ளதைக் காத்துப் பேணுவதை —அதாவது, பழைய வேலைத்திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் காத்துப் பேணுவதை—ஆதரிக்கிருர்கள்; அவற்றை எல்லோரும் அறிவார்கள், அவை எல்லா விபரங்களோடும் பல பத்தாண்டுக்கால அனுபவத்தைக் கொண்டு விளக்கமாக வகுக்கப்பெற்றவை. ஆனுல் ''விமர்சகர்கள்'' மாற்றங்களைப் புகுத்த விரும்புகிருர்கள். எனினும் இந்த விமர்சகர்கள் அற்பமான சிறுபான்மையினராக இருப்பதாலும் அவர்களின் திருத்தல்வாத முயற்சிகளிலே மிகவும் துணிவற்றவர்களாக இருப்பதாலும் பெரும்பான்மையினர் ''புதுப்புனைவுகளை'' அசுவாரசியமாக நிராகரிப்பதோடு நின்றுவிடுவதின் நோக்கங்களைப் புரிந்துகொள்ளமுடியும். ஆனுல், ருஷ்யாவில் விமர்சகர்களும் ''பொருளாதாரவாதிகளுந்தான்'' உள்ளதைக் காத்துப் பேணுவதை ஆதரிப்பவர்களாக இருக்கின்றனர்; நாம் அந்த ''விமர்சகர்களை'' மார்க்ஸியவாதிகளாகத் தொடர்ந்து கருதிவரவேண்டும் என்றும் அவர்கள் முற்ருக அனுபவித்துவந்த ''விமர்சனச் சுதந்தரத்தை'' அவர்களுக்கு உத்தரவாதம் செய்யவேண்டும் என்றும் விரும்புகிருர்கள் (காரணம்: உண்மையிலே, அவர்கள் எவ்வகையான கட்சிப் பிணைப்புகளையும்* என்றைக்கும் அங்கீகரித்ததில்லை, மேலும்

---

* பகிரங்கமான கட்சிப் பிணைப்புகளும் கட்சி மரபுகளும் இல்லாதிருப்பது ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள ஒரு முக்கியமான வேற்றுமையைக் காட்டுகிறது; இந்த ஒரு விஷயமே கண்மூடித்தனமாகக் காப்பியடிக்கக் கூடாது என்று

அறிவுரை மூலமாகவாயினும் விமர்சனச் சுதந்தரத்தைக் ''கட்டுப்படுத்த'' முடிகிறதாய் நமக்கு ஒரு பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கட்சி அமைப்பு இருந்ததில்லை); ''தற்கால இயக்கத்தின் தலைமையுரிமைத் தன்மையை'' (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம்25)—அதாவது இன்று உள்ளதின் ''முறைமையை''—புரட்சியாளர்கள் அங்கீகரிக்கவேண்டும் என்று ''பொருளாதாரவாதிகள்'' விரும்புகிறார்கள்; ''பொருளாயத அம்சங்களின் பொருளாயதச் சூழலின் பரஸ்பரவினையால் நிர்ணயிக்கப்படுகிற'' பாதையிலிருந்து இயக்கத்தைத் ''திசைதிருப்பிவிட'' ''சித்தாந்தவாதிகள்'' முயலக்கூடாது என்று (இஸ்க்ரா, இதழ் 12ல் வெளிவந்த ''கடிதம்'') அவர்கள் விரும்புகிறார்கள்; ''தற்கால நிலைமைகளில் தொழிலாளிகளால் நடத்தச் சாத்தியமாயிருக்கிற'' போராட்டமே விரும்பத்தக்கதாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள், ''தொழிலாளிகள் யதார்த்தத்தில் இன்று நடத்தி

---

அறிவுள்ள சோஷலிஸ்டுகள் அனைவரையும் எச்சரித்திருக்க வேண்டும். ஆனால் ருஷ்யாவில் எத்தொலைவுக்கு ''விமர்சனச் சுதந்தரம்'' போகிறது என்பதற்கு இங்கே ஓர் எடுத்துக் காட்டு தருகிறேன். ருஷ்ய நாட்டு விமர்சகர் திரு. புல்காக்கொவ் ஆஸ்திரியா நாட்டு விமர்சகரான ஹெர்ட்ஸைப் பின்வருமாறு அதட்டுகிறார்: ''ஹெர்ட்ஸின் முடிவுகள் சுதந்தரமானவையாக இருந்தபோதிலும் இவ்விஷயத்தில் (கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய பிரச்சினையில்) தன் கட்சியின் கருத்துக்களுக்கு மிதமிஞ்சிக் கட்டுப்பட்டிருக்கிறார், அவர் விபரங்களில் கட்சியுடன் உடன்படாதிருக்கிற போதிலும் பொதுக் கோட்பாட்டை நிராகரிக்கத் துணியவில்லை'' (முதலாளித்துவமும் விவசாயமும், தொகுதி II, பக்கம் 287) என்று. மக்கள்தொகையில் 1000ல் 999 பேர் வீதம் அரசியல் அடிமைத்தனத்தால் முற்றுகக் கெடுக்கப்பட்டு, கட்சிக் கௌரவம் கட்சிப் பிணைப்புகள் பற்றிய கருத்தோட்டம் அறவே இல்லாதிருக்கும் நிலைமையில் அரசியல்ரீதியிலே அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஓர் அரசின் குடிமகன் அரசியல்சட்டப்படி இயங்கும் ஓர் அரசின் குடிமகனை ''தன் கட்சியின் கருத்துக்கு மிதமிஞ்சிக் கட்டுப்பட்டிருக்கிறார்'' என்று இளக்காரத்துடன் கண்டிக்கிறார்! உண்மைதான், விமர்சனச் சுதந்தரம் பற்றித் தீர்மானங்கள் வரைவதைத் தவிர வேறு வேலை கிடையாது நமது சட்டவிரோதமான அமைப்புகளுக்கு....

வரும்'' போராட்டம் ஒன்றே சாத்தியமான போராட்டம் என்று (ரபோச்சயா மிஸ்லின் ''தனி இணைமலர்'',[39] பக்கம் 14) அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். அதற்கு மாறாக, புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாம் தன்னியல்பை—அதாவது, ''இத்தருணத்தில்'' உள்ளபடி இருந்து வருவதை—இவ்வாறு வழிபடுவதின்பால் அதிருப்தியடைந்திருக்கிறோம். அண்மையாண்டுகளில் நிலவி வந்திருக்கும் போர்த்தந்திரம் மாற்றப்பட வேண்டும் என்று கோருகிறோம்; ''நாம் ஒன்றுபடுவதற்கு முன், நாம் ஒன்றுபடவேண்டும் என்பதற்காகவே, முதலில் நாம் உறுதியாகவும் திட்டவட்டமாகவும் பிரித்துக்காட்டும் எல்லைக்கோடுகளை வரைந்துதீரவேண்டும்'' (இஸ்க்ரா வெளியீடு பற்றிய அறிவிப்பைப் பார்க்க)* என்று பிரகடனப்படுத்துகிறோம். சுருங்கச் சொன்னால், ஜெர்மானியர்கள் உள்ளதை விரும்புகிறார்கள், மாற்றங்களை நிராகரிக்கிறார்கள்; நாம் உள்ளதை மாற்றவேண்டும் என்று கோருகிறோம், உள்ளதற்குக் கீழ்ப்படிந்து போவதையும் உள்ளதுடன் சமரசப்பட்டுப்போவதையும் நிராகரிக்கிறோம்.

ஜெர்மன் தீர்மானங்களை ''சுதந்தரமாகக்'' காப்பியடிப்பவர்கள் இந்த ''அற்பமான'' வித்தியாசத்தைக் காணத் தவறிவிட்டார்கள்.

### ஈ. தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எங்கெல்ஸ்

''வறட்டுச் சூத்திரவாதம், வறட்டுத் தத்துவவாதம்'', ''கட்சி எலும்பு இறுக்கம் கொண்டுவிட்டது—சிந்தனையைப் பலவந்தமாகக் கட்டுக்குள் அடக்கிவைப்பதால் தவிர்க்க முடியாதபடி தொடர்கிற தண்டனை அது''—இவைதான் பகைவர்களாம், இவற்றை எதிர்த்துத்தான் ரபோச்சியே தேலோவில் ''விமர்சனச் சுதந்தரத்தின்'' வீரக்காவலர்கள் ஆயுதமேந்தி எழுந்துவிட்டார்கள். இப்பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்த்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்,

---

* பார்க்க: வி. இ. லெனின், '' 'இஸ்க்ரா' ஆசிரியர் குழுவின் அறிக்கை''.—(ப-ர்.)

அத்துடன் மற்றொன்றைச் சேர்த்துக்கொள்ளும்படி மட்டும் நாம் முன்மொழிகிறோம்:

நீதிபதிகள் யார்?

நம் முன்னே இரண்டு பதிப்பாளர்களின் அறிவிப்புகள் உள்ளன. ஒன்று: ''வெளிநாட்டிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் சங்கத்தின் சஞ்சிகையான ரபோச்சியே தேலோவின் வேலைத்திட்டம்'' (ரபோச்சியே தேலோ, இதழ் 1லிருந்து மறுபதிப்பு). மற்றொன்று: '' 'உழைப்பாளர் விடுதலைக்' குழுவின்[40] வெளியீடுகளை மீண்டும் துவங்குவதைப் பற்றிய அறிவிப்பு.'' இரண்டும் 1899ல் வெளியிடப்பட்டவை; ''மார்க்ஸியத்தின் நெருக்கடி'' வெகுநாளாகவே விவாதிக்கப்பட்டுவந்த சமயம் அது. இவற்றில் தெரிவது என்ன? இந்த நிகழ்வுத்தோற்றத்தைப் பற்றிய குறிப்பு ஏதாவது உண்டா என்று முதல் அறிவிப்பில் தேடுவது வீண் வேலையாக இருக்கும், இந்தப் பிரச்சினையில் புதிய பத்திரிகை எடுக்க நினைக்கும் நிலை பற்றிய திட்டவட்டமான அறிக்கை ஏதாவது உண்டா என்று முதல் அறிவிப்பில் தேடுவதும் வீண் வேலையாக இருக்கும். தத்துவார்த்த வேலை பற்றி ஒரு வார்த்தை இல்லை; தத்துவார்த்த வேலையின் முன்னே இன்று இருக்கும் அவசரமான கடமைகள் பற்றியும் ஒரு வார்த்தை இல்லை; இந்த வேலைத்திட்டத்திலும் இல்லை; 1901ல் ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' மூன்றாவது காங்கிரஸ்[41] நிறைவேற்றிய அதன் இணைப்பகுதிகளிலும் இல்லை (இரண்டு மாநாடுகள், பக்கங்கள் 15-18). இக்காலம் முழுவதிலும் ரபோச்சியே தேலோவின் ஆசிரியர் குழு தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் புறக்கணித்து வந்தது—அவை உலகெங்கும் சமூக-ஜனநாயகவாதிகளின் மனத்தைக் கலக்கிவந்த பிரச்சினைகளாக இருந்துங்கூட.

இதற்கு மாறாக, மற்றைய அறிக்கை அண்மையாண்டுகளில் தத்துவத்தின்பால் அக்கறை குறைந்து வருவதை முதலில் சுட்டிக்காட்டுகிறது, ''பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தின் தத்துவார்த்த அம்சத்தில் விழிப்புள்ள கவனம் வேண்டும்'' என்று அதிகாரத்துடன் கோருகிறது, நமது இயக்கத்திலுள்ள ''பெர்ன்ஷ்டைன் வழிப்பட்ட போக்கும் பிற புரட்சி-எதிர்ப்பான போக்குகளும் ஈவிரக்கமின்றி விமர்சிக்கப்படவேண்டும்'' என்று அறைகூவுகிறது. இன்றுவரை

வெளிவந்துள்ள ஸார்யா இதழ்கள் இவ்வேலைத்திட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டது என்று புலப்படுத்துகின்றன.

எனவே, சிந்தனை எலும்பு இறுக்கம் கொண்டுவிட்டது முதலானவற்றிற்கு எதிரான படாடோபமான சொற்றொடர்கள் தத்துவார்த்தச் சிந்தனையின் வளர்ச்சி விஷயத்தில் உள்ள அக்கறையின்மையையும் ஏலாமையையும் மறைக்கின்றன. ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் வழக்கு பொதுவாகவுள்ள ஐரோப்பிய நிகழ்வுத்தோற்றத்தை வெளிப்படையாகச் சித்திரித்துக் காட்டுகிறது (இதை வெகுகாலத்துக்கு முன்பே ஜெர்மன் மார்க்ஸியவாதிகளும் குறித்துக்கொண்டார்கள்)—அதாவது, வெகுவாக ஏற்றிப் போற்றிக்கொள்ளப்படும் விமர்சனச் சுதந்தரம் ஒரு தத்துவத்துக்குப் பதிலாக வேறொரு தத்துவத்தை வைப்பதை உணர்த்ததில்லை, முற்றிணக்கமும் சிந்தனைச்செறிவும் உள்ள தத்துவம் முழுவதினின்றும் சுதந்தரம் வேண்டுவதையே உணர்த்துகிறது; அது கதம்பவாதத்தையும் கோட்பாடின்மையையும் உணர்த்துகிறது. நமது இயக்கத்தின் அசல் நிலையைப்பற்றிச் சிறிதேனும் அறிந்திருக்கிற யாரும் மார்க்ஸியம் விரிவாகப் பரவியதோடுகூடவே ஓரளவுக்குத் தத்துவார்த்த மட்டம் தாழ்வுற்றதும் வந்து சேர்ந்ததைப் பார்க்காமல் இருக்கமுடியாது. தத்துவார்த்தப் பயிற்சி அற்பசொற்பமாயுள்ள, அல்லது அறவே இல்லாத, பல பேர் இந்த இயக்கத்தின் நடைமுறைக் குறிபொருளையும் நடைமுறை வெற்றிகளையும் பார்த்து அதில் சேர்ந்தார்கள். ''ஒரு டஜன் வேலைத்திட்டங்களைவிட உண்மையான இயக்கத்தின் ஒவ்வொரு அடியும் மேலான முக்கியத்துவம் உள்ளதாகும்''[42] எனும் மார்க்ஸின் கூற்றை ரபோச்சியே தேலோ வெற்றிபெற்ற தோரணையோடு மேற்கோள் காட்டுவது எவ்வளவு நயமற்றது என்று இதிலிருந்து தீர்மானிக்கலாம். தத்துவார்த்த ஒழுங்கின்மை நிலவும் காலத்தில் இச்சொற்களைத் திருப்பிச் சொல்வது சவ அடக்கச் சடங்கின்போது மங்களகீதம் பாடுவது போலாகும். மேலும், மார்க்ஸின் இச்சொற்கள் கோத்தா வேலைத்திட்டத்தைப் பற்றிய[43] அவரது கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டவை, அக்கடிதத்தில் கோட்பாடுகளை வரையறுப்பதில் கதம்பவாதத்தைக் காட்டுவதை அவர் தீவிரமாகக் கண்டிக்கிறார். மார்க்ஸ் அந்தக் கட்சித் தலைவர்களுக்கு எழுதியதில், நீங்கள் ஒன்று

பட்டுத்தீரவேண்டுமானால் இயக்கத்தின் நடைமுறைக் குறிக்கோள்களை நிறைவாக்குவதற்கான உடன்பாடுகள் செய்து கொள்ளுங்கள், ஆனால் கோட்பாடுகள் பற்றி எந்தவிதமான பேரத்துக்கும் இடங்கொடாதீர்கள், தத்துவார்த்த வகைப்பட்ட ''சலுகைகள்'' எதுவும் கொடாதீர்கள் என்று எழுதினார். இது மார்க்ஸின் கருத்து; அப்படியிருந்தும் மார்க்ஸ் பெயரால் தத்துவத்தின் குறிபொருளைச் சிறுமைப்படுத்த முயலும் ஆசாமிகள் நம்மிடையே இருக்கிறார்கள்!

புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்கமுடியாது. சந்தர்ப்பவாதத்தைப் பிரச்சாரம் செய்வதே ஃபேஷனாகிப்போய் அத்துடன் நடைமுறை நடவடிக்கையின் மிகமிகக் குறுகிய வடிவங்களின்மேல் மோகமும் கைகோத்துச் சென்றுகொண்டிருக்கும் காலத்தில் இதை எவ்வளவு பலமாக வலியுறுத்தினாலும் தகும். மேலும், ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் விஷயத்தில் தத்துவத்தின் முக்கியத்துவம் மேலும் உயர்ந்திருப்பதற்கு வேறு மூன்று நிலைமைகள் (அடிக்கடி மறக்கப்படுபவை) உள்ளன: முதலாவதாக, உருப்பெற்றுவரும் நிகழ்வுப்போக்கிலேதான் நம் கட்சி இருக்கிறது, அதன் உறுப்புத்தோற்றங்கள் இப்போதுதான் வடிவமைதி பெற்றுவருகின்றன, மற்றும் சரியான பாதையை விட்டுத் திசைதிருப்பப் பயமுறுத்தும் பிற புரட்சிபாற்பட்ட சிந்தனைப் போக்குகளோடு அது இன்னும் வெகு தூரத்துக்குக் கணக்குத்தீர்த்தாகவில்லை. மாறாக, மிக அண்மைக்காலத்திலே சமூக-ஜனநாயகவாத வகைப்படாத புரட்சிப் போக்குகள் மறுவுயிர்ப்பெய்தி வருவது குறிப்பாக உள்ளது (இப்படி நிகழக்கூடும் என்று வெகுகாலத்துக்கு முன்பே ''பொருளாதாரவாதிகளை'' அக்ஸெல்ரோட் எச்சரித்திருக்கிறார்). இந்நிலைமைகளில், முதல் நோட்டத்தில் ''முக்கியமில்லாத'' தவறாகத் தோன்றுகிற ஒன்று மிகவும் வருந்தத்தக்க விளைவுகளுக்குக் கொண்டுபோய் விடக்கூடும்; கருத்துப்பிரிவினரின் தாவாக்களும் கருத்துச் சாயல்களிடையே கறாரான வேறுபாடுசெய்தலும் சமயப்பொருத்தமற்றது அல்லது தேவையற்றது என்று பார்வைக்கேடுள்ள மனிதர்கள்தாம் கருதமுடியும். ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் தலைவிதி வரப்போகும் மிகப்பல ஆண்டுகளுக்கு ஏதாவதொரு ''சாயல்'' பலப்படுவதைச் சார்ந்திருக்கக்கூடும்.

இரண்டாவதாக, சமூக-ஜனநாயகவாத இயக்கம் சாராம்சத்திலே ஒரு சர்வதேச இயக்கமாகும். இதற்குப் பொருள், நாம் தேசிய வெறியை எதிர்த்துப் போராடவேண்டும் என்பது மட்டுமல்ல, ஓர் இளம் நாட்டில் முளைப்பருவத்திலுள்ள இயக்கம் மற்ற நாடுகளின் அனுபவங்களைப் பயன்படுத்திக்கொண்டால்தான் வெற்றி பெற முடியும் என்பதுமாகும். இந்த அனுபவங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அவற்றைத் தெரிந்துவைத்திருந்தால் மட்டும் போதாது, கடைசியாக வந்த தீர்மானங்களை வெறுமே பிரதி செய்து கொண்டால் மட்டும் போதாது. இந்த அனுபவங்களை விமர்சன முறையிலே பயின்று சுதந்தரமாகச் சோதித்துப்பார்ப்பதே நமக்குத் தேவை. தற்காலத்திய பாட்டாளிவர்க்க இயக்கம் எவ்வளவு பெரிதாக வளர்ந்து கிளை பரப்பி வந்துள்ளது என்று உணர்கிற ஒருவன் இப்பணியை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு தத்துவார்த்தச் சக்திகளின் சேமிப்பும் அரசியல் (அத்துடன் புரட்சிகரமான) அனுபவத்தின் சேமிப்பும் தேவைப்படும் என்பதைப் புரிந்து கொள்வான்.

மூன்றாவதாக, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் தேசியக் கடமைகள் உலகத்தில் வேறெந்த சோஷலிஸ்டுக் கட்சியும் எதிர்கொண்டிராத வகைப்பட்டவை. எதேச்சாதிகாரத்தின் நுகத்தடியினின்று மக்கள் முழுவதையும் விடுவிக்கும் பணி நம்மீது சுமத்தியுள்ள அரசியல் கடமைகள் அமைப்புக் கடமைகள் பற்றிப் பின்னால் கவனிக்க வாய்ப்பு இருக்கும். ஆகமிக முன்னேறிய தத்துவத்தை வழிகாட்டியாகக் கொண்டுள்ள கட்சி ஒன்றுதான் முன்னணிப் போர்வீரனின் பாத்திரத்தை நிறைவேற்ற முடியும் என்று மட்டும் தற்போதைக்குச் சொல்ல விரும்புகிறோம். இதன் பொருளை ஸ்தூலமாகப் புரிந்து கொள்வதற்கு சமூக-ஜனநாயகவாதத்தின் முன்னோர்களான ஹெர்ட்ஸன், பெலீன்ஸ்கி, செர்னிஷேவ்ஸ்கி ஆகியோரையும் 1870களைச் சேர்ந்த ஒளிமிக்க புரட்சியாளர்களின் குழுவையும் வாசகர் நினைவூட்டிக் கொள்ளட்டும்; இன்று ருஷ்ய இலக்கியம் பெற்றுவரும் உலகுதழுவிய குறிபொருளைக் குறித்து ஆழச் சிந்தித்துப் பார்க்கட்டும்; மேலும்... இது போதுமே!

சமூக-ஜனநாயகவாத இயக்கத்தில் தத்துவம் வகிக்கிற குறிபொருள் பற்றி 1874ல் எங்கெல்ஸ் சொன்னதை மேற்

கோள் காட்டுவோம். சமூக-ஜனநாயகவாதத்தின் மகத்தான போராட்டத்தின் இரண்டு (அரசியல் வகைப்பட்டது, பொருளாதார வகைப்பட்டது எனும்) வடிவங்களை அங்கீகரிப்பது நம்மிடையே ஃபேஷனுக உள்ளதே, அதுபோல் செய்யவில்லை எங்கெல்ஸ்; அவர் மூன்று வடிவங்களை அங்கீகரிக்கிருர், முதலில் சொன்ன இரண்டு வடிவங்களுக்குச் சமமாகத் தத்துவார்த்தப் போராட்டத்தை வைக்கிருர். நடைமுறை வகையிலும் அரசியல் வகையிலும் பலமடைந்துவிட்டிருந்த ஜெர்மன் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு அவர் அளித்த பரிந்துரைகள் தற்காலப்பிரச்சினைகளின், சர்ச்சைகளின் பார்வை நிலையில் எவ்வளவோ அறிவூட்டுவதாக இருப்பதால் Der deutsche Bauernkrieg* எனும் தமது நூலுக்கு அவர் எழுதிய முகவுரைக்குறிப்பிலிருந்து ஒரு நீண்ட பகுதியை நான் மேற்கோள் காட்டுவதில் வாசகர் வெறுப்படையமாட்டார் என்று நம்புகிறேன்; வெகுகாலமாகவே அந்த நூல் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்டது.

''ஐரோப்பாவின் பாக்கிப் பகுதியிலுள்ள தொழிலாளிகளுக்கு இல்லாத இரண்டு முக்கியமான அனுகூலங்கள் ஜெர்மன் தொழிலாளிகளுக்கு உண்டு. முதலாவது: ஐரோப்பாவின் மிகவும் தத்துவார்த்தப்போக்குள்ள மக்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள்; ஜெர்மனியின் ''படித்த'' வர்க்கங்கள் என்று சொல்லிக்கொள்ளும் வர்க்கங்கள் அநேகமாக முற்றும் இழந்துவிட்ட தத்துவ உணர்ச்சியை அவர்கள் தொடர்ந்து வைத்திருக்கிருர்கள். தனக்கு முற்பட்டதான ஜெர்மன் தத்துவஞானம் இல்லாமல், குறிப்பாக ஹெகலின் தத்துவஞானம் இல்லாமல், ஜெர்மன் விஞ்ஞான சோஷலிஸம்—விஞ்ஞான சோஷலிஸமாக இருந்தது அது ஒன்றுதான்—தோன்றியிராது. தொழிலாளிகளிடையே தத்துவ உணர்ச்சி இல்லாமல் விஞ்ஞான சோஷலிஸம் அவர்களின் சதையிலே இரத்தத்திலே இன்று ஊறிப்போயிருக்கிற அளவுக்குப் போயிராது. ஒரு புறத்தில், தனித்தனி தொழிற்சங்கங்கள் நேர்த்தியான அமைப்பு வைத்திருந்துங்கூட ஆங்கிலேயப் பாட்டாளிவர்க்க

* Dritter Abdruck. Leipzig, 1875. Verlag der Genossenschaftsbuchdruckerei (ஜெர்மனியில் விவசாயிகள் போர். மூன்ருவது பதிப்பு, கூட்டுறவுப் பதிப்பகம், லைப்ஸிக், 1875.—(ப-ர்.)

இயக்கம் இவ்வளவு மெதுவாக ஊர்ந்து சென்றுகொண்டிருப்பதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்ருகிய தத்துவத்தின்பாலுள்ள அசிரத்தை; மற்ருெரு புறத்தில், புரூதோன் வாதம்[44] அதன் ஆதி வடிவத்தில் பிரெஞ்சுக்காரர்களிடையேயும் பெல்ஜியம் நாட்டாரிடையேயும், மற்றும் அதை பக்கூனின் மேலும் கேலிச்சித்திரமாக்கிவிட்ட வடிவத்தில் ஸ்பெயின் நாட்டாரிடையேயும் இத்தாலி நாட்டாரிடையேயும் உண்டாக்கிய தீங்கும் குழப்பமும்—ஆகியவற்றிலிருந்து இது எவ்வளவு அளவிடற்கரிய அனுகூலம் என்று அறியலாம்.

''இரண்டாம் அனுகூலம், காலவரிசையிலே பார்க்கும் போது தொழிலாளர் இயக்கத்தில் அநேகமாகக் கடைசியாக வந்தவர்கள் ஜெர்மானியர்கள். ஜெர்மன் தத்துவார்த்த சோஷலிஸம் ஸான்-ஸிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோரின் தோள்களில் ஏறியமர்ந்திருப்பதை என்றைக்கும் மறக்காது; அம்மூவரும் விசித்திரமான எண்ணப்போக்குகளும் கற்பனுவாதமும் எவ்வளவோ கொண்டிருந்தபோதிலும் எல்லாச் சகாப்தங்களுக்கும் உரிய தலைசிறந்த சிந்தனையாளர்களிடையே இடம் பெற்றவர்கள், அவர்களின் மேதை எண்ணற்ற விஷயங்களை முன்னறிந்து கூறியது, அவை சரியே என்று நாம் விஞ்ஞான வழியிலே நிரூபித்து வருகிருேம். அதேபோல், ஜெர்மனியிலுள்ள நடைமுறைவழிப்பட்ட தொழிலாளர் இயக்கமும் ஆங்கிலேய, பிரெஞ்சு இயக்கங்களின் தோள்களின் மீது வளர்ந்திருப்பதையும், அவை எவ்வளவோ விலை கொடுத்துப் பெற்ற அனுபவத்தை அப்படியே எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள முடிந்திருப்பதையும், தம் காலத்தில் அநேகமாகத் தவிர்க்கமுடியாதவையாக இருந்த அவற்றின் தவறுகளை அது இப்போது தவிர்க்கமுடிந்திருப்பதையும் என்றைக்கும் மறக்கலாகாது. ஆங்கிலேயத் தொழிற்சங்கங்களின், பிரெஞ்சுத் தொழிலாளர் அரசியல் போராட்டங்களின் முன்னுதாரணமின்றி, குறிப்பாக பாரிஸ் கம்யூன் கொடுத்த பிரம்மாண்டமான தூண்டுகையின்றி, இன்று நாம் எங்கே இருப்போம்?

''ஜெர்மன் தொழிலாளிகள் தமது நிலைமையின் அனுகூலங்களை அரிய ஞானத்துடன் பயன்படுத்திக்கொண்ட பெருமைக்கு உரியவர்கள் என்பதைச் சொல்லித்தீரவேண்டும். ஒரு தொழிலாளர் இயக்கம் இருந்துவந்ததிலே முதல் தட-

வையாக போராட்டமானது அதன் மும்முனைகளிலே—தத்து வார்த்த முனை, அரசியல்முனை, நடைமுறைவழிப்பட்ட-பொருளாதார முனை (முதலாளிகளை எதிர்ப்பது) என்று—இசைவுடனும், அதன் பரஸ்பரத்தொடர்புகளோடும், முறை யாகவும் நடத்தப்படுகிறது. இவ்வகைப்பட்ட பொது மையத் தாக்குதலிலேதான் ஜெர்மன் இயக்கத்தின் வலிமையும் வெல்லவொண்ணுத் தன்மையும் அடங்கியுள்ளன.

''ஒரு புறத்தில் இந்த அனுகூலமான நிலைமையின் காரண மாகவும், மறுபுறத்தில் ஆங்கிலேயர்களின் தீவுத்தன்மையின் பாற்பட்ட தனிப்பண்புகளின் காரணத்தாலும், பிரெஞ்சு இயக்கம் பலவந்தமாக ஒடுக்கப்பட்ட காரணத்தாலும், தற்சமயத்துக்கு ஜெர்மன் தொழிலாளிகள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முன்னணியில் நிறுத்தப் பெற்றுள்ளனர். அவர்கள் இந்த மதிப்புள்ள இடத்தை நீடித்து வகித்துவர எவ்வளவு காலத்துக்கு நிகழ்ச்சிகள் அனுமதிக்கும் என்று முன்கூட்டிச் சொல்ல முடியாது. எனினும் அவர்கள் இருந்து வருகிறவரை அவ்விடத்தைத் தக்கவிதத்தில் வகித்து வரு வார்கள் என்று நம்புவோமாக. இதற்கு ஒவ்வொரு போராட் டத்துறையிலும் கிளர்ச்சித் துறையிலும் இரட்டித்த முயற்சி கள் தேவைப்படும். குறிப்பாக, எல்லாத் தத்துவார்த்தப் பிரச்சினைகளிலும் மேலும் தெளிவான உட்பார்வை பெறு வதும், பழைய உலகக் கண்ணேட்டத்திலிருந்து சுவீகரித்த மரபுச் சொற்றொடர்களின் செல்வாக்கிலிருந்து மேன்மேலும் விடுவித்துக் கொள்வதும், சோஷலிஸம் ஒரு விஞ்ஞானமாக ஆகிவிட்டதால் அதை ஒரு விஞ்ஞானமாகப் பின்பற்றுவது—அதாவது, அதைப் பயில்வது—அவசியம் என்பதை இடைய ருது நினைவில் கொள்வதும், தலைவர்களின் கடமையாக இருக் கும். இவ்வாறு பெற்று மேன்மேலும் தெளிவாக்கிக்கொண்ட ஞானத்தைத் தொழிலாளர் திரள்களிடையே அதிகரித்த ஆர்வத்துடன் பரப்புவதும், கட்சி யமைப்பையும் தொழிற் சங்கங்களின் அமைப்பையும் ஒருங்கே மேன்மேலும் உறுதி யாக இணைத்துப்பிணைத்துவருவதும், பணியாக இருக்கும்....

''...இவ்வழியில் ஜெர்மன் தொழிலாளர்கள் முன்னேறு வார்களேயானால், அவர்கள் இயக்கத்தின் தலைமைநிலையில் நடையிட்டுவருவார்கள் என்பதை விட—எந்தக் குறிப்பிட்ட ஒரு நாட்டின் தொழிலாளர்களும் இவ்வியக்கத்தின் தலைமை

நிலையில் நடையிடுவது என்பது இந்த இயக்கத்தின் நல னுக்கு உகந்ததல்ல— போர் அணியில் அவர்கள் மதிப்புள்ள இடத்தை வகிப்பார்கள் எனலாம்; எதிர்பாராத அளவில் கொடிய சோதனைகளோ முக்கியமான நிகழ்ச்சிகளோ மேலும் அதிகமான தைரியத்தையும் மனத் திட்பத்தையும் செய லாற்றலையும் கோருகிறபோது முழுமையான ஆயத்தத்துடன் நிற்பார்கள்.''

எங்கெல்ஸ் வார்த்தைகள் தொலைநோக்குள்ளவை என்று காட்டிக்கொண்டன. ஒரு சில ஆண்டுகளுக்குள் சோஷலிஸ்டு களுக்கு எதிரான அசாதாரணச் சட்டம் என்கிற வடிவில் எதிர்பாராத அளவில் கொடிய சோதனைகளுக்கு ஜெர்மன் தொழிலாளிகள் உட்படுத்தப்பட்டனர். அவர்கள் முழுமை யான போராயத்தத்துடன் அந்தக் கொடிய சோதனைகளைச் சந்தித்து வெற்றிவாகை சூடினர்.

அதைவிட அளவிடற்கரிய கொடிய சோதனைகளை ருஷ்யப் பாட்டாளிவர்க்கம் அனுபவிக்க வேண்டியிருக்கும்; அது எதிர்த்துப்போராடவேண்டியிருக்கும் அரக்கனோடு ஒப்பிட் டால் அரசியல் சட்டமுறையில் அமைந்த நாட்டிலுள்ள சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் குள்ளனாகவே தெரியும். இன்று வரலாறு நம் முன் வைத்துள்ள உடனடிப் பணியானது எந்த நாட்டுப் பாட்டாளிவர்க்கத்தையும் எதிர்கொண் டுள்ள எல்லா உடனடியான பணிகளையும் விட மிகமிகப் புரட்சிகர மானது. இந்தப் பணியை நிறைவேற்றினால், ஐரோப்பாவின் பிற்போக்குக்கு மட்டுமின்றி ஆசியாவின் பிற்போக்குக்கும் (என்று இப்போது சொல்லக்கூடும்) வாய்த்ததாயுள்ள வலு மிக்க கொத்தளத்தை ஒழித்துவிட்டால், அது ருஷ்யப் பாட் டாளி வர்க்கத்தை உலகுதழுவிய புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக ஆக்கிவிடும். முன்னைவிட ஆயிரம் மடங்காக அகன்றும் ஆழ்ந்தும் வளர்ந்திருக்கும் இயக்கத்திலே அதே பற்றுறுதிமிக்க மனத்திட்பத்தையும் வீரியத்தையும் பாய்ச்சி ஊக்கினால் நமது முன்னோர்களான 1870-களின் புரட்சியாளர்கள் ஏற்கெனவே சம்பாதித்த இந்த மதிப்புமிக்க பட்டத்தைப் பெறுவோம் என்று நம்பு வதற்கு நமக்கு உரிமை உண்டு.

## II

## மக்களின் தன்னியல்பும் சமூக-ஜனநாயகவாதிகளின் உணர்வும்

*1870களிலிருந்த இயக்கத்தை விட மேலாக அகன்றும் ஆழ்ந்தும் இருக்கிற நம் இயக்கத்தை, அக்காலத்திய இயக்கத்தை ஊக்குவித்த அதே பற்றுறுதிமிக்க மனத்திட்பத்தோடும் வீரியத்தோடும் ஊக்குவிக்கவேண்டும் என்று சொன்னேம். உண்மை: தற்கால இயக்கத்தின் பலம் மக்களின் விழிப்பிலே (முதன்மையாக, தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் விழிப்பிலே) அடங்கியிருக்கிறது, அதன் பலவீனம் புரட்சிகரமான தலைவர்களின் உணர்வின்மையிலும் முன்முயற்சியின்மையிலும் அடங்கியுள்ளது, இதை யாரும் இதுவரை சந்தேகித்ததில்லை.*

*என்றபோதிலும், அண்மைக்காலத்தில் நிலைகுலையச் செய்யும் ஒரு கண்டுபிடிப்பு செய்யப்பட்டு அது இப்பிரச்சினையைப்பற்றி இதுவரை இருந்துவந்துள்ள எல்லாக் கருத்துக்களையும் வீழ்த்தப் போவதாக பயமுறுத்துகிறது. இந்தக் கண்டுபிடிப்பை* ரபோச்சியே தேலோ *செய்திருக்கிறது; அது* இஸ்க்ராவுடனும் ஸார்யாவுடனும் *நடத்திய சர்ச்சையில் தனித்தனி அம்சங்கள் குறித்து ஆட்சேபணைகள் செய்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், ''பொதுவான வேற்றுமைகளை'' மேலும் ஆழமான ஒரு காரணத்துக்கு—''தன்னியல்பான அம்சத்துக்கும் உணர்வுபூர்வமான 'முறைமையுள்ள' அம்சத்துக்கும் உள்ள* சார்புநிலை *முக்கியத்துவத்தைப் பற்றிய வெவ்வேருன மதிப்பீடுகளுக்கு''—கற்பிக்க முயன்றது.* ''வளர்ச்சியின் புறவகைப்பட்ட அல்லது தன்னியல்பான அம்சத்தின் குறிபொருளைச் சிறுமைப்படுத்துவது''* *என்று* ரபோச்சியே தேலோ *தனது குற்றச்சாட்டை வரையறுக்கிறது. இதற்கு நாம் சொல்கிறேம்:* இஸ்க்ராவுடனும் ஸார்யாவுடனும் *நடத்திய சர்ச்சை* ரபோச்சியே தேலோவை

---

* ரபோச்சியே தேலோ, *இதழ் 10, செப்டம்பர் 1901, பக்கங்கள் 17-18. கொட்டை யெழுத்துக்கள் சொந்தத்தில் போட்டவை.*

இந்த ''பொதுவான வேற்றுமைகளைக்'' கண்டுபிடிக்கச் செய்ததைத்தவிர வேறொன்றும் செய்திராதுபோயினும் அதுவே நமக்குக் கணிசமான திருப்தி அளிக்கப் போதுமானது; அந்த அளவுக்கு இவ்வாய்வுரை குறிபொருள் உடையது; அந்த அளவுக்கு இது ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே உள்ள தற்காலத் தத்துவார்த்த, அரசியல் வேற்றுமைகளின் சாராம்சத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இக்காரணத்திற்காகவே, உணர்வுக்கும் தன்னியல்புக்கும் உள்ள உறவு பற்றிய பிரச்சினை அவ்வளவு மாபெரும் அக்கறையுள்ள பிரச்சினையாகிறது; எனவே அப்பிரச்சினை மிக விபரமாகக் கவனிக்கப்படவேண்டும்.

### அ. தன்னியல்பான எழுச்சியின் தொடக்கம்

1890களின் மத்தியிலே மார்க்ஸியத்தின் தத்துவங்களில் எவ்வளவு முழுமையாக ருஷ்யாவின் படித்த இளைஞர்கள் சிந்தனையைப் புதைத்திருந்தார்கள் என்று முந்தைய அத்தியாயத்தில் சுட்டிக்காட்டினோம். அதே காலத்தில் 1896ல் நடந்த புகழ்பெற்ற செயின்ட் பீடர்ஸ்புர்க் தொழிற்போரைத்[45] தொடர்ந்து வந்த வேலைநிறுத்தங்கள் அதேபோன்ற பொதுவான தன்மையைப் பெற்றன. அவை ருஷ்யா முழுவதிலும் பரவி, புதிதாக விழிப்புற்றுவரும் மக்கள் இயக்கத்தின் ஆழத்தைத் தெளிவாகக் காட்டின. ஆகவே, நாம் ''தன்னியல்பான அம்சத்தைப்'' பற்றிப் பேசுவதானால் இந்த வேலைநிறுத்த இயக்கத்தைத்தான் தன்னியல்பானதாக முதலில் கருதவேண்டும். ஆனால் தன்னியல்பில் எத்தனையோ வகை உண்டு. ருஷ்யாவில் 1870களிலும் 1860களிலும் (19ம் நூற்றாண்டின் முற்பாதியிலுங்கூட) வேலைநிறுத்தங்கள் நடந்தன; அவற்றைத் தொடர்ந்து ''தன்னியல்பாக'' இயந்திரங்களை உடைப்பது போன்றவையும் நடந்தன. இந்தக் ''கலவரங்களோடு'' ஒப்பிட்டால் 1890களின் வேலை நிறுத்தங்களைக்கூட ''உணர்வுபூர்வமானவையாக'' வர்ணிக்கக் கூடும், அந்த அளவுக்கு அவை அக்காலத்தில் பாட்டாளி வர்க்க இயக்கம் சாதித்த முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. ''தன்னியல்பான அம்சம்'' என்பது கரு வடிவத்திலே இருக்

கும் உணர்வைக் காட்டுவது தவிர வேறில்லை என்று இது புலப்படுத்துகிறது. ஆதிநிலைக் கலவரங்களுங்கூட ஓரளவுக்கு உணர்வு விழிப்படைவதை வெளியிடுகிறது. தொழிலாளிகள் தம்மை ஒடுக்கிவருகிற அமைப்புமுறை நிலையானது என்கிற நீடூழிக்கால நம்பிக்கையை இழந்துவந்தார்கள், அதிகாரிகளுக்கு அடிமைபோல் பணிந்து போவதைத் திட்டவட்டமாகக் கைவிட்டுக் கூட்டான எதிர்ப்பின் அவசியத்தை—புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள் என்று சொல்லமாட்டேன்—உணர்ந்துகொள்ளத் தொடங்கினார்கள். ஆனபோதிலும், இவை போராட்டத்தின் இயல்பிலே இருந்ததைவிட நிராசையையும் வஞ்சம் தீர்க்கும் உணர்ச்சியையும் வெளியிடும் வெடிப்புகளின் இயல்பிலே இருந்தன. 1890களின் வேலை நிறுத்தங்கள் எவ்வளவோ பெரிதான உணர்வின் மின்வெட்டுகளை வெளிப்படுத்தின. திட்டவட்டமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன, சரியான நேரம் பார்த்து வேலைநிறுத்தம் துவங்கப்பட்டது, வேறு இடங்களிலிருந்து அறியப்பெற்ற வழக்குகளும் எடுத்துக்காட்டுகளும் விவாதிக்கப்பட்டன, என்றவாறு. கலவரங்கள் வெறுமே ஒடுக்கப்பட்டவர்களின் எதிர்ப்பாக இருந்தன, ஆனால் முறைமையுள்ள வேலைநிறுத்தங்கள் கரு வடிவத்திலுள்ள, கரு வடிவத்தில் மட்டுமே உள்ள, வர்க்கப் போராட்டத்தைக் காட்டின. தம்மளவில் இவ்வேலைநிறுத்தங்கள் வெறுமே தொழிற்சங்கப் போராட்டங்களே, இன்னமும் சமூக-ஜனநாயகப் போராட்டங்களாக இல்லை. அவை தொழிலாளிகள் முதலாளிகளிடையே மூண்டு வரும் பகைமைகளைக் குறித்தன; ஆனால் தற்கால அரசியல், சமூக அமைப்புமுறை முழுவதற்கும் தமது நலன்களுக்கும் இடையேயுள்ள சமரசப்படுத்தமுடியாத பகைமை இருப்பதைத் தொழிலாளிகள் உணர்ந்திருக்கவில்லை, உணரமுடியவுமில்லை—அதாவது, அவர்களின் உணர்வு இன்னமும் சமூக-ஜனநாயகவாத உணர்வாக இல்லை. இந்த அர்த்தத்திலே, 1890களின் வேலைநிறுத்தங்களை ''கலவரங்களோடு'' ஒப்பிடும்போது மாபெரும் முன்னேற்றத்தைக் குறித்த போதிலும் வெறுமே ஒரு தன்னியல்பான இயக்கமாகவே இருந்துவிட்டன.

தொழிலாளிகளிடையே சமூக-ஜனநாயகவாத உணர்வு இருந்திருக்க முடியாது என்று சொன்னோம். அது வெளியிலிருந்

துதான் அவர்களுக்குக் கொண்டுவரப்படவேண்டும். பாட்டாளி வர்க்கம் தனது சொந்த முயற்சிகள் மூலமாகத் தொழிற்சங்க உணர்வு மட்டுமே—அதாவது, தொழிற்சங்கங்களில் ஒன்றுபடுவது, முதலாளிகளை எதிர்த்துப் போராடுவது, அவசியமான தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த முயல்வது, முதலியவற்றின் அவசியத்தைப் பற்றிய துணிபு மட்டுமே—வளர்த்துக்கொள்ள முடிகிறது என்று எல்லா நாடுகளின் வரலாறு புலப்படுத்துகிறது.* ஆனால் சோஷலிஸத்தின் தத்துவம் மெய்யறிவுவகைப்பட்ட, வரலாறுவழிப்பட்ட, பொருளாதார வகைப்பட்ட தத்துவங்களிலிருந்து வளர்ந்ததாகும்; சொத்துள்ள வர்க்கங்களின் பிரதிநிதிகள், அறிவுஜீவிகள், அவற்றை வகுத்து விளக்கினர். நவீன விஞ்ஞான சோஷலிஸத்தின் மூலவர்களான மார்க்ஸும் எங்கெல்ஸும் முதலாளி வர்க்கப் போக்கான படிப்பாளிப்பகுதியினரைச் சேர்ந்தவர்கள். அதேபோல், ருஷ்யாவில், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தன்னியல்பான வளர்ச்சியோடன்றி முற்றிலும் சுதந்தரமாகவே சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவார்த்த சித்தாந்தம் உதித்தது; புரட்சிகரமான சோஷலிஸ்டுப் படிப்பாளிப்பகுதியினரிடையே ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியின் ஒரு இயல்பான, தவிர்க்கவியலாத விளைவாக அது உதித்தது. விவாதத்திலிருக்கும் காலப்பகுதியான 1890களின் நடுவில் இந்தச் சித்தாந்தம் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவின் முழுதும் வரையறுக்கப்பட்ட வேலைத்திட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடல்லாமல் ருஷ்யாவில் பெரும்பான்மையான புரட்சிகரமான இளைஞர்களைத் தன் பக்கம் ஏற்கெனவே கவர்ந்திருந்தது.

எனவே, உழைக்கும் மக்களின் தன்னியல்பான விழிப்பும், அவர்கள் உணர்வுபூர்வமான வாழ்க்கைக்கும் உணர்வுபூர்வ

---

* சிலர் நினைக்கிற மாதிரி, தொழிற்சங்கவாதம் ''அரசியலை'' முற்றாக விலக்குகிறதில்லை. தொழிற்சங்கங்கள் எப்போதுமே கொஞ்சம் அரசியல் (ஆனால் சமூக-ஜனநாயகவாத வகைப்பட்டதல்ல) கிளர்ச்சியும் போராட்டமும் நடத்திவந்துள்ளன. தொழிற்சங்க அரசியலுக்கும் சமூக-ஜனநாயகவாத அரசியலுக்கும் உள்ள வேற்றுமையை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

மான போராட்டத்துக்கும் விழித்தெழுதலும், சமூக-ஜன நாயகத் தத்துவத்தை ஆயுதமாகப்பூண்டு தொழிலாளர் பக்கம் வரத் துடிக்கும் புரட்சிகரமான ஓர் இளைஞர்கூட்டமும் ஒருங்கே இருந்தன. இது சம்பந்தமாக, அடிக்கடி மறக்கப் படுகிற (ஒப்புநோக்கில் அரிதாக அறியப்பட்டுள்ள) ஒரு விஷ யத்தைக் கூறுவது குறிப்பாக முக்கியமாகும்: அதாவது, அக்காலப்பகுதியின் முந்திய சமூக-ஜனநாயகவாதிகள் ஆர்வத்தோடு பொருளாதாரக் கிளர்ச்சி நடத்தி வந்தார்கள் என்றபோதிலும் (அன்று கையெழுத்துப்படியிலேயே இருந்து வந்த கிளர்ச்சி பற்றி எனும் சிறுநூலில் இருக்கும் உண்மை யிலே பயனுள்ள குறிப்புகள் இந்த நடவடிக்கைக்கு வழிகாட்டி வந்தன), அது ஒன்றே தமது பணி என்று அவர்கள் கருத வில்லை. மாறாக, துவக்கத்திலிருந்தே பொதுவாக மிகவும் தொலைவீச்சுள்ள வரலாற்றுப் பணிகளையும், குறிப்பாக எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் பணியையும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்துக்குக் கொடுத்திருந்தார்கள். இப்படித் தான், 1895 இறுதியில், செயின்ட் பீடர்ஸ்புர்க் சமூக-ஜன நாயகவாதிகளின் குழு (இது ''பாட்டாளி வர்க்க விடுதலைக் கான போராட்டக் குழுவை''[46] நிறுவியது) ரபோச்சியே தேலோ என்கிற பெயர் கொண்ட பத்திரிகையின் முதல் இதழைத் தயாரித்தது. அவ்விதழ் அச்சேறத் தயாராயிருந்த சமயத்தில் 1895 டிஸம்பர் 8ம் நாள் இரவில் அக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான அனதோலி அலெக்ஸேயெவிச் வானேயிவ்* வீட்டை போலீஸார் சோதனையிட்டு அதைக் கைப்பற்றினர், எனவே ரபோச்சியே தேலோவின் முதல் இதழ் உலகத்தைத் தரிசிக்கும் பேறு பெற்றிருக்கவேயில்லை. இவ்விதழின் தலையங்கக் கட்டுரை (ஒரு வேளை முப்பதாண்டு கள் கழித்து யாராவது ஒரு ருஸ்காயா ஸ்டரினு[47] இதை

---

* அ. அ. வானேயிவ் காசநோயால் 1899ல் கிழக்கு சைபீரியாவில் காலமானார்; நாடு கடத்தப்படுமுன் சிறையில் தனிக்கொட்டடியில் வைக்கப்பட்டிருந்தபோது இந்நோய்க்கு ஆளானார். எனவேதான் மேற்சொன்ன செய்தியை வெளி யிடலாம் என்று நினைத்தோம். அந்தச் செய்தி உண்மையே என்று உத்தரவாதமளிக்கிறோம், ஏனெனில் அ. அ. வானேயி வுடன் நெருங்கி நேரடியாகப் பழகிவந்த நபர்களிடமிருந்து கிடைக்கிற செய்தி அது.

போலீஸ் பிரிவின் நூற்காப்பிடத்தில் தேடியெடுக்கலாம்) ருஷ்யாவில் பாட்டாளிவர்க்கத்தின் வரலாற்றுப் பணிகளை உருவரை செய்து அரசியல் சுதந்தரம் சாதித்துக்கொள்வதைத் தலைமையில் வைத்தது. அவ்விதழில் ''நமது அமைச்சர்கள் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்?'' என்கிற தலைப்புள்ள கட்டுரையும் இருந்தது; அது துவக்க நிலைக் கல்விக் குழுக்களைப் போலீஸ் நசுக்குவதைப் பற்றியதாகும். மேலும், செயின்ட் பீடர்ஸ்புர்க்கிலியிருந்தும் ருஷ்யாவின் வேறு சில பகுதிகளிலிருந்தும் வந்த கொஞ்சம் கடிதப் போக்குவரத்தும் (எடுத்துக்காட்டாக, யாரஸ்லாவல் மாநிலத்தில் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டது[48] பற்றி ஒரு கடிதம்) இருந்தது. இதுவே 1890களின் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் ''முதல் முயற்சி''—என் நினைப்பு தவறில்லை என்றால். அது வெறுமே ஒரு உள்ளூர்ப் பத்திரிகையாகவோ, ''பொருளாதாரவாத'' பத்திரிகையாகவோ இருக்கவில்லை; எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் புரட்சி இயக்கத்தோடு வேலை நிறுத்த இயக்கத்தை ஒன்றுபடுத்துவதையும் சீர்திருத்த எதிர்ப்புள்ள பிற்போக்கான கொள்கையால் ஒடுக்கப்படும் அனைவரையும் சமூக-ஜனநாயகவாதத்தின் பக்கம் கொண்டுவந்து விடுவதையும் குறிக்கோளாக வைத்திருந்தது. அக்காலத்திய இயக்கத்தின் நிலையைப்பற்றிக் கடுகளவேனும் அறிந்திருந்த யாரும் சந்தேகிக்க முடியாது, தலைநகரின் தொழிலாளர்களும் புரட்சிகரமான படிப்பாளிப்பகுதியினரும் ஆர்வத்தோடு இப்பத்திரிகையை வரவேற்றிருப்பார்கள், விரிவான விற்பனை கிடைத்திருக்கும் என்று. அந்த முயற்சியின் தோல்வி வெறுமே காட்டியது இதுதான்: அக்காலத்திய சமூக-ஜனநாயகவாதிகளுக்குப் புரட்சிகரமான அனுபவமும் நடைமுறைப் பயிற்சியும் இல்லாத காரணத்தால் அவர்கள் அன்றைய உடனடித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமற்போயினர். செயின்ட் பீடர்ஸ்புர்க் ரபோச்சி லிஸ்டோக்[49] விஷயத்திலும், குறிப்பாக ரபோச்சயா கஸேத்தா, 1898 வசந்தகாலத்திலே நிறுவப்பெற்ற ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதத் தொழிலாளர் கட்சியின் அறிக்கை[50] ஆகியவற்றின் விஷயத்திலும் இதையே சொல்லித் தீரவேண்டும். இந்த ஆயத்தமின்மைக்காக அக்காலத்திய சமூக-ஜனநாயகவாதிகளைப் பழிக்கக் கனவிலும்

நினைக்க மாட்டோம், உண்மைதான். ஆனால் அந்த இயக்கத்தின் அனுபவத்திலிருந்து பயன் பெறும் பொருட்டும் அதிலிருந்து நடைமுறைக்கான படிப்பினைகளை எடுத்துக்கொள்ளும் பொருட்டும் அந்தந்தக் குறைபாட்டுக்குரிய காரணங்களையும் குறிபொருளையும் நாம் முழு நிறைவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, 1895-98 காலப்பகுதியிலே தீவிரமாகப் பணியாற்றிவந்த சமூக-ஜனநாயகவாதிகளில் ஒரு பகுதியினர் (ஒருக்கால் பெரும்பான்மையினராகவும் இருக்கலாம்) அக்காலத்திலேயே, ''தன்னியல்பான'' இயக்கத்தின் துவக்கத்திலேயே, ஒரு மிக விரிவான வேலைத்திட்டத்தையும் செயல் துடிப்புள்ள தாக்குமுறைக் கொள்கையையும் முன்வைப்பது சாத்தியம் என்று நியாயமாகவே கருதினார்கள் என்கிற விஷயத்தை நிலைநாட்டுவது மிக முக்கியம்.* புரட்சியாளர்களில் பெரும்பான்மையினருக்குப் பயிற்சியின்மை முற்றும் இயல்பான நிகழ்வுத்தோற்றமே, அது எந்தக் குறிப்பான அச்சங்

---

* ''1890களின் இறுதியாண்டுகளிலே இருந்த சமூக-ஜனநாயகவாதிகளின் நடவடிக்கைகள் பால் பகைமைக் கண்ணோட்டத்தை இஸ்க்ரா எடுத்துக்கொள்கிறதிலே, சிறு கோரிக்கைகளுக்கான போராட்டத்தைத்தவிர வேறு வேலை செய்வதற்கான நிலைமைகள் அக்காலத்தில் இல்லாதிருந்ததை அது புறக்கணிக்கிறது'' என்று ''பொருளாதாரவாதிகள்'' தமது ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதத்தில்'' (இஸ்க்ரா, இதழ் 12) கூறுகின்றனர். ''நிலைமைகள் இல்லை'' எனும் வன்கூற்று உண்மைக்கு நேர் மாறானது என்று மேலே சொன்ன விஷயங்கள் காட்டுகின்றன. 1890களின் இறுதியில் மட்டுமின்றி மத்தியிலுங்கூட சிறு கோரிக்கைகளுக்கான போராட்டத்தைத் தவிர வேறு வேலை செய்வதற்கான எல்லா நிலைமைகளும்—தலைவர்களின் போதிய பயிற்சி நீங்கலாக மற்றெல்லா நிலைமைகளும் இருந்தன. சித்தாந்திகளும் தலைவர்களுமாகிய நமக்குப் போதிய பயிற்சி இருக்கவில்லை என்று மனந்திறந்து ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக—''நிலைமைகள் இல்லை'' என்பதின் மீது, எந்தச் சித்தாந்தியாலும் இயக்கத்தைத் திசை திருப்பிவிட முடியாத பாதையை நிர்ணயிக்கிற பொருளாயத சூழ்நிலையின் பாதிப்பின் மீது, முற்றுகப் பழி சுமத்திவிட ''பொருளாதாரவாதிகள்'' முயல்கிறார்கள். இது தன்னியல்பின் முன் அடிமைபோல் பணிந்துகெஞ்சுவது தவிர வேறென்ன, ''சித்தாந்திகள்'' தமது சொந்த குறைபாடுகளின் மீது மோகம் கொண்டிருப்பது தவிர வேறென்ன?

களையும் எழுப்பியிருக்கமுடியாது. பணிகளைச் சரிவர வரையறுத்தவுடன், அவற்றை நிறைவேற்றத் திரும்பத்திரும்ப முயல்வதற்கான சக்தி மட்டும் இருந்திருந்தால், தற்காலிகமான தோல்விகள் அரைகுறையான துரதிர்ஷ்டங்களே. புரட்சி அனுபவமும் அமைப்புத் திறனும் பெறக்கூடிய விஷயங்களே, —அவற்றைப் பெறுவதற்கு விருப்பம் இருந்தால் போதும், குறைபாடுகளைக் கண்டுகொண்டால் போதும்; புரட்சிகரமான நடவடிக்கையில், குறைபாடுகளைக் கண்டு கொள்வதே அவற்றைப் போக்கிக்கொள்வதில் பாதிக்குமேல் வந்து விடுவதாகும்.

ஆனால், இந்த உணர்வு மங்கத் தொடங்கிய போது (மேலே குறிப்பிட்ட குழுக்களின் உறுப்பினர்களிடையே இவ்வுணர்வு கொழுந்துவிட்டபடியே இருந்தது), குறைகளை நிறைகளாகக் கருதத் தயாராயுள்ள, தன்னியல்பின் முன் தாம் அடிமைபோல் பணிந்து கெஞ்சுவதற்கு ஒரு தத்துவார்த்த அடிப்படையைப் புனைவதற்குக் கூடி முயல்கிற, பேர் வழிகளும்—சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைகளும்கூட— தோன்றியபோது, அரைகுறையான துரதிர்ஷ்டமாக இருந்தது முழு துரதிர்ஷ்டமாகிவிட்டது. இந்தப் போக்கிலிருந்து முடிவுகள் எடுக்கும் தருணம் வந்துவிட்டது; இதன் உள்ளடக்கம் ''பொருளாதாரவாதம்'' என்று பிழையாகவும் மிகக் குறுகலாகவும் இனங்குறிக்கப்படுகிறது.

## ஆ. தன்னியல்பை வழிபடுதல். ''ரபோச்சயா மிஸ்ல்''

இவ்வாறு தன்னியல்புக்கு அடிமைப்படுவதின் இலக்கிய வழிப்பட்ட வெளிப்பாட்டைக் கவனிக்குமுன், பின்வரும் இனக்குறிப்பான விஷயத்தை (மேலே சென்ன மூலத்திலிருந்து நமக்குத் தெரிவிக்கப்பட்டது இது) குறிக்க விரும்புகிறோம்— ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் இரண்டு எதிர்காலப் போக்குகள் செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் பணியாற்றிவந்த தோழர்களிடையே தோன்றி வளர்ந்ததற்கான நிலைமைகளை அது தெளிவாக்குகிறது. 1897 துவக்கத்தில், நாடுகடத்தப் படுவதற்குச் சற்றுமுன், அ. அ. வானேயிவும் அவரது சில தோழர்களும் ஒரு தனிப்பட்ட கூட்டத்தில்[51] கலந்துகொண்

டனர்; ''பாட்டாளிவர்க்க விடுதலைக்கான போராட்டக் குழு வின்'' ''முதிய'' உறுப்பினர்களும் ''இளைய'' உறுப்பினர் களும் அதில் கூடினர். அமைப்புப் பிரச்சினையே, குறிப்பாக ''தொழிலாளர்களின் பரஸ்பர நல நிதி பற்றிய விதிகள்'' என்பதே உரையாடலின் முக்கியப் பொருளாக இருந்தது; இவ்விதிகள் இறுதியான வடிவிலே லிஸ்டோக் ''ரபோத்னிகா''[52] இதழ்கள் 9-10, பக்கம் 46ல் வெளியிடப்பட்டன. ''முதிய'' உறுப்பினர்களுக்கும் (இவர்களை ''டிஸம்பர்வாதி கள்'' என்று செயின்ட் பீடர்ஸ்புர்க் சமூக-ஜனநாயகவாதி கள் கேலியாக அழைத்தனர்) ''இளைய'' உறுப்பினர்களில் பலருக்கும் (இவர்கள் பின்னால் ரபோச்சயா மிஸ்ல் வேலையில் தீவிரமாகப் பங்கு கொண்டனர்) இடையே உடனே கடுமை யான வேற்றுமைகள் வெளிப்பட்டன, சூடேறிய விவாதம் நடந்தது. இறுதி வடிவில் வெளியான விதிகளின் முக்கிய மான கோட்பாடுகளை ''இளைய'' உறுப்பினர்கள் ஆதரித்து நின்றனர். முக்கியமான தேவை இதுவல்ல, ''போராட்டச் சங்கத்தைப்'' புரட்சியாளர்களின் அமைப்பாகக் கெட்டிப் படுத்துவதே, பல்வேறான எல்லாத் தொழிலாளர் பரஸ்பர நல நிதிகள், மாணவர்களிடையே பிரச்சாரம் செய்யும் தொழிலாளர் வட்டங்கள் முதலியவை இதற்குக் கீழ்ப்படுத்தப் படவேண்டும், என்று ''முதிய'' உறுப்பினர்கள் வாதாடினர். இந்த வேற்றுமைகள் ஒரு பிளவின் தொடக்கம் என்று அச் சமயத்தில் விவாதத் தரப்பினர் உணரவில்லை என்பது சொல் லாமலே விளங்கும்; மாறாக, அவை ஏதோ தனிமையானவை, தற்செயலானவை என்றே நினைத்தனர். ஆனால், ருஷ்யாவி லும் கூட, ''முதிய'' சமூக-ஜனநாயகவாதிகளை எதிர்த்துப் போராட்டம் நடக்காமல் ''பொருளாதாரவாதம்'' தோன்றிப் பரவவில்லை என்பதை இவ்வுண்மை புலப்படுத்துகிறது (இதை இன்றையப் ''பொருளாதாரவாதிகள்'' மறக்கிறது வழக்கம்). மற்றும், மொத்தத்தில் இந்தப் போராட்டம் ''ஆவண வகைப்பட்ட'' அடிச்சுவடுகளை விட்டுச் செல்ல வில்லை என்றால் அதற்கு ஒரே காரணம், அன்று பணியாற்றி வந்த வட்டங்களின் உறுப்பினர் தொகுதி இடையறாது மாறிக் கொண்டிருந்ததால் தொடர்ச்சி எதுவும் நிலைநாட்டப்பட வில்லை, அதன் விளைவாக பார்வைநிலை பற்றிய வேற்றுமை கள் எந்த ஆவணங்களிலும் பதிவுசெய்யப்படவில்லை.

ரபோச்சயா மிஸ்ல் நிறுவப்பட்டதும் ''பொருளாதார வாதம்'' வெளிச்சத்துக்கு வந்தது—ஆனால் ஓரே அடியாக அல்ல. பெரும்பான்மையான ருஷ்யப் பயிற்சி வட்டங்களின் நடவடிக்கைக்கான நிலைமைகளையும் குறையாயுள் தன்மையையும் ஸ்தூலமாக நாம் சித்திரித்துக் கொள்ளவேண்டும் (தாமே அனுபவித்தவர்களுக்குத் தான் இது சாத்தியப்படும்); அப்பொழுதுதான், பல்வேறு ஊர்களில் இந்தப் புதிய போக்கின் வெற்றி தோல்விகளில் தற்செயலான அம்சம் எவ்வளவுக்கு இருந்தது என்பதையும், இந்தப் ''புதுமை'' உண்மையிலே ஒரு தனிக்குறிப்பான போக்கை வெளியிடுகிறதா அன்றி வெறுமே சில தனிநபர்களின் பயிற்சியின்மையை வெளியிடுகிறதா என்று அதன் பரிந்துரையாளர்களும் சரி, எதிர்ப்பாளர்களும் சரி, முடிவுகட்ட முடியாமல் —உண்மையிலே அப்படி முடிவுகட்ட அவர்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை—எவ்வளவு காலம் கழிந்தது என்பதையும் புரிந்து கொள்ளமுடியும். எடுத்துக்கட்டாக, ரபோச்சயா மிஸ்ல் பத்திரிகையின் முதல் சைக்ளோ பிரதிகள் மிகப் பெரும்பான்மையான சமூக-ஜனநாயகவாதிகளுக்குக் கிடைக்கவில்லை; அதன் முதல் இதழின் தலையங்கக் கட்டுரையை நாம் குறிப்பிட முடிகிறதென்றால் அதற்கு ஒரே காரணம் வி. இ.[53] எழுதிய கட்டுரையில் (லிஸ்டோக் ''ரபோத்னிகா'', இதழ் 9-10, பக்கம் 47 முதலியவை) அது மீண்டும் தரப்பட்டதேயாகும்; அவர் புதிய பத்திரிகையைப் புகழத் தவறவில்லை, மற்ற பத்திரிகைகளிலிருந்தும் பத்திரிகைத் திட்டங்களிலிருந்தும் அது எவ்வளவோ வேறுபட்டிருக்கிறதாம், இந்தப் புகழ்ச்சியில் பகுத்தறிவை விட ஆர்வமே அதிகமாயுள்ளது.* இந்தத் தலையங்கக் கட்டுரை கவனிக்கத்தக்கது; காரணம், அது ரபோச்சயா மிஸ்ல், பொதுவாக ''பொருளாதாரவாதம்''

---

* இடையே ஒன்று சொல்லவேண்டும்: 1898 நவம்பரில், ''பொருளாதாரவாதம்'' குறிப்பாக வெளிநாட்டில் முழுமையாக வரையறுக்கப்பட்டிருந்த போது ரபோச்சயா மிஸ்ல் பத்திரிகையைப் புகழ்ந்த வி. இ. என்பவரே தான் பின்னால் வெகு விரைவிலே ரபோச்சியே தேலோவின் ஆசிரியர்களில் ஒருவரானார். அப்படியிருந்தும் ரபோச்சியே தேலோ ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் இரண்டு போக்குகள் கிடையாது என்று மறுத்தது, இன்றுவரை மறுத்துவருகிறது!

ஆகியவற்றின் உணர்ச்சி முழுவதையும் எடுப்பாகக் காட்டு கிறது.

நீலச் சட்டைக்காரர்களின் கை[54] பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முன்னேற்றத்தை என்றைக்கும் தடுக்கமுடியாது என்று கூறிவிட்டு அத்தலையங்கக் கட்டுரை மேலும் சொல் வதாவது: ''...பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வீரியத் துக்குக் காரணம், தொழிலாளிகள் இறுதியாகத் தங்கள் தலைவிதியைத் தலைவர்களின் கையிலிருந்து தங்கள் சொந்தக் கையில் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்'' என்று. பிறகு இந்த அடிப்படையான ஆய்வுரை மிக விபரமாக வளர்க்கப் படுகிறது. உண்மையென்னவென்றால், தலைவர்கள் (அதாவது, சமூக-ஜனநாயகவாதிகள், ''போராட்டச் சங்கத்தின்'' அமைப்பாளர்கள்) தொழிலாளர் கைகளிலிருந்து போலீஸா ரால் பறித்துச் செல்லப்பட்டனர் என்று சொல்லலாம்.* அப்படியிருந்தும் தலைவர்களை எதிர்த்துத் தொழிலாளிகள் போராடிக் கொண்டிருப்பதாகவும் தலைவர்களின் நுகத்தடியி லிருந்து தங்களை விடுவித்துக் கொண்டதாகவும் சித்திரிக்கப் படுகிறது! புரட்சிகரமான அமைப்பைக் கெட்டிப்படுத்துவ தில் முன்னேறுங்கள், அரசியல் நடவடிக்கையை விரிவுபடுத்து வதில் முன்னேறுங்கள் என்று அறைகூவியழைப்பதற்குப் பதி லாக வெறுமே தொழிற்சங்கப் போராட்டத்தை நோக்கிப் பின்வாங்குங்கள் என்று அறைகூவல் விடப்பட்டது. ''அரசியல் இலட்சியத்தை என்றைக்கும் மறக்கக்கூடாது எனும் முயற்சி இயக்கத்தின் பொருளாதார அடிப்படையை மறைத்து விட்டது'' என்றும், ''பொருளாதார நிலைமைகளுக்காக போராட்டம்'' (!) என்பதே—அதைவிட மேலாக ''தொழி லாளர் தொழிலாளருக்கே'' என்பதே—பாட்டாளிவர்க்க

---

* இவ் உவமை சரியே என்று பின்வரும் இனக்குறிப்பான உண்மை காட்டுகிறது: ''டிஸம்பர்வாதிகள்'' கைதானபின், அவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்கு என். என். மிகைலொவ் எனும் தூண்டு-கையாள் வசதிசெய்து கொடுத் தான் எனும் சேதி ஷ்லிஸெல்புர்க் நெடுஞ்சாலைத் தொழி லாளிகளிடையே பரவியது, அவர்களுக்கு வந்த ஆத்திரத்தில் அவனைக் கொல்வதென்று தீர்மானித்தனர். அவன் ஒரு பல் மருத்துவன்; ''டிஸம்பர்வாதிகளோடு'' பழகி வந்த ஒரு குழுவுடன் அவன் தொடர்பு வைத்திருந்தான்.

இயக்கத்தின் தாரகமந்திரம் என்றும் அறிவிக்கப்பட்டது. வேலைநிறுத்த நிதிகள் ''இதர நூறு அமைப்புகளைவிட இயக்கத்துக்கு மதிப்புள்ளவை'' என்றவாறெல்லாம் கூறப்பட்டது (1897 அக்டோபரில் வெளியிடப்பட்ட கூற்றை 1897ன் துவக்கத்திலே ''டிஸம்பர்வாதிகளுக்கும்'' ''இளம்'' உறுப்பினர்களுக்கும் இடையே நடந்த சர்ச்சையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்). தொழிலாளர்களில் ''சிறந்த பகுதியினர்'' மீது நாம் முனைப்பான கவனம் செலுத்தக்கூடாது, திரளான ''சராசரி'' தொழிலாளி மீதுதான் செலுத்தவேண்டும், மற்றும் ''அரசியல் எப்போதும் பணிவோடு பொருளாதாரத்தைப் பின்தொடர்கிறது''* முதலான கவர்ச்சிச் சொற்கள் ஃபேஷனாகிவிட்டன, அவை திரளான இளைஞர் மீது எதிர்க்கவொண்ணாத செல்வாக்குச் செலுத்தின—இவர்கள் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டவர்கள் எனினும், பெரும்பான்மையில் சட்டசம்மதமான வெளியீடுகளில் விளக்கப்பட்ட மார்க்ஸியத் துணுக்குகளை மட்டும் தெரிந்துவைத்திருந்தவர்களே.

அரசியல் உணர்வைத் தன்னியல்பு முற்றாக ஆட்கொண்டுவிட்டது—திரு. வி. வி. யின் ''கருத்துக்களைத்'' திருப்பிச் சொல்லிவந்த ''சமூக-ஜனநாயகவாதிகளின்'' தன்னியல்பு, ஒரு ரூபிளுக்குக் கூடுதலாக ஒரு கோபெக் கிடைப்பது எந்த சோஷலிஸத்தையோ அரசியலையோ விட மேல், தொழிலாளிகள் ''தாம் போராடுவது ஏதோ ஒரு எதிர்காலத் தலைமுறைக்காக அல்ல, தமக்காகவும் தமது குழந்தைகளுக்காக

---

* ரபோச்சயா மிஸ்ல் முதல் இதழின் அதே தலையங்கக் கட்டுரையிலிருந்து இந்த மேற்கோள்கள் தரப்படுகின்றன. இவற்றிலிருந்து ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வ. வ.க்கள்'' பெற்றிருந்த தத்துவார்த்தப் பயிற்சியின் அளவை மதிப்பிடமுடியும்; வெகுகாலத்துக்கு முன்பே ''பிற்போக்கான செயல்களில் தேர்ச்சி மிக்கவர்'' என்று பெயர் சூட்டப் பெற்றிருந்த அசல் திரு. வி. வி.-யை எதிர்த்து, அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் உள்ள உறவுகள் குறித்து இதே மாதிரியான கருத்துக்கள் வைத்திருந்ததற்காக மார்க்ஸியவாதிகள் இலக்கியப் போர் நடத்திவந்த காலத்தில் அவர்கள் ''பொருளாதாரப் பொருள்முதல்வாதத்தை'' முரடாகக் கொச்சைப்படுத்திய வடிவத்தில் திருப்பிச்சொல்லிக் கொண்டிருந்தார்கள்!

வும் போராடுகிறோம் என்று உணர்ந்து போராடவேண்டும்'', (ரபோச்சயா மிஸ்ல், முதல் இதழ், தலையங்கம்) என்கிற வாதங்களிலே இழுத்துச்செல்லப்பட்ட தொழிலாளிகளின் தன்னியல்பு, இது. இப்படிப்பட்ட சொற்றொடர்கள் எப்போதும் மேற்கு ஐரோப்பிய முதலாளிவர்க்கப் போக்கான நபர்களின் மிகப்பிடித்தமான ஆயுதமாகும்; அவர்களுக்கு சோஷலிஸத்தின் மேல் இருக்கிற பகைமையிலே ஆங்கிலேயத் தொழிற்சங்கவாதத்தைக் கொணர்ந்து தங்கள் மண்ணிலே நடுவதற்கும், சுத்தமான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதிலே* தொழிலாளிகள் ஏதோவொரு எதிர்காலச் சோஷலிஸத்தோடு கூடிய ஏதோவொரு எதிர்காலத் தலைமுறைக்காக அல்லாமல் தங்களுக்காகவும் தங்கள் குழந்தைகளுக்காகவும் போராடுகிறவர்களாக இருப்பார்கள் என்று தொழிலாளரிடையே பிரச்சாரம் செய்யவும், முயன்று வந்தனர் (ஜெர்மனியின் "Sozial-Politiker" ஹிர்ஷ் போல). இப்போது ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வி. வி.க்கள்'' இந்த முதலாளிவர்க்கப் போக்கான சொற்றொடர்களைத் திருப்பிச்சொல்வதில் முனைந்துள்ளனர். இந்த இடத்தில் மூன்று நிலைமைகளைக் குறித்துக் கொள்வது முக்கியமாகும், அவை நம் காலத்திய வேற்றுமைகளைப் பற்றி மேற்கொண்டு நாம் செய்கிற பகுப்பாய்வுக்குப் பயனுள்ளவையாக இருக்கும்.**

முதலாவதாக, ஆரசியல் உணர்வைத் தன்னியல்பு ஆட்கொண்டுவிட்டது என்று மேலே சொன்னோமே, அதுவும்

---

* இதற்கு ஜெர்மானியர்கள் Nur-Gewerkschaftler என்று தனிச் சொல்கூட வைத்திருக்கிறார்கள்; சுத்தமான ''தொழிற்சங்கப்'' போராட்டத்தை ஆதரிப்பவர் என்று இதற்குப் பொருள்.

** ரபோச்சயா மிஸ்லை இப்போது தாக்குவது சுலபந்தான், ஆனால் இது பழங்கால வரலாறு அல்லவா? என்று போலிப்பண்போடு தோள் குலுக்குபவர்களின் நன்மைக்காகவே நம் காலத்திய எனும் சொற்களை வலியுறுத்துகிறோம். Mutato nomine de te fabula narratur (பெயரை மாற்றிவிடு, அந்தக் கதை உன்னைப்பற்றியதாக இருக்கும்.—ப-ர்.) என்பதே இப்படிப்பட்ட நம் காலத்திய போலிப் பண்பாளர்களுக்கு நமது பதில். இவர்கள் ரபோச்சயா மிஸ்ல் கருத்துக்களுக்கு முற்றாக அடிமைப்பட்டிருப்பதைப் பின்னால் நிரூபிப்போம்.

தன்னியல்பாகவே நிகழ்ந்தது. இது சிலேடையாகத் தோன்ற லாம்; ஆனுல் அந்தோ, இது கசப்பான உண்மை. இரண்டு நேரெதிரான பார்வைநிலைகளிடையே போராட்டம் நடந்து அதில் ஒன்று வென்றதின் விளைவாக நிகழ்ந்ததல்ல இது. இது நிகழக் காரணம், அதிகப்பட்டுவரும் எண்ணிக்கையிலே ''முதிய'' புரட்சியாளர்கள் போலீஸாரால் ''பறித்துச் செல் லப்பட்டு'' வந்ததும், அதிகப்பட்டுவரும் எண்ணிக்கையிலே ''இளைய'' ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வி. வி.க்கள்''[55] மேடையிலே தோன்றிவந்ததும்தான். தற்கால ருஷ்ய இயக் கத்தில் கலந்துகொண்டவர்கள் என்று சொல்லமாட்டேன், குறைந்தபட்சம் அதன் வாடையாவது பட்ட எவருக்கும் இதுவே உண்மை என்று தெரியும். அப்படியிருந்தும், பொது வாகத் தெரிந்துள்ள இவ்விஷயத்தில் வாசகருக்குத் தெளி விருக்கவேண்டும் என்று பலமாக வற்புறுத்துகிறேம் என்ருல் —வெட்டவெளிச்சமாக்குவதற்காக ரபோச்சியே தேலோ முதற்பதிப்பு பற்றிய விஷயங்களையும் 1897ன் துவக்கத்தில் ''முதியவர்களுக்கும்'' ''இளையவர்களுக்கும்'' இடையே நடந்த சர்ச்சை பற்றிய விஷயங்களையும் குறிப்பிடுகிறேம் என்ருல்—அதற்குக் காரணம் தங்களுடைய ''ஜனநாயகத் தைப்'' பற்றிப் பீற்றிக்கொள்கிறவர்கள் இவ்விஷயங்களைப் பற்றிப் பொது மக்களுக்கோ (இளமையிலும் இளமையான தலைமுறையினருக்கோ) தெரியாதிருப்பதை வைத்து வியா பாரம் பண்ணுகிருர்கள் என்பதே. பின்னுல் இவ்விஷயத்துக்கு மீண்டும் திரும்புவோம்.

இரண்டாவதாக, ''பொருளாதாரவாதத்தின்'' முதன் முதலான இலக்கிய வெளியீட்டிலே ஒரு மிகவும் வினோதமான நிகழ்வுத் தோற்றத்தைப் பார்க்கிறேம், தற்கால சமூக-ஜன நாயகவாதிகளிடையே இருந்துவரும் வேற்றுமைகளைப் புரிந்து கொள்வதற்கு இனக்குறிப்பாயுள்ள விஷயமாகும்; அதாவது: ''சுத்தமான, எளிமையான, தொழிலாளர் இயக்கத்தின்'' ஆதரவாளர்கள், பாட்டாளிவர்க்கப் போராட்டத்துடன் மிக நெருக்கமான ''உயிர்ப்புள்ள'' தொடர்புகளை (ரபோச்சியே தேலோவின் சொல் இது) வழிபடுகிறவர்கள், தொழிலாளி யல்லாத எந்தப் படிப்பாளிப்பகுதியையும் (சோஷலிஸ்டுப் படிப்பாளிப்பகுதியையுங்கூட) எதிர்ப்பவர்கள், தங்கள் நிலை களைத் தற்காத்துக் கொள்வதற்காக முதலாளிவர்க்கப் போக்

குள்ள ''சுத்தமான தொழிற்சங்கவாதிகளின்'' வாதங்களைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். துவக்கத்திலிருந்தே "Credo"வின் வேலைத்திட்டத்தை ரபோச்சயா மிஸ்ல் தன்னையறியாமல் செயலாக்கத் தொடங்கியதை இது காட்டுகிறது. பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தன்னியல்பு பால் உள்ள எல்லா வழிபாடும், ''உணர்வுபூர்வமான அம்சத்தின்'' பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவதனைத்தும், சமூக-ஜனநாயகவாதத்தின் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவதனைத்தும், — அப்படிச் செய்கிறவன் விரும்புகிறுனே இல்லையோ—தொழிலாளிகள் மீது முதலாளிவர்க்கச் சித்தாந்தத்தின் செல்வாக்கைப் பலப்படுத்துவதாகவே பொருள். ''சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தை மிகையாக மதிப்பிடுவது'',* உணர்வுபூர்வமான அம்சத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்துவது** பற்றியெல்லாம் பேசுகிறவர்கள் அனைவரும், தொழிலாளிகள் மட்டும் ''தலைவர்களின் கையிலிருந்து தமது தலைவிதியைப் பறித்துக் கொள்வார்களேயானுல்'' சுத்தமான எளிமையான தொழிலாளர் இயக்கம் தனக்குரிய ஒரு சுதந்தரமான சித்தாந்தத்தை வகுத்துக் கொள்ள முடியும், வகுத்துக்கொள்ளும், என்று நினைக்கிறுர்கள். ஆனுல் இது ஓர் ஆழ்ந்த தவறு. மேலே சொன்னதற்குத் துணையாக, ஆஸ்திரிய நாட்டுச் சமூக-ஜனநாயகக் கட்சியின் புதிய நகல் வேலைத்திட்டம் குறித்து கார்ல் காவுட்ஸ்கி வெளியிட்ட உண்மையான, முக்கியமான வார்த்தைகளை மேற்கோள் காட்டுகிறுேம்:***

''பொருளாதார வளர்ச்சியும் வர்க்கப் போராட்டமும் சோஷலிஸ்டு உற்பத்திக்கான நிலைமைகளைப் படைக்கிறதோடல்லாமல் நேரடியாக அதன் அவசியத்தைப்பற்றிய உணர்வையும் (கா. காவுட்ஸ்கி கொட்டையெழுத்தில் போட்டது) படைக்கிறது என்று மார்க்ஸ் அடித்துக் கூறியிருப்பதாக

---

* ''பொருளாதாரவாதிகளின்'' கடிதம்; இஸ்க்ரா, இதழ் 12ல் வெளிவந்தது.

** ரபோச்சியே தேலோ, இதழ் 10.

*** "Neue Zeit"[56], 1901-02, XX, I, இதழ் 3, பக்கம் 79. காவுட்ஸ்கி குறிப்பிடும் குழுவின் நகல் (சென்ற ஆண்டின் இறுதியில்) சற்றே திருத்தப்பட்ட வடிவில் வியென்ஞ காங்கிரஸில்[57] நிறைவேற்றப்பட்டது.

நமது திருத்தல்வாதிகளில் பலர் எண்ணுகின்றனர். மேலும். முதலாளித்துவ முறையிலே மிக உயர்வாக வளர்ந்துள்ள இங்கிலாந்து மற்றெந்த நாட்டையும்விட இவ்வுணர்விலிருந்து வெகு தொலைவில் நிற்கிறது என்று இந்த விமர்சகர்கள் அடித்துப் பேசுகிறார்கள். நகலைப் பார்க்கும் போது, இப்படி மறுக்கப்பட்ட வைதிக-மார்க்ஸிய வகைப்பட்டதாகச் சொல்லப்படும் கருத்தை ஆஸ்திரிய வேலைத்திட்டத்தைத் தயாரித்த குழு ஏற்றுக் கொண்டுள்ளதாக அனுமானிக்கக்கூடும். நகல் வேலைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளதாவது: 'முதலாளித்துவ வளர்ச்சி பாட்டாளிவர்க்கத்தின் எண்ணிக்கையை உயர்த்த உயர்த்த, பாட்டாளிவர்க்கம் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட மேன்மேலும் நிர்ப்பந்திக்கப்படுகிறது, மேன்மேலும் தகுதி பெறுகிறது.' சோஷலிஸத்தின் சாத்தியப்பாட்டையும் அவசியத்தையும் 'பாட்டாளிவர்க்கம் உணர்ந்து கொள்கிறது'. இது சம்பந்தமாக, சோஷலிஸ்டு உணர்வு பாட்டாளிவர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் அவசியமான, நேரடியான விளைவு என்று தோன்றுகிறது. ஆனால் இது முற்றிலும் பொய். தத்துவம் என்கிற வகையில் சோஷலிஸம் —பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் போலவே —தற்காலப் பொருளாதார உறவுமுறைகளில் வேர் கொண்டிருப்பதும், அந்த வர்க்கப் போராட்டத்தைப் போலவே அதுவும் முதலாளித்துவம் படைத்த வறுமையையும் மக்களின் துன்பதுயரங்களையும் எதிர்க்கும் போராட்டத்திலிருந்து வெளித்தோன்றுகிறதும் உண்மைதான். ஆனால், சோஷலிஸமும் வர்க்கப்போராட்டமும் அக்கம் பக்கமாக உதிக்கின்றன, ஒன்றிலிருந்து மற்றொன்று உதிக்கவில்லை; ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலைமைகளின்கீழ் உதிக்கிறது. நவீன சோஷலிஸ்டு உணர்வு ஆழ்ந்த விஞ்ஞான அறிவின் அடிப்படையிலே மட்டுமே உதிக்க முடியும். உண்மையாகச் சொன்னால், நவீனகாலத் தொழில்நுட்பவியல் போலவே (எடுத்துக்காட்டாகச் சொல்கிறோம்) தற்காலப் பொருளாதார விஞ்ஞானமும் சோஷலிஸ்டு உற்பத்திக்கு நிபந்தனையாகும்; எவ்வளவு விருப்பம் இருந்த போதிலும் சரி, தொழிலாளிவர்க்கத்தால் இவற்றில் எதையும் படைக்கமுடியாது. இரண்டும் தற்காலச் சமுதாய நிகழ்வுப் போக்கிலிருந்து உதிக்கின்றன. விஞ்ஞானத்தை எடுத்துச் செல்லும் ஊர்தி பாட்டாளிவர்க்கமல்ல, முதலாளி **வர்க்கப் போக்குள்ள படிப்பாளிப்பகுதியே** (காவுட்ஸ்கி கொட்டையெழுத்தில் போட்டது): இந்தப் பகுதியின் தனித்தனி உறுப்பினர்களின் சிந்தையிலேதான் நவீனகால சோஷலிஸம் தோற்றம் எடுத்தது, அவர்கள்தாம் அதை மேலான அறிவு வளர்ச்சி பெற்ற தொழிலாளிகளிடம் கொண்டு போனார்கள், இவர்கள் தம் முறைக்கு பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்திலே, நிலைமைகள் அனுமதிக்கிற

அளவுக்கு, அதைப் புகுத்துகிருர்கள். எனவே, சோஷலிஸ்டு உணர்வு எனப்பட்டது பாட்டாளிவர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்குள் வெளியிலிருந்து புகுத்தப்படுகிற ஒன்ருகும் (von aussen Hineingetragenes), உள்ளிருந்து தன்னியல்பாகத் (urwüchsig) தோன்றிய ஒன்றல்ல. அதன்படியே தான், பழைய ஹெய்ன்ஃபெல்ட் வேலைத்திட்டம் சரியாகக் கூறியது: தொழிலாளி வர்க்கத்துக்குத் தனது நிலை பற்றிய உணர்வை, தனது பணியைப் பற்றிய உணர்வை ஊட்டுவது (உண்மையிலே சொன்னுல், நிறப்புவது) சமூக-ஜனநாயக வாதத்தின் பணியாகும், என்று. வர்க்கப் போராட்டத்திலிருந்து உணர்வு தானுகவே உதிக்கிறதென்ருல் இப்பணிக்கு அவசியமெதுவும் இராது. புதிய நகல் இந்த முன்கூற்றைப் பழைய வேலைத்திட்டத்திலிருந்து பிரதிசெய்துகொண்டு மேலே சொன்ன முன்கூற்றை அத்துடன் இணைத்துள்ளது. ஆனுல் இது சிந்தனை நெறியை முற்ருக அறுத்துவிட்டது...''

உழைக்கும் மக்கள் தமது இயக்கத்தின் நிகழ்வுப் போக்கிலே தாங்களாகவே ஒரு சுதந்தரமான சித்தாந்தத்தை வகுத்துக்கொள்ளும் பேச்சுக்கிடமில்லை* ஆதலால் ஒன்றுதான்

---

* இப்படிப்பட்ட தத்துவத்தைப் படைப்பதில் தொழிலாளிகளுக்குப் பங்கு இல்லை என்று இதற்கு அர்த்தமல்ல. என்றபோதிலும், அவர்கள் பங்குகொள்வது தொழிலாளிகள் என்கிற முறையிலல்ல, சோஷலிஸ்டுத் தத்துவாசிரியர்கள் என்கிற முறையில்—புருதோன்களைப் போல, வைட்லிங்குகளைப்போல; சுருங்கச் சொன்னுல், அவர்கள் தங்கள் சகாப்தத்தின் அறிவைப் பெறவும் அதை வளர்க்கவும் ஏறத்தாழ முடிகிறபோதுதான், முடிகிற அளவுக்குத்தான், அவர்கள் பங்குகொள்கிருர்கள். ஆனுல், இதில் தொழிலாளிகள் மேலும் அடிக்கடி வெற்றிபெறச் செய்வதற்கு பொதுவாகவே தொழிலாளிகளின் உணர்வின் தரத்தை உயர்த்துவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளவேண்டும்; ''தொழிலாளிகளுக்கான இலக்கியம்'' என்கிற செயற்கையாகக் குறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் தொழிலாளிகள் நின்றுவிடாமல் பொதுவான இலக்கியத்தைப் பயின்று புலமை பெற மேன்மேலும் கற்கவேண்டியது அவசியம். ''தொழிலாளிகள் நின்று விடாமல்'' என்று சொல்வதைவிட ''தொழிலாளிகளை நிறுத்திவிடாமல்'' என்று சொல்வது மேலும் உண்மையாயிருக்கும். காரணம், தொழிலாளிகளைப் பொருத்தவரை படிப்பாளிப்பகுதிக்காக எழுதப்படுவதனைத்தையும் அவர்கள் வாசிக்க விரும்புகிருர்கள், வாசிக்கவும் செய்கிருர்கள். ஒரு சில மோசமான அறிவுஜீவிகள்தாம் ''தொழிலாளிகளுக்குத்''

தேர்ந்தெடுக்க உண்டு—முதலாளித்துவச் சித்தாந்தம்அல்லது சோஷலிஸ்டு சித்தாந்தம், என்று. நடு வழி ஏதும் கிடையாது (ஏனெனில் மனிதகுலம் ஒரு ''மூன்றும்'' சித்தாந்தத்தைப் படைக்கவில்லை; மேலும், வர்க்கப் பகைமைகளால் பிளக் கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்தில் வர்க்கத்தன்மையற்ற சித்தாந்தமோ வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட சித்தாந்தமோ என்றைக்கும் இருக்க முடியாது). எனவே, சோஷலிஸ்டு சித்தாந்தத்தை எந்த விதத்தில் சிறுமைப்படுத்தினாலும், அதிலிருந்து இம்மியளவேனும் விலகிச் சென்றாலும் முதலா ளித்துவச் சித்தாந்தத்தைப் பலப்படுத்துவதாகவே பொருள். தன்னியல்பு பற்றி நிறையப் பேசப்படுகிறது. ஆனால் பாட் டாளிவர்க்க இயக்கத்தின் தன்னியல்பான வளர்ச்சி அதை முதலாளித்துவச் சித்தாந்தத்துக்குக் கீழ்ப்படுத்துவதில் கொண்டு போய் விடுகிறது, “Credo”வின் வேலைத்திட்டத்தின் வழியில் அதன் வளர்ச்சி நடைபெறுவதில் கொண்டுபோய்விடு கிறது; ஏனெனில், தன்னியல்பான பாட்டாளி வர்க்க இயக்கம் என்பது தொழிற்சங்கவாதமே, Nur-Gewerk-schaftlerei யாகும்(''சுத்தமான தொழிற்சங்கப்''போராட்டத் துக்குப் பரிந்துபேசுவதேயாகும்.—மொ-ர்.). தொழிற்சங்க வாதத்துக்குப் பொருள் சித்தாந்தத்துறையில் தொழிலாளி களை முதலாளி வர்க்கத்துக்கு அடிமைப்படுத்துவதே. எனவே நமது பணி, சமூக-ஜனநாயகவாதிகளின் பணி, தன் னியல்பை எதிர்த்துப் போராடுவதேயாகும், முதலாளி வர்க்கத் தின் அரவணைப்பின்கீழ்ச் செல்லும் இந்தத் தன்னியல்பான, தொழிற்சங்கவாத முயற்சியிலிருந்து பாட்டாளிவர்க்க இயக்கத்தைத் திசைமாற்றி, புரட்சிகரமான சமூக-ஜனநாயக வாதத்தின் அரவணைப்பின்கீழ் கொண்டுவருவதேயாகும். எனவே, இஸ்க்ரா, இதழ் 12ல் வெளியிடப்பட்ட ''பொருளா தாரவாதக்'' கடிதத்தை எழுதியவர்கள் பயன்படுத்தியுள்ள வாக்கியம்—பொருளாயத அம்சங்கள் பொருளாயதச் சூழல் ஆகியவற்றின் பரஸ்பரவினையால் நிர்ணயிக்கப்பட்ட பாதை

---

தொழிற்சாலை நிலைமைகளைப் பற்றிச் சில விஷயங்களைச் சொன்னால் போதும், எல்லோருக்கும் வெகுகாலமாகத் தெரிந்திருக்கிறவற்றையே திருப்பிச் சொல்லிக் கொண் டிருந்தால் போதும் என்று நம்புகிறார்கள்.

யிலிருந்து பாட்டாளி வர்க்க இயக்கத்தைத் திசைமாற்று வதில் மிகச் சிறந்த சித்தாந்திகளின் முயற்சிகளும் தோல்வி யடைகின்றன என்கிற வாக்கியம்—சோஷலிஸத்தைக் கைவிடு வதற்குச் சமமாகும். இதை எழுதியவர்கள் தாங்கள் சொல் வதைப் பற்றி அச்சமின்றி, முரணின்றி, முழுநிறைவாகச் சிந்திக்கத் திறமிருந்தால் (இலக்கிய, பொது நடவடிக்கை யில் இறங்கும் ஒவ்வொருவருக்கும் அத்திறம் இருக்கவேண் டும்) அவர்கள் ''தங்கள் வெற்று நெஞ்சங்கள் மீது பயனற்ற கரங்களை மடித்துப் போட்டு'' நிற்பதுதவிர வேறு வேலை இராது—''குறைந்தபட்ச எதிர்ப்புள்ள பாதையில்'' அதாவது, முதலாளிவர்க்கப்போக்கான தொழிற்சங்கவாதப் பாதையில், பாட்டாளிவர்க்க இயக்கத்தை இழுத்துச்செல் லும் ஸ்துருவேக்களுக்கும் புரொகபோவிச்சுகளுக்கும் செயற் களத்தை விட்டுக் கொடுக்கவேண்டியதே, அல்லது: மதகுரு மார்களின், போலீஸின் ''சித்தாந்தப்'' பாதையில் அதை இழுத்துச்செல்லும் ஸுபாத்தவ்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதே.[58]

ஜெர்மனியின் எடுத்துக் காட்டை நினைவூட்டிக் கொள் வோம். ஜெர்மன் பாட்டாளிவர்க்க இயக்கத்துக்கு லஸ்ஸால் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புள்ள தொண்டு என்ன? எண் பெருக்கப் போக்கான தொழிற்சங்கவாதம் கூட்டுறவுவாதம் எனும் பாதையை நோக்கி (ஷுல்ஸ் டெலிட்ஷ் வகையறாக் களின் கருணைமிக்க உதவியோடு) தன்னியல்பாக நகர்ந்து கொண்டிருந்த பாட்டாளிவர்க்க இயக்கத்தை அவர் திசை மாற்றிவிட்டார் என்பதே. இப்பணியை நிறைவேற்றுவதற்கு, தன்னியல்பான அம்சத்தைக் குறைத்து மதிப்பிடுவது பற்றி யும் நிகழ்வுப்போக்கு வகைப்பட்ட போர்த்தந்திரம் பற்றி யும் அம்சங்கள் சூழ்நிலைகள் இடையிலான பரஸ்பரவினை முதலியவற்றைப் பற்றியும் பேசுவதை விட்டு முற்றும் வேறான ஒன்று செய்வது அவசியமாயிருந்தது. தன்னியல்பை எதிர்த்துக் கடுமையான போராட்டம் அவசியமாயிற்று; இப்படிப் பல வருடங்கள் போராடியபிறகுதான் (எடுத்துக் காட்டாக) பெர்லின் நகரத்து உழைப்பாளி மக்களை எண் பெருக்கப் போக்கான கட்சியின் கொத்தளமாக இருந்ததை மாற்றி சமூக-ஜனநாயகவாதத்தின் மிகச்சிறந்த கோட்டை களில் ஒன்றாகச் செய்வது சாத்தியமாயிற்று. இப்போராட்

டம் இன்றுகூட முடிந்தபாடில்லை (ஜெர்மன் இயக்கத்தின் வரலாற்றை புரொகபோவிச்சிடமிருந்தும் அதன் தத்துவ ஞானத்தை ஸ்துருவேயிடமிருந்தும் கற்கிறவர்களுக்கு முடிந்து விட்டதாகத் தோன்றுகிறமாதிரி இல்லை). இப்பொழுதுங்கூட ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் பல சித்தாந்தங்களிடையே பிளவுபட்டிருப்பதாகச் சொல்லலாம். தொழிலாளிகளில் ஒரு பகுதியினர் கத்தோலிக்க, முடியரசுவாதத் தொழிற் சங்கங்களில் திரட்டப்பட்டுள்ளனர்; மற்றொரு பகுதியினர் ஹிர்ஷ்-டுங்கர்[59] தொழிற்சங்கங்களில் திரட்டப்பட்டுள்ளனர் —ஆங்கிலேயத் தொழிற்சங்கவாதத்தின் முதலாளிவர்க்கப் போக்கான பக்தர்கள் இவற்றை நிறுவினர்; மூன்றும் பகுதியினர் சமூக-ஜனநாயகவாதத் தொழிற்சங்கங்களிலே திரட்டப்பட்டுள்ளனர். கடைசியாகக் குறிப்பிட்ட பகுதி யினர்தாம் மற்றவர்களைவிட எண்ணிக்கையில் அதிகமான வர்கள்; மற்றெல்லாச் சித்தாந்தங்களையும் எதிர்த்து விட்டுக்கொடாத போராட்டம் நடத்துவதிலேதான் சமூக-ஜனநாயகச் சித்தாந்தம் இந்த மேலான நிலையைச் சாதிக்க முடிந்தது, அதை நீடித்து வைத்திருக்கவும் முடியும்.

தன்னியல்பான இயக்கம், குறைந்தபட்ச எதிர்ப்புடைய பாதையில் போகிற இயக்கம், முதலாளிவர்க்கச் சித்தாந்தத் தின் ஆதிக்கத்துக்கு ஏன் கொண்டுபோய்விடுகிறது? என்று வாசகர் கேட்பார். காரணம் சாதாரணமானது: சோஷலிஸ்டு சித்தாந்தத்தை விட முதலாளித்துவச் சித்தாந்தம் எவ் வளவோ பழைமையான காலத்தில் தோன்றியதாகும், அதை விட முற்றுக வளர்ச்சியடைந்திருப்பதாகும், அதைவிட அளவிடற்கரிய வகையில் பிரச்சார சாதனங்களைப் பெற்றிருப் பதாகும்.* எவ்வளவுக்கெவ்வளவு சோஷலிஸ்டு இயக்கம்

---

* பாட்டாளிவர்க்கம் தன்னியல்பாகவே சோஷலிஸத்தின் பக்கம் ஈர்க்கப்படுகிறது என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. வேறெந்த தத்துவத்தையும் விட ஆழமாகவும் சரியாகவும் பாட்டாளி வர்க்கத்தின் வறுமைக்குரிய காரணங்களை சோஷ லிஸ்டுத் தத்துவம் வெளிப்படுத்துகிறது என்கிற பொரு ளில் இது முற்றும் உண்மை; அக்காரணம் பற்றித்தான்— இந்தத் தத்துவம் தன்னைத் தன்னியல்பிடம் ஒப்படைத்து விடவில்லை எனும் நிபந்தனையின் பேரில், தன்னியல்பைத் தனக்குக் கீழ்ப்படுத்தி வைத்திருக்கிறது எனும் நிபந்தனை

ஒரு நாட்டில் இளமையில் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வீரியத்துடன் அது சோஷலிஸ்டல்லாத சித்தாந்தங்களை வேரூன்றச்செய்யும் முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்துப் போராடவேண்டும், அவ்வளவுக்கவ்வளவு மனவுறுதியுடன் ''உணர்வுபூர்வமான அம்சத்தை மிகையாக மதிப்பிடுவதாக'' என்றெல்லாம் கூக்குரலெழுப்பும் கெட்ட அறிவுரையாளர்களைப் பற்றித் தொழிலாளிகளை எச்சரிக்க வேண்டும். ''பொருளாதாரவாதக்'' கடிதத்தை எழுதியவர்கள், ரபோச்சியே தேலோவுடன் சேர்ந்துகொண்டு, இயக்கத்தின் குழந்தைப் பருவத்தை இனங்குறிக்கிற சகிப்புத்தன்மையின்மையை இடித்துக் காட்டுகின்றனர். இதற்கு நமது பதில்: ஆம், நம் இயக்கம் உண்மையிலே குழந்தைப் பருவத்திலேதான் இருக்கிறது; அது மேலும் விரைவாக வளர்வதற்கு, தன்னியல்புக்குத் தாங்கள் அடிமைப்பட்டுப்போவதால் அதன் வளர்ச்சியைத் தடுத்துத்தாமதப்படுத்தும் எல்லோர்பாலும் அது சகிப்புத்தன்மையின்மை கொள்ளவேண்டும். போராட்டத்தின் எல்லா நிர்ணயமான கட்டங்களையும் வெகுகாலத்துக்கு முன்பே அனுபவத்தில் கண்டுவிட்ட ''ஜாம்பவான்கள்'' போல் நடிப்பதை விட கோமாளித்தனமானது, தீங்கானது, வேறொன்றுமில்லை.

மூன்றுவதாக, ''பொருளாதாரவாதம்'' எனும் சொல் புதிய போக்கின் உண்மையான தன்மையைப் போதியவாறு வெளியிடுவதாக இல்லை என்று ரபோச்சயா மிஸ்ல் முதல் இதழ் காட்டுகிறது (என்றாலும் அச்சொல்லைக் கைவிடும் நினைப்பு நமக்கு இல்லை, ஏனெனில் ஏற்கெனவே ஏதோ ஒரு வழியாக அது நிலைத்துப் போயுள்ளது). ரபோச்சயா மிஸ்ல் அரசியல்

---

யின் பேரில்—அதைத் தொழிலாளிகள் அவ்வளவு சுளுவாகச் செரித்துக்கொள்ளமுடிகிறது. அது அப்படித்தான் என்று வழக்கமாகவே ஏற்கப்படுகிறது; எனினும் அதைத்தான் ரபோச்சியே தேலோ மறக்கிறது அல்லது திரிக்கிறது. பாட்டாளி வர்க்கம் தன்னியல்பாக சோஷலிஸத்தின் பக்கம் ஈர்க்கப்படுகிறது; என்றபோதிலும், மிகுதியாகப் பரவியுள்ள (இடையறாத நிலையிலே, பல்வேறு வடிவங்களிலே புத்துயிரூட்டப் பெறுகிற) முதலாளிவர்க்கச் சித்தாந்தம் அதைவிட மேலான அளவில் பாட்டாளி வர்க்கத்தின்மேல் தன்னைச் சுமத்திக் கொள்கிறது.

போராட்டத்தை அறவே நிராகரிக்கவில்லை; அதன் முதல் இதழில் வெளியிடப்பட்ட தொழிலாளர் பரஸ்பர நிதிக்கான விதிகளில் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடவேண்டிய தைப் பற்றிய குறிப்பு ஒன்று இருக்கிறது. ஆனபோதிலும், ''அரசியல் எப்போதும் பணிவோடு பொருளாதாரத்தைப் பின்தொடர்கிறது'' என்று ரபோச்சயா மிஸ்ல் நம்புகிறது (ரபோச்சியே தேலோ இந்த ஆய்வுரையை மாற்றிச் சொல் கிறது, அதன் வேலைத்திட்டத்தில் ''வேறெந்த நாட்டையும் விட ருஷ்யாவில் பொருளாதாரப் போராட்டம் அரசி யல் போராட்டத்திலிருந்து பிரிக்கமுடியாததாக இருக்கிறது'' என்று அடித்துச் சொல்கிறது). அரசியல் என்பது சமூக-ஜன நாயகவாத அரசியல் என்று பொருள்படுமேயானல் அப்போது ரபோச்சயா மிஸ்ல் ரபோச்சியே தேலோ ஆய்வுரைகள் முற் றும் தவறாகும். தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டம் மிக அடிக்கடி முதலாளிவர்க்க அரசியல், மதகுருக்களின் அரசியல் முதலியவற்றுடன் சம்பந்தப்பட்டி ருக்கிறது (பிரிக்கமுடியாததாக அல்லாமற்போயினுங்கூட), இதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். அரசியல் என்பது தொழிற்சங்க அரசியல்—அதாவது, தொழிலாளரனைத்தும் தங்கள் நிலைமைக்குரிய கடுந்துயரத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை (ஆனல் இவை அந்த நிலைமையை ஒழிக்கிற தில்லை—இவை மூலதனத்துக்கு உழைப்பு அடிமைப்பட்டிருப் பதை அகற்றுவதில்லை) அரசாங்கத்திடம் பெறுவதற்கு எடுக்கும் பொதுவான முயற்சி—என்று பொருள்படுமானல் ரபோச்சியே தேலோவின் ஆய்வுரைகள் சரியானவையே. சோஷலிஸத்தைப் பகைக்கும் ஆங்கிலேயத் தொழிற்சங்க வாதிகளுக்கும் கத்தோலிக்கத் தொழிலாளர்கள் ''ஸுபாத் தவ்'' தொழிலாளர்கள் முதலியவர்களுக்கும் இம்முயற்சி பொதுவாயுள்ளது உண்மை. அரசியலில் பல வகை உண்டு. எனவே, ரபோச்சயா மிஸ்ல் அரசியல் போராட்டத்தை மறுப் பதைவிட அதன் தன்னியல்பை, அதன் உணர்வின்மையை வழிபடுவது அதிகம் என்று பார்க்கிறோம். பாட்டாளி வர்க்க இயக்கத்திலிருந்தே தன்னியல்பாக உதிக்கும் அரசியல் போராட்டத்தை (மேலாகச் சொன்னல்: தொழிலாளிகளின் அரசியல் விருப்பங்களையும் கோரிக்கைகளையும்) முற்றாக அங் கீகரிக்கையிலேயே, அது சோஷலிஸத்தின் பொதுவான பணி

களுக்கும் இன்றைய ருஷ்ய நிலைமைகளுக்கும் பொருத்தமான ஒரு தனிக்குறிப்பான சமூக-ஜனநாயகவாத அரசியலைச் சுதந்தரமாக வகுத்துக்கொள்ள முற்றுக மறுக்கிறது. ரபோச்சியே தேலோவும் இதே தவற்றைச் செய்வதைப் பின்னால் காட்டுவோம்.

### இ. ''சுயவிடுதலைக் குழுவும்''[60] ''ரபோச்சியே தேலோவும்''

ரபோச்சயா மிஸ்ல் முதல் இதழில் வெளிவந்த தலையங்கக் கட்டுரை பலர் அறியாதது, அநேகமாக மறக்கப்பட்டுப் போனது; அதை நாம் இவ்வளவு தூரத்துக்கு எடுத்துக் கவனித்ததற்குக் காரணம், பின்னால் எண்ணிறைந்த சிற்றாறுகளாக வெளிச்சத்துக்கு வந்த பொதுவான சிந்தனையின் நீரோட்டத்தை அதுவே முதன்முதலாகவும் எடுப்பாகவும் வெளிப்படுத்தியது. ரபோச்சயா மிஸ்ல் முதல் இதழையும் தலையங்கக் கட்டுரையையும் வி. இ. புகழ்ந்துபேசுகையில் அந்தக் கட்டுரை ''கூரான, ஆர்வமிக்க'' பாணியில் எழுதப்பட்டிருப்பதாகச் சொன்னார் (லிஸ்டோக் ''ரபோத்னிகா'', இதழ் 9-10, பக்கம் 49). துணிபுகள் உள்ள ஒவ்வொருவனும், புதிதாகச் சொல்வதற்கு ஏதோ ஒன்று தன்னிடம் இருப்பதாக நினைக்கும் ஒவ்வொருவனும் ''ஆர்வத்துடன்'' எழுதுகிறான், தனது கருத்துக்கள் எடுப்பாகத் தெரியும் விதத்தில் எழுதுகிறான். இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கப் பழகியவர்களுக்கு ''ஆர்வம்'' இராது; இப்படிப்பட்டவர்கள்தாம் ஒரு நாள் ரபோச்சயா மிஸ்லின் ஆர்வத்தைப் புகழ்வார்கள், மறு நாள் அதன் எதிர்ப்பாளர்களின் ''ஆர்வமிக்க சர்ச்சையைத்'' தாக்குவார்கள்.

ரபோச்சயா மிஸ்லின் ''தனி இணைமலரை'' நாம் எடுத்துக் கவனிக்கப் போவதில்லை (பின்னால் பல விஷயங்கள் சம்பந்தமாக இந்நூலைக் குறிப்பிட வாய்ப்பு இருக்கும்; இது மற்றவற்றைவிட ''பொருளாதாரவாதிகளின்'' கருத்துக்களை முரணின்றி வெளியிடுகிறதாயுள்ளது), ''சுயவிடுதலைக்கான தொழிலாளர் குழுவின் வேண்டுகோள்'' (1899 மார்ச்சு, லண்டன் நகனூனே,[61] இதழ் 7, 1899 ஜூலையில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது) என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடு

வோம். ''வேண்டுகோளின்'' ஆசிரியர்கள் சரியாகத்தான் சொல்கிறார்கள்: ''ருஷ்யாவின் தொழிலாளிகள் இப்பொழுது தான் விழிப்புற்றுவருகிறார்கள், இப்பொழுதுதான் சுற்றுமுற்றும் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள், முதலில் கிடைக்கத் தக்க போர் சாதனத்தை இயல்புணர்வோடு கைப்பற்றி வருகிறார்கள்'' என்று. அப்படியிருந்தும், ரபோச்சயா மிஸ்ல் எடுத்துள்ள அதே பொய்யான முடிவை அவர்கள் அதிலிருந்து எடுக்கிறார்கள், இயல்புணர்வு வகைப்பட்டது உணர்வற்றது (தன்னியல்பானது), சோஷலிஸ்டுகள் அதற்கு உதவ முன்வந்துதீரவேண்டும் என்பதை மறக்கிறார்கள்; ''முதலில் கிடைக்கத்தக்க'' போர்ச் சாதனம் என்பது, தற்கால சமுதாயத்தில், தொழிற்சங்க வழிப்பட்ட போர்ச் சாதனமாகத் தான் எப்போதும் இருக்கும், ''முதலில் கிடைக்கத்தக்க'' சித்தாந்தமும் முதலாளிவர்க்க (தொழிற்சங்க) சித்தாந்தமாகத்தான் இருக்கும் என்பதையும் மறக்கிறார்கள். அதே போல், இவ்வாசிரியர்கள் அரசியலை ''நிராகரிக்கவில்லை'', அவர்கள் வெறுமே (வெறுமே!) திரு. வி. வி.யை எதிரொலிக்கிறார்களாம், அரசியல் எனப்பட்டது மேற்கட்டுமானம், ஆகவே ''பொருளாதாரப் போராட்டத்துக்குச் சாதகமாக நடத்தப்படும் கிளர்ச்சிக்கு அரசியல் கிளர்ச்சி மேற்கட்டுமானமாக இருக்கவேண்டும்; இந்தப் போராட்டத்தின் அடிப்படையில் அது எழவேண்டும், இதை அடியொற்றி வரவேண்டும்'' என்று.

ரபோச்சியே தேலோ பொருத்தவரை, ''பொருளாதாரவாதிகளை'' ''ஆதரிப்பதிலிருந்து'' அதன் நடவடிக்கை தொடங்கியது. அக்செல்ரோட் தமது புகழ்பெற்ற குறுநூலில்* ''பொருளாதாரவாதிகளை'' எச்சரித்தபோது ''அக்செல்ரோட் எந்த இளந்தோழர்களைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை'' என்று தனது முதல் இதழில் (இதழ் 1, பக்கங்கள் 141-142) சொன்னதிலே அது ஒரு பச்சைப் பொய்வெளியிட்டிருக்கிறது. இந்தப் பொய் சம்பந்தமாக அக்செல்ரோட்டுடனும் பிளெஹானவுடனும் எழுந்த சர்ச்சையில்

* ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் இன்றைய கடமைகளும் போர்த்தந்திரமும், ஜினீவா, 1898. ரபோச்சயா கஸேத்தாவுக்கு இரு கடிதங்கள், 1897ல் எழுதப்பட்டவை.

''மனக்கலக்கம் எனும் வடிவத்தில், வெளிநாட்டிலுள்ள எல்லா இளஞ் சமூக-ஜனநாயகவாதிகளையும் இந்த நியாய மற்ற குற்றச்சாட்டிலிருந்து பாதுகாக்கவே தான் முயன்றதாக'' ரபோச்சியே தேலோ ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று (குறுகியபார்வை யுள்ளவர்களாக ''பொருளாதாரவாதிகளை'' அக்செல்ரோட் குற்றஞ்சாட்டியிருந்தார்). உண்மையிலே இந்தக் குற்றச்சாட்டு முற்றும் நியாயமானதே, மற்றவர்களோடு வி. இ.க்கும் இது பொருந்தும் என்பதை ரபோச்சியே தேலோவுக்கு நன்கு தெரியும் (வி. இ. அதன் ஆசிரியர் குழு உறுப்பினர்). இந்தச் சர்ச்சையிலே ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் பணிகள் எனும் என்னுடைய குறு நூலைப்பற்றி அக்செல்ரோடும் ரபோச்சியே தேலோவும் அளித்த வியாக்கியானங்களிலே அக்செல்ரோட் சொன்னது சரி, ரபோச்சியே தேலோ சொன்னது தவறு என்று போகிற போக்கிலே குறிப்பிடுகிறேன். இக்குறுநூல் 1897ல், ரபோச்சயா மிஸ்ல் தோன்றுமுன், எழுதப்பட்டது; அப்பொழுது, செயின்ட் பீடர்ஸ்புர்க் போராட்டக் குழுவின் ஆதிப்போக்கே — அதை மேலே இனங்குறித்திருக்கிறேன்—ஆதிக்க நிலையிலிருந்ததாக நினைத்தேன், அது சரியே. குறைந்தபட்சம் 1898ன் மத்தி வரை இப்போக்கு ஆதிக்க நிலையிலேயே இருந்தது. எனவே, ரபோச்சியே தேலோ ''பொருளாதாரவாதம்'' இருப்பதையும் அதன் அபாயத்தையும் மறுக்க முயன்றதில் 1897-98ல் செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் இருந்த ''பொருளாதாரவாத'' கருத்துக்களால் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியிட வேண்டியிருந்த கருத்துக்களை வெளியிட்ட ஒரு குறுநூலைக் குறிப்பிடுவதற்கு அதற்கு உரிமை ஏதும் கிடையாது.*

---

* ரபோச்சியே தேலோ தனது முதற் பொய்யை (''அக்செல்ரோட் எந்த இளந்தோழர்களைக் குறிப்பிடுகிறார் என்று நமக்குத் தெரியாது'') தாங்கப்போய் இரண்டாம் பொய் ஒன்றைக் கூட்டிக்கொண்டது தான் எழுதிய பதிலில்: ''பணிகள் பற்றிய மதிப்புரை பிரசுரமானபின், சில ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே, பொருளாதார ஒருசார்புத்தன்மையை நோக்கிச் செல்லும் போக்குகள் உதித்துள்ளன அல்லது ஏறத்தாழ தெளிவாக வரையறுக்கப் பெற்றுள்ளன; பணிகளில் வர்ணிக்கப்பட்டுள்ள நம் இயக்கத்தின் நிலையிலிருந்து ஒரு அடி பின்னுக்குப் போவதை இந்தப் போக்குகள்

ரபோச்சியே தேலோ ''பொருளாதாரவாதிகளைத்'' ''தாங்கியது'' மட்டுமல்ல, அவர்களின் அடிப்படையான தவறுகளில் தானும் இடையருது விழுந்துவந்தது. ரபோச்சியே தேலோ வேலைத்திட்டத்தின் பின்வரும் ஆய்வுரைக்கு அளிக்கப் பட்ட வியாக்கியானத்திலுள்ள ஈரொட்டான பொருளே இந்தக் குழப்பத்துக்கு மூலமாகும்: ''ருஷ்ய வாழ்க்கையின் மீமிகையான முக்கியமுள்ள நிகழ்வுத்தோற்றம், சங்கத்தின் பணிகளையும் (கொட்டையெழுத்துக்களில் போட்டது நாம்) பிரசுர நடவடிக்கையின் தன்மையையும் முதன்மையாக நிர்ணயிக்கப்போகும் (கொட்டையெழுத்தில் போட்டது நாம்) நிகழ்வுத் தோற்றம் அண்மையாண்டுகளில் உதித் துள்ள திரளான பாட்டாளிவர்க்க இயக்கமே (கொட்டை யெழுத்தில் போட்டது ரபோச்சியே தேலோ) என்று நாங்கள் கருதுகிருேம்.'' மக்கள்திரளுள்ள இயக்கம் மீமிகையான முக்கியமுள்ள நிகழ்வுத்தோற்றம் என்பது மறுக்கமுடியாத விஷயம். ஆனுல் விவகாரத்தின் புரியாப்பகுதி இதுதான்: மக்கள்திரளுள்ள இவ்வியக்கம் ''பணிகளை நிர்ணயிக்கும்'' எனும் கூற்றை எப்படிப் புரிந்துகொள்வது? இரண்டு வழி களில் ஏதாவது ஒன்ருக அதை வியாக்கியானம் செய்யலாம்: ஒன்று, அதன் பொருள் இவ்வியக்கத்தின் தன்னியல்பை வழி படுவது—அதாவது, தன்னளவான பாட்டாளிவர்க்க இயக் கத்துக்கு வெறுமே கீழ்ப்படுத்தப்பட்ட நிலைக்குச் சமூக-ஜன நாயகவாதத்தின் பாத்திரத்தைத் தாழ்த்துவது (இது ரபோச் சயா மிஸ்ல், ''சுயவிடுதலைக் குழு'', பிற ''பொருளாதாரவாதி கள்'' ஆகியோரின் வியாக்கியானம்); அல்லது, அதன் பொருள்

---

குறிக்கின்றன'' (பக்கம் 9). இது 1900ல் பிரசுரமான பதிலில் உள்ளது. ஆனுல் ரபோச்சியே தேலோவின் முதல் இதழ் (மதிப்புரையோடு கூடியது) 1899 ஏப்ரலில் வெளிவந்தது. 1899ல்தானு உண்மையிலே ''பொருளாதாரவாதம்'' உதித் தது? இல்லை. 1899ல் ''பொருளாதாரவாதத்தை எதிர்த்து ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் முதல் கண்டனம் ("Credo" வுக்கு எதிர்ப்பான கண்டனம்) வெளியாயிற்று. ''பொரு ளாதாரவாதம்'' 1897ல் தோன்றியதை ரபோச்சியே தேலோ நன்கறியும்; ஏனெனில் 1898 நவம்பரிலேயே ரபோச்சயா மிஸ்லை வி. இ. புகழ்ந்துகொண்டிருந்தார் (பார்க்க: லிஸ்டோக் ''ரபோத்னிகா'', இதழ் 9-10).

மக்கள்திரளுள்ள இயக்கம் நம்முன் புதிய தத்துவார்த்த, அரசியல், அமைப்புப் பணிகளை வைக்கிறது, மக்கள்திரளான இயக்கம் உதிக்குமுன் இருந்த காலத்தில் நமக்குத் திருப்தியளித்திருக்கக் கூடிய பணிகளைவிட இவை எவ்வளவோ சிக்கலானவை. ரபோச்சியே தேலோ முதல் வியாக்கியானத்தின் பக்கம் சாய்ந்தது, இன்னமும் சாய்ந்தவாறிருக்கிறது; காரணம், அது எந்தப் புதிய பணிகளைப்பற்றியும் திட்டவட்டமாக ஒன்றும் சொல்லவில்லை, ''மக்கள்திரளுள்ள இயக்கம்'' நம் முன் வைக்கிற பணிகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு நிறைவேற்றிவைக்கும் அவசியத்திலிருந்து அது ஏதோ நம்மை விடுவிக்கிறது போல் இடைவிடாமல் வாதாடிவருகிறது. மக்கள்திரளுள்ள பாட்டாளிவர்க்க இயக்கத்துக்கு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதை முதற் பணியாக வைப்பது சாத்தியமில்லை என்று ரபோச்சியே தேலோ கருதியதையும், இப்பணியை (மக்கள்திரளுள்ள இயக்கத்தின் பெயரால்) உடனடி அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டமாகத் தாழ்த்தியதையும் (பதில், பக்கம் 25) மட்டும் சுட்டிக்காட்டினால் போதும்.

ரபோச்சியே தேலோ ஆசிரியர் ப. கிரிச்சேவ்ஸ்கி ''ருஷ்ய இயக்கத்தில் பொருளாதாரப் போராட்டமும் அரசியல் போராட்டமும்'' என்று தலைப்பிட்டு எழுதிய கட்டுரையை (அந்தப் பத்திரிகையின் இதழ் 7ல் வெளிவந்தது) விட்டுவிடுவோம்; அதில் இதே தவறுகள்* திரும்பச் சொல்லப்படுகின்

---

* ஓர் எடுத்துக்காட்டு: அரசியல் போராட்டத்தில் ''கட்டங்கள் பற்றிய தத்துவம்'' அல்லது ''துணிவற்ற கோணல்மாணலான பாதைகள்'' பற்றிய தத்துவம் இக்கட்டுரையில் பின்வருமாறு வெளியிடப்படுகிறது: ''அவற்றின் தன்மையிலே அரசியல் கோரிக்கைகள் ருஷ்யா முழுவதற்கும் பொதுவாகத்தான் உள்ளன. என்றபோதிலும் அவை முதலில் [இது ஆகஸ்டு 1900ல் எழுதப்பட்டது!] குறிப்பிட்ட தொழிலாளர் பகுதி [உண்மையாகத்தான்!] பொருளாதாரப் போராட்டத்தில் பெற்ற அனுபவத்தோடு பொருந்துபவையாக இருக்க வேண்டும். இந்த அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே [!] அரசியல் கிளர்ச்சி மேற்கொள்ளமுடியும், மேற்கொள்ளப்படவேண்டும்'' முதலியவாறு (பக்கம் 11). அவ்வாசிரியர் முற்றிலும் ஆதாரமற்றதாகக் கருதும் பொருளாதாரவாத முரண்கருத்து பற்றிய குற்றச்சாட்டை ஆட்

றன. நேராக ரபோச்சியே தேலோ இதழ் 10க்குப் போவோம். ஸார்யா, இஸ்க்ரா ஆகியவற்றிற்கு எதிராக கிரிச்சேவ்ஸ்கியும் மார்தீனுவும் எழுப்பிய பல்வேறு ஆட்சேபணைகளில் நாம் விபரமாகப் புகப்போவதில்லை. ரபோச்சியே தேலோ தனது 10ம் இதழில் எடுத்த நிலைக்குரிய கோட்பாடுகளின் அடிப்படை ஒன்றே இங்கு நமக்குள்ள அக்கறை. எனவே,

''அரசியல் போராட்டத்தைப் பற்றி முன்கூட்டி உருவாக்கிக் கொண்ட திட்டத்தாலோ வழிமுறையாலோ சமூக-ஜனநாயகவாதம் தன் கைகளைக் கட்டிபோட்டுவிடுவதில்லை,

---

சேபித்து 4ம் பக்கத்தில் இரங்கத்தக்க முறையில் கூவுகிறார்: ''மார்க்ஸ் எங்கெல்ஸ் தத்துவங்களின்படி திட்டவட்டமான வர்க்கங்களின் பொருளாதார நலன்கள் வரலாற்றிலே நிர்ணயமான பாத்திரம் வகிப்பதும், எனவே குறிப்பாக தொழிலாளிவர்க்கம் தனது பொருளாதார நலன்களுக்காக நடத்தும் போராட்டம் அதன் வர்க்க வளர்ச்சியிலும் விடுதலைப் போராட்டத்திலும் தலையாய முக்கியத்துவம் பெற்றிருக்கவேண்டும் என்பதும் எந்த சமூக-ஜனநாயகவாதிக்குத்தான் தெரியாது?'' என்று (கொட்டையெழுத்து இட்டது நாம்). ''எனவே'' என்கிற சொல் முற்றும் பொருத்தமற்றது. பொருளாதார நலன்கள் நிர்ணயமான பாத்திரம் வகிக்கின்றன என்கிற உண்மை பொருளாதார (அதாவது, தொழிற்சங்க வழிப்பட்ட) போராட்டமே தலையாய முக்கியத்துவமுள்ளது என்று கடுகளவேனும் உணர்த்துவதாயில்லை. ஏனெனில், பொதுவாகத் தீவிரமான அரசியல் மாற்றங்கள் மட்டுமே வர்க்கங்களின் மீமிகு தேவையான, ''நிர்ணயமான'' நலன்களை நிறைவுபடுத்த முடியும். குறிப்பாக, முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அகற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வைத்திடும் அரசியல் புரட்சி ஒன்றுதான் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான பொருளாதார நலன்களை நிறைவுபடுத்தமுடியும். ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வி. வி. வகையருவின்'' வாதங்களையும் (அதாவது, பொருளாதாரத்தை அரசியல் அடியொற்றி வருகிறது, முதலிய வாதங்களையும்) ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின் பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களின் வாதங்களையும் (எடுத்துக்காட்டாக, இதேபோன்ற வாதங்களைக் கொண்டு தொழிலாளிகள் அரசியல் புரட்சி பற்றிச் சிந்திக்கமுடிவதற்குமுன் ''பொருளாதார அதிகாரம்'' பெறவேண்டும் என்று வோல்ட்மன் நிரூபிக்க முயன்றார்) கிரிச்சேவ்ஸ்கி திருப்பிச் சொல்கிறார்.

தன் நடவடிக்கைகளைக் குறுக்கிக்கொள்வதில்லை; கட்சியின் வசமுள்ள சக்திகளுக்குப் பொருத்தமாக இருந்து வருகிற வரை எல்லாப் போராட்ட சாதனங்களையும் அது அங்கீகரிக்கிறது'' (இஸ்க்ரா, இதழ் 1)* முதலியவாறுள்ள முன்கூற்றுக்கும்,

''எல்லாச் சூழ்நிலைமைகளிலும் எல்லாக் காலங்களிலும் அரசியல் போராட்டம் நடத்தும் திறனுள்ள பலமான அமைப்பு இல்லாமல், உறுதியான கோட்பாடுகளின் ஒளியிலே விடாமுயற்சியுடன் நிறைவேற்றப்பட்டு வரக்கூடிய, போர்த்தந்திரம் எனும் பெயருக்குத் தகுதிபெற்ற, முறைமையுள்ள செயல் திட்டம் எனும் பிரச்சினைக்கே இடமிருக்கமுடியாது'' (இஸ்க்ரா, இதழ் 4)** எனும் முன்கூற்றுக்கும் இடையே ரபோச்சியே தேலோ ஒரு ''நேரெதிரான முரண்பாட்டை''க் கண்ட விநோதமான விஷயத்தை நாம் பரிசீலிக்கப் போவதில்லை.

சந்தர்ப்பப் பொருத்தமுள்ள எல்லாப் போராட்ட சாதனங்களையும் எல்லாத் திட்டங்களையும் வழிமுறைகளையும் கோட்பாடு அளவிலே அங்கீகரிப்பதை, கண்டிப்புடன் பின்பற்றப்படவேண்டிய திட்டத்தால் ஒரு குறிப்பிட்ட அரசியல் தருணத்தில் வழிகாட்டப்படவேண்டும் எனும் கோரிக்கையோடு குழப்பிக்கொள்வது—நாம் போர்த்தந்திரம் பற்றிப் பேசுவதானல்—மருத்துவ இயல் நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பல்வேறு வழிமுறைகளை அங்கீகரிப்பதை ஒரு குறிப்பிட்ட நோய்க்கு ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான சிகிச்சை முறையைக் கையாளுவதின் தேவையோடு குழப்பிக் கொள்வதற்குச் சமமாகும். விஷயம் இதுதான்: தன்னியல்பை வழிபடுதல் என்று நாம் பெயரிட்டுள்ள நோய்க்கு ரபோச்சியே தேலோ ஆளாகி, அந்த நோய்க்கு எந்த விதமான ''சிகிச்சை முறையையும்'' அங்கீகரிக்க மறுக்கிறது. எனவே, ''திட்டம் என்கிற வகைப்பட்ட போர்த்தந்திரம் மார்க்ஸியத்தின் அடிப்படை யுணர்ச்சியோடு முரண்

---

* பார்க்க: வி. இ. லெனின், ''நம் இயக்கத்தின் சூடேறிய பிரச்சினைகள்''.—(ப-ர்.)

** பார்க்க: வி. இ. லெனின், ''எங்கிருந்து தொடங்குவது?''—(ப-ர்.)

படுகிறது'' (இதழ் 10, பக்கம் 18) என்றும், போர்த்தந்திரம் ''கட்சிப் பணிகளின் ஒரு வளர்ச்சிப் போக்கு, அது கட்சியோடு சேர்ந்து வளர்கிறது'' என்றும் அது ஒரு குறிப்பிடத் தக்க கண்டுபிடிப்பைச் செய்துள்ளது (பக்கம் 11, ரபோச்சியே தேலோ கொட்டையெழுத்தில் போட்டது). இந்தக் கருத்துரை ஒரு புகழ்பெற்ற முதுமொழியாவதற்கும் ரபோச்சியே தேலோ ''போக்குக்கு'' நிரந்தரமான நினைவுச் சின்னமாவதற்கும் உறுதியாக வாய்ப்புண்டு. ''எதை நோக்கிச் செல்வது?'' எனும் கேள்விக்கு இத்தலைமைப் பத்திரிகை அளிக்கும் பதில் இதுதான்: இயக்கம் என்பது அந்த இயக்கத்தின் தொடக்கப் புள்ளிக்கும் பின்னிட்டுவரும் தொடர்ச்சிப் புள்ளிகளுக்கும் இடையேயுள்ள தூரத்தை மாற்றுகிற நிகழ்வுப் போக்கு, என்று. கருத்தாழத்துக்கு நேர்நிகரற்ற எடுத்துக் காட்டாக உள்ள இது ஒரு விந்தை மட்டும் இல்லை (அப்படி இருந்தால் நெடிய பரிசீலனைக்குத் தகுதியற்றதாக இருக்கும்), இது ஒரு முழுமையான போக்கின் வேலைத்திட்டமுமாகும்; இந்த வேலைத்திட்டத்தைப் பின்வரும் சொற்களில் (ரபோச்சயா மிஸ்லின் ''தனி இணைமலரில்'') ஆர். எம். வெளியிட்டார்: எந்தப் போராட்டம் சாத்தியமோ அதுவே விரும்பத்தக்கது, அந்தந்தக் குறிப்பிட்ட தருணத்தில் நிகழ்ந்து வரும் போராட்டமே சாத்தியமான போராட்டமாகும், என்று. இதுதான் கடிவாளமற்ற சந்தர்ப்பவாதப் போக்கு, இது செயலற்றமுறையில் தன்னியல்போடு தன்னைச் சரி செய்துகொள்கிறது.

''திட்டவகைப்பட்ட போர்த்தந்திரம் மார்க்ஸியத்தின் சாராம்சத்துக்கு முரணானது!'' என்பது மார்க்ஸியத்தை இழிவுபடுத்துவதாகும், நம்மை எதிர்க்கும் போராட்டத்தில் நரோதியவாதிகள்[62] தூக்கிப்பிடிக்கும் கேலிச்சித்திரமாக மார்க்ஸியத்தை மாற்றுவதுதான் அதன் பொருள். அது வர்க்க உணர்வுள்ள போர்வீரர்களின் முன்முயற்சியையும் ஆற்றலையும் சிறுமைப்படுத்துவதாகத்தான் பொருள்படுகிறது. மாருக, மார்க்ஸியம் சமூக-ஜனநாயகவாதியின் முன் முயற்சிக்கும் ஆற்றலுக்கும் மாபெரும் தூண்டுவிசை அளிக்கிறது, மிக விரிவான திசைவழிகள் திறந்துவிடுகிறது, மற்றும் (சொல்லக் கூடுமானால்) ''தன்னியல்பாக'' போராட்டத்திற்கு எழும் கோடிக்கணக்கான தொழிலாளிகளின் வலு

மிக்க சக்தியை அவன் வசம் விடுகிறது. சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்தின் வரலாறு முழுவதிலும் அவ்வப்பொழுது அந்தந்த அரசியல் தலைவன் முன்வைத்த திட்டங்கள் நிறைந்துள்ளன; அவற்றில் சில அதனதன் ஆசிரியர்களின் தொலை நோக்கையும் பிழையற்ற அரசியல், அமைப்புக் கருத்துக்களையும் உறுதிப்படுத்தின, மற்றவை அவரவர்களின் குறுகிய நோக்கையும் அரசியல் தவறுகளையும் வெளிப்படுத்தின. ஜெர்மனி தனது வரவாற்றின் நிர்ணயமான திரும்புமுனைகள் ஒன்றில்—பேரரசு உருவானது, ரைக்ஸ்டாக் (நாடாளு மன்றம்) துவங்கியது, அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப் பெற்றது—இருந்த காலத்தில், சமூக-ஜனநாயகவாத அரசியலுக்கும் பொதுவாக வேலைக்கும் லீப்க்னெஹ்ட் ஒரு திட்டம் வைத்திருந்தார், ஷ்வைட்ஸர் மற்றொன்று வைத்திருந்தார். சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் ஜெர்மன் சோஷலிஸ்டுகள் மீது விழுந்தபோது மோஸ்த், ஹாஸல்மான் ஆகியோர் ஒரு திட்டம் வைத்திருந்தனர்—வன்முறைக்கும் பயங்கரத்துக்கும் உடனே அறைகூவத் தயாராயிருந்தனர்; ஹொஹ்பெர்க், ஷ்ராம், (ஓரளவுக்கு) பெர்ன்ஷ்டைன் வேறொரு திட்டம் வைத்திருந்தனர்—சமூக-ஜனநாயகவாதிகள் நியாயமின்றிக் கடுமையும் புரட்சிப் பான்மையும் காட்டியதினால் ஆத்திர மூட்டப்பட்டு அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதென்றும் இனி எடுத்துக்காட்டாக இருக்கத்தக்க நடத்தையால் அவர்கள் மன்னிப்பு சம்பாதிக்கவேண்டும் என்றும் அவர்கள் உபதேசிக்கலாயினர். வேறொரு மூன்றும் திட்டமும் இருந்தது, இதை முன்வைத்தவர்கள் சட்டவிரோதமான பத்திரிகை[63] தயாரித்து வெளியிட்டனர். எந்தப் பாதையைப் பின்பற்றுவது என்று தேர்ந்துகொள்வதற்குப் போராட்டம் நடந்துமுடிந்து பல ஆண்டுகள் கழிந்தபின், தேர்ந்துகொண்ட பாதை சந்தர்ப்பப் பொருத்தமுள்ளதுதானா என்பது குறித்து வரலாறு தீர்ப்பளித்துவிட்டபின், இப்போது பின்புத்தியுடன் கட்சிப் பணிகளின் வளர்ச்சி பற்றியும் அவை கட்சியோடு கூடவே வளர்வது பற்றியும்ஆழ்ந்த முதுமொழிகள் உதிர்ப்பது சுலபம், உண்மைதான். குழப்பம் நிலவும் காலத்தில்*, ருஷ்ய ''விமர்

* "Ein Jahr der Verwirrung" (''குழப்பம் நிலவிய ஆண்டு'') என்று மேரிங் எழுதிய ஜெர்மன் சமூக-ஜனநாயக

சகர்களும்'' ''பொருளாதாரவாதிகளும்'' சமூக-ஜனநாயக வாதத்தைத் தொழிற்சங்கவாதத்தின் தரத்துக்குத் தாழ்த்தி வருகிற காலத்தில், பழைய தவறுகளை மீண்டும் செய்கிற ''திட்டம் என்கிற வகையிலான போர்த்தந்திரத்தை'' ஏற்க வேண்டும் என்று பயங்கரவாதிகள் பலமாக எடுத்தியம்பி வருகிற காலத்தில், இப்படிப்பட்ட ஆழ்கருத்துக்களோடு ஒருவர் நிறுத்திக்கொள்வது தனக்குத்தானே ''வறியநிலைச் சான்றிதழ்'' கொடுத்துக்கொள்வதாகத்தான் பொருள். முன்முயற்சியும் ஆற்றலும் போதாமையாலும், ''அரசியல் பிரச்சாரம், கிளர்ச்சி, அமைப்புத்துறைகளின் செயற்பரப்பு'' போதாமையாலும்,* புரட்சி வேலைக்கான மேலும் விரிவான அமைப்புக்கு வேண்டிய ''திட்டங்கள்'' இல்லாமையாலும் பல சமூக-ஜனநாயகவாதிகள் அவதிப்பட்டுவருகிற காலத்தில் ''திட்டம் என்கிற வகைப்பட்ட போர்த்தந்திரம் மார்க்ஸியத்துக்கு முரணானது'' என்று கூறுவது மார்க்ஸியத்தைத் தத்துவத் துறையிலே கொச்சைப்படுத்துவது மட்டுமல்ல, நடைமுறையில் கட்சியைப் பின்னேக்கி இழுத்துச் செல்வதுமாகும் என்றே பொருள்.

ரபோச்சியே தேலோ மேலும் உபதேசிக்கிறதாவது:

''புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதியின் பணி புறநிலை வளர்ச்சியைத் தனது உணர்வுபூர்வமான வேலை வழியே துரிதப்படுத்துவது மட்டுமேயாகும், அதை விலக்கித் தள்ளுவதோ அவ்வளர்ச்சிக்குப் பதிலாக தனது சொந்த அகநிலைத் திட்டங்களை வைப்பதோ அல்ல. தத்துவ வழியிலே இஸ்க்ராவுக்கு இவையனைத்தும் தெரியும்; என்றபோதிலும், உணர்வு பூர்வமான புரட்சி வேலைக்கு மார்க்ஸியம் நியாயமாகவே மாபெரும் முக்கியத்துவம் அளிப்பது வளர்ச்சியின் புறநிலை அம்சத்துக்கு அல்லது தன்னியல்பான அம்சத்துக்கு உள்ள குறிபொருளைச் சிறுமைப்படுத்தும்படி இதைத் தூண்டுகிறது; காரணம்,

---

வாதத்தின் வரலாறு எனும் நூலின் ஓர் அத்தியாயத்துக்குத் தலைப்பு கொடுத்தார். புதிய நிலைமைக்கான ''திட்டம் என்கிற வகையில் போர்த்தந்திரத்தைத்'' தேர்ந்துகொள்வதில் தொடக்கத்தில் சோஷலிஸ்டுகள் காட்டிய தயக்கத்தையும் மனவுறுதியின்மையையும் அவர் இந்த அத்தியாயத்தில் வர்ணிக்கிறார்.

* இஸ்க்ரா, இதழ் 1, தலையங்கக் கட்டுரை. (பார்க்க: லெனின். ''நம் இயக்கத்தின் சூடேறிய பிரச்சினைகள்''.—(ப-ர்.)

அது போர்த்தந்திரத்தின் பால் கொண்டுள்ள வறட்டுக் கோட்பாடான கருத்தேயாகும்'' (பக்கம் 18).

திரு. வி. வி.க்கும் அவரது திரு. கூட்டத்தாருக்கும் தகுதியான அசாதாரணமான தத்துவார்த்தக் குழப்பத்துக்கு மற்ெருரு எடுத்துக்காட்டு தருகிறேம். நமது மெய்யறிஞரைக் கேட்க விரும்புகிறேம்: அகநிலைத் திட்டங்களைத் தீட்டுபவர் எப்படி புறநிலை வளர்ச்சியைச் ''சிறுமைப்படுத்தக்'' கூடும்? இந்தப் புறநிலை வளர்ச்சி சில குறிப்பிட்ட வர்க்கங்களை, மக்கள் பகுதிகளை, அல்லது குழுக்களை, சில நாடுகளை அல்லது நாடுகளைக் கொண்ட குழுக்களைப் படைக்கிறது அல்லது பலப்படுத்துகிறது, அழிக்கிறது அல்லது பலவீனப் படுத்துகிறது, இவ்வழியே குறிப்பிட்ட சர்வதேச அரசியல் சக்திகளின் ஒரு அணிசேர்க்கையையோ புரட்சிகரமான கட்சிகள் எடுத்துக்கொள்ளும் நிலைகளையோ நிர்ணயிக்கப் பயன்படுகிறது எனும் விஷயத்தைப் பார்க்கத் தவறுவதின் மூலமாக, என்பது வெள்ளிடைமலை. திட்டங்கள் தீட்டுகிறவர் அப்படிச் செய்திருந்தால் அவர் செய்த குற்றம் தன்னியல்பான அம்சத்தைச் சிறுமைப்படுத்தினர் என்பதல்ல, மாறுக உணர்வுபூர்வமான அம்சத்தைச் சிறுமைப்படுத்தினர் என்றுதான் இருக்கும்; காரணம், புறநிலை வளர்ச்சியை முறையாகப் புரிந்துகொள்வதற்குத் தனக்கு ''உணர்வு'' இல்லை என்று அப்போது காட்டிக்கொள்வார். ஆகவே, தன்னியல்பு உணர்வு ஆகியவற்றின் ''சார்புநிலையான குறிபொருளை மதிப்பிடுவது'' (ரபோச்சியே தேலோ கொட்டையெழுத்தில் போட்டது) பற்றிய பேச்சே முற்றுக ''உணர்வு'' இல்லாமையை வெளிப்படுத்துகிறது. மனித அறிவால் குறிப்பிட்ட ''வளர்ச்சியின் தன்னியல்பான அம்சங்களைப்'' புரிந்து கொள்ள முடியுமேயானுல், அப்போது அவற்றைப் பற்றிய தவறுன மதிப்பீடு என்பது ''உணர்வு பூர்வமான அம்சத்தைச் சிறுமைப்படுத்துவதற்குச்'' சமமாகும். ஆனுல் அவற்றைப் புரிந்துகொள்ளமுடியாது என்று சொன்னுல் அவை நமக்குத் தெரியாது, எனவே அவற்றைப் பற்றி நாம் பேச முடியாது என்றுகும். அப்படியானுல் கிரிச்சேவ்ஸ்கி விவாதித்துக் கொண்டிருப்பது என்ன? இஸ்க்ராவின் ''அகநிலைத் திட்டங்கள்'' தவறுனவை என்று அவர் நினைத்தால் (அப்படித்தான்

அவர் சொல்கிருர்) அவை என்ன புறநிலே உண்மைகளேப் புறக்கணிக்கின்றன என்று அவர் காட்டவேண்டும், அதன் பிறகே அவற்றைப் புறக்கணிக்கிறதிலே இஸ்க்ராவுக்கு அரசியல் உணர்வு இல்லேயென்றும் ''உணர்வுபூர்வமான அம்சத்தைச் சிறுமைப்படுத்துகிறது'' (அவர் சொற்களில் சொல்கிருேம்) என்றும் இஸ்க்ராவை குற்றஞ்சாட்டியிருக்க வேண்டும். ஆனல், அகநிலேத் திட்டங்கள்பால் வெறுப்படைந்து''உணர்வு பூர்வமான அம்சத்தைச் சிறுமைப்படுத்துகிறது'' (!!) எனும் வாதம் தவிர வேறெந்த வாதமும் வைக்கமுடியவில்லேயென் ருல் அவர் வெறுமே காட்டுவது இதுதான்: (1) தத்துவத் துறையிலே, அவர் மார்க்ஸியத்தை கரேயிவ், மிகைலோவ் ஸ்கி வகையருக்களின் வழியில் புரிந்துகொண்டிருக்கிருர்; இவர்களே பேல்ட்டொவ்[64] வேண்டிய அளவுக்குக் கேலி செய்திருக்கிருர்; (2) நடைமுறையிலே, நமது சட்டசம்மத மான மார்க்ஸியவாதிகளே பெர்ன்ஷ்டைன்வாதத்தின் பாலும் நமது சமூக-ஜனநாயகவாதிகளேப் ''பொருளாதாரவாதத் தின்'' பாலும் இழுத்துவிட்டிருக்கும்''வளர்ச்சியின் தன்னியல் பான அம்சங்களிலே'' அவர் மிகவும் திருப்தியடைந்திருக்கி ருர், ''தன்னியல்பான'' வளர்ச்சிப் பாதையிலிருந்து ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தை எப்படியாயினும் திசைமாற்றி விடத் துணிந்திருக்கிறவர்கள் மீது ''கடுங்கோபம்'' கொண் டிருக்கிருர்.

மேலும், இதன்பின் உண்மையிலேயே கோமாளித்தன மான விஷயங்கள் தொடர்கின்றன. ''இயற்கை விஞ்ஞானத் தின் கண்டுபிடிப்புகள் அனேத்தும் எப்படியிருந்த போதிலும் மனிதர்கள் பழங்கால வழியிலேயே குழந்தைகளேப் பெற் றெடுத்துக் கொண்டிருப்பார்கள் என்பது போலவே எதிர் காலத்திலும்கூட ஒரு புதிய சமுதாய அமைப்புமுறையின் பிறப்பு முக்கியமாகத் தன்னியல்பான வெடிப்புகளின் விளே வாகவே நிகழும்—சமுதாய விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு கள் என்னவாக இருந்தாலும் சரி, உணர்வுபூர்வமான போர் வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவாக அதிகரித்தபோதிலும் சரி'' (பக்கம் 19). யாரும் குழந்தைகளேப் பெறமுடியும் என்று பழங்கால விவேகத்தோடு நமது பாட்டன்மார்கள் சொல்வார்களே, அதுபோல இன்று ''நவீனகால சோஷ லிஸ்டுகள்'' தமக்குரிய விவேகத்தோடு ஒரு புதிய சமுதாய

அமைப்பின் இயற்கை பிறப்பில் யாரும் கலந்துகொள்ளமுடியும் என்று (நார்ட்ஸிஸ் துபொரீலொவ் பாணியில்[05]) சொல்கிறார்கள். யாருக்கும் முடியும், என்றே நாங்களும் சொல்கிறோம். ''பொருளாதாரவாதம்'' ஆட்சிபுரிகையில் ''பொருளாதாரவாதத்துக்கு'' இணங்கிப்போவது, பயங்கரவாதம் ஆட்சிபுரிகையில் பயங்கரவாதத்துக்கு இணங்கிப்போவது — அது இருந்துவிட்டால் போதும், இவ்வகைப்பட்ட பங்கு பற்றுவதற்கு. இப்படித்தான், இவ்வாண்டு வசந்த காலத்தில், பயங்கரவாதத்தின்மீது மோகம் கொள்வது பற்றி எச்சரிக்கை செய்வது எவ்வளவோ முக்கியமாக இருந்த நேரத்தில், தனக்குப் ''புதிதாக'' இருக்கிற ஒரு பிரச்சினை எதிர் நிற்கக் கண்டு ரபோச்சியே தேலோ திகைத்துப் போய்விட்டது. ஆறு மாதம் கழிந்தபின், பிரச்சினை ஓரளவுக்கு உடனடிக் கவனத்தை இழந்துள்ள இப்போது, ''பயங்கரவாத உணர்ச்சிகள் எழுந்துவருவதை எதிர்த்துமுறிப்பது சமூக-ஜனநாயகவாதத்தின் பணி அல்ல, பணியாக இருக்கவும் கூடாது, என்று நாங்கள் கருதுகிறோம்'' (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம் 23) என்று ஒரு பிரகடனமும், ''முறைமையான, ஏறித்தாக்கும் பயங்கரவாதம் சந்தர்ப்பப் பொருத்தமற்றது என்று மாநாடு கருதுகிறது'' என்று ஒரு மாநாட்டுத் தீர்மானமும் (இரண்டு மாநாடுகள், பக்கம் 18) ஒரே நேரத்தில் முன்வைக்கிறது. ஆஹா, என்ன தெளிவு, என்ன உள்ளிணக்கம்! எதிர்த்து முறிக்கக்கூடாதாம், ஆனால் சந்தர்ப்பப்பொருத்தமற்றது என்று கூறவேண்டுமாம், அதுவும் முறைமையற்ற தற்காப்பான பயங்கரவாதம் ''தீர்மானத்தின்'' பரப்பெல்லைக்குள் வராத முறையில் கூற வேண்டுமாம். இப்படிப்பட்ட தீர்மானம் மிகமிகப் பாதுகாப்பானது, பிழைக்கு இடமில்லாமல் உறுதி செய்வது—எதுவும் சொல்லாமலே பேசிக்கொண்டிருக்கும் மனிதனுக்குப் பிழைசெய்யும் பயமில்லை என்பது போல. இப்படிப்பட்ட தீர்மானத்தை எழுதுவதற்கு இயக்கத்தின் வாலைப் பிடித்துவரும் திறமை இருந்தால் போதும். பயங்கரவாதம் எனும் பிரச்சினை புதியது* என்று கூறியதற்கு

* பார்க்க: வி. இ. லெனின், ''எங்கிருந்து தொடங்குவது?''—(ப-ர்.)

ரபோச்சியே தேலோவை இஸ்க்ரா கேலி செய்தபோது ''வெளிநாட்டில் குடியேறிவிட்ட எழுத்தாளர்களின் குழு ஒன்று பதினைந்தாண்டுகளுக்கு முன்னதாகவே போர்த்தந்திரப் பிரச்சினைகளுக்கு முன்வைத்த தீர்வுகளைக் கட்சியமைப்புகள் மீது சுமத்துகிற நம்பமுடியாத துடுக்குத்தனத்தை இஸ்க்ரா வெளியிடுகிறது'' (பக்கம் 24) என்று அது சீற்றத்துடன் குற்றஞ்சாட்டியது. துடுக்குத்தனம், உண்மைதான்! முதலில் தத்துவார்த்தப் பிரச்சினைகளை முன்கூட்டியே தீர்த்து விட்டுப் பிறகு இந்தத் தீர்வு சரியே என்று கட்சி அமைப்பை யும் மக்களையும் நம்பச் செய்ய முயல்வது—இது உணர்வு பூர்வமான அம்சத்தை எவ்வளவு மிகையாக மதிப்பிடுகிறது!* அந்தந்த அம்சங்களைத் திருப்பிச் சொல்வதும், யார் மீதும் எதையும் ''சுமத்தாமல்'' ஒவ்வொரு ''திருப்பத்துக்கும்'' தக்க வகையில்—''பொருளாதாரவாதத்'' திசையிலாயினும் சரி, பயங்கரவாதத் திசையிலாயினும் சரி—ஊசலாடுவதும், இது எவ்வளவோ மேல் அல்லவா! மாபெரும் விவேகம் நிறைந்த இந்த அறிவுரையை ரபோச்சியே தேலோ பொதுமைப் படுத்தவும் செய்கிறது, மேலும் ''உருவில்லாத பாழ் வெளியில் மேலுலாவி வரும் ஆவி போல் இயக்கத்துக்கு எதிராகத் தமது வேலைத்திட்டத்தை நிறுத்துவதாக'' (பக்கம் 29) இஸ்க்ராவையும் ஸார்யாவையும் குற்றஞ்சாட்டுகிறது. ஆனால், தன்னியல்பான இயக்கத்தின் மேல் உலாவிவருவதோ டல்லாமல் இந்த இயக்கத்தைத் ''தனது வேலைத்திட்டத்தின்'' தரத்துக்கு உயர்த்திவருகிற ''ஆவியாக'' அல்லாது சமூக-ஜனநாயகவாதத்தின் வேலை வேறு என்ன? இயக்கத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு வருவது அதன் வேலையல்ல என்பது உறுதி. மிகமேலாகப் போனால், இதனால் இயக்கத்துக்குப் பய னேதும் இல்லை; மிக மோசமாகப்போனால் இதனால் மிகவும் கேடுதான் விளையும். என்றபோதிலும், இந்த ''இயக்கப் போக்கு வகையில் அமைந்த போர்த்தந்திரத்தை'' ரபோச்சியே தேலோ பின்பற்றுவதோடல்லாமல் அதைக் கோட்பாடாகவும்

---

* உழைப்பாளர் விடுதலைக் குழு பயங்கரவாதப் பிரச்சினையை ''தத்துவார்த்த வழியிலே'' தீர்ப்பதில் அதற்கு முந்தி யிருந்த புரட்சி இயக்கத்தின் அனுபவத்தைப் பொதுமைப் படுத்திய விஷயத்தையும் மறக்கக் கூடாது.

உயர்த்திநிறுத்துகிறது, எனவே அதன் போக்கை சந்தர்ப்ப வாதம் என்று வர்ணிப்பதை விட வால்பிடிக்கும் போக்கு என்று வர்ணிப்பதே சரியாக இருக்கும். இன்னொன்றையும் ஒப்புக்கொண்டு தீரவேண்டும்: எப்போதும் இயக்கத்தின் பின்னே வந்தவாறு அதன் வாலாக இருக்கத் தீர்மானங் கொண்டிருப்பவர்கள் ''வளர்ச்சியின் தன்னியல்பான அம் சத்தைச் சிறுமைப்படுத்தாதவாறு'' முற்றுகவும் நிரந்தர மாகவும் உத்தரவாதம் பெறுகிருர்கள்.

* * *

ஆகவே, தன்னியல்பை வழிபடுவதும் மக்களின் தன் னியல்பு சமூக-ஜனநாயகவாதிகளாகிய நம்மிடம் உயர்வான உணர்வுத் தரத்தைக் கோருகிறது எனும் உண்மையைப் புரிந்து கொள்ளாமையும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் உள்ள ''புதிய போக்கு'' செய்த அடிப்படையான தவறு, எனும் துணிபுக்கு நாம் வந்திருக்கிறோம். மக்களின் தன்னியல் பான எழுச்சி பெருகப் பெருக, இயக்கம் பரவப் பரவ, சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவார்த்த, அரசியல், அமைப்புத் துறைகளின் வேலையிலே மேன்மேலும் அதிகமான உணர்வுக் கான தேவையும் வேகமாக வளர்கிறது. இந்தத் தேவையின் வேகத்துக்கு நிகராக ஏதுமில்லை.

ருஷ்யாவில் மக்களின் தன்னியல்பான எழுச்சி எவ்வளவோ வேகத்துடன் கிளம்பி (தொடர்ந்து) நடந்து வந்ததிலே இளஞ் சமூக-ஜனநாயகவாதிகள் இந்த மாபெரும் பணிகளைச் செய்யும் ஆயத்தத்தில் இருக்கவில்லை என்று காட்டிக் கொண் டார்கள். இந்த ஆயத்தமின்மை நமது பொதுவான துர திர்ஷ்டமாகும், எல்லா ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் உள்ள துரதிர்ஷ்டமாகும். மக்களின் எழுச்சி இடையறுத தொடர்ச்சியிலே நடந்து பரவியது; அது தொடங்கிய இடங் களிலே தொடர்ந்தது மட்டுமல்ல, புதிய வட்டாரங்களுக் கும் புதிய மக்கட்பகுதிகளுக்கும் பரவியது (பாட்டாளிவர்க்க இயக்கத்தின் செல்வாக்கின்கீழ், மாணவ இளைஞர்கள் மத்தி யிலேயும், பொதுவாக அறிவுஜீவிகள் மத்தியிலேயும், விவசாயி மக்களிடையேயுங்கூட, புத்துயிர்கொண்ட கொந்த ளிப்பு ஏற்பட்டது). ஆனால், புரட்சியாளர்கள் இந்த எழுச் சிக்குப் பின்னடைந்துவிட்டார்கள் — தமது ''தத்துவங்களிலும்''

சரி, தமது நடவடிக்கையிலும் சரி. இயக்கம் முழுவதையும் தலைமை வகித்து நடத்திச் செல்வதற்குத் திறமுள்ள ஒரு நிரந்தரமான, தொடர்ச்சியுள்ள அமைப்பை நிலைநிறுத்தத் தவறிவிட்டார்கள்.

ரபோச்சியே தேலோ நமது தத்துவார்த்தப் பணிகளைச் சிறுமைப்படுத்தியது, ''விமர்சனச் சுதந்தரம்'' எனும் ஃபேஷனாகிவிட்ட கவர்ச்சிச் சொல்லை அது ''தன்னியல் பாகத்'' திருப்பிச் சொல்லியது என்று நாம் முதல் அத்தியாயத்தில் நிலைநாட்டினோம். சந்தர்ப்பவாத ''விமர்சகர்களின்'' நிலைகளும் ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் இருக்கும் புரட்சியாளர்களின் நிலைகளும் நேரெதிரானவை என்பதைப் புரிந்துகொள்ளும் ''உணர்வு'' இந்தக் கவர்ச்சிச் சொல்லைத் திருப்பிச்சொன்னவர்களுக்கு இல்லாது போயிற்று.

பின்வரும் அத்தியாயங்களில், இந்தத் தன்னியல்பு வழிபாடு சமூக-ஜனநாயகவாதத்தின் அரசியல் பணிகள் எனும் துறையிலும் அமைப்புத்துறை வேலையிலும் எப்படி வெளிப்பட்டது என்று காட்டுவோம்.

## III

## தொழிற்சங்கவாத அரசியலும் சமூக-ஜனநாயகவாத அரசியலும்

ரபோச்சியே தேலோவைப் புகழ்வதோடு மீண்டும் தொடங்குவோம். இஸ்க்ராவுடன் தனக்குள்ள வேற்றுமைகளைப் பற்றி மார்தீனவ் எழுதிய கட்டுரைக்கு ''அம்பலப்படுத்தும் இலக்கியமும் பாட்டாளிவர்க்கப் போராட்டமும்'' என்று தலைப்பிட்டிருந்தார்; அக்கட்டுரை ரபோச்சியே தேலோ, இதழ் 10ல் வெளியாயிற்று. வேற்றுமைகளின் பருப்பொருளைப் பின்வருமாறு அவர் வரையறுத்தார்: ''அதன் (பாட்டாளி வர்க்கக் கட்சியின்) வளர்ச்சிப் பாதைக்குக் குறுக்கே நிற்கும் அமைப்புமுறையை அம்பலப்படுத்துவதோடு மட்டும் நாங்கள் நின்றுவிடமுடியாது. பாட்டாளிவர்க்கத்தின் உடனடியான, இன்றைய நலன்களையும் பிரதிபலித்துச் செயலாற்றவேண்டும்... உண்மையிலே இஸ்க்ரா புரட்சிகரமான எதிர்ப்பின் பத்திரிகை, அது நம் நாட்டிலுள்ள நிலவரங்களை, குறிப்பாக

அரசியல் நிலவரங்களை அம்பலப்படுத்துகிறது... ஆனால் நாங்கள் பாட்டாளிவர்க்கப் போராட்டத்துடன் நெருங்கிய, உயிர்ப்புள்ள தொடர்புகொண்டு பாட்டாளிவர்க்க இலட்சியத்துக்காக வேலை செய்கிறோம், தொடர்ந்து வேலை செய்து வருவோம்'' (பக்கம் 63). இந்தச் சூத்திரத்துக்கு மார்தீனவுக்கு நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. அது சிறப்பான பொது அக்கறைக் குரியது; காரணம், ரபோச்சியே தேலோவுடன் நமக்குள்ள வேறுபாடுகளை மட்டுமின்றி அரசியல் போராட்டம் பற்றி நமக்கும் ''பொருளாதாரவாதிகளுக்கும்'' இடையேயுள்ள பொதுவான வேறுபாட்டையும் பருப்பொருளில் தழுவி நிற்கிறது. ''பொருளாதாரவாதிகள்'' ''அரசியலை'' அறவே நிராகரிக்கிறதில்லை, ஆனால் அரசியலைப்பற்றிய சமூக-ஜனநாயகவாதக் கருத்தோட்டத்திலிருந்து இடையறாது விலகி அதன் தொழிற்சங்கவாதக் கருத்தோட்டத்துக்குச் செல்கிறார்கள் என்று காட்டியிருக்கிறோம். இதே போல் மார்தீனவ் விலகிச் செல்கிறார்; எனவே, இப்பிரச்சினையில் பொருளாதாரவாதத்தின் தவறுக்கு அவரது கருத்துக்களை முன்மாதிரியாக எடுத்துக்கொள்வோம். ரபோச்சயா மிஸ்லின் ''தனி இணைமலரின்'' ஆசிரியர்களும் சரி, ''சுயவிடுதலைக் குழு'' வெளியிட்ட அறிக்கையின் ஆசிரியர்களும் சரி, இஸ்க்ரா இதழ் 12ல் வெளியிடப்பட்ட ''பொருளாதாரவாத வழிப்பட்ட'' கடிதத்தின் ஆசிரியர்களும் சரி, இந்தத் தேர்வு குறித்து குறை தெரிவிப்பதற்கு உரிமையேதும் இராது, இதை நாம் நிருபிக்க முயல்வோம்.

### அ. அரசியல் கிளர்ச்சியும் அதைப் பொருளாதாரவாதிகள் கட்டுப்படுத்துவதும்

பொருளாதார (தொழிற்சாலை சம்பந்தமான, வேலை சம்பந்தமான) நிலைமைகளை அம்பலப்படுத்தும் ''இலக்கியத்தை'' உற்பத்தி செய்வதோடுகூடவே அதே நேரத்தில் ருஷ்யத் தொழிலாளிகளின் பொருளாதாரப்* போராட்டம்

* தப்பபிப்பிராயத்தைத் தவிர்ப்பதற்காகச் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது: இங்கேயும் சரி, இக்குறுநூல் நெடுகிலும் சரி, பொருளாதாரப் போராட்டம் என்று சொல்

பரவலாக வளர்ந்து கெட்டிப்பட்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தத் ''துண்டுப் பிரசுரங்கள்'' தொழிற்சாலே அமைப்புமுறையை அம்பலப்படுத்துவதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன, அம்பலப்படுத்தல்கள்பால் ஒரு பெருவேட்கை வெகு விரைவிலே தொழிலாளிகளிடையே தூண்டிவிடப்பட்டது. தங்களுடைய துன்பகரமான வாழ்க்கை, தாங்கொணுத கடும் உழைப்பு, உரிமைகள் இல்லாமை, பற்றிய முழு உண்மையையும் சொல்கிற ஒரு புது வகையான துண்டுப்பிரசுரத்தை சமூக-ஜனநாயகவாதப் பயிற்சிக்குழுக்கள் கொடுக்க விரும்புகின்றன, அவற்ருல் கொடுக்கவும் முடியும் என்று தொழிலாளிகள் கண்டுகொண்டவுடன் தொழிற்சாலேகளிலிருந்தும் பட்டறைகளிலிருந்தும் நமக்குக் கடிதங்கள் அனுப்பத் துவங்கினர் (பொழிந்தனர் என்றே சொல்லவேண்டும்). இந்த ''அம்பலப்படுத்தும் இலக்கியம்'' மாபெரும் பரபரப்பு உண்டாக்கிவிட்டது—அந்தந்த துண்டுப் பிரசுரம் அம்பலப்படுத்திய தொழிற்சாலேயிலே மட்டுமல்ல, வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளேப் பற்றிய செய்தி பரவிய எல்லாத் தொழிற்சாலேகளிலுங்கூட. மேலும், பல்வேறு தொழிலமைப்புகளிலும் பல்வேறு தொழில்களிலும் உள்ள தொழிலாளர்களிடையே வறுமையும் இல்லாமையும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருப்பதால் ''தொழிலாளர் வாழ்க்கை பற்றிய உண்மை'' எல்லோரையும் கலக்கிவிட்டது. மிகவும் பிற்பட்ட தொழிலாளிகளிடையேகூட ''அச்சில் பார்த்துக்கொள்வதற்கான'' பெரு வேட்கை எழுந்தது—கொள்ளேயையும் ஒடுக்குமுறையையும் அடிப்படையாகக் கொண்டுள்ள தற்கால சமுதாய அமைப்புமுறை முழுவதையும் எதிர்க்கும் இந்தக் கருநிலேயிலுள்ள போர் மீது மேன்மையான

---

லும்போது (நம்மிடையே ஏற்கப்பட்டுள்ள வழக்காற்றில் உள்ளபடி) ''நடைமுறை வழிப்பட்ட பொருளாதாரப் போராட்டத்தை'' நாம் குறிப்பிடுகிருேம்; மேலே மேற்கோள் காட்டப்பெற்ற பகுதியில் இதை ''முதலாளிகளுக்கு எதிர்ப்பு'' என்று எங்கெல்ஸ் வர்ணித்தார்; சுதந்தர நாடுகளில் இது தொழில்வாரியாக ஒழுங்கமைக்கப் பெற்ற தொழிலாளர்களின் போராட்டம், அல்லது சிண்டிகேட்டு வழிப்பட்ட போராட்டம், அல்லது தொழிற்சங்கப் போராட்டம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

பெரு வேட்கை எழுந்தது. மேலும், இந்தத் ''துண்டுப் பிரசுரங்களில்'' மிகப் பெரும்பான்மையானவை உண்மையிலே ஒரு போர்ப் பிரகடனமாக இருந்தன; காரணம், அவை தொழிலாளர்களைக் கிளர்ந்தெழச் செய்யப் பெரிதும் உதவின, மிகவும் வெளிப்படையான அட்டூழியங்களை அகற்றுவதற்குப் பொதுவான கோரிக்கைகளை அவர்களிடையே கிளப்பிவிட்டன, அக்கோரிக்கைகளை ஆதரித்து வேலைநிறுத்தங்கள் செய்யத் தயாராகும்படியும் ஊக்கிவிட்டன. கடைசியாக, போர்ப் பிரகடனம் என்கிற வகையில் இந்தத் துண்டுப்பிரசுரங்களின் குறிபொருளை முதலாளிகளும் அங்கீகரிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர், மிகப் பல வழக்குகளில் போர் துவங்குவதற்குக்கூட அவர்கள் காத்திருக்கவில்லை. எப்பொழுதும் போலவே, இந்த அம்பலப்படுத்தல்களை வெறுமே பிரசுரித்ததிலேயே அவை பயன் விளைக்கக்கூடியவையாயின, ஒரு பலமான தார்மீகச் செல்வாக்கைக் குறிப்பவையாயின. பல சந்தர்ப்பங்களில், ஒரு துண்டுப்பிரசுரம் வெளிவந்தாலே போதும், முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எல்லாமோ ஒரு பகுதியோ கிடைத்துவிடக்கூடிய நிலைமை இருந்தது. சுருங்கச் சொன்னால், பொருளாதார (தொழிற்சாலை சம்பந்தப்பட்ட) அம்பலப்படுத்தல்கள் பொருளாதாரப் போராட்டத்தில் ஒரு முக்கியமான நெம்புகோலாக இருந்தன, இருந்து வரும். தொழிலாளிகள் தங்களைத் தற்காத்துக்கொள்வதை அவசியமாக்கும் முதலாளித்துவம் நீடித்திருக்கும் வரை அவற்றின் குறிபொருள் இருந்துகொண்டேயிருக்கும். ஐரோப்பாவின் மிக முன்னேறிய நாடுகளில்கூட இன்னமும் பார்க்க முடியும், ஏதாவதொரு பிற்பட்ட தொழிலிலோ, மறந்துபோன வீட்டுத் தொழிற்கிளையிலோ உள்ள கேடுகளை அம்பலப்படுத்துவது வர்க்க உணர்வு விழித்தெழுவதற்குத் தொடக்கமாகவும், தொழிற்சங்கப் போராட்டத்துக்குத் தொடக்கமாகவும், சோஷலிஸம் பரவுவதற்குத் தொடக்கமாகவும் பயன்படுகிறது.*

---

* இந்த அத்தியாயத்தில் அரசியல் போராட்டத்தைப் பற்றி மட்டுமே—அதன் விரிவான அல்லது குறுகிய பொருளில்—எடுத்துக் கவனிக்கிறோம். எனவே, பொருளாதாரப் போராட்ட விஷயத்தில் இஸ்க்ரா ''மிகவும் அடக்கிப் பேசு

தொழிற்சாலை நிலைமைகளை அம்பலப்படுத்துவதை முறையாகத் திரட்டிச் செய்யும் வேலையில் மிகப் பெரும்பான்மையான சமூக-ஜனநாயகவாதிகள் அண்மைக் காலத்தில் அநேகமாகத் தங்கள் கவனம் முழுவதையும் செலுத்திவருகிறார்கள். ரபோச்சயா மிஸ்லை நினைவுபடுத்தினாலே போதும், எந்த அளவுக்கு அதில் மூழ்கிப்போயிருக்கிறார்கள் என்று பார்க்கலாம்—சாராம்சத்தில் இது, தன்னளவில் பார்க்கும்போது, வெறுமே தொழிற்சங்க வேலையே தவிர சமூக-ஜனநாயகவாத வேலை அல்ல என்கிற உண்மையைப் பார்க்கத் தவறிய அளவுக்கு மூழ்கிப்போயிருக்கிறார்கள். உண்மையாகப் பார்த்தால், ஒரு குறிப்பிட்ட தொழிலில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயுள்ள உறவுகளை மட்டுமே இந்த அம்பலப்படுத்தல்கள் எடுத்துக் கவனித்தன; மேலும், அவை சாதித்ததனைத்தும் இதுதான்—அதாவது, உழைப்புச் சக்தியை விற்பவர்கள் மேலான விலைக்குத் தங்களுடைய "பண்டத்தை" விற்கக் கற்றுக்கொண்டார்கள், முற்றிலும்

---

கிறது" (இரண்டு மாநாடுகள், பக்கம் 27) எனும் ரபோச்சியே தேலோவின் குற்றஞ்சாட்டை ஒரு விந்தைப் பொருளாகப் போகிற போக்கிலே குறிக்கிறோம் (இதையே மார்தீனவ் தமது சமூக-ஜனநாயகவாதமும் பாட்டாளி வர்க்கமும் எனும் குறுநூலில் மென்று மென்றுச் சொல்கிறார்). இஸ்க்ராவின் தொழில் அரங்கப் பகுதியில் பொருளாதாரப் போராட்டத்தைப்பற்றி எந்தவொரு ஆண்டிலேனும் நடத்திய விவாதத்தை ரபோச்சியே தேலோ ரபோச்சயா மிஸ்ல் ஆகிய இரண்டும் சேர்ந்து நடத்தியதோடு இராத்தல் கணக்கிலோ ரீம் கணக்கிலோ மதிப்பிட்டால் (இவ்வாறு செய்வதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம்) அந்த அம்சத்திலுங்கூட அவை பின்னடைந்திருப்பதை இந்தக் குற்றஞ்சாட்டுவோர் எளிதில் காணலாம். இந்த எளிய உண்மையை அவர்கள் உணர்ந்திருப்பதினால்தான் அவர்களின் குழப்பத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் வாதங்களிலே இறங்குகிறார்கள் போலும். "இஸ்க்ரா விரும்பியோ விரும்பாமலோ (!) வாழ்க்கையின் அத்தியாவசியக் கோரிக்கைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது (!), பாட்டாளி வர்க்க இயக்கத்தைப்பற்றிக் குறைந்தபட்சம் (!!) கடிதப்போக்குவரத்தையாவது பிரசுரிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது" (இரண்டு மாநாடுகள், பக்கம் 27) என்று எழுதுகிறார்கள். ஆஹா, ஆளையே வீழ்த்தும் வாதமல்லவா இது!

வர்த்தக முறையிலான பேரத்தில் வாங்குவோருடன் போராடக் கற்றுக்கொண்டார்கள். இந்த அம்பலப்படுத்தல்கள் (புரட்சியாளர்களின் அமைப்பால் முறையாகப் பயன்படுத்தப் பட்டிருந்தால்) சமூக-ஜனநாயகவாத நடவடிக்கைக்குத் தொடக்கமாகவும் அதன் இணைக்கூறுகவும் பயன்பட்டிருக்க முடியும். ஆனால், அவை ''முற்றும் தொழிற்சங்க வழிப்பட்ட'' போராட்டத்துக்கும் சமூக-ஜனநாயகவாத வழிப்படாத பாட்டாளிவர்க்க இயக்கத்துக்கும் கொண்டுபோய் விடமுடியும், (தன்னியல்பை வழிபடும் கண்ணேட்டம் இருக்குமேயானல் நிச்சயமாகக் ,கொண்டுபோய்விடும்). உழைப்புச் சக்தியை மேலான விலைக்கு விற்பதற்காக மட்டுமின்றி, சொத்துடைமையற்றவர்கள் தங்களைப் பணக்காரர்களுக்கு விற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிற சமுதாய அமைப்பு முறையை ஒழிப்பதற்காகவும் சமூக-ஜனநாயகவாதம் பாட்டாளிவர்க்கப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்துகிறது. குறிப்பிட்ட முதலாளிகளின் ஒரு குழுவோடு தொழிலாளிவர்க்கத்துக்குள்ள உறவு விஷயத்தில் மட்டுமின்றி, தற்கால சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களோடும் அமைப்புத்திரட்சியுள்ள அரசியல் சக்தியான அரசோடும் அதற்குள்ள உறவு விஷயத்திலும் சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளிவர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். ஆகவே இதிலிருந்து தொடர்வது: சமூக-ஜனநாயகவாதிகள் பொருளாதாரப் போராட்டத்தை நடத்துவதோடு நின்றுவிடக்கூடாது என்பது மட்டுமல்ல, பொருளாதார அம்பலப்படுத்தல்களை முறையாகத்திரட்டிச் செய்வது அவர்களின் நடவடிக்கையின் மிகப்பெரும்பகுதியாகிவிட அனுமதிக்கக் கூடாது. நாம் பாட்டாளிவர்க்கத்திற்கு அரசியல் கல்வி அளிப்பதையும் அவ்வர்க்கத்தின் அரசியல் உணர்வை வளர்ப்பதையும் தீவிரமாகச் செய்யவேண்டும். ''பொருளாதாரவாதத்தை'' எதிர்த்து ஸார்யாவும் இஸ்க்ராவும் முதல் தாக்கு நடத்தியிருக்கிறதால் இப்போது இவ்விஷயத்தில் ''எல்லோரும் ஒருமனப்பட்டிருக்கிறார்கள்'' (சிலர் சொல்லளவிலே தான் ஒப்புக்கொள்கிறார்கள், இதை விரைவிலே பார்க்கப் போகிறோம்).

அரசியல் கல்வியில் என்ன இருக்கவேண்டும் எனும் கேள்வி எழுகிறது. எதேச்சாதிகார ஆட்சிமுறையைப் பாட்

டாளிவர்க்கம் பகைக்க வேண்டும் எனும் பிரச்சாரத்துடன் அதை நிறுத்திக் கொள்ளமுடியுமா? நிச்சயமாக முடியாது. அரசியல் வகையிலே தாங்கள் ஒடுக்கப்படுவதாகத் தொழிலாளிகளுக்கு விளக்கினல் மட்டும் போதாது (முதலாளிகளின் நலன்களோடு தங்கள் நலன்கள் பகைமையுள்ளவை என்று அவர்களுக்கு விளக்கினல் மட்டும் போதாதல்லவா, அது போல). இந்த ஒடுக்குமுறையின் ஒவ்வொரு ஸ்தூலமான எடுத்துக்காட்டு சம்பந்தமாகவும் கிளர்ச்சி நடத்தப்பட வேண்டும் (பொருளாதார ஒடுக்குமுறையின் ஸ்தூலமான எடுத்துக்காட்டுகள் விஷயத்தில் நாம் கிளர்ச்சி நடத்தத் துவங்கியிருக்கிறது போல). இந்த ஒடுக்குமுறை சமுதாயத்தின் மிகவும் வேறுபட்ட வர்க்கங்களைப் பாதிக்கிறதாலும், மிகவும் வேறுபட்டுள்ள வாழ்க்கை, நடவடிக்கைத் துறைகளிலும்—தொழில், குடிவாழ்வு, தனிவாழ்க்கை, குடும்பம், மதம், விஞ்ஞானம் முதலான துறைகளிலும்—வெளிப்படுத்திக்கொள்கிறதாலும், எதேச்சாதிகாரத்தை எல்லா அம்சங்களிலும் அரசியல் வகையிலே அம்பலப்படுத்துவதை முறையாகத் திரட்டிச்செய்யும் வேலையை நாம் மேற்கொள்ளாவிட்டால் தொழிலாளிகளின் அரசியல் உணர்வை வளர்க்கும் பணியை நாம் நிறைவேற்றுகிறவர்களாக மாட்டோம் என்பது தெளிவாகவில்லையா? ஒடுக்குமுறையின் ஸ்தூலமான எடுத்துக்காட்டுகளை வைத்துக் கிளர்ச்சி நடத்துவதற்கு இந்த எடுத்துக்காட்டுகளை அம்பலப்படுத்தித்தீரவேண்டும் (பொருளாதாரக் கிளர்ச்சியை நடத்துவதற்குத் தொழிற்சாலைக் கேடுகளை அம்பலப்படுத்துவது அவசியமாயிருப்பது போல).

இது மிகத் தெளிவானது என்றே யாரும் நினைக்கக் கூடும். என்றபோதிலும், அரசியல் உணர்வை அதன் எல்லா அம்சங்களிலும் வளர்ப்பதின் தேவையை ''எல்லோரும்'' ஒப்புக்கொள்ளுகிருர்கள் என்பது சொல்லளவிலேதான் என்று தெரிகிறது. எடுத்துக்காட்டாக, ரபோச்சியே தேலோ முழுவிரிவான அரசியல் அம்பலப்படுத்தல்களை முறையாகத் திரட்டிச் செய்வதற்குப் (அல்லது, செய்யத் தொடங்குவதற்குப்) பதிலாக இந்தப் பணியை மேற்கொண்டிருக்கும் இஸ்க்ராவை அதிலிருந்து பின்னுக்கு இழுத்துவிட முயல்கிறது என்று தெரிகிறது. இதைக் கேளுங்கள்: ''பாட்டாளி வர்க்கத்தின்

போராட்டம் என்பது வெறுமே (''வெறுமே'' அல்ல என்பது உறுதி) மிகவும் வளர்ச்சிபெற்ற, விரிவான, பயன்திறமுள்ள பொருளாதாரப் போராட்ட வடிவமாகும்'' (ரபோச்சியே தேலோவின் வேலைத்திட்டம், இதழ் 1ல் வெளியிட்டது, பக்கம் 3). ''இப்பொழுது சமூக-ஜனநாயகவாதிகள் முன்னே இருக்கும் பணி, பொருளாதாரப் போராட்டத்துக்கே முடிந்தவரை அரசியல் தன்மை கொடுப்பதாகும்'' (மார்தீனவ், ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம் 42). ''தீவிரமான அரசியல் போராட்டங்களில் மக்களை ஈடுபடுத்துவதற்கு மிகவும் விரிவான செயல்பாட்டுத் திறமுள்ள சாதனம் பொருளாதாரப் போராட்டமே'' (வெளிநாட்டுச் சங்கத்தின்[66] மாநாடு நிறைவேற்றிய தீர்மானமும் அதற்குரிய ''திருத்தங்களும்'', இரண்டு மாநாடுகள், பக்கங்கள் 11,17). ரபோச்சியே தேலோவின் முதல் இதழ் முதல் கடைசியாக வந்துள்ள ''ஆசிரியர்களுக்குக் கட்டளைகள்'' ஈறுக அப்பத்திரிகை முழுவதையும் இந்த ஆய்வுரைகள் ஊடுருவி நிறைத்துக் கொண்டிருப்பதை வாசகர் காணலாம்; அவையனைத்தும் அரசியல் கிளர்ச்சி, போராட்டம் சம்பந்தமாக ஒரேயொரு கருத்து வெளியிடுகின்றன என்பது தெளிவு. அரசியல் கிளர்ச்சி பொருளாதாரக் கிளர்ச்சியைப் பின்தொடர்ந்து வர வேண்டும் என்று எல்லாப் ''பொருளாதாரவாதிகளிடையேயும்'' நிலவும் கருத்துநிலையிலிருந்து இக்கருத்தைப் பரிசீலிப்போம். பொதுவாகவே*, அரசியல் போராட்டங்களில்

---

* ''பொதுவாகவே'' என்று நாம் சொல்லக் காரணம், ரபோச்சியே தேலோ பொதுவான கோட்பாடுகள் பற்றியும் கட்சிமுழுவதின் பொதுவான பணிகள் பற்றியும் பேசுகிறது. பொருளாதாரத்தை அரசியல் பின்தொடர்ந்து தீரவேண்டிய வழக்குகள் நடைமுறையில் நிகழத்தான் செய்கின்றன, சந்தேகமில்லை. ஆனல் ருஷ்யா முழுவதற்கும் பொருத்திச் செயல்படுத்தும் நோக்கங்கொண்ட ஒரு தீர்மானத்தில் ''பொருளாதாரவாதிகள்'' மட்டுந்தான் இதைப் பற்றிப் பேச முடியும். ''முற்றிலும் பொருளாதார அடிப்படையிலே'' அரசியல் போராட்டத்தைத் ''துவக்கத்திலிருந்தே'' நடத்திச் செல்லச் சாத்தியமாயிருக்கிற வழக்குகள் நிகழத்தான் செய்கின்றன. அப்படியிருந்தும் கடைசியிலே ''இதற்குத் தேவையே கிடையாது'' எனும் முடிவுக்கு ரபோச்சியே தேலோ வந்தது (இரண்டு மாநாடுகள், பக்கம் 11).

மக்களை ஈடுபடுத்துவதற்கு ''மிகவும் விரிவான செயல்பாட்டுத் திறமுள்ள சாதனம்'' பொருளாதாரப் போராட்டந்தான் என்பது உண்மையா? அது முழுக்க முழுக்கப் பொய். பொருளாதாரப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் எந்த ஒரு போலீஸ் கொடுங்கோன்மைச் செயலும் எதேச்சாதிகார அட்டூழியமும் மக்களை ''ஈடுபடுத்துவதற்கு'' எவ்வகையிலும் குறைந்த ''விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள'' சாதனமல்ல. கிராம மேலாணையாளர்கள்[67] விவசாயிகளைச் சவுக்கால் அடித்தல், அதிகாரிகளின் இலஞ்ச ஊழல்கள், நகரப்புறத்துப் ''பொது மக்களை'' போலீஸ் நடத்தும் முறை, பஞ்சத்தால் பீடிக்கப்பட்டவர்களைத் தாக்குவது, ஞானமும் அறிவும் பெற மக்கள் எடுக்கும் முயற்சியை நசுக்குவது, வரி போட்டுப் பணம் பிடுங்குவது, மதப் பிரிவினரை அடக்கித் துன்புறுத்துவது, பட்டாளச் சிப்பாய்களை மானக்குறைவாக நடத்துவது, மாணவர்களையும் மிதவாத அறிவுஜீவிகளையும் இராணுவ விடுதி வழிமுறைகளைக்கொண்டு நடத்துவது—இவையும் இவைபோன்ற எத்தனையோ கொடுங்கோல் செயல்களும் நேரடியாக ''பொருளாதாரப்'' போராட்டத்துடன் சம்பந்தப்பட்டிராவிட்டாலும், பொதுவாக, அரசியல் கிளர்ச்சிக்கும் மக்களை அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கும் ''விரிவான செயற்பாட்டுத் திறமுள்ள'' சாதனங்களாகவும் சந்தர்ப்பங்களாகவும் இருப்பதில் குறைவானவையா? உண்மை இதற்கு நேர்மாறானது. கொடுங்கோன்மை, வன்முறை, உரிமையில்லாமை ஆகியவற்றால் தொழிலாளிகள் (சொந்தத்திலோ உற்றார் உறவினர் சார்பிலோ) துன்பப்படுகிற மொத்த வழக்குகளில் ஒரு சிறுபான்மைதான் தொழிற்சங்கப் போராட்டத்தில் காணும் போலீஸ் கொடுங்கோன்மையைக் குறிக்கிறது. எனவே, ஒன்றை மட்டும் ''மிக விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள'' சாதனம் என்று சொல்லி முன்கூட்டியே அரசியல் போராட்டத்தின்

---

''அரசியல்வாதிகளின்'' புரட்சியாளர்களின் போர்த்தந்திரம் சமூக-ஜனநாயகவாதத்தின் தொழிற்சங்கப் பணிகளைப் புறக்கணிக்கிறதில்லை என்பது மட்டுமல்ல, மாறாக அந்தப் போர்த் தந்திரம் மட்டுமே அப்பணிகளை முரணின்றி நிறைவேற்றுவதைச் சாதிக்கமுடியும் என்றும் அடுத்த அத்தியாயத்தில் காட்டுவோம்.

செயல் பரப்பை ஏன் குறுக்கிக்கட்டுப்படுத்த வேண்டும்—அதிலும், பொதுவாக, எவ்வகையிலும் குறைவற்ற ''விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள'' சாதனங்கள் சமூக-ஜனநாயகவாதிகளுக்குக் கூடுதலாக இருந்துதீரவேண்டியிருக்கிற பொழுது?

மிகப் பழங்காலத்திலே(முழுவதாக ஓராண்டுக்கு முன்!..) ரபோச்சியே தேலோ எழுதியதாவது: ''ஒரு வேலைநிறுத்தத்துக்குப் பின், அல்லது எப்படிப்போனாலும் பல வேலைநிறுத்தங்களுக்குப் பிறகாவது உடனடியான அரசியல் கோரிக்கைகளை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்குகிறார்கள்'', ''அவர்களுக்கு எதிராக அரசாங்கம் போலீஸையும் உளவுப் படைகளையும் ஏவியவுடன்'' (ஆகஸ்ட் 1900, இதழ் 7, பக்கம் 15) என்று. கட்டங்கள் பற்றிய இந்தச் சந்தர்ப்பவாதத் தத்துவத்தை வெளிநாட்டுச் சங்கம் இப்போது நிராகரித்துவிட்டு ''முற்றும் பொருளாதார அடிப்படையிலே துவக்கத்திலிருந்தே அரசியல் கிளர்ச்சி நடத்தவேண்டிய தேவை எதுவும் கிடையாது'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 11) என்று கூறி நமக்குச் சலுகை தருகிறது. நமது ''பொருளாதாரவாதிகள்'' சோஷலிஸத்தை எவ்வளவு ஆழத்துக்குத் தாழ்த்தியுள்ளனர் என்பதை எத்தனையோ நீண்ட வாதங்களை விட மேலாக இச்சங்கம் தனது முந்தைய தவறுகளில் ஒரு பகுதியை நிராகரித்திருப்பது ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் எதிர்கால வரலாற்றாசிரியருக்குப் புலப்படுத்தும். ஆனால், அரசியலைக் குறுக்கிக்கட்டுப்படுத்தும் ஒரு வடிவத்தைக் கைவிடுவதின் வழியாக நம்மை இன்னொரு வடிவத்துக்கு இணங்கச் செய்யலாம் என்று இந்த வெளிநாட்டுச் சங்கம் நினைப்பதற்கு உண்மையிலே மிகவும் வெகுளியாக இருந்தாக வேண்டும்! இவ்வழக்கிலும் கூட, பொருளாதாரப் போராட்டத்தை மிக விரிவான அடிப்படையில் நடத்தவேண்டும், அதை எப்போதும் அரசியல் கிளர்ச்சிக்குப் பயன்படுத்திவரவேண்டும், ஆனால் தீவிரமாக அரசியல் போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்துவதற்குப் பொருளாதாரப் போராட்டத்தை மிகவும் விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள சாதனமாகக் கருதவேண்டிய ''தேவை எதுவும் கிடையாது'' என்று சொல்வது தானே மேலும் தர்க்கபூர்வமாக இருக்கும்?

யூதர் இனத் தொழிலாளர் சங்கத்தின் (புந்த்—Bund)[68]

நான்காம் காங்கிரஸின் தீர்மானங்களில் ஒன்றில் ''தலைசிறந்த சாதனம்'' என்றிருக்கும் சொற்றொடருக்குப் பதிலாக ''மிக வும் விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள சாதனம்'' எனும் சொற்றொடரைத் தாங்கள் போட்டிருப்பதற்கு வெளிநாட்டுச் சங்கம் குறிபொருள் கற்பிக்கிறது. இத்தீர்மானங்களில் எது மேல் என்று சொல்வது கஷ்டம் என்று ஒப்புக்கொள்கி றோம். நம் கருத்தில் இரண்டுமே மோசம். அரசியலுக்குப் பொருளாதார வகைப்பட்ட, தொழிற்சங்க வகைப்பட்ட வியாக்கியானம் தரும் தவற்றை வெளிநாட்டுச் சங்கமும் புந்தும் செய்கின்றன (ஒருக்கால், தன்னையறியாமல், மரபின் செல்வாக்குக்குட்பட்டு, செய்கிறதாக ஓரளவுக்கு இருக்க லாம்). ''தலைசிறந்த'' என்கிற சொல்லையோ ''மிக விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள'' என்கிற சொற்களையோ போட்டுத் தவறு செய்வதில் முக்கியமான வேற்றுமை ஏதுமில்லை. ''பொருளாதார அடிப்படையிலுள்ள அரசியல் கிளர்ச்சி'' மிகவும் விரிவாகச் செயற்படுத்தப்படுகிற (''செயற்பாட் டுத்திறமுள்ள'' என்றல்ல) சாதனம் என்று வெளிநாட்டுச் சங்கம் சொல்லியிருந்தால் நமது சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி விஷயத்தில் அது சரியாக இருந்திருக்கும். ''பொருளாதாரவாதிகள்'' விஷ யத்திலும், 1898-1901 காலத்திய (பெரும்பான்மையினராக இல்லாமற்போனாலும்) பல நடைமுறைப்பணியாற்றும் ஊழி யர்கள் விஷயத்திலும் அது சரியாக இருந்திருக்கும். காரணம், இந்த நடைமுறைப் போக்கான ''பொருளாதாரவாதிகள்'' அநேகமாக முழுமையாக பொருளாதார அடிப்படையிலேயே அரசியல் கிளர்ச்சியைச் செயற்படுத்தினர் (அதாவது, அவர் கள் செயற்படுத்திய அளவுக்கு). ரபோச்சயா மிஸ்லும் ''சுயவிடுதலைக் குழுவும்'' இந்த அடிப்படையில் நடத்தப் படும் அரசியல் கிளர்ச்சியை அங்கீகரித்தன, மற்றும் சிபார்சு செய்ததையும் நாம் பார்த்தோம். பொருளாதாரக் கிளர்ச்சி எனும் பயனுள்ள வேலையோடு கூடவே அரசியல் போராட் டத்தைத் தீங்காகக் குறுக்கிக்கட்டுப்படுத்துவது தொடர் கிறதை ரபோச்சியே தேலோ வன்மையாகக் கண்டித்திருக்க வேண்டும்; மாறாக, (''பொருளாதாரவாதிகளால்'') மிக விரிவாகச் செயலாக்கப்படுகிற சாதனத்தை மிக விரிவான செயற்பாட்டுத் திறமுள்ள சாதனமாகப் பிரகடனப்படுத்து

கிறது! இந்த ஆசாமிகளை ''பொருளாதாரவாதிகள்'' என்று நாம் அழைத்தால் நம்மீது வாய்க்கு வந்தபடி வசைமாரி பொழிகிறதைத் தவிர அவர்களால் வேறொன்றும் செய்ய முடியவில்லை என்பதில் வியப்பில்லை; ''குழப்புகிறவர்கள்'', ''பிளவுபடுத்துகிறவர்கள்'', ''போப்பாண்டவரின் பிரதிநிதிகள்'', ''அவதூறுசெய்கிறவர்கள்''* என்று நம்மை அழைக்கிறார்கள்; அவர்களுக்குத் தீராத தீங்கு இழைத்துவிட்டதாக உலகின்முன் முறையிடுகிறார்கள்; ''சமூக-ஜனநாயகவாத அமைப்பு ஒன்றுகூட இப்போது 'பொருளாதாரவாதத்தின்' சாயல் பட்டதாயில்லை'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 32) என்று சத்தியம் பண்ணுவதுபோல் கூறுகிறார்கள். அடடா, என்ன கெட்ட, அவதூறுசெய்கிற அரசியல்வாதிகள்! மனித குலத்தின் மீதுள்ள பச்சைப் பகைமையால், மற்றவர்களுக்குத் தீராத தீங்கு செய்யும் நோக்குடன் அவர்கள் வேண்டுமென்றே இந்தப் ''பொருளாதாரவாதத்தைப்'' புனைந்திருக்கவேண்டும்.

''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்கவேண்டும்'' எனும் பணியை சமூக-ஜனநாயகவாதிகளுக்கு வைக்கும் மார்தீனவின் சொற்களுடைய ஸ்தூலமான, உண்மையான பொருள் என்ன? தொழிலாளிகள் தமது உழைப்புச் சக்தியை மேலான விலைக்கு விற்பதற்கும், மேலான வாழ்க்கை நிலைமைகளுக்கும் வேலை நிலைமைகளுக்கும் தமது முதலாளிகளை எதிர்த்துக் கூட்டாகப் போராடுவதே பொருளாதாரப் போராட்டம். இது அவசியமாகவே தொழிற்சங்கப் போராட்டமாக இருக்கிறது; காரணம், வெவ்வேறு தொழில்களில் வேலை நிலைமைகள் பெரிதும் வேறுபட்டுள்ளன, எனவே அந்த வேலைநிலைமைகளை மேம்படுத்துவதற்கான போராட்டம் தொழில் அமைப்புகள் (மேலைய நாடுகளில் தொழிற்சங்கங்கள் மூலமாக; ருஷ்யாவில் தற்காலிகமான தொழில் தொடர்பகங்கள், துண்டுப்பிரசுரங்கள் முதலியவை மூலமாக) அடிப்படையில் மட்டுமே நடத்தப்பட முடியும். ஆகவே, ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பது'' என்பதற்குப் பொருள்,

---

* இதே சொற்கள்தாம் இரண்டு மாநாடுகள், பக்கங்கள் 31, 32, 28, 30ல் பயன்படுத்தப்பட்டுள்ளன.

''சட்ட நடவடிக்கைகள், அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் வழியாக'' (மார்தீனவ் தமது கட்டுரையின் பக்கம் 43ல் இப்படித்தான் சொல்கிறுர்) இந்தத் தொழில் கோரிக்கைகளேயும், ஒவ்வொரு தனித்தனி தொழிலிலும் உள்ள வேலே நிலேமைகளே மேம்படுத்திக் கொள்வதையும் சாதிக்க முயல்வது என்பதே. இதைத்தான் தொழிலாளிகளின் எல்லாத் தொழிற்சங்கங்களும் செய்கின்றன, எப்போதும் செய்துவந்துள்ளன. நேர்த்தியான விஞ்ஞான வழிப்பட்ட (''நேர்த்தியான'' சந்தர்ப்பவாதமுள்ள) வெப் தம்பதிகளின் நூல்களேப் படித்துப் பாருங்கள், ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்கும்'' பணியை வெகு காலத்துக்கு முன்பே பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் அங்கீகரித்து நிறைவேற்றிவருவதைத் தெரிந்துகொள்வீர்கள்; வேலேநிறுத்தம் செய்வதற்கு உரிமை, கூட்டுறவு இயக்கத்துக்கும் தொழிற்சங்க இயக்கத்துக்கும் உள்ள சட்டத் தடங்கல்களே நீக்குவது, மாதர்கள் குழந்தைகள் பாதுகாப்புக்குரிய சட்டங்கள், சுகாதாரச் சட்டங்கள் தொழிற்சாலேச் சட்டங்கள் மூலமாக வேலே நிலேமைகளே மேம்படுத்துவது, முதலானவற்றிற்காக அவர்கள் நீண்ட காலமாகப் போராடிவருகிறுர்கள்.

எனவே, ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பது'' எனும் பகட்டான சொற்றெடர் கேட்பதற்கு ''எவ்வளவோ'' ஆழமுள்ளதாயும் புரட்சிகரமானதாயும் தொனித்தாலுங்கூட சமூக-ஜனநாயகவாத அரசியலேத் தொழிற்சங்கவாத அரசியலின் தரத்துக்குத் தாழ்த்தும் சம்பிரதாயப் பணியாக உண்மையிலே இருக்கிற விஷயத்தை மூடிமறைக்கத் திரையாகப் பயன்படுகிறது. ''வாழ்க்கையைப் புரட்சிமயமாக்குவதற்கு மேலாக சூத்திரத்தைப் புரட்சிமயமாக்குவதை''* இஸ்க்ரா வைக்கிறது

* ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம் 60. ''ஒரு டஜன் வேலேத்திட்டங்களே விட உண்மையான இயக்கத்தின் ஒவ்வொரு படி மேலான முக்கியமுள்ளது'' எனும் ஆய்வுரையை நம் இயக்கத்தின் இன்றையக் குழப்பமான நிலேக்குப் பொருத்திச் செயல்படுத்துவதின் மார்தீனவ் மாற்றுருவம் இது. இதை மேலே பண்புரை செய்திருக்கிறேம். உண்மையிலே பார்த்தால், ''இயக்கமே எல்லாம், இறுதி இலட்சியம் வெறும் சுன்னம்'' என்கிற பழிகேடான பெர்ன்ஷ்டைன் வாக்கியத்தின் ருஷ்ய மொழிபெயர்ப்புத் தவிர வேறில்லே இது.

என்று சொல்லி, இஸ்க்ராவின் ஒருசார்புத்தன்மையை நேர் செய்யப் போவதாக வேஷம் போட்டு, பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை ஏதோ முற்றும் புதிதான ஒன்ருக முன்வைக்கிருர்கள். விஷயம் என்னவென்ருல், ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பது'' எனும் சொற்ருெடருக்குப் பொருள் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான போராட்டம் என்பது தவிர வேருென்றுமில்லே. தமது சொந்த வார்த்தைகளின் குறிபொருளேப் பற்றி மார்தீனவ் ஆழச்சிந்தித்திருந்தால் இந்த எளிய முடிவுக்கு அவரே வந்திருக்கக்கூடும். இஸ்க்ரா மீது தமது பீரங்கிகளே திருப்பிக் குறிபார்த்தவாறு அவர் கூறுவதாவது: ''பொருளாதாரச் சுரண்டல், வேலேயில்லாமை, பஞ்சம் முதலியவற்றிற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்க நிர்வாக நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்கத்திடம் நம் கட்சி ஸ்தூலமான கோரிக்கைகள் வைத்திருக்க முடியும், வைத்திருக்க வேண்டும்'' (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கங்கள் 42-43) என்று. நடவடிக்கைகளுக்கான ஸ்தூலமான கோரிக்கைகள்—இதற்குப் பொருள் சமுதாயச் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகள் என்பது தானே? பாரபட்சமற்ற வாசகரை மீண்டும் கேட்கிருேம்: அவர்கள் இஸ்க்ராவுடன் தங்களுக்குள்ள வேறுபாடான அம்சமாகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதின் அவசியம் பற்றிய தமது ஆய்வுரையை வைக்கிற நேரத்தில் நாம் அவர்களே மறைவான பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்கள் என்று அழைப்பது ரபோச்சியே தேலோவாதிகளே (தற்சமயம் பயன்படுத்தப்பட்டுவரும் இந்த அலங்கோலமான பெயருக்காக மன்னிப்புக் கோருகிறேன்!) அவதூறு செய்வதாகுமா?

புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதம் எப்பொழுதுமே சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தைத் தனது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகக் கொண்டிருக்கிறது. ஆனல் எல்லா வித நடவடிக்கைகள் பற்றிய கோரிக்கைகளே அரசாங்கத்திடம் வைப்பதோடு மட்டுமல்லாமல் எதேச்சாதிகார அரசாங்கமாக இருக்கக் கூடாது என்கிற (முதன்மையான) கோரிக்கையையும் வைப்பதற்கு அது ''பொருளாதாரக்'' கிளர்ச்சியைப் பயன்படுத்துகிறது. மேலும், பொருளாதாரப்

போராட்டத்தின் அடிப்படையில் மட்டுமல்லாமல், பொது வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் பொதுவாக உள்ள எல்லா வெளிப்பாடுகளின் அடிப்படையிலேதான் இக்கோரிக்கையை அரசாங்கத்திடம் வைப்பது தன் கடமை என்று அது கருதுகிறது. சுருங்கச் சொன்னுல், பகுதியை முழுமைக்குக் கீழ்ப்படுத்துவதுபோல், அது சீர்திருத்தங்களுக் கான போராட்டத்தை விடுதலைக்காகவும் சோஷலிஸத்துக் காகவும் நடக்கும் புரட்சிகரமான போராட்டத்துக்குக் கீழ்ப்படுத்துகிறது. ஆனுல் மார்தீனவ் கட்டங்கள் பற்றிய தத்துவத்தை ஒரு புதிய வடிவில் மறுபடியும் உயிர்ப்பித்து, அரசியல் போராட்டத்துக்கு முற்றிலும் பொருளாதார வகைப்பட்ட வளர்ச்சிப் பாதையை உத்தரவிட முயல்கிருர். புரட்சி இயக்கம் ஏறுமுகமாயிருக்கும் இத்தருணத்தில் சீர் திருத்தங்களுக்காகப் போராடும் ஒரு தனிப் ''பணி'' என்று சொல்லப்பட்ட பணியை முன்வைப்பதின் வழியே அவர் கட்சியைப் பின்னுக்கு இழுத்துச் செல்கிருர், ஒருங்கே ''பொருளாதாரவாத'' சந்தர்ப்பவாதத்துக்கும் மிதவாத சந்தர்ப்பவாதத்துக்கும் அனுகூலமாகச் செயலாற்றுகிருர்.

மேலே போவோம். ''பொருளாதாரப் போராட்டத் துக்கே அரசியல் தன்மை கொடுப்பது'' எனும் பகட்டான ஆய்வுரையின்பின் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை வெட்கத்துடன் ஒளித்துவைத்து, ஏதோ தனியொரு அம்சம் போல முற்றும் பொருளாதார வகைப்பட்ட சீர்திருத்தங்களை (உண்மையிலே, தொழிற்சாலைச் சீர்திருத்தங்களை) மார் தீனவ் முன்வைத்தார். அவர் அப்படிச் செய்யக் காரணம் என்னவோ நமக்குத் தெரியாது. ஒருவேளை கவனமின்மையா யிருக்குமோ? என்னவாயிருந்தாலும், ''தொழிற்சாலைச்'' சீர்திருத்தங்களோடு வேறெதையாவது மனத்தில் கொண் டிருந்தாரேயானுல் நாம் குறிப்பிட்ட அவரது ஆய்வுரை முழுவதும் அர்த்தமற்றுப் போகிறது. பொருளாதாரத்துறை யில் மட்டுமே அரசாங்கம் ''சலுகைகள்'' அளிக்கக்கூடிய சாத்தியப்பாடு உண்டு, பெரும்பாலும் அளிக்கவும் செய்யலாம் என்று அவர் கருதுவதால் அப்படி ஒருவேளை செய்தா

ரோ?* அப்படியிருந்தால், அது ஒரு வேடிக்கையான பிழையே யாகும். சவுக்கால் அடிப்பது, தங்கல்சீட்டு அளிப்பது, நில மீட்புச் செலுத்தல்கள்,[69] மதப் பிரிவினர், தணிக்கைமுறை முதலானவை சம்பந்தமான சட்டத்துறையில் சலுகைகள் அளிப்பதும் சாத்தியம், அவ்வாறு அளிக்கவும் படுகின்றன. அரசாங்கத்தின் பார்வைநிலையிலிருந்து பார்க்கும்போது ''பொருளாதாரச்'' சலுகைகள்தாம் (போலிச் சலுகைகள்) மிக மலிவானவை, மிக அனுகூலமானவையுங்கூட; காரணம், இவற்றின் மூலமாக அது உழைக்கும் மக்களின் நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்று நம்புகிறது. இக்காரணத் துக்காகவே, சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாம் பொருளா தாரச் சீர்திருத்தங்களுக்கு மேலும் பெரிதான மதிப்புக் கொடுக்கிறதாகவோ, அவை குறிப்பான முக்கியத்துவம் உள்ளவையாகக் கருதுவதாகவோ, மற்றபடியோ நம்பிக்கை (அல்லது தப்பெண்ணம்) ஏற்படுவதற்கு எந்தச் சூழ்நிலைமை களிலும் எவ்வழியிலும் ஆதாரமளிக்கக் கூடாது. மேலே சொன்ன சட்ட நடவடிக்கைகள் அரசாங்க நிர்வாக நடவடிக் கைகள் பற்றிய ஸ்தூலமான கோரிக்கைகளைப் பற்றிப் பேசு கையில் மார்தீனவ் எழுதுவதாவது: ''இப்படிப்பட்ட கோரிக்கைகள் வெற்றுரையாக இருந்துவிடா, ஏனெனில் அவை தொட்டறியத்தக்க சில விளைவுகளை அளிக்கிறதாக இருப்ப தால் அவற்றை உழைக்கும் மக்கள் தீவிரமாக ஆதரிக்கக் கூடும்...'' என்று. நாங்கள் ''பொருளாதாரவாதிகளா'', கிடையவே கிடையாது! ஸ்தூலமான விளைவுகளின் ''தொட் டறியத்தக்க தன்மையின்'' முன்னே அடிமைபோல் கெஞ்சி நிற்கிறோம், அவ்வளவுதான்—பெர்ன்ஷ்டைன் வகையறா, புரொகபோவிச் வகையறா, ஸ்துருவே வகையறா, ஆர். எம். வகையறா, ஆகிய அத்தனைக் கும்பலும் போல! ''தொட்டறி யத்தக்க விளைவுகள் அளிக்கிறதாயில்லாத'' அனைத்தும்

---

* பக்கம் 43. ''உண்மைதான், சில பொருளாதாரக் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வைக்கும்படி நாம் தொழிலாளிகளுக்கு அறிவுறுத்தும்போது, கட்டாயத்தின் பேரில் எதேச்சாதிகார அரசாங்கம் பொருளாதாரத் துறை யில் சில சலுகைகள் அளிக்கத் தயாராயிருக்கிறது என்ற காரணத்திற்காகவே அப்படிச் சொல்கிறோம்.''

''வெற்றெலியே'' என்று புரியவைப்பது ஒன்றுதான் நாங்கள் (நார்ட்ஸீஸ் துபொரீலொவுடன் சேர்ந்து) விரும்புவது! எதேச்சாதிகாரத்துக்கு எதிரான ஒவ்வொரு கண்டனத்தையும்—அது தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கிறதாக இல்லாவிட்டாலும்—தீவிரமாக ஆதரிக்க உழைக்கும் மக்கள் திறமற்றவர்கள் போலவும் (தங்கள் சொந்தப் போலிப் பண்பை அவர்கள்பால் கற்பிக்கிறவர்கள் இருந்தபோதிலும் அவர்கள் தம் திறங்களை ஏற்கெனவே காட்டாதது போலவும்) விவாதிக்க மட்டுமே விரும்புகிறோம்!

எடுத்துக்காட்டாக, வேலையில்லாமையையும் பஞ்சத்தையும் தணிப்பதற்கு மார்தீனவ் முன்வைக்கும் ''நடவடிக்கைகளையே'' எடுத்துக்கொள்வோம். ரபோச்சியே தேலோ வாக்குறுதியளித்ததை வைத்து மதிப்பிடும்போது, ''தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகளையும் அரசாங்க நிர்வாக நடவடிக்கைகளையும் கோரும் ஸ்தூலமான (மசோதாக்கள் வடிவத்திலா?) கோரிக்கைகளைத்'' தயாரித்து விரிவிளக்கம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறது; ஆனால், ''வாழ்க்கையைப் புரட்சிமயமாக்குவதைவிட சூத்திரத்தைப் புரட்சிமயமாக்குவதை மேலாக இடையறாது வைக்கும்'' இஸ்க்ரா வேலையில்லாமைக்கும் முதலாளித்துவ அமைப்பு முறை முழுவதற்கும் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பை விளக்க முயன்றிருக்கிறது, ''பஞ்சம் வந்துகொண்டிருக்கிறது'' என்று எச்சரிக்கை செய்திருக்கிறது, ''பஞ்சத்தால் அடிபட்ட மக்களைத் தாக்கும்'' போலீஸை அம்பலப்படுத்தியிருக்கிறது,[70] மானக்கேடான ''தற்காலிகக் குற்றத்தண்டனை விதிமுறைகளை''[71] அம்பலப்படுத்தியிருக்கிறது; ஸார்யா பஞ்சத்தைப் பற்றி எழுதிய ''உள்நாட்டு விவகாரங்கள் விமர்சனம்'' எனும் பகுதியை கிளர்ச்சி பாணியிலுள்ள துண்டுப்பிரசுர வடிவத்தில் தனியாகப் பிரசுரித்து வெளியிட்டுள்ளது. அட கடவுளே! எவ்வளவு ''ஒருதலைப்பட்சமாக'' இருக்கிறார்கள் இந்தத் திருத்தவேமுடியாத குறுகிய, வைதீக வறட்டுத் தத்துவவாதிகள்! ''வாழ்க்கையின்'' அழைப்புகளைக்கூட கேளாத செவிடர்களாக இருக்கிறார்களே! அவர்களின் கட்டுரைகளில் ''தொட்டறியத்தக்க விளைவுகள் அளிக்கக் கூடியதாக'' ''ஸ்தூலமான கோரிக்கை'' ஒன்றுகூட இல்லையே, என்ன கொடுமை! ஒன்றுகூட இல்லை

—உங்களால் நினைத்துப்பார்க்க முடியுமா? பாவம், இந்த வறட்டுத் தத்துவவாதிகள்! இவர்களை கிரிச்சேவ்ஸ்கியிடமும் மார்தீனவிடமும் அனுப்பி போர்த்தந்திரம் என்பது வளர்ச்சியின் இயக்கப்போக்கு, வளரும் ஒன்றின் இயக்கப்போக்கு என்றெல்லாம் பாடம் கற்கச்செய்யவேண்டும், பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை அளிக்க வேண்டும் என்றும் பாடம் கற்கச்செய்யவேண்டும்!

''தொழிலாளிகள் முதலாளிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் நடத்தும் பொருளாதாரப் பொராட்டத்துக்கு (''அரசாங்கத்துக்கு எதிராகப் பொருளாதாரப் போராட்டம்''!) உடனடியான புரட்சிகரமான குறிபொருள் இருப்பதோடு கூட இன்னொரு குறிபொருளும் உண்டு: தொழிலாளிகளுக்கு அரசியல் உரிமைகள் இல்லை எனும் விஷயத்தை அது இடையருது அவர்களுக்கு உணர்த்துகிறது'' (மார்தீனவ், பக்கம் 44). மேலே சொன்னதையே ஆயிரத்தோராவது தடவையாகத் திருப்பிச் சொல்வதற்காக இப்பகுதியை நாம் மேற்கோள் காட்டவில்லை; ''தொழிலாளிகள் முதலாளிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் நடத்தும் பொருளாதாரப் போராட்டம்'' எனும் இந்தப் புதிய நேர்த்தியான சூத்திரத்துக்காக மார்தீனவுக்குக் குறிப்பாக நன்றி கூறுவதற்காகத்தான். என்ன முத்தான சொல்! ''பொருளாதாரவாதிகளிடையேயுள்ள'' சில்லறை வேறுபாடுகளையும் வேற்றுமைகளின் சாயல்களையும் அகற்றுவதில் இந்தத் தெளிவான, இரத்தினச் சுருக்கமான முன்கூற்று எத்துணை நிகர்க்கொண்ணுத் திறனுடனும் புலமையுடனும் ''பொருளாதாரவாதத்தின்'' முழு சாராம்சத்தை வெளியிடுகிறது! அது ''பொதுவான நலனுக்காக, எல்லாத் தொழிலாளர்களின் நிலைமைகளையும் மேம்படுத்துவதற்காக நடந்துவருகிற அரசியல் போராட்டத்துக்கு''* தொழிலாளிகளை அழைப்பதிலிருந்து தொடங்கி, கட்டங்கள் பற்றிய தத்துவத்தின் வழியே தொடர்ந்து, ''மிக விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள சாதனம்'' முதலியவை பற்றிய மாநாட்டுத் தீர்மானத்திலே வந்து முடிகிறது. ''அரசாங்கத்துக்கு எதிரான பொருளா

* ரபோச்சயா மிஸ்ல், ''தனி இணைமலர்'', பக்கம் 14.

தாரப் போராட்டம்'' என்பது தொழிற்சங்கவாத அரசியலே யாகும், அதற்கும் சமூக-ஜனநாயகவாத அரசியலுக்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது.

## ஆ. பிளெஹானவின் அறிவை மார்தீனவ் ஆழப்படுத்திய கதை

''பொருளாதாரவாதச்'' சார்புள்ள பல பேர்வழிகள் அவசியமாகவே, ''தங்கள் சொந்த அறிவைக் கொண்டு'' மாபெரும் உண்மைகளுக்கு (எடுத்துக்காட்டாக, பொருளாதாரப் போராட்டம் தாங்கள் உரிமைகள் அற்று இருப்பது குறித்துத் தொழிலாளிகளை ஆழ்ந்து சிந்திக்கச் செய்கிறதாம்) வந்து சேர்வதிலும், அப்படிச் செய்யும் போது பிறவி மேதைகளுக்குரிய பரம ஏளனத்துடன் புரட்சிகரமான சிந்தனையின், புரட்சிகரமான இயக்கத்தின் முன்னிகழ்ந்த வளர்ச்சி விளைத்ததனைத்தையும் புறக்கணிப்பதிலும் காட்டும் திகைப்பூட்டும் மனப்போக்கை மனதிற்கொண்டுதான் ''அண்மைக் காலத்தில் சமூக-ஜனநாயகவாத லொமஞேசவ்கள் ஏராளமாக முளைத்திருக்கிருர்களே!'' என்று ஒரு நாள் ஒரு தோழர் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட பிறவி மேதையே லொமஞேசவ்-மார்தீனவ். அவரது ''அவசரமான பிரச்சினைகள்'' எனும் கட்டுரையைப் பார்த்தாலே போதும், அக்செல்ரோட் வெகுகாலத்துக்குமுன் சொன்ன விஷயத்துக்கு அவர் எப்படி ''தன் சொந்த அறிவைக் கொண்டு'' வந்து சேருகிருர் என்று கண்டுகொள்ளலாம் (அவரைப்பற்றி நமது லொமஞேசவ் மூச்சுவிடுவதில்லை, இயல்புதான்); எடுத்துக்காட்டாக, முதலாளிவர்க்கத்தின் இன்னின்ன பகுதிகளின் எதிர்ப்பை நாம் புறக்கணிக்க முடியாது என்பதை எப்படி அவர் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிருர் (ரபோச்சியே தேலோ, இதழ் 9, பக்கங்கள் 61, 62, 71; இதை ரபோச்சியே தேலோ அக்செல்ரோடுக்குக் கொடுத்த பதிலுடன் ஒப்பிடுக, பக்கங்கள் 22, 23-24) என்றெல்லாம் கண்டு கொளளலாம். ஆனல், அந்தோ! அவர் ''வந்து சேருவதும்'' ''தொடங்குவதுமாகத் தான்'' இருக்கிருர், அதற்குமேலில்லை. ஏனெனில், அக்செல்ரோடின் கருத்துக்களை அவர் புரிந்துகொள்ளாததினல்,

''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்க்கும் பொருளாதாரப் போராட்டம்'' பற்றிப் பேசுகிருர். மூன்ருண்டுகளாக (1898-1901) ரபோச்சியே தேலோ அக்செல்ரோடைப் புரிந்துகொள்ளக் கடுமையாக முயற்சித்தும் இன்று வரை புரிந்துகொள்ளாமலே இருக்கிறது! ''மனித குலத்தைப் போலவே'' சமூக-ஜனநாயகவாதமும் சாதிக்கமுடிகிற பணிகளைத்தான் எப்போதும் முன்னிறுத்திக் கொள்கிறது என்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடுமோ?

ஆனுல் இந்த லொமஞேசவ்களின் சிறப்பு அவர்களிடம் பல விஷயங்களில் உள்ள அறியாமை மட்டுமல்ல (துரதிர்ஷ்டத்தில் பாதியாகத்தான் இருக்கும் அது!), அந்த அறியாமையைப்பற்றி அறியாதிருப்பதும் அவர்களின் சிறப்பாகும். இது உண்மையில் ஒரு துரதிர்ஷ்டமே; இதுவே மேற்கொண்டு எந்த சிரமமுமில்லாமலே பிளெஹானவின் ''அறிவை ஆழப்படுத்த'' முயற்சிக்குமாறு அவர்களைத் தூண்டிவிடுகிறது.

லொமஞேசவ்-மார்தீனவ் சொல்கிருர்: ''பிளெஹானவ் இந்நூலை (ருஷ்யாவில் பஞ்சத்தை எதிர்க்கும் போராட்டத்தில் சோஷலிஸ்டுகளின் பணிகள்) எழுதியபின் எவ்வளவோ நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிட்டுள்ளன. பத்தாண்டுகளாகப் பாட்டாளிவர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய சமூக-ஜனநாயகவாதிகள்... இது வரை கட்சியின் போர்த்தந்திரங்களுக்கான விரிவான தத்துவார்த்தஅடிப்படையை நிறுவிக்கொள்ள நேரமற்றிருந்தனர். இப்பிரச்சினை இப்போது நெருக்கடியில் வந்து முடிந்திருக்கிறது. அப்படிப்பட்ட தத்துவார்த்த அடிப்படையை நாங்கள் நிறுவ விரும்புவோமேயானுல் ஒரு காலத்தில் பிளெஹானவ் வளர்த்த போர்த்தந்திரக் கோட்பாடுகளை நாங்கள் கணிசமாக ஆழப்படுத்தித்தீரவேண்டும்... கிளர்ச்சிக்கும் பிரச்சாரத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு பற்றிய எங்களுடைய இன்றைய வரையறுப்பு பிளெஹானவின் வரையறுப்பிலிருந்து மாறுபட்டுத்தீரவேண்டும்.'' (மார்தீனவ் சற்று முன் மேற்கோள் காட்டிய பிளெஹானவின் வார்த்தைகள் வருமாறு: ''பிரச்சாரகர் பல கருத்துக்களை ஒருவரிடமோ சில பேரிடமோ வைக்கிருர்; கிளர்ச்சியாளர் ஒரேயொரு கருத்தையோ ஒருசில கருத்துக்களையோ திரளான மக்களிடம் வைக்கிருர்.'') ''பிரச்சாரம் என்ருல் தனிநபர்களோ விரிவான மக்கள் திரளோ புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்தில் இன்றையச் சமுதாய அமைப்பு முறையை முழுமையாக எடுத்துக்கொண்டோ அதன் அரைகுறையான வெளிப்பாடு

களை எடுத்துக்கொண்டோ புரட்சிகரமான விளக்கம் அளிப்பது என்றுதான் நாங்கள் புரிந்துகொள்வோம். கிளர்ச்சி என்றால், அச்சொல்லின் கறாரான அர்த்தத்தில் (உண்மையாகத்தான்!) பார்க்கிறதென்றால், திரளான மக்களை ஸ்தூலமான, திட்டவட்டமான செயல்களில் இறங்குமாறு அறைகூவியழைப்பது, சமுதாய வாழ்க்கையில் பாட்டாளி வர்க்கத்தின் நேரடியான புரட்சிகரமான தலையீட்டை வளர்ப்பது என்றே நாங்கள் புரிந்துகொள்வோம்'' என்று.

மார்தீனவ் புண்ணியத்தால் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்துக்கும் சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்துக்கும் மேலும் கறாரான, ஆழமான ஒரு புதிய துறைச்சொல் தொகுதி கிடைத்ததற்கு நமது பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம். வேலையில்லாமையை (உதாரணத்துக்காகச் சொல்கிறோம்) எடுத்துப்பேசுகிற பிரச்சாரகர் நெருக்கடிகளின் முதலாளித்துவத் தன்மை, தற்கால சமுதாயத்தில் அவற்றின் தவிர்க்கவியலாத்தன்மைக்குரிய காரணம், இச்சமுதாயத்தை சோஷலிஸ்டுச் சமுதாயமாக உருமாற்றித் தீரவேண்டிய அவசியம், முதலியவற்றை விளக்கித் தீரவேண்டும் என்றுதான் நாம் (பிளெஹானவுடனும், சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் மற்ற எல்லாத் தலைவர்களுடனும் சேர்ந்து) இதுவரை நினைத்துவந்தோம். சுருங்கச் சொன்னால், பிரச்சாரகர் ''பல கருத்துக்களை'' வைக்க வேண்டும்; ஒரு சிலர் மட்டுமே (ஒப்புநோக்கில் சொல்கிறோம்) இணைப்புள்ள முழுமையாகப் புரிந்துகொள்ளும் அளவுக்குப் பலவாக இருக்கும் கருத்துக்களை வைக்கவேண்டும். ஆனால், கிளர்ச்சியாளர் இதே விஷயத்தை எடுத்துச் சொல்கிற பொழுது, கூட்டத்தினருக்கு மிக விளக்கமாக மிகப் பரவலாகத் தெரிந்துள்ள ஓர் உண்மையை —உதாரணமாக, வேலையில்லாத தொழிலாளியின் குடும்பம் பட்டினியால் இறந்துபோனது, வறுமையாக்கப்படுவது பெருகிவருவது, முதலியவை—எடுத்துப் பயன்படுத்தி ''மக்களிடம்'' ஒரேயொரு கருத்தை—அதாவது, செல்வம் பெருகிவருவதற்கும் வறுமை பெருகிவருவதற்கும் உள்ள முரண்பாட்டின் பொருளற்றதன்மையை—விளக்க முயற்சி செய்வான், இந்தப் பழிகேடான அநீதியை எதிர்த்து மக்களிடையே அதிருப்தியையும் ஆத்திரத்தையும் எழுப்பிவிட முயல்வான்—இந்த முரண்பாடு பற்றிய மேலும் முழு

மையான விளக்கத்தைப் பிரச்சாரகருக்கு விட்டுவிட்டு. ஆகவே, பிரச்சாரகர் வேலைக்கு முதன்மையாகப் பயன்படுத்துவது பேனு, கிளர்ச்சியாளர் முதன்மையாகப் பயன்படுத்துவது நா. பிரச்சாரகருக்கு இருக்கவேண்டிய பண்புகள் கிளர்ச்சியாளருக்கு வேண்டிய பண்புகளினின்று மாறுபட்டவை. எடுத்துக் காட்டாக, காவுட்ஸ்கியையும் லஃபார்கையும் நாம் பிரச்சாரகர்கள் என்று அழைக்கிறோம்; பேபெலையும் கெட்டையும் கிளர்ச்சியாளர்கள் என்று அழைக்கிறோம். நடைமுறை நடவடிக்கையின் மூன்றாவதொரு துறையை, மூன்றாவதொரு வேலையை, தனித்தெடுத்துக் காட்டுவதும், இந்த மூன்றாவதொரு வேலையில் ''மக்களை ஸ்தூலமான, திட்டவட்டமான செயல்களில் இறங்குமாறு அறைகூவியழைப்பதை'' உள்ளடக்குவதும் பச்சையான முட்டாள்தனமாகும். காரணம், தனியொரு செயல் என்கிற வகையில் இந்த ''அறைகூவல்'' தத்துவார்த்த நூலுடனும் பிரச்சாரவகைப்பட்ட குறுநூலுடனும் கிளர்ச்சியூட்டும் சொற்பொழிவுடனும் இயல்பாகவும் தவிர்க்கமுடியாதபடியும் இணைந்து வருகிறது, அல்லது முற்றிலும் நிறைவேற்றத்துக்குரிய ஒரு வேலையையே குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் தானியக் காப்புவரிகளை எதிர்த்து நடத்திவரும் போராட்டத்தை எடுத்துக்கொள்வோம். வர்த்தக ஒப்பந்தங்களுக்காகவும் சுயேச்சையான வாணிகத்துக்காகவும் போராடவேண்டும் எனும் ''அறைகூவல்'' ஒன்றுடன் காப்புவரிக் கொள்கை பற்றித் தத்துவாசிரியர்கள் ஆய்வுநூல்கள் எழுதுகிறார்கள். இதையே பிரச்சாரகர் செய்திப்பத்திரிகைகளிலும், கிளர்ச்சியாளர் சொற்பொழிவுகளிலும் செய்கிறார். தற்சமயம் மக்களின் ''ஸ்தூலமான செய்கை'' என்பது தானியக் காப்புவரிகளை உயர்த்துவதை எதிர்த்து ரைக்ஸ்டாக்குக்கு (நாடாளுமன்றத்துக்கு) விண்ணப்பங்களில் கையெழுத்திட்டு அனுப்பும் வடிவம் பெறுகிறது. இந்தச் செய்கைக்கான அறைகூவல் தத்துவாசிரியர்கள், பிரச்சாரகர்கள், கிளர்ச்சியாளர்கள் ஆகியோரிடமிருந்து மறைமுகமாகவும், கையெழுத்து வாங்கிச்சேகரிப்பதற்காகத் தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் விண்ணப்பத் தாள்களைக் கொண்டுபோகும் தொழிலாளிகளிடமிருந்து நேர்முகமாகவும் வருகிறது. ''மார்தீனவ் சொல்லாட்சியியல்'' பிரகாரம் பார்த்தால்,

காவுட்ஸ்கியும் பேபெலும் பிரச்சாரகர்கள் ஆகிறுர்கள், கையெழுத்து வாங்குவோர் கிளர்ச்சியாளர்கள் ஆகிறுர்கள். இது தெளிவுதானே?

இந்த ஜெர்மன் எடுத்துக்காட்டு "Verballhornung" எனும் ஜெர்மன் சொல்லை எனக்கு நினைவூட்டியது. அதை அப்படியே மொழிபெயர்த்தால் "Ballhorning" என்று பொருள் ஆகும். இயோஹான் பால்ஹோர்ன் லைப்ஸிக் நகரத்துப் பதிப்பாளர், 16ம் நூற்ருண்டைச் சேர்ந்தவர். அவர் ஒரு குழந்தைப் பாடப்புத்தகம் பிரசுரித்தார்; அன்றைய வழக்கப்படி சேவல் படம் ஒன்றும் அதில் போட்டிருந்தார்; ஆனுல் அந்தச் சேவலுக்குக் காலில் புடைப்பு இல்லை, அருகில் இரு முட்டைகள் இருந்தன. புத்தகத்தின் மேலட்டையில் "இயோஹான் பால்ஹோர்ன் வெளியிடும் திருத்தப் பெற்ற பதிப்பு" என்று போட்டிருந்தார். அன்றுமுதல், முந்தியதை உண்மையிலே மோசமாக்கிவிடும் எந்தத் "திருத்தலையும்" ஜெர்மானியர்கள் "பால்ஹோர்ஞக்குவது" (Ballhorning) என்று வர்ணிக்கிருர்கள். பிளெஹானவின் அறிவை "ஆழப்படுத்த" மார்தீனவ்கள் செய்கிற முயற்சியைப் பார்க்கும் போது பால்ஹோர்னை நினைவூட்டிக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

நம் லொமனேசவ் ஏன் இந்தக் குழப்பத்தைப் "புனைந்தார்"? "பதினைந்தாண்டுகளுக்குமுன் பிளெஹானவ் செய்தது போலவே" இஸ்க்ராவும் "வழக்கின் ஒரு பக்கத்தை மட்டுமே கவனிக்கிறது" (பக்கம் 39) என்று காட்டுவதற்காகத்தான். "இஸ்க்ரா விஷயத்தில், குறைந்தபட்சம் தற்காலத்திற்காகவாவது பிரச்சாரப் பணிகள் கிளர்ச்சிவகைப்பட்ட பணிகளைப் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றன" (பக்கம் 52). இந்தக் கடைசி முன்கூற்றை மார்தீனவ் மொழியிலிருந்து சாதாரணமான மனித மொழியில் பெயர்த்தால் (ஏனெனில், புதிதாகப் புனைந்த இந்தச் சொல்லாட்சியியலை மனிதகுலம் இன்னும் சமாளித்துப் புரிந்துகொண்டதாயில்லை) நமக்குக் கிடைப்பது இதுதான்: "தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக் கூடியதான சட்ட நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்க நிர்வாக நடவடிக்கைகளுக்காகவும் ஸ்தூலமான கோரிக்கைகளை" (அல்லது, மார்தீனவ் தரத்துக்கு வளராமலே இருக்கும் பத்தாம்பசலி மனிதகுலத்தின் பத்தாம்பசலி சொல்லாட்சியியலின்படி நாம் சொல்லக்கூடுமாஞல், சமுதாயச் சீர்திருத்தங்

களுக்கான கோரிக்கைகளை) ''அரசாங்கத்திடம் வைக்கும்'' பணியை அரசியல் பிரச்சாரம் அரசியல் கிளர்ச்சி சம்பந்தப் பட்ட பணிகள் பின்னுக்குத் தள்ளிவைக்கின்றன. பின்வரும் கண்டனவுரையுடன் வாசகர் இந்த ஆய்வுரையை ஒப்புநோக் கட்டும்:

''இந்த வேலைத்திட்டங்களில் (புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் முன்வைத்துள்ள வேலைத்திட்டங்களில்) நமக்கு மேலும் திகைப்பூட்டுவதாயிருப்பது என்னவென்றால், தொழிற்சாலை விவகாரங்கள் சம்பந்தப்பட்ட முதலாளிகளின் சட்ட மன்றங்களில் தொழிலாளிகள் கலந்துகொள்வதின் முக்கியத்துவத்தை... அல்லது, குறைந்தபட்சமாச, நகராட்சி மன்றங்களில் தொழிலாளிகள் கலந்துகொள்வதின் முக்கியத் துவத்தை (தமது புரட்சிகரமான வெறுமைவாதத்தின் கார ணமாக) அவர்கள் அடியோடு புறக்கணிக்கிற போதிலும், (ருஷ்யாவில் அறவே இல்லாத) நாடாளுமன்றத்தில் தொழி லாளிகள் செயலாற்றுவதின் நன்மைகளைப்பற்றி இடையறாது வலியுறுத்திவருவதுதான்.''

லொமனோசவ்-மார்தீனவ் தம் சொந்த அறிவைக்கொண்டு கண்டுபிடித்த கருத்தையே ஓரளவுக்கு மேலும் ஆணித்தர மாகவும் தெளிவாகவும் இக்கண்டனவுரையின் ஆசிரியர் வெளியிடுகிறார். இவர்தான் ஆர். எம்., ரபோச்சயா மிஸ்ல் ''தனி இணைமலரில்'' (பக்கம் 15) வெளியிடுகிறார்.

### இ. அரசியல் அம்பலப்படுத்தல்களும் ''புரட்சிகரமான நடவடிக்கைக்கான பயிற்சியும்''

மார்தீனவ் ''உழைக்கும் மக்களின் நடவடிக்கையை உயர்த்துவது'' பற்றிய தமது தத்துவத்தை இஸ்க்ராவுக்கு எதிராக வைத்ததிலே, அந்த நடவடிக்கையைச் சிறுமைப் படுத்தும் அவாவைத்தான் யதார்த்தத்தில் காட்டிக் கொண் டார். ஏனெனில், எந்தப் பொருளாதாரப் போராட்டத்தின் முன்னே எல்லாப் ''பொருளாதாரவாதிகளும்'' விழுந்து கும் பிடுகிறார்களோ அதுவே இந்த நடவடிக்கையைத் தட்டி யெழுப்புவதற்கு மிகவும் விரும்பத்தக்க, குறிப்பான முக்கியத்து வமுள்ள, ''மிகவும் விரிவான செயற்பாட்டுத்திறமுள்ள'' சாதனமென்றும், அதுவே அந்நடவடிக்கைக்குரிய விரிவுமிக்க

களமென்றும் அவர் கூறினுர். இந்தத் தவறு இனக்குறிப்புள் ளது, ஏனெனில் இது மார்தீனவுக்கு மட்டும் உரியதல்ல. யதார்த்தத்தில் பார்த்தால், ''உழைக்கும் மக்களின் நட வடிக்கையை உயர்த்துவது'' என்பது அந்நடவடிக்கையைப் ''பொருளாதார அடிப்படையிலுள்ள அரசியல் கிளர்ச்சி யோடு'' குறுக்கிக்கட்டுப்படுத்திவிடாமல் இருந்தால் மட்டுமே சாத்தியம். முழுவிரிவான அரசியல் அம்பலப்படுத்தலை ஒழுங்கமைத்து நடத்துவது அரசியல் கிளர்ச்சியை அவசிய மாக விரிவாக்குவதற்கு ஓர் அடிப்படை நிபந்தனை. இப்படிப் பட்ட அம்பலப்படுத்தலைக் கொண்டல்லாமல் வேறெந்த வழி யிலும் அரசியல் உணர்விலும் புரட்சி நடவடிக்கையிலும் மக்களுக்குப் பயிற்சி அளிக்க முடியாது. எனவே, சர்வதேச சமூக-ஜனநாயகவாதம் முழுவதற்கும் உள்ள மிக முக்கியமான வேலைகளில் இவ்வகைப்பட்ட நடவடிக்கையும் ஒன்ருகும். ஏனெனில்,அரசியல் சுதந்தரம்கூட அம்பலப்படுத்தல்களைஎவ் விதத்திலும் விலக்குகிறதில்லை; அவற்றின் திசைசம்பந்தப்பட்ட துறையைத்தான் கொஞ்சம் மாற்றுகிறது. இப்படித்தான், ஜெர்மன் கட்சி தனதுஅரசியல் அம்பலப்படுத்தல் இயக்கத்தை நடத்துவதில் காட்டுகிற அயராத ஆற்றலின் சிறப்பால் தனது நிலைகளைக் குறிப்பாகப் பலப்படுத்திக்கொண்டும் செல் வாக்கை விரிவுபடுத்திக் கொண்டும் வருகிறது. எந்த வர்க்கம் பாதிக்கப்படுகிறதாயினும் சரி, கொடுங்கோன்மை ஒடுக்கு முறை வன்முறை அநீதி சம்பந்தப்பட்ட எல்லா வழக்கு களிலும் பதில் நடவடிக்கை எடுக்கத் தொழிலாளிகள் பயிற் றுவிக்கப்படாவிட்டால்—மேலும், வேறெந்தப் பார்வை நிலையிலிருந்தும் அல்லாமல் சமூக-ஜனநாயகவாதப் பார்வை நிலையிலிருந்து அவர்கள் பதில் நடவடிக்கை எடுக்கப் பயிற்று விக்கப்படாவிட்டால்—பாட்டாளிவர்க்க உணர்வு உண்மை யான அரசியல் உணர்வாக இருக்கமுடியாது. ஸ்தூலமான, எல்லாவற்றிற்கும் மேலாக நடப்பில் முக்கியமாக உள்ள அரசியல் விஷயங்களிலிருந்தும் நிகழ்ச்சிகளிலிருந்தும் மற்ற ஒவ்வொரு வர்க்கத்தையும் அதனதன் அறிவுத்துறை ஒழுக்கத்துறை அரசியல்துறை வாழ்க்கையில் உள்ள எல்லா வெளிப்பாடுகளையும் வைத்து உற்றுக்கவனிக்கத் தொழிலாளி கள் கற்றுக் கொள்ளாவிட்டால், மக்கள்தொகையின் எல்லா வர்க்கங்களின், பகுதிகளின், குழுக்களின் வாழ்க்கை சம்பந்

தப்பட்ட நடவடிக்கை சம்பந்தப்பட்ட எல்லா அம்சங்களைப் பற்றிய பொருள்முதல்வாதப் பகுப்பாய்வையும் பொருள் முதல்வாத மதிப்பீட்டையும் நடைமுறையில் செயற்படுத்தத் தொழிலாளிகள் கற்றுக்கொள்ளாவிட்டால், உழைக்கும் மக்களின் உணர்வு உண்மையான வர்க்க உணர்வாக இருக்க முடியாது. பாட்டாளி வர்க்கத்தின் கவனத்தையும் நுண் நோக்கையும் உணர்வையும் முற்றாகவோ முக்கியமாகவோ அதன் மீது மட்டுமே ஒருமுனைப்படுத்திச் செலுத்துகிறவர் கள் சமூக-ஜனநாயகவாதிகள் ஆகமாட்டார்கள். ஏனெனில், தற்கால சமுதாயத்தின் பல்வேறான எல்லா வர்க்கங்களிடை யேயுள்ள உறவுமுறைகளைப்பற்றி அரசியல் வாழ்க்கை அனு பவத்திலிருந்து பெறப்பட்ட முற்றும் தெளிந்த ஒரு தத்து வார்த்த ஞானத்தோடு மட்டும்—தத்துவார்த்த ஞானத் தோடு என்று சொல்வதைவிட நடைமுறை ஞானத்தோடு என்று சொல்வது மேலும் உண்மையாயிருக்கும்—பாட்டாளி வர்க்கத்தின் தன்னைப்பற்றிய அறிவு பிரிக்கவொண்ணாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது. இக்காரணத்தினாலேதான் அரசியல் இயக்கத்தில் மக்களை ஈடுபடுத்துவதற்குப் பொருளாதாரப் போராட்டந்தான் மிக விரிவான செயற்பாட்டுத் திறமுள்ள சாதனம் எனும் கருத்தோட்டம் —''பொருளாதாரவாதி கள்'' போதிக்கும் கருத்தோட்டம்—அதன் நடைமுறைக் குறிபொருளிலே மிகவும் தீங்கானது, பிற்போக்கானது. சமூக-ஜனநாயகவாதியாக ஆவதற்கு, நிலப்பிரபு, புரோகிதன், உயர்நிலை அரசாங்க அலுவலர், விவசாயி, மாணவன், நாடோடி, ஆகியோரின் பொருளாதார இயல்புபற்றியும் சமு தாய, அரசியல் பண்புக்கூறுகள் பற்றியும் தொழிலாளியின் மனத்தில் ஒரு தெளிவான சித்திரம் பெற்றிருக்கவேண்டும்; அவர்களின் பலத்துக்குரிய அம்சங்களையும் பலவீனத்துக்குரிய அம்சங்களையும் அவன் அறிந்திருக்கவேண்டும்; ஒவ்வொரு வர்க்கமும் ஒவ்வொரு மக்கள் பகுதியும் தன்னுடைய சுயநல ஞ்சார்ந்த முயற்சிகளையும் தன்னுடைய உண்மையான ''உள் வினைபாடுகளையும்'' மறைக்கப் பயன்படுத்தும் எல்லாக் கவர்ச் சிச்சொற்களின் போலி வாதங்களின் பொருளை அவன் புரிந் திருக்கவேண்டும்; சில அமைப்புகளும் சில சட்டங்களும் என் னென்ன நலன்களைப் பிரதிபலிக்கின்றன, எப்படிப் பிரதிபலிக் கின்றன என்றும் அவன் புரிந்திருக்கவேண்டும். ஆனால் இந்தத்

''தெளிவான சித்திரத்தை'' எந்தப் புத்தகத்திலிருந்தும் பெறமுடியாது. உயிர்த்துடிப்புள்ள எடுத்துக்காட்டுகளிலிருந்தும் அந்தந்த தருணத்தில் நிலவும் நடப்புகளையும்—அவனவன் அவனவனுடைய வழியிலே, ஒருவேளை காதோடு காது வைத்தாற்போலவுங்கூட, விவாதிக்கிற விஷயங்களையும்—இன்னின்ன நிகழ்ச்சிகளில், இன்னின்ன புள்ளிவிபரங்களில், இன்னின்ன நீதிமன்றத் தீர்ப்புகள் முதலியவற்றில் வெளிப்படுகிற விஷயங்களையும்—நெருங்கித் தொடர்ந்து வரும் அம்பலப்படுத்தல்களிலிருந்தும் மட்டுமே அதைப் பெறமுடியும். மக்களைப் புரட்சி நடவடிக்கையில் பயிற்றுவிப்பதற்கு இந்த முழுவிரிவான அரசியல் அம்பலப்படுத்தல்கள் அவசியமான, அடிப்படையான நிபந்தனையாகும்.

மக்களைப் போலீஸ் மிருகத்தனமாக நடத்துவது, மதக் குழுக்களைத் துன்புறுத்துவது, விவசாயிகளைச் சவுக்கால் அடிப்பது, மானக்கேடான தணிக்கைமுறை, இராணுவப் படையினரைச் சித்திரவதை செய்வது, மிகவும் அப்பாவித்தனமான பண்பாட்டு முயற்சிகளையும் தொல்லைப்படுத்துவது முதலியவற்றிற்குப் பதில் நடவடிக்கையாக ருஷ்யத் தொழிலாளிகள் இன்னமும் புரட்சிகரமான நடவடிக்கையை மிகக் குறைவாக வெளிப்படுத்துவது ஏன்? ''பொருளாதாரப் போராட்டம்'' அவர்களை இதற்குத் ''தூண்டுவது'' இல்லை என்பதினுலா? அவ்வகை நடவடிக்கை ''தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக்கூடியதாக'' இல்லை என்பதினுலா, ''நேர்ப்பயனுள்ளதாக'' எதுவும் விளைக்கிறதில்லை என்பதினுலா? இப்படிப்பட்ட கருத்துக்கு வருவது, வெறுமே பழிக்கிடமற்றவர்கள் மீது பழி சுமத்துவதாகும், தன் சொந்த போலிப்பண்புக்காக (அல்லது, பெர்ன்ஷ்டைன்வாதத்துக்காக) உழைக்கும் மக்கள் மீது பழி சுமத்துவதாகும் என்று மீண்டும் கூறுகிறேம். நம்மை நாமே குறைகூறிக் கொள்ள வேண்டும்—வெகுஜன இயக்கத்தினின்று நாம் பின்னடைந்திருப்பதற்காக, மானக்கேடான அட்டூழியங்கள் அனைத்தையும் நாம் போதுமான அளவுக்கு விரிவாகவும் எடுப்பாகவும் விரைவாகவும் அம்பலப்படுத்துவதை ஒழுங்கமைத்துச் செய்ய இன்னமும் இயலாதிருப்பதற்காக. நாம் அதைச் செய்கிறபொழுது (செய்தாகவேண்டும், செய்யவும் முடியும்), மிகவும் பிற்பட்டிருக்கும் தொழிலாளி புரிந்துகொள்வான்,

அல்லது உணர்ந்து கொள்வான்—தன் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் தன்னை ஒடுக்கி நசுக்கி வரும் அதே தீய சக்திகள்தாம் மாணவர்களையும் மதக்குழுக்களையும் விவசாயிகளையும் நூலாசிரியர்களையும் இழிவுபடுத்தித் துன்புறுத்தி வருகின்றன என்று. அதை உணர்ந்துகொள்ளும் நிலையில், எதிர்வினையாற்ற வேண்டும் எனும் அடக்கவொண்ணு அவா அவனை ஆட்கொண்டுவிடும்; ஒருநாள் தணிக்கையாளர்களை எதிர்த்துக் கூவி கேலிசெய்வது, விவசாயி எழுச்சியை மிருகத்தனமாக நசுக்கிய கவர்னர் வீட்டுக்குமுன் மற்ருெரு நாள் ஆர்பாட்டம் செய்வது, வேருெரு நாள் கத்தோலிக்க விசாரணை மன்றத்தின் வேலையைச் செய்யும் பாதிரி உடையணிந்த போலீஸ்காரர்களுக்குப் பாடங்கற்பிப்பது என்றெல்லாம் தெரிந்துகொள்வான். இன்னமும் சாத்தியமான எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் மக்கள் முன்னே உடனுக்குடன் அம்பலப்படுத்துவதற்கு நாம் பணியாற்றியிருப்பது சொற்பந்தான், அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். இது நம் நீராக் கடமை என்று நம்மில் பலர் இன்னமும் அங்கீகரிக்கவில்லை; ''சுவையற்ற அன்றுடப் போராட்டத்தின்'' பின்னே, தொழிற்சாலை வாழ்க்கையின் குறுகிய வரம்புக்கட்டுக்குப் பின்னே தன்னியல்பாக இழுபட்டுச் செல்கிருர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைமைகளில், ''ஒளிமிக்க, முழுமையான கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதுடன் ஒப்புநோக்கும்போது சுவையற்றதாயுள்ள அன்றுடப் போராட்டத்தின் முன்னேற்ற நடையின் குறிபொருளைக் குறைத்து மதிப்பிடும் போக்கை இஸ்க்ரா காட்டிக்கொள்கிறது'' (மார்தீனவ், மேலே சொன்ன நூல், பக்கம் 61) என்று சொல்வது கட்சியைப் பின்னேக்கி இழுப்பதாகும், நம் ஆயத்தமின்மையையும் பிற்பட்ட நிலையையும் பாதுகாத்து ஏற்றிப்போற்றுவதேயாகும்.

மக்களைச் செயலுக்கு அறைகூவுவதைப் பொருத்தவரை, சக்திவாய்ந்த அரசியல் கிளர்ச்சியும் உயிர்ப்புள்ள எடுப்பான அம்பலப்படுத்தல்களும் செய்கிறபொழுது அது தானுகவே வரும். எந்தக் குற்றவாளியையாவது கையும் களவுமாகப் பிடித்து உடனே எல்லா இடங்களிலும் பகிரங்கமாக அம்பலப்படுத்துவது எத்தனையோ ''அறைகூவல்களை'' விட தன்னளவில் எவ்வளவோ பயன்திறமுள்ளதாகும்; மக்களை யார்

''அறைகூவியழைத்தார்கள்'', இன்னின்ன ஆர்ப்பாட்டம் முதலியவற்றிற்கான திட்டத்தை யார் சொல்லிவைத்தார்கள் என்று திட்டமாகச் சொல்லமுடியாமற் போகிற அளவுக்கு அந்தப் பாதிப்பு மிக அடிக்கடி இருக்கும். பொதுவான அர்த்தத்தில் அல்லாமல் ஸ்தூலமான அர்த்தத்தில் பார்த்தால் செயலுக்கான அறைகூவல் செயற்களத்திலேதான் விடுக்க முடியும்; தாங்களே செயலில் இறங்குகிறவர்கள் தாம், உடனடியாக இறங்குகிறவர்கள்தாம், இப்படிப்பட்ட அறைக்கூவல்களை விடுக்க முடியும். சமூக-ஜனநாயகவாதப் பிரச்சாரகர்கள் என்கிற வகையில் அரசியல் அம்பலப்படுத்தல்களையும் அரசியல் கிளர்ச்சியையும் ஆழப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் தீவிரப்படுத்துவதுமே நமது வேலை.

''செயலுக்கு அறைகூவல்கள்'' பற்றி, போகிறபோக்கிலே, ஒரு வார்த்தை சொல்வோம். தொழிலாளிகளுக்கு தொட்டறியத்தக்க விளைவுகள் எதையும் அளிக்கக் கூடியதாய் நிச்சயமாக இல்லாத ஒரு விவகாரத்தில்—அதாவது, மாணவர்களைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்க்கும் விஷயத்தில்—தீவிரமாகத் தலையிடுமாறு வசந்தகால நிகழ்ச்சிகள்[72] நிகழுமுன் தொழிலாளிகளை அறைகூவியழைத்த ஒரே பத்திரிகை இஸ்க்ரா ஒன்றுதான். ''183 மாணவர்களைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்ப்பது பற்றிய'' ஜனவரி 11ம் தேதிய ஆணை பிரசுரிக்கப்பட்டவுடன் அதைப்பற்றி இஸ்க்ரா ஒரு கட்டுரை வெளியிட்டது (அதன் பிப்ரவரி இதழ், 2ல்); மேலும், ஆர்ப்பாட்டம் எதுவும் தொடங்குவதற்கு முன்பே ''மாணவர்களின் உதவிக்குச் செல்லுங்கள் என்று தொழிலாளிகளை'' உடனே அறைகூவியழைத்தது, அரசாங்கத்தின் ஆணவமிக்க சவாலை ஏற்கும்படி பகிரங்கமாக ''மக்களை'' அறைகூவியழைத்தது. அனைவரையும் கேட்கிறோம்: ''செயலுக்கு அறைகூவல்கள்'' பற்றி எவ்வளவோ பேசுகிற மார்தீனவ், ''செயலுக்கு அறைகூவல்கள்'' என்பவை நடவடிக்கைக்குரிய தனிச்சிறப்பான வடிவம் என்று கூடச் சொல்லிவைக்கிற மார்தீனவ் இந்த அறைகூவலைப் பற்றி மூச்சு விடவில்லையே, இந்தக் குறிப்பிடத்தக்க விஷயத்தை எப்படி விளக்குவது? இவ்வளவும் ஆனபிறகு, இஸ்க்ரா ஒருசார்பான போக்குள்ளது, ஏனெனில் ''தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக்கூடிய'' கோரிக்கைகளுக்காகப் போதிய

''அறைகூவல்களை'' அது விடுத்ததில்லை, என்று மார்தினவ் குற்றஞ்சாட்டுவது பச்சையான போலிப்பண்பல்லவா?

நமது ''பொருளாதாரவாதிகள்'', ரபோச்சியே தேலோ உள்பட, வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர்கள் பிற்பட்ட தொழிலாளிகளுக்குத் தக்கபடி தங்களைச் சரிசெய்து கொண்டதுதான். ஆனால் சமூக-ஜனநாயகவாதத் தொழிலாளி, புரட்சிகரமான தொழிலாளி (இப்படிப்பட்ட தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது) ''தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக்கூடிய'' கோரிக்கைகள் முதலானவற்றைப் பற்றிய பேச்சுகளைச் சீற்றத்துடன் நிராகரிப்பான்; காரணம், இது ரூபிளுடன்* கூட ஒரு கோபெக்கு** சம்பாதிப்பது பற்றிய பழைய பாட்டைச் சற்று மாற்றிப் பாடுவது தவிர வேறில்லை என்று புரிந்துகொள்வான். ரபோச்சயா மிஸ்ல், ரபோச்சியே தேலோ பாற்பட்ட அறிவுரையாளர்களிடம் அவன் சொல்வான்: நல்லபடியாக நாங்களே சமாளிக்கக் கூடிய காரியத்தில் மட்டுமீறிய ஆர்வத்துடன் குறுக்கிடுவதின் வழியாக நீங்கள் வீணுக சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள், உங்களுக்குரிய முறையான கடமைகளைச் செய்யாமல் தட்டிக் கழிக்கிறீர்கள். பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பதுதான் சமூக-ஜனநாயகவாதிகளின் பணி என்று நீங்கள் அடித்துப் பேசுவதில் கெட்டிக்காரத்தனம் ஒன்றுமில்லை; அது வெறுமே ஒரு தொடக்கந்தான், அது சமூக-ஜனநாயகவாதிகளின் முதன்மையான பணி அல்ல. ஏனெனில், ருஷ்யா உள்ளிட்டு உலகம் முழுவதிலும் பொருளாதாரப் போராட்டத்துக்கு அரசியல் தன்மை கொடுப்பதில் அடிக்கடி போலீஸ்காரர்களே முன்கை எடுக்கிறார்கள், அரசாங்கம் யாரை ஆதரிக்கிறது என்று தொழிலாளிகள் தாங்களாகவே புரிந்துகொள்ளக் கற்றுக் கொள்கிறார்கள்.*** ஒரு புதிய அமெரிக்காவை கண்டுபிடித்து

---

* ருஷ்ய நாணயம்.—(மொ-ர்.)

** ரூபிளில் நூற்றில் ஒரு பங்குள்ள நாணயம்.—(மொ-ர்.)

*** ''பொருளாதாரப் போராட்டத்துக்கே ஓர் அரசியல் தன்மை கொடுக்கப்படவேண்டும்'' எனும் கோரிக்கை அரசியல் நடவடிக்கைத் துறையில் தன்னியல்புக்கு அடிபணியுந்தன்மையை மிக எடுப்பாக வெளியிடுகிறது. மிக

விட்டவர்கள் போல் ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டம்'' பற்றி இவ்வளவு ஆரவாரம் செய்கிறீர்களே, இந்தப் போராட்டத்தைத் தங்களாகவே தொழிலாளிகள் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலும், மிகத்தொலைவிலுள்ள பகுதிகளிலும் நடத்திவருகிறார்கள்; அவர்கள் வேலைநிறுத்தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள் என்றாலும் சோஷலிஸத்தைப்பற்றி அநேகமாக ஒன்றும் கேள்விப்பட்டதில்லை. தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக்கூடியதாயுள்ள ஸ்தூலமான கோரிக்கைகளை முன்வைப்பதின் மூலம் தொழிலாளிகளாகிய எங்களிடையே நீங்கள் தூண்டிவிட விரும்பும் ''நடவடிக்கையை'' நாங்கள் ஏற்கெனவே செயலில்

---

அடிக்கடி பொருளாதாரப் போராட்டம் தன்னியல்பாகவே—அதாவது, ''படிப்பாளிப் பகுதியினர் எனும் புரட்சி நுண்மங்களின்'' தலையீடின்றியே, வர்க்க உணர்வுள்ள சமூக-ஜனநாயகவாதிகளின் தலையீடின்றியே—அரசியல் தன்மை எடுத்துக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயத் தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டமும் சோஷலிஸ்டுகளின் எந்தத் தலையீடுமின்றி அரசியல் தன்மை எடுத்துக் கொண்டது. ஆனால், பொருளாதார அடிப்படையில் அரசியல் கிளர்ச்சி நடத்துவதோடு சமூக-ஜனநாயகவாதிகளின் பணி முடிந்துவிடுகிறதில்லை. அவர்களின் பணி தொழிற்சங்க வழிப்பட்ட அரசியலைச் சமூக-ஜனநாயகவாத அரசியல் போராட்டமாக மாற்றுவதும், சமூக-ஜனநாயகவாத அரசியல் உணர்வின் தரத்துக்குத் தொழிலாளிகளை உயர்த்தும் நோக்குடன் தொழிலாளிகளிடையே பொருளாதாரப் போராட்டம் உண்டாக்கிவிடும் அரசியல் உணர்வின் தீப்பொறிகளைப் பயன்படுத்துவதுந்தான். ஆனால், மார்தீனவ் வகையறா தொழிலாளிகளிடையே தன்னியல்பாக விழித்தெழும் அரசியல் உணர்வை உயர்த்தவும் தூண்டியேற்றவும் செய்வதற்குப் பதிலாகத் தன்னியல்புக்கு அடிபணிகிறார்கள், தொழிலாளிகள் அரசியல் உரிமைகள் இல்லாதிருப்பதைப்பற்றி உணர்ந்துகொள்ளும்படி பொருளாதாரப் போராட்டம் அவர்களைத் ''தூண்டி விடுகிறது'' என்று காது புளித்துவிடும் அளவுக்குத் திரும்பத்திரும்பச் சொல்லக்கொண்டிருக்கிறார்கள். பெருமான்களே, தன்னியல்பாக விழித்தெழுந்துவரும் தொழிற்சங்க வழிப்பட்ட அரசியல் உணர்வு உங்களுடைய சமூக-ஜனநாயகவாதப் பணிகளைப் புரிந்துகொள்ளும்படி உங்களைத் ''தூண்டிவிடாதது'' துரதிர்ஷ்டந்தான்!

காட்டி வருகிறோம்; மிக அடிக்கடி அறிவுஜீவிகளின் எந்த உதவியும் இல்லாமலே எங்களுடைய அன்றாட, வரம்புக் குறுக்கமுள்ள தொழிற்சங்க வேலையில் இந்த ஸ்தூலமான கோரிக்கைகளை முன்வைக்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட நடவடிக்கை எங்களுக்குப் போதாது. ''பொருளாதார வகைப்பட்ட'' அரசியல் எனும் நீர்த்துப்போன கஞ்சி மட்டும் ஊட்டப்பெறுவதற்கு நாங்கள் குழந்தைகள் அல்ல; மற்றவர்கள் தெரிந்துகொண்டுள்ள அனைத்தும் நாங்கள் அறிய விரும்புகிறோம்; அரசியல் வாழ்க்கையின் எல்லா அம்சங்களின் விபரங்களையும் நாங்கள் அறிய விரும்புகிறோம், ஒவ்வொரு அரசியல் நிகழ்ச்சியிலும் தீவிரமாகக் கலந்து கொள்ள விரும்புகிறோம். இதை நாங்கள் செய்வதற்கு, அறிவுஜீவிகள் எங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருப்பதைப் பற்றிப் பேசுவதைக் குறைத்துக்கொண்டு* எங்களுக்கு

---

* ஒரு ''பொருளாதாரவாதியிடம்'' தொழிலாளிகள் பேசுவதாகப் புனைந்த இக்கற்பனையுரை உண்மையை ஆதாரமாகக் கொண்டதே என்று நிருபிப்பதற்காக நாம் இரண்டு சாட்சிகளைக் குறிப்பிடப் போகிறோம். ஐயத்திற்கிடமின்றி அவர்களுக்குத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றி நேரடியான அறிவு உண்டு, ''வறட்டுத் தத்துவவாதிகளான'' நம்மிடம் அனுதாபம் காட்டும் போக்கு அவர்களிடம் சிறிதேனும் கிடையாது: ஏனெனில் அவர்களில் ஒருவர் ''பொருளாதாரவாதி'' (அவர் ரபோச்சியே தேலோ கூட ஓர் அரசியல் பத்திரிகைதான் என்று கருதுபவர்!), மற்றவர் ஒரு பயங்கரவாதி. முதல் சாட்சி ரபோச்சியே தேலோவின் 6ம் இதழில் ''செயின்ட் பீடர்ஸ்புர்க் தொழிலாளி வர்க்க இயக்கமும் சமூக-ஜனநாயகவாதத்தின் நடைமுறைப் பணிகளும்'' என்று தலைப்புள்ள உண்மை நிறைந்த எடுப்பான கட்டுரையை எழுதினார். அவர் தொழிலாளிகளை (1) வர்க்க உணர்வுள்ள புரட்சியாளர்கள், (2) இடைத்தட்டுப் பகுதியினர், (3) எஞ்சிய மக்கள்திரள் என்று மூன்று வகையாகப் பிரிக்கிறார். இடைத்தட்டுப் பகுதியினர் ''தங்கள் சொந்த உடனடியான பொருளாதார நலன்களை விட அரசியல் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அடிக்கடி அதிகமாக அக்கறை காட்டுகிறார்கள், அவற்றிற்கும் பொதுவான சமுதாய நிலைமைகளுக்கும் உள்ள தொடர்பை வெகுகாலமாகவே புரிந்துகொண்டிருக்கிறார்கள்'' என்று எழுதுகிறார்... ரபோச்சயா மிஸ்ல் ''கடுமையாக விமர்சிக்கப்படுகிறது'': ''அது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்

இன்னமும் தெரியாமலே இருக்கும்—எங்கள் தொழிற்சாலை அனுபவத்திலிருந்தோ, ''பொருளாதார வகைப்பட்ட'' அனுபவத்திலிருந்தோ நாங்கள் என்றைக்கும் தெரிந்து கொள்ளமுடியாததாக இருக்கும் — விஷயத்தைப்பற்றி, அதாவது அரசியல் அறிவு பற்றி எங்களிடம் அதிகமாகப் பேசவேண்டும். அறிவுஜீவிகளாகிய நீங்கள் இவ்வறிவைப் பெறமுடியும்; இதுவரை செய்ததை விட நூறு மடங்காக, ஆயிரம் மடங்காக அவ்வறிவை எங்களிடம் கொணர்வது உங்கள் கடமையாகும்; விவாதங்கள், குறுநூல்கள், கட்டுரைகள் (அவை மிக அடிக்கடி சலிப்பூட்டுவதாயுள்ளன, உடைத்துச் சொன்னதற்கு மன்னித்து விடுங்கள்) வடிவத்தில் அதை எங்களுக்குக் கொணர்வது மட்டுமின்றி நமது அரசாங்கமும் நமது ஆளும் வர்க்கங்களும் இந்த வினாடியில் எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பது பற்றிய எடுப்பான அம்பலப்படுத்தல்கள் வடிவத்திலேதான் கொண்டுவரவேண்டும். இக்கடமையைச் செய்வதில் மேலும் ஆர்வம் காட்டுங்கள், உழைக்கும் மக்களின் நடவடிக்கையைத் தட்டியெழுப்புவது'' பற்றிய

---

டிருக்கிறது, அவை நாம் வெகுகாலமாக அறிந்துவைத்திருப்பவை, வெகுகாலத்திற்குமுன்பே படித்தவை'', ''மறுபடியும் பார், அரசியல் மதிப்புரையில் ஒன்றுமே இல்லை'' (பக்கங்கள் 30-31). எனினும் மூன்றும் பகுதியினருங்கூட, ''மதுபானத்தாலோ மதத்தாலோ அவ்வளவாகக் கெடுக்கப்படாதிருக்கிற, அரசியல் இலக்கியங்கள் கைக்குக் கிடைக்கும் வாய்ப்பு அநேகமாக இல்லாத, உணர்ச்சிநுட்பமுள்ள இளந் தொழிலாளிப் பகுதியினருங்கூட எங்கெங்கோ தொட்டுப் பேசும் முறையில் அரசியல் நிகழ்ச்சிகளை விவாதிக்கிறார்கள், மாணவர் கலகங்கள் முதலியவற்றைப்பற்றிக் கிடைக்கும் துண்டு துண்டான செய்திகளைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.'' பயங்கரவாதி பின்வருமாறு எழுதுகிறார்: ''...தங்கள் ஊர் அல்லாத மற்ற ஊர்களில் உள்ள தொழிற்சாலை வாழ்க்கை பற்றி இரண்டொரு தடவை படிக்கிறார்கள், அதற்கு மேல் படிக்கிறதில்லை...அவர்களுக்கு அது அலுப்பூட்டுவதாயிருக்கிறது... ஒரு தொழிலாளர் பத்திரிகையில் அரசாங்கத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விடுவது... தொழிலாளிகளைச் சின்னக் குழந்தைகளாகக் கருதுவதாகும்... தொழிலாளிகள் சின்னக் குழந்தைகள் அல்ல'' (ஸ்வபோதா,[73] புரட்சி-சோஷலிஸ்டுக் குழு வெளியிட்டது, பக்கங்கள் 69-70).

பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நினைக்கிறதை விட எவ்வளவோ துடிப்புடன் செயலாற்றி வருகிறோம், ''தொட்டறியத்தக்க விளைவுகள்'' எதையும் அளிக்கிறதா யில்லாத கோரிக்கைகளையுங்கூட பகிரங்கமான தெருப்போர் மூலமாக நாங்கள் ஆதரிக்க முடியும்! எங்கள் நடவடிக்கை யைத் ''தட்டியெழுப்பும்'' தகுதி உங்களுக்கு இல்லை. ஏனெனில், நடவடிக்கை எனும் விஷயந்தான் உங்களிடம் பூஜ்ஜியமாயிருக்கிறது. கனவான்களே, தன்னியல்புக்கு அடி பணிவதைக் குறைத்துக் கொள்ளுங்கள், உங்கள் சொந்த நட வடிக்கையைத் தட்டியெழுப்புவது பற்றி மேலும் சிந்தி யுங்கள்!

### ஈ. பொருளாதாரவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் பொதுவாக இருப்பது என்ன?

கடைசி அடிக்குறிப்பில் ''ஒரு பொருளாதாரவாதியின்'' கருத்தையும் சமூக-ஜனநாயகவாதச் சார்பற்ற பயங்கரவாதி யின் கருத்தையும் மேற்கோள் காட்டினோம், அவர்கள் தற்செயலாக ஒருமனப்பட்டிருப்பதைக் காட்டிக்கொண்டார் கள். என்றபோதிலும், பொதுவாகச் சொன்னால், இருவரி டையேயும் ஓர் அவசியமான—தற்செயலானதல்ல—உள் ளார்ந்த தொடர்பு உண்டு, அதைப் பற்றி நாம் பின்னால் பேசவேண்டியிருக்கும், புரட்சி நடவடிக்கைக்கான கல்வி பற்றிய பிரச்சினை சம்பந்தமாக அதைப்பற்றி இங்கே சொல் லித்தீரவேண்டும்.''பொருளாதாரவாதிகளுக்கும்'' தற்காலத் திய பயங்கரவாதிகளுக்கும் தன்னியல்புக்கு அடிபணிவது எனும் பொதுவான வேர் இருக்கிறது, அதை ஒரு பொது வான நிகழ்ச்சித் தோற்றமாக முந்திய அத்தியாயத்தில் எடுத்துக் கவனித்தோம், அரசியல் நடவடிக்கை அரசியல் போராட்டம் ஆகியவற்றின் மீது அதற்குள்ள பாதிப்புடன் சம்பந்தப்படுத்திய நிலையில்இப்போது அதைப் பரிசீலிப்போம். முதற் பார்வையிலே பார்க்கும்போது, நாம் சொல்வது ஒரு முரண்மெய்யாகத் தோன்றக்கூடும்—ஏனெனில்,''சுவையற்ற அன்றாடப் போராட்டத்தை'' வலியுறுத்துகிறவர்களுக்கும் தனிநபர்களின் தியாகமிக்க போராட்டத்துக்கு அறைகூவு கிறவர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை அவ்வளவு

பெரியதாகும். என்றாலும் அது ஒன்றும் முரண்மெய் அல்ல. ''பொருளாதாரவாதிகளும்'' பயங்கரவாதிகளும் தன்னியல்பின் வெவ்வேறு கோடிகளை வழிபடுகின்றனர். ''பொருளாதாரவாதிகள்'' ''சுத்தமான தொழிலாளர் இயக்கத்தின்'' தன்னியல்பை வழிபடுகிறார்கள்; புரட்சி இயக்கத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் ஒன்றிணைந்த முழுமையாகத் தொடர்புபடுத்துவதற்கு ஆற்றலோ வாய்ப்போ இல்லாத அறிவுஜீவிகளின் வெஞ்சினத்தின் தன்னியல்பைப் பயங்கரவாதிகள் வழிபடுகின்றனர். இப்படித் தொடர்புபடுத்துவது சாத்தியம் என்று நம்பிக்கை இழந்துவிட்டவர்களுக்கு, அல்லது என்றைக்குமே நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, தங்களுடைய வெஞ்சினத்துக்கும் புரட்சிச் சக்திக்கும் பயங்கரவாதம் தவிர வேறு போக்கிடம் தேடிக்கொள்வது கஷ்டந்தான். எனவே, தன்னியல்புக்கு அடிபணியும் மேலே குறிப்பிட்ட இரண்டு வடிவங்களும் அந்தப் பழிசூழ்ந்த ''Credo''வின் வேலைத்திட்டத்தைச் செயல்படுத்துவதின் தொடக்கமே அல்லாமல் வேறொன்றுமில்லை: அதாவது, தொழிலாளிகள் ''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்க்கும்படியான தங்களுடைய பொருளாதாரப் போராட்டத்தை'' நடத்தி வரட்டும் (மார்தீனவின் சொற்களிலே தமது கருத்துக்களை வெளியிட்டதற்காக ''Credo''வின் வேலைத்திட்டத்தின் ஆசிரியர் நம்மை மன்னிப்பாராக; அப்படிச் செய்ய நமக்கு உரிமையுண்டு என்று நினைக்கிறோம், ஏனெனில் தொழிலாளிகள் பொருளாதாரப் போராட்டத்தில்''அரசியல் ஆட்சிமுறையை எதிர்த்துச்சமாளிக்கவேண்டியதாகிறது'' என்று ''Credo'' சொல்கிறது), அறிவுஜீவிகள் தமது சொந்த முயற்சிகளைக் கொண்டு—பயங்கரவாதத்தின் உதவியுடன் தான்!—அரசியல் போராட்டம் நடத்தி வரட்டும், என்ற வாறு. இது முற்றிலும் தர்க்கரீதியான, தவிர்க்கமுடியாத முடிவு, இதை வற்புறுத்தித் தீரவேண்டும்—இந்த வேலைத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியிருக்கும் பேர்வழிகள் இது தவிர்க்கமுடியாதது என்று தாமாகவே புரிந்து கொள்ளாமற் போயினுங்கூட. பயங்கரவாதத்துக்கோ, பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்க வேண்டுமென்றோ மிகச்சிறந்த நினைப்புகளோடு அறைகூவியழைக்கிறவர்களின் உணர்வுக்கும் அப்பாற்பட்டு அரசியல்

நடவடிக்கைக்குத் தனக்கே உரிய ஒரு தர்க்கமுறை உண்டு. நல்ல நினைப்புகள் நரகத்துக்கு வழியைச் செப்பனிட்டுத் தருகின்றன; இவ்வழக்கில், நல்ல நினைப்புகள் ஒருவனை ''குறைந்தபட்ச எதிர்ப்புள்ள பாதையிலே'', முற்றிலும் முதலாளிவர்க்கப் போக்கான ''Credo'' வேலைத்திட்டத்தின் பாதையிலே, தன்னியல்பாக இழுத்துச் செல்லப்படுவதிலிருந்து காப்பாற்ற முடியாது. மேலும், பல ருஷ்ய மிதவாதிகள்—வெளிப்படையாக ஒப்புக்கொள்கிற மிதவாதிகளும் சரி, மார்க்ஸிய முகமூடி அணிந்திருக்கும் மிதவாதிகளும் சரி—பயங்கரவாதத்தின்பால் முழுமனதான அனுதாபம் காட்டுவதும் தற்காலத்தில் எழுச்சிபெற்றுள்ள பயங்கரவாத மனநிலைகளை ஊக்கிவளர்க்க முயல்வதும் தற்செயலானதல்ல என்பது உறுதி.

சாத்தியமான எல்லா வழிகளிலும் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு உதவுவதெனும் குறிக்கோளை வைத்துக் கொண்டு அதே நேரத்தில் தனது வேலைத்திட்டத்தில் பயங்கரவாதத்தைச் சேர்த்துக்கொண்டும் சமூக-ஜனநாயகவாதத்திலிருந்து தொழிலாளிவர்க்க இயக்கத்தை (சொல்லப் போனால்) விடுதலை செய்வதையும் சேர்த்துக்கொண்டும் ''புரட்சிகரமான-சோஷலிஸ்டு ஸ்வபோதா குழு'' அமைக்கப் பெற்றது மீண்டும் பா. ப. அக்செல்ரோடின் குறிப்பிடத்தக்க நுண்ணறிவை உறுதிப்படுத்தியது; அவர் வெகு காலத்துக்கு முன்பே, அதாவது 1897ம் ஆண்டு இறுதியிலேயே (தற்காலப் பணிகளும் போர்த்தந்திரமும்) தமது புகழ்பெற்ற ''இரண்டு திசைவழிகளை'' உருவரை செய்தபோது சமூக-ஜனநாயகவாத ஊசலாட்டங்களின் இவ்விளைவுகளை அப்படியே முன் கூட்டிச் சொன்னார். பின்பெல்லாம் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே தோன்றிய சர்ச்சைகளும் கருத்துவேறுபாடுகளும் இந்த இரண்டு திசைவழிகளிலே* அடங்கியுள்ளன, விதைக்குள் செடி அடங்கியிருப்பது போல.

---

* மார்தீனவ் ''வேறொரு, மேலும் யதார்த்தவகைப்பட்ட [?] தர்மசங்கடத்தைக் கருத்தில் புனைகிறார்'' (சமூக-ஜனநாயகவாதிகளும் தொழிலாளி வர்க்கமும், பக்கம் 19): ''ஒன்று, சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துக்குரிய நேரடியான தலைமையை எடுத்துக்கொள்கிறார்கள், அதன் வழியாக(!) அதை

இப்பார்வைநிலையிலிருந்து பார்க்கிறபோது, ''பொருளாதாரவாதத்தின்'' தன்னியல்பை எதிர்த்துநிற்க முடியாமற் போன ரபோச்சியே தேலோ ஏன் அதேபோல் பயங்கரவாதத்தின் தன்னியல்பையும் எதிர்த்துநிற்க முடியாமற்போயிற்று என்பதும் தெளிவாகிறது. இங்கே, பயங்கரவாதத்தைத் தாங்கிப் பிடித்து ஸ்வபோதா முன்வைத்திருக்கும் குறிப்பான வாதங்களை நோக்குவது மிகவும் சுவையுள்ளதாகும். அது பயங்கரவாதத்தின் பயமுறுத்தும் பாத்திரத்தை ''முற்றுக மறுக்கிறது'' (புரட்சிவாதத்தின் மறுபிறப்பு, பக்கம் 64), அதற்குப் பதிலாக அதன் ''உணர்ச்சியைத் தூண்டும் குறிபொருளை'' வலியுறுத்துகிறது. முதலாவதாக, பயங்கரவாதத்தை வற்புறுத்திவந்த மரபுவழிப்பட்ட (சமூக-ஜனநாயகவாதத்துக்குமுந்திய) கருத்துக்களின் சுழல்வட்டம் உடைந்து நலிந்துவரும் கட்டங்களில் ஒன்றை இது குறிக்கிறது என்ற முறையில் இது இனக்குறிப்பானது. பயங்கரச்செயல்

---

ஒரு புரட்சிகரமான வர்க்கப் போராட்டமாக உருமாற்றிவிடுகிறார்கள்...'' ''அதன் வழியாக'' என்பது பொருளாதாரப் போராட்டத்துக்குரிய நேரடியான தலைமைதான் போலும். பொருளாதாரப் போராட்டத்துக்குத் தலைமை வகிப்பதால் மட்டுமே ஒரு தொழிற்சங்கவழிப்பட்ட போராட்டத்தைப் புரட்சிகரமான வர்க்கப் போராட்டமாக உருமாற்றுவதில் வெற்றிபெற்றதற்கு ஓர் உதாரணத்தையேனும் மார்தீனவ் காட்டமுடியுமா?இந்த''உருமாற்றத்தை''உண்டாக்குவதற்கு எல்லாத்துறைகளையும் தழுவிய அரசியல் கிளர்ச்சிக்கு நாம் ''நேரடியான தலைமையைத்'' தீவிரமாக எடுத்துக்கொண்டு தீரவேண்டும் என்பதை அவருக்குப் புரிந்துகொள்ள முடியவில்லையா?.. ''அல்லது, மற்ற திசைவழி: சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டத்துக்குத் தலைமை வகிக்காமல் நின்றுவிடுகிறார்கள்... அப்படிச் செய்கிறதிலே அவர்கள் தம் சொந்த இறக்கைகளையே வெட்டிக் கொள்கிறார்கள்...'' மேலே மேற்கோள் காட்டிய ரபோச்சியே தேலோவின் கருத்துப்படி இஸ்க்ராதான் இவ்வாறு ''தலைமை வகிக்காமல் நின்று விடுகிறது''. எனினும், பொருளாதாரப் போராட்டத்துக்குத் தலைமை வகிப்பதில் ரபோச்சியே தேலோவை விட இஸ்க்ரா எவ்வளவோ அதிகமாகப் பணியாற்றுகிறது, மேலும் தன்னை அத்துடன் கட்டிப்போட்டுக் கொள்ளவுமில்லை, அதற்காகத் தனது அரசியல் பணிகளைக் குறுக்கிக்கொள்ளவுமில்லை என்பதை நாம் பார்த்தோம்.

வழியே இப்போது அரசாங்கத்தைப் ''பயமுறுத்த'' முடியாது, எனவே பிளவுபடுத்த முடியாது என்று ஒப்புக்கொள்வது, போராட்டத்துக்குரிய அமைப்புமுறை என்கிற வகையில், வேலைத்திட்டம் அனுமதித்துள்ள நடவடிக்கைத் துறை என்கிற வகையில் பயங்கரவாதம் முற்றுகக் கண்டிக்கப்படுவதற்குச் சமமாகும். இரண்டாவதாக, ''மக்களின் புரட்சி நடவடிக்கைக்கான கல்வி'' சம்பந்தப்பட்ட நம் உடனடிப் பணிகளைப் புரிந்துகொள்ளத் தவறுவதற்கு ஓர் எடுத்துக் காட்டு என்கிற வகையில் இது மேலும் இனக்குறிப்பானது. தொழிலாளிவர்க்க இயக்கத்துக்குப் ''பரபரப்பூட்டும்'' சாதனமாக, ஒரு ''வலுவான தூண்டுவிசை'' அளிக்கும் சாதனமாக, பயங்கரவாதத்தை ஸ்வபோதா ஆதரித்துப் பேசுகிறது. இதைவிட முற்றுகத் தன்னைத்தானே மறுத்துக் கொள்கிற வேறொரு வாதத்தை நினைத்துப்பார்ப்பது கடினம். தனியாக ''பரபரப்பூட்டும் சாதனங்களை'' புனைந்தளிக்க வேண்டியதில்லாமலே ருஷ்ய வாழ்க்கையில் வேண்டிய அளவுக்கு அட்டூழியங்கள் நடக்கவில்லையா? மற்றொரு புறத்தில், ருஷ்யக் கொடுங்கோன்மையாலுங்கூட கிளர்ச்சியுற்றெழாதவர்கள், கிளர்ச்சியூட்டப்பெற முடியாதவர்கள் விரல்விட்டு எண்ணத்தக்க சில பயங்கரவாதிகள் தனிநபராக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுகையில் வெறுமே ''கைகட்டி நின்று'' வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்பது வெளிப்படை இல்லையா? விஷயம் என்னவென்றால், ருஷ்ய வாழ்க்கையிலுள்ள சமுதாயத் தீமைகளைக் கண்டு உழைக்கும் மக்கள் தீவிரமாகக் கிளர்ந்தெழத்தான் செய்கிறார்கள், நாம் நினைக்கிறதை விட அதிக அளவிலே ருஷ்ய வாழ்க்கை நிலைமைகளால் உண்டாக்கப்படுகிற, ஒரேயொரு மாபெரும் வெள்ளமாக இணைக்கப்படவேண்டிய மக்கள் சீற்றத்தின் துளிகள் சிற்றாறுகள் அனைத்தையும் திரட்டி ஒரு முனையில் குவிப்பதற்கு நாம்தான் திறனற்று இருக்கிறோம். இதைச் சாதிக்கமுடியும் என்று தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மாபெரும் வளர்ச்சியும் சரி, அரசியல் இலக்கியங்கள் வேண்டும் என்று கூக்குரலிடும் தொழிலாளிகளின் ஆர்வத்தைப்பற்றி மேலே குறிப்பிட்டோமே அந்த ஆர்வமும் சரி, மறுக்கமுடியாதபடி நிரூபிக்கின்றன. ஆனால், பயங்கரவாதச் செயலுக்கான அறைகூவல்களும் சரி, பொருளாதாரப்

போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்கச்சொல்லும் அறைகூவல்களும் சரி, இன்று ருஷ்யப் புரட்சியாளர்களைச் சார்ந்துள்ள மிகவும் அவசர அவசியமான பணியை—அதாவது, முழுவிரிவான அரசியல் கிளர்ச்சியைத் திரட்டியமைப்பதை—தட்டிக்கழிப்பதின் இரண்டு வெவ்வேறான வடிவங்களே தவிர வேறில்லை. "மக்களிடையே தீவிரப்படுத்தப்பட்ட, விடாமுயற்சியுள்ள கிளர்ச்சி தொடங்கப்பட்டவுடன் பயங்கரவாதச் செயலின் பரபரப்பூட்டும் வேலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்" (புரட்சிவாதத்தின் மறுபிறப்பு, பக்கம் 68) என்று ஒப்புக்கொள்ளும் ஸ்வபோதா கிளர்ச்சிக்குப் பதிலாக பயங்கரவாதத்தை வைக்க விரும்புகிறது. வசந்தகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எடுப்பான சான்று அளித்திருந்துங்கூட,* பயங்கரவாதிகளும் "பொருளாதாரவாதிகளும்" ஒருங்கே மக்களின் புரட்சி நடவடிக்கையைக் குறைத்துமதிப்பிடுகிறார்கள் என்று இது நிரூபிக்கிறது; ஒரு குழு செயற்கையான "பரபரப்பூட்டும் சாதனங்களைத்" தேடிச் செல்கிறது, மற்றொரு குழு "ஸ்தூலமான கோரிக்கைகள்" பற்றிப் பேசுகிறது. ஆனால், அரசியல் கிளர்ச்சியிலும் அரசியல் அம்பலப்படுத்தல்களைத் திரட்டியமைப்பதிலும் தம் சொந்த நடவடிக்கையை வளர்த்துக்கொள்வதில் இவ்விரு குழுக்களும் போதிய கவனம் செலுத்தத் தவறுகின்றன. இப்பணிக்குப் பதிலாக வேறெந்த வேலையும் உதவாது—இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி.

### உ. ஜனநாயகத்துக்கு முன்னணிப் போராளி தொழிலாளி வர்க்கம்

மிக விரிந்த அளவில் அரசியல் கிளர்ச்சி நடத்துவதும், அதன் விளைவாகப் பன்முகமான அரசியல் அம்பலப்படுத்தல்களை நடத்துவதும் நம் நடவடிக்கையின் இன்றியமையாத பணியாகும், தலையாய பணியாகும், அப்போதுதான் நம் நடவடிக்கை சமூக-ஜனநாயகவாத வழிப்பட்ட நடவடிக்கை

* 1901ம் ஆண்டு வசந்த காலத்தில் தொடங்கிய பெரும் ஆர்ப்பாட்டங்கள். (1907ம் பதிப்புக்கு ஆசிரியர் வரைந்த குறிப்பு.—ப-ர்.)

யாக இருக்கும், என்று கண்டோம். அரசியல் அறிவும் அரசியல் பயிற்சியும் தொழிலாளிவர்க்கத்துக்கு அவசர அவசியத் தேவைகளாக இருப்பதை மட்டுமே அடிப்படை யாக வைத்து இம்முடிவுக்கு வந்தோம். ஆனால் இது பிரச்சினை யை மிகவும் குறுக்கி முன்வைப்பதாகும், ஏனெனில் இது சமூக-ஜனநாயகவாதத்தின்—குறிப்பாக, தற்கால ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் — பொதுவான ஜனநாயகப் பணிகளைப் புறக்கணிக்கிறது. விஷயத்தை மேலும் ஸ்தூலமாக விளக்கவேண்டி ''பொருளாதாரவாதிக்கு மிகவும் நெருங்கிய'' அம்சமான நடைமுறை அம்சத்திலிருந்து அணுகுவோம். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வை வளர்ப்பது அவசியம் என்று ''எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்''. ஆனால், இதை எப்படிச் செய்வது, செய்வதற்கு ஏது தேவை என்பதே கேள்வி. தொழிலாளிவர்க்கத்தின்பால் அரசாங் கத்துக்கு இருக்கிற கண்ணோட்டத்தைத் தொழிலாளிகள் புரிந்துகொள்ள மட்டுமே பொருளாதாரப் போராட்டம் ''தூண்டிவிடுகிறது''. ஆகவே, ''பொருளாதாரப் போராட் டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்க'' நாம் எவ்வளவு தான் முயன்றாலும் பொருளாதாரப் போராட்டத்தின் கட்டுக் கோப்புக்குள்ளே இருந்துவருவதின் மூலமாக நாம் தொழி லாளிகளின் அரசியல் உணர்வை (சமூக-ஜனநாயகவாத அர சியல் உணர்வின் தரத்துக்கு) வளர்ப்பது என்றைக்கும் சாத்தியமில்லை; காரணம், அந்தக் கட்டுக்கோப்பு மிகவும் குறு கியதாகும். மார்தீனவ் சூத்திரம் நமக்குச் சற்று மதிப்புடை யது—விஷயங்களைக் குழப்புவதில் மார்தீனவுக்குள்ள சுவைத் திறத்தை அது காட்டுகிறது என்கிற காரணத்துக்காக அல்ல, எல்லாப் ''பொருளாதாரவாதிகளும்'' செய்கிற அடிப்படை யான தவற்றை அது முனைப்பாக வெளியிடுகிறது என்கிற காரணத்துக்காக. அந்த அடிப்படையான தவறு, உள்ளிருந்து என்று சொல்லக் கூடியமுறையில், பொருளாதாரப் போராட் டத்திலிருந்து — அதாவது பொருளாதாரப் போராட்டத் தையே தனிமுழுமையான (அல்லது, குறைந்தபட்சம் முதன்மையான) தொடக்கப்புள்ளியாகவும் அடிப்படையாக வும் கொண்டு—தொழிலாளிகளின் வர்க்க அரசியல் உணர் வை வளர்ப்பது சாத்தியம் என்கிற அவர்களின் துணிபாகும். இப்படிப்பட்ட கருத்து ஓர் ஆழ்ந்த தவறாகும். நாம்

''பொருளாதாரவாதிகளை'' எதிர்த்துச் சர்ச்சை செய்வதால் மனத்தாங்கலுற்று அவர்கள் இந்தக் கருத்துவேறுபாடுகளின் மூலாதாரங்களைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க மறுக்கிறார்கள்; இதனால் நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாமலே போகிறது. வெவ்வேறு மொழிகளில் நாம் பேசுவது போல் இருக்கிறது.

தொழிலாளிகளுக்கு வர்க்க அரசியல் உணர்வு வெளியிலிருந்து மட்டுமே—அதாவது, பொருளாதாரப் போராட்டத்திற்கப்பால் வெளியிலிருந்துதான், தொழிலாளிகள் முதலாளிகள் இடையேயுள்ள உறவுகளின் துறைக்கப்பால் வெளியிலிருந்துதான்—கொண்டுவரமுடியும். அரசுபாலும் அரசாங்கத்தின்பாலும் எல்லா வர்க்கங்களுக்கும் மக்கட்பகுதிகளுக்கும் இருக்கும் உறவுமுறைகளின் துறையிலிருந்து மட்டுமே, எல்லா வர்க்கங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவுமுறைகளின் துறையிலிருந்து மட்டுமே, இந்த அறிவைப் பெறுவது சாத்தியம். தொழிலாளிகளிடம் அரசியல் அறிவு கொண்டுவருவதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேள்வி கேட்டால் ''தொழிலாளிகளிடையே செல்லுங்கள்'' என்றுவிடையளிப்பதோடு பெரும்பான்மையான ஊழியர்கள், குறிப்பாக ''பொருளாதாரவாதத்தின்'' பக்கம் சாய்ந்துள்ள ஊழியர்கள், திருப்திப்பட்டு விடுகிறார்கள், ஆனால் இது மட்டும் விடையாக முடியாது; காரணம், மேலே சொன்னதுதான். தொழிலாளிகளிடம் அரசியல் அறிவு கொண்டுவருவதற்கு சமூக-ஜனநாயகவாதிகள் மக்களைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடையேயும் செல்லவேண்டும்; தம் படைப் பிரிவுகளை எல்லாத் திசைகளிலும் அனுப்பிவைக்கவேண்டும்.

வேண்டுமென்றே இந்த ஒளிவுமறைவற்ற சூத்திரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம், வேண்டுமென்றே மிகவும் எளிதாக்கப்பட்ட இந்த முறையிலே நம் கருத்தை வெளியிடுகிறோம்—காரணம், நாம் முரணுண்மைகளில் ஈடுபடவேண்டுமென்கிற விருப்பத்தால் அல்ல, மன்னிக்கத் தகாதவாறு புறக்கணித்துவரும் தமது பணிகளைப் ''பொருளாதாரவாதிகள்'' அறிந்துபுரிந்துகொள்ளத் ''தூண்டுவதற்காகத்''தான்; தொழிற்சங்கவாத அரசியலுக்கும் சமூக-ஜனநாயகவாத அரசியலுக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ள மறுத்துவருகிறார்களே, அந்த வேற்றுமையை அவர்களுக்குப்

பலமாக உணர்த்துவதற்காகத்தான். ஆகவே வாசகர் பதற்ற மடையாமல் நாம் சொல்வதைப் பொறுமையுடன் கடைசி வரை கேட்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

சென்ற சில ஆண்டுகளில் மிகப் பரவலாகிவிட்டிருக் கும் சமூக-ஜனநாயகவாதப் பயிற்சிக் குழுவின் மாதிரிப் படிவத்தை எடுத்துக்கொண்டு அதன் வேலையைப் பரிசீலிப் போம். அது ''தொழிலாளிகளுடன் தொடர்புகள்'' வைத்தி ருக்கிறது, அத்துடன் திருப்தியடைந்து விடுகிறது, தொழிற் சாலைகளில் நடக்கும் அநீதிகளையும் முதலாளிகளின் பக்கம் அரசாங்கம் நிற்பதையும் போலீஸின் கொடுங்கோன்மையை யும் வன்மையாகக் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளி யிடுகிறது. தொழிலாளர் கூட்டங்களில் நடக்கும் விவாதங் கள் இவ்விஷயங்களின் வரம்பைத் தாண்டிப் போவதே கிடையாது, போவது அரிதினும் அரிதுதான். புரட்சி இயக் கத்தின் வரலாறு, நம் அரசாங்கத்தின் உள்நாட்டு வெளிநாட் டுக் கொள்கைகள் பற்றிய பிரச்சினைகள்,ருஷ்யாவின் ஐரோப் பாவின் பொருளாதாரப் பரிணாமவளர்ச்சி பற்றிய பிரச்சினை கள், தற்காலச் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களின் நிலை, முதலியவற்றைப்பற்றி விரிவுரைகளும் விவாதங்களும் நடப்பதும் மிகமிக அரிதுதான். சமுதாயத்தின் மற்ற வர்க் கங்களோடு திட்டமுறைப்படி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு விரிவுபடுத்துவதைப் பற்றி யாரும் கனவிலுங்கூடச் சிந்திப்பதில்லை. உண்மையாகச் சொன்னால், ஒரு சோஷலிஸ்டு அரசியல் தலைவன் என்கிறதைவிட தொழிற்சங்கச் செயலா ளர் எனும் தன்மையிலேதான் இலட்சியத் தலைவனைச் சித்தி ரித்துக் கொண்டிருக்கிறார்கள் பெரும்பான்மையான குழு உறுப்பினர்கள். ஏனெனில், எந்தத் தொழிற்சங்கச் செயலா ளரையாவது (எடுத்துக்காட்டாக ஆங்கிலேயத் தொழிற் சங்கத்தின் செயலாளரை) பாருங்கள்: அவர் பொருளாதாரப் போராட்டத்தைத் தொழிலாளிகள் நடத்திக்கொண்டிருக்க எப்போதும் உதவிவருகிறார், தொழிற்சாலையில் நடக்கும் அநீதிகளை அம்பலப்படுத்த அவர்களுக்கு உதவுகிறார், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையையும் மறியல் செய்யும் (அதாவது, குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடக்கிறதென்று எல்லோரையும் எச்சரிக்கை செய்யும்) உரிமையையும் தடங்கல் செய்கிற சட்டங்களிலும் நடவடிக்

கைகளிலும் உள்ள அநீதியை விளக்குகிறுர், முதலாளித்துவப் போக்கான வர்க்கங்களைச் சேர்ந்த மத்தியஸ்தத் தீர்ப்பு மன்ற நீதிபதிகளின் ஓரவஞ்சனையை விளக்குகிறுர், என்றவாறு சொல்லிக் கொண்டே போகலாம். சுருங்கச் சொன்னுல், ஒவ்வொரு தொழிற்சங்கச் செயலாளரும் ''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்த்துப் பொருளாதாரப் போராட்டத்தை'' நடத்துகிறுர், நடத்த உதவுகிறுர். இருந்தாலும் இது சமூக-ஜனநாயகவாதம் அல்ல, சமூக-ஜனநாயக வாதியின் இலட்சியம் தொழிற்சங்கச் செயலாளர் என்று இருக்கவே கூடாது, மக்களின் பிரதிநிதி என்றிருக்கவேண்டும் என்று எவ்வளவு வலியுறுத்திச் சொன்னுலும் தகும். இந்த மக்களின் பிரதிநிதி கொடுங்கோன்மையின் ஒடுக்குமுறையின் ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும்—அது எங்கு வெளிப்பட்டாலும் சரி, மக்களின் எந்தப் பிரிவையோ வர்க்கத்தையோ பாதித்தாலும் சரி—பதில் நடவடிக்கை எடுக்கத் திறமுள்ளவராக இருக்கவேண்டும்; இந்த வெளிப்பாடுகளையெல்லாம் பொதுவரையறை செய்து போலீஸ் வன்முறை, முதலாளித்துவச் சுரண்டல் பற்றிய ஒரேயொரு சித்திரத்தைத் தீட்டித்தரும் திறமுள்ளவராக இருக்க வேண்டும்; தனது சோஷலிஸ்டுத் துணிபுகளையும் ஜனநாயகக் கோரிக்கைகளையும் எல்லோருடைய முன்னிலையில் வைத்து விளக்கும் நோக்குடன் பாட்டாளி வர்க்க விடுதலைப் போராட்டத்தின் உலக வரலாற்றுச்சிறப்புள்ள குறிபொருளை எல்லோருக்கும் தெளிவுபடுத்தும் நோக்குடன், ஒவ்வொரு நிகழ்ச்சியையும்—அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் சரி—பயன்படுத்திக் கொள்ளும் திறமுள்ளவராக இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, ராபர்ட் நைட் போன்ற ஒரு தலைவரை (இவர் இங்கிலாந்திலுள்ள வலுமிக்க தொழிற்சங்கங்களில் ஒன்ருகிய கொதிகலன் செய்வோர் சங்கத்தின் நாடறிந்த செயலாளரும் தலைவருமாவார்) வில்ஹெல்ம் லீப்க்னெஹ்டுடன் ஒப்பிட்டுப் பாருங்கள், இஸ்க்ராவுடன் தாம் நடத்தும் சர்ச்சையில் மார்தீனவ் வரைந்துகாட்டும் வேறுபாடுகளை அவ்விருவருக்கும் பொருத்திப்பார்க்க முயலுங்கள். நீங்கள் காண்பீர்கள்—மார்தீனவ் கட்டுரையைப் புரட்டியவாறு சொல்கிறேன்: ராபர்ட் நைட் ''சில ஸ்தூலமான நடவடிக்கைகளுக்கு மக்களை அறைகூவியழைப்பதில்'' (மேலே குறிப்பிட்

டது, பக்கம் 39) அதிகமாக ஈடுபட்டிருக்கிருரென்ருல் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் ''தற்கால அமைப்புமுறை முழுவதையோ அதன் அரைகுறையான வெளிப்பாடுகளையோ புரட்சிகரமான வழியிலே விரித்து விளக்குவதில்'' (பக்கம் 38-39) அதிகமாக ஈடுபட்டிருக்கிருர், என்று; ராபர்ட் நைட் ''பாட்டாளி வர்க்கத்தின் உடனடிக் கோரிக்கைகளை வரையறுத்து அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் காட்டினுர்'' (41) என்ருல், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் அதைச் செய்கிறபொழுதே ''அதே நேரத்தில் பல்வேறு எதிர்ப்புநிலையிலுள்ள மக்கட்பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதிலிருந்தும்'', ''அவற்றிற்கு உருப்படியான செயல் வேலைத்திட்டத்தை வகுத்தளிப்பதிலிருந்தும்'' (41) பின்வாங்கவில்லை*, என்று; ராபர்ட் நைட் ''முடிந்தவரை பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்க'' (42) முயன்ருர், ''தொட்டறியத்தக்க குறிப்பான விளைவுகள் அளிக்கக்கூடிய ஸ்தூலமான கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைப்பதில்'' (43) சிறந்த திறமை பெற்றிருந்தார் என்ருல், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் ''ஒருதலையான'' ''அம்பலப்படுத்தல்களில்'' (40) அதைவிட அதிகமாக ஈடுபட்டிருந்தார், என்று; ராபர்ட் நைட் ''சுவையற்ற அன்ருடப் போராட்டத்தின் முன்னேற்றத்துக்கு'' (61) எவ்வளவோ அதிகமான குறிபொருளைக் கற்பித்தார் என்ருல், லீப்க்னெஹ்ட் ''ஒளி நிறைந்த, முழுவடிவுள்ள கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதற்கு'' (61) மேலும் அதிகமான குறிபொருள் கற்பித்தார், என்று; லீப்க்னெஹ்ட் வழிசெலுத்திவந்த பத்திரிகையை ''மக்களின் மிக வேறுபட்ட பகுதிகளின் நலன்களைப் பாதிக்கிறதாயுள்ள நம் நாட்டு நிலவரங்களை, குறிப்பாக அரசியல் நிலவரங்களை, அம்பலப்படுத்தும் புரட்சிகரமான எதிர்க்கட்சிப் பத்திரிகையாக'' (63) மாற்றினுர் என்ருல், ராபர்ட் நைட் ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு

---

* எடுத்துக்காட்டாக, பிரான்ஸ்-பிரஷ்யா போர் நடந்த போது ஜனநாயகம் முழுவதற்கும் லீப்க்னெஹ்ட் செயல் வேலைத்திட்டம் வகுத்தளித்தார்; அதைவிட அதிகமாக இப்பணியை மார்க்ஸும் எங்கெல்ஸும் 1848ல் செய்தனர்.

கொண்டு தொழிலாளி வர்க்க இலட்சியத்துக்குப் பணியாற்றினர்'' (63)—அதாவது, கிரிச்சேவ்ஸ்கி, மார்தீனவ் ஆகியவர்களின் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு தன்னியல்புக்கு அடிபணிவதை மேலே பரிசீலித்தோமே, அதுதான் ''நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு'' என்பதற்குப் பொருள் ஆகுமென்ருல்—மற்றும், ''தமது செல்வாக்கின் பரப்பைக் குறுக்கிக்கொண்டார்''— ''அவ்வாறு செய்ததிலே அந்தச் செல்வாக்கை ஆழமாக்கிக் கொண்டார்'' (63) என்பது மார்தீனவின் திடநம்பிக்கை—என்று. சுருங்கச் சொன்னுல், மார்தீனவ் சமூக-ஜனநாயகவாதத்தைத் தொழிற்சங்கவாதத்தின் மட்டத்துக்கு நடைமுறையளவில் தாழ்த்துகிறதைப் பார்ப்பீர்கள்—காரணம், அவர் சமூக-ஜனநாயகவாதத்தின் நன்மையை விரும்பவில்லை என்பதல்ல, பிளெஹானவைப் புரிந்துகொள்ளச் சிரமம் எடுத்துக்கொள்ளாமல் அவரது அறிவை ஆழப்படுத்துவதில் மார்தீனவ் சற்று மிதமிஞ்சிய அவசரம் காட்டுகிருர்.

நிற்க, நமது ஆய்வுரைக்குத் திரும்பிவருவோம். தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் உணர்வை முழுவிரிவாக வளர்ப்பது அவசியம் என்று உண்மையில் ஒரு சமூக-ஜனநாயகவாதி நம்புகிருரென்ருல் அவர் ''மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் போவது'' அவசியம் என்று சொன்னேம். இதை எப்படிச் செய்வது? செய்வதற்குப் போதிய சக்திகள் நம்மிடம் உள்ளனவா? மற்றெல்லா வர்க்கங்களிடையேயும் இப்படிப்பட்ட வேலை செய்வதற்கு அடிப்படை இருக்கிறதா? இது வர்க்கப் பார்வைநிலையிலிருந்து பின்வாங்குவது, பின்வாங்குவதில் கொண்டுபோய் விடும், என்று பொருள்படாதா?—எனும் கேள்விகள் இதிலிருந்து எழுகின்றன. இக்கேள்விகளைக் கவனிப்போம்.

தத்துவாசிரியர்கள், பிரச்சாரகர்கள், கிளர்ச்சியாளர்கள், அமைப்பாளர்கள் என்கிற வகையில் நாம் ''மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் போக'' வேண்டும். பல்வேறு வர்க்கங்களின் சமுதாய, அரசியல் நிலைமையின் தனிக்குறிப்பான எல்லா உருக்கூறுகளையும் பயில்வதே சமூக-ஜனநாயகவாதிகளின் தத்துவார்த்தப் பணி குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. ஆனுல், தொழிற்சாலை வாழ்க்கையின் தனிக்குறிப்பான

உருக்கூறுகளைப் பயில்வதில் ஆற்றியிருக்கும் பணியோடு ஒப்பிடும்போது இத்துறையில் ஆற்றிவருவது மிகச் சொற்பமே. ஏதாவதொரு உலோகத் தொழிற்கிளையைக்கூட பயில்வதில் மூழ்கியிருக்கும் நபர்களைக் கமிட்டிகளிலும் பயிற்சிக் குழுக்களிலும் சந்திக்கமுடியும், ஆனால் பிற மக்கட்பிரிவுகளிடையே சமூக-ஜனநாயகவாதப் பணி செய்வதற்குச் சாதனமாகப் பயன்படமுடிகிற மாதிரி ஏதாவதொரு அவசர அவசியமான சமுதாய-அரசியல் பிரச்சினை குறித்து விஷயங்களைத் திரட்டுவதில் குறிப்பாக ஈடுபட்டுள்ள அமைப்புகளின் உறுப்பினர்களை (அடிக்கடி நிகழ்கிற மாதிரி, ஏதாவதொரு காரணத்திற்காக நடைமுறைப் பணியைக் கைவிடவேண்டி நேரிடும் உறுப்பினர்களை) காண்பது அரிதாகும். தொழிலாளிவர்க்க இயக்கத்தின் தற்காலத்திய தலைவர்கள் பயிற்சியற்றிருக்கும் விஷயத்தைப் பற்றிப் பேசுகையில் இது சம்பந்தப்பட்ட பயிற்சி பற்றியும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது; காரணம், இதுவும் ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு'' பற்றிய ''பொருளாதாரவாதக்'' கருத்தோட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. உண்மைதான், எல்லா மக்கட்பிரிவுகளிடையேயும் பிரச்சாரமும் கிளர்ச்சியும் நடத்துவதே முதன்மையான விஷயம். எல்லோரும் வந்து கேட்கிற மாதிரி பொதுக்கூட்டங்களும் தன்னியல்பாகக் கூடிய கூட்டங்களும் இருப்பதும், நாடாளுமன்றத்தில் எல்லா வர்க்கங்களின் பிரதிநிதிகளையும் நோக்கி உரை நிகழ்த்த முடிவதும் இந்த அம்சத்தில் மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகவாதியின் வேலைக்கு வசதியாயுள்ளது. நமக்கு நாடாளுமன்றமும் இல்லை, கூட்டம் கூடிப் பேசும் உரிமையும் இல்லை. என்றபோதிலும், ஒரு சமூக ஜனநாயகவாதியின் பேச்சைக் கேட்க விரும்பும் தொழிலாளர் கூட்டங்களை நாம் ஏற்பாடு செய்ய முடிகிறது. ஒரு ஜனநாயகவாதியின் பேச்சைக் கேட்க விரும்புகிற எல்லா வர்க்கங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டங்களை ஏற்பாடுசெய்வதற்கான வழிவகைகளையும் நாம் தேடிக் கொள்ளவேண்டும். ஏனெனில், ''ஒவ்வொரு புரட்சிகரமான இயக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள்''[74] என்பதையும், அக்காரணத்தால் நமது சோஷலிஸ்டுத் துணிபுகளை ஒரு கணமேனும் மூடிமறைக்காமல் எல்லா மக்கள் முன்

னிலையில் பொதுவான ஜனநாயகப் பணிகளை நாம் விளக்கி வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் மறக்கிறவன் சமூக-ஜனநாயகவாதி அல்ல. ஒவ்வொரு பொதுவான ஜனநாயகப் பிரச்சினையையும் எழுப்புவதிலும், வற்புறுத்துவதிலும், தீர்ப்பதிலும் எல்லோரையும் முந்திக் கொண்டு நிற்கவேண்டிய தனது கடமையை நடைமுறையில் மறக்கிறவன் சமூக-ஜனநாயகவாதி அல்ல.

''இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்களே, பிறகென்ன!'' என்று பொறுமையற்ற வாசகர் கூவுவார்; மேலும், வெளிநாட்டுச் சங்கத்தின் கடைசி மாநாடு ரபோச்சியே தேலோவின் ஆசிரியர் குழுவுக்காக நிறைவேற்றிய புதிய கட்டளைகள் ''பாட்டாளி வர்க்கத்தை நேரடியாக ஒரு தனி வர்க்கம் என்கிற வகையிலோ, விடுதலைப் போராட்டத்தில் எல்லாப் புரட்சிகரமான சக்திகளுடைய முன்னணிப்படை என்கிற வகையிலோ பாதிக்கிறதாய் சமுதாய அரசியல் வாழ்க்கையிலுள்ள எல்லா நிகழ்ச்சிகளும் அரசியல் பிரச்சாரத்துக்கும் கிளர்ச்சிக்கும் உரிய விஷயங்களாகப் பயன்பட வேண்டும்'' என்று திட்டவட்டமாகக் கூறுகின்றன (இரண்டு மாநாடுகள், பக்கம் 17; கொட்டை யெழுத்திட்டது நாம்). ஆம், இவை மிக உண்மையான வார்த்தைகள், மிக நல்ல வார்த்தைகள்தாம். இவற்றை ரபோச்சியே தேலோ புரிந்து கொண்டால் சரி, அவற்றிற்கு முரணான விஷயங்களை அடுத்த மூச்சில் சொல்லாமல் இருந்தால் சரி, நாங்கள் முழுத் திருப்தியடைவோம். ஏனென்றால், நம்மை ''முன்னணிப்படை'' என்று, முன்னேறிய படையணி என்று, அழைத்துக்கொண்டால் போதாது. நாம் முன்னணியில் நடை போடுகிறோம் என்று மற்ற எல்லாப் படையணிகளும் அங்கீகரிக்கிற முறையில், ஒப்புக் கொண்டுதீரவேண்டிய முறையில், நாம் செயலாற்றவேண்டும். வாசகரை வினவுகிறோம்: நம்மை ''முன்னணிப்படை'' என்று சொல்லிக்கொண்டவுடன் நம் வார்த்தையையே சான்றாக எடுத்துக்கொள்ளும் அளவுக்கு மற்ற ''படையணிகளின்'' பிரதிநிதிகள் முட்டாள்களா? நீங்களே இப்படிச் சித்திரித்துக் கொண்டு பாருங்கள்: ருஷ்யாவின் படித்த தீவிரவாதிகளின் அல்லது மிதவாத அரசியல்சட்டப் பற்றாளர்களின்''படையணியிடம்''ஒரு சமூக-ஜனநாயகவாதி வந்து, நாங்கள்தான் முன்னணிப்படை, ''முடிந்தவரை

பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பதுதான் இன்று எங்கள் முன் இருக்கும் பணி'' என்று சொல்கிறுன். அந்தத் தீவிரவாதியோ அரசியல் சட்டப்பற்றுளரோ சிறிதேனும் அறிவுள்ளவராயிருந்தால் (ருஷ்யத் தீவிரவாதிகளிடையே, அரசியல் சட்டப்பற்றுளர்களிடையே, அறிவுள்ளவர்கள் நிறையவே இருக்கிறுர்கள்) இந்தப் பேச்சைக் கேட்டு நகைத்துச் சொல்வான் (தனக்குள் சொல்லிக்கொள்வான் என்பதே உண்மை, ஏனெனில் அவர்களில் பெரும்பான்மையினர் அனுபவமிக்க இராஜதந்திரிகள்): ''உங்கள் 'முன்னணிப்படை' ஏமாளிகளின் படையாக இருக்க வேண்டும். ஏனெனில், தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டத்துக்குத் தன்னளவில் அரசியல் தன்மை கொடுப்பது முதலாளித்துவ ஜனநாயகத்தின் முற்போக்கான பிரதிநிதிகளாகிய எங்கள் பணி என்றுகூட அது புரிந்துகொள்ளவில்லே. அவ்வளவு ஏன், நாங்கள்கூடத்தான், மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவப் போக்குள்ள நபர் போல், தொழிலாளிகளே அரசியலில்—தொழிற்சங்க வகைப்பட்ட அரசியலிலேதான், சமூக-ஜனநாயகவாத அரசியலில் அல்ல—ஈடுபடுத்த விரும்புகிறேம். தொழிலாளிவர்க்கத்தின் தொழிற்சங்கவகைப்பட்ட அரசியல் என்பது தொழிலாளிவர்க்கத்தின் முதலாளித்துவப் போக்கான அரசியலே; இந்த 'முன்னணிப்படை' தன் பணியைப் பற்றி வைத்துள்ள வரையறுப்பு தொழிற்சங்க வகைப்பட்ட அரசியல் பற்றிய வரையறுப்புதான்! தங்களே சமூக-ஜனநாயகவாதிகள் என்று நெஞ்சு நிறையச் சொல்லிக் கொள்ளட்டும், லேபிளேப் பற்றிப் பரபரப்படைவதற்கு நான் குழந்தையல்ல. ஆனுல், கேடு விளேக்கும் அந்த வைதீக வறட்டுச்சூத்திரவாதிகளின் செல்வாக்கின்கீழ் அவர்கள் விழக்கூடாது, தங்களேயறியாமலே சமூக-ஜனநாயகவாதத்தைத் தொழிற்சங்க வகைப்பட்ட பாதையில் செலுத்திக்கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் 'விமர்சனச் சுதந்தரம்' அளிக்கட்டும்'' என்று.

நம் இயக்கத்தின் மீது தன்னியல்பு முற்றுக ஆதிக்கம் செலுத்திவரும் இன்றைய நாளில் சமூக-ஜனநாயகவாதமே முன்னணிப்படை என்று பேசுகிற சமூக-ஜனநாயகவாதிகள் தாம் ''தன்னியல்பான அம்சத்தைச் சிறுமைப்படுத்துவது'', ''ஒளிமிக்க, முழுவடிவுள்ள கருத்துக்களேப் பிரச்சாரம் செய்

வதுடன் ஒப்புநோக்கும்போது சுவையற்றதாயுள்ள அன்றாடப் போராட்டத்தின் முன்னேற்ற இயக்கத்தின் குறிபொருளைச் சிறுமைப்படுத்துவது'', முதலியவற்றைப் பற்றி அஞ்சுவது போல் வேறெதைப் பற்றியும் அஞ்சுவதில்லை! இதை அறியும் போது நம் சட்டப்பற்றாளனின் முகத்திலாடும் நகை போய் வெடிக்கச் சிரித்துவிடுவான். தன்னியல்பை உணர்வு மிஞ்சிவிடுமே என்று பயப்படுகிற ''முன்னணிப்படை'' இது. நம்முடன் கருத்து வேறுபாடுள்ளவர்கள் கூட பொதுவாக அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடிய ஒரு தைரிய மான ''திட்டத்தை'' முன்வைக்கப் பயப்படுகிற முன்னணிப் படை இது. இவர்கள் ''கடைகோடிப் படையை'' ''முன் னணிப்படை'' என்று குழப்பிக் கொள்ளவில்லையா?

உண்மையாகவே, மார்தீனவின் பின்வரும் வாதத்தைப் பரிசீலிப்போம். 40ம் பக்கத்தில் அவர் சொல்கிறார்: அநீதி களை அம்பலப்படுத்தும் போர்த்தந்திரத்தில் இஸ்க்ரா ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது என்று, ''அரசாங்கத்தின்பால் எவ்வளவுதான் தாம் அவநம்பிக்கையும் பகைமையும் பரப்பினாலும் சரி, அதைத் தூக்கியெறிவதற்குப் போதிய செயல்துடிப்புள்ள சமுதாயச் சக்தியை வளர்ப்பதில் வெற்றி பெறும் வரை நம் குறிக்கோளைச் சாதித்துக்கொள்ள மாட் டோம்'' என்று. இடைத்தொடராகச் சொல்வதென்றால், தன் சொந்த நடவடிக்கையைக் குறுக்கிக்கொள்ள முயற்சிக் கிற அதே நேரத்தில் மக்களைச் செயலிறக்குவதில் வழக் கமாகக் காட்டும் கரிசனமே இது. ஆனால், இப்போது இது முக்கிய விஷயம் அல்ல. இங்கே மார்தீனவ் (''தூக்கியெறிவ தற்கு வேண்டிய'') புரட்சிகரமான சக்தி பற்றிப் பேசுகிறார். அவர் எந்த முடிவுக்கு வருகிறார்? சாதாரண காலங்களிலே பல்வேறு சமுதாயப் பிரிவுகள் தவிர்க்கவியலாத நிலையில் தனித்தனியே நடையிடுவதால் ''எனவே, சமூக-ஜனநாயக வாதிகளாகிய நாம் ஒரே நேரத்தில் பல்வேறு எதிர்ப்புப் பகுதிகளின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட முடியாது, அவற்றிற்கு ஒரு நேர்படியான செயல்வேலைத்திட்டத்தைக் கொடுக்க முடியாது, தங்கள் நலன்களுக்காக எவ்வகையில் அன்றாடப் போராட்டத்தை நடத்தவேண்டும் என்று சுட்டிக் காட்ட முடியாது என்பது தெளிவு... மிதவாத மக்கட்பிரிவு கள் தங்களுடைய உடனடி நலன்களுக்கான தீவிரமான

போராட்டத்தை, நமது அரசியல் ஆட்சி முறையை அவை நேருக்கு நேர் சந்திக்கும்படி செய்கிற போராட்டத்தைத் தாங்களே கவனித்துக் கொள்வார்கள்'' (பக்கம் 41) என்று. ஆக, புரட்சிகரமான சக்தி பற்றியும் எதேச்சாதிகார ஆட்சி முறையைத் தூக்கியெறிவதற்கான தீவிரமான போராட்டம் பற்றியும் பேசத் தொடங்கிய மார்தீனவ் உடனே தொழிற் சங்கச் சக்தியை நோக்கியும் உடனடி நலன்களுக்கான தீவிர மான போராட்டத்தை நோக்கியும் திரும்பிவிடுகிறார்! மாண வர்கள், மிதவாதிகள் முதலானோர் தமது ''உடனடி நலன்களுக் காக'' நடத்தும் போராட்டத்துக்கு நாம் வழிகாட்ட முடி யாது என்பது வெளிப்படை. ஆனால், மதிப்புமிக்க ''பொரு ளாதாரவாதியே'', விவாதத்திலிருக்கும் விஷயம் அது அல்ல! எதேச்சாதிகார ஆட்சிமுறையைத் தூக்கியெறிவதில் பல்வேறு சமுதாயப் பகுதிகள் சாத்தியமான, அவசியமான பங்காற்றுவது எனும் விஷயத்தைத் தான் விவாதித்துக் கொண்டிருந்தோம்; மேலும், நாம் ''முன்னணிப்படையாக'' விளங்க விரும்பினால் ''பல்வேறு எதிர்ப்புப்பகுதிகளின் இந்த நடவடிக்கைகளுக்கு'' வழிகாட்ட நம்மால் முடியும் என்பது மட்டுமல்ல, வழிகாட்டுவது நம் தீராக் கடமையுமாகும். நமது மாணவர்கள், மிதவாதிகள், முதலானோர் ''நம் அரசி யல் ஆட்சி முறையை அவர்கள் நேருக்கு நேர் சந்திக்கும்படி செய்கிற போராட்டத்தைத்'' தாங்களே கவனித்துக் கொள்வார்கள் என்பது மட்டுமின்றி யதேச்சாதிகார அர சாங்கத்தின் போலீஸும் அலுவலர்களும் அவ்விதமே நடக் கும்படி முதன்மையாகக் கவனித்துக் கொள்வார்கள். ஆனால், ''நாம்'' முன்னணி ஜனநாயகவாதிகளாக இருக்க விரும்பி னால், பல்கலைக்கழகத்திலோ, ஸேம்ஸ்த்வோவிலோ மற்ற வற்றிலோ நிலவும் நிலைமைகளைப் பற்றி மட்டும் அதிருப்திப் படுகிறவர்களின் சிந்தனையை அரசியல் அமைப்புமுறை முழு வதும் பயனற்றது எனும் கருத்தின்பால் செலுத்தச்செய்வது நம் அக்கறையாக வைத்துக்கொள்ளவேண்டும். எல்லா எதிர்ப்புப் பகுதிகளும் போராட்டத்துக்கும் நம் கட்சிக்கும் தங்கள் முழு ஆதரவையும் கொடுப்பதைச் சாத்தியமாக்குகிற வகையில் நம் கட்சியின் தலைமையில் முழுவளவான அரசியல் போராட்டத்தைத் திரட்டியமைக்கும் பணியை நாம் எடுத் துக்கொள்ள வேண்டும். இந்த முழுவளவான போராட்டத்

தின் எல்லா வெளிப்பாடுகளுக்கும் வழிகாட்டும் திறமையும், எழுச்சிகொண்ட மாணவர்கள், அதிருப்தியுற்றிருக்கும் ஸேம்ஸ்த்வோ மக்கள், ஆத்திரங்கொண்டுள்ள மதப் பிரிவினர், மனம் நொந்திருக்கும் துவக்கப்பள்ளியாசிரியர்கள், இன்னோரன்ன பிற பகுதிகளுக்குச் சரியான தருணத்தில் ''ஒரு நேர்படியான செயல் வேலைத்திட்டத்தைக் கொடுக்கும்'' திறமையும் உள்ள அரசியல் தலைவர்களாக ஆவதற்கு நம் சமூக-ஜனநாயகவாத ஊழியர்களுக்கு நாம் பயிற்சி அளிக்கவேண்டும். இக்காரணத்தாலேதான், ''இவர்கள் சம்பந்தமாக நாங்கள் அநீதிகளை அம்பலப்படுத்துகிறவர்கள் என்கிற மறிநிலைப் பாத்திரத்தில் மட்டுமே வேலை செய்யமுடியும், ...பல்வேறு அரசாங்க விசாரணைக் குழுக்களில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கைகளை மட்டுமே போக்க முடியும்'' என்று மார்தினவ் சாதிப்பது முற்றும் தவறு (கொட்டையெழுத்திட்டது நாம்). இதைச் சொல்வதின் வழியே, புரட்சிகரமான ''முன்னணிப் படை'' உண்மையில் வகித்துத் தீரவேண்டிய பாத்திரத்தை மார்தினவ் புரிந்துகொள்வதில் முற்றாகத் தவறுகிறதைக் காட்டிக்கொள்கிறார். வாசகர் இதை நினைவில் கொண்டால் மார்தினவின் முடிவான குறிப்புகளின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்வார்: ''மக்களின் பல்வேறு பகுதிகளின் நலன்களைப் பாதிக்கிறதாயுள்ள நம் நாட்டு நிலவரங்களை, குறிப்பாக அரசியல் நிலவரங்களை, அம்பலப்படுத்தும் புரட்சிகரமான எதிர்க்கட்சிப் பத்திரிகையாக இஸ்க்ரா இருக்கிறது. ஆனால், நாங்கள் பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு கொண்டு தொழிலாளிவர்க்க இலட்சியத்துக்குப் பணியாற்றுகிறோம், தொடர்ந்து பணியாற்றுவோம். எங்களுடைய செயலாற்றலுள்ள செல்வாக்கின் பரப்பைக் குறுக்கிக் கொள்வதின் வழியாக அந்தச் செல்வாக்கை ஆழமாக்கிக் கொள்கிறோம்'' (பக்கம் 63). இம்முடிவின் உண்மையான கருத்து இதுதான்: தொழிலாளிவர்க்கத்தின் தொழிற்சங்க வகைப்பட்ட அரசியலை (ஊழியர்கள் தவறான எண்ணத்தாலோ, பயிற்சியின்மையாலோ, துணிபாலோ அடிக்கடி இத்துடன் நிறுத்திக்கொள்கிறார்கள்) சமூக-ஜனநாயகவாத அரசியலின் தரத்துக்கு இஸ்க்ரா உயர்த்த விரும்புகிறது. ஆனால், ரபோச்சியே தேலோ சமூக-ஜனநாயகவாத அரசியலைத்

தொழிற்சங்க வகைப்பட்ட அரசியலுக்குத் தாழ்த்த விரும்பு கிறது. மேலும், இவ்விரு நிலைகளும் ''பொது இலட்சியத்தி னுள் ஒன்றோடொன்று முற்றாகப் பொருந்தி நிற்கக் கூடிய வையே'' (63) என்று அது உலகத்துக்கு உறுதிகூறுகிறது. O , sancta simplicitas !*

மேலே போவோம். எல்லாச் சமுதாய வர்க்கங்களிடை யேயும் நமது பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் செலுத்து வதற்குப் போதிய சக்திகள் நம்மிடம் உள்ளனவா? நிச்சய மாக உண்டு. இதை அடிக்கடி மறுக்க விரும்பும் நம் ''பொரு ளாதாரவாதிகள்'' நம் இயக்கம் (சுமார்) 1894லிருந்து 1901வரை கண்டுள்ள மாபெரும் முன்னேற்றத்தைப் பார்க்கத் தவறுகிறார்கள். அசல் ''வால்புறத்தவர்கள்'' போல் இயக்கத்தின் துவக்கத்தில் என்றோ இருந்த கட்டங்களிலேயே அவர்கள் அடிக்கடி இருந்து வருகிறார்கள். உண்மையில் துவக்ககாலத்தில் மிகக் குறைவான சக்திகளே நம்மிடம் இருந்தன; அன்று நாம் தொழிலாளிகளிடையே வேலை செய்வதில் மட்டும் கவனம் செலுத்தியதும் அந்தப் பாதை யிலிருந்து விலகிப்போவதைக் கடுமையாகக் கண்டித்ததும் முற்றிலும் இயல்பாகவும் நியாயமாகவும் இருந்தது. அன்று தொழிலாளி வர்க்கத்திடையே நம் நிலையைக் கெட்டிப் படுத்திக் கொள்வதே முழுப்பணியாக இருந்தது. ஆனால், தற்சமயம் மாபெரும் சக்திகள் நம் இயக்கத்தின்பால் ஈர்க் கப்பட்டுள்ளன. படித்த வர்க்கங்களைச் சேர்ந்த இளந் தலை முறையினரின் மிகச் சிறந்த பிரதிநிதிகள் நம் பக்கம் வந்து கொண்டுள்ளனர். சென்றகாலத்தில் இயக்கத்தில் பங்கெடுத் துக் கொண்டவர்கள், அல்லது இன்று பங்கெடுத்துக் கொள்ள விரும்புகிறவர்களாகவும் சமூக-ஜனநாயகவாதத்தின் பக்கம் ஈர்க்கப்படுகிறவர்களாகவும் இருப்பவர்கள், மாநிலங்களில் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள், இவர்கள் சூழ்நிலைமை யின் காரணமாக அங்கே குடியிருக்கிறவர்கள் (ஆனால், 1894 லோ ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளை விரல்விட்டு எண்ணி விடமுடியும்). இந்தச் சக்திகளனைத்தையும் பயன்படுத்திக் கொண்டு தக்க வேலை கொடுக்க நமக்குத் திறமை இல்லா திருப்பதே நம் இயக்கத்தின் ஓர் அடிப்படையான அரசியல்

---

*—ஓ, என்ன தூய்மையான எளிமை!—(ப-ர்.)

குறைபாடும் அமைப்புத்துறைக் குறைபாடும் ஆகும் (இதை அடுத்த அத்தியாயத்தில் மேலும் முழுமையாகக் கவனிப்போம்). இந்தச் சக்திகளில் மிகப்பெரும்பான்மையானவர்களுக்குத் ''தொழிலாளர்களிடையே செல்வதற்கு'' அறவே வாய்ப்பின்றி யுள்ளனர்; எனவே நமது முதன்மையான பணியிலிருந்து சக்திகளைத் திசை திருப்பிவிடுவோம் என்று அஞ்சுவதற்கு ஆதாரமில்லை. தொழிலாளிகளுக்கு உண்மையான, முழுவிரிவான, உயிர்ப்புள்ள அரசியல் அறிவு கொடுக்க முடிவதற்கு ''நம்மவர்கள்'' அதாவது சமூக-ஜனநாயகவாதிகள் எல்லா இடங்களிலும், எல்லா சமுதாயப் பகுதிகளிடையேயும், நம் அரசு இயந்திர அமைப்பின் உள் விசைப்பொறிகளை அறிந்துகொள்ள வாய்ப்புள்ள எல்லா இடங்களிலும் இருந்துதீர வேண்டும். இப்படிப்பட்ட நபர்கள் பிரச்சாரத்துக்கும் கிளர்ச்சிக்கும் மட்டுமின்றி அதைவிட பெரிய அளவில் அமைப்புத்துறைக்கும் தேவைப்படுகிறார்கள்.

மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் வேலை செய்வதற்கு அடிப்படை உண்டா? இதைச் சந்தேகிக்கிறவர்கள் தங்கள் உணர்விலே மக்களின் தன்னியல்பான விழிப்பெழுச்சியை விட்டுப் பின்தங்கியிருக்கிறார்கள். தொழிலாளிவர்க்க இயக்கம் சிலரிடையே அதிருப்தியையும், சிலரிடையே எதிர்ப்புக்கு ஆதரவு கிடைக்கும் நம்பிக்கைகளையும், வேறு சிலரிடையே யதேச்சாதிகார ஆட்சிமுறை சகிக்க வொண்ணாதது தவிர்க்கமுடியாதபடி வீழ்ந்துபோகக்கூடியது என்கிற உணர்வையும் எழுப்பியுள்ளது, தொடர்ந்து எழுப்பி வருகிறது. அதிருப்தியின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் பயன்படுத்திக் கொள்வதும், ஒவ்வொரு கண்டனத்தையும்—மிகச் சிறிதேயாயினும் சரி—சிறந்த பயனளிக்கும் வகையில் திரட்டிப் பயன்படுத்திக் கொள்வதும் நம் பணி என்று உணரத் தவறினால் நாம் ''அரசியல்வாதிகள்'', சமூக-ஜனநாயகவாதிகள் என்று பெயரளவில் மட்டுமே இருப்போம் (யதார்த்தத்தில் மிக அடிக்கடி இப்படித்தான் நடக்கிறது). இது தவிர, லட்சக்கணக்கான உழைக்கும் விவசாயிகள், கைத்தொழில்காரர்கள், சிறு கைவினைஞர்கள் முதலானவர்கள் கொஞ்சமாவது தகுதியுள்ள சமூக-ஜனநாயகவாதியின் உரையை எப்போதும் கேட்கவே விரும்புகிறார்கள். பார்க்கப் போனால், உரிமைகளற்றிருப்பது பற்றியும் கொடுங்கோன்மை பற்றியும் அதிருப்

திப்படுகிற—எனவே, மிக அவசர அவசியமான பொதுவான ஜனநாயகத் தேவைகளை எடுத்துரைப்பவர்கள் என்கிற முறையில் சமூக-ஜனநாயகவாதிகளின் பிரச்சாரத்துக்குக் காது கொடுக்கிற—தனிநபர்களோ குழுக்களோ வட்டாரங்களோ இல்லாத சமுதாய வர்க்கம் ஒன்ருவது உண்டா? எல்லா வர்க்கங்களிடையேயும் மக்கட்பகுதிகளிடையேயும் சமூக-ஜனநாயகவாதியின் அரசியல் கிளர்ச்சி எப்படி இருக்கவேண்டுமென்று தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்தக் கிளர்ச்சிக்கு அரசியல் அம்பலப்படுத்தல்கள் (இச்சொல்லை அதன் விரிவான அர்த்தத்தில் பயன்படுத்துகிருேம்) முதன்மையான வடிவம் என்று (அது ஒன்றுதான் என்று சொல்லவில்லை) சுட்டிக் காட்டுவோம்.

''கொஞ்சமாவது அரசியல் உணர்வுள்ள ஒவ்வொரு மக்கட்பகுதியிடையேயும் அரசியல் அம்பலப்படுத்தல் பால் தீராவேட்கையை நாம் உண்டாக்கவேண்டும்'' என்று நான் ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் என் கட்டுரையில் [இஸ்க்ரா, இதழ் 4, மே 1901] எழுதினேன்; இதை மேலும் விபரமாகப் பின்னல் கவனிப்பேன். ''அரசியல் அம்பலப்படுத்தலின் குரல் இன்று எவ்வளவோ பலவீனமாகவும், உரமற்றதாகவும், அரிதாகக் கேட்கிறதாகவும் இருக்கிறதினல் நாம் அதைரியப் படலாகாது. இதற்குக் காரணம் போலீஸ் கொடுங்கோன்மைக்கு அறவே அடிபணிந்து விட்டதல்ல; அம்பலப்படுத்துவதற்குத் திறமையுள்ளவர்களுக்கு, தயாராயுள்ளவர்களுக்கு மேடை இல்லை, ஆர்வமாகக் கேட்கிற, உற்சாகமூட்டக்கூடிய மக்கள்கூட்டம் இல்லை, 'எல்லாம் வல்ல' ருஷ்ய அரசாங்கத்தை எதிர்த்துத் தங்கள் குறையைச் சொல்லிக்கொள்வதால் பயனளிக்கக் கூடிய சக்தியை அவர்கள் மக்களிடையே காணவில்லை, என்பதே காரணம்... ஜார் அரசாங்கத்தை நாடுதழுவிய முறையில் அம்பலப்படுத்துவதற்கு இன்று நாம் மேடை கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிருேம், அதைச் செய்வது நம் கடமையுமாகும். அந்த மேடை ஒரு சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகையாகத்தான் இருக்கவேண்டும்.''*

---

* பார்க்க: வி. இ. லெனின், ''எங்கிருந்து தொடங்குவது?''—(ப-ர்.)

அரசியல் அம்பலப்படுத்தலைக் கேட்பதற்கு மிகச் சிறந்த கூட்டத்தினர் தொழிலாளி வர்க்கமே; அதற்குத்தான் முழு வடிவான, உயிர்ப்புள்ள, அரசியல் அறிவு முதன்முதலாகத் தேவை, அதுதான் இந்த அறிவைத் தீவிரமான போராட்டமாக—அந்தப் போராட்டம் ''தொட்டறியத்தக்க விளைவுகளை'' வழங்கக்கூடியதாய் இல்லாவிட்டாலுங்கூட—மாற்றுவதில் திறமை மிகுந்தது. நாடுதழுவிய அம்பலப்படுத்தலுக்கு உகந்த மேடையாக அனைத்து ருஷ்யப் பத்திரிகை ஒன்றுதான் இருக்கமுடியும். ''ஓர் அரசியல் பத்திரிகை இல்லாமல் அரசியல் இயக்கம் என்று பெயர் தாங்க இலாயக்குள்ள இயக்கம் இன்றைய ஐரோப்பாவில் சிந்திக்கவொண்ணாதது''; இவ்விஷயத்தில் ருஷ்யாவை இன்றைய ஐரோப்பாவில் சேர்க்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வெகுகாலத்துக்கு முன்பே நம் நாட்டில் பத்திரிகைகள் ஒரு சக்தியாக ஆகிவிட்டன; இல்லையேல் அவற்றிற்கு லஞ்சமாக அரசாங்கம் லட்சக்கணக்கிலே பணத்தைச் செலவழிக்காது, காட்கோவ் மெஷேர்ஸ்கி வகையறுக்களுக்கு ஆதரவுக்கூலியாகப் பணம் கொடுக்காது. மேலும், யதேச்சாதிகார ருஷ்யாவில் சட்டவிரோதமான பத்திரிகைக் குழாம் தணிக்கைமுறையின் தடைச்சுவற்றை உடைத்துக்கொண்டு வெளிவந்து, சட்டபூர்வமான, பழைமை பேணும் பத்திரிகைகள் அதைப்பற்றிப் பகிரங்கமாகப் பேசும்படி கட்டாயப்படுத்துவது புதுமை இல்லை. 1870களிலும், 1850களிலுங்கூட இப்படித்தான் இருந்தது. சட்டவிரோதமான தலைமறைவுப் பத்திரிகைகளைப் படிக்கவும், இஸ்க்ராவுக்கு (இதழ் 7) கடிதம் எழுதிய ஒரு தொழிலாளி சொன்னது போல் ''எப்படி வாழ்வது, எப்படிச் சாவது'' என்று அதிலிருந்து தெரிந்து கொள்ளவும் விரும்பும் மக்கட்பகுதிகள் இன்று எவ்வளவு விரிந்தும் ஆழ்ந்தும் உள்ளன! பொருளாதார அம்பலப்படுத்தல்கள் எப்படித் தொழிற்சாலை முதலாளிகளுக்கு எதிரான போர்ப் பிரகடனங்களாக உள்ளனவோ அதுபோல் அரசியல் அம்பலப்படுத்தல்கள் அரசாங்கத்துக்கு எதிரான போர்ப் பிரகடனங்களாகும். எவ்வளவுக்கெவ்வளவு அம்பலப்படுத்தும் இயக்கம் பெரிதாகவும் விரிவாகவும் வலுவாகவும் இருக்கிறதோ, போர் துவங்குவதற்காகப் போர்ப் பிரகடனம் செய்திருக்கும் சமுதாய வர்க்கம் தொகையிலும் திடச்சித்தத்திலும் வளர்ந்திருக்கிறதோ,

அவ்வளவுக்கவ்வளவு அந்தப் போர்ப் பிரகடனத்தின் தார் மீகக் குறிபொருள் அதிகமாயிருக்கும். எனவே, நாம் எதிர்க்கும் அமைப்புமுறையைத் தகர்ப்பதற்கு வாய்த்த ஒரு வலுவான கருவியாகவும், எதிரியிடமிருந்து அவனுடைய தற்காலிகமான அல்லது தற்செயலான நேச சக்திகளைத் திசை திருப்பிவிடுவதற்குரிய சாதனமாகவும், யதேச்சாதிகார முறையின் நிரந்தரக் கூட்டாளிகளிடையே பகைமையையும் அவநம்பிக்கையையும் பரப்புவதற்குரிய சாதனமாகவும் அரசியல் அம்பலப்படுத்தல்கள் தம்மளவில் பயன்படுகின்றன.

நம் காலத்தில் உண்மையிலே நாடுதழுவிய அம்பலப் படுத்தல்களைத் திரட்டி வெளியிடும் கட்சி ஒன்றுதான் புரட்சிச் சக்திகளின் முன்னணிப்படையாக ஆகமுடியும். ''நாடு தழுவிய'' எனும் சொல் மிகவும் ஆழ்ந்த பொருள் கொண்டது. தொழிலாளிவர்க்கத்தைச் சேராத அம்பலப்படுத்துவோர்களில் (நாம் முன்னணிப் படையாவதற்கு பிற வர்க்கங்களை நம் பால் ஈர்க்கவேண்டும் என்பது நினைவிலிருக்கட்டும்) மிகப் பெரும்பான்மையினர் அடக்கமுள்ள அரசியல்வாதிகள், நிதானப்புத்தியுள்ள பிரமுகர்கள். ஒரு சின்ன அலுவலரைப் பற்றிக் ''குறை தெரிவிப்பது'' கூட எவ்வளவு ஆபத்தானது என்று அவர்களுக்கு நன்ருகத் தெரியும், பிறகு ''எல்லாம் வல்ல'' ருஷ்ய அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? தமது குறைகளைத் தெரிவிப்பதால் உண்மையில் பலன் இருக்கும் என்று காணும்போதுதான், நாம் ஓர் அரசியல் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிருேம் என்று காணும்போதுதான், அவர்கள் குறைகளை எடுத்துக் கொண்டு நம்மிடம் வருவார்கள். மாற்ருர் கண்ணில் அப்படி ஒரு சக்தியாக ஆவதற்கு நம் சொந்த உணர்வையும், முன்முயற்சியையும், ஆற்றலையும் உயர்த்திக்கொள்வதற்கு விடாமுயற்சியுடன், பிடிவாதத்துடன் நிறைய வேலை செய்வது அவசியம். இதைச் செய்துமுடிப்பதற்குக் கடைகோடியணியின் தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் ''முன்னணிப்படை'' என்கிற பெயர் போட்ட சின்னத்தை ஒட்டிவிட்டால் போதாது.

உண்மையில் நாடுதழுவிய அளவில் அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதைத் திரட்டியமைக்கவேண்டுமாஞல், பிறகு நம் இயக்கத்தின் வர்க்கத் தன்மை எவ்வழியில் வெளிப்படும்?—என்று ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்க

மான, உயிர்ப்புள்ள தொடர்பு'' வேண்டுமென்று மிதமிஞ்சிய ஆர்வத்துடன் பரிந்துரைப்பவர் கேட்கலாம், கேட்கவும் செய்கிறூர். பதில் பல அம்சங்கொண்டதாக இருக்கும்: சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாம் இந்த நாடுதழுவிய அம்பலப் படுத்தல்களைத் திரட்டியமைப்போம்; கிளர்ச்சி எழுப்புகிற அத்தனைப் பிரச்சினைகளையும் அறிந்தோ அறியாமலோ செய்கிற மார்க்ஸியத்தின் உருக்குலைவுகளுக்குச் சிறிதும் விட்டுக் கொடாமல் முரணற்ற சமூக-ஜனநாயகவாத உணர்ச்சியிலே விளக்குவோம்; மொத்தமாக மக்களின் பெயரால் அரசாங்கத்தின் மீது தாக்குதல் நடத்துவது, பாட்டாளி வர்க்கத்துக்குப் புரட்சிகரமான பயிற்சி அளிப்பது, அவ்வர்க்கத்தின் அரசியல் சுதந்தரத்தைக் காப்பது, தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துக்கு வழிகாட்டுவது; மேன்மேலும் அதிகமாகத் தொழிலாளிகளைத் தட்டியெழுப்பி நம் முகாமுக்குக் கொண்டுவருகிறதாயிருக்கும் அதன் சுரண்டுவோரை எதிர்க்கும் எல்லாத் தன்னியல்பான சச்சரவுகளையும் பயன்படுத்துவது—ஆகியவற்றை ஒரே பிரிக்கவொண்ணு முழுமையாக ஒன்றுபடுத்தும் கட்சி இந்த முழுவடிவான அரசியல் கிளர்ச்சியை நடத்தும்.

ஆனுல், பாட்டாளி வர்க்கத்தின் மிக அவசர அவசியமான தேவைக்கும் (அரசியல் கிளர்ச்சி அரசியல் அம்பலப்படுத்தல் மூலமாக முழுவிரிவான அரசியல் கல்வி அளிப்பது) பொதுவான ஜனநாயக இயக்கத்தின் தேவைக்கும் உள்ள தொடர்பை, மேலாகச் சொன்னுல் முற்றெருருமையைப் புரிந்துகொள்ளத் தவறுவது ''பொருளாதாரவாதத்தின்'' மிகவும் தன்மைக் குறிப்பான ஓர் உருக்கூறுகும். இப்படிப் புரிந்துகொள்ளாமலிருப்பது ''மார்தீனவ் வழிப்பட்ட'' சொற்றொடர்களில் வெளிப்படுகிறது மட்டுமல்ல, இச்சொற்றொடர்களோடு அர்த்தத்தில் ஒன்றியிருக்கும் வர்க்கப் பார்வைநிலை என்று நினைத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய சுட்டுக்குறிப்புகளிலும் வெளிப்படுகிறது. இப்படித்தான், இஸ்க்ரா, இதழ் 12 க்கு ''பொருளாதாரவாதக்'' கடிதம் எழுதியவர்கள் சொல்கிறூர்கள்*: ''இஸ்க்ராவின் இந்த அடிப்படையான குறைபாடு

* இடமின்மையால் இக்கடிததத்துக்கு இஸ்க்ராவில் விபரமாகப் பதிலளிக்க முடியவில்லை. இக்கடிதம் ''பொருளா

தான் [சித்தாந்தத்தை மிகையாக மதிப்பிடுவது] பல்வேறு சமுதாய வர்க்கங்கள் போக்குகள் பால் சமூக-ஜனநாயக வாதத்தின் கண்ணோட்டம் பற்றிய பிரச்சினையில் அதற்குள்ள முரணான நிலைக்கும் காரணமாகும். தத்துவார்த்த வாதத்தைக் கொண்டு...'' [''கட்சியோடு கூடவே வளர்கிற கட்சிப் பணிகளின் வளர்ச்சியைக்'' கொண்டு அல்ல], ''சர்வாதிகார முறையை எதிர்க்கும் போராட்டத்துக்கான உடனடி மாற்றநிலை பற்றிய பிரச்சினையை இஸ்க்ரா தீர்த்திருக்கிறது. இன்றைய நிலவரங்களில் இப்படிப்பட்ட பணியில் தொழிலாளிகளுக்குள்ள கஷ்டத்தை அது அநேகமாக உணர்ந்திருக்கிறது'' (உணர்ந்திருக்கிறது மட்டுமல்ல, செவிலித்தாய் போல் கவலைப்படும் ''பொருளாதாரவாத'' அறிவுஜீவிகளுக்கு இந்தப் பணி கஷ்டமாகத் தோன்றுகிறதைப்போல் தொழிலாளிகளுக்குத் தோன்றவில்லை என்றும் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறது, ஏனெனில் ''தொட்டறியத்தக்க விளைவுகளைக் கொடுக்கிறதாயில்லாத'' — என்றைக்கும் மறக்கமுடியாத மார்தீனவின் சொற்களில் சொல்கிறோம்— கோரிக்கைகளுக்காகவுங்கூட தொழிலாளிகள் போராடத் தயாராயுள்ளனர்) ''ஆனால் தொழிலாளிகள் இந்தப் போராட்டத்துக்குப் போதிய சக்திகளைத் திரட்டிக்கொள்ளும் வரை காத்திருக்கப் பொறுமை இல்லாததால் இஸ்க்ரா மிதவாதிகளிடையேயும் அறிவுஜீவிகளிடையேயும் நேசசக்திகளைத் தேடிக்கொள்ளத் தொடங்குகிறது''... என்று.

ஆம், ''பொருளாதாரவாதிகள்'' தங்களுடைய சொந்தப் பின்தங்கிய நிலையைத் தொழிலாளிகள் மீது ஏற்றிச்சொல்வதையும் தொழிலாளிகள் பலமற்று இருக்கிறார்கள் என்று

---

தாரவாதிகளை'' நன்றாக இனங்காட்டுகிறது. அது வெளியானதில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியே; காரணம், இஸ்க்ரா முரணற்ற வர்க்கப் பார்வைநிலையை வைத்திருக்கவில்லை எனும் குற்றச்சாட்டுகள் இதற்கு வெகுகாலத்துக்கு முன்பே பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்தன. நாம் பதில் கொடுப்பதற்குத் தக்க சந்தர்ப்பத்துக்காக, அல்லது ஃபேஷனாகி விட்ட இந்தக் குற்றச்சாட்டு வரையறுத்தமுறையிலே வெளியிடப்படட்டும் என்று காத்திருந்தோம். மேலும், தாக்குகளுக்கு எதிர்தாக்குகள் கொண்டு பதிலளிப்பதே நம் வழக்கம், தற்காப்பு மூலமாக அல்ல.

கூறி தங்கள் சொந்த ஆற்றலின்மையை நியாயப்படுத்துவதையும் நிறுத்திக்கொண்ட அந்த நல்ல காலத்துக்காக—பல திறப்பட்ட ''சமரசவாதிகள்'' வரப்போவதாக வெகு காலமாக வாக்களித்து வந்த அந்த நல்ல காலத்துக்காக—''காத்திருப்பதில்'' அறவே ''பொறுமை'' இழந்துவிட்டோம் என்பது உண்மை. நம் ''பொருளாதாரவாதிகளைக்'' கேட்கிறோம்: ''போராட்டத்துக்குத் தொழிலாளிவர்க்க பலத்தைத் திரட்டுவது'' என்று அவர்கள் சொல்வதின் பொருள் என்ன? நம் நாட்டுக் கொடிய யதேச்சாதிகாரமுறையின் எல்லா அம்சங்களையும் தொழிலாளிகளுக்குப் புலப்படுத்தக் கூடியவாறு அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளிப்பது என்று இதற்குப் பொருள் என்பதுதானே வெளிப்படை? ஸேம்ஸ்த்வோக்கள்,[75] பள்ளியாசிரியர்கள், புள்ளிவிபர இயலாளர்கள், மாணவர்கள் முதலியவர்கள் மீது நடக்கும் அரசியல் தாக்குகளை அம்பலப்படுத்துவதில் நம்முடன் சேரத் தயாராயிருக்கும் ''மிதவாதிகள், அறிவுஜீவிகள் அணிகளிலேயுள்ள நேச சக்திகள்'' இந்தக் குறிப்பிட்ட பணிக்குத்தான் நமக்குத் தேவை என்பதும் தெளிவல்லவா? இந்த வியக்கத்தக்க ''நுட்பச்சிக்கலுள்ள இயந்திர அமைப்பு'' புரிந்துகொள்வதற்கு உண்மையிலே அவ்வளவு கஷ்டமானதா? ''தொழிலாளி வர்க்கத்திடையே நடத்தப்படும் பிரச்சார நடவடிக்கைகளின் தன்மையே ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் முன்னிருக்கும் பணியை—தொழிலாளிவர்க்கமல்லாத வர்க்கங்களிடையே ஆதரவாளர்களையும் நேரடியான நேசசக்திகளையும் மறைமுகமான நேசசக்திகளையும் பெறும் பணியை—முக்கியமாகவும் முதன்மையாகவும் நிறைவேற்றிக்கொடுக்கும்'' என்று 1897லிருந்து இடையருது பா. ப. அக்செல்ரோட் சொல்லிவரவில்லையா? என்றாலும், மார்தீனவ் வகையருவும் மற்ற ''பொருளாதாரவாதிகளும்'' தங்கள் நினைப்பை விடாது தொடர்கிறார்கள், ''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்க்கும் பொருளாதாரப் போராட்டத்தின் மூலமாக'' தொழிலாளிகள் முதலில் (தொழிற்சங்கவாத அரசியலுக்காக) பலம் திரட்டிக்கொள்ளவேண்டும், பிறகு சமூக-ஜனநாயகவாத நடவடிக்கைக்கு—தொழிற்சங்கவாத ''நடவடிக்கைக்கான பயிற்சி''யிலிருந்து என்று அனுமானிக்கிறோம்—''மாறிப் போகவேண்டும்,'' என்று!

''பொருளாதாரவாதிகள்'' மேலும் கூறுவதாவது: ''...இப்படித் தேடிச் செல்வதில் இஸ்க்ரா அடிக்கடி வர்க்கப் பார்வைநிலையிலிருந்து விலகிப் போகிறது, வர்க்கப் பகைமைகளை மழுங்கடிக்கிறது, அரசாங்கத்தின் மேல் உள்ள அதிருப்தியின் பொதுவான தன்மையை முன்வரிசையில் வைக்கிறது—இந்த அதிருப்தியின் காரணங்களும் அளவும் 'நேசசக்திகளிடையே' கணிசமாக வேறுபட்டிருந்துங்கூட. எடுத்துக்காட்டாக, ஸேம்ஸ்த்வோ விஷயத்தில் இஸ்க்ராவின் கண்ணோட்டம் இப்படித்தான் இருக்கிறது''... ''அரசாங்கத்தின் கண்துடைப்புச் சலுகைகளால் அதிருப்தியடைந்துள்ள பிரபுவம்சத்தினருக்கு இஸ்க்ரா தொழிலாளிவர்க்கத்தின் உதவியை வாக்களிக்கிறது, ஆனால் இந்தச் சமுதாயப் பகுதிகளிடையே இருக்கிற வர்க்கப் பகைமையைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்கிறதில்லை'' என்று கூறப்படுகிறது. ''யதேச்சாதிகாரமுறையும் ஸேம்ஸ்த்வோவும்'' எனும் கட்டுரைகளை (இஸ்க்ரா, இதழ்கள் 2லும் 4லும் வெளிவந்தவை) வாசகர் பார்ப்பாரேயானால்—அநேகமாக இதைத்தான் கடிதம் எழுதியவர்கள் குறிப்பிடுகிறார்கள் போலிருக்கிறது —''சமுதாயப் படிநிலைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரவர்க்கப்போக்குள்ள ஸேம்ஸ்த்வோவின் மிதமான கிளர்ச்சி'' விஷயத்திலும் ''சொத்துள்ள வர்க்கங்களின் சுதந்தரமான நடவடிக்கை'' விஷயத்திலுங்கூட அரசாங்கம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை அவை* எடுத்துக் கவனிப்பதைக் காணலாம். அரசாங்கம் ஸேம்ஸ்த்வோவை எதிர்த்துப் போராட்டம் நடத்திவருகையில் தொழிலாளிகள் அசட்டையுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று கட்டுரை கூறுகிறது, புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதம் தன் முழுவலுவுடன் அரசாங்கத்தை எதிர்கொள்கிறபோது ஸேம்ஸ்த்வோக்கள் மெத்தனமான சொற்பொழிவுகள் ஆற்றுவதை விட்டொழித்து உறுதியாகவும் தீர்மானமாகவும் பேசவேண்டும் என்று அறைகூவுகிறது. கடிதம் எழுதியவர்கள் இதில்

* இக்கட்டுரைகளுக்கிடையே இஸ்க்ரா, இதழ் 3ல் வெளிவந்த ஒரு கட்டுரை கிராமப்புறத்திலுள்ள வர்க்கப் பகைமைகளைக் குறிப்பாக எடுத்துக் கவனித்தது. (பார்க்க: வி. இ. லெனின், ''தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும்''. —ப-ர்.)

எதை ஒப்புக்கொள்ளவில்லை என்று தெளிவாகத் தெரியவில்லை. ''சொத்துள்ள வர்க்கங்கள்'', ''சமுதாயப் படிநிலைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரவர்க்கப்போக்குள்ள ஸேம்ஸ்த்வோ'' எனும் சொற்றொடர்களைத் தொழிலாளிகள் ''புரிந்துகொள்ளமாட்டார்கள்'' என்று நினைக்கிறார்களா? மெத்தனமாகப் பேசுவதை விட்டொழித்து உறுதியுடன் பேசுமாறு ஸேம்ஸ்த்வோவைத் தூண்டிவிடுவது ''சித்தாந்தத்தை மிகையாக மதிப்பிடுவது'' என்று நினைக்கிறார்களா? ஸேம்ஸ்த்வோ விஷயத்திலும் யதேச்சாதிகாரமுறை கொண்டுள்ள கண்ணோட்டத்தைப் பற்றித் தொழிலாளிகள் ஏதும் அறியாமலிருந்தால் யதேச்சாதிகாரமுறைக்கு எதிரான போராட்டத்துக்குத் தொழிலாளிகள் ''பலம் திரட்டிக்கொள்ள'' முடியும் என்று நினைக்கிறார்களா? இவை குறித்தும் ஒன்றும் தெரியவில்லை. ஒன்றுமட்டும் தெளிவு: அதாவது, கடிதம் எழுதியவர்கள் சமூக-ஜனநாயகவாதத்தின் அரசியல் பணிகளைப்பற்றி மிகவும் தெளிவற்ற கருத்து வைத்திருக்கிறார்கள். ''மாணவர் இயக்கத்தைப் பற்றி இஸ்க்ரா கண்ணோட்டமும் இப்படித்தான் இருக்கிறது'' (அதாவது, அதுவும் ''வர்க்கப் பகைமைகளை மழுங்கடிக்கிறது'') எனும் அவர்களின் குறிப்புரை இதை மேலும் தெளிவாக வெளியிடுகிறது. கட்டற்ற வன்முறைக்கும் ஒழுங்கின்மைக்கும் அட்டூழியத்துக்கும் உண்மையான பிறப்பிடம் ருஷ்ய அரசாங்கமே தவிர பல்கலைக்கழக மாணவர்கள் அல்ல (இஸ்க்ரா, இதழ் 2*) என்று ஆர்ப்பாட்டங்கள் வழியே பிரகடனப்படுத்தும்படி தொழிலாளிகளை அறைகூவியழைப்பதற்குப் பதிலாக நாம் ரபோச்சயா மிஸ்ல் உணர்ச்சியிலே வாதங்களைச் செருகியிருக்க வேண்டும் போலும்! இப்படிப்பட்ட கருத்துக்களை சமூக-ஜனநாயகவாதிகள் 1901 இலையுதிர்காலத்தில், பிப்ரவரி மார்ச் மாத நிகழ்ச்சிகளுக்குப் பின், மாணவர் இயக்கம் ஒரு புதிய எழுச்சி காணவிருக்கும் தருவாயில் வெளியிட்டார்கள். இந்த மாணவர் இயக்கத் துறையிலுங்கூட யதேச்சாதிகாரமுறைக்கு எதிரான ''தன்னியல்பான'' கண்டனம் இயக்கத்தின் உணர்வுபூர்வமான சமூக-ஜனநாயகவாதத் தலைமையை முந்திக்

---

* பார்க்க: வி. இ. லெனின், ''183 மாணவர்களைக் கட்டாய இராணுவ சேவையில் சேர்த்தல்''.—(ப-ர்.)

கொண்டு முன்செல்வதை இது காட்டுகிறது. போலீஸாராலும் கோஸாக் படைகளாலும் தாக்கப்படும் மாணவர்களைப் பாதுகாக்கத் தொழிலாளிகள் தன்னியல்பாக எடுக்கும் முயற்சி சமூக-ஜனநாயகவாத அமைப்பின் உணர்வுபூர்வமான நடவடிக்கையை மிஞ்சுகிறதாயுள்ளது!

கடிதம் எழுதியவர்கள் மேலும் கூறுவதாவது: "என்றபோதிலும், வேறு கட்டுரைகளில் இஸ்க்ரா எல்லா சமரசங்களையும் வன்மையாகக் கண்டிக்கிறது; அது கெட்டுவாதிகளின் (எடுத்துக்காட்டாகச் சொல்கிறோம்) சகிப்புத்தன்மையற்ற நடத்தையைத் தாங்கிப்பேசுகிறது." சமூக-ஜனநாயகவாதிகளிடையே இன்று இருக்கும் வேற்றுமைகள் முக்கியமல்ல, அவற்றை வைத்து ஒரு பிளவை நியாயப்படுத்த முடியாது என்று எவ்வளவோ இறுமாப்புடனும் விளையாட்டுத்தனத்துடனும் பேசும் பழக்கமுடையவர்கள் இந்த வார்த்தைகளைப் பற்றி ஆழச் சிந்திக்குமாறு அறிவுறுத்த விரும்புகிறோம். ஒரே அமைப்பில் எப்படி நாம் கூடி வேலை செய்ய முடியும்—பல்வேறு வர்க்கங்கள்பால் யதேச்சாதிகாரமுறை காட்டும் பகைமையை விளக்குவதற்கும் பல்வேறு சமுதாயப் பகுதிகள் யதேச்சாதிகாரமுறைபால் காட்டும் எதிர்ப்பு பற்றித் தொழிலாளிகளுக்குச் சொல்வதற்கும் நாம் பணியாற்றியிருப்பது மிகச் சொற்பமே என்று நம்மில் சிலர் வாதித்துக் கொண்டிருக்க, வேறு சிலர் இப்படி விளக்கம் அளிப்பது ஒரு "சமரசம்" என்று—"முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்" பற்றிய தத்துவத்துடன் சமரசம் போலும்—கருதிக்கொண்டிருக்க, எப்படி நாம் ஒரே அமைப்பில் கூடி வேலை செய்ய முடியும்?

விவசாயிகளுடைய விடுதலையின் நாற்பதாம் ஆண்டு விழாவையொட்டி கிராமப் பகுதிகளுக்கு வர்க்கப் போராட்டத்தை எடுத்துச் செல்வதின் அவசியத்தை நாம் இடித்துரைத்தோம் (இதழ் 3),[76] அமைச்சர் வீட்டேயின் இரகசிய மகஜர் விஷயத்தில்[77] உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கும் யதேச்சாதிகாரமுறைக்கும் உள்ள சமரசப்படுத்த முடியாத்தன்மை பற்றி நாம் பேசினோம் (இதழ் 4). புதிய சட்டம் சம்பந்தமாக நிலப்பிரபுத்துவ முறையைச் சேர்ந்த நிலவுடைமையாளர்களையும் அவர்களுக்குப் பணிபுரியும் அரசாங்கத்தையும் தாக்கினோம் (இதழ் 8),[78] மற்றும் சட்டவிரோதமான

ஸேம்ஸ்த்வோ காங்கிரஸையும் வரவேற்றோம். கெஞ்சிமுறை யிடும் மனுக்களைக் கொடுப்பதை விட்டு (இதழ் 8)* போராட்டத்தில் இறங்கும்படி ஸேம்ஸ்த்வோக்களுக்கு இடித்துரைத்தோம். அரசியல் போராட்டத்தின் அவசியத்தைப் புரிந்து கொள்ளவும் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவும் தொடங்கியிருந்த மாணவர்களை உற்சாகமூட்டினோம் (இதழ் 3); அதே நேரத்தில், தெரு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவேண்டாம் என்று மாணவர்களை விலகி நிற்கச் சொன்ன ''சுத்தமான மாணவர்'' இயக்கத்தின் ஆதரவாளர்களின் ''வெட்கக்கேடான அறியாமையைச்'' சாடினோம் (இதழ் 3, மாஸ்கோ மாணவர்களின் நிர்வாகக் குழு பிப்ரவரி 25ல் வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக). ரொஸியாவை[79] (இதழ் 5) சேர்ந்த தந்திரப்புத்தியுள்ள மிதவாதிகளின் ''அர்த்தமற்ற கனவுகளையும்'' ''பித்தலாட்ட பாசாங்கையும்'' அம்பலப்படுத்தினோம்; அதே பொழுதில், ''அமைதிப் போக்குள்ள எழுத்தாளர்களையும், வயதான பேராசிரியர்களையும், விஞ்ஞானிகளையும், பிரபலமான மிதவாத ஸேம்ஸ்த்வோ உறுப்பினர்களையும்'' அரசாங்கச் சிறையதிகாரி துன்புறுத்துவதில் காட்டும் கொடிய வெஞ்சினத்தையும் சுட்டிக்காட்டினோம் (இதழ் 5, ''இலக்கியத்தின் மீது போலீஸ் தாக்கு''). ''தொழிலாளர் சேமநலத்துக்கு அரசுப் பாதுகாப்பு'' வேலைத்திட்டத்தின் உண்மையான குறிபொருளை அம்பலப்படுத்தினோம்; மற்றும், ''சீர்திருத்தத்துக்கான கோரிக்கைகளை வைக்கும் வரை காத்திருப்பதைவிட மேலிருந்து அந்தச் சீர்திருத்தங்களைக் கொடுத்து அப்படிப்பட்ட சீர்திருத்தத்துக்கான கோரிக்கை எழாமல் தவிர்ப்பதே மேல்'' எனும் ''மதிப்புள்ள ஒப்புதலை'' வரவேற்றோம் (இதழ் 6).** கண்டித்தெழும் புள்ளிவிபர இயலாளர்களை நாம் உற்சாகப்படுத்தினோம் (இதழ் 7), கருங்காலிப் புள்ளிவிபர இயலாளர்களைக் கண்டித்தோம் (இதழ் 9). இந்தப் போர்த்தந்திரம் தொழிலாளிவர்க்கத்தின் வர்க்க உணர்வை

---

* பார்க்க: வி.இ. லெனின்; ''ஸேம்ஸ்த்வோ காங்கிரஸ்''.—(ப-ர்.)

** பார்க்க: வி. இ. லெனின், ''மதிப்புள்ள ஒப்புதல்''.—(ப-ர்.)

மழுங்கடிப்பது அது மிதவாதத்துடன் செய்துகொள்ளும் சமரசம் என்று கருதுகிறவர்கள் "Credo"வின் வேலைத்திட்டத்தின் உண்மையான குறிபொருளை அறவே புரிந்துகொள்ளாதிருப்பதையும் எவ்வளவுதான் அதை மறுத்துநிராகரித்த போதிலும் நடைமுறையிலே அவ்வேலைத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறதையும் புலப்படுத்திக்கொள்கிறார்கள்! ஏனெனில், இப்படிப்பட்ட அணுகுமுறை வழியாக அவர்கள் சமூக-ஜனநாயகவாதத்தை ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டத்தை'' நோக்கி இழுக்கிறார்கள், மிதவாதத்துக்கு இணங்கிப்போகிறார்கள், ஒவ்வொரு ''மிதவாத'' பிரச்சினையிலும் தீவிரமாகத் தலையிடும் பணியையும், இப்பிரச்சினையின்பால் தனது சொந்த, சமூக-ஜனநாயகவாதக் கண்ணோட்டத்தை நிர்ணயித்துக் கொள்ளும் பணியையும் கைவிடுகிறார்கள்.

### ஊ. மீண்டும் ''தூற்றுவோர்'' ''மருட்டுவோர்'' எனும் பேச்சு

வாசகருக்கு நினைவிருக்கலாம், இந்த நயப்பண்புள்ள சொற்கள் ரபோச்சியே தேலோவுக்குச் சொந்தம்; ''தொழிலாளிவர்க்க இயக்கத்தை முதலாளித்துவ ஜனநாயகத்தின் கருவியாக மாற்றுவதற்கு மறைமுகமாகஅடிப்படை தயாரித்து வருகிறது'' என்று அதை நாம் குற்றஞ்சாட்டுவதற்கு இப்படித்தான் அது பதில் சொல்கிறது. எளிய நெஞ்சம் படைத்த ரபோச்சியே தேலோ இந்தக் குற்றச்சாட்டு வாதப்போரில் திசை திருப்பிவிடும் தாக்கு உத்தி தவிர வேறில்லை என்று தீர்மானித்துவிட்டது: கெடுநோக்குள்ள இந்த வறட்டுத் தத்துவவாதிகள் எங்களைப்பற்றி எல்லா விதமான பொல்லாங்குகளும் சொல்வதென்று முனைந்திருக்கிறார்கள்; மேலும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கருவியாக இருப்பதைவிட மோசமான விஷயம் வேறென்ன இருக்கமுடியும்? ஆகவே, கொட்டையெழுத்தில் அவர்கள் ஒரு ''மறுப்பு'' பிரசுரிக்கிறார்கள்: ''பச்சையான அவதூறு தவிர வேறில்லை,'' ''மருட்டுதல்'', ''நடிப்புச் சடங்கு'' (இரண்டு மாநாடுகள், பக்கங்கள் 30, 31, 33). ஆண்டவன் ஜூபிட்டர் மாதிரி ரபோச்சியே தேலோ (அந்தத் தெய்வத்தின் சாயல் சிறிதேனும் இல்லாமற்

போயினுங்கூட) தவறு தன்னுடையது என்பதால் சீற்ற மடைகிறது; தன்னுடைய அவசரப்பட்ட வசைமாரி மூலமாக எதிர்ப்பாளர்களின் வாதமுறையைப் புரிந்துகொள்ளத் திற மையற்றது என்று நிரூபித்துக்கொள்கிறது. என்றபோதிலும், சற்றே சிந்தித்திருந்தால் வெகுஜன இயக்கத்தின் தன்னியல் புக்கு அடிபணிவது **எதுவாயினும்** சரி, சமூக-ஜனநாயகவாத அரசியலைத் தொழிற்சங்கவாத அரசியலின் தரத்துக்குத் தாழ்த்துவது **எதுவாயினும்** சரி, தொழிலாளிவர்க்க இயக் கத்தை முதலாளித்துவ ஜனநாயகத்தின் கருவியாக மாற்றுவ தற்கு அடிப்படை தயாரிப்பதாக ஏன் பொருள்படும் என்று புரிந்துகொண்டிருக்கும். தன்னியல்பான தொழிலாளிவர்க்க இயக்கம் தன்னளவில் தொழிற்சங்கவாதத்தை மட்டுமே உண்டுபண்ணமுடியும் (தவிர்க்கமுடியாத ரீதியிலே உண்டுபண் ணவும் செய்கிறது), தொழிலாளிவர்க்கத்தின் தொழிற்சங்க அரசியல் என்பது தொழிலாளிவர்க்கத்தின் முதலாளித்துவப் போக்கான அரசியலேயாகும். அரசியல் போராட்டத்தில், ஏன் அரசியல் புரட்சியிலுங்கூட, தொழிலாளிவர்க்கம் கலந்து கொள்கிறது என்பதால் மட்டும் தன்னளவில் அதன் அரசி யல் சமூக-ஜனநாயகவாத அரசியலாகிவிடாது. இதை மறுக்க **ரபோச்சியே தேலோவுக்குத்** தைரியம் உண்டா? கடைசியாக இப்போதாவது, அது சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்தின், ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின், அவசரமான பிரச்சினை களை எப்படிப் புரிந்துகொண்டிருக்கிறது என்று பகிரங்கமாக, பட்டவர்த்தனமாக, ஐயந்திரிபுக்கிடமில்லாமல் விளக்குமா? அரிதுதான். அப்படியொன்றும் செய்யவே செய்யாது, ஏனெ னில் ''இங்கே கிடையாது'' எனும் வழிமுறை என்று சொல் லத்தக்க—அதாவது, ''நானல்ல, அது என் குதிரை அல்ல, சவாரிக்காரன் நானல்ல. நாங்கள் 'பொருளாதாரவாதிகள்' அல்ல; **ரபோச்சயா மிஸ்ல்** 'பொருளாதாரவாதத்தை' ஆத ரிக்கிறதில்லை; ருஷ்யாவில் 'பொருளாதாரவாதம்' கிடையவே கிடையாது'' எனும் — தந்திரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இது ஒரு சாதுரியமிக்க ''அரசியல்'' தந்திரமே; ஆனால் அதற்கு ஒரு சிறு குறைபாடு உண்டு, அதைக் கையாளும் பத்திரிகைகள் ''அடியேன் தாசன்!''[80] பத்திரிகைகள் எனும் கேலிப்பெயர் பெறுவது வழக்கம்.

பொதுவாகவே ருஷ்யாவில் முதலாளித்துவ ஜனநாயகம்

என்பது வெறும் ''மாயத்தோற்றமே'' என்று ரபோச்சியே தேலோ நினைக்கிறது (இரண்டு மாநாடுகள், பக்கம் 32).* அதிர்ஷ்டசாலிகள்! நெருப்புக்கோழி மாதிரி மணலில் தலையைப் புதைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் இருக்கிறதனைத்தும் மறைந்துபோனதாக நினைக்கிறார்கள் அவர்கள். மார்க்ஸியம் வீழ்ந்துவிட்டது, ஏன், மறைந்தே போய்விட்டது என்று வெற்றிமுழக்கமிட்டு மாதந்தோறும் உலகுக்குப் பிரகடனப்படுத்தும் மிதவாதப் பிரச்சாரகர்கள்; வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய பிரென்டானோவின் கருத்தோட்டத்தையும்[81] அரசியலைப்பற்றிய தொழிற்சங்கவாதக் கருத்தோட்டத்தையும் தொழிலாளிகளிடையே கொண்டு வருகிற மிதவாதிகளை ஊக்குவிக்கும் (செயின்ட் பீடர்ஸ்பூர்க் வேதமொஸ்தி, ருஸ்கியே வேதமொஸ்தி, இன்னும் பிற பல) மிதவாதப் பத்திரிகைகள்; மார்க்ஸியத்தை விமர்சிக்கிறவர்களின் நட்சத்திர மண்டலம்—இவர்களின் உண்மையான போக்குகளை "Credo" மிக நன்றாக வெளியிட்டது, இவர்களின் இலக்கியப் படைப்புகள் மட்டுமே தங்குதடையின்றி ருஷ்யாவில் உலவி வருகின்றன; சமூக-ஜனநாயகவாத வகை யல்லாத புரட்சிப் போக்குகள், குறிப்பாக பிப்ரவரி-மார்ச்சு மாத நிகழ்ச்சிகளுக்குப் பின், மீண்டும் தலையெடுத்தன; இவையனைத்தும் வெறும் மாயத்தோற்றங்கள் போலும்! இவற்றிற்கும் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் சம்பந்தமேயில்லை போலும்!

* இதைத் தொடர்ந்து ''விதிவசமான முறையிலே தொழிலாளிவர்க்க இயக்கத்தைப் புரட்சிப் பாதையிலே தூண்டிச் செலுத்தும் ஸ்தூலமான ருஷ்ய நிலைமைகள்'' பற்றி ஒரு சுட்டுக்குறிப்பு வருகிறது. ஆனால், தொழிலாளிவர்க்க இயக்கத்தின் புரட்சிப் பாதை சமூக-ஜனநாயகவாதப் பாதையாக இல்லாமல் இருக்கவும் கூடும் என்பதை இந்தப் பேர்வழிகள் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். வரம்பற்றமுடியாட்சிமுறை இருந்த காலத்தில் மேலை ஐரோப்பிய முதலாளிவர்க்கம் முழுவதும் தொழிலாளிகளைப் புரட்சிப் பாதையிலே ''தூண்டிச் செலுத்தியது'', வேண்டுமென்றே தூண்டிச் செலுத்தியது. ஆனால், சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாம் இத்துடன் திருப்தியடைய முடியாது. சமூக-ஜனநாயகவாத அரசியலை எவ்வழியிலாயினும் நாம் தன்னியல்பான தொழிற்சங்கவாத அரசியலின் தரத்துக்குத் தாழ்த்துவோமேயானால் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு அனுகூலமாக நடந்து கொள்கிறவர்களாக ஆகிறோம்.

ரபோச்சியே தேலோவும் சரி, இஸ்க்ரா இதழ் 12ல் வெளியான ''பொருளாதாரவாதக்'' கடிதம் எழுதியவர்களும் சரி, ''வசந்தகால நிகழ்ச்சிகள் சமூக-ஜனநாயகவாதத்தின் தனிச்செல்வாக்கையும் மதிப்பையும் அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, சமூக-ஜனநாயகவாத வகையல்லாத புரட்சிப் போக்குகள் இவ்வளவுக்கு மீண்டும் தலையெடுக்கச் செய்ததற்கான காரணங்களைப் பற்றி ஆழச் சிந்திக்க வேண்டும்.'' நம் பணிகளைச் சமாளித்து முடிக்கத் தவறியதே இதற்குக் காரணம். திரள்திரளான தொழிலாளிகள் நம்மை விட தீவிரமாகச் செயலாற்றுகிறவர்களாகக் காட்டிக்கொண்டார்கள். எல்லா எதிர்ப்பான மக்கட் பகுதிகளிடையே நிலவும் மன நிலையைப் பற்றி முழுமையான அறிவும், இயக்கத்துக்குத் தலைமை வகிப்பதிலும் தன்னியல்பான ஆர்ப்பாட்டத்தை அரசியல் ஆர்ப்பாட்டமாக மாற்றுவதிலும் அதன் அரசியல் தன்மையை விசாலப்படுத்துவதிலும் மற்றவற்றிலும் திறமையும் பெற்ற போதிய பயிற்சியுள்ள புரட்சித் தலைவர்களும் அமைப்பாளர்களும் நம்மிடம் இருக்கவில்லை. இந்நிலைமைகளில், தவிர்க்க முடியாதவாறு நம் பின்தங்கிய நிலையை நம்மைவிட இயங்குதிறமையும் சுறுசுறுப்பும் அதிகமாக உள்ள சமூக-ஜனநாயகவாத வகைப்படாத புரட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்; தொழிலாளிகள் போலீஸையும் இராணுவப் படைகளையும் எதிர்த்து எவ்வளவுதான் சக்தியுடனும் தன்மறுப்புடனும் போராடுகிறதாயிருந்தாலுங்கூட, தொழிலாளிகளின் நடவடிக்கைகள் எவ்வளவுதான் புரட்சிகரமானதாயிருந்தாலுங்கூட, அவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தின் பின்னணிப்படையாக உள்ள அந்தப் புரட்சியாளர்களை ஆதரிக்கிற ஒரு சக்தியாகத்தான் ஆவார்களேதவிர சமூக-ஜனநாயகவாத முன்னணிப்படையை ஆதரிக்கும் சக்தியாக ஆகமாட்டார்கள். எடுத்துக்காட்டாக, ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளை எடுத்துக்கொள்வோம்; அவர்களின் பலவீனமான அம்சங்களை மட்டுமே நம் ''பொருளாதாரவாதிகள்'' பின்பற்ற விரும்புகிறார்கள். சமூக-ஜனநாயகவாதத்தின் தனிச்செல்வாக்கையும் மதிப்பையும் கூடுதலாக உயர்த்தாத ஒரு நிகழ்ச்சியாயினும் ஜெர்மனியில் இல்லாததேன்? ஏனெனில், ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்ச்சி குறித்தும் மிகவும் புரட்சிகரமான மதிப்பீடு அளிப்பதிலும்

கொடுங்கோன்மையை எதிர்க்கும் ஒவ்வொரு கண்டனத்தையும் ஆதரிப்பதிலும் அது எல்லோரையும் முந்திக்கொண்டு முன்செல்வதைப் பார்க்கிறோம். தங்களுக்கு உரிமைகளேதும் இல்லாததைப் பொருளாதாரப் போராட்டம் தொழிலாளிகளுக்கு உணர்த்துகிறதென்றும், ஸ்தூலமான நிலைமைகள் தொழிலாளிவர்க்க இயக்கத்தைத் தவிர்க்கமுடியாதவாறு புரட்சிப் பாதையிலே தூண்டிச் செலுத்துகிறதென்றும் கூறும் வாதங்களைக் கொண்டு அது தன்னை அமைதிப்படுத்திக் கொள்வதில்லை. அது சமுதாய, அரசியல் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு பிரச்சினையிலும் குறுக்கிடுகிறது; ஒரு முதலாளித்துவ முற்போக்காளரை நகர மேயராகப் போட்டதற்கு பேரரசர் வில்ஹெல்ம் ஒப்புதலளிக்க மறுத்த விஷயத்தில் குறுக்கிடுவது (இப்படிப்பட்ட செய்கை உண்மையிலே மிதவாதத்தோடு சமரசம் செய்வதாகும் என்று நம் ''பொருளாதாரவாதிகள்'' இன்னமும் அவர்களுக்குப் போதிக்கமுடியவில்லை); ''ஆபாசமான'' படங்களையும் பிரசுரங்களையும் எதிர்க்கும் சட்டம் பற்றிய விஷயத்தில் குறுக்கிடுவது; பேராசிரியர்கள் தேர்தலில் அரசாங்கச் செல்வாக்கு பற்றிய விஷயத்தில் குறுக்கிடுவது; என்றவாறு. எங்கு நோக்கினும் சமூக-ஜனநாயகவாதிகள் முன்னணியில் நிற்கிறார்கள், எல்லா வர்க்கங்களிலேயும் அரசியல் அதிருப்தியைக் கிளப்பிவருகிறார்கள், சோம்பிக் கிடப்பவர்களை முடுக்கிவிடுகிறார்கள், பின்னடைந்திருப்பவர்களை ஊக்குவித்து வருகிறார்கள், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வையும் அரசியல் நடவடிக்கையையும் வளர்ப்பதற்கு விஷயாதாரங்களை வளமாக வழங்கிவருகிறார்கள். இதன் விளைவாக, சோஷலிஸத்தின் தீராப் பகைவர்களுங்கூட முன்னணியில் நிற்கும் இந்த அரசியல் போராளியிடம் நிறைய மதிப்பு வைக்கிறார்கள், முதலாளித்துவ வட்டாரங்களிலிருந்தும், அதிகாரவர்க்க, அரசவை வட்டாரங்களிலிருந்துங்கூட, முக்கியமான ஆவணம் ஒன்று அவ்வப்பொழுது மாயமான வழிகளில் "Vorwärts" ஆசிரியர் அலுவலகத்துக்கு வந்துசேருகிறது.

ஆக, ''முரண்பாடு'' போல் தோன்றுகிற இவ்விஷயத்திற்குத் தீர்வு இதுதான். இது ரபோச்சியே தேலோவின் அறிவுக்கு எட்டவில்லை, எனவே அது மனம் வெதும்பிப்போய் ''நாடகநடிப்பு'' என்று மட்டுமே கூக்குரலிடமுடிகிறது.

உண்மைதான், சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்: ரபோச்சியே தேலோவைச் சேர்ந்த நாங்கள் திரளான தொழிலாளி வர்க்க இயக்கத்தை மூலக்கல்லாக நினைக்கிறோம் (கொட்டையெழுத்தில் இதை அச்சிடுகிறோம்!); தன்னியல்பு அம்சத்தின் குறிபொருளைக் குறைத்து மதிப்பிடவேண்டாம் என்று எல்லோரையும் எச்சரிக்கிறோம்; பொருளாதாரப் போராட்டத்துக்கே — தன்னளவில் — அரசியல் தன்மை கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம்; பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு வைத்திருக்க விரும்புகிறோம்! இப்படியெல்லாம் இருந்தும், தொழிலாளிவர்க்க இயக்கத்தை முதலாளித்துவ ஜனநாயகத்தின் கருவியாக மாற்றுவதற்கு நாங்கள் அடிப்படை தயாரித்து வருகிறதாக எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். மேலும், இப்படிச் சொல்ல முன்வருகிறவர்கள் யார் தெரியுமா? ஒவ்வொரு ''மிதவாத'' பிரச்சினையிலும் தலையிட்டும் (''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் உயிர்ப்புள்ள தொடர்பு'' எனும் விஷயத்தை எவ்வளவு மோசமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்!), மாணவர்கள் விஷயத்திலும் ஸேம்ஸ்த்வோக்கள் விஷயத்திலுங்கூட (என்ன பயங்கரம்!) எவ்வளவோ கவனம் செலுத்தியும் மிதவாதத்தோடு ''சமரசம்'' செய்துகொள்ளும் பேர்வழிகள்தாம் இப்படிச் சொல்கிறார்கள்! தங்களுடைய முயற்சிகளில் (''பொருளாதவாதிகளோடு'' ஒப்பிடுகையில்) பெரும் பகுதியை தொழிலாளிவர்க்கமல்லாத வர்க்கங்களிடையே பணியாற்றுவதற்குச் செலவிட பொதுவாகவே விரும்புகிற பேர்வழிகள்தாம் இப்படிச் சொல்கிறார்கள்! இது ''நாடகநடிப்பு'' தவிர வேறென்ன?

பாவம், ரபோச்சியே தேலோ! இந்தப் புரியாத புதிருக்கு அது விடை காணும் நாள் வருமா?

## IV

## பொருளாதாரவாதிகளின் பக்குவமின்மையும் புரட்சியாளர்களின் அமைப்பும்

பொருளாதாரப் போராட்டமே அரசியல் கிளர்ச்சிக்கு மிக விரிவாகச் செயல்படுத்தத்தக்க சாதனம், பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுப்பது

முதலியவைதான் இன்று நம் பணி, என்றெல்லாம் ரபோச்சியே தேலோ அறைந்து கூறும் கூற்றுக்களை நாம் பகுத்தாய்ந் தோம் அல்லவா? அவை நம் அரசியல் பணிகளைப் பற்றி மட்டு மல்லாமல் அமைப்புத்துறைப் பணிகளைப் பற்றியும் ஒரு குறுகிய கருத்து வெளியிடுகின்றன. ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டத் துக்கு'' ஒரு மையப்படுத்தப்பட்ட அனைத்து ருஷ்ய அமைப்பு தேவையேயில்லை; எனவே அரசியல் எதிர்ப்பையும் கண்ட னத்தையும் சீற்றத்தையும் குறிக்கும் எல்லா வெளிப்பாடு களையும் ஒரே பொதுவான தாக்குதலிலே இணைக்கக்கூடிய தாயமைந்த ஓர் அமைப்பை, முழுநேரப் புரட்சியாளர்களைக் கொண்டதாய் மக்கள் முழுவதின் உண்மையான அரசியல் தலைவர்களின் தலைமையிலே இயங்கக்கூடியதாயுள்ள ஓர் அமைப்பை, இந்தப் போராட்டம் என்றைக்கும் உண்டாக்க முடியாது. இது நியாயந்தான். எந்த ஓர் அமைப்பின் தன்மை யும் அதன் நடவடிக்கையின் உள்ளடக்கத்தால் நிர்ணயிக்கப் படுவது இயல்பு, தவிர்க்க முடியாததுங்கூட. எனவே, மேலே நாம் பகுத்தாய்ந்த வன்கூற்றுக்களின் மூலமாக ரபோச்சியே தேலோ அரசியல் நடவடிக்கையின் குறுகிய தன்மையை மட்டுமின்றி அமைப்புப் பணியின் குறுகிய தன்மையையும் புனிதப்படுத்தி நியாயப்படுத்துகிறது. என்றும் போலவே இவ்வழக்கிலும் ரபோச்சியே தேலோ தன்னியல்புக்கு அடி பணிகிற உணர்வு படைத்த பத்திரிகையாகவே தன்னைக் காட்டிக்கொள்கிறது. தன்னியல்பாக வளரும் அமைப்பு வடி வங்களுக்கு அடிபணிவது, நம் அமைப்புப் பணியின் குறுகிய தன்மையையும் பக்குவமின்மையையும் உணரத் தவறுவது, மிக முக்கியமான இத்துறையில் உள்ள நம் ''கைத்தொழில்'' வகைப்பட்ட வழிமுறைகளின் குறுகிய தன்மையையும் பக்குவமின்மையையும் உணரத் தவறுவது, —இது உண்மை யிலே ஒரு நோய், இந்த நோய் நம் இயக்கத்தைப் பீடித்துள் ளது என்று கூறுகிறேன். இது நலிவையொட்டி வருகிற நோய் அல்ல, வளர்ச்சியையொட்டி வருகிற நோய் என்பது உண்மையே. என்றபோதிலும், தன்னியல்பான சீற்றத்தின் அலையானது இயக்கத்தின் தலைவர்களாகவும் அமைப்பாளர் களாகவும் உள்ள நம் தலை மேலே வீசியடித்துவரும் இந்நேரத் தில்தான் பிற்பட்டநிலையைத் தாங்கிப்பேசுவதை எதிர்த்

தும், இவ்விஷயத்தில் குறுகிய தன்மையை நியாயப்படுத்து வதை எதிர்த்தும் சமரசத்திற்கிடமற்ற போராட்டம் நடத்த வேண்டும். நம்மிடையே நிலவும் தேர்ச்சிநயமின்மை குறித்து அதிருப்தியும் அதை நம்மிடமிருந்து போக்கிக் கொள்ள வேண்டும் எனும் அசைக்கமுடியாத மன உறுதியும் நடை முறைப்பணியில் ஈடுபடுகிற அல்லது ஈடுபடத் தயாராகிக் கொண்டிருக்கிற எல்லோரிடமும் எழுப்புவது குறிப்பாக அவசியமாகும்.

### அ. பக்குவமின்மை என்பது என்ன?

*1894-1901* காலத்தைச் சேர்ந்த மாதிரியாகக் கொள் ளத்தக்க ஒரு சமூக-ஜனநாயகவாதப் பயிற்சிக்குழுவின் நட வடிக்கையைச் சுருக்கமாக வர்ணிப்பதின் வழியே இந்தக் கேள்விக்கு விடையளிக்க முயல்வோம். அந்தக் காலத்திய மாணவ இளைஞர்கள் அனைவரும் மார்க்ஸியத்தில் மூழ்கிப் போயிருந்ததைக் குறிப்பிட்டிருக்கிறோம். அந்த மாணவர்கள் தத்துவம் என்கிற வகையில் மார்க்ஸியத்தின்பால் அக்கறை கொண்டிருந்தது மட்டுமல்ல; அல்லது அதைவிட அதிகமாக, ''என்ன செய்யவேண்டும்?'' எனும் கேள்விக்குரிய விடையாக, பகைவனை எதிர்த்துக் களம் புக அழைக்கும் அறைகூவலாக அதன்பால் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பது உண்மை. இந்தப் புதிய போர்வீரர்கள் திகைப்பூட்டக்கூடிய ஆதிகால ஆயுதங்களும் பயிற்சியும் எடுத்துக்கொண்டு போர்க்களத்தை நோக்கி விரைந்தனர். பெரும்பாலாரிடம் ஆயுதம் அநேகமாக இல்லை, பயிற்சி அறவே இல்லை. ஏரும் கலப்பையும் விட்டு வரும் விவசாயிகள் போல் கம்புகளை மட்டும் எடுத்துக் கொண்டு போருக்குக் கிளம்பிவிட்டார்கள். இயக்கத்தின் பழைய உறுப்பினர்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமலே, பிற மாவட்டங்களிலுள்ள பயிற்சிக்குழுக்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமலே, அல்லது ஒரே நகரத்தின் பிற பகுதிகளிலுள்ள (அல்லது பிற கல்விக் கழகங்களிலுள்ள) பயிற்சிக்குழுக்களோடுங்கூட எந்தத் தொடர்பும் இல்லா மலே, புரட்சிப் பணியின் பல்வேறு பிரிவுகளுக்குரிய அமைப்பு எதுவும் இல்லாமலே, எந்த ஒரு கால அளவுக்கும் முறையான நடவடிக்கைத் திட்டம் ஏதும் இல்லாமலே, ஒரு மாணவர்

பயிற்சிக்குழு தொழிலாளிகளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு வேலை செய்யத் தொடங்குகிறது. படிப்படியாகத் தனது பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் விரிவாக்கிக் கொள்கிறது; தனது நடவடிக்கைகளைக் கொண்டு ஓரளவுக்குப் பெரும்பகுதித் தொழிலாளிகளின் அனுதாபத்தையும் படித்த மக்கட்பகுதியிலே ஒரு பகுதியின் அனுதாபத்தையும் வென்றுகொள்கிறது, அவர்களிடமிருந்து பணமும் பெறுகிறது, அவர்களிடையேயிருந்து புதிய இளைஞர் குழுக்களையும் ''கமிட்டி'' சேர்த்துக்கொள்கிறது. கமிட்டியின் (அல்லது போராட்டச் சங்கத்தின்) கவர்ச்சிச்சக்தி வளர்கிறது, அதன் நடவடிக்கைத்துறை விரிவடைகிறது, கமிட்டி இந்நடவடிக்கையை தன்னியல்பாகத்தான் விரிவாக்குகிறது. ஓராண்டுக்கு முன்னரோ சில மாதங்களுக்கு முன்னரோ மாணவர் பயிற்சிக் குழுக் கூட்டங்களில் பேசியும் ''எங்கே செல்கிறோம்?'' எனும் பிரச்சினையை விவாதித்தும் வந்த அதே நபர்கள்தாம், தொழிலாளிகளோடு தொடர்பு ஏற்படுத்தி நிலைநிறுத்திக்கொண்டு துண்டுப்பிரசுரங்கள் எழுதியும் பிரசுரித்தும் வந்த அதே நபர்கள்தாம் இப்போது வேறு புரட்சியாளர் குழுக்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்கிறார்கள், இலக்கியங்கள் தேடிக் கொடுக்கிறார்கள், உள்ளூர் செய்தித்தாள் ஒன்று பிரசுரிக்க முனைகிறார்கள், ஆர்பாட்டம் நடத்த அணிதிரட்டுவது பற்றிப் பேசத் தொடங்குகிறார்கள், கடைசியில் பகிரங்கமான போராட்டத்துக்கு வருகிறார்கள் (இது, சூழ்நிலைமைகளுக்கேற்ப, முதல் கிளர்ச்சித் துண்டுப்பிரசுரம் வெளியிடுகிறதாகவோ, முதல் செய்தித்தாள் இதழ் வெளியிடுகிறதாகவோ, முதல்ஆர்ப்பாட்டத்துக்கு அணி திரட்டுகிறதாகவோ வடிவம் தாங்கலாம்). இப்படிப்பட்ட செயல்கள் துவக்கியதும் உடனடியான, முழுமையான, தோல்வியில் முடிவது வழக்கம். தோல்வி உடனடியானது, முழுமையானது—காரணம், ஒரு நீடித்த, பிடிவாதமான, போராட்டத்துக்கு முறையாகவும் கவனமாகவும் சிந்தித்துப் படிப்படியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் விளைவல்ல இந்தப் பகிரங்கப் போராட்டம், மரபான பயிற்சிக்குழுவின் வேலையின் தன்னியல்பான வளர்ச்சியிலிருந்து விளைந்தது அது; காரணம், இயல்பாகவே, அநேகமாக எல்லா வழக்குகளிலும் போலீஸுக்கு உள்ளூர் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களைத் தெரியும், ஏனெனில்

அவர்கள் மாணவர்களாயிருந்த காலத்தில் ஏற்கெனவே ''பெயர்பெற்று'' விட்டவர்கள், போலீஸ் படையெடுப்புக்குச் சரியான தருணம் பார்த்துக்கொண்டிருந்தது, அவ்வளவுதான். பயிற்சிக்குழு தன் வேலையை வளர்க்கட்டும், அதனுல் corpus delicti* கிடைக்கும், என்று போலீஸ் வேண்டுமென்றே போதிய காலத்துக்கு விட்டுவைத்திருந்தது. மேலும், எப்போதும் ''இனப்பெருக்கத்துக்காக'' (எனக்குத் தெரிந்த வரை இந்தச் சொல்லே நம்மவர்களும் போலீஸ்காரர்களும் பயன்படுத்துகிருர்கள்) தனக்குத் தெரிந்த பல பேர்களை போலீஸ் சுதந்தரமாயிருக்க விட்டிருந்தது. நவீனகாலத் துருப்புகளை எதிர்த்து விவசாயிகள் கம்புகள் ஏந்திப் போராடும் போராட்டத்துடன் இவ்வகைப் போராட்டத்தை ஒப்பிட்டுப்பார்க்காமல் இருக்கமுடியாது. என்ருலும், போராளிகளுக்குப் பயிற்சி பூஜ்ஜியமாயிருந்துங்கூட இயக்கம் விரிந்து, வளர்ந்து, வெற்றிகள் ஈட்டிக்கொண்டுதான் இருந்தது என்ருல் அந்த இயக்கத்தின் வீரியத்தைக் கண்டு வியக்காமலிருக்கவும் முடியாது. உண்மைதான், வரலாற்றுப் பார்வை நிலையிலே பார்க்கையில், ஆயுதங்களின் ஆதிநிலை துவக்கத்தில் தவிர்க்கமுடியாததே; அது மட்டுமல்ல, விரிந்த அளவில் போராளிகளைத் திரட்டிச்சேர்த்துக்கொள்வதற்கான நிலைமைகளில் ஒன்று என்கிற வகையில் அது நியாயமானதுங்கூட. ஆனுல் முக்கியமான போர் நடவடிக்கைகள் துவங்கியவுடன் (உண்மையிலே அவை 1896 கோடைக்காலத்தில் வேலைநிறுத்தங்களுடன் தொடங்கிவிட்டன) நமது போர் அமைப்புகளிலுள்ள குறைபாடுகள் மேன்மேலும் அதிகமாக நமக்கு உறைக்கிறவாறு வெளிப்படலாயின. அரசாங்கம் முதலில் குழம்பிப்போய் பல தவறுகள் செய்தது (எடுத்துக் காட்டாக, அது சோஷலிஸ்டுகளின் தீச்செயல்களை வர்ணித்து மக்களுக்கு வேண்டுகோள் விட்டது, அல்லது தொழிலாளிகளைத் தலைநகரங்களிலிருந்து மாநிலத் தொழில் மையங்களுக்குக் கடத்தியது), வெகு விரைவிலே போராட்டத்தின் புதிய நிலைமைகளுக்கேற்றவாறு தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு, நேர்த்தியாக ஆயத்தம் செய்யப்பட்ட ஆத்திரமூட்டும்

* குற்றச்சாட்டுக்கான உருப்படியான ஆதாரங்கள்.— (ப-ர்.)

கையாட்களையும் உளவாளிகளையும் போலீஸ்காரர்களையும் கொண்ட படைகளை நன்கு பரப்பி நிறுத்தியது. போலீஸ் படையெடுப்புகள் அடிக்கடி நிகழ்ந்தன, பெருந்தொகை யான மக்களைப் பாதித்தன, உள்ளூர்ப் பயிற்சிக்குழுக்களை முற்றுக அழித்துவிட்டன, தொழிலாளர்களின் மக்கள்திரள் தங்கள் தலைவர்களனைவரையும் இழந்தது, இதனால் இயக்கம் மலைக்கத்தக்க திடீர் மாற்றமுறும் தன்மை பெற்று விட்டது; தொடர்ச்சியான, ஒன்றிணைந்த வேலை செல்வது அறவே சாத்தியமற்றுவிட்டது. உள்ளூர்த் தலைவர்கள் பயங்கரமாகச் சிதறடிக்கப்பட்டனர்; பயிற்சிக்குழுக்களில் உறுப்பினர்கள் சேர்வது தற்செயல் நிகழ்ச்சியாகிவிட்டது; தத்துவார்த்த, அரசியல், அமைப்புத்துறை, பிரச்சினைகளில் பயிற்சியின்மை, அவற்றைப் பற்றிய குறுகிய பார்வை; இவையனைத்தும் மேலே வர்ணித்த நிலைமைகளின் தவிர்க்கவியலாத விளைவாகும். விஷயங்கள் எந்த அளவுக்கு முற்றிவிட்டன என்ருல், நம்மிடம் தன்னுணர்ச்சிக் கட்டுப்பாடு இல்லாததாலும் இரகசியநிலையை நீடித்திருக்கச்செய்யும் திறமை இல்லாததாலும் பல இடங்களில் தொழிலாளிகள் அறிவுஜீவிகள்பால் நம்பிக்கை இழந்து அவர்களை விட்டு விலகிச்செல்லத் தொடங்குகின்றனர். அறிவுஜீவிகளுடைய கவனமின்மை போலீஸ் படையெடுப்புகளுக்கு இடமளிக்கிறது என்று அவர்கள் பேசுகின்றனர்.

சிந்தனைத்திறமுள்ள சமூக-ஜனநாயகவாதிகள் எல்லோரும் கடைசியாக இப்போது இந்த தேர்ச்சிநயமற்ற வழிமுறைகள் ஒரு நோய் என்று கருதத் தொடங்கியுள்ளனர். இயக்கத்தைப் பற்றி அற்பசொற்பமான அறிவு இருக்கிற ஒவ்வொருவனுக்கும் இது தெரியும். இயக்கத்தைப் பற்றித் தெரியாத வாசகர் நாம் இந்த இயக்கத்துக்கு ஏதோ ஒரு தனி கட்டத்தையோ ஒரு தனி நோயையோ ''புனைந்து'' கற்பிக்கிறேம் என்று நினைக்க இடமளிக்காமலிருப்பதற்காக மீண்டும் நாம் மேற்கோள் காட்டிய சாட்சியைக் குறிப்பிடுவோம். இந்த மேற்கோள் பகுதி நீளமாயிருப்பதைப் பற்றி வாசகர் மன்னிப்பார் என்று நம்புகிறேம்:

ரபோச்சியே தேலோ இதழ் 6ல் B-V எழுதுவதாவது: ''மேலும் விரிவான நடைமுறை நடவடிக்கைக்குப் படிப்படியாக மாறிவருவது ஓர் இனக்குறிப்பான குணும்சமாகும்

(இந்த மாற்றநிலே ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கம் இப்போது கடந்துவரும் பொதுவான மாற்றக் காலகட்டத்தை நேரடியாகச் சார்ந்திருக்கிறது),... என்றபோதிலும், அதே போல் சுவையான மற்றொரு குணும்சமும் ருஷ்யத் தொழிலாளர் புரட்சியின் பொது இயக்கமைப்பில் உள்ளது. **செயலுக்கு இலாயக்கான புரட்சிச் சக்திகள் பொதுவாக இல்லாதிருப்பதையே*** நாங்கள் குறிப்பிடுகிறேம்; செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் மட்டுமின்றி ருஷ்யா வெங்கும் இதை உணர்கிருர்கள். தொழிலாளிவர்க்க இயக்கத்தின் பொதுவான மீட்டுயிர்ப்பை யொட்டியும், உழைக்கும் மக்களின் பொது வளர்ச்சியை யொட்டியும், வேலைநிறுத்தங்கள் அடிக்கடி நிகழ்வது அதிகமாகிவருவதை யொட்டியும் அரசாங்கத்தின் துன்புறுத்தலும், கைதுகளும், வெளியேற்றல்களும், நாடு கடத்தலும் தீவிரப்படுத்தப் பட்டிருப்பதையொட்டியும், தொழிலாளிகளின் திரள்நிறைந்த போராட்டம் மேன் மேலும் பகிரங்கமானதாகிவருவதை யொட்டியும், **உயர் திறனுள்ள புரட்சிச் சக்திகள் இல்லாமை மேன்மேலும் எடுப்பாகத் தெரிகிறது, அது இயக்கத்தின் பொதுத்தன்மையையும் ஆழத்தையும் பாதிக்காமல் இருக்கமுடியாது** என்பதில் ஐயமில்லே. புரட்சிகரமான அமைப்புகளின் பலமான, நேரடியான செல்வாக்கு எதுவும் செலுத்தப்படாமலே பல வேலே நிறுத்தங்கள் நடக்கின்றன... கிளர்ச்சித் துண்டுப்பிரசுரங்களும் சட்டவிரோதமான இலக்கியமும் குறைவாயிருப்பதை உணர்கிருர்கள்.... கிளர்ச்சியாளர்கள் இல்லாமல் தொழிலாளிகளின் பயிற்சிக்குழுக்கள் விடப்படுகின்றன.... மேலும், நிதி வறட்சி எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னுல், **தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி புரட்சிகரமான அமைப்புகளின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தாண்டி முன்னே சென்றுகொண்டிருக்கிறது.** செயல்துடிப்புள்ள புரட்சியாளர்களின் எண்ணிக்கை மிகவும் சிறிதாயிருப்பதினுல், அதிருப்தியடைந்துள்ள தொழிலாளர் திரள் முழுமையின் மீது செலுத்தும் செல்வாக்கைத் தங்கள் கையில் குவித்துவைத்திருக்கவோ இந்த அதிருப்திக்கு ஒட்டுப்பண்பின் சாயல்கூட அமைப்பின் சாயல்கூட கொடுக்கவோ முடியாமலிருக்கிருர்கள். தனித்தனி பயிற்சிக்குழுக்கள், தனித்தனி புரட்சியாளர்கள், சிதறிக்கிடக்கும் நிலையில், இணைக்கப்படாமலிருக்கும் நிலையில், தகவாக வளர்க்கப்பட்ட பகுதிகளையுடைய தனியொரு, வலுவான, கட்டுப்பாடுள்ள அமைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லே....'' உடைத்தெறியப்பட்ட பயிற்சிக்குழுக்களின் இடத்தில் புதிய பயிற்

---

* கொட்டையெழுத்தில் உள்ளதனைத்தும் நாம் போட்டதாகும்.

சிக்குழுக்களை உடனடியாக அமைத்து விடுவது ''இயக்கத்தின் உயிர்ச்சக்தியைக் காட்டுகிறதே யல்லாமல் போதிய எண்ணிக்கையில் போதிய பயிற்சிபெற்ற புரட்சிகரமான ஊழியர்கள் இருப்பதைக் காட்டுகிறதில்லை'' என்று ஒப்புக்கொண்டு ஆசிரியர் முடிவில் கூறுவதாவது: ''செயின்ட் பீடர்ஸ்புர்க் புரட்சியாளர்களிடையேயுள்ள பயிற்சியின்மை அவர்களின் வேலையின் விளைவுகளிலே வெளியாகிறது. அண்மையில் நடந்த குற்றவழக்குகள்—குறிப்பாக, ''சுயவிடுதலைக்'' குழு, ''மூலதனத்தை எதிர்க்கும் உழைப்பு'' என்ற குழு[82] ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றவழக்குகள்—தெளிவாகக் காட்டியதாவது: இளங் கிளர்ச்சியாளருக்குத் தொழிலாளி வர்க்க நிலைமைகளைப் பற்றி விபரமான அறிவு இல்லை, எனவே ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் கிளர்ச்சி நடத்தி வர முடிகிறதாயுள்ள நிலைமைகளைப் பற்றியும் விபரமான அறிவு இல்லை, இரகசியத்தன்மையின் கோட்பாடுகள் பற்றியும் ஒன்றும் தெரியாது, சமூக-ஜனநாயகவாதத்தின் பொதுக் கோட்பாடுகளை மட்டுமே புரிந்து கொண்டிருக்கிறார் (அதாவது, புரிந்துகொண்டிருக்கிறார் என்றால்), இந்நிலையில் அவர் ஒருக்கால் நான்கு, ஐந்து, அல்லது ஆறு மாதங்களுக்குத்தான் வேலை செய்ய முடிகிறது. பிறகு கைதுகள் வருகின்றன, அவற்றின் காரணமாக அமைப்பு முழுவதும், அல்லது அதன் ஒரு பகுதியாவது, அடிக்கடி உடைத்தெறியப்படும் நிலைக்குக் கொண்டுபோய் விடுகிறது. ஆகவே, ஒரு குழுவின் ஆயுள் சில மாதங்களே என்கிற நிலைமை இருந்தால் அக்குழு வெற்றிகரமான பணி புரிய முடியுமா எனும் கேள்வி எழுகிறது.... இன்றிருக்கும் அமைப்புகளின் குறைபாடுகளை மாற்றநிலைக் காலகட்டத்துக்குரியதாக முற்றுகக் கற்பித்துவிட முடியாது என்பது வெளிப்படை.... இயங்கிவரும் அமைப்புகளின் எண்ணிக்கை, எல்லாவற்றிற்கும் மேலாக அவற்றின் தரம், சிறிய காரணி ஆகாது என்பது வெளிப்படை; நம் சமூக-ஜனநாயகவாதிகள் மேற்கொள்ளவேண்டிய முதல் வேலை.... பயன்திறமுள்ள வகையிலே அமைப்புகளை ஒன்றிணைப்பது, அவற்றின் உறுப்பினர்களைக் கண்டிப்புள்ள தேர்வுக்கு உட்படுத்துவது.''

### ஆ. பக்குவமின்மையும் பொருளாதாரவாதமும்

ஒவ்வொரு வாசகர் மனத்திலும் நிச்சயமாக எழுந்துள்ள பிரச்சினையை இப்போது நாம் கவனித்தாகவேண்டும். இயக்கம் முழுவதையும் பாதிக்கிறதாயுள்ள வளரும் பருவத்து நோய் என்கிற வகையில் பக்குவமின்மைக்கும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் உள்ள கருத்துப் போக்குகளில் ஒன்றாக

இருக்கும் ''பொருளாதார வாதத்துக்கும்'' இடையே தொடர்பு ஏற்படுத்த முடியுமா? முடியும் என்றே நினைக்கிறோம். நடைமுறை வழிப்பட்ட பயிற்சியின்மை, அமைப்புப் பணி செய்துவரத் திறமையின்மை, நிச்சயமாக நம் எல்லோருக்கும் (துவக்கத்திலிருந்தே வழி பிறழாமல் புரட்சிகரமான மார்க்ஸியத்தைத் தழுவிநிற்கிறவர்களும் உட்படத்தான்) பொதுவாயுள்ளதுதான். நடைமுறை வழிப்பட்ட பயிற்சியின்மை ஒன்றுதான் விவகாரம் என்று சொன்னால் நடைமுறை ஊழியர்களை யாரும் குற்றம் சொல்ல முடியாது, உண்மைதான். ஆனால் ''பக்குவமின்மை'' எனும் சொல் நடைமுறை வழிப்பட்ட பயிற்சியின்மைக்கும் மேலாக ஒன்றைத் தழுவி நிற்கிறது; அது பொதுவாகப் புரட்சிப் பணியின் குறுகிய பரப்பெல்லையைக் குறிக்கிறது; இப்படிப்பட்ட குறுகிய நடவடிக்கையின் அடிப்படையில் புரட்சியாளர்களின் ஒரு நல்ல அமைப்பைக் கட்ட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதை அது குறிக்கிறது; கடைசியாக (முக்கியமான விஷயமும் இதுதான்), இந்தக் குறுகியதன்மையை நியாயப்படுத்திஅதை ஒரு தனித்''தத்துவமாக''—அதாவது, இந்தப் பிரச்சினையிலும் தன்னியல்புக்கு அடிபணிவது—உயர்த்தி வைக்கிற முயற்சிகளையும் அது குறிக்கிறது. இவ்வித முயற்சிகள் வெளிப்படுத்தப்பட்டவுடன் பக்குவமின்மை ''பொருளாதாரவாதத்தோடு'' தொடர்புள்ளது என்று தெளிவாயிற்று, மற்றும் நம்மிடமிருந்து பொதுவாகப் ''பொருளாதாரவாதத்தைப்'' போக்கிக் கொள்ளாதவரை (அதாவது, மார்க்ஸியத் தத்துவம், சமூக-ஜனநாயகவாதத்தின் பாத்திரம், அதன் அரசியல் பணிகள், பற்றிய குறுகிய கருத்தோட்டத்தைப் போக்கிக் கொள்ளாதவரை) நமது அமைப்புத்துறை நடவடிக்கையின் இந்தக் குறுகிய தன்மையையும் போக்கிக்கொள்ளமாட்டோம் என்றும் தெளிவாகியது. இம்முயற்சிகள் இருவகைத் திசையில் வெளிப்பட்டன. சிலர் இவ்விதமாகச் சொல்லத் தொடங்கினர்: உழைக்கும் மக்கள் இன்னமும் விரிவான, தீவிரமான அரசியல் பணிகளை முன்வைக்கவில்லை, அவற்றைப் புரட்சியாளர்கள்தாம் அவர்கள் மீது ''சுமத்த'' முயல்கிறார்கள்; அம்மக்கள் தொடர்ந்து உடனடி அரசியல் கோரிக்கைகளுக்குப் போராடிவரவேண்டும், ''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்த்துப்

பொருளாதாரப் போராட்டத்தை'' அவர்கள் தொடர்ந்து நடத்திவரவேண்டும்* (மேலும், மக்கள்திரளின் இயக்கத் துக்கு ''எட்டக்கூடியதாயுள்ள'' இந்தப் போராட்டத்துக்குப் பொருத்தமாக மிகவும் பயிற்சியற்ற இளைஞர்களுக்கும் ''எட்டக்கூடியதாயுள்ள'' ஓர் அமைப்பு இருந்து தீரவேண் டும் என்பது இயற்கையே). ''படிப்படியான முன்னேற்றம்'' பற்றிய எந்தத் தத்துவத்துடனும் சம்பந்தமில்லாத மற்ற வர்கள் இவ்விதமாகச் சொன்னார்கள்: ''அரசியல் புரட்சி உண்டாக்குவது'' சாத்தியந்தான், அவசியந்தான்; என்ற போதிலும், விட்டுக்கொடாத, பிடிவாதமான போராட்டத் தில் பாட்டாளி வர்க்கத்துக்குப் பயிற்சியளிக்கப் புரட்சியா ளர்களைக் கொண்ட ஒரு பலமான அமைப்பு இதற்குத் தேவை யில்லை. ''எட்டக்கூடியதாயுள்ள'' தடி இருக்கிறதே, அந்தப் பழைய நண்பரைப் பிடித்துக்கொண்டால் போதும், வேறொன்றும் நாம் செய்யவேண்டியதில்லையாம். இந்த உரு வக அணியை விலக்கிப் பார்த்தால் இதன் பொருள் நாம் ஒரு பொது வேலைநிறுத்தத்தைத் திரட்டவேண்டும்,**அல்லது ''பரபரப்பூட்டும் பயங்கரவாதச் செயல்'' மூலமாக தொழி லாளி வர்க்க இயக்கத்தின் ''உணர்ச்சியற்ற'' முன்னேற்றத் தைத் தூண்டிவிடவேண்டும்.*** இவ்விரு போக்குகளும், அதாவது சந்தர்ப்பவாதிகளும் ''புரட்சிவாதிகளும்'' இன்று நிலவும் தேர்ச்சிநயமின்மைக்கு அடிபணிகின்றனர்; அதைப் போக்கிவிட முடியும் என்று இருவரும் நம்பவில்லை; அரசியல் போராட்டத்துக்குச் சக்தியும், திடநிலையும், தொடர்ச்சியும் கொடுக்க முடிகிற ஒரு புரட்சியாளர்களின் அமைப்பை நிறுவவேண்டிய நமது முதன்மையான, இன்றியமையாத பணியை இருவரும் புரிந்துகொள்ளவில்லை.

B-vஇன் சொற்களை மேற்கோள் காட்டினோம்: ''தொழி

---

* பார்க்க: ரபோச்சயா மிஸ்ல், ரபோச்சியே தேலோ, குறிப்பாக பிளெஹானவுக்கு அளித்த பதில்.

** தொழிலாளிவர்க்கப் போராட்டம் எனும் தலைப்புடன் ருஷ்யாவில் பிரசுரிக்கப்பட்ட திரட்டில் உள்ள ''அரசியல் புரட்சி உண்டாக்கப் போகிறவர்கள் யார்?'' என்பதைப் பார்க்க. கீவ் கமிட்டி இத்திரட்டை மீண்டும் பிரசுரித்தது.

*** புரட்சிவாதத்தின் மீட்டுயிர்ப்பு, மற்றும் ஸ்வபோதா எனும் சஞ்சிகை.

லாளிவர்க்க இயக்கத்தின் வளர்ச்சி புரட்சிகரமான அமைப்புகளின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தாண்டி முன் சென்றுகொண்டிருக்கிறது'' என்று. இந்தக் ''கவனமிக்க நோக்கரின் மதிப்புள்ள குறிப்பு'' (B-vஇன் கட்டுரை பற்றி ரபோச்சியே தேலோ அளித்த விமர்சனக்குறிப்பு இது) நமக்கு இருவகை மதிப்பு உள்ளதாகும். மக்களின் தன்னியல்பான எழுச்சியின் பின்னே தலைவர்கள் (''தத்துவாசிரியர்கள்'', புரட்சியாளர்கள், சமூக-ஜனநாயகவாதிகள்) பின்தங்கிவிட்டிருப்பதுதான் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் இன்றுள்ள நெருக்கடிக்கு முதன்மையான காரணம் எனும் நம் கருத்து சரியே என்று இது புலப்படுத்துகிறது. ''பொருளாதாரவாதக்'' கடிதத்தை (இஸ்க்ரா, இதழ் 12ல்) எழுதியவர்களும், கிரிச்செவ்ஸ்கியும், மார்தீனவும் தன்னியல்பான அம்சத்தின், சுவையற்ற அன்றாடப் போராட்டத்தின், குறிபொருளைச் சிறுமைப்படுத்தும் அபாயம்குறித்தும் இயக்கப்போக்கு வகையில் அமைந்த போர்த்தந்திரங்கள் குறித்தும் முன்வைத்த அத்தனை வாதங்களும் பக்குவமின்மையை ஏற்றிப்போற்றிக்கொள்வதும் தாங்கிப்பிடிப்பதும் தவிர வேறில்லை என்றும் அது புலப்படுத்துகிறது. ''தத்துவாசிரியன்'' எனும் சொல்லை இகழ்ச்சி நகையின்றி உச்சரிக்க முடியாத இந்தப் பேர்வழிகள், பொதுவான பயிற்சியின்மைக்கும் பிற்பட்டநிலைக்கும் தாங்கள் மண்டியிடுவதை ''வாழ்க்கையின் யதார்த்தங்கள்பால் உள்ள அறிவு'' என்று வர்ணித்துக்கொள்ளும் இந்தப் பேர்வழிகள் நமது மிக இன்றியமையாத நடைமுறைப் பணிகளைப் புரிந்து கொள்ளத் தவறுவதை நடைமுறையில் காட்டிக் கொள்கிறார்கள். பின்னடைந்திருப்பவர்களைப் பார்த்து ''சம நடை போடுங்கள்! முன்னால் ஓடாதீர்கள்!'' என்று இவர்கள் கத்துகிறார்கள். அமைப்புத்துறைப் பணியில் சுறுசுறுப்பும் முன்முயற்சியும் இல்லாமல், விரிவான தைரியமான நடவடிக்கைக்குத் ''திட்டங்கள்'' இல்லாமல், அவதிப்படுகிற நபர்களிடம் ''இயக்கப்போக்கு வகையில் அமைந்த போர்த்தந்திரங்கள்'' பற்றிப் பிதற்றுகிறார்கள். அன்றாடப் பொருளாதாரப் போராட்டத்தின் உடனடியான, ''தொட்டறியத்தக்க'', ''ஸ்தூலமான'' நலன்களின் தரத்துக்கு நம் அரசியல் பணிகளையும் அமைப்புத்துறைப் பணிகளையும் நாம் தாழ்த்துவதுதான் நாம் செய்கிற மிகக் கொடிய பாவமாகும்.

அப்படியிருந்தும் அவர்கள் ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுங்கள்!'' என்கிற அதே பல்லவியை நம்மிடம் பாடிக்கொண்டிருக்கிருர்கள். மக்களைக் கவர்ந்த ஒரு கட்டுக்கதையில் வரும் கதாநாயகன் தெருவிலே போய்க் கொண்டிருக்கும் சவ அடக்க ஊர்வலத்தைப் பார்த்துவிட்டு ''பல்லாண்டு வாழ்க!'' என்று கத்துகிருனே, அந்தக் கதாநாயகன் காட்டிக் கொண்ட ''வாழ்க்கையின் யதார்த்தங்கள்பால் உள்ள அறிவைத்தான்'' இந்த விவகாரமும் காட்டுகிறது என்று மீண்டும் சொல்கிறோம்.

''பொதுவாகவே தொழிலாளர் குழுக்கள்'' (ஆம், அப்படித்தான் உள்ளது!) ''அரசியல் பணிகளை (இச்சொற்களை அவற்றின் உண்மையான, நடைமுறை வழிப்பட்ட அர்த்தத்தில்—அதாவது, அரசியல் கோரிக்கைகளுக்காக நடத்தும் சந்தர்ப்பப் பொருத்தமான, வெற்றிகரமான நடைமுறை வழிப்பட்ட போராட்டம் எனும் அர்த்தத்தில்—பயன் படுத்துகிறோம்) சமாளிக்க முடியாமலிருக்கின்றன'' (ரபோச்சியே தேலோ அளித்த பதில் பக்கம் 24) என்று இந்தப் போலி அறிஞர்கள் பிளெஹானவிடம் வாயளந்தபோது காட்டிய இணையற்ற, உண்மையிலே ''நார்ட்ஸீஸ் போன்ற''[83] அகம்பாவத்தை நினைத்துப்பாருங்கள். சீமான்களே, குழுக்களில் பல வகை உண்டு! உண்மை, ''தேர்ச்சிநயமற்றவர்களைக்'' கொண்டிருக்கும் குழுக்கள் தம் தேர்ச்சிநயமின்மையை உணர்ந்து அதைக் கைவிடாதவரை அரசியல் பணிகளைச் சமாளிக்க முடியாதுதான். இதுதவிர, இந்தத் தேர்ச்சிநயமற்றவர்கள் தம் பக்குவமின்மையிலேயே மோகித்துப் போய்விட்டால், ''நடைமுறை வழிப்பட்ட'' என்கிற சொற்களைக் கொட்டையெழுத்தில்தான் போடுவோம் என்று பிடிவாதம் பண்ணிஞல், நடைமுறை வழிப்பட்டதாயிருப்பதற்கு ஒருவனுடைய பணிகள் மக்களின் மிகப் பிற்பட்ட பகுதிகளின் அறிவின் தரத்துக்குத் தாழ்த்தப்படவேண்டியதே என்று நினைத்தால், அவர்கள் கதிமோட்சமில்லாத தேர்ச்சிநயமற்றவர்களேயாவர், நிச்சயமாக அவர்களால் எந்த அரசியல் பணிகளையும் பொதுவாகவே சமாளிக்க முடியாதுதான். ஆனல் அலெக்சேயிவ், மீஷ்கின், ஹால்தூரின், ழெலியாபொவ் போன்ற தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அரசியல் பணிகளை (இச்சொற்களை அவற்றின் உண்மையான, மிகவும்

நடைமுறை வழிப்பட்ட, அர்த்தத்தில் பயன்படுத்துகிறேம்) சமாளிக்க முடிகிறது; அவர்களின் ஆவேசமிக்க பிரச்சாரம் தன்னியல்பாக விழித்தெழுந்துவரும் மக்களிடையே எடுபடு கிறது, அவர்களின் ஒளிவிடும் சக்திக்கு புரட்சிகரமான வர்க் கத்தின் சக்தி ஈடுகொடுத்து ஆதரிக்கிறது என்பதே அதற்குக் காரணம், அந்த அளவுக்கே அக்குழுவால் சமாளிக்கவும் முடிகிறது. பிளெஹானவ் இந்தப் புரட்சிகரமான வர்க்கத் தைச் சுட்டிக்காட்டி அதன் தன்னியல்பான விழிப்பு தவிர்க்க முடியாதது என்று நிருபித்ததோடல்லாமல் ''தொழிலாளர் குழுக்களுக்குங்கூட'' ஓர் உன்னதமான மாபெரும் அரசியல் பணி வைத்தது மிகவும் சரி. அக்காலத்திற்குப்பின் தோன்றி யுள்ள வெகுஜன இயக்கத்தை நீங்கள் குறிப்பிடுவது இப் பணியைத் தாழ்த்துவதற்காகத்தான், ''தொழிலாளர் குழுக் களின்'' சக்தியையும் நடவடிக்கையின் பரப்பெல்லையையும் வெட்டிக்குறுக்கிவிடுவதற்குத்தான். உங்கள் பக்குவமற்ற வழிமுறைகளில் நீங்களே மோகித்துப்போன தேர்ச்சிநயமற் றவர்களாக இல்லாவிட்டால் பிறகு நீங்கள் வேறு யார்? நீங்கள் நடைமுறை வழிப்பட்டவர்கள் என்று ஐம்பமடிக்கி றீர்கள், ஆனல் ஒவ்வொரு ருஷ்ய நடைமுறை ஊழியனுக் கும் தெரிந்திருக்கிற விஷயத்தை—அதாவது, ஒரு குழுவின் சக்தி மட்டுமல்லாமல் ஒரு தனிநபரின் சக்தியுங்கூட புரட்சி இலட்சியத்திற்காகச் சாதிக்கக்கூடிய அருஞ்செயல்களை— பார்க்கத் தவறுகிறீர்கள். அல்லது, 1870களில் இருந்தவர் கள் போன்ற தலைவர்களை நம் இயக்கம் தோற்றுவிக்கமுடி யாது என்று நினைக்கிறீர்களா? முடியாது என்றுசொன்னல், நீங்கள் அப்படி நினைக்கக் காரணம் என்ன? நமக்குப் பயிற்சி இல்லை என்பதினலா? அதற்கென்ன, நாம் பயிற்சிபெற்று வரு கிறேம், தொடர்ந்து பயிற்சிபெற்று வருவோம், பயிற்சி பெற்றுத் தீருவோம்! துரதிர்ஷ்டவசமாக, ''முதலாளிகளுக் கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட் டம்'' எனும் தேங்கிய குட்டையில் பாசி படர்ந்துவிட்டிருப் பது உண்மை; தன்னியல்புக்கு மண்டியிட்டுத் துதி பாடும் பேர்வழிகள், ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் ''பிட்டத் தை'' (பிளெஹானவின் சொல்லைப் பயன்படுத்துகிறேம்) பயபக்தியுடன் ஏறிட்டுப்பார்க்கும் பேர்வழிகள், நம் மிடையே தோன்றியிருக்கிருர்கள். எனினும் இந்தப் பாசியை

நாம் வழித்தெறிவோம். ருஷ்யப் புரட்சியாளர்கள் ஓர் உண்மையான புரட்சிகரமான தத்துவத்தால் வழிகாட்டப் பட்டு, உண்மையிலே புரட்சிகரமான, தன்னியல்பாக விழிப் புற்றுவரும் வர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டு கடைசி யிலே—நெடுங்காலத்துக்குப் பின் கடைசியிலே!—அசுர பலத் துடன் குன்றென நிமிர்ந்து நிற்க முடிகிற நேரம் வந்துவிட் டது. அதற்குத் தேவையானதெல்லாம் இதுதான்: திரள்திர ளான நம் நடைமுறை ஊழியர்களும் சரி, பள்ளிப் பருவத்தி லேயே நடைமுறைப் பணி குறித்துக் கனவு கண்டுவந்திருக் கும் மேலும் பெருந்திரளான மக்களும் சரி, நம் அரசியல் பணிகளைத் தாழ்த்தி நம் அமைப்புத்துறைப் பணியின் பரப் பெல்லையைக் குறுக்கித்தடுக்கச் சொல்லக்கூடிய எந்த யோசனையையும் எள்ளி நகையாடி விரட்டவேண்டும். சீமான் களே, இதை நாங்கள் சாதிப்போம், உறுதியாக நம்புங்கள்!

''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையில் நான் ரபோச்சியே தேலோவுக்கு எதிராக எழுதினேன்: ''ஏதாவ தொரு தனிப் பிரச்சினை சம்பந்தப்பட்ட கிளர்ச்சிக்கான போர்த்தந்திரமோ, கட்சி அமைப்பின் ஏதாவதொரு விபரம் சம்பந்தப்பட்ட போர்த்தந்திரமோ இருபத்திநான்கு மணி நேரத்தில் மாறிவிடக்கூடும்; ஆனால், மக்களிடையே அரசி யல் கிளர்ச்சி நடத்துவதற்கும் போராட்டம் நடத்துவதற் கும் வேண்டிய அமைப்பின் அவசியத்தை—பொதுவாகவே, இடையறாத முற்றான அவசியத்தை—பற்றிய கருத்தை இரு பத்திநான்கு மணி நேரத்தில், ஏன் இருபத்திநான்கு மாதங் களில், மாற்றிக் கொள்வதென்றால் அது கோட்பாடெது வும் அறவே இல்லாத பேர்வழிகளுக்குத்தான் முடியும்'' என்று. இதற்கு ரபோச்சியே தேலோ கொடுத்த பதில்: ''இஸ்க்ராவின் குற்றச்சாட்டுகளில் இது ஒன்றுதான் உண் மைகளை ஆதாரமாகக் கொண்டிருப்பதுபோல் காட்டிக் கொள்கிறது, இதற்கு அடிப்படை அறவே கிடையாது. ரபோச்சியே தேலோவின் வாசகர்கள் நன்கு அறிவார்கள், இஸ்க்ரா தோன்றுவதற்காகக் காத்திராமல் நாங்கள் துவக் கத்திலிருந்தே அரசியல் கிளர்ச்சிக்கு அறைகூவியழைத்தது மட்டுமல்ல''... [அதே நேரத்தில், தொழிலாளர் பயிற்சிக் குழுக்கள் மட்டுமின்றி ''திரளான தொழிலாளி வர்க்க இயக்கமும் யதேச்சாதிகாரமுறையை வீழ்த்துவதைத் தன்

முதல் அரசியல் பணியாகக் கருதமுடியாது'', உடனடி அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டத்தைத் தான் முதல் அரசியல் பணியாகக் கருதமுடியும் என்றும் ''ஒரு வேலைநிறுத்தத்திற்குப் பிறகோ, எப்படியோ பல வேலைநிறுத் தங்களுக்குப் பிறகாவது, மக்கள் உடனடி அரசியல் கோரிக் கைகளைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிருர்கள்'' என்றும் கூறியது], ...''ருஷ்யாவில் வேலைசெய்யும் தோழர்களுக்காக நாங்கள் வெளிநாட்டிலிருந்து வழங்கிய எங்கள் பிரசுரங் களைக் கொண்டு மட்டுமே சமூக-ஜனநாயகவாத அரசியல் விஷயாதாரமும் கிளர்ச்சிக்கான விஷயாதாரமும் கொடுத் தோம்''... [நீங்களே கொடுத்த இந்த விஷயாதாரத்தில் பொருளாதாரப் போராட்டத்தை மட்டுமே மிக விரிவான அரசியல் கிளர்ச்சிக்கு அடிப்படை ஆக்கினீர்கள், அது மட்டு மின்றி இப்படிக் குறுக்கப்பட்ட கிளர்ச்சி ''மிகவும் விரிவான செயற்பாட்டுத்திறமுள்ளது'' என்றுகொண்டாடிக்கொள்ளும் அளவுக்குச் சென்றீர்கள். மேலும், இது ஒன்றுதான் கொடுக் கப்பட்ட விஷயாதாரம் எனும் உங்கள் சொந்த வாதமே இஸ்க்ரா தோன்றவேண்டியதின் அவசியத்தையும் ரபோச்சியே தேலோவை எதிர்த்து அது போராடவேண்டியதின் அவ சியத்தையும் நிரூபிக்கிறதைக் கவனிக்கவில்லையா, கனவான் களே?].... ''மறு புறத்தில், எங்கள் பிரசுர நடவடிக்கைதான் உண்மையில் போர்த்தந்திர விஷயத்தில் கட்சியின் ஒற்று மைக்கு அடிகோலியது''... [போர்த்தந்திரம் என்பது கட்சி யுடன் வளர்ந்துவரும் கட்சிப் பணிகளின் ஒரு வளர்ச்சிப் போக்கு எனும் துணிபில் ஒற்றுமையா? இது ஒரு அருமை யான ஒற்றுமைதான்!]... ''அதன் வழியாக ஒரு 'செயல் துடிப்புள்ள அமைப்பை' உண்டாக்குவதைச் சாத்தியமாக்கி யது, அதற்காக வெளிநாட்டிலுள்ள அமைப்பால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் வெளிநாட்டுச் சங்கம் செய் தது'' (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம்15). தட்டிக் கழிக்கப் பார்க்கும் வீண் முயற்சி இது! முடிந்தவரை செய்தீர் கள் என்பதைக் கனவிலும் மறுக்க மாட்டேன். நீங்கள் செய் வதற்கு எது ''சாத்தியம்'' என்பதின் வரம்புகளை உங்கள் பார் வையின் குறுகியதன்மை குறுக்கிவிடுகிறது. ''உடனடி அரசி யல் கோரிக்கைகளுக்காகப்'' போராடுவதற்கு, அல்லது ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளா

தாரப் போராட்டம்'' நடத்துவதற்கு ஒரு ''செயல்துடிப்புள்ள அமைப்பு'' என்று பேசுவது நகைக்கத்தக்கதாகும்.

எனினும், தேர்ச்சிநயமின்மைபால் ''பொருளாதாரவாதத்துக்கு'' உள்ள மோகத்தைக் காட்டும் முத்தான கருத்துக்களை வாசகர் காண விரும்பினால் கதம்பவாதப்போக்குள்ள, ஊசலாடும் போக்குள்ள ரபோச்சியே தேலோவை விட்டுவிட்டு முரணற்ற, மனவுறுதியுள்ள ரபோச்சயா மிஸ்ல் பக்கம் திரும்பவேண்டும். அதன் தனி இணைமலர், பக்கம் 13ல், ஆர்.எம். எழுதியதாவது: ''புரட்சிகரமான படிப்பாளிப் பகுதி என்று சொல்லிக்கொள்ளப் படுவதைப் பற்றி இரண்டு வார்த்தைகள். 'ஜாராட்சிமுறையை எதிர்த்து உறுதியுடன் போராட்டத்தில் இறங்க' தயாராயிருப்பதாக அது பல தடவை நிரூபித்துக்கொண்டிருக்கிறது உண்மைதான். என்ற போதிலும், அரசியல் போலீஸாரால் ஈவிரக்கமின்றித் துன்புறுத்தப்படும் நம் புரட்சிகரமான படிப்பாளிப்பகுதியினர் அரசியல் போலீஸை எதிர்த்து நடத்தும் போராட்டத்தை யதேச்சாதிகாரமுறையை எதிர்த்து நடத்தும் அரசியல் போராட்டமாகக் கருதியதுதான் துரதிர்ஷ்டமான விஷயம். எனவேதான் இன்றைய நாள் வரை 'யதேச்சாதிகாரமுறையை எதிர்த்துப் போராடுவதற்கான சக்திகள் எங்கே பெற முடியும்' என்பதை அதனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.''

தன்னியல்பான இயக்கத்தின் பக்தனை (அதன் மிக மோசமான அர்த்தத்தில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்) இவர் போலீஸை எதிர்த்து நடத்தும் போராட்டத்தின்பால் காட்டும் இறுமாப்புள்ள இளக்காரத்துக்கு உண்மையில் இணையே இல்லை! தன்னியல்பான இயக்கம் இருப்பதால் அரசியல் போலீஸை எதிர்த்துப் போராடுவது நமக்கு முக்கியமேயில்லை என்கிற வாதத்தின் மூலமாக நமக்கு இரகசிய நடவடிக்கையைத் திரட்டியமைப்பதிலுள்ள திறமையின்மையை அவர் நியாயப்படுத்தத் தயாராயிருக்கிறார்! இந்த மலைப்பூட்டும் முடிவை ஆதரிக்கக் கூடியவர்கள் வெகு சிலராகத்தான் இருக்கமுடியும், அந்த அளவுக்கு நமது புரட்சிகரமான அமைப்புகளிலுள்ள குறைபாடுகள் கூரிய முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆனால், எடுத்துக்காட்டுக்கு மார்தீனவ் இதை ஆதரிக்க மறுக்கிறார் என்று வைத்துக் கொண்டால் அதற்கு ஒரே காரணம் அவர் தம் கருத்துக்களை அவற்றின்

தர்க்கரீதியான முடிவுக்குக் கொண்டுபோக முடியாமல் இருக்கிறார் அல்லது பயப்படுகிறார் என்றுதான் இருக்கமுடியும். பார்க்கப்போனால், மக்கள் ஸ்தூலமான கோரிக்கைகளை, தொட்டறியத்தக்க விளைவுகள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகளை முன்வைக்கும் ''பணிக்குப்'' புரட்சியாளர்களின் ஒரு நிலையான, மையப்படுத்தப்பட்ட, செயல்துடிப்புள்ள அமைப்பை உண்டாக்குவதற்குத் தனி முயற்சிகள் அவசியமா? ''அரசியல் போலீஸை எதிர்த்து அறவே போராடாத'' மக்கள்கூட அப்படிப்பட்ட ''பணியை'' நிறைவேற்றமுடியாதா? மேலும், சில தலைவர்களோடு கூடுதலாக, ''அரசியல் போலீஸை எதிர்த்துப் போராட'' அறவே திறமையற்ற அப்படிப்பட்ட ஊழியர்கள் (மிகப் பெரும்பான்மையானவர்கள்) அந்தப் பணியை மேற்கொள்ளாவிட்டால் அதை நிறைவேற்ற முடியுமா? அப்படிப்பட்ட ஊழியர்கள், மக்களைச் சேர்ந்த சராசரி நபர்கள், வேலைநிறுத்தங்களிலும், போலீஸுடனும் துருப்புகளுடனும் நடத்தும் தெருப்போர்களிலும் மாபெரும் சக்தியும் சுயத்தியாகமும் காட்டும் திறமையுள்ளவர்கள்; மேலும், அவர்கள் (சொல்லப்போனால், அவர்கள் மட்டுமே) நம் இயக்கம் முழுவதின் முடிவை நிர்ணயிக்கும் திறமையுள்ளவர்கள். ஆனால் அரசியல் போலீஸை எதிர்க்கும் போராட்டத்துக்குத் தனிச்சிறப்பான பண்புகள் தேவை; அதற்கு முழுநேரப் புரட்சியாளர்கள் தேவை. மக்கள் ஸ்தூலமான கோரிக்கைகளை ''முன்வைப்பதோடு'' மட்டுமல்லாமல் திரளான தொழிலாளர்கள் இப்படிப்பட்ட முழுநேரப் புரட்சியாளர்களையும் மேன்மேலும் அதிகமாக ''முன்னிறுத்தும்படியும்'' நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆக, முழுநேரப் புரட்சியாளர்களின் அமைப்புக்கும் சுத்தமான தொழிலாளர் இயக்கத்துக்கும் உள்ள உறவு பற்றிய பிரச்சினைக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். இந்தப் பிரச்சினை இலக்கியத்திலே அதிகமாகப் பிரதிபலிக்கப்படவில்லையாயினும், ஏறத்தாழ ''பொருளாதாரவாதத்தின்'' பக்கம் ஈர்க்கப்படும் தோழர்களுடன் ''அரசியல்வாதிகள்'' ஆகிய நாம் நடத்தும் உரையாடல்களிலும் சர்ச்சைகளிலும் அது நம் கவனத்தைப் பெற்றுள்ளது. இது தனிக் கவனம் செலுத்தத்தக்க பிரச்சினையாகும். ஆனால் இதை எடுத்துக்கொள்ளுமுன், பக்குவமின்மைக்கும் ''பொருளாதாரவாதத்துக்கும்'' உள்ள தொடர்பு

பற்றிய நம் ஆய்வுரையை விளக்கும் வகையில் மேலும் ஒரு மேற்கோள் கொடுப்போம்.

திரு. N.N. அளித்த பதிலில்[84] எழுதினுர்: ''அரசாங்கத்தை எதிர்க்கும் நேரடிப் போராட்டம் வேண்டும் என்று ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு கோருகிறது—இந்தப் போராட்டத்துக்கான பொருளாயத சக்திகள் எங்கே பெறுவது என்று முதலில் சிந்திக்காமலே, அந்தப் போராட்டத்தின் பாதையை முதலில் குறித்துக்காட்டாமலே'' என்று. கடைசி வார்த்தைகளை அவர் வலியுறுத்தி, ''பாதை'' எனும் வார்த்தைக்குப் பின்வரும் அடிக்குறிப்பும் சேர்த்துள்ளார்: ''இரகசியத்தின் பாற்பட்ட காரணங்களைக் கொண்டு இதை விளக்க முடியாது, ஏனெனில் வேலைத்திட்டம் ஒரு மக்கள் திரளின் இயக்கத்தைக் குறிப்பிடுகிறதேயன்றிச் சதியைக் குறிப்பிடவில்லை. மேலும், இரகசியமான பாதைகளில் மக்கள்திரள் செல்லமுடியாது. இரகசியமான வேலைநிறுத்தம் என்று நாம் சிந்தித்துப் பார்க்கமுடியுமா? இரகசியமான ஆர்ப்பாட்டங்கள், விண்ணப்பமிடுதல் என்று சிந்தித்துப் பார்க்க முடியுமா?'' "Vademecum", பக்கம் 59.) ஆக, இந்த ஆசிரியர் ''பொருளாயத சக்திகள்'' (வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் திரட்டிநடத்துகிறவர்கள்) போராட்டத்திற்கான ''பாதைகள்'' எனும் பிரச்சினைக்கு மிகவும் நெருங்கி வருகிறுர்; என்றபோதிலும், பெரும்பீதியில் இருந்துவருகிறுர்; காரணம், அவர் மக்கள்திரளின் இயக்கத்தை ''வழிபடுகிறுர்''—அதாவது, புரட்சி நடவடிக்கையை நடத்துவதின் அவசியத்திலிருந்து நம்மை விடுவிக்கிற ஒன்றுக அதைக் கருதுகிறுரேயில்லாமல் நம்மை உற்சாகப்படுத்தி நம் புரட்சி நடவடிக்கையைத் தூண்டுவிடுகிற ஒன்றுகக் கருதவில்லை. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் அத்துடன் உடனடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறவர்களுக்கும் அது இரகசியமாக இருக்கச் சாத்தியமில்லைதான்; ஆனுல், திரளான ருஷ்யத் தொழிலாளர்களுக்கு அது ஒரு ''இரகசியமாக'' இருந்து விடக்கூடும் (பெரும்பான்மை வழக்குகளில் இரகசியமாகவே இருந்துவிடுகின்றன); காரணம், வேலைநிறுத்தக்காரர்களோடு எல்லாப் போக்குவரத்தையும் துண்டித்து விடுவதிலும் வேலைநிறுத்தங்கள் பற்றிய செய்திகள் அனைத்தும் பாவாமல் தடுத்து விடுவதிலும் அரசாங்கம் கவனமாயிருக்

கிறது. இங்கேதான் ''அரசியல் போலீஸுக்கு எதிரான ஒரு தனிச் சிறப்பான போராட்டம்'' தேவைப்படுகிறது, வேலை நிறுத்தங்களில் கலந்துகொள்ளும் பெருந்திரளான மக்கள் இந்தப் போராட்டத்தை என்றைக்கும் தீவிரமாக நடத்த முடியாது. புரட்சி நடவடிக்கையையே தொழிலாகக் கொண்டு ஈடுபட்டிருக்கும் நபர்களே இந்தப் போராட்டத்தை ''அந்தந்தக் கலைக்குரிய எல்லா விதிமுறைகளுக்கு'' ஏற்றவாறு ஒழுங்கமைத்துத் தீரவேண்டும். மக்கள் திரள் தன்னியல்பாகவே இயக்கத்தில் ஈடுபடுத்தப்படுகிறது என்கிற விஷயம் இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதின் அவசியத்தைக் குறைத்துவிடவில்லை. மாறாக, அதன் அவசியத்தை அதிகப்படுத்துகிறது. காரணம், போலீஸ் ஒவ்வொரு வேலைநிறுத்தத்தையும் ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தையும் இரகசியமாக வைத்திருக்காதபடி நாம் தடுக்காவிட்டால் (அவ்வப்போது நாமே இரகசியமாக வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் தயாரிக்காவிட்டால்) மக்கள்பால் சோஷலிஸ்டுகளாகிய நமக்குள்ள நேரடிக் கடமையில் தவறியவர்களாவோம். மேலும், தன்னியல்பாக விழித்தெழுந்துவரும் மக்களும் தம் அணிகளின் மத்தியிலிருந்தே மேன்மேலும் அதிகரிக்கும் எண்ணிக்கையில் ''முழுநேரப் புரட்சியாளர்களை'' உண்டாக்கித்தருவார்கள் என்கிற காரணத்தால் நாம் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் வெற்றி பெறுவோம் (அதாவது, தொழிலாளிகளைக் கைகட்டி காத்திருக்கும்படி புத்திமதி அளிக்கும் எண்ணம் மட்டும் நமக்கு வராமலிருந்தால்)

## இ. தொழிலாளிகளின் அமைப்பும் புரட்சியாளர்களின் அமைப்பும்

அரசியல் போராட்டத்தைப்பற்றிய கருத்தோட்டமும் ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான போராட்டம்'' பற்றிய கருத்தோட்டமும் ஒன்றுகப் பொருந்துவதே எனக் கொண்டுள்ள ஒரு சமூக-ஜனநாயகவாதிக்கு ''புரட்சியாளர்களின் அமைப்பும்'' ''தொழிலாளர்களின் அமைப்பும்'' ஏறத்தாழ ஒன்றுகவே தோன்றும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. அசலில் நடப்பதும் இப்படித்தான். எனவே, நாம் அமைப்பைப் பற்றிப் பேசுகிறபோது உண்மையில்

வெவ்வேருன மொழிகளில் பேசுகிருேம். எடுத்துக்காட்டாக, ஓரளவுக்கு முரணற்ற ஒரு ''பொருளாதாரவாதியுடன்'' (அவரை அதற்குமுன் எனக்குத் தெரியாது[85]) நான் நடத்திய உரையாடல் பளிச்சென்று நினைவுக்கு வருகிறது. அரசியல் புரட்சி யார் நிகழ்த்துவார்கள்? எனும் குறுநூலைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம்; அமைப்பு பற்றிய பிரச்சினையைப் புறக்கணிப்பதே அதன் முதன்மையான குறைபாடு என்று வெகு விரைவிலே ஒரே முடிவுக்கு வந்தோம். இருவரிடையேயும் முழுக் கருத்தொற்றுமை இருப்பதாக நினைத்துக் கொள்ளத் தொடங்கிவிட்டோம். ஆனுல், பேச்சு மேலே மேலே நடக்கையில், இருவரும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிருேம் என்று தெரிந்தது. என்னுடன் பேசிக்கொண்டிருந்தவர் அந்நூலாசிரியர் வேலை நிறுத்த நிதிகள், பரஸ்பர நன்மைக்கான சங்கங்கள் முதலியவற்றைப் புறக்கணிக்கிருர் என்று குற்றஞ்சாட்டினுர், ஆனுல் நான் அரசியல் புரட்சி ''நிகழ்த்துவதற்கு'' ஒரு முக்கியமான காரணியாகப் புரட்சியாளர்களின் அமைப்பை மனத்தில் கொண்டு பேசினேன். கருத்துவேற்றுமை தெளிவானவுடன் கோட்பாடு பற்றிய ஒரு பிரச்சினையிலாவது நான் அந்தப் ''பொருளாதாரவாதியுடன்'' ஒத்துப்போகவில்லை என்பது நினைவுக்கு வருகிறது!

எங்கள் கருத்துவேற்றுமை எந்த மூலத்திலிருந்து தோன்றியது? ஒருங்கே அமைப்பு அரசியல் ஆகிய இரு பிரச்சினைகளிலும் ''பொருளாதாரவாதிகள்'' சமூக-ஜனநாயகவாதத்தை விட்டு தொழிற்சங்கவாதத்துக்கு எப்போதும் நழுவிக் கொண்டிருக்கிருர்கள் என்கிற விஷயத்திலிருந்து தான். முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக தொழிலாளிகள் நடத்தும் பொருளாதாரப் போராட்டத்தை விட சமூக-ஜனநாயகவாதத்தின் அரசியல் போராட்டம் எவ்வளவோ விரிவானது, பல்கலப்பானது. அதே போல் (உண்மையில் அதே காரணத்தாலேயே) இந்தப் போராட்டத்துக்காகப் புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் அமைப்பு தவிர்க்கமுடியாதரீதியிலே தொழிலாளர்களின் அமைப்பிலிருந்து வேறுபட்ட வகையைச் சேர்ந்ததாய் இருந்து தீரவேண்டும். தொழிலாளிகளின் அமைப்பு முதன்முதலாக ஒரு தொழிற்சங்க அமைப்பாக இருந்துதீர வேண்டும்;

இரண்டாவதாக, அது முடிந்தவரை பரந்ததாயிருக்கவேண்டும்; மூன்றாவதாக, நிலைமைகள் அனுமதிக்கிற அளவுக்கு (இங்கேயும் இதன் பிறகும் நான் யதேச்சாதிகாரமுறையுள்ள ருஷ்யாவை மட்டுமே குறிப்பிடுகிறேன்) முடிந்தவரை அது பகிரங்கமானதாக இருக்கவேண்டும். மறுபுறத்தில், புரட்சியாளர்களின் அமைப்பில் புரட்சி நடவடிக்கையைத் தம் தொழிலாக வைத்துக்கொண்டுள்ள நபர்களே முதன்மையாகவும் முக்கியமாகவும் அங்கம் வகிக்கவேண்டும் (இக்காரணத்தாலேயே நான் புரட்சியாளர்களின்—அதாவது, புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகளின்—அமைப்பைப் பற்றிப் பேசுகிறேன்). இப்படிப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களுக்குள்ள இந்தப் பொதுவான இனப்பண்பைப் பார்வையில் கொண்டு தொழிலாளர்கள் அறிவுஜீவிகள் என்கிற வகையில் அவர்களிடையேயுள்ள எல்லா வேறுபாடுகளையும்—அவ்விரு வகையினருக்குள்ளேயுள்ள தொழில் துறை வேலைத்துறை சம்பந்தப்பட்ட வேறுபாடுகளைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை—துடைத்தெறியவேண்டும். அவசியத்தின் காரணமாக இப்படிப்பட்ட அமைப்பு மிக விரிவானதாக இருக்கக் கூடாது, முடிந்தவரை இரகசியமாக இருக்கவேண்டும். இந்த மூவ்வகை வேறுபாட்டைப் பரிசீலிப்போம்.

அரசியல் சுதந்தரம் உள்ள நாடுகளில் தொழிற்சங்கத்துக்கும் அரசியல் அமைப்புக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெளிவாகவே உள்ளது, தொழிற்சங்கங்களுக்கும் சமூக-ஜனநாயகவாதத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெளிவாக இருப்பதுபோல. ஒவ்வொரு நாட்டின் வரலாற்று நிலைமைகள், சட்டத்துறை நிலைமைகள், இன்னேரன்ன பிற நிலைமைகளுக்கேற்ப முந்தியதோடு பிந்தியதற்குள்ள உறவுகள் இயல்பாகவே வேறுபட்டிருக்கும்; ஏறத்தாழ நெருக்கமாக, பல்வகைப்பட்டதாக, என்றவாறு இருக்கக்கூடும் (முடிந்தவரை அவை நெருக்கமாகவும் சிக்கலற்றதாகவும் இருக்கவேண்டும் என்பது நம் கருத்து); எனினும், சுதந்தரமுள்ள நாடுகளில் தொழிற்சங்கங்களின் அமைப்பு சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் அமைப்புடன் ஒன்றுகூடிவிடும் பிரச்னையே இருக்கமுடியாது. ஆனல், ருஷ்யாவில் எல்லா தொழிலாளர் சங்கங்களும் எல்லாப் பயிற்சிக் குழுக்களும் தடைசெய்யப்பட்டிருப்பதாலும் தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்

டத்தின் முதன்மையான வெளிப்பாடாகவும் ஆயுதமாகவும் விளங்கும் வேலைநிறுத்தம் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாக (சில சமயம் அரசியல் குற்றமாகக் கூட!) கருதப்படுவதாலும் யதேச்சாதிகாரமுறையின் நுகத்தடியானது சமூக-ஜனநாயகவாத அமைப்புக்கும் தொழிலாளர்களின் சங்கங்களுக்கும் இடையேயுள்ள எல்லா வேறுபாடுகளையும் ஒழித்துவிடுகிறதாக முதற்பார்வையில் தோன்றுகிறது. ஆகவே, நம் நாட்டு நிலைமைகள், ஒரு புறத்தில், பொருளாதாரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளை அரசியல் பிரச்சினைகளிலே அக்கறை செலுத்தும்படி பலமாகத் ''தூண்டிவிடுகின்றன'', மறுபுறத்தில் சமூக-ஜனநாயகவாதிகளைத் தொழிற்சங்கவாதத்துடன் சமூக-ஜனநாயகவாதத்தைக் கலக்கிக் குழப்பிவிடும்படியும் ''தூண்டிவிடுகின்றன'' (நமது கிரிச்சேவ்ஸ்கி, மார்தீனவ் கூட்டம் முதல் வகைப்பட்ட ''தூண்டுதலைப்'' பற்றி விடாமல் விவாதிக்கிற நேரத்தில் இரண்டாம் வகைப்பட்ட தூண்டுதலைப் பார்க்கத் தவறுகிறார்கள்). ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டத்தில்'' தொண்ணூற்றென்பது சதவீதம் மூழ்கிப் போயுள்ள பேர்வழிகளை நினைத்துப் பாருங்கள். அவர்களில் சிலர் தங்கள் (நான்கிலிருந்து ஆறு மாத) நடவடிக்கைக் காலமுழுவதிலும் புரட்சியாளர்களைக்கொண்ட மேலும் பல்வகைப்பட்ட அமைப்பின் அவசியத்தைப் பற்றிச் சிந்திக்கும்படி என்றைக்கும் தூண்டப்படமாட்டார்கள். வேறு சிலர் ஓரளவுக்குப் பரவலாக வினியோகிக்கப்பட்டுள்ள பெர்ன்ஷ்டைன்வாத இலக்கியத்தை ஒருவேளை பார்த்துவிட்டு ''சுவையற்ற அன்றாடப் போராட்டத்தின் முன்னேற்ற இயக்கம்'' ஆழ்ந்த முக்கியத்துவமுள்ளது என்கிற துணிபுக்கு வருவார்கள். மற்றும் வேறுசிலர் ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு''—தொழிற்சங்க இயக்கத்துக்கும் சமூக-ஜனநாயகவாத இயக்கத்துக்கும் இடையே தொடர்பு—பற்றிய ஒரு புதிய எடுத்துக்காட்டை உலகுக்குக் காட்டுவோம் எனும் கவர்ச்சிகரமான எண்ணத்தில் ஒருவேளை மனத்தைப் பறிகொடுத்துவிடுவார்கள். இப்படிப்பட்ட பேர்வழிகள் ஒருவேளை வாதிக்கக்கூடும்: எவ்வளவுக்கெவ்வளவு தாமதித்து ஒரு நாடு முதலாளித்துவ அரங்கிலும் அதன் விளைவாகத் தொழி

லாளிவர்க்க இயக்க அரங்கிலும் நுழைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அந்த நாட்டின் சோஷலிஸ்டுகள் தொழிற்சங்க இயக்கத்தில் பங்கெடுத்து அதை ஆதரிக்கலாம், அவ்வளவுக்கவ்வளவு சமூக-ஜனநாயகவாதத் தன்மையற்ற தொழிற்சங்கங்கள் இருப்பதற்குரிய காரணமும் குறைவாயிருக்கும், என்று. இந்த அளவுக்கு இவ்வாதம் முற்றிலும் சரி. ஆனுல், துரதிர்ஷ்டவசமாக, சிலர் அதற்கு மேலும் போய் சமூக-ஜனநாயகவாதமும் தொழிற்சங்கவாதமும் முற்றுக ஒன்றுகலந்துவிடுவது பற்றிக் கனவு காண்கிறுர்கள். இவ்வகைக் கனவுகளால் நம் அமைப்புத் திட்டங்களுக்கு ஏற்படும் தீங்கான பாதிப்புகளை ''செயின்ட் பீடர்ஸ்புர்க் போராட்டச் சங்கத்தின் விதிகளின்'' எடுத்துக்காட்டிலிருந்து விரைவிலே பார்க்கப் போகிறேம்.

பொருளாதாரப் போராட்டத்திற்கான தொழிலாளிகளின் அமைப்புகள் தொழிற் சங்கங்களாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு சமூக-ஜனநாயகவாதத் தொழிலாளியும் முடிந்தவரை இச்சங்கங்களுக்கு உதவிவரவேண்டும், அவற்றில் தீவிரமாக வேலை செய்யவேண்டும். இது உண்மையே என்றுலும், சமூக-ஜனநாயகவாதிகள் மட்டுமே இந்தத் ''தொழிற்'' சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கத் தகுதி பெற்றவர்களாயிருக்கவேண்டும் என்று கோருவது நிச்சயமாக நம் நலனுக்கு உகந்ததல்ல; காரணம், மக்கள்திரளின் மீது நாம் செல்வாக்குச் செலுத்தும் பரப்பெல்லையை அது குறுக்கிவிடும், அவ்வளவுதான். முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஒன்றுபடுவதின் தேவையைப் புரிந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு தொழிலாளியும் தொழிற் சங்கங்களில் சேரட்டும். குறைந்தபட்சம் இந்தத் துவக்கநிலை அறிவையாவது எட்டியிருக்கும் எல்லோரையும் தொழிற் சங்கங்கள் ஒன்றுபடுத்தாவிட்டால், அவை மிகவும் விரிவான அமைப்புகளாக இராவிட்டால், அவற்றின் குறிக்கோளையே சாதிப்பது சாத்தியமற்றுவிடும். இவ்வமைப்புகள் எவ்வளவுக்கெவ்வளவு விரிவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் மீது நாம் செலுத்தும் செல்வாக்கும் விரிவாக இருக்கும்—இந்தச் செல்வாக்கு பொருளாதாரப் போராட்டத்தின் ''தன்னியல்பான'' வளர்ச்சியிலிருந்து மட்டும் உண்டாவதல்ல, சோஷலிஸ்டு வழிப்பட்ட தொழிற்

சங்க உறுப்பினர்கள் தம் தோழர்கள் மீது செல்வாக்கு வகிக்க நேரடியான, உணர்வு பூர்வமான முயற்சி எடுப்பதிலிருந்தும் உண்டாகிறது. ஆனால், ஒரு விரிவான அமைப்பு கண்டிப்புள்ள இரகசிய வழிமுறைகளைச் செயல்படுத்தமுடியாது (காரணம், பொருளாதாரப் போராட்டத்துக்குத் தேவையாகிறதைவிட எவ்வளவோ அதிகமான பயிற்சி அவசியமாகும்). பெருந்தொகையான உறுப்பினர்கள் இருப்பதின் அவசியத்துக்கும் கண்டிப்புள்ள இரகசிய வழிமுறைகளின் அவசியத்துக்கும் உள்ள இந்த முரண்பாட்டை எப்படித் தீர்ப்பது? எப்படித் தொழிற்சங்கங்களைக் கூடுமானவரை பொதுவானவையாக, பகிரங்கமானவையாக இருக்கச் செய்வது? பொதுவாகச் சொன்னால், இதற்கு இரண்டு வழிகள் தாம் உண்டு: ஒன்று, தொழிற்சங்கங்கள் சட்ட சம்மதமாக்கப்படுகின்றன (சில நாடுகளில் சோஷலிஸ்டு, மற்றும் அரசியல் சங்கங்கள் சட்ட சம்மதமாக்கப்படுமுன் இது நிகழ்கிறது), அல்லது: அமைப்பு இரகசியமாக வைக்கப்படுகிறது, ஆனால் உறுப்பினர்களைப் பொறுத்தவரை இரகசிய வழிமுறைகளுக்கு அநேகமாகத் தேவையில்லாத வகையில் அது ''சுதந்தரமாக'', திடவுருவற்ற, lose* என்று ஜெர்மானியர்கள் கூறுவது போல் இருக்கும்.

சோஷலிஸ்டல்லாத, அரசியல்சார்பற்ற தொழிலாளர் சங்கங்கள் ருஷ்யாவில் சட்டசம்மதமாக்கப்படுவது தொடங்கி விட்டது. விரைவாக வளர்ந்துவரும் நம் சமூக-ஜனநாயக வாதத் தொழிலாளி வர்க்க இயக்கம் சாதிக்கும் ஒவ்வொரு முன்னேற்றமும் சட்டசம்மதமாக்க எடுக்கும் முயற்சிகளை—பெரும்பான்மையாக நடப்பிலுள்ள ஆட்சியமைப்பின் ஆதரவாளர்களும் ஓரளவுக்குத் தொழிலாளிகளும் மிதவாத அறிவுஜீவிகளும் செய்கிற முயற்சிகளை—பெருக்கிவிடும், உற்சாகப்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. ஏற்கெனவே வஸீலியெவ், ஸுபாத்தவ் வகையறுக்கள்[86] சட்டசம்மதக் கொடி ஏற்றிவிட்டிருக்கிறார்கள். ஓஸிரொவ் வோர்ம்ஸ் வகையறுக்களும் ஆதரவளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், அளித்தும் வருகிறார்கள்; புதிய போக்கின் ஆதரவாளர்கள்

---

* —lose (ஜெர்மன்)—தொளதொளாத் தன்மையுள்ளதாக.—(ப-ர்.)

தொழிலாளர்களிடையேயும் காணப்படுகிறார்கள். இனி மேல் இந்தப் போக்கை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது. அதை எப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்வது என்கிற விஷயத்தில் சமூக-ஜனநாயகவாதிகளிடையே இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கமுடியாது. ஸுபாத்தவ் வகையறுவும் வஸீலியெவ் வகையறுவும் போலீஸும் பாதிரிமார்களும் இவ்வியக்கத்தில் எந்தப் பங்கெடுத்துக் கொண்டாலும் அதை நாம் அம்பலப்படுத்த வேண்டும், அவர்களின் உண்மையான நோக்கங்களைத் தொழிலாளர்களுக்கு விளக்கவேண்டும். தொழிலாளர்களின் சட்டசம்மதமான பொதுக்கூட்டங்களில் மிதவாத அரசியல்வாதிகள் ஆற்றும் சொற்பொழிவுகளில் சமரசமாகப் போகலாம், "இசைவிணக்கமாகப்" போகலாம் என்று கேட்கவிருக்கும் சுரங்கள் அனைத்தையும் நாம் அம்பலப்படுத்த வேண்டும்—அந்தச் சொற்பொழிவுகள் அமைதி வழிப்பட்ட வர்க்க சமரசம் விரும்பத்தக்கது என்கிற மனமார்ந்த துணிபால் தூண்டப்பட்டதா, ஆட்சி புரிகிறவர்களைக் காக்காய் பிடிக்கும் விருப்பத்தால் தூண்டப்பட்டதா, அல்லது வெறுமே இங்கிதமின்மையால் விளைந்ததா என்பது பற்றிக் கவலையில்லை. கடைசியாக, போலீஸ் அடிக்கடி கண்ணி வைக்கிறதைப்பற்றி நாம் தொழிலாளிகளை எச்சரிக்கவேண்டும்; இப்படிப்பட்ட பகிரங்கமான பொதுக்கூட்டங்களிலும் அனுமதியளிக்கப்பட்ட சங்கங்களிலும் அவர்கள் உளவு பார்த்து "நெருப்புக்கக்கும் நபர்களைத்" தேடப்பார்க்கிறார்கள், சட்டவிரோதமான அமைப்புகளில் தங்கள் "ஆத்திரச்செயலுக்குத் தூண்டும் கையாட்களை" நுழைப்பதற்காகச் சட்டசம்மதமான அமைப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முயல்கிறார்கள்.

இவ்வாறெல்லாம் செய்தாலுங்கூட **நீண்ட காலப் போக்கில்** பார்க்கும்போது தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சட்டசம்மதமாக்குவதால் நமக்குத்தான் அனுகூலமே தவிர ஸுபாத்தவ் வகையறுவுக்கு அல்ல எனும் விஷயத்தை மறக்கிறதாகப் பொருள்படாது. மாறாக, நமது அம்பலப்படுத்தும் இயக்கந்தான் தானியத்திலிருந்து களைகளைப் பிரித்தெடுக்க உதவும். எது களை என்று ஏற்கெனவே காட்டியிருக்கிறோம். தானியம் எனும்போது, மிகவும் பிற்பட்ட பகுதிகளையும் உள்ளிட்ட தொழிலாளிகளில் மேன்மேலும் அதிகமான தொகை

யினரைச் சமுதாய, அரசியல் பிரச்சினைகள்பால் ஈர்த்து விடுவது என்றும், புரட்சியாளர்களாகிய நம்மை சாராம்சத்தில் சட்டசம்மத வகைப்பட்ட (சட்டசம்மதமான புத்தகங்கள், பரஸ்பர உதவி நிதிகள் வினியோகிப்பது முதலியவை) வேலைகளிலிருந்து—இவற்றின் வளர்ச்சியால் கிளர்ச்சிக்கு வேண்டிய விஷயாதாரம் மேன்மேலும் அதிகமாக நமக்குக் கிடைக்கும்—விடுவித்துக்கொள்வது என்றும் நாம் அர்த்தப் படுத்துகிறோம். இந்த அர்த்தத்தில் நாம் ஸுபாத்தவ், ஓஸிரொவ் வகையறுக்களிடம் இவ்வாறு சொல்லிக்கொள்ளக் கூடும், சொல்லவும் வேண்டும்: கனவான்களே, விடாது செய்யுங்கள், முடிந்தவரை செய்யுங்கள்! தொழிலாளிகளின் பாதையில் நீங்கள் கண்ணி வைக்கும்போதெல்லாம் (நேரடியாக ஆத்திரச்செயலுக்குத் தூண்டும் வகையிலாயினும் சரி, ''ஸ்துருவே வழியின்''[87] உதவியால் ''நேர்மையாகத்'' தொழிலாளிகள் மனமுறிவடையச் செய்யும் வகையிலாயினும் சரி) உங்களை அம்பலப்படுத்துவதில் கவனம் செலுத்துவோம். ஆனல் நீங்கள் உண்மையிலே முன்னேக்கி அடி எடுத்து வைக்கிறபோதெல்லாம், அது மிகவும் ''நெஞ்சுரமின்றிக் கோணல்மாணலாக'' இருந்தாலுங்கூட, ''தயவு செய்து தொடர்ந்து செல்லுங்கள்!'' என்று சொல்வோம். மேலும், தொழிலாளிகளின் செயற்களத்தை உண்மையாகவே, சிறிதளவிலாயினும், விரிவுபடுத்தக் கூடிய அடி ஒன்றே உண்மையாக முன்னேக்கி வைக்கும் அடியாக இருக்கமுடியும். இப்படிப்பட்ட ஒவ்வொரு விரிவாக்கமும் நமக்குத்தான் அனுகூலமாகும், அது சட்ட சம்மதமான சங்கங்கள் தோன்றுவதை விரைவுபடுத்தும், அவற்றில் ஆத்திரச்செயலுக்குத் தூண்டும் கையாட்கள் சோஷலிஸ்டுகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக சோஷலிஸ்டுகள் ஆதரவாளர்களைத் திரட்டிக்கொள்ளும் வகையில் அவை இருக்கும். சுருங்கச் சொன்னல், களைகளை எதிர்த்துப் போரிடுவது நம் பணி. பூந்தொட்டிகளில் தானியம் விளைப்பது நம் வேலையல்ல. களை எடுப்பதால் நாம் தானியம் பயிரிடுவதற்கு நிலத்தைப் பண்படுத்துகிறோம். அஃபனஸி இவானவிச் வகையறுவும் புல்கேரியா இவானவ்ஞ வகையறுவும்[88] தங்கள் பூந்தொட்டிப் பயிர்களைக் கவனித்துக்கொண்டிருக்கையில் நாம் அரிவாளைத் தயாரித்துவர வேண்டும்—இன்றையக் களைகளை வெட்டியெறிவதற்கு

மட்டுமல்ல, நாளையப் பயிரை அறுவடை செய்வதற்குங் கூட.*

எனவே, கூடுமானவரை இரகசியமாயில்லாமலும் விரிவானதாயும் இருக்கக்கூடிய தொழிற்சங்க அமைப்பைப் படைக்கும் பிரச்சினையை நாம் சட்டசம்மதமாக்கலின் வழியாகத் தீர்க்கமுடியாது (ஸுபாத்தவ், ஒஸிரொவ் வகையருக்கள் இப்படிப்பட்ட தீர்வுக்கு அரைகுறையான வாய்ப்பாயினும் காட்டுவார்களேயானல் நாம் பெரிதும் மகிழ்வோம்—எனினும், இந்நோக்கத்திற்காகத்தான் அவர்களை எதிர்த்து நாம் விடாமுயற்சியுடன் போராடித்தீரவேண்டும்). இனி இருப்பவை இரகசியமான தொழிற்சங்க அமைப்புகளே; இந்தப் பாதையை ஏற்றுப்பின்பற்றி வரும் (இதை நாம் திட்டமாக அறிவோம்) தொழிலாளிகளுக்கு நாம் சாத்தியமான உதவியனைத்தும் அளித்துத் தீரவேண்டும். பொருளாதாரப் போராட்டத்தை வளர்த்துக் கெட்டிப்படுத்துவதில் தொழிற்சங்க அமைப்புகளுக்கு மாபெரும் மதிப்பு இருக்க முடியும்; அது மட்டுமல்ல, அரசியல் கிளர்ச்சிக்கும் புரட்சிகர

---

* களைகளை எதிர்த்து இஸ்க்ரா நடத்தும் போராட்டம் ரபோச்சியே தேலோவிடமிருந்து பின்வரும் கோபமிக்க வெடிப்புரை வெளிப்படச்செய்தது: ''(வசந்தகாலத்தில் நிகழ்ந்த) மாபெரும் நிகழ்ச்சிகளைவிட, ஸுபாத்தவ் கையாட்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் 'சட்டசம்மதமாக்க' எடுக்கும் இரங்கத்தக்க முயற்சிகளிலேதான் காலத்தின் சூசகங்கள் இருக்கிறதாக இஸ்க்ராவுக்குப் படுகிறது. இவ்வுண்மைகள் தனக்கு எதிராகச் சான்றளிப்பதாயிருப்பதை அது காணத் தவறுகிறது; ஏனெனில் அரசாங்கத்தின் பார்வையில் தொழிலாளி வர்க்க இயக்கம் அச்சுறுத்தும் பரிமாணங்களைப் பெற்றிருக்கிறதென்று அவை சான்றளிக்கின்றன'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 27). இவையனைத்திற்கும் நாம் ''வாழ்க்கையின் அவசிய அவசரமான தேவைகளைக் காதில் வாங்கிக்கொள்ள மறுக்கும்'' வைதீகங்களின் ''வறட்டுத்தத்துவவாதத்தின்'' மீதுதான் பழி போடவேண்டுமாம். அவர்கள் மூன்றடி உயரத்துக்கு வளர்ந்திருக்கும் கதிரைப் பிடிவாதமாகப் பார்க்க மறுத்துவிட்டு அங்குல உயரத்துக்கு வளர்ந்துள்ள களைகளை எதிர்த்துப் போராடுகிருர்களாம்! இது ''ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பால் வக்கிரமான காட்சி பரிமாணநிலையை'' (மேற்குறிப்பிட்டது, பக்கம் 27) வெளிப்படுத்தவில்லையா?

மான அமைப்புக்கும் அவை ஒரு மிக முக்கிமுயமான துணைச் சக்தியாகவும் ஆகமுடியும். இந்த நோக்கத்தைச் சாதித்துக் கொள்வதற்கும், முளைப்பருவத்திலுள்ள தொழிற்சங்க இயக்கத்தை சமூக-ஜனநாயகவாதம் விரும்பும் பாதைகளில் வழிகாட்டிச் செலுத்துவதற்கும் நாம் முதலில் செயின்ட் பீடர்ஸ்புர்க் ''பொருளாதாரவாதிகள்'' சுமார் ஐந்தாண்டுகளாகப் பேணிவரும் அமைப்புத்திட்டத்தின் மடத்தனத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். 1897 ஜூலை மாதத்திய ''தொழிலாளர் பரஸ்பர நன்மை நிதிக்குரிய விதிமுறைகள்'' (ரபோச்சயா மிஸ்ல், இதழ் 1லிருந்து எடுக்கப்பட்டு லிஸ்டோக் ''ரபோத்னிகா'', இதழ் 9-10, பக்கம் 46ல் வெளிவந்தது), 1900 அக்டோபர் மாதத்திய ''தொழிற்சங்கத் தொழிலாளர் அமைப்புக்குரிய விதிமுறைகள்'' (செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் அச்சிடப்பட்ட தனி துண்டுப்பிரசுரம், இஸ்க்ரா முதல் இதழில் குறிப்பிடப்பட்டது) ஆகியவற்றில் இத்திட்டம் விளக்கப்பட்டுள்ளது. இவ்விரு விதிமுறைத்தொகைகளுக்கும் ஒரு முக்கியமான குறைபாடு உண்டு: அவை ஒரு நெளிவுசுளுவின்றி குறிப்பிடப்பட்ட கட்டுமானத்தின் அடிப்படையில் விரிவான தொழிலாளர் அமைப்பை நிறுவி அதைப் புரட்சியாளர்களின் அமைப்புடன் குழப்பிக்கொள்கின்றன. கடைசியாகச் சொன்ன விதிமுறைத்தொகை மேலும் விபரமாக வகுக்கப்பட்டிருப்பதால் அதை எடுத்துப் பார்ப்போம். அதன் மெய்ப்பகுதியில் ஐம்பத்திரண்டு பாராக்கள் உள்ளன. இருபத்துமூன்று பாராக்கள் ''தொழிலாளர் குழுக்களின்'' கட்டுமானம், வேலைசெய்யும் முறை, வரம்புகள் ஆகியவற்றை எடுத்துக் கவனிக்கின்றன; இந்தத் தொழிலாளர் குழுக்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் (''அதிகப்பட்சம் பத்து நபர்கள்'') திரட்டியமைக்கப்பட வேண்டுமாம், அவை ''மையக் (தொழிற்சாலைக்) குழுக்களை'' தேர்ந்தெடுக்குமாம். பாரா 2 சொல்கிறதாவது: ''மையக் குழு தொழிற்சாலையில் அல்லது பட்டறையில் நடக்கிறதனைத்தையும் கவனித்து வரும், நிகழ்ச்சிகளைப் பற்றிய பதிவேடும் வைத்திருக்கும்''. ''மையக் குழு சந்தாதார்களுக்கு மாதாந்தர நிதிக் கணக்கு முதலியவை கொடுக்கும்'' (பாரா 17). ''மாவட்ட அமைப்புக்கு'' என்று பத்து பாராக்கள் செலவிடப்பட்டுள்ளன. பத்தொன்பது பாராக்கள் ''தொழிலாளர் அமைப்பின்

கமிட்டிக்கும்'' ''செயின்ட் பீடர்ஸ்புர்க் போராட்டச் சங்கத்தின் கமிட்டிக்கும்'' (ஒவ்வொரு மாவட்டத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், ''நிர்வாகக் குழுக்களின்''—''பிரச்சாரகர் குழுக்கள், மாநிலங்களுடன் தொடர்புவைத்திருப்பதற்கான குழுக்கள், வெளிநாட்டு அமைப்புடன் தொடர்புவைத்திருப்பதற்கான குழுக்கள், பண்டசாலைகளையும் பிரசுரங்களையும் நிதிகளையும் நிர்வகிப்பதற்கான குழுக்கள்'') இடையேயுள்ள மிகவும் பல்வகைத்தன்மையுள்ள பரஸ்பரத் தொடர்புக்குச் செலவிடப்பட்டுள்ளன.

சமூக-ஜனநாயகவாதம் என்றால் தொழிலாளிகளின் பொருளாதாரப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட ''நிர்வாகக் குழுக்களுக்கு'' சமம்! எப்படிப் ''பொருளாதாரவாதிகளின்'' கருத்துக்கள் சமூக-ஜனநாயகவாதத்திலிருந்து விலகித் தொழிற்சங்கவாதத்துக்குச் செல்கிறதென்றும், விடுதலைக்காக நடக்கும் தொழிலாளிவர்க்கப் போராட்டம் முழுவதற்கும் வழிகாட்டும் திறமையுள்ள புரட்சியாளர்களின் அமைப்புத்தான் சமூக-ஜனநாயகவாதியின் முதல் அக்கறையாக இருக்க வேண்டும் எனும் கருத்து அவர்களுக்குப் புறம்பானதென்றும் இதை விட பச்சையாகக் காட்டுவது கடினமே. ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் விடுதலை'' பற்றியும் ''ஜாராட்சியின் யதேச்சாதிகார முறையை'' எதிர்க்கும் போராட்டம் பற்றியும் பேசுவது, அதே நேரத்தில் இப்படிப்பட்ட விதிமுறைகளை வகுப்பது என்றால் அதற்குப் பொருள் சமூக-ஜனநாயகவாதத்தின் அசல் அரசியல் பணிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பதேயாகும். முடிந்தவரை விரிவான அரசியல் கிளர்ச்சி மக்களிடையே நடத்துவது அவசியம், அந்தக் கிளர்ச்சி ருஷ்ய யதேச்சாதிகார முறையின் ஒவ்வொரு அம்சத்தையும் ருஷ்யாவிலுள்ள பல்வேறு சமுதாய வர்க்கங்களின் குறிப்பான உருக்கூறுகளையும் எடுப்பாக விளக்கிக் காட்டுவதாயிருக்க வேண்டும் என்கிற அறிவின் ஒரு ரேகையாயினும் ஐம்பதுக்கு மேற்பட்ட பாராக்களில் ஒன்றுயினும் வெளியிடக்காணேம். அரசியல் குறிக்கோள்களை விடுங்கள், தொழிற்சங்கக் குறிக்கோள்களை சாதிப்பதற்குங்கூட இப்படிப்பட்ட விதிமுறைகள் பயன்படா. ஏனெனில், தொழிற்சங்கங்கள் தொழில்கள் வகையிலே அமைக்கப் பெறுகின்றன, ஆனால் இவ்விதிமுறை

களில் அந்தத் தொழில்கள் பற்றி ஒன்றும் குறிப்பிடப் படவில்லே.

இதில் ஒருக்கால் மிகவும் இனக்குறிப்பான விஷயம், இந்த முழு ''அமைப்புமுறையின்'' மேல்பாரம் திகைப்பூட்டும் அளவுக்கு மிதமிஞ்சி இருப்பதுதான்; இந்த அமைப்புமுறை சமசீரான, கேலிக்கிடமான அற்ப விதிமுறைகளின் நிரந்தரத் தொடர், மூன்று கட்டத் தேர்தல்முறை மூலமாகவும் ஒவ்வொரு தனி தொழிற்சாலேயையும் அதன் ''கமிட்டியையும்'' பிணேக்க முயல்கிறது. ''பொருளாதாரவாதத்தின்'' குறுகிய பார்வையால் வளேத்துப்பிடிக்கப்பட்டுள்ளதனுல், சிவப்பு நாடாவின் அதிகாரவர்க்கப் போக்கின் நாற்றமடிக்கும் விபரங்களில் சிந்தனே அழிந்துபோகிறது. நடைமுறையில் இவற்றில் முக்கால்வாசி பிரிவுக்கூறுகள் செயல்படுத்தப்படுவதே கிடையாது என்பதென்னவோ உண்மை. மறுபுறத்தில், ஒவ்வொரு தொழிற்சாலேயிலும் தன் மையக் குழுவை வைத்துக்கொண்டிருக்கும் இவ்வகைப்பட்ட ''இரகசிய'' அமைப்பு இருப்பதிஞல் போலீஸ் பெருமளவில் படையெடுப்புகளே நடத்துவது சுலுவாகிறது. போலந்து நாட்டுத் தோழர்கள் தங்கள் இயக்கத்தில் இதே போன்ற ஒரு கட்டத்தைக் கடந்துவந்துள்ளனர், அப்போது எல்லோருமே விரிந்த அளவில் தொழிலாளர் நன்மைக்கான நிதிகளேத் திரட்டியமைப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்; எனினும் இந்த அமைப்புகள் போலீஸுக்குத்தான் வளமான அறுவடைகள் அளிக்கின்றன என்று கண்டதும் அவர்கள் வெகு விரைவில் இந்த எண்ணத்தைக் கைவிட்டனர். பரவலான கைதுகள் அல்ல, விரிவுள்ள தொழிலாளர் அமைப்புகளே நமது நினேப்பு என்ருல், நாம் போலீஸுக்குத் திருப்தியளிக்க விரும்பவில்லே என்ருல், இந்த அமைப்புகள் எந்த நெளிவுசுளிவற்ற சம்பிரதாயக் கட்டுமானமும் இல்லாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி ஏற்பட்டால் அவை வேலே செய்ய முடியுமா?—அந்த வேலேகள் என்னவென்று பார்ப்போம்: ''...தொழிற்சாலேயில் நடக்கிறதனேத்தையும் கவனித்துவரும், நிகழ்ச்சிகளேப் பற்றிய பதிவேடும் வைத்திருக்கும்'' (விதிமுறைகளின் 2வது பாரா). இந்த வேலே செய்வதற்குச் சம்பிரதாயமாக நிறுவப்பட்ட ஒரு குழு நமக்கு உண்மையில் அவசியமா? தனிக் குழுக்களே நிறுவாமலே சட்டவிரோதமான பத்திரிகைகளில் கடிதப்

போக்குவரத்து வைத்துக்கொள்வதின் வழியாக இந்த வேலையை மேலும் நல்லமுறையில் செய்யமுடியாதா? "...தொழிலாளர்களின் தொழிற்சாலை வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக அவர்களின் போராட்டத்துக்குத் தலைமை தாங்குவது" (பாரா 3). இதற்கும் ஒரு திட்டமான அமைப்பு வடிவம் அவசியமில்லை. அறிவுள்ள எந்தவொரு கிளர்ச்சியாளரும் சாதாரணப் பேச்சின் போக்கிலே தொழிலாளிகளின் கோரிக்கைகளைச் சேகரித்து அவற்றைப் புரட்சியாளர்களின் ஒரு குறுகிய—விரிவானது அல்ல—அமைப்புக்குத் தெரியப்படுத்தித் துண்டுப்பிரசுரத்திலே வெளியிடச்செய்ய முடியும். "...ஒரு நிதி திரட்டுவது... அதற்கு ரூபிளுக்கு இரண்டு கோபெக் வீதம் (அதாவது, சம்பாதிக்கும் கூலியில். —மொழிபெயர்ப்பாளர்.) சந்தா கட்டவேண்டும்" (பாரா 9), பிறகு (சந்தாதார்களுக்கு) மாதாந்தர நிதிக் கணக்குத் தருவது (பாரா 17), பங்குகளைச் செலுத்தத் தவறும் உறுப்பினர்களை நீக்குவது (பாரா 10), மற்றும் மற்றும். சந்தேகமேயில்லை, இது போலீஸுக்கு ஒரு சொர்க்கந்தான்; காரணம், "மையத் தொழிற்சாலை நிதியின்" இப்படிப்பட்ட இரகசியத்தை போலீஸ் ஊடுருவி, பணத்தைப் பறிமுதல் செய்து, சிறந்த நபர்களைக் கைது செய்வதை விட சுளுவான வேலை வேறொன்றில்லை. ஒரு பிரபலமான (மிகவும் குறுகிய, மிகவும் இரகசியமான) அமைப்பின் அதிகாரபூர்வமான முத்திரை தாங்கிய ஒரு கோபெக் அல்லது இரண்டு கோபெக் கூபன்களைக் கொடுப்பதோ, அல்லது எவ்வகையான கூபனும் இன்றி ஏதாவதொரு அங்கீகரிக்கப்பட்ட இரகசிய மொழியில் சட்டவிரோதமான பத்திரிகைகளில் நிதிக் கணக்கு ரிபோர்டுகளைப் பிரசுரிப்பதோ இதைவிட எளிதாக இராதா? நினைத்த காரியம் கைகூடியதாயிருக்கும், அதே நேரத்தில் போலீஸுக்குத் தடயங்கள் கிடைப்பதும் நூறு மடங்கு கஷ்டமாகும்.

விதிமுறைகளை மேலும் பகுத்தாய்ந்துகொண்டே இருக்கலாம், ஆனால் இதுவரை சொன்னதே போதும் என்று நினைக்கிறேன். மிகவும் நம்பகமான, அனுபவமுள்ள, பதமேறிய தொழிலாளிகளைக் கொண்டு சிறியதாகவும் நெருக்கமுள்ளதாகவும் இருக்கும் ஒரு மையக்குழு முக்கியமான மாவட்டங்களில் பொறுப்புள்ள பிரதிநிதிகளைக் கொண்டதாகவும்,

கண்டிப்புள்ள இரகசிய நிலைக்குரிய எல்லா விதிமுறைகளின் படி புரட்சியாளர்களின் அமைப்புடன் தொடர்பு கொண்டதாகவும், மக்களின் மிக விரிவான ஆதரவுள்ளதாயும், சம்பிரதாயமான அமைப்பு எதுவும் இல்லாமலும் உள்ள நிலையிலே ஒரு தொழிற்சங்கத்தின் எல்லா வேலைகளையும் செய்யமுடியும், அதிலும் சமூக-ஜனநாயகவாதத்துக்கு விரும்பத்தக்க முறையிலே செய்ய முடியும். இவ்வழி மூலமாக மட்டுமே நாம் எல்லாப் போலீஸையும் மீறி சமூக-ஜனநாயகவாத வழிப்பட்ட தொழிற்சங்க இயக்கத்தைக் கெட்டிப்படுத்துவதையும் வளர்ப்பதையும் சாதிக்க முடியும்.

திட்டமாகக்கூட அமையப்பெறாத அளவுக்குத் தொளதொளாவானதாயும், உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்ட, பதிவுசெய்யப்பட்ட நிலையிலில்லாததாயும் உள்ள ஓர் அமைப்பை அமைப்பு என்று சொல்ல முடியாது என்று ஆட்சேபணை எழக்கூடும். அவ்வாறே இருக்கலாம். பெயர் முக்கியமல்ல. எது முக்கியம் என்றால், இந்த ''உறுப்பினர்கள் இல்லாத அமைப்பு'' தேவையானதனைத்தையும் செய்யும், துவக்கத்திலிருந்தே நமது எதிர்காலத் தொழிற்சங்கங்களுக்கும் சோஷலிஸத்துக்கும் இடையே திடமான தொடர்பை உறுதிப்படுத்தும் என்பதே. தேர்தல்கள், ரிபோர்டுகள், எல்லோருக்கும் வாக்குரிமை முதலியவற்றைக் கொண்ட ஒரு விரிவான தொழிலாளர் அமைப்பை யதேச்சாதிகார முறையின் கீழ் விரும்புகிறவன் திருத்த முடியாத கற்பனாவாதி ஒருவனேயாவான்.

இதிலிருந்து எடுக்கவேண்டிய நீதிமொழி எளிமையானது. புரட்சியாளர்களின் வலுவான அமைப்புக்குத் திடமான அடிப்படை போடுவதிலிருந்து நாம் தொடங்கினால் இயக்கம் முழுவதின் திடநிலையை உறுதிப்படுத்தமுடியும், ஒருங்கே சமூக-ஜனநாயகவாதத்தின் குறிக்கோள்களையும்தொழிற்சங்க இயக்கத்தின் குறிக்கோள்களையும் நிறைவேற்றமுடியும். ஆனால், மக்களுக்கு மிகவும் ''எட்டக்கூடியதாக'' இருப்பதாகச் சொல்லப்படும் (உண்மையிலே சொன்னால், இது போலீஸுக்குத்தான் மிகவும் எட்டக்கூடியதாயிருக்கிறது, புரட்சியாளர்களைப் போலீஸுக்கு மிகவும் எட்டக்கூடியவர்களாகச் செய்கிறது) ஒரு விரிவான தொழிலாளர் அமைப்பிலிருந்து நாம் தொடங்கினால் இரண்டு வகைக் குறிக்கோள்களையும்

சாதிக்கமாட்டோம்; நமது பக்குவமில்லாத வழிமுறைகளையும் ஒழிக்கமாட்டோம், மேலும் நாம் சிதறிய நிலையில் இருந்துவருவதாலும் இடையருது போலீஸ் நம் சக்திகளை உடைத்துக்கலைத்துவருவதாலும் நாம் ஸுபாத்தாவ் ஓஸிரோவ் மாதிரியில் அமைந்த தொழிற்சங்கங்களைத்தான் மக்களுக்கு அதிகமாக எட்டக்கூடியதாகச் செய்துவிடுவோம்.

முறையாகச் சொன்னல், புரட்சியாளர்களின் அமைப்பின் வேலைகள் என்னவாக இருக்கவேண்டும்? இந்தப் பிரச்சினையை விபரமாகக் கவனிப்போம். எனினும், முதலில் நம் பயங்கரவாதி வைத்துள்ள இனக்குறிப்பான வாதத்தைப் பரிசீலிப்போம்—இவ்விஷயத்தில் கூட அவர் (பொல்லாத காலம்!) ''பொருளாவாதியின்'' அண்டைவீட்டுக்காரராக இருக்கிருர். தொழிலாளிகளுக்காக வெளியிடப்படும் **ஸ்வபோதா** சஞ்சிகையின் முதல் இதழில் ''அமைப்பு'' எனும் தலைப்பிட்ட கட்டுரை ஒன்று இருக்கிறது; அதன் ஆசிரியர் தம் நண்பர்களான இவானவோ-வொஸ்னிஸேன்ஸ்க் நகரத்துப் ''பொருளாதாரவாத'' வழிப்பட்ட தொழிலாளிகளைத் தாங்கிப் பேச முயல்கிருர். அவர் எழுதுவதாவது:

''மக்கள் ஊமைகளாகவும் அறிவுத்தெளிவற்றவர்களாகவும் இருக்கிற நிலைமை மோசமானது, சாமானிய மக்களிடமிருந்து இயக்கம் உதிக்காமலிருக்கும் நிலைமை மோசமானது. எடுத்துக்காட்டாக, பல்கலைக்கழகமுள்ள ஒரு நகரத்தின் மாணவர்கள் கோடைக்கால விடுமுறையிலோ மற்ற விடுமுறை நாட்களிலோ வீட்டுக்குப் புறப்பட்டுப் போனல் போதும், உடனே தொழிலாளர்களின் இயக்கம் ஸ்தம்பித்துவிடுகிறது. வெளியிலிருந்து தள்ளிச்செல்லப்படவேண்டிய நிலையிலுள்ள தொழிலாளர் இயக்கம் ஓர் உண்மையான சக்தியாக இருக்க முடியுமா? நிச்சயமாக இல்லை.... அது நடக்கக்கூட இன்னமும் கற்றுக்கொள்ளவில்லை, பிறருடைய கைப்பிடித்துச் செல்லவேண்டிய நிலையில் இன்னமும் இருக்கிறது. எல்லா விவகாரங்களிலுமே அப்படித் தான். மாணவர்கள் போய் விட்டால் போதும், எல்லாம் ஸ்தம்பித்துவிடுகின்றன. திறமை மிக்கவர்கள் கைதாகவேண்டியது, பாலேடு பிரித்தெடுக்கப்பட வேண்டியது—பால் புளித்துப்போகிறது. 'கமிட்டி' கைது செய்யப்பட்டால் வேருெரு புதிய கமிட்டி அமைக்கப்படும் வரை எல்லாம் ஸ்தம்பித்துவிடுகின்றன. அடுத்து வரும் கமிட்டி எப்படிப்பட்டதாயிருக்கும் என்று யாருக்கும் தெரியாது—முந்தியதுபோல் இல்லாமலே போகலாம். முதல் கமிட்டி சொன்னது ஒன்று, இரண்டாவது கமிட்டி அதற்கு

நேர் விரோதமாக வேறென்று சொல்லக்கூடும். நேற்றைக்கும் இன்றைக்கும் உள்ள தொடர்ச்சி அறுபட்டுப்போகிறது, சென்றகாலத்திய அனுபவம் எதிர்காலத்துக்கு வழிகாட்டியாகப் பயன்படுவதில்லை. இவ்வளவுக்கும் காரணம், ஆழமாக மக்களிடையே வேர் விடாமலே இருக்கிறதுதான்; வேலை செய்துகொண்டு போகிறவர்கள் நூறு முட்டாள்களல்ல, ஒரு டஜன் அறிஞர்கள். டஜன் அறிவாளிகளை ஒரு சொடுக்கில் அழித்துவிட முடியும், ஆனால் அமைப்பானது மக்களைத் தழுவி நிற்கிறபோது எல்லாமே மக்களிடமிருந்து புறப்படுகின்றன; யாராலும், எவ்வளவு முயன்றாலும், இலட்சியத்தை உடைக்கமுடியாது'' (பக்கம் 63).

உண்மைகள் சரியாகவே வர்ணிக்கப்பட்டுள்ளன. தேர்ச்சி நயமின்மை பற்றிய சித்திரமும் நன்றாகவே தீட்டப்பட்டுள்ளது. ஆனால், எடுத்துள்ள முடிவுகளோ ரபோச்சயா மிஸ்லுக்குத்தான் தகும்—அவற்றின் முட்டாள்தனத்தையும் அரசியல் நயமின்மையையும் பார்க்கும்போது. அவை முட்டாள்தனத்தின் உச்சநிலையைக் குறிக்கக் காரணம், இயக்கத்தின் ''ஆழம்'', ''வேர்கள்'' பற்றிய மெய்யறிவு வழிப்பட்ட, சமுதாய-வரலாற்று வழிப்பட்ட பிரச்சினையை போலீஸை எதிர்த்துப் போராடுவதற்குரிய மிகச் சிறந்த வழிமுறைகள் பற்றிய தொழில்நுணுக்க வகைப்பட்ட, அமைப்புத்துறையைச் சேர்ந்த பிரச்சினையோடு போட்டு ஆசிரியர் குழப்புகிறார். அவை அரசியல் நயமின்மையின் உச்சநிலையைக் குறிக்கக் காரணம், மோசமான தலைவர்களை விட்டு நல்ல தலைவர்களுக்கு வேண்டிக்கொள்வதற்குப் பதிலாக இந்த ஆசிரியர் பொதுவாக தலைவர்களையே விட்டு ''மக்களுக்கு'' வேண்டிக்கொள்கிறார். அரசியல் கிளர்ச்சிக்குப் பதிலாக உணர்ச்சியூட்டும் பயங்கரவாதத்தை வைக்கும் கருத்து எப்படி நம்மை அரசியல் ரீதியிலே பின்னுக்கு இழுக்கிறதோ அதே போல் இது அமைப்புத்துறையில் நம்மைப் பின்னுக்கு இழுக்கும் முயற்சியாகும். உண்மையிலே சொன்னால், என் மலைப்புக்கு அளவேயில்லை; ஸ்வபோதா செய்து வைத்துள்ள குளறுபடியைச் சிக்கறுக்க எங்கிருந்து தொடங்குவது என்று தெரியவில்லை எனலாம். தெளிவை உத்தேசித்து ஓர் எடுத்துக்காட்டுடன் தொடங்குகிறேன். ஜெர்மானியர்களைப் பாருங்கள். அவர்களின் அமைப்பு திரளான மக்களைக் கொண்ட அமைப்பு, ஜெர்மனியில் மக்களிடமிருந்துதான் எல்லாமே

தொடங்குகின்றன, அங்கே தொழிலாளிவர்க்க இயக்கம் நடக்கக் கற்றுக்கொண்டிருக்கிறது—இவற்றை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவ்வாறிருந்தும் அந்த மக்கள் திரள் தங்களுடைய புடம்போட்டெடுத்த ''டஜன்'' அரசியல் தலைவர்களை மதித்துப் போற்றிக் கொள்வதைக் கவனியுங்கள், அவர்களை உறுதியாகப் பின்பற்றிவருவதைக் கவனியுங்கள். ''நல்ல ஜனநாயகவாதிகளய்யா நீங்கள்! உங்கள் தொழிலாளர் இயக்கம் என்பது பெயரளவுக்குத்தான். உண்மையில் அதே தலைவர்களின் கும்பல்தான் எப்போதும் காணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதே பேபெல், அதே லீப்க்னெஹ்ட் தான். பல்லாண்டுகளாக இப்படியே நடந்து கொண்டிருக்கிறது. பேரரசர் நியமிக்கும் அலுவலர்களை விட தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் உங்கள் தொழிலாளர் பிரதிநிதிகள் நிரந்தரமாக இருக்கிறார்களே!'' என்று கூவி நாடாளுமன்றத்தில் பகைமைக் கட்சிகளின் உறுப்பினர்கள் அடிக்கடி சோஷலிஸ்டுகளைக் கேலி செய்திருக்கிறார்கள். என்றபோதிலும், ''தலைவர்களுக்கு'' எதிராக ''மக்களை'' நிறுத்தவும், அந்த மக்களிடையே மோசமான, புகழ் வேட்கை உணர்ச்சிகளைத் தூண்டிவிடவும், மக்கள் தங்கள் ''டஜன் அறிஞர்களின்'' மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் குலைப்பதின் வழியே இயக்கத்தின் கட்டுறுதியையும் திடநிலையையும் பறிக்கவும் நடக்கும் இந்த வாய்வீச்சு முயற்சிகளைக் கண்டு ஜெர்மானியர்கள் வெறுப்புடன் நகைக்கிறார்கள். ஜெர்மானியர்களிடையே அரசியல்ரீதியிலே சிந்திப்பது போதிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது, போதிய அரசியல் அனுபவத்தையும் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள், எனவே தொழில்முறையிலே பயிற்சி பெற்றும், நீண்ட அனுபவத்தால் போதனை பெற்றும், நிறைவான இசைவிணக்கத்துடன் வேலை செய்துவருகிறவர்களாயுள்ள புடம்போட்டெடுத்த ஆற்றலுள்ள ''டஜன்'' தலைவர்கள் (ஆற்றலுள்ள மனிதர்கள் நூற்றுக் கணக்கில் பிறப்பதில்லை) இல்லாமல் தற்கால சமுதாயத்தில் எந்த வர்க்கமும் உறுதியான போராட்டம் நடத்த முடியாது என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் மத்தியிலும் வாய்வீச்சு வீரர்கள் இருந்திருக்கிறார்கள், அவர்கள் ''நூறு முட்டாள்களை'' முகஸ்துதி செய்துள்ளனர், ''டஜன் அறிஞர்களைவிட'' மேலாக ஏற்றிப்போற்றியுள்ள

னர், மக்களின் ''காய்ப்பேறிய கரங்களை'' புகழ்ந்தேத்தியுள்ளனர், மற்றும் (மோஸ்த், ஹாஸல்மான் போல்) மக்களை யோசனையற்ற ''புரட்சிகரமான'' செயலுக்குத் தூண்டிவிட்டு உறுதியுள்ள, நிலை பிறழாத தலைவர்கள்பால் அவநம்பிக்கையை உண்டாக்கியுள்ளனர். சோஷலிஸ்டு இயக்கத்தினுள்ளே எல்லா வாய்வீச்சுப் புலிகளையும் எதிர்த்துப் பிடிவாதமாக, ஈவிரக்கமின்றிப் போராடியதன் மூலமாக மட்டுமே ஜெர்மன் சோஷலிஸம் இன்றுள்ள நிலைக்கு வளர்ந்து பலப்பட முடிந்திருக்கிறது. ஆனால், தன்னியல்பாக விழிப்புற்றுவரும் மக்களுக்கு வழிகாட்டி வருவதற்குப் போதிய பயிற்சியும் வளர்ச்சியும் அனுபவமும் உள்ள தலைவர்கள் இல்லாத ஒரே காரணத்துக்காக ருஷ்ய சமூக-ஜனநாயகவாதம் ஒரு நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நேரத்தில் நமது போலி அறிவாளிகள் முட்டாள்களின் மதி நிறைவுடன் ''சாதாரண மக்களிடமிருந்து இயக்கம் தொடங்காதிருப்பது மோசமான விஷயம்'' என்று கூக்குரலிடுகின்றனர்.

''மாணவர்களின் கமிட்டியால் பயனில்லை, அது திடமாயிருப்பதில்லை.'' முற்றிலும் உண்மை. ஆனால் இதிலிருந்து எடுக்கவேண்டிய முடிவு நமக்கு ஒரு முழுநேரப் புரட்சியாளர்களின் கமிட்டி வேண்டும் என்பதே. முழுநேரப் புரட்சியாளனாக ஆவதற்கு மாணவனுக்குத் திறமையுண்டா தொழிலாளிக்குத் திறமையுண்டா என்பது முக்கியமில்லை. ஆனால் நீங்கள் எடுக்கும் முடிவு, தொழிலாளி வர்க்க இயக்கத்தை வெளியிலிருந்து முன்தள்ளிச் செல்லக் கூடாது என்பது! உங்கள் அரசியல் அப்பாவித்தனத்தில், நீங்கள் நம் ''பொருளாதாரவாதிகளுக்குச்'' சாதகமாக நடந்து கொள்கிறதையும் நம் தேர்ச்சிநயமின்மையை வளர்த்துவருவதையும் பார்க்கத் தவறுகிறீர்கள். எந்த அர்த்தத்தில் நம் மாணவர்கள் தொழிலாளிகளை ''முன்தள்ளிச் செல்வது'' நடந்திருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். மாணவன் தன்னிடமுள்ள அரசியல் அறிவுத் துணுக்குகளை, தான் எப்படியோ சமாளித்துப் பெற்ற சோஷலிஸ்டுக் கருத்துத் துகள்களை (ஏனெனில் தற்கால மாணவனுக்கு முதன்மையான அறிவுத்தீனியாக உள்ள சட்டசம்மதமான மார்க்ஸியம் அறிவுத் துகள்களை, கொழுந்துகளை மட்டுமே கொடுக்க முடிந்திருக்கிறது) தொழிலாளியிடம் கொணர்ந்திருக்கிறான், என்கிற அர்த்தத்தில் அது

நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட ''வெளியிலிருந்து முன்தள்ளிச் செல்லுவது'' என்றைக்கும் மிதமிஞ்சிப் போனதில்லை; மாருக, அது நம் இயக்கத்தில் மிகவும் குறைவாகவே இருந்திருக்கிறது, ஏனெனில் நாம் குண்டுச்சட்டியில் குதிரையோட்டுவதில் முனைந்திருந்துவிட்டோம்; ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்'' எனும் துவக்கநிலைப் போராட்டத்தின் முன் அளவுக்கு மிஞ்சிய அடிமைப்புத்தியுடன் மண்டியிட்டுவந்தோம். முழுநேரப் புரட்சியாளர்களாகிய நாம் முன்பு செய்ததைவிட நூறு மடங்கு வலுவுடன் இவ்வகைப்பட்ட ''முன்தள்ளிச் செல்வதில்'' ஈடுபடுவதை நம் வேலையாக எடுத்துக் கொள்ளவேண்டும், எடுத்துக்கொள்ளவும் செய்வோம். ஆனல் ''வெளியிலிருந்து முன்தள்ளிச்செல்வது'' எனும் கோரமான சொற்ருெடரை—இச்சொற்ருெடர் தொழிலாளர்களில் (குறைந்தபட்சம் உங்களைப் போல் விளங்கிக்கொள்ளாநிலையில் இருக்கும் தொழிலாளர்களிலாவது) தங்களிடம் அரசியல் அறிவையும் புரட்சிகரமான அனுபவத்தையும் கொணர்கிற எல்லோரிடமும் ஓர் அவநம்பிக்கை யுணர்ச்சியைத் தூண்டாமல் இருக்கமுடியாது, இப்படிப்பட்ட எல்லா நபர்களையும் எதிர்க்கவேண்டும் எனும் ஓர் உள்ளியல்பான விருப்பத்தைத் தூண்டாமல் இருக்கமுடியாது—நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டதே நீங்கள் வாய்ச்சொல் வீரர்கள் என்று நிரூபிக்கிறது. வாய்ச்சொல் வீரர்கள் தொழிலாளி வர்க்கத்தின் மிகக் கொடிய பகைவர்களாவர்.

மேலும், தயவுசெய்து—எனது ''தோழமையற்ற விவாத முறைகள்'' பற்றி ஊளையிட விரையாதீர்கள்! உங்கள் நோக்கங்களின் தூய்மையைச் சிறிதேனும் சந்தேகிக்க நான் விரும்பவில்லை. வெறும் அரசியல் அப்பாவித்தனத்தாலும் ஒருவன் வாய்வீச்சு வீரனுகக் கூடும் என்று சொல்லியுள்ளேன். மேலும் நீங்கள் வாய்வீச்சில் இறங்கியிருப்பதையும் காட்டியுள்ளேன். வாய்வீச்சு வீரர்கள் தொழிலாளிவர்க்கத்தின் மிகக் கொடிய பகைவர்கள் என்று திரும்பத்திரும்பச் சொல்வதில் சலிக்கவேமாட்டேன்; ஏனெனில், அவர்கள் மக்களிலே இழிவான இயல்புணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றனர்; ஏனெனில், விஷயந்தெரியாத தொழிலாளியிடம் அவனுடைய நண்பர்களாகக் காட்டிக்கொள்கிற, சில சமயங்களில் நேர்

மையாகவே காட்டிக்கொள்கிற, மனிதர்கள் அவனுடைய பகைவர்களே என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் அவன் இருக்கிறான்; ஏனெனில், வேற்றுமையும் ஊசலாட்டமும் இருந்துவரும் காலத்தில், நம் இயக்கம் இப்பொழுதுதான் உருப்பெறத் துவங்கியிருக்கும் போது, மக்களைத் தடம்புரளச் செய்வதற்கு வாய்வீச்சு முறைகளைப் பயன்படுத்துவதைவிட சுளுவானது வேறொன்றுமில்லை. ஏனெனில் பின்னால் கசப்பான அனுபவத்தின் மூலமாகத்தான் மக்கள் தம் தவற்றை உணர்ந்துகொள்ள முடியும். ஆகவேதான் வாய்வீச்சு வீசும் தரத்துக்குத் தாழ்ந்துவிட்டுள்ள ஸ்வபோதா, ரபோச்சியே தேலோ இரண்டையும் எதிர்த்து உறுதியாகப் போராடவேண்டும் என்பதே ருஷ்ய சமூக-ஜனநாயகவாதியின் இந்நாளத்திய முழக்கமாக இருக்கவேண்டும். மேலே இதைப்பற்றி இன்னும் விபரமாகக் கவனிப்போம்.*

''நூறு முட்டாள்களை விட ஒரு அறிஞர்களைச் சுளுவாக ஒழித்துவிடமுடியும்.'' இந்த அதிசயமான உண்மை (இதற்காக அந்த நூறு முட்டாள்களும் உங்களை எப்போதும் பாராட்டுவார்கள்) வெளிப்படையானதாகத் தோன்றுவதற்குக் காரணம் வாதத்தின் மத்தியில் நீங்கள் ஒரு பிரச்சினையை விட்டு வேறொரு பிரச்சினைக்குத் தாவிவிட்டிருப்பதுதான். ''கமிட்டி'' போலீஸாரால் பிடுங்கியெறியப்படுவது பற்றி, ''அமைப்பு'' பிடுங்கியெறியப்படுவது பற்றி, நீங்கள் பேசத் தொடங்கினீர்கள், நீடித்துப் பேசிக்கொண்டேயிருந்து இப்போது இயக்கத்தின் ''வேர்கள்'' அவற்றின் ''அடியாழத்திலிருந்து'' பிடுங்கியெறியப்படும் பிரச்சினைக்குத் தாவுகிறீர்கள். உண்மை விஷயம் என்னவென்றால், நம் இயக்கத்தைப்

* தற்போதைக்கு ஒன்று மட்டும் சொல்லிவைப்போம்: ''வெளியிலிருந்து முன்தள்ளி விடுவது'' பற்றியும் அமைப்பு குறித்து ஸ்வபோதா செய்துள்ள மற்ற விரிவுரைகளைப் பற்றியும் நாம் அளித்திருக்கும் குறிப்புரைகள் முழுவதும் ''பொருளாதாரவாதிகள்'' அனைவருக்கும் பொருந்தும், இவர்களில் ரபோச்சியே தேலோ ''ஆதரவாளர்களும்'' அடங்குவர். ஏனெனில், அவர்களில் சிலர் அமைப்பு பற்றிய அப்படிப்பட்ட கருத்துக்களைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தும் தாங்கிப் பேசியும் வந்திருக்கிறார்கள்; அவர்களில் மற்றவர்கள் அவற்றின் பக்கம் அடித்துச் செல்லப்பட்டு வந்திருக்கிறார்கள்.

பிடுங்கியெறிய முடியாது, ஏனெனில் அது மக்களிடையே பல்லாயிரக்கணக்கன வேர்கள் கொண்டிருக்கிறது. ஆனுல், சர்ச்சையிலிருக்கும் விவகாரம் அது அல்ல. ''ஆழமான வேர்கள்'' பொறுத்தவரை, நம்மிடம் தேர்ச்சிநயமின்மை எவ்வளவோ இருந்தும், இன்றுகூட நம்மைப் ''பிடுங்கியெறிய'' முடியாது; என்றபோதிலும் **''அமைப்புகள்''** பிடுங்கியெறியப் படுவது பற்றியும் அதன் விளைவாக இயக்கத்தில் தொடர்ச்சியை வைத்திருக்க முடியாமலிருப்பது பற்றியும் நாமனைவரும் குறைப்பட்டுக்கொள்கிருேம், குறைப்பட்டுக் கொள்ளாமல் இருக்கவும் முடியாது. எனினும் நீங்கள் **அமைப்புகள்** பிடுங்கியெறியப்படுவது பற்றிய பிரச்சினையைக் கிளப்புகிறதினுலும், உங்கள் கருத்தைப் பிடிவாதமாக வற்புறுத்துவதாலும், நூறு முட்டாள்களைப் பிடித்துச்செல்வதைவிட டஜன் அறிஞர்களைப் பிடித்துச் செல்வது எவ்வளவோ கஷ்டம் என்று அறைந்து கூறுகிறேன். எனது ''ஜனநாயக விரோதமான'' கருத்துக்கள் முதலியவற்றிற்காக எனக்கு எதிராக நீங்கள் எவ்வளவுதான் மக்களைத் தூண்டிவிட்டாலும் சரியே, இந்நிலையை ஆதரித்துநிற்பேன். ஏற்கெனவே நான் திரும்பத்திரும்ப சொல்லியுள்ளபடி, அமைப்பு சம்பந்தமாக நான் ''அறிஞர்கள்'' என்பதற்கு முழுநேரப் **புரட்சியாளர்கள்** என்றே பொருள் கொள்கிறேன், அவர்கள் மாணவர்கள் மத்தியிலிருந்து உருவாகி வளர்ந்தவர்களா அல்லது தொழிலாளர்கள் மத்தியிலிருந்து உருவாகி வளர்ந்தவர்களா என்பது பற்றிக் கவலையில்லை. நான் அறைந்து கூறுகிறேன்: 1) தலைவர்களைக் கொண்டதாய் தொடர்ச்சியை நிலைநிறுத்திவரும் ஒரு திடமான அமைப்பு இல்லாமல் எந்தப் புரட்சி இயக்கமும் நிலைத்துநிற்க முடியாது, என்று; 2) போராட்டத்தில் தன்னியல்பாக இழுக்கப்பட்டுவரும் மக்கள்தாம் இயக்கத்துக்கு அடிப்படையாக இருந்து கலந்துகொள்கிறுர்கள், அப்படிப்பட்ட மக்கள்திரள் எவ்வளவுக்கெவ்வளவு விரிந்து பரந்து இருக்கிறதோ அவ்வளவுக்கு இப்படிப்பட்ட அமைப்பு அவசரத் தேவையாகும், அவ்வளவுக்கு இந்த அமைப்பு மேலும் கெட்டியானதாக இருந்துதீரவேண்டும் (காரணம், மக்களில் கூடுதலாகப் பிற்பட்டநிலையில் உள்ள பகுதிகளை பலரகமான வாய்வீச்சுக்காரர்கள் தடம்புரளச் செய்வது மேலும் சுளுவானது), என்று; 3) புரட்சி நடவடிக்கையில் முழுநேர

மாக ஈடுபட்டுள்ள நபர்கள்தாம் முதன்மையாக இப்படிப் பட்ட அமைப்பில் இருக்கவேண்டும், என்று; 4) ஒரு யதேச் சாதிகார அரசில், முழுநேரமாகப் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களாயும் அரசியல் போலீஸை எதிர்த்துப் போராடும் கலையில் தொழில்முறையில் பயிற்சி பெற்றவர்க ளாயும் உள்ளவர்களை மட்டும் கொண்டதாய் இப்படிப்பட்ட அமைப்புகளில் உறுப்பினர் தொகையை எவ்வளவுக் கெவ்வளவு கட்டுப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு இந்த அமைப் பைக் ''கெல்லியெறிவது'' கஷ்டமாகும், என்று; மற்றும் 5) அவ்வளவுக்கு இயக்கத்தில் சேர்ந்து அதில் தீவிரமாகப் பணிபுரியக் கூடிய தொழிலாளி வர்க்க நபர்களும் ஏனையச் சமுதாய வர்க்கங்களின் நபர்களும் அதிகமாக இருப்பார்கள், என்று.

இந்த முன்கூற்றுகள் தவறென்று நிரூபிக்குமாறு நம் ''பொருளாதாரவாதிகளையும்'', பயங்கரவாதிகளையும், ''பொருளாதாரவாதிகள்-பயங்கரவாதிகளையும்''* அழைக்

---

* முந்தையச் சொற்களைவிட இந்தச் சொல் ஸ்வபோதா வுக்கு ஒருவேளை பொருந்தக்கூடும். ஏனெனில், ''புரட்சி வாதத்தின் மறுபிறப்பு'' எனும் தலைப்பிட்ட கட்டுரையில் இந்த சஞ்சிகை பயங்கரவாதத்தைத் தாங்கிப்பேசுகிறது, அதே நேரத்தில் நாம் தற்போது விமர்சித்துக் கொண்டிருக் கும் கட்டுரையில் ''பொருளாதாரவாதத்தைத்'' தாங்கிப் பேசுகிறது. ''முடிந்தால் செய்யும், ஆனால் முடியவில்லை'' என்று ஸ்வபோதா விஷயத்தில் சொல்லிவைக்கலாம். அதன் விருப்பங்களும் நோக்கங்களும் மிகச் சிறந்தவைதான் — ஆனால் விளைவு என்னவோ குழப்பமயமாயுள்ளது; இதற்கு முக்கிய காரணம், அமைப்பின் தொடர்ச்சியை ஸ்வபோதா ஆதரித்துப் பேசுகிற அதே நேரத்தில் புரட்சிகரமான சிந் தனையின் தொடர்ச்சியையும் சமூக-ஜனநாயகவாதத் தத்து வத்தின் தொடர்ச்சியையும் அங்கீகரிக்க மறுக்கிறது. அது முழுநேரப் புரட்சியாளனை மீண்டும் கொண்டுவர விரும்பு கிறது (''புரட்சிவாதத்தின் மறுபிறப்பு''), அதன் பொருட்டு முதலாவதாக உணர்ச்சியைத் தூண்டிவிடும் பயங்கரவாதத் தையும் இரண்டாவதாக ''சராசரி ஊழியர்களின் அமைப் பையும்'' முன்வைக்கிறது, அந்த அமைப்பை ''வெளியிலி ருந்து தள்ளிச் செல்வது'' குறைவாயிருக்குமாம் (ஸ்வபோதா, இதழ் 1, பக்கம் 66, மற்றும்). அதாவது, வீட்டுக்குள் வெப் பம் உண்டாக்குவதற்காக அந்த வீட்டைத் தகர்த்து அதன் மரச் சட்டங்களை எரிக்கலாம் என்று சொல்கிறது.

கிறேன். தற்போதைக்கு நான் கடைசி இரண்டு அம்சங்களை மட்டும் எடுத்துக் கவனிக்கிறேன். ''டஜன் அறிஞர்களை'' ஒழிப்பது சுலபமா அல்லது ''நூறு முட்டாள்களை'' ஒழிப்பது சுலபமா எனும் பிரச்சினை, கண்டிப்புள்ள இரகசியநிலையை நிலைக்கச் செய்வது அவசியமாயிருக்கும்போது ஒரு வெகுஜன அமைப்பை வைத்திருப்பது சாத்தியமா என்று நாம் மேலே கவனித்த பிரச்சினையாகிவிடுகிறது. அரசாங்கத்தை எதிர்த்து விடாப்பிடியான, தொடர்ந்த போராட்டம் நடத்துவதற்கு இன்றியமையாத அளவில் இரகசியநிலையை நாம் ஒரு வெகுஜன அமைப்புக்குக் கொடுக்கவே முடியாது. எல்லா இரகசிய வேலைகளையும் முடிந்தவரை ஒரு சில முழு நேரப் புரட்சியாளர்களிடம் முற்றுக ஒப்படைப்பதற்கு அர்த்தம் அவர்கள் ''எல்லோருக்குமாகச் சேர்த்து சிந்திப்பார்கள்'' என்பதோ, சாதாரண ஊழியர்கள் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொள்ள மாட்டார்கள் என்பதோ அல்ல. மாருக, அவர்கள் தங்கள் அணிகளிடையேயிருந்து மேன் மேலும் அதிகமான எண்ணிக்கையில் முழு நேரப் புரட்சியாளர்களை மேலுக்குக் கொண்டு வருவார்கள்; காரணம், ஒரு சில மாணவர்களும் பொருளாதாரப் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கும் ஒரு சில தொழிலாளிகளும் ''கமிட்டி'' அமைப்பதற்காக ஒன்றுகூடினுல் போதாது என்பதும் முழு நேரப் புரட்சியாளனுகப் பயிற்சி பெறுவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்; மேலும், சாதாரண ஊழியர்கள் தேர்ச்சிநயமற்ற வேலை முறைகளைப் பற்றி மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட பயிற்சி பற்றியும் ''சிந்திப்பார்கள்.'' அமைப்பின் இரகசிய வேலைகளை மையப்படுத்துவது என்ருல் இயக்கத்தின் எல்லா வேலைகளையும் மையப்படுத்துவதாக அர்த்தமல்ல, அல்லவே அல்ல. சட்டவிரோதமான பத்திரிகை வெளியிடுவது சம்பந்தப்பட்ட எல்லா இரகசிய வேலைகளையும் ஒரு ''பத்து'' முழுநேரப் புரட்சியாளர்கள் மையப்படுத்துகிருர்கள் என்கிற காரணத்திற்காகச் சட்டவிரோதப் பத்திரிகைத் துறையில் மிக விரிவான மக்கள்திரள் தீவிரமாக ஈடுபடுவது குறைந்துவிடாது; மாருக, பத்து மடங்கு அதிகமாகும். இந்த ஒரே வழியிலே தான், சட்டவிரோதமான பத்திரிகை படிப்பதும், அதற்கு எழுதுவதும், ஓரளவுக்கு அதை விநியோகிப்பதும், அநேக

மாக இரகசியமற்ற வேலையாகி விடும்படி நாம் உறுதிப் படுத்திக்கொள்ளுவோம். ஏனெனில், பல்லாயிரக்கணக்கிலே வினியோகிக்கப்பட்டு வரும் சஞ்சிகையின் ஒவ்வொரு பிரதி விஷயத்திலும் சட்டரீதியான, நிர்வாகரீதியான, சிவப்புநாடா செயல்முறை கைக்கொள்வது முட்டாள்தனம், அசாத்திய மானதுங்கூட என்று வெகு விரைவிலே போலீஸ் புரிந்து கொள்ளத் தொடங்கும். இது பத்திரிகை விஷயத்தில் மட்டு மின்றி இயக்கத்தின் ஒவ்வொரு வேலைக்கும், ஆர்ப்பாட்டங் களுக்குங்கூட பொருந்தும். மக்கள் தீவிரமாகவும் பரவலாக வும் கலந்துகொள்வது பாதிக்கப்படாது; மாருக, போலீ ஸுக்குச் சமமாகத் தொழில்முறையில் பயிற்சி பெற்ற ஒரு ''பத்து'' அனுபவமுள்ள புரட்சியாளர்கள் வேலையின் எல்லா இரகசியமான அம்சங்களையும்—துண்டுப்பிரசுரங்கள் எழுதுவது, உத்தேசமான திட்டங்கள் வகுத்திடுவது, ஒவ் வொரு நகரப்புறத்து மாவட்டத்துக்கும் தொழிற்சாலைப் பிரதேசமான மாவட்டத்துக்கும் ஒவ்வொரு கல்வி நிறுவனத் துக்கும் பிறவற்றிற்கும் தலைவர்களைக் கொண்ட உறுப்புகளை நியமிப்பது—மையப்படுத்துவதால் அதற்கு நன்மையே கிடைக்கும். (எனது ''ஜனநாயகப் பாங்கற்ற'' கருத்துக் களுக்கு ஆட்சேபணை கிளம்பும் என்பதை நான் அறிவேன் இந்த அறிவற்ற ஆட்சேபணைக்குக் கீழே முற்றுகப் பதி லளிப்பேன்.) புரட்சியாளர்களின் அமைப்பில் மிக இரகசிய மான வேலைகளை மையப்படுத்துவது, வேறு மிகப் பல அமைப்பு களுடைய நடவடிக்கையின் விரிவையும் தரத்தையும் குறைப் பதற்குப் பதிலாக உயர்த்தவே செய்யும்; இந்த வேறு அமைப் புகள் விரிந்த மக்கட் பகுதிக்காக அமைக்கப்பட்டவை, எனவே அவை கூடுமானவரை தளர்ச்சியாயும் மறைவின்றி யும் இருப்பவை, எடுத்துக்காட்டாக: தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களின் சுயக்கல்வி வட்டங் கள், சட்டவிரோதமான இலக்கியம் படிப்பதற்கான வட்டங் கள், மக்களின் மற்ற எல்லாப் பகுதிகளிலுமுள்ள சோஷலிஸ்டு, மற்றும் ஜனநாயக வட்டங்கள் முதலியன. இவ்வகைப்பட்ட வட்டங்களும் தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் சாத்திய மானவரை பெருந் தொகையில் பல வித வேலைகள் உள்ளவை யாய் எல்லா இடங்களிலும் நமக்கு இருக்கவேண்டும். ஆனல் அவற்றைப் புரட்சியாளர்களின் அமைப்போடு குழப்பிக்

கொள்வது, இரண்டுக்கும் உள்ள எல்லைக்கோட்டை அழித்து விடுவது, வெகுஜன இயக்கத்துக்குப் ''பணியாற்றிட'' சமூக-ஜனநாயகவாத நடவடிக்கைகளுக்கு முற்றாக அர்ப்பணித்துக் கொள்கிற நபர்கள் நமக்கு இருக்கவேண்டும் என்கிற விஷயத்தையும் அப்படிப்பட்ட நபர்கள் முழுநேரப் புரட்சியாளர்கள் ஆவதற்குப் பொறுமையுடனும் உறுதியுடனும் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டும் என்கிற விஷயத்தையும் எவ்வளவோ மங்கலாக அங்கீகரித்திருப்பதை மேலும் குழப்பிவிடுவது முட்டாள்தனமானதாகும், தீங்கானதாகும்.

ஆம், இது மிகத் தெளிவின்றியே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. நமது பக்குவமின்மை காரணமாக ருஷ்யாவில் நாம் புரட்சியாளர்களின் கௌரவத்தைத் தாழ்த்தியிருக்கிறோம்; அமைப்பு விஷயத்தில் நாம் செய்திருக்கும் படுமோசமான கேடு இதுவே. தத்துவ சம்பந்தமான பிரச்சினைகளில் உரமின்மை, உறுதியின்மை; குறுகிய பார்வை; தன் சொந்தச் சோம்பலுக்கு மக்களின் தன்னியல்புத்தன்மையைச் சாக்காகச் சொல்வது; மக்களின் தலைவராயிருப்பதைவிட தொழிற்சங்கச் செயலாளராகத் தெரிவது; எதிரிகளுங்கூட மதிக்கத்தக்க விரிவான, தைரியமான திட்டம் உருவாக்கியளிக்கத் திறனின்மை; தானே தொழிலாக மேற்கொண்டுள்ள கலையில்—அரசியல் போலீசை எதிர்த்துப் போராடும் கலையில்—அனுபவமின்மை, நயமின்மை; இப்படியுள்ள நபர் புரட்சியாளனல்ல, படுமோசமான கற்றுக்குட்டியே!

இந்த ஒளிவுமறைவற்ற கருத்துரைகளால் தீவிர ஊழியர்கள் யாரும் மனத்தாங்கல் அடையவேண்டாம்; ஏனெனில், பயிற்சி போதாமை விஷயத்தில் என்னையே முதலில் குறை கூறிக்கொள்கிறேன். நான் ஒரு பயிற்சி வட்டத்தில்[89] பணியாற்றி வந்ததுண்டு; அது மிக விரிவான, முழுதளாவிய பணிகளை வைத்திருந்தது. அதன் உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லோரும் ''புரட்சியாளர்களைக் கொண்ட அமைப்பைத் தாருங்கள், ருஷ்யாவைக் குப்புறக் கவிழ்ப்போம்!'' (ஒரு பிரசித்தி பெற்ற கூற்றை மாற்றிச் சொல்கிறேன்) என்று சொல்லியிருக்கத்தக்க வரலாற்றுத் தருணத்தில் தேர்ச்சி நயமற்றவர்களாகச் செயலாற்றுகிறோமே என்கிற உணர்வு மேலிட்டு வேதனைப்பட்டோம். அப்போது நான் அனுபவித்த

சுட்டெரிக்கும் வெட்கத்தை நினைத்துப் பார்க்கப் பார்க்க போலி சமூக-ஜனநாயகவாதிகள் மீது எனக்குள்ள கசப் புணர்ச்சி அதிகமாகிறது. இந்தப் போலி சமூக-ஜனநாயக வாதிகளின் போதனைகள் ''புரட்சியாளனின் தொழிலுக்கு அவமானம் உண்டாக்குகின்றன''; புரட்சியாளனைக் கற்றுக் குட்டியின் தரத்துக்குத் தாழ்த்துவதை ஆதரித்துப் பேசு வதல்ல, கற்றுக்குட்டிகளைப் புரட்சியாளர்களின் தரத்துக்கு உயர்த்துவதே நம் பணி என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள்.

### ஈ. அமைப்பு வேலையின் செயல் பரப்பு

''செயலாற்றத் தகுதியுள்ள புரட்சிச் சக்திகள் போதா திருப்பதை செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் மட்டுமின்றி ருஷ்யா வெங்கும் உணர்ந்திருக்கிறார்கள்'' என்பது பற்றி B-v சொல்லக் கேட்டிருக்கிறோம். இவ்விஷயத்தை அநேகமாக யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், இதை எப்படி விளக் குவது என்பதே கேள்வி. B-v எழுதுகிறார்:

''இந்நிகழ்ச்சித் தோற்றத்திற்குரிய வரலாற்றுக் கார ணங்களை நாம் விளக்கப் புகவில்லை. நீடித்த அரசியல் பிற் போக்காலும், சென்றகால, நிகழ்காலப் பொருளாதார மாற் றங்களால் ஏற்பட்ட பிளவாலும் மனமுடைந்துபோன ஒரு சமுதாயம் புரட்சி வேலைக்குத் தகுதியுள்ள மிகச் சில நபர்களையே தன் மத்தியிலிருந்து மேலுக்குக் கொண்டு வரு கிறது; புரட்சிகரமான ஊழியர்களைத் தொழிலாளி வர்க்கம் உண்டாக்கித் தரத்தான் செய்கிறது, அவர்கள் சட்ட விரோ தமான அமைப்புகளின் அணிகளை ஓரளவுக்குப் பெருக்கு கிறார்கள், ஆனால் இப்படிப்பட்ட புரட்சியாளர்களின் தொகை காலத்தின் தேவைகளுக்குப் போதாமலிருக்கிறது, என்று மட்டும் சொல்லிவைக்கிறோம். மேலும் அப்படி இருக்கக் காரணம்: தொழிலாளி நாள்தோறும் தொழிற்சாலையில் பதி னொன்றரை மணி நேரம் செலவழிக்கிறான், எனவே முக்கிய மாய் அவன் ஒரு கிளர்ச்சியாளனாக மட்டுமே பணியாற்ற முடியும். ஆனால், பிரச்சாரம், அமைப்புத்துறை, சட்ட விரோதமான இலக்கியத்தைச் சேர்ப்பிப்பது, பிரதியெடுப் பது, துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது முதலிய கடமை கள் அவசியமாகவே வெகு சில அறிவுஜீவிகள் மீதுதான் முக் கியமாக விழவேண்டியுள்ளது'' (ரபோச்சியே தேலோ, இதழ் 6, பக்கங்கள் 38-39).

பல அம்சங்களில் நாம் B-V யுடன் உடன்படவில்லை; குறிப்பாக நாம் வலியுறுத்தியுள்ளவையுடன் உடன்படவில்லை; இவை தெளிவாகக் காட்டுவதாவது: நமது தேர்ச்சிநயமின்மை குறித்து (சிந்திக்கும் ஒவ்வொருவரையும் போலவே) B-V அலுத்துக் கொண்டாலும் இந்த சகிக்கவொண்ணுத நிலைமையிலிருந்து மீளும் வழியை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை; காரணம், ''பொருளாதாரவாதம்'' அவரை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது. உண்மை என்னவென்ருல், ''இலட்சியத்துக்கு''த் தகுதியுள்ள மிகப் பல நபர்களைச் சமுதாயம் உண்டாக்கித் தருகிறது, நாம்தான் அவர்கள் அனைவரையும் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் இருக்கிருேம். இவ்விஷயத்தில் நம் இயக்கத்தின் நெருக்கடியான, பரிணமிப்புநிலைக்குரிய கட்டத்தைப் பின்வருமாறு வரையறுக்கலாம்: அதாவது, ஊழியர்களே இல்லை—எனினும் ஊழியர்கள் திரள் திரளாக இருக்கவே செய்கிருர்கள். ஊழியர்கள் திரள் திரளாக இருக்கக் காரணம், ஆண்டுதோறும் தொழிலாளி வர்க்கமும் மேன்மேலும் வேறுபட்ட சமுதாயப் பிரிவுகளும் தம்மிடையேயிருந்து அதிகரித்துவரும் எண்ணிக்கையில் அதிருப்தியடைந்த நபர்களை உண்டாக்கியவாறு இருக்கிறது; இவர்கள் கண்டனம் தெரிவிக்க விரும்புகிருர்கள், எதேச்சாதிகார ஆட்சி முறையை எதிர்த்து நடக்கிற போராட்டத்தில் தம்மாலான உதவியனைத்தும் அளித்திடத் தயாராயிருக்கிருர்கள். இந்த எதேச்சாதிகார ஆட்சி முறையைச் சகிக்கமுடியாது என்பதை எல்லோரும் அங்கீகரிக்கவில்லையாயினும் மேன்மேலும் அதிகமான மக்கள் திரள் தீவிரமாக உள்ளூற உணர்ந்துவருகிருர்கள். அதே நேரத்தில் நம்மிடம் ஊழியர்கள் இல்லாதிருக்கக் காரணம், மிகமிக அற்பமான சக்திகளையும் உள்ளிட்ட எல்லாச் சக்திகளையும் பயன்படுத்தும் வகையில் விரிவாயும் அதே நேரத்தில் சமசீராகவும் இசைவாகவும் வேலையை ஒழுங்குபடுத்திச் சித்தம் செய்யத் திறமையுள்ள தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஆற்றல்மிக்க அமைப்பாளர்கள் நம்மிடம் இல்லை. ''புரட்சிகரமான அமைப்புகளின் வளர்ச்சியும் பெருக்கமும்'' தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பின்னடைந்திருப்பது மட்டுமல்ல (இதை B-V கூட ஒப்புக்கொள்கிருர்), எல்லா மக்கட் பிரிவுகளிடையேயுமுள்ள பொதுவான ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சிக்கும் பின்னடைந்திருக்கிறது.

(தமது முடிவுக்கு இணைப்பாக உள்ளதாக B-V இன்று இதைப் பெரும்பாலும் கருதக்கூடும் என்று போகிறபோக்கில் சொல்லி வைப்போம்.) இயக்கத்தின் தன்னியல்பான அடிப்படையின் விரிவுடன் ஒப்பிடுகையில் புரட்சி வேலையின் செயல் பரப்பு மிகக் குறுகியதாக உள்ளது. ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்'' எனும் படுமோசமான தத்துவம் இதை வேலிபோட்டு மிகவும் குறுக்கிவிட்டுள்ளது. ஆனால், தற்சமயம் அரசியல் கிளர்ச்சியாளர்கள் மட்டுமல்லாமல் சமூக-ஜனநாயகவாத அமைப்பாளர்களும் ''மக்களைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடையேயும் சென்று'' தீரவேண்டும்.* சமூக-ஜனநாயகவாதிகள் தம் அமைப்புத்துறை வேலையைச் சேர்ந்த ஆயிரத்தொன்று சிறுசிறு செயற்கூறுகளை மிகவும் வேறுபட்ட வர்க்கங்களின் தனித்தனி பிரதிநிதிகளிடையே வினியோகிக்க முடிகிறதைப்பற்றி ஒரு நடைமுறை ஊழியனுக்கும் ஐயமிராது. நம் தொழில்நுணுக்கத்தின் மிக மோசமான குறைபாடுகளில் தனித்தேர்ச்சியின்மையும் ஒன்றாகும்; இதைப்பற்றி B-V நியாயமாகவே கசப்புடன் குறைப்பட்டுக்கொள்கிறார். நம் பொது இலட்சியப் பணியில் ஒவ்வொரு தனித்தனி ''செயற்கூறும்'' எவ்வளவுக்கெவ்வளவு சிறியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அப்படிப்பட்ட செயற்கூறுகளைச் செய்துமுடிக்கத் திறமையுள்ள நபர்கள் அதிகமாகக் கிடைப்பார்கள் (இவர்களில் பெரும்பாலோர் முழுநேரப் புரட்சியாளர்களாகும் திறமை சிறிதேனும் இராதவர்களே); அவ்வளவுக்கவ்வளவு பொலீஸுக்கும் இந்த ''நுணுக்கப் பிரிவு ஊழியர்கள்'' அனைவரையும் ''பிடிப்பது'' அதிகக் கஷ்ட

---

* இப்படித்தான், சந்தேகமின்றி அண்மையில் இராணுவ சேவை புரிகிற நபர்களிடையே ஜனநாயக உணர்ச்சி மீண்டும் தோன்றியுள்ளதைக் காண்கிறோம்; தொழிலாளிகள், மாணவர்கள் போன்ற ''பகைவர்களுடன்'' முன்னைவிட அடிக்கடி நடக்கிற தெருப்போராட்டங்களினால் ஓரளவுக்கு ஏற்பட்ட விளைவு இது. நம்மிடமுள்ள சக்திகள் இடங்கொடுக்கும் அளவுக்கு விரைவிலே நாம் படைவீரர்களிடையேயும் அதிகாரிகளிடையேயும் கிளர்ச்சியும் பிரச்சாரமும் செய்வதிலும் நம் கட்சியுடன் இணைப்புள்ள ''இராணுவ அமைப்புகளைப்'' படைப்பதிலும் தவறாமல் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தவேண்டும்.

மாயிருக்கும்; ''பாதுகாப்பிற்காக'' அரசாங்கம் செலவழிப் பதை நியாயப்படுத்தும் அளவிற்கு ஒரு சில்லறை விவகாரத் திற்காகக் கைது செய்து ''வழக்கு'' ஜோடிப்பதும் அதிகக் கடினமாகி விடும். நமக்கு உதவி செய்யத் தயாராக இருக் கும் நபர்களின் எண்ணிக்கையைப் பொருத்தவரை, சென்ற ஐந்தாண்டு வாக்கில் நிகழ்ந்துள்ள மாபெரும் மாற்றத்தை முந்தைய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். மறு புறத்தில், இந்தச் சின்னஞ்சிறு கூறுகளை ஒரு முழுமையாக ஒன்றுபடுத்துவதற்கும், இயக்கத்தின் செயற்கூறுகளைப் பிரிக் கும் அதே நேரத்தில் இயக்கத்தையே உடைத்தெறியாமல் இருப்பதற்கும், இந்தச் சின்னஞ்சிறு செயற்கூறுகளை நிறை வேற்றி வரும் நபர்கள் தாங்கள் செய்யும் வேலை அவசியமான தென்றும் முக்கியமானதென்றும் உறுதியான நம்பிக்கை ஊட் டுவதற்கும் (இந்த நம்பிக்கை இல்லையேல் அவர்கள் என்றைக் கும் வேலை செய்யமாட்டார்கள்)* புடம் போட்ட புரட்சியா

---

* ஒரு தொழிற்சாலை கண்காணிப்பாளரைப் பற்றி ஒரு தோழர் ஒரு சமயம் சொன்னது என் நினைவுக்கு வருகிறது. அந்தக் கண்காணிப்பாளர் சமூக-ஜனநாயகவாதிகளுக்குஉதவ விரும்பினார், உதவவும் செய்தார். ஆனால் தான் கொடுக் கும் ''தகவல்'' பொருத்தமான புரட்சி மைய அமைப்பிடம் போய்ச் சேர்ந்ததா, எந்த அளவுக்கு உண்மையிலே தன் உதவி தேவைப்படுகிறது, தன் அற்பசொற்பமான சேவை களைப் பயன்படுத்திக்கொள்வதற்குச் சாத்தியப்பாடுகள் என்ன என்பது பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்று கசப்புடன் குறை தெரிவித்தார். இதுபோன்ற பல உதாரணங்களை ஒவ்வொரு நடைமுறை ஊழியரும் கொடுக்க முடியும் என்பது உண்மை; நமது பக்குவமின்மையால் நாம் துணைச் சக்திகளை இழந்ததை இவை காட்டுகின்றன. இந்தச் சேவை ஒவ்வொன்றும் தன்னளவில் ''சிறியது'' ஆயினும் மொத்தத்தில் பார்க்கையில் விலைமதிக்கொணாதது. தொழிற் சாலைகளிலுள்ள அலுவலகப் பணியாளர்களும் அலுவலர் களும் மட்டுமல்லாமல், அஞ்சல், இரயில்வே, தீர்வைத் துறைகளிலும் பிரபுவம்சத்தினர் பாதிரிமார் இடையேயும், பொலீஸ், அரசவைத் துறைகளையும் உள்ளிட்ட எல்லா வாழ்க் கைத் துறைகளிலும் அலுவலகப் பணியாளர்களும் அலு வலர்களும் நமக்கு இந்தச் சிறிய சேவைகளை அளிக்க முடி யும், அளிப்பார்கள்! நம்மிடம் உண்மையான கட்சி இருந்தால், புரட்சியாளர்களைக் கொண்ட உண்மையான செயல்துடிப் புள்ள அமைப்பு இருந்தால், இந்தத் ''துணையாட்கள்'' ஒவ்

ளர்களைக் கொண்ட வலுவான அமைப்பு இருத்தல் அவசியம். இவ்வகை அமைப்பு எவ்வளவுக் கெவ்வளவு இரகசியமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மேலாகக் கட்சியின் மீதுள்ள நம்பிக்கை பலமாகவும், பரவலாகவும் இருக்கும். போர்க்காலத்தில், நம் சொந்த இராணுவம் தன் பலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்வது மட்டுமின்றி அந்த பலத்தைப் பற்றி எதிரிக்கும் எல்லா நடுநிலைச் சக்திகளுக்கும் உறுதியாக உணர்த்துவதும் மிகமிக முக்கியம். நேசமுள்ள நடுநிலை சிலசமயம் விவகாரத்தையே தீர்மானிக்கக் கூடியதாய் இருக்கும்; இதை நாம் அறிவோம். உறுதியான தத்துவார்த்த அடிப்படையில் கட்டப்பட்டும் சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகை ஒன்று வைத்துக் கொண்டும் இருக்கிற இவ்வகை அமைப்பு இருக்குமேயானல், இயக்கத்தின்பால் ஈர்க்கப்படும் எண்ணற்ற ''அந்நிய நபர்கள்'' இயக்கத்தைத் தடம் புரளச் செய்வார்கள் எனும் பயம் நமக்கு ஏற்படக் காரணமிராது. [மாருக, தேர்ச்சி நயமின்மை நிலவும் இந்தக் காலத்திலேதான் பல சமூக-ஜனநாயக வாதிகள் “Credo” பால் சாய்வதையும் வெறுமே தங்களைச் சமூக-ஜனநாயகவாதிகள் என்றுகற்பனை செய்து கொள்வதையும் காண்கிருேம்.] சுருங்கச் சொன்னல் தனித்தேர்ச்சி மையப்படுத்தலின் அவசியத்தை முன்னுணர்கிறது, அதே நேரத்தில் அதை நிச்சயமாகக் கோருகிறது.

தனித்தேர்ச்சியின் அவசியத்தை எவ்வளவோ நேர்த்தி

---

வொருவரிடமும் தகுதிக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்யக் கொடுக்கமாட்டோம், நம் ''சட்டவிரோத நிலையின்'' மையத்திற்கு எப்போதும் அவர்களைக் கொண்டுவரத் துடிக்கமாட்டோம்; மாருக, அவர்களைப் பத்திரமாகச் சேமித்து வைப்போம், குறிப்பாக இப்படிப்பட்ட வேலைகளுக்கென்று நபர்களைப் பயிற்றுவிக்கவும் செய்வோம், ''குறுகிய கால'' புரட்சியாளர்களாக இருப்பதைவிட எதாவது அதிகாரபூர்வமான பதவியை வகித்துவரும் நிலையில் பல மாணவர்கள் உதவியாளர்களாக எவ்வளவோ அதிகமாகச் சேவை செய்யக் கூடியவர்களாக இருக்க முடியும். எனினும், உறுதியாக நிலைநாட்டப் பட்டுத் தீவிரமாகப் பணியாற்றும் சக்திகளைக் கொண்டு இருக்கிற அமைப்புக்கு மட்டுமே இப்படிப்பட்ட போர்த்தந்திரங்களைச் செயல்படுத்தும் உரிமையிருக்கும்.

யுடன் வர்ணித்த அதே B-V தான் நாம் மேற்கோள்காட்டிய வாதத்தின் இரண்டாம் பகுதியில் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகிறுர் என்று கருதுகிறேம். தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்களின் எண்ணிக்கை போதாதென்கிறுர். இது முற்றிலும் உண்மை. இன்று சமூக-ஜனநாயகவாதத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குரிய காரணங்கள் பற்றியும், எனவே அந்நெருக்கடியை அகற்றுவதற்கு வேண்டிய சாதனங்களைப் பற்றியும் நாம் கொண்டுள்ள கருத்தை ''ஒரு நெருங்கிய நோக்கரின் மதிப்பு மிக்க தகவல்'' முற்றுக 'உறுதிப்படுத்துகிறதை மீண்டும் வலியுறுத்துகிறேம். பொதுவாகவே புரட்சியாளர்கள் தன்னியல்பாய் விழிப்புற்று வரும் மக்கள் திரளுக்குப் பின்னடைந்து வருகிறுர்கள் என்பது மட்டுமல்ல, தொழிலாளர்-புரட்சியாளர்களுங்கூட தன்னியல்பாய் விழிப்புற்று வரும் தொழிலாளி வர்க்க மக்கள் திரளுக்குப் பின்னடைந்து வருகிறுர்கள். தொழிலாளர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றிய விவாதத்தில் மிக அடிக்கடி நம்மிடம் கூறப்படும் ''பள்ளியாசிரியத்தனங்களின்'' முட்டாள்தனத்தை மட்டுமன்றி அவற்றின் **அரசியல் பிற்போக்குத் தன்மையையும்** ''நடைமுறைப்''பார்வையிலே இந்த உண்மை தெளிவான சான்றுடன் உறுதிப்படுத்துகிறது. இந்த உண்மை நிரூபிக்கிறதாவது: நமது முதன்மையான முக்கியமான கடமை தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்களைப் பயிற்றுவிக்க உதவுவதே, **இவர்கள் கட்சி நடவடிக்கை விஷயத்தில்** அறிவு ஜீவிகளிடையே இருந்து வரும் புரட்சியாளர்களுக்குச் சமமாக இருப்பார்கள் [''கட்சி நடவடிக்கை விஷயத்தில்'' எனும் சொற்களை வலியுறுத்துகிறேம். ஏனெனில் மற்ற விஷயங்களில் அறிவு ஜீவிகளின் தரத்திற்குத் தொழிலாளிகளை உயர்த்துவது அவசியமாயினுங்கூட அது அவ்வளவு சுலபமோ அவசரத் தேவையோ அல்ல]. எனவே தொழிலாளிகளைப் புரட்சியாளர்களின் தரத்திற்கு **உயர்த்துவதில்** முதன்மையான கவனம் செலுத்த வேண்டும்; ''பொருளாதாரவாதிகள்'' செய்ய விரும்புவது போல் ''உழைக்கும் மக்களின்'' தரத்திற்கோ, ஸ்வபோதா செய்ய விரும்புவதுபோல் ''சராசரித் தொழிலாளியின்'' தரத்திற்கோ **இறங்குவது** நம் பணி அல்லவே அல்ல [ஸ்வபோதா அவ்வாறு செய்ய விரும்

புவதிலே பொருளாதாரவாதப் ''பள்ளியாசிரியத்தனங்களின்'' இரண்டாம் படிவத் தரத்திற்கு ஏறுகிறது]. தொழிலாளர்களுக்கு எளிதாகப் புரியக்கூடிய இலக்கியம் வேண்டும், குறிப்பாகப் பிற்பட்ட தொழிலாளர்களுக்கு மிக எளிதாகப் புரியக்கூடிய (ஆனால் கொச்சைப் படுத்தப்படாத) இலக்கியம் வேண்டும் என்பதை நான் மறுக்கவே இல்லை. ஆனால் அரசியல், அமைப்புத்துறை பற்றிய பிரச்சினைகளோடு பள்ளியாசிரியத்தனங்களை இடைவிடாது போட்டுக் குழப்புவதுதான் எனக்கு எரிச்சலூட்டுகிறது. ''சராசரி தொழிலாளி''யைப் பற்றி இவ்வளவு கவலை தெரிவிக்கும் பெருமான்களே, தொழிலாளிவர்க்க அரசியலைப் பற்றியும் தொழிலாளி வர்க்க அமைப்பைப் பற்றியும் விவாதிக்கும் போது நீங்கள் தொழிலாளிகளை புத்திசொல்லி அடக்க விரும்புதால் உண்மையிலேயே அவர்களை அவமதிக்கிறீர்கள். முக்கியமான விஷயங்களை வினைத்திட்ப முறையிலே பேசுங்கள்; பள்ளியாசிரியத்தனங்கள் ஆசிரியர்களோடு நிற்கட்டும், அரசியல் வாதிகளுக்கும் அமைப்பாளர்களுக்கும் அது வேண்டாம்! படிப்பாளிப்பகுதியினர் இடையே கூட முன்னிலை நபர்கள், ''சராசரி நபர்கள்'', ''மக்கள்திரள்'' இல்லையா? படிப்பாளிப் பகுதியினருக்கும் எளிதாகப் புரியக்கூடிய இலக்கியத்தின் தேவையை ஒவ்வொருவரும் அங்கீகரிக்க வில்லையா? அவ்வகை இலக்கியம் எழுதப்படவில்லையா? கல்லூரி அல்லது உயர்நிலைப்பள்ளி மாணவர்களைத் திரட்டியமைப்பது பற்றிய கட்டுரையில் ஒருவர் ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு செய்தவர் போல் முதன்முதலில் ''சராசரி மாணவர்கள்'' கொண்ட அமைப்பு அவசியம், என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். அந்த ஆசிரியர் கேலிசெய்யப்படுவார், அது சரியாகவும் இருக்கும். அமைப்பு பற்றி உங்களுக்குக் கருத்துகள் ஏதேனுமிருந்தால் கொடுங்கள், யார் ''சராசரி'', யார் ''சராசரிக்கு'' மேலே அல்லது கீழே என்பதை நாங்களே முடிவுசெய்து கொள்கிறோம் என்று அவரிடம் சொல்வார்கள். ஆனால் அமைப்பு பற்றி உங்களுக்கு சொந்தத்தில் கருத்துக்கள் எதுவும் இல்லையென்றால் ''மக்கள் திரள்'' சார்பிலும் ''சராசரி நபர்கள்'' சார்பிலும் நீங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமங்கள் அனைத்தும் வெறுமே அலுப்பூட்டுவதாயிருக்கும். ''அரசியல்'',

''அமைப்பு'' சம்பந்தமான இந்தப் பிரச்சினைகள் தம்மளவில் எவ்வளவோ முக்கியத்துவமுடையவை ஆதலால் அவற்றை வினைத்திட்பமுடைய வழியிலே அல்லாது வேறெந்த வழியிலும் கவனிக்க முடியாது. நாம் தொழிலாளிகளைப் (பல்கலைக் கழக மாணவர்களையும், பள்ளி மாணவர்களையும்) பயிற்றுவிக்க முடியும், பயிற்றுவிக்க வேண்டும்; அவ்விதம் செய்வதால் அவர்களோடு இந்தப் பிரச்சினைகளை விவாதிக்க நமக்கு முடியக் கூடும். ஆனால் இந்தப் பிரச்சினைகளை நீங்கள் கிளப்பத் தொடங்குகிறீர்கள் என்றால் அவற்றிற்கு உண்மையான பதில்கள் நீங்கள் கொடுத்தாக வேண்டும்; ''சராசரி நபர்கள்'' என்றோ, ''மக்கள் திரள்'' என்றோ சொல்லிக் கொண்டு பின்வாங்கக் கூடாது; குறும்புத்தனமான குறிப்புரைகளோடும் வெறும் சொற்றொடர்களோடும் விஷயத்தை முடித்து விட முயற்சிக்கக் கூடாது.*

அதேபோல் தொழிலாளி-புரட்சியாளனும் தன் பணியைச் செய்வதற்கு முற்றாகத் தயார்படுத்திக் கொள்வதற்கு ஒரு முழுநேரப் புரட்சியாளனாக ஆகித்தீரவேண்டும். எனவே, தொழிற்சாலையிலே தொழிலாளி பதினொன்றரை மணிநேரம் செலவழிப்பதினால் (கிளர்ச்சி தவிர) மற்றெல்லா புரட்சி வேலைகளும் ''அறிவுஜீவிகளைக் கொண்ட ஒரு சின்னஞ்சிறு குழுவின் மேலேதான் முக்கியமாக விழுவது அவசியமாகித் தீரவேண்டும்'' என்று B-v சொல்வது தவறு. இந்த நிலைமை

---

* ஸ்வபோதா இதழ் 1, பக்கம் 66-ல் ''அமைப்பு'' என்ற கட்டுரையில் கூறுவதாவது: ''தொழிலாளர் படையின் கனமிக்க நடை ருஷ்ய 'உழைப்பாளர்கள்' சார்பில் முன்வைக்கப்படும் எல்லாக் கோரிக்கைகளையும் பலப்படுத்தும்''— உழைப்பாளர்கள் என்கிற சொல்லைக் கொட்டையெழுத்தில் போடுங்கள், உண்மையாக! மேலும், ஆசிரியர் கூவுகிறார்: ''எனக்குப் படிப்பாளிப் பகுதியினர்பால் சிறிதேனும் பகை இல்லை, ஆனால்''... [ஆனால்-இந்தச் சொல்லுக்குப் பொருள் ''நெற்றிக்கு மேலே காதுகள் உயர வளர்வதேயில்லை'' என்று ஷெட்ரின் மொழிபெயர்த்தார்!]—''ஆனால் யாராவது ஒருவன் என்னிடம் வந்து அழகும் கவர்ச்சியும் மிக்க வார்த்தைகள் பேசி அவற்றின் (தன்னுடைய?) அழகுக்காகவும் மற்ற பண்பு நலன்களுக்காகவும் அவற்றை ஏற்கவேண்டும் என்று கோரினால் எனக்கு எப்போதும் பயங்கரமான எரிச்சல் வருகிறது'' என்று (பக்கம் 62). உண்மைதான், எனக்கும் கூட ''எப்போதும் பயங்கரமான எரிச்சல் வருகிறது.''

வெறும் ''அவசியத்தினின்று'' விளைவதல்ல. அது விளையக் காரணம் நாம் பின்தங்கியிருப்பதுதான், நாம் ஒவ்வொரு திறமையுள்ள தொழிலாளியும் ஒரு முழுநேரக் கிளர்ச்சியாளனுகவும், அமைப்பாளனுகவும், பிரச்சாரகனுகவும், இலக்கிய விநியோகஸ்தனுகவும், மற்றபடியும் ஆவதற்கு உதவவேண்டிய நமக்குள்ள கடமையை நாம் உணரவில்லை என்பதுந்தான். இவ்விஷயத்தில் முற்றிலும் வெட்கக்கேடான முறையில் நம் சக்தியை வீணடிக்கிருேம்; பேணிக்காக்க வேண்டியதை, தனிக் கவனிப்போடு வழங்கப்பட வேண்டியதைச் சிக்கனத்தோடு சேமித்துவைக்கும் திறமை நம்மிடம் இல்லை. ஜெர்மானியர்களைப் பாருங்கள்; அவர்களிடம் நம்மை விட நூறு மடங்குச் சக்திகள் உண்டு என்ற போதிலும் ''சராசரி'' நிலையிலுள்ள அணிகளிடையே இருந்து உண்மையிலேயே திறமையுள்ள கிளர்ச்சியாளர் முதலானேர் அடிக்கடி மேலுக்குக் கொண்டுவரப் படுவதில்லை என்று மிக நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிருர்கள். எனவே ஒவ்வொரு திறமையுள்ள தொழிலாளியும் தன் ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும் செயல்படுத்தவும் இடமளிக்கக் கூடிய நிலைமைகளில் அவனை வைத்திட உடனுக்குடன் முயல்கின்றனர்; அவன் ஒரு முழுநேரக் கிளர்ச்சியாளன் ஆக்கப்படுகிருன்; தனது நடவடிக்கைக்கான நிலைக்களத்தை விரிவுபடுத்திக் கொள்ளும்படி, ஒரு தொழிற்சாலையிலிருந்து அது சம்பந்தப்பட்ட தொழில் முழுவதற்கும் பரப்பிக் கொள்ளும்படி, ஒரு தனி ஊரிலிருந்து நாடுமுழுவதற்கும் பரப்பிக்கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிருன். அவன் தன் தொழிலில் அனுபவமும் நயத்திறமும் பெறுகிருன்; பார்வையை விரிவாக்கிக் கொள்கிருன், அறிவைப் பெருக்கிக்கொள்கிருன். வேற்று வட்டாரங்களையும் மாற்றுக் கட்சிகளையும் சேர்ந்த அரசியல் தலைவர்களை நெருங்கிய நிலையில் கவனிக்கிருன்; அவர்கள் தரத்திற்கு உயர முயற்சிக்கிருன், தொழிலாளி வர்க்கச் சூழலைப் பற்றிய அறிவையும் சோஷலிஸ்டுத் துணிபுகளின் புது மலர்ச்சியையும் தொழிற்திறனுடன் தன்னுள் இணைத்துக் கொள்ள முயல்கிருன். இது இல்லையேல் நேர்த்தியான பயிற்சிபெற்ற தனது பகைவர்களை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கம் விடாப்பிடியான போராட்டம் நடத்த முடியாது. இவ்வொரே வழியிலேதான் உழைப்பாளி மக்கள் பேபெல்,

ஆவுயெர் போன்ற தலைவர்களை உண்டாக்கித் தருகின்றனர். ஆனால் அரசியல்வகையிலே சுதந்தரமாக உள்ள ஒரு நாட்டில் பெருமளவுக்குத் தன்னாலே நிகழக்கூடிய இது ருஷ்யாவில் நம் அமைப்புகளால் முறைமையுடன் செய்யப்பட வேண்டும். சிறிதளவேனும் ஆற்றலுள்ளவனாகவும் ''முன்னுக்கு வரக் கூடியவனாகவுமுள்ள'' தொழிலாளி-கிளர்ச்சியாளனைத் தொழிற்சாலையில் பதினொரு மணிநேரம் வேலைசெய்யும்படி விட்டுவைக்கக் கூடாது. அவனைக் கட்சி காத்துப்பேணிவரும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும்; காலாகாலத்தில் அவன் தலைமறைவாகச் சென்றுவிடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவன் வேலை செய்யும் இடத்தை மாற்றிக்கொள்ளவும் ஏற்பாடு செய்யவேண்டும், அப்பொழுதுதான் அவன் தன் அனுபவத்தைப் பெருக்கிக் கொள்வான், பார்வையை விரிவாக்கிக் கொள்வான், போலீஸ் உளவாளிகளை எதிர்க்கும் போராட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு சில ஆண்டுகளுக்காயினும் சமாளித்து நிற்பான். தொழிலாளி வர்க்க மக்கள் திரளின் இயக்கத்தின் தன்னியல்பான எழுச்சி மேன்மேலும் அகன்றும் ஆழ்ந்தும் வரவர அம்மக்கள் திரள் தன்னிடையே இருந்து மேன்மேலும் அதிகரித்த எண்ணிக்கையில் ஆற்றலுள்ள கிளர்ச்சியாளர்களை மேலுக்குக் கொண்டுவருவதோடல்லாமல் ஆற்றல் மிக்க அமைப்பாளர்களையும், பிரச்சாரர்களையும், (மிகச் சிறந்த அர்த்தத்தில்) ''நடைமுறை ஊழியர்களையும்'' மேலுக்குக் கொண்டுவருகின்றது [நம் அறிவுஜீவிகளிடையே நடைமுறை ஊழியர்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறார்கள்; ருஷ்ய பாணியில், நம் அறிவுஜீவிகளில் பெரும்பாலோர் தம் பழக்கவழக்கங்களில் கொஞ்சம் கவனமற்றவர்களாகவும் மந்தமாகவும் இருக்கிறார்கள்]. விரிவான தயாரிப்புக்கு ஆளாகி உருப்பெற்ற, தனிச்சிறப்பான பயிற்சி பெற்ற தொழிலாளி-புரட்சியாளர்களின் (''சேவையின் எல்லாக்கிளைகளையும் சேர்ந்த'' புரட்சியாளர்களும் இதில் அடங்குவர்)சக்திகள் நமக்கு கிடைக்கிறபொழுதுஉலகத்தில் எந்த அரசியல் போலீசாரும் அச்சக்திகளை எதிர்த்துச் சமாளிக்க முடியாமற் போகும்; ஏனெனில் புரட்சிக்கு முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொண்டுள்ள இச்சக்திகள் மிக விரைவான தொழிலாளர் மக்கள் திரளின் எல்லையிலா நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பார்கள். தொழிலாளர்களுக்

கும் ''அறிவுஜீவிகளுக்கும்'' பொதுவானதாக விளங்கும் முழு நேரப் புரட்சியாளனுக்கும் பயிற்சிக்குரிய இந்தப் பாதையில் தொழிலாளர்கள் செல்லும்படி ''ஊக்கிவிடச் செயலாற்று வது'' மிகக் குறைவாக இருப்பதற்கான பழி நேரடியாக நம் மையே சேரும்; தொழிலாளர் திரள், ''சராசரித் தொழிலா ளர்கள்'' என்றெல்லாம் சொல்லப்படுபவர்களுக்கு ''எட்டக் கூடியதாய் இருப்பது'' எது என்பதுபற்றி நாம் ஆற்றும் அசட்டுத்தனமான சொற்பொழிவுகளால் மிக அடிக்கடி அவர்களைப் பின்னுக்கு இழுத்துச் செல்லும் பழியும் நேராக நம்மையே சேரும்.

மற்றவை போல் இவ்விஷயத்திலும் நம் அமைப்புத் துறைப்பணி குறுகிய செயல் எல்லை கொண்டிருப்பதற்குக் காரணம் நாம் நம் தத்துவங்களையும், நம் அரசியல் பணிகளை யும் ஒரு குறுகிய செயற்களத்தில் கட்டுப்படுத்தி விடுவதே (''பொருளாதாரவாதிகளில்'' மிகப் பெரும்பான்மையோ ரும் நடைமுறை வேலைகளில் கற்றுக்குட்டிகளாக இருப்பவர் களில் மிகப் பெரும்பான்மையோரும் இதைப் பார்க்கிற தில்லை), இதில் ஐயமே இல்லை. தன்னியல்பிற்கு அடிபணிவ தானது மக்கள்திரளுக்கு எட்டக்கூடியதாய் உள்ளதற்கு அப்பால் ஓர் அடியேனும் எடுத்துவைக்காதபடி பீதியை உண்டாக்குகிறது போலும், மக்கள் திரளின் உடனடியான நேரடியான தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்கு அப்பால் வெகுதூரம் மேலே சென்றுவிடுவோமோ என்கிற பீதியை உண்டாக்குகிறதுபோலும். பெருமான்களே, பயப்படாதீர் கள்! அமைப்பு மட்டத்தில் நாம் மிகமிகத்தாழ்ந்து உள்ள தால் அளவுக்கு மிஞ்சிய உயரத்திற்கு நாம் ஏறிவிடமுடியும் என்கிற கருத்தே அபத்தமானது என்பதை நினைவில் வையுங் கள்!

### உ.''சதிவேலைக்கான'' அமைப்பும் ''ஜனநாயகவாதமும்''

என்றபோதிலும் நம்மிடையே பல பேர் ''வாழ்வின் குரல்'' விஷயத்தில் மிகவும் தொட்டாற்சிணுங்கித் தனமாக இருக்கின்றார்கள். வேறெதையும்விட அதைக் கண்டுதான் அவர்களுக்குப் பயமதிகம்; இங்கே விரித்துரைத்த கருத்துக்

களின் ஆதரவாளர்கள் ஒரு ''நரோத்னயா வோல்யா'' கொள்கையைப் பின்பற்றுவதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள், ''ஜனநாயகவாதத்தைப்'' புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டுகிறார்கள். இக்குற்றச்சாட்டுகளை ரபோச்சியே தேலோ எதிரொலித்து இருக்கிறது, இவற்றைக் கவனித்தாக வேண்டும்.

ரபோச்சயா கஸேத்தாவும் நரோத்னயா வோல்யா போக்குகள் கொண்டிருப்பதாக செயின்ட் பீடர்ஸ்புர்க் ''பொருளாதாரவாதிகள்'' குற்றஞ்சாட்டியதை இந்நூலாசிரியர் நன்கறிவார் (ரபோச்சயா கஸேத்தாவை ரபோச்சயா மிஸ்லுடன் ஒப்பிடும்போது இது முற்றிலும் புரிந்துகொள்ளக் கூடியதே ஆகும்). எனவே இஸ்க்ரா வெளிவந்த கொஞ்ச காலத்திலே அதை ஒரு ''நரோத்னயா வோல்யா'' பத்திரிகை என்று X நகரத்தைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் வர்ணிப்பதாக ஒரு தோழர் சொல்லக் கேட்டு நாங்கள் சிறிதேனும் வியப்படையவில்லை. உண்மைதான், இக்குற்றச்சாட்டைக் கேட்க எங்களுக்குப் பெருமையாயிருந்தது. ஏனெனில், ''நரோத்னயா வோல்யாவின்'' அனுதாபியாக இருப்பதாக எந்த நல்ல சமூக-ஜனநாயகவாதிதான் ''பொருளாதாரவாதிகளால்'' குற்றஞ்சாட்டப்படாமல் விடப்பட்டிருக்கிறார்?

இக்குற்றச்சாட்டுகள் இருவிதமான தப்பெண்ணத்தினால் விளைந்தவை. முதலாவது, நம்மிடையே புரட்சி இயக்கத்தின் வரலாறு பற்றி அற்பமாகவே தெரிந்திருப்பதினால், ஜாராட்சி முறையை எதிர்த்து உறுதியான போர்ப்பிரகடனம் செய்கிறபோது செயல்துடிப்புள்ள, மையப்படுத்தப்பட்ட அமைப்பைக் குறிப்பதற்கு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் ''நரோத்னயா வோல்யா'' எனும் பெயர் பயன்படுத்தப்படுகிறது. 1870களில் புரட்சியாளர்கள் வைத்திருந்த, நமக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய நனிசிறந்த அமைப்பு ஏற்படுத்தியது ''நரோத்னயா வோல்யா'' அல்ல, ஸெம்லியா-இ-வோல்யா[90] ஆகும். ''சோர்னிய் பெரிடெல்'' என்றும் ''நரோத்னயாவோல்யா'' என்றும் ''ஸெம்லியா-இ-வோல்யா'' குழு பிளவுண்டது. எனவே ஒரு செயல்துடிப்புள்ள புரட்சிகரமான அமைப்பைக் குறிப்பான ''நரோத்னயா வோல்யா'' தன்மைகொண்ட ஒன்றாகக் கருதுவது வரலாற்று வழியிலும் சரி தர்க்கவழியிலும்சரி அபத்தமாகும். ஏனெனில்

போராட்டத்தைப் பற்றி காரியப்பற்றுடன் சிந்திக்கும் எந்த வொரு புரட்சிகரமான போக்கும் இவ்வகை அமைப்பு வேண் டாமென்று விட முடியாது. அதிருப்தியடைந்துள்ள எல்லோரை யும் அமைப்பில் அணிதிரட்டவும் எதேச்சாதிகாரமுறைக்கு எதிராக உறுதியான போராட்டம் நடத்துவதில் அவ்வமைப் பைச் செலுத்தவும் முயன்றதில் ''நரோத்னயா வோல் யா'' செய்த தவறு அடங்கியிருக்கவில்லை; மாறாக அதுவே அதன் வரலாற்று வகைப்பட்ட மாபெரும் சிறப்பாகும். சாராம்சத்தில் அறவே புரட்சிகரமாக இல்லாத ஒரு தத்து வத்தை நம்பி நின்றதுதான் அவர்கள் செய்த தவறு; மேலும், தம் இயக்கத்தை வளர்ந்துவரும் முதலாளித்துவச் சமுதாயத் தில் வர்க்கப் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி எப்படி இணைப்பது என்று ''நரோத்னயா வோல்யா'' உறுப்பினர்கள் அறியாமலிருந்தார்கள், அல்லது இணைக்க முடியாமல் இருந்தார்கள். மார்க்ஸியத்தைப் புரிந்துகொள்ள முற்றாகத் தவறினால் மட்டுமே (அல்லது ''ஸ்துரூவே வாதத் தின்'' உணர்ச்சியில் அதைப் ''புரிந்து கொண்டிருந்தால்'' மட்டுமே), திரளான தன்னியல்பான தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எழுச்சியானது ''ஸெம்லியா-இ-வோல்யா'' வைத்திருந்தது போன்ற ஒரு நல்ல புரட்சியாளர்களின் அமைப் பையோ அல்லது அதைவிட எவ்வளவோ மேலான ஒன்றையோ படைத்திடும் கடமையிலிருந்து நம்மை விடுவிக் கிறது என்கிற கருத்தைத் தூண்டிவிட முடியும். மாறாக இவ் வியக்கம் அக்கடமையை நம்மீது சுமத்துகிறது; ஏனெனில், தொழிலாளி வர்க்கத்தின் தன்னியல்பான போராட்டத்தைப் புரட்சியாளர்களின் பலமான அமைப்பு தலைமை வகித்து நடத்திச் செல்லாதவரை அந்தத் தன்னியல்பான போராட் டம் அதன் உண்மையான ''வர்க்கப் போராட்டமாக'' ஆகாது.

இரண்டாவதாக, பலபேர்—இவர்களில் ப. கிரிச்சேவ்ஸ்கி யும் உண்டு போலும் — (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம் 18)—அரசியல் போராட்டத்தை ''சதிவேலை'' என்று நினைக்கும் கருத்தை எதிர்த்து எப்பொழுதுமே சமூக-ஜன நாயகவாதிகள் நடத்திவந்துள்ள வாதப்போரைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அரசியல் போராட்டத்தை ஒரு சதிவேலையாக குறுக்கிக் கட்டுப்படுத்திவிடுவதை எதிர்த்து

நாம் எப்போதும் ஆட்சேபித்திருக்கின்றோம், தொடர்ந்து ஆட்சேபித்து வருவோம்.* ஆனால் இதற்கு அர்த்தம் ஒரு பலமான புரட்சிகரமான அமைப்பின் தேவையை நாம் மறுக்கிறோம் என்பதல்ல. இவ்வகையிலே தான் முன்சென்ற அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ள குறு நூலில், அரசியல் போராட்டத்தை ஒரு சதிவேலையாகத் தாழ்த்துவதை எதிர்க்கும் வாதப்போருக்குப்பின் ''எதேச்சாதிகாரத்தை நொறுக்கி வீழ்த்தும் அடிகொடுப்பதற்கு'' ''கலகத்தை'' மேற்கொள்வதற்கோ ''தாக்குவதற்கான மற்ற வடிவம்'' ஒவ்வொன்றையும் மேற்கொள்வதற்கோ முடியக்கூடிய வலிமை பொருந்திய ஓர் அமைப்பைப் பற்றி (ஒரு சமூக-ஜனநாயகவாத லட்சியமாக) வர்ணனை தரப்படுகிறது.** வடிவத்தைப் பொறுத்தவரை, ஓர் எதேச்சாதிகார ஆட்சியுள்ள நாட்டில் இவ்வகைப்பட்ட பலம்பொருந்திய புரட்சிகரமான அமைப்பை

---

* ஒப்பு நோக்குக: ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் பணிகள், பக்கம் 21, பி. எல். லாவ்ரோவ் என்பவரை எதிர்த்து வாதப்போர்.

** ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் பணிகள், பக்கம் 23. இது சம்பந்தமாக, ரபோச்சியே தேலோ சொல்வது தனக்கே புரியவில்லை அல்லது ''காற்றடிக்கும் திசைக்கேற்ப'' தன் கருத்துக்களை மாற்றிக் கொள்கிறது எனும் உண்மைக்கு மற்றொரு உதாரணம் தருகிறோம். ரபோச்சியே தேலோ, இதழ் 1ல், பின்வரும் பகுதி கொட்டையெழுத்தில் போடப்பட்டிருக்கிறது: ''இக்குறுநூலில் கொடுக்கப்பட்டுள்ள சாரப்பொருள் ரபோச்சியே தேலோவின் ஆசிரியர் குழுவின் வேலைத்திட்டத்துடன் முற்றுகப் பொருந்துகிறது'' (பக்கம் 142) என்று. உண்மையாகவா? எதேச்சாதிகாரத்தைத் தூக்கியெறிவதை மக்கள் திரளின் இயக்கத்தின் முதல் பணியாக வைக்கக் கூடாது எனும் கருத்து ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் பணிகள் எனும் குறுநூலில் வெளியிடப்பட்ட கருத்துக்களுடன் பொருந்துகிறதா? ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்'' பற்றிய தத்துவமும் கட்டங்கள் பற்றிய தத்துவமும் இக்குறுநூலில் வெளியிடப்பட்ட கருத்துக்களுடன் பொருந்துகின்றனவா? ''கருத்துப் பொருத்தம்'' என்பதின் பொருளை இப்படி வேடிக்கையான முறையிலே புரிந்துகொள்கிற ஒரு சஞ்சிகைக்கு உறுதியான கோட்பாடுகள் இருக்கமுடியுமா என்பதை வாசகர்களே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

''சதிவேலைக்கான'' அமைப்பாக வர்ணிக்கவுங்கூடும்; ஏனெனில் "conspiration" எனும் பிரெஞ்சு மொழிச் சொல்லுக்கு "zagovor" (சதிவேலை) எனும் ருஷ்ய மொழிச் சொல் சமமாயுள்ளது, மேலும் இப்படிப்பட்ட அமைப்பிற்கு உச்சபட்சமான இரகசியநிலை இருந்து தீரவேண்டும். இவ்வகை அமைப்பிற்கு இரகசியநிலை எவ்வளவோ அவசியமான நிபந்தனையாக இருப்பதால் மற்ற நிபந்தனைகள் அனைத்தும் (உறுப்பினர்களின் தொகை, உறுப்பினர்களைத் தேர்ந்துகொள்வது, வேலைகள் முதலியவை) அதற்குப் பொருந்திவரும்படி செய்ய வேண்டும். ஆகவே சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாம் ஒரு சதிகார அமைப்பை உண்டாக்க விரும்புகிறோம் எனும் குற்றச்சாட்டைக் கேட்டுப் பயப்படுவது மிகமிக அப்பாவித்தனமானதாகும். ''நரோத்னயா வோல்யா'' கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்லும் குற்றச்சாட்டு போலவே இப்படிப்பட்ட குற்றச்சாட்டும் ''பொருளாதாரவாதத்தை'' எதிர்க்கும் ஒவ்வொருவனுக்கும் பெருமையளிப்பதாக இருக்கவேண்டும். இவ்வகைப்பட்ட பலமான, முழுக் கண்டிப்புள்ள இரகசிய அமைப்பு—எல்லா இரகசிய நடவடிக்கைகளையும் வழிசெலுத்தும் பொறுப்பைத் தன்னிடம் குவித்துவைத்துக்கொள்கிற அமைப்பு—அவசியத்தின் காரணமாக மையப்படுத்தப்பட்டுள்ள அமைப்பு பக்குவமற்ற தாக்குதலில் மிக எளிதாக இறங்கிவிடக் கூடுமே, அரசியல் அதிருப்தியின் வளர்ச்சியும் தொழிலாளி வர்க்கத்தின் இடையேயுள்ள கொந்தளிப்பின் கோபத்தின் கடுமையும் இப்படிப்பட்ட தாக்குதலை சாத்தியமாக்குவதற்கு முன்னல், அவசியமாக்குவதற்கு முன்னல் யோசித்துப் பாராமல் இயக்கத்தை தீவிரப்படுத்திவிடக் கூடுமே என்கிற ஆட்சேபணை எழக்கூடும். இதற்கு நம் பதில் இதுதான்: எதார்த்தத்தோடு சம்பந்தமில்லாமல் பேசினல் ஒரு செயல்துடிப்புள்ள அமைப்பு யோசித்துப் பாராமல் போரில் ஈடுபடக் கூடும், வேறு நிலைமைகளில் முற்றுகத் தவிர்க்கக்கூடிய ஒரு தோல்வியிலே போய் அது முடியக் கூடும் என்பதை மறுக்கமுடியாததுதான். ஆனல் இப்படிப்பட்ட பிரச்சினையில் எதார்த்தத்தோடு சம்பந்தமில்லாத வாதசிந்தனையோடு நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது. ஏனெனில், வெறும் கருத்தளவில் பார்த்தால் தோல்வியுறும் சாத்தியப்பாடு

ஒவ்வொரு போருக்கும் உண்டு. போருக்கு அமைப்பு முறையிலான ஆயத்தம் செய்வதைத் தவிர இந்த சாத்தியப்பாட்டைக் குறைப்பதற்கு வேறு வழியில்லை. இன்று ருஷ்யாவில் நிலவும் ஸ்தூலமான நிலைகளிலிருந்து பார்ப்போமேயானல் இயக்கத்திற்கு உறுதி நிலையை அளிப்பது யோசனையற்ற தாக்குதல்கள் நடத்தும் சாத்தியப்பாட்டிலிருந்து அதைக் காப்பது என்கிற நோக்கத்திற்காகவே ஒரு பலமான புரட்சிகரமான அமைப்பு இன்றியமையாதது எனும் நேர் முடிவிற்கு நாம் வந்தாகவேண்டும். அவ்விதமான அமைப்பு இன்னும் இல்லாதிருக்கிற, புரட்சி இயக்கம் விரைவாகவும் தன்னியல்பாகவும் வளர்ந்து வருகின்ற இன்றைய நாளிலேதான் நாம் இரண்டு துருவநிலைப் போக்குகளை ஏற்கெனவே காண்கிறோம் (எதிர்பார்க்கக் கூடிய படியே இவை ஒன்றை ஒன்று ''சந்திக்கின்றன''). இவையாவன: ஒன்று, முற்றிலும் பிசகான ''பொருளாதாரவாதமும்'' மிதமாகப் போகும்படி சொல்லும் போதனையும்; இரண்டு, அதே அளவிற்குப் பிசகான ''உணர்ச்சியைத் தூண்டிவிடும் பயங்கரவாதம்''; இது ''வளர்ந்து பலப்படுத்திக் கொண்டு வரும் முடிவை நெருங்குவதற்கு மாருக துவக்க நிலைக்கு அருகாமையிலேயே இருந்துவரும். காலத்தில் அவ்வியக்கம் முடியும் தசையைக் காட்டுவது போன்ற அறிகுறிகளைச் செயற்கையாக உண்டாக்குவதற்கு முயல்கிறது (வே. ஸஸூலிச், ஸார்யா, இதழ் 2-3, பக்கம் 353). மேலும், இரு துருவநிலைப் போக்குகளுக்கும் இரையாகிவிடுகிற சமூக-ஜனநாயகவாதிகளும் இருக்கிருர்கள் என்பதை ரபோச்சியே தேலோவின் உதாரணம் புலப்படுத்துகிறது. இதில் வியப்பில்லை. ஏனெனில், மற்ற காரணங்கள் ஒரு புறமிருக்க ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்'' என்றைக்கும் புரட்சியாளர்களைத் திருப்திபடுத்த முடியாது, எனவே துருவநிலைப் போக்குகள் இங்குமங்குமாக எப்போதும் தலைதூக்கியவாறு இருக்கும். சமூக-ஜனநாயகவாதக் கொள்கையை முரணின்றிச் செயல்படுத்துகிறதாய், சொல்லப்போனல் எல்லாப் புரட்சிகரமான இயல்புணர்ச்சிகளையும், முயற்சிகளையும் திருப்திப்படுத்துகிறதாய் இருக்கும் மையப்படுத்தப்பட்ட, செயல்துடிப்புள்ள அமைப்பு ஒன்றுதான் யோசனையற்ற தாக்குகளில் ஈடுபடாதபடி இயக்கத்தைக்

காப்பாற்றவும் வெற்றியைச் சம்பாதிக்கத்தக்க தாக்குதல்களைத் தயாரிக்கவும் முடியும்.

இங்கே அமைப்பு பற்றி விரித்துரைக்கப்பட்ட கருத்துகள் ''ஜனநாயகக் கோட்பாட்டுக்கு'' முரணுகும் என்று மேலும் ஒரு ஆட்சேபணையைக் கிளப்பலாம். முந்தையக் குற்றச்சாட்டு ருஷ்யாவிற்குள்ளிருந்து பிறந்த தன்மை கொண்டது, ஆனுல் இந்தக் குற்றச்சாட்டு குறிப்பாக வெளிநாட்டிலிருந்து பிறந்த தன்மை கொண்டது. வெளிநாட்டிலிருக்கும் அமைப்பு ஒன்றுதான் (''வெளிநாட்டிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'') தன் ஆசிரியர் குழுவிற்குப் பின்வருவது போன்ற கட்டளைகளைக் கொடுக்க முடியும்:

''அமைப்பிற்குரிய கோட்பாடு. சமூக-ஜனநாயகவாதத்தின் வெற்றிகரமான வளர்ச்சியையும் ஒன்றுபடுத்தலையும் சாதிப்பதற்காக அதன் கட்சியமைப்பின் விரிவான ஜனநாயகக் கோட்பாடு வலியுறுத்தப்படவேண்டும், வளர்க்கப்படவேண்டும், அதற்காகப் போராடவும் வேண்டும்; நம் கட்சி அணிகளிடையே ஜனநாயகவிரோதமான போக்குகள் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது இது குறிப்பாக அவசியமாகிறது'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 18).

இஸ்க்ராவின் ''ஜனநாயக விரோதமான போக்குகளை'' எதிர்த்து ரபோச்சியே தேலோ எப்படிப் போராடுகிறது என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். இப்போதைக்குநாம்''பொருளாதாரவாதிகள்''முன்வைக்கும்''கோட்பாட்டை'' மேலும் நெருங்கிப் பரிசீலிப்போம். ''விரிவான ஜனநாயகக் கோட்பாடு'' என்பதற்குப் பின்வரும் இரண்டு நிபந்தனைகள் இருக்கவேண்டியதை அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்: முதலாவது, முழுமையான செய்திப் பரப்பு; இரண்டாவது எல்லாப் பதவிகளுக்கும் தேர்தல் நடத்துவது. செய்திப் பரப்பு இல்லாமல்—அதிலும் அமைப்பின் உறுப்பினர்களோடு நின்றுவிடாத செய்திப் பரப்பு இல்லாமல்—ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது அபத்தமாக இருக்கும். நாம் ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சியை ஒரு ஜனநாயக அமைப்பு என்று அழைப்பதற்குக் காரணம் அதன் நடவடிக்கைகள் அனைத்தும் பகிரங்கமாக நடக்கின்றன; அதன் கட்சிக் காங்கிரசின் கூட்டங்களுங்கூட பகிரங்கமாக

நடக்கின்றன. தன் உறுப்பினர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாதபடி இரகசியத் திரையின்பின் மறைக்கப்பட்டிருக்கும் அமைப்பை ஜனநாயக அமைப்பென்று யாரும் அழைக்க மாட்டார்கள். அப்படியிருக்க, ''விரிவான ஜனநாயகக் கோட்பாட்டை'' முன்வைப்பதால் என்ன பலன், இந்தக் கோட்பாட்டின் அடிப்படையான நிபந்தனையை ஒரு இரகசிய அமைப்பால் நிறைவேற்ற முடியாமல் இருக்கும் பொழுது? ''விரிவான கோட்பாடு'' என்பது ஆர்ப்பாட்டமான ஆனால் பொருளற்ற சொற்றொடராகக் காட்டிக் கொள்கிறது. மேலும் அமைப்பு விஷயத்தில் இன்றைய அவசரக் கடமைகளை அறவே புரிந்துகொள்ளாமல் இருப்பதையும் காட்டுகிறது. ''விரிவான'' நமது புரட்சியாளர்களின் திரளிடையே இரகசியமின்மை அதிகமாக இருப்பதை எல்லோரும் அறிவார்கள். இதுபற்றி B-vயின் கசப்பான முறையீடுகளையும் ''கண்டிப்பான முறையில் உறுப்பினர்களைப் பொறுக்கியெடுத்துக் கொள்ளவேண்டும்'' என்கிற முற்றிலும் நியாயமான கோரிக்கைகளையும் (ரபோச்சியே தேலோ, இதழ் 6, பக்கம் 42) கேட்டிருக்கிறோம். அப்படியிருந்தும், கூரான ''எதார்த்த உணர்ச்சி'' பெற்றிருப்பதாகப் பெருமை யடித்துக் கொள்ளும் நபர்கள் இப்படிப்பட்ட நிலைமையில் மிகவும் கண்டிப்புள்ள இரகசிய நிலையையோ, மிகவும் கண்டிப்பான முறையில் (எனவே மேலும் குறுக்கப்பட்ட முறையில்) உறுப்பினர்களைப் பொறுக்கிக்கொள்வதையோ வற்புறுத்துவதற்குப் பதிலாக ''விரிவான ஜனநாயகக் கோட்பாட்டை'' வற்புறுத்துகிறார்கள்! இதைத்தான் குறி தவறிப்போவது என்று சொல்வார்கள்.

ஜனநாயகத்தின் இரண்டாவது பண்புக்கூறான தேர்தல் எனும் கோட்பாடு விஷயத்திலும் இதே நிலைமைதான். அரசியல் சுதந்தரம் உள்ள நாடுகளில் இந்நிலைமை நடப்புண்மையாக எடுத்துக்கொள்ளப் படுகின்றது. ''கட்சியின் வேலைத்திட்டத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு கட்சிக்கு சாத்தியமான ஆதரவனைத்தும் கொடுப்பவர்களே கட்சியின் உறுப்பினர்கள் ஆவர்'' என்கிறது ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சி விதிகளின் முதல் பிரிவுக்கூறு. பார்வையாளர்களின் எதிரே தெரிகிற நாடகமேடை போல் அரசியல் அரங்கம் முழுவதும் மக்கள் முன்னே பகிரங்கமாக இருப்பதால்,

இப்படி ஏற்றுக்கொள்வதையோ ஏற்றுக்கொள்ளாததையோ, ஆதரவளிப்பதையோ, எதிர்ப்பதையோ பத்திரிக்கைகள் பொதுக் கூட்டங்கள் வாயிலாக எல்லோரும் அறிவார்கள். அந்தந்தக் குறிப்பிட்ட அரசியல் பிரமுகர் இன்னின்ன வழியிலே துவங்கி, இன்னின்ன பரிணும வளர்ச்சியைக் கடந்து நெருக்கடியான தருணத்தில் இன்னின்ன முறையிலே நடந்து கொண்டார், அவருக்கு இன்னின்ன குணங்கள் உண்டு என்று எல்லோரும் அறிவார்கள்; எனவே, எல்லா விஷயங்களேயும் தெரிந்துள்ள நிலையில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இந்த நபரைக் குறிப்பிட்ட கட்சி பதவிக்குத் தேர்ந்தெடுக்கவோ, தேர்ந்தெடுக்க மறுக்கவோ முடியும். அரசியல் அரங்கத்தில் ஒரு கட்சி நபரின் ஒவ்வொரு செயல்மீதும் செயல்படுத்தப் படும் பொதுக் கண்காணிப்பு (இச்சொல்லே அதன் அசல் அர்த்தத்தில் பயன் படுத்துகிறேம்) உயிரியலில் ''தகுதிமிக்கவையே தப்பிப்பிழைக்க முடியும்'' என்று சொல்கிருர்களே அதை உண்டாக்கித் தருகிற தாஞக இயங்கும் உத்தியைத் தோற்றுவிக்கிறது. முழுமையான செய்திப் பரப்பு, தேர்தல், பொதுக் கண்காணிப்பு வாயிலாக நிகழும் ''இயல்பான தேர்வு'', ஒவ்வொரு அரசியல் பிரமுகரும் ''தனக்குரிய இடத்தில் இருப்பார் என்றும் தன்னுடைய அறிவாற்றலின் அளவிற்குச் சிறப்பாகப் பொருந்துகிற வேலையைச் செய்து வருவார் என்றும் தன் தவறுகளின் பாதிப்புகளைத் தானே அனுபவிப்பார் என்றும் தவறுகளைக் கண்டுகொண்டு தவிர்ப்பதற்குத் தனக்குள்ள திறமையை உலகின் முன்னே நிரூபித்துக் கொள்வார் என்றும் உத்தரவாதமளிக்கிறது.

இந்தச் சித்திரத்தை நாம் எதேச்சாதிகார ஆட்சி முறையின் நிலைமையோடு பொருத்திப் பார்க்க முயலுங்கள்! ''கட்சியின் வேலைத்திட்டத்தின் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு கட்சிக்குச் சாத்தியமான ஆதரவனைத்தும் அளிக்கிற'' எல்லோரும் இரகசியமாக வேலை செய்யும் புரட்சியாளனின் ஒவ்வொரு செயலையும் கண்காணிக்கலாம் என்பது ருஷ்யாவில் நினைத்துப் பார்க்க முடியுமா? வேலையின் நன்மையை உத்தேசித்துப் பார்க்கையில் ''எல்லோரும்'' என்பது குறிப்பிடுகிற பத்தில் ஒன்பது பேரிடமிருந்து புரட்சியாளன் தன்னை மறைத்துக்கொண்டு தீரவேண்டும்; அப்படியிருக்கும் பொழுது இந்தப் புரட்சியாளர்களில் ஒருவரை

ஏதாவதொரு குறிப்பிட்ட பதவிக்கு எல்லோரும் தேர்ந் தெடுப்பதென்பது சாத்தியமா? ரபோச்சியே தேலோ வெளி யிடும் ஆர்ப்பாட்டமான சொற்ருெடர்களின் உண்மையான அர்த்தத்தைப்பற்றிச் சற்றே சிந்தித்துப் பாருங்கள், எதேச் சாதிகார ஆட்சிமுறையும் உளவுப் போலீஸின் ஆதிக்கமும் நிலவும் நிலைமைகளில் கட்சியமைப்பில் ''விரிவான ஜன நாயகம்'' என்பது கவைக்குதவாத தீங்கு விளைவிக்கும் விளை யாட்டுக் கருவியே தவிர வேருென்றுமில்லை என்று உணர் வீர்கள். அது கவைக்குதவாத விளையாட்டுக் கருவி என் பதற்குக் காரணம், உண்மையிலே எந்தப் புரட்சிகரமான அமைப்பும் தான் எவ்வளவோ விரும்பியபோதிலும் விரிவான ஜனநாயகத்தை என்றைக்குமே செயல்படுத்தியதில்லை, செயல் படுத்தவும் முடியாது. அது தீங்கு விளைவிக்கும் விளையாட்டுக் கருவி என்பதற்குக் காரணம், ''விரிவான ஜனநாயகக் கோட்பாட்டை'' செயல்படுத்தும் எந்த முயற்சியும் பெரு மளவான திடீர்ச்சோதனைகளை நடத்தும் போலீஸின் வேலைக்கு வசதி செய்து கொடுக்கும், நடப்பிலுள்ள பக்குவமின்மையை நிலைத்து நீடிக்கச் செய்யும். நடைமுறை ஊழியர்களை முழுநேரப் புரட்சியாளர்கள் ஆவதற்குத் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளும் காரியப்பற்றுள்ள அவசரமான பணியிலிருந்து சிந்தனையைத் திருப்பி விட்டுத் தேர்தல் முறைகளைப் பற்றிய விரிவான ''காகிதச்'' சட்டதிட்டங் களைத் தயார் செய்வதில் செலுத்தும். உண்மையிலேயே தீவி ரமாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லாத நபர்கள் அடிக்கடி ஒன்றுகூடுகிற வெளிநாட்டிலே மட்டுமே இவ்வாறு ''ஜனநாயக விளையாட்டு விளையாடுவது'' இங்கு மங்குமாக, குறிப்பாகச் சிறு குழுக்களிலே தோன்றமுடியும்.

நம்பக் கூடியதான ஜனநாயகக் ''கோட்பாட்டை'' புரட்சி விவகாரங்களில் புகுத்தும் ரபோச்சியே தேலோவிற்கு மிகப் பிடித்தனமான தந்திரத்தின் அசிங்கத்தனத்தை அம்பலப் படுத்துவதற்கு ஒரு சாட்சியை மீண்டும் அழைப்போம். இந்த சாட்சி எ. செரெப்ரியக்கோவ், இவர் நகனுனே எனும் லண்டன் பத்திரிகையின் பதிப்பாசிரியர். இவருக்கு ரபோச் சியே தேலோ மீது ஒரு வாஞ்சனை உண்டு, பிளெஹானவ் மீதும் பிளெஹானவ் ''ஆதரவாளர்கள்'' மீதும் கொடிய பகைமை பாராட்டுபவர். ''வெளிநாட்டிலுள்ள ருஷ்ய

சமூக-ஜனநாயகவாதிகள் சங்கத்தில்'' ஏற்பட்ட பிளவைப் பற்றி நகனூனே வெளியிட்ட கட்டுரைகளில் அது திட்ட வட்டமாக ரபோச்சியே தேலோவின் பக்கம் சேர்ந்துகொண்டு பிளெஹானவ் மீது அற்பத்தனமான வசைமாரி பொழிந்தது. எனவே சர்ச்சையிலுள்ள பிரச்சினை விஷயத்தில் இந்த சாட்சியை அழைப்பது மிகவும் மதிப்புடையது. 1899 ஜூலையில் வெளிவந்த நகனூனேயில் ஏழாமிதழில், ''தொழிலாளிகளின் சுயவிடுதலைக் குழுவின் வேலைத்திட்டம் பற்றி'' என்று தலைப்பிட்ட ஒரு கட்டுரையில் ''காரியப்பற்றுள்ள ஒரு புரட்சி இயக்கத்தில் தன்னை வஞ்சித்துக் கொள்ளல், தலைமை, *Areopagus* (தலைமை நீதிமன்றம்)'' போன்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவது ''கண்ணியமற்றது'' என்று செரெப்ரியக் கோவ் வாதித்தார், மற்றவற்றிற்கிடையே பின்வருவதையும் எழுதினார்:

''மீஷ்கின், ரோகசியோவ், ழெலியாபொவ், மிகைலொவ், பிரோவ்ஸ்கயா, ஃபீக்னர் ஆகியோரும் மற்றவர்களும் என்றைக்கும் தங்களைத் தலைவர்களாகக் கருதிக்கொண்டதில்லை, அவர்களைத் தலைவர்களாக யாரும் என்றைக்கும் தேர்ந்தெடுத்ததுமில்லை, நியமித்ததுமில்லை; எனினும் நடைமுறையில் அவர்கள் தலைவர்களாகவே இருந்தனர்; காரணம், பிரச்சாரம் செய்து வந்த காலத்திலும் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடந்திவந்த காலத்திலும் அவர்கள் பெரும் பகுதி வேலையைத் தாங்களே மேற்கொண்டனர், மிக ஆபத்தான இடங்களுக்குப் போயினர், அவர்களின் செயல் மிகப் பயனுள்ளதாகியது. அவர்கள் தலைவர்களானது அவர்களுடைய விருப்பத்தினாலல்ல; அவர்களைச் சூழ்ந்திருந்த தோழர்களுக்கு அவர்களின் விவேகத்திலும் சக்தியிலும் பற்றுறுதியிலும் நம்பிக்கை இருந்ததினாலேதான் அவர்கள் தலைவர்களாயினர். ஏதோவொருவிதமான *Areopagus* (தலைமை நீதிமன்றம்) தான்தோன்றித்தனமாக இயக்கத்தின் மீது ஆட்சி செலுத்துமே என்று பயப்படுவது (அதைக் கண்டு பயப்படாவிட்டால் அதைப்பற்றி ஏன் எழுதவேண்டும்?) மிதமிஞ்சிய வெகுளித்தனமாகும். இதில் யார் கவனம் செலுத்துவார்கள்?''

இந்த *Areopagus* எவ்வழியில் ''ஜனநாயக விரோதமான போக்குகளிலிருந்து'' மாறுபடுகிறது என்று வாசகரைக் கேட்கிறோம். ரபோச்சியே தேலோவின் ''நம்பத்தக்க'' அமைப்புக் கோட்பாடு அதேபோல் அப்பாவித்தனமானதும்

கண்ணியமற்றதுமாகும் என்று விளங்கவில்லையா? அப்பாவித் தனமானது என்பதற்கு காரணம்: ''அவர்களைச் சூழ்ந்திருந்த தோழர்களுக்கு அவர்களின் விவேகத்திலும் சக்தியிலும் பற்றுறுதியிலும் நம்பிக்கை'' யிராதிருந்தால் Areopagus மீதோ ''ஜனநாயக விரோதமான போக்குகள்'' உள்ள நபர்கள் மீதோ யாரும் கவனம் செலுத்த மாட்டார்கள்; கண்ணியமற்றது என்பதற்குக் காரணம்: சிலருடைய தற்பெருமையையும் நம் இயக்கத்தின் எதார்த்தமான நிலைமை பற்றி வேறு சிலருக்கு இருக்கும் அறியாமையையும் வேறு சிலருக்குள்ள பயிற்சியின்மையையும் புரட்சி இயக்கத்தின் வரலாறுபற்றிய அறியாமையையும் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கும் வாய்வீச்சான தாக்குதலேயாகும். மிகக் கண்டிப்புள்ள இரகசியநிலை, மிகக் கண்டிப்புடன் உறுப்பினர்களைத் தேர்ந்துகொள்வது, முழுநேரப் புரட்சியாளர்களைப் பயிற்றுவிப்பது ஒன்றுதான் நம் இயக்கத்தின் தீவிரமான ஊழியர்களுக்கு வேண்டிய காரியப் பற்றுள்ள அமைப்புக் கோட்பாடாகும். இந்தப் பண்புகள் இருக்குமேயானால் ''ஜனநாயகவாதத்தை'' விட மேலானதொன்று—அதாவது, புரட்சியாளர்களிடையே முழுமையான, தோழமைமிக்க, பரஸ்பர நம்பிக்கை—நமக்கு உத்திரவாதமாகக் கிடைக்கும். நமக்கு இது முற்றிலும் அவசியம், ஏனெனில் இதற்குப் பதிலாக ருஷ்யாவில் பொதுவான ஜனநாயகக் கண்காணிப்பை வைக்கும் பிரச்சினைக்கே இடமில்லை. உண்மையான ''ஜனநாயக''க் கண்காணிப்பை நிலைநாட்டுவது அசாத்தியம் என்பதால் புரட்சிகரமான அமைப்பின் உறுப்பினர்கள் கண்காணிப்பிலிருந்து முழுக்க அப்பாற்பட்டவர்களாகி விடுவார்கள் என்று நினைப்பது பெருந் தவறாகும். ஜனநாயகவாதத்தின் பொம்மை வடிவங்கள் (முழுமையான, பரஸ்பர நம்பிக்கை நிலவும் தோழர்களைக் கொண்ட ஒரு நெருக்கமான உள்கட்டுள்ள நிறுவனத்தினுள்ளே ஜனநாயகவாதம்) பற்றிச் சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை, ஆனால் தங்கள் பொறுப்பை அவர்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள், ஏனெனில் உண்மையான புரட்சியாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பு தகுதியற்ற உறுப்பினரை நீக்கிவிடுவதற்கு அனைத்தும் செய்யும் என்று அனுபவத்திலிருந்து அவர்கள் அறிவார்கள். மேலும், ருஷ்யப் புரட்சி வட்டாரங்களில் (சர்வ

தேசப் புரட்சி வட்டாரங்களிலுங்கூடத்தான்) ஓரளவுக்கு நல்ல வளர்ச்சி பெற்ற பொது ஜன அபிப்பிராயம் இருக்கிறது, அதற்கொரு நீண்ட வரலாறும் உண்டு. தோழமை உறவை ஒட்டிய கடமைகளினின்று விலகிப்போகும் ஒவ்வொரு முயற்சியையும் கடுமையாக ஈவிரக்கமின்றி தண்டிக்கிறது (''ஜனநாயகவாதம்''—உண்மையான ஜனநாயகவாதம், பொம்மை ஜனநாயகவாதமல்ல—நிச்சயமாகத் தோழமை உறவு பற்றிய கருத்தோட்டத்தின் ஓர் இணைக்கூறுகும்). இவை யாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள், ''ஜனநாயக விரோதமான போக்குகள்'' பற்றிய இந்தப் பேச்சும் இந்தத் தீர்மானங்களும் வெளிநாட்டில் இராணுவத் தளபதிகளாக நினைத்துக் கொண்டு நடத்தும் விளையாட்டின் ஊசிப்போன நாற்றம் பிடித்தவையாய் உள்ளதை உணர்வீர்கள்!

இதே போல், இந்தப் பேச்சின் மற்ருெரு மூலகாரணமான அப்பாவித்தனத்தை ஜனநாயகத்தின் அர்த்தம் பற்றிய கருத்துக் குழப்பம் வளர்த்து விடுகிறதையும் குறிப்பிட வேண்டும். வெப் தம்பதிகள் ஆங்கிலேயத் தொழிற்சங்கங்கள் பற்றி எழுதியுள்ள புத்தகத்தில் ''ஆதிநிலை ஜனநாயகம்'' என்ற தலைப்புடன் ஒரு சுவையான அத்தியாயம் உள்ளது. ஆங்கிலேயத் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களின் வாழ்வு துவங்கிய முதல் காலகட்டத்தில் ஜனநாயகத்திற்கு இன்றியமையாத அறிகுறியாக எல்லா உறுப்பினர்களும் சங்கத்தை நிர்வகிக்கும் எல்லா வேலையையும் செய்யவேண்டும் என்று கருதியதை இந்த அத்தியாயத்தில் ஆசிரியர்கள் சொல்கிருர்கள்; எல்லா உறுப்பினர்களும் வாக்களித்து எல்லாப் பிரச்சினைகளையும் முடிவு செய்வது மட்டுமல்ல, அதிகாரபூர்வமான எல்லாக் கடமைகளையும் எல்லா உறுப்பினர்களும் முறைவைத்து நிறைவேற்றிவந்தார்கள். இப்படிப்பட்ட ஜனநாயகத்தைப் பற்றிய கருத்தோட்டம் அபத்தமென்று உணரவும் ஒரு புறத்தில் பிரதிநிதித்துவமுள்ள நிறுவனங்களின் அவசியத்தையும் மறு புறத்தில் முழுநேர அலுவலகர்கள் வேண்டியதன் அவசியத்தையும் புரிந்துகொள்ளச் செய்வதற்கும் ஒரு நீண்டகால வரலாற்று அனுபவம் தொழிலாளர்களுக்குத் தேவைப்பட்டது. பல தொழிற்சங்கங்களின் கஜாஞுக்கள் திவாலாகிப்போன பிறகுதான், நன்கொடை வீதங்களையும், உதவிவீதங்களையும் வெறுமே ஜனநாயக

முறைப்படி வாக்கெடுத்து முடிவு செய்ய முடியாது, அதற்கு காப்பீடு திட்ட நிபுணர்களின் ஆலோசனையும் தேவை என்று தொழிலாளர்கள் உணரத் தலைப்பட்டனர். நாடாளுமன்ற வாதத்தைப் பற்றியும், மக்கள் சட்டமியற்றுவது பற்றியும் காவுட்ஸ்கியின் புத்தகத்தையும் எடுத்துப் பார்ப்போம். அதில் அந்த மார்க்ஸியத் தத்துவாசிரியர் எடுக்கும் முடிவுகள் ''தன்னியல்பாக'' ஒழுங்கமைத்துக் கொண்ட தொழிலாளிகள் பல வருட நடைமுறை அனுபவத்திலிருந்து கற்ற படிப்பினையோடு பொருந்துவதைப் பார்க்கிறோம். ஜனநாயகத்தைப் பற்றி ரிட்டிங்ஹவுசன் கொண்டுள்ள ஆதிநிலைக் கருத்தோட்டத்தைக் காவுட்ஸ்கி பலமாக ஆட்சேபிக்கிறார்; ''மக்கள் விரும்பிப் படிக்கும் செய்தித்தாள்களை மக்களே நேரடியாகப் பதிப்பிக்க வேண்டும்'' என்று ஜனநாயகத்தின் பேரால் கோருகிறவர்களை அவர் கேலிசெய்கிறார்; தொழிலாளி வர்க்கப் போராட்டத்திற்குச் சமூக-ஜனநாயகவாதத் தலைமைக்கு முழுநேரப் பத்திரிகையாளர்கள், நாடாளுமன்றத்தினர், முதலியவர்கள் தேவையென்றும் காட்டுகிறார். ''அராஜகவாதிகளின், இலக்கியவாதிகளின் சோஷலிசத்தை'' அவர் தாக்குகிறார். இவர்கள் ''பெயர் பண்ணுவதற்காக'' எல்லா மக்களும் நேரடியாகச் சட்டம் இயற்றுவதை ஏற்றிப் போற்றுகின்றனர், தற்காலச் சமுதாயத்தில் இக்கருத்தைச் சார்பு நிலையில் மட்டுமே செயல்படுத்த முடியும் என்பதை அறவே புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள்.

திரளான மாணவர்கள் தொழிலாளர்கள் இடையே ஜனநாயகத்தைப் பற்றிய ''ஆதிநிலை''க் கருத்தோட்டம் பரவலாக இருப்பது நம் இயக்கத்தில் நடைமுறைப் பணி புரிந்தவர்களுக்குத் தெரியும். இந்தக் கருத்தோட்டம் அமைப்புகளின் சட்டவிதிகளிலும் இலக்கியத்திலும் ஊடுருவுவதில் வியப்பில்லை. பெர்ன்ஷ்டைன் கருத்துகளின் பாற்பட்ட ''பொருளாதாரவாதிகள்'' தங்களுடைய விதிகளில் இவ்வாறு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்: ''§10. சங்க அமைப்பு முழுவதின் நலன்களைப் பாதிக்கும் எல்லா விவகாரங்களும் அதன் எல்லா உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு மூலம் முடிவு செய்யப்படவேண்டும்.'' பயங்கரவாதக் கருத்து வழிப்பட்ட ''பொருளாதாரவாதிகள்'' அவர்களைத் தொடர்ந்து திருப்பிச் சொல்வதாவது: ''கமிட்டியின் தீர்மானங்கள்

எல்லா வட்டங்களின் வாக்கெடுப்பிற்குப் பின்புதான் நடைமுறைக்கு வரவேண்டும்'' [ஸ்வபோதா, இதழ் 1, பக்கம் 67]. அமைப்பு முழுவதும் தேர்தல் அடிப்படையில் கட்டப்பட வேண்டும் என்கிற கோரிக்கையோடு கூடுதலாக விரிவாகச் செயல்படுத்தப்படும் வாக்கெடுப்பிற்கான இந்த யோசனை முன்வைக்கப்படுவதைக் கவனியுங்கள்! இதற்காக நாம் நடைமுறை ஊழியர்களைக் கண்டிக்க மாட்டோம், உண்மையான ஜனநாயக அமைப்புகளின் தத்துவம் நடைமுறை பற்றிப் பயில்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் மிகக் குறைவு. ஆனால், தலைமை வகிக்கப் பாத்தியதை கோரும் ரபோச்சியே தேலோ, இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ், விரிவான ஜனநாயகக் கோட்பாடுகள் பற்றிய தீர்மானத்தோடு தன்னை நிறுத்திக் கொள்கிற போது அது வெறுமே ஒரு ''பெயர் பண்ணும் முயற்சி'' என்று சொல்லாமல் வேறு எப்படி வர்ணிக்க முடியும்?

### ஊ. உள்ளூர் வேலையும் அனைத்து ருஷ்ய வேலையும்

இங்கே உருவரை செய்துள்ள அமைப்புத் திட்டம் ஜனநாயகத்திற்குப் புறம்பானது சதிவேலைப் போக்குள்ளது என்று எழுப்பப்பட்ட ஆட்சேபணைகள் முற்றிலும் பிசகானவை என்ற போதிலும், அடிக்கடி கிளம்பும் கேள்வி ஒன்று இருக்கத்தான் செய்கிறது, அது விரிவாகப் பரிசீலிக்கத் தக்கது. அதுதான் உள்ளூர் வேலைக்கும் அனைத்து ருஷ்ய வேலைக்கும் உள்ள உறவுகள் பற்றிய பிரச்சினை. மையப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பை உருவாக்குவதினால் ஈர்ப்பு மையம் முந்தையதிலிருந்து பிந்தையதற்கு மாறிப்போகக் கூடும், உழைப்பாளி மக்களோடுள்ள நம் தொடர்புகளைப் பலவீனப்படுத்துவதின் மூலமாகவும் பொதுவாகவே உள்ளூர்க் கிளர்ச்சியின் தொடர்ச்சியைப் பலவீனப்படுத்துவதின் மூலமாகவும் இயக்கத்தைச் சேதப்படுத்தக் கூடும் என்று பயப்படுகிறார்கள். இந்தப் பீதிக்கு நாமளிக்கும் பதில் இதுதான்: சென்ற சில வருடங்களில் நமது உள்ளூர் ஊழியர்கள் உள்ளூர் வேலையிலே மிதமிஞ்சி ஈடுபட்டிருந்ததினாலேதான் நம் இயக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது; எனவே, ஈர்ப்பு மையத்தை

ஓரளவுக்கு அனைத்து ருஷ்ய வேலைக்கு மாறச் செய்வது முற்றிலும் அவசியம்; நம் பிணைப்புகளையும் நம் உள்ளூர்க் கிளர்ச்சியின் தொடர்ச்சியையும் இது பலவீனப்படுத்துவதற்கு மாறாகப் பலப்படுத்தவே செய்யும். மையப் பத்திரிகை உள்ளூர்ப் பத்திரிகைகள் பற்றிய பிரச்சினைகளை எடுத்துக்கொள்வோம். பொதுவாகவே அளவிடவொண்ணாத முறையிலே விரிவாகவும் மேலும் வேறுபட்டதாயும் உள்ள புரட்சி நடவடிக்கையைச் சித்திரித்துக் காட்டுவதற்கான ஓர் எடுத்துக்காட்டு என்கிற முறையிலே மட்டுமே பத்திரிகைகளை வெளியிடுவதை நாம் குறிப்பிடுகிறோம் என்பதை மறக்கவேண்டாம் என்று வாசகரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரளான மக்கள் இயக்கத்தின் முதற்கால கட்டத்தில் *(1896-98)*, ரபோச்சயா கஸேத்தா எனும் அனைத்து ருஷ்யப் பத்திரிகையைப் புரட்சிகரமான உள்ளூர்த் தொழிலாளிகள் வெளியிட முயற்சி செய்தார்கள். அடுத்த காலகட்டத்தில் *(1898-1900)*, இயக்கம் மாபெரும் முன்னேற்றம் கண்டது, ஆனால் தலைவர்களின் கவனம் உள்ளூர்ப் பத்திரிகை வெளியீடுகளிலே முற்றாகச் செலுத்தப்பட்டிருந்தது. வெளியிடப்பட்ட உள்ளூர் பத்திரிகைகளின் மொத்த தொகையை நாம் கணக்கிட்டால் சராசரி ஒரு மாதத்திற்கு ஓர் இதழ் வெளியிடப்பட்டது என்று அறிவோம்.* இது நம் தேர்ச்சிநயமின்மையைத் தெளிவாகச் சித்திரிக்கவில்லையா? நம் புரட்சிகரமான அமைப்பு இயக்கத்தின் தன்னியல்பான வளர்ச்சிக்குப் பின்னடைந்திருக்கிறதை இது தெளிவாகக் காட்டவில்லையா? இதே எண்ணிக்கை உள்ள இதழ்கள் சிந்திச் சிதறி நிற்கும் உள்ளூர் குழுக்களால் வெளியிடப்பட்டதற்குப் பதிலாக ஒரேயொரு அமைப்பால் வெளியிடப்பட்டிருந்தால் நாம் மிகப் பெரிய அளவில் சிரமத்தைக் குறைத்துக் கொண்டிருப்போம் என்பது மட்டுமல்ல, அளவிட முடியாதபடி மேலும் அதிகமான உறுதிநிலையையும் தொடர்ச்சியையும் நம் வேலைக்

---

* பாரிஸ் காங்கிரஸில் வைத்த அறிக்கை,[91] பக்கம் 14 பார்க்க: ''இந்தக் காலத்திலிருந்து (1897) 1900 ஆண்டின் வசந்தகாலம் வரை பல்வேறு பத்திரிக்கைகளைச் சேர்ந்த 30 இதழ்கள் பல்வேறு இடங்களில் வெளியிடப்பட்டன.... சராசரி ஒரு மாதத்திற்கு ஓர் இதழுக்கு மேலாக வெளியிடப்பட்டது''.

குக் கிடைக்கச் செய்திருப்போம். உள்ளூர்ப் பத்திரிகைகளில் தீவிரமாகவும் அநேகமாகத் தனிமுழுக் கவனிப்புடனும் பணியாற்றும் நம் நடைமுறை ஊழியர்கள் இந்த எளிய விஷயத்தை அடிக்கடி பார்க்கத் தவறுகின்றனர் (துரதிருஷ்டவசமாக இன்றுங்கூட இது மிகமிகப் பெரும்பான்மையான வழக்குகளில் உண்மையாக இருக்கிறது); பொதுவிவகார எழுத்தாளர்களும் இந்த எளிய உண்மையை அடிக்கடி பார்க்கத் தவறுகிறார்கள், இவர்கள் இந்தப் பிரச்சினையில் திகைப்பூட்டும் கோமாளித்தனத்தைக் காட்டிக் கொள்கிறார்கள். அனைத்து ருஷ்யப் பத்திரிகை ஒன்றை ஒழுங்கமைப்பதில் ஈடுபடுவது உள்ளூர் ஊழியர்களுக்குக் ''கஷ்டம்''* என்றும், பத்திரிகைகளே இல்லாது இருப்பதைவிட உள்ளூர்ப் பத்திரிகைகள் இருப்பது மேல் என்றும் வாதிப்பதோடு நடைமுறை ஊழியர்கள் வழக்கமாகத் திருப்தியடைந்து நிற்கிறார்கள். உண்மைதான், இந்த வாதம் முற்றிலும் நியாயமானதே; நடைமுறை ஊழியர்களைப் போலவே நாமும் பொதுப்படையாக உள்ளூர்ப் பத்திரிகைகளின் மாபெரும் முக்கியத்துவத்தையும் பயனுள்ள தன்மையையும் உணர்கிறோம். ஆனால் விஷயம் இதுவல்ல. ருஷ்யா முழுவதிலும் இரண்டரை ஆண்டுகளினூடே வெளியிடப்பட்ட உள்ளூர்ப் பத்திரிக்கைகளின் முப்பது இதழ்கள் பச்சையாகக் காட்டுகிற துண்டுபட்டுள்ள நிலையையும் பக்குவமின்மையையும் நாம் வென்று ஒழிக்க முடியாதா என்பதே விஷயம். பொதுவாக உள்ளூர்ப் பத்திரிகைகளின் பயனுள்ள தன்மை பற்றிய மறுக்க முடியாத ஆனால் மிகவும் பொதுவான கூற்றுடன் நின்றுவிடாதீர்கள்; இரண்டரை ஆண்டுகளின் அனுபவம் வெளிப்படுத்தியுள்ள அவற்றின் பாதகமான அம்சங்களை மனந்திறந்து ஒப்புக்கொள்ளும் தைரியத்தைக் காட்டுங்கள். நாம் வேலை செய்து கொண்டிருக்கும் நிலைமைகளில் இந்த உள்ளூர்ப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை தம் கோட்பாடுகளில் உறுதியற்று இருப்

---

* இது கஷ்டமாகத் தோன்றுகிறதேயன்றி உண்மையிலே கஷ்டமானதல்ல. அனைத்து ருஷ்ய வேலையோடு சம்பந்தமுள்ள ஏதாவதொரு வேலையை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பற்ற நிலையில் உள்ளூர்ப் பயிற்சிவட்டம் ஒன்றுகூட இல்லை என்பதே உண்மை. ''என்னால் முடியாது என்று சொல்லாதே, நான் செய்ய மாட்டேனென்று சொல்.''

பதையும், அரசியல் முக்கியத்துவம் இல்லாதிருப்பதையும் புரட்சிச் சக்திகளைச் செலவழிப்பதில் மிக அதிகமான விலை கொடுப்பதாய் உள்ளதையும் தொழில்நுணுக்கப் பார்வையிலிருந்து பார்க்கும்போது முற்றிலும் திருப்திகரமாய் இல்லாதிருப்பதையும் (அச்சடிப்பதின் தொழில் நுணுக்கத்தைக் குறிப்பிடவில்லை; பத்திரிகை எத்தனை தடவை வெளிவருகிறது, முறையாக வெளிவருகிறதா என்பதையே குறிப்பிடுகிறேன்) இந்த அனுபவம் காட்டியுள்ளது. இந்தக் குறைபாடுகள் தற்செயலானவை அல்ல; துண்டு பட்டுள்ள நிலையின் தவிர்க்க முடியாத விளைவே இவை. ஒருபுறத்தில் இந்தத் துண்டுபட்டுள்ள நிலை நாம் விமர்சித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் உள்ளூர்ப் பத்திரிக்கைகள் பேராதிக்கம் வகிப்பதை விளக்குகிறது; மறுபுறத்தில் இந்தப் பேராதிக்கமே துண்டுபட்டுள்ள நிலைக்குத் துணைபோகிறது. ஒரு தனிப்பட்ட உள்ளூர் அமைப்பு கோட்பாடுகளில் உறுதிப்பாட்டை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் ஓர் அரசியல் பத்திரிகையின் தரத்திற்குத் தனது பத்திரிகையை உயர்த்துவது என்பது அதன் சக்திக்கு மீறிய வேலையாகும்; நம் அரசியல் வாழ்வு முழுவதையும் விளங்கச்சொல்லும் வகையில் போதிய விஷயாதாரத்தைத் திரட்டிப் பயன்படுத்துவது அதன் சக்திக்கு மீறிய வேலையாகும். உள்ளூர் ஊழியர்கள் அச்சிடுவது மலிவானது, மக்களுக்குச் செய்திகளை மேலும் முழுமையாகவும் விரைவாகவும் கொடுக்க முடியும் என்று எண்ணற்ற உள்ளூர்ப் பத்திரிகைகளின் தேவையை ஆதரித்துப் பேசியதற்காக சுதந்தரம் மிகுந்த நாடுகளில் ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறதே, இந்த வாதம் ருஷ்யாவில் உள்ளூர்ப் பத்திரிகைகளுக்குப் பாதகமாக இருப்பதை அனுபவம் காட்டியுள்ளது. புரட்சி சக்திகளைச் செலவழிக்கும் விஷயத்தில் அவை மிகவும் அளவுக்கு மிஞ்சிய வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அவை மிகவும் அரிதாகவே வெளிவருகின்றன. இதற்கான எளிய காரணம் இதுதான்: அளவில் எவ்வளவு சிறியதாக இருந்த போதிலும் ஒரு சட்டவிரோதமான பத்திரிகையை வெளியிடுவதற்கு ஒரு விரிவான இரகசியத் தளவாடம் வேண்டியிருக்கிறது, இது பெருமளவான தொழிற்சாலை உற்பத்திக்குத்தான் சாத்தியம்; ஏனெனில் இந்தத் தளவாடத்தை ஒரு சிறிய கைத்தொழிலைச் சார்ந்த பட்டறையில்

உண்டாக்க முடியாது. மிக அடிக்கடி, இரகசியத் தளவாடத்தின் நேர்த்தியின்மை (ஒவ்வொரு நடைமுறை ஊழியரும் இதற்கு எண்ணற்ற உதாரணங்கள் கொடுக்க முடியும்) இரண்டொரு இதழ்களை வெளியிட்டு வினியோகிப்பதைப் பயன்படுத்திக் கொண்டு திரளாக நபர்களைக் கைது செய்வதற்குப் போலிஸுக்கு வசதி அளிக்கிறது; இந்தத் திரளான கைதுகளின் விளைவாக அனைத்தும் முற்றுகத் துடைத்தெறியப்பட்டு மீண்டும் அடியிலிருந்து தொடங்க வேண்டிய அவசியமேற்படுகிறது. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இரகசியத் தளவாடங்களுக்குத் தொழில் முறையிலே நல்ல பயிற்சி பெற்ற புரட்சியாளர்களும் மிகவும் முரணின்றிச் செயல்படுத்தப்பட்ட உழைப்புப் பிரிவினையும் வேண்டும்; ஆனால் இவ்விரண்டு தேவைகளும் ஒரு தனிப்பட்ட உள்ளூரமைப்பின் சக்திக்கு (அந்தந்தக் குறிப்பிட்ட தருணத்தில் அது எவ்வளவு தான் பலமுள்ளதாக இருந்தபோதிலும் சரி) அப்பாற்பட்டதாகும். நமது மொத்த இயக்கத்தின் பொதுவான நலன்கள் மட்டுமல்லாமல் (முரணற்ற சோஷலிஸ்டு, அரசியல் கோட்பாடுகளில் ஊழியர்களைப் பயிற்றுவிப்பது), குறிப்பான உள்ளூர் நலன்களுக்கும் உள்ளூரைச் சாராத பத்திரிகைகள் மேலாக உதவுகின்றன. முதற்பார்வையில் இது முரண்பட்ட உண்மையாகத் தோன்றலாம்; ஆனால் மேலே சொன்ன இரண்டரை ஆண்டு அனுபவம் இதை முற்றுக நிரூபித்திருக்கிறது. பத்திரிகைகளின் முப்பது இதழ்களை வெளியிடுவதில் ஈடுபட்டிருந்த எல்லா ஊர்ச் சக்திகளும் ஒரே ஒரு பத்திரிகைக்காக வேலை செய்திருந்தால் நூறுக இல்லாவிட்டாலும் அறுபது இதழ்களையாவது எளிதாக வெளியிட்டிருக்க முடியும், அதன் விளைவாக இயக்கத்தின் குறிப்பான உள்ளூர்க் குணும்சங்களனைத்தையும் மேலும் முழுமையாக வெளிப்படுத்தியிருக்க முடியும்; இதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இப்படிப்பட்ட அமைப்பின் அளவை எட்டுவது சுளுவான விஷயமல்ல என்பது உண்மையே, என்றுலும் அது தேவை என்று நாம் உணர்ந்தாகவேண்டும். ஒவ்வொரு உள்ளூர்ப் பயிற்சிவட்டமும் அதைப் பற்றிச் சிந்தித்துத் தீர வேண்டும், அதைச் சாதிப்பதற்காகத் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும், வெளியிலிருந்து தூண்டப்படுவதற்காகக் காத்திருக்கக் கூடாது. உள்ளூர்ப் பத்திரிகை மக்களுக்கு

விருப்பமானதாய் இருக்கும், மக்களை மேலும் நெருங்கியுள்ள தாக இருக்குமே எனும்சபலத்துக்குஇடம் கொடுக்கக்கூடாது; இவை பெரும்பாலும் பிரமையே என்று நமது புரட்சி அனுப வம் புலப்படுத்தியுள்ளது.

பொது விவகார எழுத்தாளர்கள் தாங்கள் நடைமுறை ஊழியர்களோடு மிகவும் நெருங்கியுள்ளதாக நினைத்துக் கொண்டு இந்தப் பிரமையைப் பார்க்கத் தவறுகிறார்கள், நமக்கு உள்ளூர்ப் பத்திரிகைகள் இருக்கவேண்டும், நமக்கு மாவட்டப் பத்திரிகைகள் இருக்கவேண்டும், அனைத்து ருஷ்யப் பத்திரிகைகள் இருக்க வேண்டும் என்கிற திகைப் பூட்டும் பொருளாழமற்ற, மலிவான வாதம் செய்து காலந் தள்ளுகிறார்கள்; இவர்கள் நடைமுறை வேலைக்கு மோசமான சேவையே செய்கிறார்கள். பொதுவாகச் சொன்னால் இந்தப் பத்திரிகைகள் அவசியமென்பது உண்மையே; ஆனால் ஒரு ஸ்தூலமான அமைப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஈடுபடும் பொழுது நிச்சயமாகக் காலமும் சூழ்நிலைகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ''பத்திரிகை பற்றிய பிரச்சினையைக் கவனிக்கும்'' ஒரு தனிக்கட்டுரையில் ஸ்வ போதா (இதழ் 1, பக்கம் 68) பின்வருமாறு எழுதுவது கோமாளித்தனமில்லையா: ''கொஞ்சமாயினும் தொழிலாளர் களைக் கொண்டுள்ள ஒவ்வொரு உள்ளூருக்கும் சொந்தத்தில் தொழிலாளர் பத்திரிகைஇருக்க வேண்டுமென்று எங்களுக்குத் தோன்றுகிறது. எங்கிருந்தோ இறக்குமதிசெய்த பத்திரிகை அல்ல, தனக்கே சொந்தமான பத்திரிகை இருக்க வேண்டும்''. இச்சொற்களை எழுதிய பொது விவகார எழுத்தாளர் அவற்றின் பொருளைப் பற்றிச் சிந்திக்க மறுத்தால் குறைந்த பட்சம் வாசகராவது அவர் சார்பில் சிந்தித்துப் பார்க்க லாம். ருஷ்யாவில் ''கொஞ்சமாயினும் தொழிலாளர்கள் உள்ள உள்ளூர்கள்'' நூற்றுக்கணக்கில் இல்லாவிட்டாலும் எத்தனையோ உண்டே; ஒவ்வொரு உள்ளூர் அமைப்பும் தன் சொந்தப் பத்திரிகையை வெளியிட முனைந்தால் நம் தேர்ச்சிநயமற்ற வழிமுறைகள் அப்படியே நிரந்தரமாக்கப் பட்டுவிடுமே! இப்படிப்பட்ட துண்டுபட்டுள்ள நிலை புரட்சி கரமான உள்ளூர்த் தொழிலாளர்கள் தங்கள் வேலைகளைத் துவங்கிய காலத்திலேயே—''சிறிதேனும்'' முயற்சி இல்லா மலே—அவர்களைக் கைது செய்து உண்மையான புரட்சியாளர்

களாக வளர்வதினின்று தடுக்கும்படியான உளவுப் போலீ ஸின் வேலைக்கு எவ்வளவோ வசதியாயிருக்கும். மேலும் ஆசிரியர் தொடர்கிறார்: ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகையை வாசிக்கிறவனுக்குத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களின் தீச்செயல்களைப் பற்றியும், ''தன் சொந்த ஊர் அல்லாத பல்வேறு நகரங்களில் உள்ள தொழிற்சாலை வாழ்க்கை விவ ரங்களைப் பற்றியும்'' உள்ள வர்ணனைகளில் சிறிதேனும் சுவை இராது. ஆனால், ''ஒரியோல் நகரத்தில் வசிக்கிறவனுக்கு ஒரியோல் நகரத்து விவகாரங்களை வாசிப்பதில் அலுப்புத் தட்டாது. ஒவ்வொரு இதழிலும் எவரெவர் 'வெளுத்து வாங்கப்பட்டிருக்கிறார்கள்' எவரெவர் 'தோலுரிக்கப்பட்டி ருக்கிறார்கள்' என்று அறிந்து கும்மாளி போடுவான்'' (பக் கம் 69). உண்மைதான், ஒரியோல் நகர வாசகர் கும்மாளி போடுகிறார். ஆனால் நம் பொது விவகார எழுத்தாளரின் கற் பனை சஞ்சாரங்களும் சிறகடித்து மேலே மேலே போகின்றன. அற்ப விஷயங்களில் இவ்வளவு அக்கறை கொள்வது போர்த் தந்திரத்துக்குத் தகுந்ததா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். தொழிற்சாலை முறைகளைப் பற்றிய அம்பலப்படுத்தல்களின் முக்கியத்துவத்தையோ அவசியத் தையோ அங்கீகரிப்பதில் நாம் யாருக்கும் பின்வாங்குவ தில்லை, ஆனால் செயின்ட் பீட்டர்ஸ்புர்க் நகரத்தில் வெளியி டும் ரபோச்சயா மிஸ்ல் பத்திரிகையில் வரும் செயின்ட் பீட் டர்ஸ்புர்க் பற்றிய செய்திப் போக்குவரத்துகளை செயின்ட் பீட்டர்ஸ்புர்க் வாசகர் படிப்பதில் அலுப்புத்தட்டிப் போயி ருக்கும் ஒரு கட்டத்தை நாம் எட்டியிருக்கிறோம் என்று நினை வில் கொள்ளவேண்டும். உள்ளூர்த் தொழிற்சாலை சம்பந்தப் பட்ட அம்பலப்படுத்தல்களை வெளியிடுவதற்குத் துண்டுப்பிர சுரங்களே சாதனமாக எப்போதும் இருந்து வந்துள்ளன, தொடர்ந்து இருந்து வரவேண்டும்; ஆனால் பத்திரிகையின் தரத்தை நாம் உயர்த்தவேண்டுமே அல்லாமல் தொழிற்சாலைத் துண்டுபிரசுரத்தின் தரத்திற்குத் தாழ்த்தக் கூடாது. ''அற்பமான'' அம்பலப்படுத்தல்களில் ஈடுபடவேண்டும் என்று ஒரு பத்திரிகையிடம் நாம் அவ்வளவாகக் கோரவில்லை; தொழிற்சாலை வாழ்க்கையில் உள்ள முக்கியமான இனங் காட்டத்தக்க அம்பலப்படுத்தல்கள் செய்யவேண்டும், மிக மிக எடுப்பான உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட

தாயும் இயக்கத்தைச் சேர்ந்த எல்லாத் தொழிலாளர்களின், எல்லாத் தலைவர்களின் அக்கறையைத் தூண்டி எழுப்பக் கூடியதாயும், அவர்களின் அறிவை வளப்படுத்தக் கூடியதாயும் அவர்களின் பார்வையை விரிவாக்கக் கூடியதாயும் புதிய மாவட்டங்களையும் புதிய புதிய தொழில் வட்டாரங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும் தட்டி எழுப்புவதற்குத் துவக்கப் புள்ளியாகப் பயன்படுகிறதாயும் இருக்கிற அம்பலப்படுத்தல்கள் அதில் வரவேண்டும் என்று கோருகிறோம்.

''மேலும் ஓர் உள்ளூர்ப் பத்திரிகை தொழிற்சாலை நிர்வாகத்தின் தீச்செயல்கள் அனைத்தையும் மற்ற அதிகாரிகளின் தீச்செயல்கள் அனைத்தையும் உடனுக்குடன் கண்டிக்கலாம். ஆனால் தொலைவிலுள்ள ஒரு பொதுவான பத்திரிகையிடம் செய்தி போய்ச் சேர்வதற்குள் விவகாரம் நடந்த உள்ளூர்களில் மக்கள் அவற்றை மறந்துபோயிருப்பார்கள். அந்தப் பத்திரிகையை வாங்கிக்கொள்ளும் வாசகன் 'அது எப்போது நடந்தது—யாருக்கு நினைவிருக்கும்?' என்று வியப்படைவான்'' (மேலே குறிப்பிட்ட பத்திரிகை). அதுதான் விஷயம்—யாருக்கு நினைவிருக்கும்! இரண்டரை ஆண்டுகளினூடே வெளிவந்த பத்திரிகைகளின் முப்பது இதழ்கள் ஆறு நகரங்களில் இருந்து வெளிவந்தவை என்று (அதே ஸ்வபோதா, இதழ் 1, சொல்வதிலிருந்து) அறிகிறோம். சராசரி கணக்குப் போட்டால் ஒரு நகரத்திற்கு அரை ஆண்டிற்கு ஓர் இதழ் என்றுகிறது! விளையாட்டுப் புத்தியுள்ள நம் பொது விவகார எழுத்தாளர் உள்ளூர் வேலையின் உற்பத்தித் தரத்தைப் பற்றிய மதிப்பீட்டை மூன்று மடங்காகக் காட்டினாலும் (ஒரு சராசரி நகரத்தின் விஷயத்தில் இது தவறாகும், ஏனெனில் நம்முடைய ஆதிநிலையிலான எளிய வழிமுறைகளின் மூலமாக உற்பத்தித் திறத்தை ஓரளவுக்குக் கணிசமாக அதிகப்படுத்த முடியாது), நமக்குக் கிடைக்கக் கூடியதெல்லாம் இரண்டு மாதங்களுக்கு ஓர் இதழ் என்ற கணக்கில்தான்—அதாவது ''உடனுக்குடன் கண்டிக்கலாம்'' என்கிற மாதிரி ஒன்றும் கிடையாது. ஆனால் பத்து உள்ளூர் அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான பத்திரிகையை நிறுவுவதற்குத் தீவிரமாகப் பங்காற்றத் தமது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தால் போதும், தொடர்ச்சியாக வாரம் விட்டு வாரம் ருஷ்யா முழுவதற்கும் தெரியும்படி உண்மையிலேயே மிக முக்கியமான இனங்காட்டு

கிற கேடுகளை (அற்பமானவற்றையல்ல) நாம் ''அம்பலப் படுத்திக் கண்டிக்க'' முடியும். நம் அமைப்புகளிலே உள்ள நிலவரங்களை அறிந்துள்ள எவரும் இவ்விஷயத்தில் துளியேனும் சந்தேகப்பட முடியாது. எதிரியைக் கையும் களவுமாகப் பிடிப்பதைப் பொறுத்தவரை—அதை ஒரு அலங்காரமான சொற்றொடராகக் கொள்ளாமல் காரியப்பற்றுள்ள அர்த்தத்தில் கொண்டால்—அது பொதுவாகவே ஒரு சட்ட விரோதமான பத்திரிகையின் சக்திக்கு மீறிய விஷயமாகும். அதை ஒரு துண்டுப்பிரசுரந்தான் செய்ய முடியும், ஏனெனில் இப்படிப்பட்ட அம்பலப்படுத்தல்களுக்குக் காலவரம்பு அதிகபட்சமாகப் போனால் ஒன்று அல்லது இரண்டு நாளாகத்தான் இருக்க முடியும் (எடுத்துக்காட்டாக, வழக்கமான குறுகியகால வேலைநிறுத்தங்கள், பலாத்காரமான தொழிற்சாலை மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள், முதலியவை),

''தொழிலாளிகள் நகரத்திலும் வசிக்கிறார்கள், தொழிற்சாலையில் இருப்பதோடு மட்டுமல்ல'' என்று தொடர்கிறார் நம் ஆசிரியர்; குறிப்பான அம்சத்திலிருந்து பொதுவான அம்சத்திற்கு வருகிறார் அவர்; பரீஸ் கிரிச்சேவ்ஸ்கிக்கே மதிப்பளித்திருக்கக் கூடிய முறையில் கண்டிப்புள்ள நிலையுறுதியை இதில் காட்டுகிறார் நம் ஆசிரியர். மேலும், நகராட்சிக் குழுக்கள், நகராட்சி மருத்துவமனைகள், நகராட்சிப் பள்ளிக் கூடங்கள் போன்ற விவகாரங்களை அவர் குறிப்பிடுகிறார்; தொழிலாளர்களின் பத்திரிகைகள் பொதுவாக நகராட்சி விவகாரங்களைப் புறக்கணிக்கக் கூடாது என்றும் கோருகிறார். உள்ளூர்ப் பத்திரிகைகளைப் பற்றிய விவாதங்களில் தன்னளவில் நேர்த்தியான இந்தக் கோரிக்கை, அர்த்தமற்ற கருத்துப்பொருளாக மிக அடிக்கடி நின்றுவிடுவதைக் காட்டுவதற்கு மிக எடுப்பான உதாரணமாகப் பயன்படுகிறது. முதலாவதாக: ஸ்வபோதா விரும்புவதுபோல் நகராட்சி விவகாரங்களைப் பற்றி இப்படிப்பட்ட விரிவான தகவல்கள் அளித்து ''சற்றுக் கணிசமான தொகையில் தொழிலாளர்கள் உள்ள ஒவ்வொரு உள்ளூரிலும்'' உண்மையிலே பத்திரிகைகள் தோன்றினால் இது, நம் ருஷ்ய நிலைமைகளில், அற்ப விஷயங்களிலே எதார்த்தத்தில் கவனம் செலுத்தும் நிலைக்குத் தவிர்க்க முடியாதபடி இழிந்துபோகும், ஜாராட்சியின் எதேச்சாதிகார முறைக்கு எதிராகத் தொடுக்கவேண்டிய ஓர் அனைத்து

ருஷ்யப் புரட்சித் தாக்குதலின் முக்கியத்துவத்தைப் பற்றிய உணர்வைப் பலவீனப்படுத்துவதிலே கொண்டுபோய்விடும். மற்றும் இருக்கிற நகராட்சி மன்றங்களைப்[92] பற்றி ஒன்றிரண்டு பேசிவிட்டு, இல்லாத நாடாளுமன்றங்களைப் பற்றி நிறையப் பேசும் புரட்சியாளர்களைப் பற்றி சொல்லப்பட்ட ஒரு புகழ்பெற்ற குறிப்புரையின் விளைவாகப் பிரசித்தி பெற்ற போக்கின் வீரியத்தோடு வளர்ந்து வரும் முளைகளை—இவை பிடுங்கி எறியப்படவில்லை, மறைக்கப்பட்டோ தற்காலிகமாக அமுக்கப்பட்டோ இருக்கிறதாகச் சொல்லலாம்—பலப்படுத்தும். ஸ்வபோதா இது நடந்தேறுவதை விரும்பவில்லை, மாறாக இது நடந்தேறக் கூடாது என்றே விரும்புகிறது என்பது வெளிப்படை; இதை வலியுறுத்திக் காட்டத்தான் ''தவிர்க்க முடியாதபடி'' என்று சொல்கிறோம். ஆனால் நல்லெண்ணங்கள் மட்டும் இருந்தால் போதாது. நகராட்சி விவகாரங்களை அவற்றிற்குரிய முறையான வளர்திசைவழியில், நமது வேலை முழுவதுடனும் சார்புபடுத்திய நிலையில் கவனிப்பதற்கு முதலில் இந்த வளர்திசைவழி தெளிவாகக் கருத்தில் வாங்கிக் கொண்டு உறுதியாக நிலைநாட்டப்படவேண்டும்—வாதத்தினால் மட்டுமல்ல, எண்ணற்ற எடுத்துக்காட்டுகளோடுங்கூட, அப்பொழுதுதான் அது ஒரு மரபின் உறுதிநிலையைப் பெறக்கூடும். நம் விஷயத்தில் இன்னும் அது அவ்வாறில்லை. எனினும், விரிவான உள்ளூர்ப் பத்திரிகைத்துறை பற்றி நாம் சிந்திக்கவோ பேசவோ துவங்கமுடியுமுன் இதை முதலில் செய்தாகவேண்டும்.

இரண்டாவதாக, நகராட்சி விவகாரங்களைப் பற்றி உண்மையிலேயே நன்றாகவும் சுவையோடும் எழுதுவதற்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் புத்தக அறிவு இருந்தால் பயன்படாது, நேரடியான அறிவு இருந்தாக வேண்டும். ஆனால் இப்படி அறிந்து புரிந்துள்ள சமூக-ஜனநாயகவாதிகள் ருஷ்யாவில் எங்கேயும் காணக்கிடைப்பது கடினமே. நகராட்சி விவகாரங்களைப்பற்றியும் அரசாங்க விவகாரங்களைப்பற்றியும் பத்திரிகைகளில் (மக்களுக்குப் பிடித்தமான குறுநூல்களில் அல்ல) எழுதமுடிவதற்குத் திறமையுள்ள நபர்களால் திரட்டித் தயாரிக்கப்பட்ட புதிதான பல்வேறுபட்ட விஷயாதாரம் இருக்கவேண்டும். இவ்வகை விஷயாதாரத்தைத் திரட்டித் தயாரிக்க முடிவதற்கு, ஒரு ஆதிநிலை வட்டத்தின்

''ஆதிநிலை ஜனநாயகத்தை''க் காட்டிலும் (இதில் ஒவ்வொரு வனும் எல்லாவற்றையும் செய்கிறான், எல்லோரும் வாக் கெடுப்புகளை விளையாட்டாகக் கருதி ஈடுபட்டு மகிழ்ந்தார் கள்) மேலானதொன்று நமக்கு வேண்டும். தேர்ந்த எழுத் தாளர்களும் நிருபர்களும் கொண்ட பணிக்குழு ஒன்று அவசி யம், சமூக-ஜனநாயகவாத நிருபர் பட்டாளம் ஒன்று வேண்டும்—இவர்கள் பரவலாகத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள், எல்லா விதமான ''அரசு இரகசியங்களையும்'' (அவை தெரிந்திருப்பதின் காரணமாக ருஷ்ய அரசாங்க அதிகாரிக்கு மிகுந்த அகந்தை ஏற்படுகிறது, ஆனாலும் அவற்றை வெகு சுளுவாக உளறிக் கொட்டுகிறான்) இவர்கள் ஆழ்ந்தறிய முடிகிறவர்களாக இருக்க வேண்டும், ''திரைக்குப் பின்னே'' நடக்கிறவற்றை அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்—தமது ''அதிகாரபூர்வமான கடமை'' என்கிற முறையில் எங்கும் இருப்பவர்களாய் எல்லாம் அறிந் தவர்களாய் இருக்கக் கூடிய நபர்களைக் கொண்ட ஒரு பட்டாளம் அவசியம். எல்லாப் பொருளாதார, அரசியல், சமு தாய, தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் கட்சியாகிய நாம் இப்படிப்பட்ட எல்லாம் அறிந்த நபர் களைக் கொண்ட பட்டாளத்தைக் கண்டுபிடித்து, பொறுக்கிச் சேர்த்து, பயிற்றுவித்து, திரட்டியமைத்து இயங்கச் செய்ய முடியும், இயங்கச் செய்ய வேண்டும்—இவையனைத் தும் இன்னும் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மிகப் பெரும்பான்மையான உள்ளூர்களில் இத்திசையை நோக்கி ஓர் அடிகூட எடுத்துவைக்கப்படவில்லை என்பதுமட்டுமல்ல, மிக அடிக்கடி அதன் தேவையை அங்கீகரிப்பதுங்கூட இல்லை. உயிர்ப்புள்ள சுவையுள்ள கட்டுரைகள், கடிதங்கள், சிறிதும் பெரிதுமான விவகாரங்கள்—அரசுறவுத் துறை, இராணு வத்துறை, திருச்சபைத்துறை, நகராட்சித் துறை, நிதித்துறை முதலியவற்றைச் சேர்ந்த விவகாரங்கள்—பற்றிய அம் பலப்படுத்தல்கள் ஆகியவற்றை நம் சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைகளில் தேடுவது வீணான வேலை. இவ்விவகாரங் களைப் பற்றி அநேகமாக ஒன்றுமேயில்லை, அல்லது மிகவும் அற்பசொற்பமாகத்தான் உள்ளது.* எனவேதான், தொழிற்

* எனவேதான் மிகச் சிறந்த உள்ளூர்ப் பத்திரிகைகளின் எடுத்துக்காட்டுகளுங்கூட நம் கருத்தை முற்றாக உறுதிப்

சாலை, நகராட்சி மன்றம், அரசாங்கம் ஆகியவற்றின் கேடு களை அம்பலப்படுத்துவதாய், ''சற்றுக் கணிசமான தொகை யில் தொழிலாளர்கள் உள்ள ஒவ்வொரு உள்ளூரிலும்'' பத்திரிகைகள் இருக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி ''அழகான கவர்ச்சியான வார்த்தைகள் பேசும் ஒருவன் என்னை அணுகினாலே எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வருகிறது.''

மத்தியப் பத்திரிகையைவிட உள்ளூர்ப் பத்திரிகைகள் ஆதிக்க நிலையில் இருப்பது வறுமைக்கோ சொகுசுக்கோ உரிய அறிகுறியாதல் கூடும். பெருமளவான உற்பத்திக்கான சக்தி களை இன்னமும் இயக்கம் வளர்க்காமல் நிற்கும் போது, தேர்ச்சி நயமின்மையிலே தொடர்ந்து சிக்கித்தவித்து வருகிறபோது, ''தொழிற்சாலை வாழ்க்கை பற்றிய அற்ப விவரங்களில்'' அநேகமாக மூழ்கடிக்கப்பட்டிருக்கும் போது, இது வறுமைக்கு அறிகுறியே. முழுவிரிவான அம்பலப்படுத்தும் பணியையும் முழுவிரிவான கிளர்ச்சிப் பணியையும் செய்வதில் இயக்கம் முழுத் தேர்ச்சி பெற்றிருக்கும்போது மத்தியப் பத்திரிகை யோடு கூடவே எண்ணற்ற உள்ளூர்ப் பத்திரிகைகளை வெளியிடுவது அவசியமாகிறபோது இது சொகுசுக்கு அறி குறியாகும். இன்றைய ருஷ்யாவில் உள்ளூர்ப் பத்திரிகை களின் ஆதிக்கநிலை எதைக் காட்டுகிறது என்பதை அவரவர்

---

படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, யூழ்னிய் ரபோச்சிய்[93] ஒரு சிறந்த பத்திரிகை, கோட்பாடு விஷயத்தில் உறுதி யின்மை என்பது அதனிடம் துளிக்கூட இல்லை. ஆனால், அது எப்பொழுதோ ஒரு தடவை வெளிவந்து கொண்டிருப்பதா லும் விரிவான போலீஸ் கைதுகளாலும் உள்ளூர் இயக்கத் திற்கு அது கொடுக்க விரும்புவதைக் கொடுக்க முடிவதில்லை. இயக்கத்தின் அடிப்படையான பிரச்சினைகளைக் கோட்பாடு ரீதியிலே முன்வைப்பது, பரவலான அரசியல் கிளர்ச்சி— இவை நம் கட்சிக்குத் தற்சமயம் மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்றன. இவை உள்ளூர்ப் பத்திரிகையின் சக்திக்கு மிஞ்சிய வேலையென்று நிரூபிக்கப் பட்டுவிட்டது. அது (யூழ்னிய் ரபோச்சிய்) வெளியிட்டுள்ள குறிப்பான மதிப் புள்ள விஷயாதாரம்—சுரங்க முதலாளிகளின் மாநாடு, வேலை யில்லாத்திண்டாட்டம் பற்றிய கட்டுரைகள் போன்றவை உள்ளூர் விஷயமென்று கறாராகச் சொல்ல முடியாது; அவை தென் பகுதிக்கு மட்டுமின்றி ருஷ்யா முழுவதற்கும் தேவைப்பட்டது. இப்படிப்பட்ட கட்டுரைகள் நம் சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைகள் எதிலும் வெளிவந்ததில்லை.

கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். தப்பெண்ணத்திற்கு இடமளிக்கக் கூடாது என்பதற்காக எனது முடிவை நுண்ணியமாக வரையறுப்பதோடு நிறுத்திக் கொள்கிறேன். இதுவரை பெரும்பான்மையான நமது உள்ளூர் அமைப்புகள் உள்ளூர்ப் பத்திரிகைகள் சம்பந்தமாக மட்டுமே சிந்தித்து, அநேகமாகத் தம் நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வேலைக்காகத்தான் செலவழித்துள்ளன. இது ஒரு சகஜங்கெட்ட நிலை. இதற்கு நேர்மாறான நிலைமை இருந்திருக்க வேண்டும். பெரும்பான்மையான உள்ளூர் அமைப்புகள் ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகையை வெளியிடுவதைப் பற்றியே முதன்மையாகச் சிந்திக்க வேண்டும், முக்கியமாக அதற்காகவே தம் நடவடிக்கைகளைச் செலவழிக்க வேண்டும். இதைச் செய்யாதவரை, முழுவிரிவான பத்திரிகைக் கிளர்ச்சியைக் கொண்டு இயக்கத்திற்குப் பணியாற்ற ஓரளவாயினும் திறமை பெற்ற ஒரேயொரு பத்திரிகையை நம்மால் நிலைநாட்ட முடியாது. ஆனால் இதைச் செய்கிற காலத்தில் அவ்சியமான மையப் பத்திரிகைக்கும் அவசியமான உள்ளூர்ப் பத்திரிகைகளுக்கும் இடையே சகஜமான உறவுகள் தன்னியல்பாக நிலைநாட்டப்பட்டுவிடும்.

* * *

உள்ளூர் வேலையினின்று ஈர்ப்பு மையத்தை அனைத்து ருஷ்ய வேலைக்கு மாற்றுவதின் அவசியத்தைப் பற்றிய முடிவு குறிப்பாகப் பொருளாதாரப் போராட்டத் துறைக்குப் பொருந்தாது என்று முதற் பார்வைக்குத் தோன்றலாம். இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களின் உடனடியான எதிரிகள் தனித்தனி முதலாளிகளோ முதலாளிகளின் குழுக்களோ ஆவர்; நுட்பமான எல்லா விவரங்களிலுங்கூட ஒரேயொரு சித்தத்தால் நடத்தப்படும் ருஷ்ய அரசாங்கத்தின்—அரசியல் போராட்டத்தில் இது நம் உடனடியான எதிரியாகும்—சுத்தமாக இராணுவ வகைப்பட்ட கண்டிப்புடன் மையப்படுத்தப்பட்ட அமைப்பின் சாயல் சிறிதேனும் இல்லாத எந்த அமைப்பாலும் இவர்கள் கட்டுப்படுத்தப்படவில்லை.

ஆனால் விஷயம் அதுவல்ல. நாங்கள் அடிக்கடி சுட்டிக் காட்டியுள்ளபடி பொருளாதாரப் போராட்டம் தொழில் சம்பந்தப்பட்ட போராட்டமாகும்; எனவே வேலைசெய்யும் இடத்தின்படி மட்டுமல்லாமல் தொழில்களின்படியும்

தொழிலாளர்கள் ஒன்றமைக்கப்படுவது இதற்குத் தேவை. நம் முதலாளிகள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக எல்லா வகையான கம்பெனிகளிலும் சிண்டிகேட்டுகளிலும் தங்களை ஒன்றமைத்துக் கொண்டு வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகத் தொழில்களின்படி அமைப்பு வைத்துக் கொள்வதும் அவசர அவசியமாகிறது. இந்த அமைப்பு வேலைக்கு நம் துண்டுபட்ட நிலையும் நம் தேர்ச்சிநயமின்மையும் முழுக்கமுழுக்க தடையாய் உள்ளன; இந்த வேலைக்கு அனைத்து ருஷ்யத் தொழிற்சங்கங்களுக்குத் தலைமை வகித்துச் செல்லும் திறமையுள்ள புரட்சியாளர்களைக் கொண்ட ஒரேயொரு அனைத்து ருஷ்ய நிறுவனம் இருப்பது தேவையாகிறது. இந்தக் காரியத்திற்கு வேண்டிய அமைப்பின் மாதிரியை மேலே வர்ணித்தோம், இப்போது இது சம்பந்தமாக நம் பத்திரிகைத்துறைப் பிரச்சினை பற்றிச் சில வார்த்தைகள் சொல்வோம்.

ஒவ்வொரு சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைக்கும் தொழிற்சங்கப் (பொருளாதாரப்) போராட்டத்தை முழுக்கக் கவனித்துக் கொள்ளும் ஒரு தனிப் பிரிவு இருக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி யாருக்கும் ஐயமிராது. ஆனால் தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சியால் ஒரு தொழிற்சங்கப் பத்திரிகைத் துறையைப் படைப்பது பற்றி சிந்திக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறோம். என்றபோதிலும், சில அரிய விதிவிலக்குகள் போக, தற்சமயம் ருஷ்யாவில் தொழிற்சங்கப் பத்திரிகைகளைப் பற்றிய பிரச்சினைக்கே இடம் இருக்க முடியாது; அது ஒரு சொகுசுப் பொருளாகத்தான் இருக்கும், பல சமயங்களில் அன்றாடச் சோறும் இல்லாத நிலையில் நாம் இருக்கிறோம். நம் சட்டவிரோதமான பணியின் நிலைமைகளுக்கு உகந்ததாயும் தற்சமயம் ஏற்கெனவே தேவையாயுமுள்ள தொழிற்சங்கப் பிரசுரங்களின் வடிவம் தொழிற்சங்கக் குறுநூல்களே. இந்தக் குறுநூல்களில், சட்ட சம்மதமானதும்* சட்ட விரோதமானதுமான விஷயாதாரங்கள்

* இது சம்பந்தமாக சட்டபூர்வ விஷயாதாரம் குறிப்பாக முக்கியமானது; அதை முறையாகத் திரட்டிப் பயன்படுத்தும் திறமை நம்மிடம் மிகவும் குறைவாயுள்ளது. சட்டபூர்வமான விஷயாதாரத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எப்படியாவது ஒரு தொழிற்சங்கக் குறுநூலைத் தயாரித்து விட

திரட்டப்பட்டு இனவாரியாகத் தொகுக்கப்பட வேண்டும்; அதாவது, ஒரு குறிப்பிட்ட தொழிலில் உள்ள வேலை நிலைமைகள் பற்றி, இந்த அம்சத்தில் ருஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள வேற்றுமைகள் பற்றி; குறிப்பிட்ட தொழிலைச்

---

முடியும், ஆனால் சட்டவிரோதமான விஷயாதாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அதைத் தயாரிக்கமுடியாது என்று சொல்வது மிகையாயிராது. ரபோச்சயா மிஸ்ல்[94] வெளியீடுகளில் எடுத்தாளப்படுவது போன்ற பிரச்சினைகளில் தொழிலாளிகளிடமிருந்து சட்டவிரோதமான விஷயாதாரத்தைத் திரட்டுவதில் புரட்சியாளர்களின் முயற்சிகளை வெகுவாக வீணடிக்கிறோம் (இந்த வேலைப் பொறுப்பை சட்டபூர்வமான ஊழியர்கள் வெகு சுலுவாக எடுத்துக்கொள்ள முடியும்); அப்படியிருந்தும் நமக்கு நல்ல விஷயாதாரம் எப்போதும் கிடைப்பதேயில்லை. இதற்குக் காரணம்: மிக அடிக்கடி ஒரு பெரிய தொழிற்சாலையின் ஒரேயொரு பிரிவைத் தெரிந்து வைத்திருக்கும் அநேகமாக எப்போதும் பொருளாதார விளைவுகளைத் தெரிந்துவைத்திருக்கும் தொழிலாளிக்குத் தன் வேலையின் பொதுவான நிலைமைகளையும் அளவுமானங்களையும் தெரியாது; அந்நிலையில் அவன் தொழிற்சாலையின் அலுவலகப் பணியாளர்களிடம் — கண்காணிப்பாளர்கள், மருத்துவர்கள், முதலியவர்களிடம்—உள்ள அறிவைப் பெற முடியாது; இது சில்லறைச் செய்தித்தாள் ரிப்போர்ட்டுகளிலும் தனியான தொழில், மருத்துவ, ஸேம்ஸ்த்வோ வெளியீடுகளிலும் பிற வெளியீடுகளிலும் சிதறிக் கிடக்கிறது.

எனது ''முதல் சோதனை'' எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. அதை நான் திரும்பச் செய்ய விரும்பவே மாட்டேன். என்னிடம் அடிக்கடி வரும் ஒரு தொழிலாளியிடம் அவர் வேலைபார்க்கும் மாபெரும் தொழிற்சாலையிலுள்ள நிலைமைகளின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் ''விசாரிப்பதில்'' பல வாரங்கள் கழித்தேன். பெரும் முயற்சிக்குப்பின் அந்த (ஒரேயொரு!) தொழிற்சாலையைப் பற்றிய வர்ணனைக்கு வேண்டிய விஷயாதாரத்தைச் சமாளித்துப் பெற்றேன்; எனினும் பேட்டியின் முடிவில் அந்தத் தொழிலாளி நெற்றி வியர்வையைத் துடைத்து எறிந்துவிட்டுச் சிரித்தபடியே ''உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பதைவிட எனக்கு ஓவர்டைம் செய்வது சுலுவாயிருக்கிறது!'' என்று என்னிடம் சொல்வார்.

எவ்வளவுக்கெவ்வளவு அதிக ஆர்வத்துடன் நம் புரட்சிப் போராட்டத்தை நடத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ''தொழிற்சங்க'' வேலையின் ஒரு பகுதியைச் சட்டபூர்வமாக்கும்படி அரசாங்கம் கட்டாயப்படுத்தப்படும், அதன்வழியே நம் மீதுள்ள சுமை கொஞ்சம் குறையும்.

சேர்ந்த தொழிலாளிகள் முன்வைத்துள்ள முக்கியமான கோரிக்கைகள் பற்றி; அந்த தொழிலைப் பாதிக்கும் சட்டங் களின் போதாக்குறைகளைப் பற்றி; அந்தத் தொழிலைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டத்திற்குரிய சிறந்த எடுத்துக்காட்டுகள், அவர்களின் தொழிற்சங்க அமைப் பின் துவக்க நிலைகள், இன்றைய நிலை, தேவைகள் பற்றி; முதலியவாறு. முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட தொழிலைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கு மட்டும் அக்கறை உள்ளதான திரளான தொழில் விவரங்கள் நம் சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகைகள் சுமக்காதபடி இப்படிப்பட்ட குறுநூல் கள் எடுத்துக்கொள்ளும். இரண்டாவதாக, தொழிற்சங்கப் போராட்டத்தில் நமக்குக் கிடைத்த அனுபவத்தின் விளைவு களை அவை பதிவுசெய்யும், திரட்டிவைத்த விஷயாதாரங் களைப் பாதுகாத்துவரும் (இது பல துண்டுப் பிரசுரங்களிலும் துண்டுதுண்டான கடிதங்களிலும் இன்று அப்படியே மறைந்து போகின்றன), அவை அந்த விஷயாதாரங்களைச் சுருக் கித்தரும். மூன்றுவதாக, அவை கிளர்ச்சியாளர்களுக்கு வழி காட்டிகளாகப் பயன்படமுடியும்; ஏனெனில் வேலை நிலைமை கள் சார்புநிலையில் மெதுவாகவே மாறுகின்றன, ஒரு குறிப் பிட்ட தொழிலைச் சேர்ந்த தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கைகளும் மிகவும் நிலையாகவே உள்ளன (எடுத்துக் காட்டாக 1885ல்[95] மாஸ்கோ மாவட்டத்து நெசவாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் 1896ல் செயின்ட் பீட்டர்ஸ் பர்க் மாவட்டத்து நெசவாளர்கள் முன்வைத்த கோரிக்கை களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்); இப்படிப்பட்ட கோரிக்கை களையும் தேவைகளையும் தொகுத்த திரட்டு, பிற்பட்ட உள்ளூர்களிலோ பிற்பட்ட தொழிலாளர் பகுதிகளிலோ உள்ள கிளர்ச்சியாளர்களுக்குப் பொருளாதார பிரச்சினைகளில் ஒரு சிறந்த கைநூலாகப் பல ஆண்டுகளுக்குப் பயன்படக் கூடும்; ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் நடந்த வெற்றிகர மான வேலைநிறுத்தங்களின் எடுத்துக்காட்டுகள், ஓர் உள் ளூரில் உள்ள உயர்வான வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய தகவல், மேம்படுத்தப்பட்ட வேலைநிலைமைகளைப் பற்றிய தகவல் வேறுஉள்ளூர்களைச் சேர்ந்த தொழிலாளிகளை மீண்டும் மீண்டும் போராடும்படி உற்சாகப்படுத்தும். நான்காவதாக, தொழிற்சங்கப் போராட்டத்தைப் பொதுமைப்படுத்தத்

துவங்கியதுடன், இவ்வழியே ருஷ்யத் தொழிற்சங்க இயக்கத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையேயுள்ள இணைப்பைப் பலப்படுத்தியதுடன், அதே நேரத்தில் நம் தொழிற்சங்க வேலை நமது மொத்தமான சமூக-ஜனநாயகவாதப் பணியில் அளவுக்கு மிஞ்சி சிறிதான ஸ்தானத்தையோ பெரிதான ஸ்தானத்தையோ எடுத்துக்கொள்ளாதபடி சமூக-ஜனநாயகவாதிகள் பார்த்துக்கொள்வார்கள். வேறு ஊர்களில் உள்ள அமைப்புகளினின்று துண்டிக்கப்பட்டுப் போன ஓர் உள்ளூர் அமைப்பு ஒரு சரியான தகவுப்பொருத்த உணர்ச்சியை நீடித்து வைத்திருப்பது மிகவும் கஷ்டமானதாகவும் சில சமயம் அநேகமாக அசாத்தியமானதாகவும் இருக்கக் காண்கிறது(தொழிற்சங்கவாதத்தின் திசையில் எவ்வளவு அபாண்டமான மிகையுரையைக் கூறலாம் என்பதற்கு ரபோச்சயா மிஸ்ல் எடுத்துக்காட்டாக உள்ளது). ஆனால், வழி பிறழாது மார்க்ஸிய அடித்தளத்தின் மீது நிற்கும், மொத்தமான அரசியல் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கும், முழுநேரக் கிளர்ச்சியாளர் குழுவைப் பெற்றும் உள்ள புரட்சியாளர்களின் ஓர் அனைத்து ருஷ்ய அமைப்பிற்கு முறையான தகவுப் பொருத்தத்தை நிர்ணயிப்பதில் என்றைக்கும் கஷ்டமிராது.

## V

## ஓர் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகைக்கான ''திட்டம்''

''தத்துவத்தை நடைமுறையினின்று பிரித்துத் தனிமைப் படுத்துவதின் வழியாக உயிரற்ற சித்தாந்தமாக்கும்'' போக்கு நம்மிடம் உள்ளதென்று குற்றஞ்சாட்டி, ''இது சம்பந்தமாக இஸ்க்ரா செய்த மிகமோசமான தவறு அது ஒரு பொதுவான கட்சியமைப்பிற்குரிய 'திட்டம்' வைத்ததே ஆகும்'' (அதாவது, ''எங்கிருந்து தொடங்குவது?'' என்று தலைப்பிட்ட கட்டுரை) என்று பி. கிரிச்சேவ்ஸ்கி எழுதுகிறார் (ரபோச்சியே தேலோ, இதழ் 10, பக்கம் 30). ''ஒளிமிக்க முழுவடிவான கருத்துக்களோடு ஒப்புநோக்கும்போது சுவையற்றதாயுள்ள அன்றாடப் போராட்டத்தின் முன்னேற்ற

நடையின் முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்தும் இஸ்க்ரா வின் போக்கிற்கு... அது இதழ் நான்கில் உள்ள 'எங்கிருந்து தொடங்குவது?' என்று தலைப்பிட்ட கட்டுரையில் முன்வைத் துள்ள கட்சியின் அமைப்பிற்கான திட்டம் மகுடமிட்டது போல் இருக்கிறது'' (மேற்படி, பக்கம் 61) என்று கூறி மார்தீனவ் இக்கருத்தை எதிரொலிக்கிறார். கடைசியாக, இந்தத் ''திட்டத்திற்கு'' (மேற்கோள் குறிகள் ஏளனத்தைக் குறிப்பதற்காகவாம்) எதிராகக் கிளப்பும் கோபாவேசக் கூச்சலில் அண்மையில் ல. நதேழ்தின் அவர்களும் கலந்து கொண்டுள்ளார். புரட்சி நடக்கவிருக்கும் காலம் என்று தலைப்பிட்டு அவர் எழுதிய குறுநூல் சற்று முன்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. (இதை ''புரட்சி-சோஷலிஸ்டுக் குழு'' ஸ்வபோதா வெளியிட்டுள்ளது; ஸ்வபோதா ஏற்கெனவே நமக்கு அறிமுகமானதுதான்). இக்குறுநூலில் (பக்கம் 126) அவர் கூறுவதாவது: ''ஓர் அனைத்துருஷ்யப் பத்திரிகை வாயிலாகப் பிணைக்கப்பட்டிருக்கும் அமைப்பு பற்றி இப் போதுபேசுவது செயல்தொடர்பற்ற கருத்துக்களையும் செயல் தொடர்பற்ற வேலையையும் பிரச்சாரம் செய்வது என்றே பொருள்'', அது ''ஏட்டறிவுத் தனத்தைக்'' குறிக்கிறது, முதலியவாறு.

''சுவையற்ற, அன்றாடப் போராட்டத்தின் முன்னேற்ற நடையை'' ஆதரித்துப் பேசுபவர்களோடு நம் பயங்கரவாதி உடன்படக் காண்பதிலே வியப்பில்லை; ஏனெனில், அரசியல், அமைப்புத்துறை பற்றிய அத்தியாயங்களில் அவர்களிடையே உள்ள இந்தக் கருத்து நெருக்கத்திற்குரிய வேர்களைக் காட்டினோம். எனினும், தனக்குப் பிடிக்காத ஒரு கட்டுரையின் சிந்தனைப் போக்கைப் புரிந்துகொள்ள மனச்சாட்சிபூர்வமாக முயற்சித்தும் நேராக விஷயத்துக்கு பதிலளிக்கவும் முயன் றிருப்பவர் நதேழ்தின் ஒருவர்தான் என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்; ஆனால் விஷயத்தோடு பொருள் தொடர் புடையதாக எதையும் ரபோச்சியே தேலோ சொல்லவில்லை, வரிசையாக அசிங்கமான வாய்வீச்சுத் தாக்குகளைக் கொண்டு வெறுமே பிரச்சினையைக் குழப்பத்தான் முயன்றிருக்கிறது. மகிழ்ச்சியற்ற வேலையாய் இருப்பினும், முதலில் இந்த ஆகியஸ் குதிரை இலாயத்தைச்[96] சுத்தப்படுத்துவதில் நாம் கொஞ்ச நேரம் செலவழித்தாக வேண்டும்.

அ. ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையால் கோபமடைந்தவர்கள் யார்?

ரபோச்சியே தேலோ நம்மீது வீசிய வியப்பு விளிச்சொற் கள் சிலவற்றை இங்கே தருவோம். ''ஒரு கட்சியமைப்பை ஒரு பத்திரிகையால் படைக்க முடியாது, கட்சியமைப்புதான் பத்திரிகையைப் படைக்க முடியும்...'' ''ஒரு பத்திரிகை தனக் கென்று சொந்தத்தில் ஏஜெண்டுகளைக் கொண்ட குழு வைத் திருப்பதன் காரணத்தால் கட்சிக்கு மேலே நிற்கிறது, அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிற்கிறது, அதற்கு அப்பால் சுதந்தரமாக நிற்கிறது...'' ''யதார்த்தத்தில் இருந்துவரும் —தானும் சேர்ந்துள்ள—கட்சியின் சமூக-ஜனநாயகவாத அமைப்புகளை இஸ்க்ரா மறந்து போவதற்கு என்ன அதிசயம் நேர்ந்துவிட்டது?..'' ''உறுதியான கோட்பாடுகளும் ஒரு பொருத்தமான திட்டமும் வைத்திருப்பவர்கள்தான் கட்சி யின் உண்மையான போராட்டத்தைத் தலைமை நிலையிலே ஒழுங்குபடுத்துபவர்கள், அவர்கள்தான் தம் திட்டத்தை அதற்குக் கொடுக்கிறார்கள்...'' ''இத்திட்டம் நமது தீவிர மான உயிர்ச் சக்தியுள்ள அமைப்புகளை நிழல்களின் உலகத் திலே தள்ளிவிட்டு ஏஜெண்டுகளைக் கொண்ட கற்பனைப் புனை வான வலைப்பின்னலை உண்டாக்க விரும்புகிறது...'' ''இஸ்க்ரா வின் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்படுமேயானால் உருப்பெற்று வரும் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி அடையாளமே இல்லாதபடி அழிக்கப்பட்டுவிடும்...'' ''ஒரு பிரச்சாரப் பத்திரிகை நடைமுறைப் புரட்சிப் போராட் டம் முழுவதற்கும் சட்டம் போடும் ஒரு கட்டுப்பாடற்ற எதேச்சாதிகாரப் போக்குள்ள சாதனமாக ஆகிவிடுகிறது...'' ''ஒரு சுயேச்சையான ஆசிரியர் குழுவிற்குக் கட்சி முற்றாகக் கீழ்ப்படுத்தப்பட வேண்டும் என்னும் யோசனைக்கு நம் கட்சி எப்படிப் பதிலளிக்க வேண்டும்?'', மற்றும் மற்றும்.

மேலேயுள்ள மேற்கோள்களின் உள்ளடக்கத்திலிருந்தும் தொனியிலிருந்தும் ரபோச்சியே தேலோவிற்குக் கோபம் வந்திருப்பதை வாசகர் பார்க்க முடியும். தனக்காகக் கோபப் படவில்லையாம், கட்சியின் அமைப்புகளுக்காகவும் கமிட்டி களுக்காகவும் கோபப்படுகிறதாம், ஏனென்றால் இவற்றை நிழல்களின் உலகத்தில் தள்ளிவிட இஸ்க்ரா விரும்புகிறதாம்,

அடையாளமே இல்லாதபடி அவற்றை அழித்துவிட விரும்பு கிறதாம். என்ன பயங்கரம்! எனினும் ஒரு வேடிக்கையான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ''எங்கிருந்து தொடங்கு வது?'' எனும் கட்டுரை 1901 மே மாதத்தில் வெளிவந்தது. ரபோச்சியே தேலோவில் உள்ள கட்டுரைகள் 1901 செப்டம் பரில் வெளிவந்தன. இப்போது நாம் 1902 ஜனவரி மத்தியில் இருக்கிறோம். இவ்வைந்து மாதங்களில் (செப்டம்பருக்கு முன்னும் பின்னும்) கட்சியின் எந்த ஒரு கமிட்டியும் எந்த ஓர் அமைப்பும் தங்களை நிழல்களின் உலகத்தில் தள்ளிவிட முயலும் இந்த அரக்கனை எதிர்த்து முறையாகக் கண்டனம் தெரிவிக்கவில்லை; இருந்தாலும் இக்காலத்தில் இஸ்க்ராவி லும் எண்ணற்ற உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் வெளியூர்ப் பத்திரிகைகளிலுங்கூட ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலு மிருந்து வந்த நூற்றுக்கணக்கான கடிதங்கள் பிரசுரமா யுள்ளன. நிழல்களின் உலகத்தில் தள்ளப்படப்போகிறவர் கள் அதைப்பற்றி ஒன்றுந் தெரியாமலே இருக்கிறார்களே, கோபப்படவுமில்லையே, ஒரு மூன்றாம் பேர்வழிக்கல்லவா கோபம் ஏற்பட்டிருக்கிறது, அது ஏன்?

விளக்கம் இதுதான்: கமிட்டிகளும் பிற அமைப்புகளும் உண்மையான வேலையில் ஈடுபட்டிருக்கின்றன, ''ஜனநாயக'' விளையாட்டில் ஈடுபட்டிருக்கவில்லை. ''எங்கிருந்து தொடங்கு வது?'' எனும் கட்டுரையைக் கமிட்டிகள் வாசித்தன, ''எல்லா அம்சங்களில் இருந்தும் அமைப்பை உருவாக்கும் வேலையை மேற்கொள்ளும் பொருட்டு ஓர் அமைப்புக்கான உருப்படியான திட்டத்தை விரித்துரைக்கும்'' முயற்சி அது என்று பார்த்தன; அமைப்பு அவசியந்தான் என்றும் கட்டுக் கோப்பிற்குரிய திட்டம் சரியானதுதான் என்றும் நம்பிக்கை யுறுதி அடையும்வரை இந்தத் ''தரப்பினரில்'' ஒன்றாயினும் அதை ''நிர்மாணிக்க முனைவது'' பற்றிக் கனவு கூடக் காணாது என்பதை அவை நன்கு அறிந்திருந்தன, பார்த்தன; எனவே, அவை இந்த மனிதர்களின் தைரியத்தைக் கண்டு இயல்பாக வே கோபமடையத் தோன்றவில்லை, இந்த மனிதர்கள் இஸ்க்ராவில் கூறியதாவது: ''பிரச்சினை அவசரமான முக்கியத் துவம் பெற்றுள்ளதை உத்தேசித்து எங்களைப் பொறுத்த வரை தோழர்களிடம் ஒரு எலும்புக்கூடு போன்ற ஆதாரத் திட்டத்தை வைக்கிறோம், அச்சேற்றுவதற்காகத் தயாராகிக்

கொண்டிருக்கும் ஒரு குறுநூலில் இத்திட்டம் மேலும் மிக விரிவாக வளர்க்கப்பட இருக்கிறது.'' தம்முன் வைக்கப்பட்ட திட்டத்தைத் தோழர்கள் ஏற்றுக் கொள்வார்களே யானல் அவர்கள் அதை நிறைவேற்றி வைப்பார்கள்—''கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்கள்'' என்பதனுலல்ல, நம் பொது இலட்சியத்திற்கு அது அவசியம் என்று உறுதியான நம்பிக்கை பெற்ருர்கள் என்பதால்தான். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றுல் அப்பொழுது அந்த ''எலும்புக்கூடு'' (இது ஒரு பகட்டான சொல், இல்லையா?) வெறும் எலும்புக்கூடாகவே இருந்துவிடும்; வேலைபால் மனச்சாட்சிப் பற்றுள்ள கண்ணுேட்டத்தோடு விவகாரங்களை இப்படித்தான் பார்க்க முடியுமே அல்லாது வேறு மாதிரி பார்ப்பது சாத்தியமா? அதை ''நொறுக்கிவிட்டு'' தோழர்களிடம் அதை நிராகரிக்கும் படி அறிவுரை கூறுவதோடு மட்டுமின்றி புரட்சி பற்றிய விவகாரங்களில் அனுபவமில்லாத நபர்களை அத்திட்டத்தின் ஆசிரியர்களுக்கு எதிராக—அவர்கள் ''சட்டம் செய்யவும்'' ''தலைமை நிலையிலே ஒழுங்குபடுத்துபவர்களாக'' முன்வரவும் துணிவுகொண்டு இருக்கிருர்கள் என்கிற ஒரே காரணத்திற்காக, அதாவது ஒரு திட்டத்தின் உருவரையை முன்வைக்கும் துணிவு கொண்டிருக்கிருர்கள் என்பதற்காக — தூண்டிவிடுவதன் மூலமாகவும் இந்த எலும்புக்கூடு போன்ற ஆதாரத் திட்டத்தை எதிர்த்துப் போரிடுவது வாய்வீச்சல்லவா?? உள்ளூர் ஊழியர்களை மேலும் விரிவான கருத்துக்கள், பணிகள், திட்டங்கள் முதலியவற்றிற்கு உயர்த்தும் முயற்சியை, இந்த கருத்துக்கள் பிசகானவை என்று சொல்வதின் அடிப்படையில் மட்டுமல்லாமல், நம்மை ''உயர்த்திக் கொள்வதற்கான'' ''விருப்பமே'' ''கோபமூட்டுவதாயிருக்கிறது'' என்கிற அடிப்படையிலும் அம்முயற்சியை ஆட்சேபித்தால் நம் கட்சி வளரவும் முன்னேறவும் முடியுமா? நதேழ்தினும் கூட நம் திட்டத்தை ''நொறுக்கி விட்டார்,'' ஆனுல் இவ்வாய்வீச்சிற்குக் காரணம் வெகுளித்தனம் அல்லது அரசியல் கருத்துக்களின் பக்குவமின்மை என்று விளக்க முடியும்; அதற்கு மேலாக அவரது வாய்வீச்சு போகவில்லை. ''கட்சியின்மீது ஒரு கண்காணிப்பு முறையை'' நாம் நிலைநாட்ட நினைக்கிருேம் என்கிற குற்றச்சாட்டை அவர் முதலிலிருந்தே அழுத்தந்திருத்தமாக நிராகரித்தார். எனவேதான், திட்டத்தைப்

பற்றி நதேழ்தினுடைய விமர்சனத்திற்கு அதன் தகுதிகளை வைத்துப் பதிலளிக்க முடியும், பதிலளிக்கவும் வேண்டும். ஆனால், ரபோச்சியே தேலோ இகழ்ச்சியுடன் புறக்கணிக்கப் படவே தகும்.

எனினும், ''எதேச்சாதிகாரம்'' பற்றியும் ''கீழ்ப்படுத்துவது'' பற்றியும் கூச்சலிடும் அளவிற்குத் தாழ்ந்து விடுகிற எழுத்தாளன்பால் இகழ்ச்சி உண்டாகிறது என்பதனால் அப்படிப்பட்ட நபர்கள் தங்கள் வாசகர்களின் மனத்திலே உண்டாக்கும் குழப்பத்தைச் சிக்கறுத்து விளக்கும் கடமையிலிருந்து நாம் விடுவித்துக் கொள்ளலாகாது. ''அகன்ற ஜனநாயகம்'' போன்ற கவர்ச்சிச் சொற்களின் இயல்பை இங்கே எல்லோருக்கும் புட்டுக் காட்டலாம். கமிட்டிகளை மறக்கிறோம், அவற்றை நிழல்களின் உலகத்தில் தள்ளிவிட விரும்புகிறோம் என்றெல்லாம் குற்றம் சாட்டப்படுகிறோம். இரகசிய நிலையை உத்தேசித்து கமிட்டிகளோடு உள்ள நம் உண்மையான உறவுமுறைகளைப் பற்றி வாசகருக்கு அநேகமாக எந்த விஷயமும் நாம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் போது இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாம் எப்படிப் பதிலளிக்க முடியும்? மக்களை ஆத்திரமூட்டிவிடும் நோக்குடன் ஆவேசமிக்க குற்றச்சாட்டுகளை வீசும் நபர்கள் நம்மைவிட முன்னேறியவர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள்; இதற்குக் காரணம் அவர்களின் நாணமில்லாத் துணிவும், மற்றும் ஒரு புரட்சியாளன் தான் வைத்துக் கொண்டிருக்கிற, தான் நிலைநாட்டி வருகிற அல்லது நிலைநாட்ட முயன்று வருகிற உறவுமுறைகளையும் தொடர்புகளையும் உலகத்தின் கண்ணில் படாதபடி எச்சரிக்கையோடு மறைத்து வைக்க வேண்டிய கடமையை அவர்கள் புறக்கணிப்பதுந்தான். இயல்பாகவே, ''ஜனநாயகவாத'' விஷயத்தில் இப்படிப்பட்ட நபர்களோடு போட்டியிட அறவே மறுக்கிறோம். எல்லாக் கட்சி விவகாரங்களையும் அறியாதிருக்கும் வாசகரைப் பொறுத்தவரை அவர்பால் நம் கடமையைச் செய்வதற்குள்ள ஒரே வழி, எது இருக்கிறது எது im Werden* என்று தெரிவிப்பதற்குப் பதிலாக நடந்து போனதை, சென்றகால விஷயத்தைப் பற்றிச் சொல்லக் கூடியதான ஒரு துளியை எடுத்துச் சொல்வது தான்.

---

* தோன்றி வளரும் போக்கில் இருக்கிறது.—(ப-ர்.)

நாம் ''மோசக்காரர்கள்'' என்று புந்த் சூசகமாகக் குறிப்பிடுகிறது;* அடையாளம் இல்லாதபடி கட்சியை அழிக்க முயல்வதாக வெளிநாட்டிலுள்ள ''சங்கம்'' நம்மைக் குற்றஞ்சாட்டுகிறது. பெருமான்களே, சென்ற காலத்தைப் பற்றிய நான்கு உண்மைகளை நாங்கள் பொது மக்களிடம் சொல்லும் பொழுது நீங்கள் முற்றுக மனநிறைவு பெறுவீர்கள்.

முதல் உண்மை.** ''போராட்டச் சங்கங்களின்'' ஒன்றின் உறுப்பினர்கள்—இவர்கள் நம் கட்சியை நிறுவுவதிலும் துவக்கக் கட்சிக் காங்கிரஸுக்கு ஒரு பிரதிநிதியை அனுப்புவதிலும் நேரடியாகப் பங்கு கொண்டவர்கள்—இஸ்க்ரா குழுவைச் சேர்ந்த ஓர் உறுப்பினருடன் இயக்க முழுவதற்கும் பயன்படக் கூடியதாய் தொழிலாளர்களுக்கு வரிசையாக நூல்களை வெளியிடுவது பற்றி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்த நூல் வரிசையை வெளியிடும் முயற்சி தோற்றது; அதற்காக எழுதப் பெற்ற குறுநூல்களான ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகளின் பணிகள், புதிய தொழிற்சாலைச் சட்டம் ஆகியவை ஒரு சுற்று வழியிலே மூன்றாந் தரப்பினரின் மூலமாக வெளிநாட்டிற்குப் போய் அங்கே பிரசுரமாயின.

இரண்டாவது உண்மை. புந்த் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர்கள் இஸ்க்ரா குழுவைச் சேர்ந்த ஓர் உறுப்பினரை அணுகி ''இலக்கிய ஆய்வுக்கூடம்'' என்று புந்த் வர்ணித்த ஒன்றை அமைக்கலாம் என்று யோசனை வைத்தார்கள். இந்த யோசனையை வைக்கையில் இதைச் செய்யாவிட்டால் இயக்கம் வெகுதூரம் பின்னடையும் என்று சொன்னார்கள். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாகத்தான் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க இலட்சியம்*** எனும் சிறுநூல் வெளிவந்தது.

---

* இஸ்க்ரா, இதழ் 8. தேசியப் பிரச்சினை பற்றிய நமது கட்டுரைக்கு ருஷ்யா, போலந்து நாடுகளைச் சேர்ந்த பொது யூதர் சங்கத்தின் மத்தியக் குழுவின் பதில்.

** வேண்டுமென்றே இந்த உண்மைகளை அவை நடந்தேறிய கால வரிசையில் சொல்லாமல் விடுகிறோம்.[97]

*** வெளிநாட்டுச் சங்கத்தின் வெளியீடுகள் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவால் பதிப்பிக்கப்படுகின்றன எனும் அனுமானத்தின் பேரில் தமது முந்தையக் குறுநூல்கள் போல் இதுவும் வெளிநாட்டுச் ''சங்கத்திற்கு'' அனுப்பப்பட்

மூன்ருவது உண்மை. புந்த் சங்கத்தின் மத்தியக்குழு, ஒரு மாநிலத்து ஊர் வழியாக இஸ்க்ரா குழுவைச் சேர்ந்த ஓர் உறுப்பினரை அணுகி மீண்டும் தொடங்கவிருக்கும் ரபோச்சயா கஸேத்தா பத்திரிகைக்கு ஆசிரியர் பொறுப்பேற்கும் படி யோசனை வைத்து, அவரது ஒப்புதலையும் பெற்றது. பின்னுல் இந்த யோசனை திருத்தப்பட்டது; சம்பந்தப்பட்ட தோழர் விஷயாதானம் அளிப்பவராக இருக்கும்படி அழைக்கப் பட்டார். ஏனெனில் ஆசிரியர் குழு உறுப்பினர் அமைப்பிற்கு ஒரு புதிய திட்டம் உண்டாகி விட்டதாம். இந்த யோசனையையும்அவர்ஏற்றுக்கொண்டார்.பின்வரும் கட்டுரைகள் அனுப்பப்பட்டன (இவற்றை நாங்கள் பாதுகாத்து வைத்தோம்): ''நம் வேலைத் திட்டம்'', இது பெர்ன்ஷ்டைன் வாதத்திற்கு எதிரான நேரடியான கண்டனமும், சட்டபூர்வமான இலக்கியத்தின் கொள்கையிலும் ரபோச்சயா மிஸ்ல் பத்திரிகையின் கொள்கையிலும் ஏற்பட்ட மாற்றத்தை எதிர்க்கும் நேரடியான கண்டனமும் ஆகும்; ''நம் உடனடிப் பணி'' (''ஒரு கட்சிப் பத்திரிகையைப் பிரசுரிப்பது, அது ஒழுங்காக வெளிவர வேண்டும், அது எல்லா உள்ளூர்க் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்புகள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்'';நடப்பிலுள்ள ''தேர்ச்சிநயமின்மையின்'' குறைபாடுகள்); ''ஓர் அவசரப் பிரச்சினை'' (ஒரு பொதுப் பத்திரிகை வெளியிடுவதை மேற்கொள்ளுமுன் உள்ளூர்க் குழுக்களின் நடவடிக்கைகளை முதலில் வளர்ப்பது அவசியம் எனும் ஆட்சேபணை பற்றிய பரிசீலனை; ''ஒரு புரட்சி அமைப்பின்'' தலையாய முக்கியத்துவத்தையும் நிறைநேர்த்திமிக்க அளவிலே அமைப்பையும் கட்டுப்பாட்டையும் இரகசிய நிலையை வைத்திருக்கும் கலைநுணுக்கத்தையும் வளர்ப்பதின் அவசியத்தையும் வலியுறுத்தல்). ரபோச்சயா கஸேத்தாவை மீண்டும் வெளியிடும் யோசனை நிறைவேற்றப் படவில்லை, கட்டுரைகளும் பிரசுரிக்கப் படவில்லை.

---

டது (சில சூழ்நிலைகளின் காரணமாக அன்று—1899 பிப்ரவரியில்—ஆசிரியர் ஸ்தானத்தில் ஏற்பட்ட மாற்றம் தமக்குத் தெரியமுடியாமற் போயிற்று) என்று கூறுமாறு ஆசிரியர் என்னைக் கேட்டுக் கொள்கிருர். அக்குறுநூலை லீக்[98] விரைவிலே மீண்டும் வெளியிடும்.

நான்காவது உண்மை. நம் கட்சியின் முறையான இரண்டாவது காங்கிரஸைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த கமிட்டியின் ஓர் உறுப்பினர் இஸ்க்ரா குழுவைச் சேர்ந்த ஓர் உறுப்பினரிடம் காங்கிரஸின் வேலைத்திட்டத்தைத் தெரியப்படுத்தி அந்த இஸ்க்ரா குழு மீண்டும் துவங்கப்படும் ரபோச்சயா கஸேத்தாவின் ஆசிரியர் குழுவாக இருக்க வேண்டுமென்று யோசனை வைத்தார். இந்தப் பூர்வாங்க நடவடிக்கையை இந்த உறுப்பினர் அங்கம் வகித்த கமிட்டி பின்னால் ஏற்று உறுதிப்படுத்தியது, புந்த் சங்கத்தின் மத்தியக் குழுவும் அவ்வாறே செய்தது. இஸ்க்ரா குழுவிற்குக் காங்கிரஸ் நடக்கப்போகிற இடமும் நேரமும் தெரிவிக்கப்பட்டது; அது (சில காரணங்களுக்காக ஒரு பிரதிநிதியை அனுப்ப இயலுமா என்பதில் உறுதிப்பாடு இல்லாத நிலையில்) காங்கிரஸுக்கு எழுத்து வடிவில் ரிப்போர்ட்டு ஒன்று தயாரித்தது. அந்த ரிப்போர்ட்டில் ஒழுங்கின்மை முற்றாக நிலவுகிற நேரத்தில் ஒரு மத்தியக் கமிட்டித் தேர்வு ஒற்றுமைப்படுத்தும் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிடும் என்பது மட்டுமல்ல, ஆரம்பத்திலேயே விரைவாகவும் முற்றாகவும் நசுக்கப்பட்டுவிட நேர்ந்தால் (இரகசியமின்மை நிலவுகிற நிலைமையில் இது நிச்சயமாகச் சாத்தியமே) ஒரு கட்சியை நிறுவுவது என்கிற மகத்தான கருத்தையுங்கூடக் கெடுத்துவிடும் எனும் கருத்து கூறப்பட்டது; எனவே மீண்டும் துவக்கப்பட்டுள்ள பத்திரிகையை ஆதரிக்குமாறு எல்லாக் கமிட்டிகளையும் மற்றெல்லா அமைப்புகளையும் அழைப்பதிலிருந்து தொடங்கவேண்டும், அந்தப் பத்திரிகை எல்லாக் கமிட்டிகளிடையேயும் உண்மையான தொடர்புகளை நிலைநாட்டுவதாய் இருக்கும், இயக்கம் முழுவதற்கும் வேண்டிய தலைவர்களின் குழுவை உண்மையிலே பயிற்றுவிப்பதாயும் இருக்கும் என்கிற கருத்தும் கூறப்பட்டது; மேலும் அப்படிப்பட்ட குழு வளர்ந்து பலப்பட்டவுடன் அதைக் கமிட்டிகளும் கட்சியும் வெகு சுலுவாக ஒரு மத்தியக் குழுவாக உருவாக்க முடியும். எனினும், பல போலீஸ் சோதனைகளும் கைதுகளும் ஏற்பட்டதின் விளைவாகக் கட்சிக் காங்கிரஸ் நடக்க முடியவில்லை. காபந்து சம்பந்தப்பட்ட காரணங்களுங்காக ரிப்போர்ட் அழிக்கப்பட்டது, ஒரு கமிட்டியின் பிரதிநிதிகள் உட்பட சில தோழர்கள் மட்டுமே அதைப் படித்திருந்தார்கள்.

நாங்கள் மோசக்காரர்கள் என்று சூசகமாகக் குறிப்பிடுவதில் புந்த் சங்கம் கையாண்ட வழிமுறைகளின் தன்மை பற்றியும், நாம் கமிட்டிகளை நிழல்களின் உலகத்திலே தள்ளிவிட முயல்கிறோம் என்றும் கட்சியின் அமைப்பிற்குப் ''பதிலாக'' ஒரேயொரு பத்திரிகை எடுத்தியம்பும் கருத்துக்களைப் பரப்பும் ஓர் அமைப்பை வைத்திட முயல்கிறோம் என்றும் நம்மைக் குற்றஞ் சாட்டுகிற ரபோச்சியே தேலோ கையாண்ட வழிமுறைகளின் தன்மைபற்றியும் இப்போது வாசகரே தீர்மானித்துக் கொள்ளட்டும். கமிட்டிகள் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டதின் பேரில்தான், ஒருமுகப்படுத்திய நடவடிக்கைகளுக்காக ஓர் உருப்படியான திட்டத்தை ஏற்று நடத்துவதின் அவசியத்தைப் பற்றி அக்கமிட்டிகளுக்கு ரிப்போர்ட்டு செய்தோம். கட்சி அமைப்புக்காகத்தான் இத்திட்டத்தை உருவாக்கி விளக்கம் செய்தோம்; ரபோச்சயா கஸேத்தாவிற்கு அனுப்பிய கட்டுரைகளிலும் கட்சிக் காங்கிரஸுக்கு வைத்த ரிப்போர்ட்டிலும் அதை விளக்கினோம்; இதிலுங்கூட ரபோச்சயா கஸேத்தாவை (நடைமுறையில்) மீண்டும் துவக்கியதில் முன்முயற்சி எடுத்துக்கொள்ளும் அளவிற்கு கட்சியில் செல்வாக்கு வகித்திருந்த நபர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில்தான் அதைச் செய்தோம். கட்சி அமைப்பு நம்முடன் சேர்ந்து அதிகார பூர்வமாகக் கட்சியின் மத்தியப் பத்திரிகையை மீண்டும் துவக்க இரு தடவை முயற்சித்துத் தோற்ற பிறகுதான், ஓர் அதிகாரபூர்வமற்ற பத்திரிகையை வெளியிடுவது நம் நேரடிக் கடமை என்று கருதினோம். ஏனென்றால் மூன்றாம் முயற்சி செய்யும் போது தோழர்களின் முன்னே வெறுமே கற்பிதமான யோசனைகள் வைப்பதற்குப் பதிலாக அனுபவத்தின் விளைவுகள் அவர்கள் எதிரே காணட்டும் என்பதே இதன் நோக்கம். இப்போது இந்த அனுபவத்தின் சில விளைவுகள் எல்லோரும் பார்க்கும்படியாகத் தெரிகின்றன; எங்கள் கடமைகளை முறையாகப் புரிந்து கொண்டிருந்தோமா என்பதைப் பற்றி எல்லாத் தோழர்களும் இப்போது தீர்மானிக்கக் கூடும்; சில நபர்கள் ''தேசியப்'' பிரச்சினையில் முரண்பட்ட நிலை வகித்ததை நாங்கள் சுட்டிக் காட்டியதற்காகவும் வேறு சிலர் கோட்பாடு விஷயங்களில் ஊசலாடுவது அனுமதிக்க ஒண்ணாதது என்று சுட்டிக்காட்டியதற்காகவும் கோபதாபம் அடைந்து அந்த ஒரே காரணத்திற்காக அவர்

கள் மிகச் சமீப காலத்தில் நடந்தவற்றை அறியாதவர்களைத் தவறான வழியில் செலுத்த முயல்கிறார்களே, இந்த நபர்களைப் பற்றி என்ன நினைப்பது என்று எல்லாத் தோழர்களும் இப்போது தீர்மானித்துக் கொள்ளலாம்.

### ஆ. கூட்டு அமைப்பாளராக ஒரு பத்திரிகை இருக்க முடியுமா?

''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் கட்டுரையின் சாராம்சம் இதுதான்: இந்தப் பிரச்சினையைத்தான் அது விவாதித்து ''இருக்க முடியும்'' என்று பதிலளிக்கிறது. நாம் அறிந்தவரை இந்தப் பிரச்சினையை அதன் தகுதிகளை வைத்துப் பரிசீலிக்கவும், ''இருக்க முடியாது'' என்றுதான் பதிலளித்தாக வேண்டும் என்று நிரூபிக்கவும் முயன்றவர் ல. நதேஷ்தின் ஒருவரே ஆவார்.

அவரது வாதம் முழுவதையும் கீழே தருகிறோம்.

''...ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகையின் தேவையைப் பற்றிய பிரச்சினையை இஸ்க்ரா (இதழ் 4) முன் வைத்தது எங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது. ஆனால் இந்த முன் வைப்பு 'எங்கிருந்து தொடங்குவது?' எனும் தலைப்போடு பொருந்துவதாக நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. இது மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை; புரட்சிகரமான காலத்தில் ஒரு செயல்துடிப்புள்ள அமைப்பிற்கு அடித்தளமாக ஒரு பத்திரிகையோ, எளிதாகப் புரியக் கூடிய துண்டுப்பிரசுரத் தொடர்களோ, மலையாகக் குவித்த அறிக்கைகளோ பயன்பட முடியாது. பலமான அரசியல் அமைப்புகளை உள்ளூர்களில் கட்டுவதற்கு நாம் வேலையில் இறங்கவேண்டும். அப்படிப்பட்ட அமைப்புகள் நம்மிடம் இல்லை; அறிவொளி பெற்ற தொழிலாளர் இடையேதான் நாம் முக்கியமாக வேலை செய்து கொண்டிருந்தோம், அதே நேரத்தில் அநேகமாக முற்றாகப் பொருளாதாரப் போராட்டத்திலே மக்கள் ஈடுபட்டிருந்தார்கள். உள்ளூரிலே **பலமான அரசியல் அமைப்புகளைப் பயிற்றுவிக்காவிட்டால், மிகச் சிறந்த முறையிலே ஒழுங்கமைத்த ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகைக்குங் கூட என்ன முக்கியத்துவம் இருக்கும்?** யாரையும் சுடாமல், பயனும் அளிக்காமல் எரியும் புதர்போல் இருக்கும் அது! அதைச் சூழ்ந்தும் அதன் சார்பாக எடுக்கும் நடவடிக்கைகளிலும் மக்கள் திரளுவார்கள், ஒழுங்கமைத்துக் கொள்வார்கள் என்று இஸ்க்ரா நினைக்கிறது. ஆனால்,

அதைவிட ஸ்தூலமான நடவடிக்கைகளைச் சூழ்ந்து ஒன்றுகூடு வதும் ஒழுங்கமைத்துக் கொள்வதும் எவ்வளவோ சுலபமாக இருப்பதை மக்கள் காண்பார்கள்! உள்ளூர்ப் பத்திரிகைகளை விரிவாக அமைப்பது, ஆர்ப்பாட்டங்களுக்காகத் தொழிலாளர் அணிகளை உடனடியாகத் தயாரிப்பது, உள்ளூர் அமைப்புகள் வேலை இல்லாதோர் இடையே இடையறாது வேலை செய்தல் (குறுநூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் அயராது வினியோகித்தல், கூட்டங்கள் நடத்துதல், அரசாங்கத்தை எதிர்த்துக் கண்டிக்கும் நடவடிக்கைகளுக்கு வேண்டுகோள் விடுவது, முதலியவை) மேலும் ஸ்தூலமானதொன்றாக இவை தாம் இருக்கக் கூடும், இருக்கவும் வேண்டும். உயிர்ப்புள்ள அரசியல் வேலையை உள்ளூர்களில் நாம் துவக்க வேண்டும், இந்த உண்மையான அடிப்படையில் ஒன்றுபட நேரம் வரும் போது அது செயற்கையான, ஏட்டளவில் நிற்கும் ஒற்றுமையாய் இராது; உள்ளூர் வேலையை ஓர் அனைத்து ருஷ்ய இலட்சியப் பணியாக ஒன்றுபடுத்துவதைப் பத்திரிகைகளைக் கொண்டு சாதிக்க முடியாது!'' (புரட்சி நடக்கவிருக்கும் காலம், பக்கம் 54).

இந்தச் சொற்பெருக்குமிக்க கண்டன உரையில் சில பகுதிகளை வலியுறுத்திக் காட்டியுள்ளோம். நம் திட்டத்தைப் பற்றி ஆசிரியர் கொண்டுள்ள தவறான மதிப்பீட்டை அவை தெளிவாகக் காட்டுகின்றன; இஸ்க்ராவின் நோக்கு நிலைக்கு எதிர்முகமாக இங்கே ஆசிரியர் வைத்துள்ள தம் பொதுவான நோக்குநிலையும் தவறு என்று அவை புலப்படுத்துகின்றன. உள்ளூர்களில் நாம் பலமான அரசியல் அமைப்புக்களைப் பயிற்றுவிக்காவிட்டால் சிறப்புமிக்க முறையிலே ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்து ருஷ்யப் பத்திரிக்கையும் பயனற்றுவிடும். இதை மறுக்க முடியாது. எனினும், ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிக்கை மூலமாக பலமான அரசியல் அமைப்புகளுக்குப் பயிற்சி அளிப்பது ஒன்றுதான் வழி, வேறு வழி கிடையாது என்பதே விஷயம். இஸ்க்ரா ''தன் திட்டத்தை'' விரித்துரைக்க முற்படுமுன் அளித்த மிக முக்கியமான கூற்றை ஆசிரியர் பார்க்கத் தவறிவிட்டார்: அதாவது, ''எல்லாச் சக்திகளையும் ஒன்றுதிரட்டும் திறமையும், பெயரளவில் மட்டுமின்றி நடைமுறையில் இயக்கத்தை வழிகாட்டிச் செலுத்தும் திறமையும் உள்ள ஒரு புரட்சிகரமான அமைப்பு—அதாவது, ''எந்த நேரத்திலும் ஒவ்வொரு கண்டனத்தையும் ஒவ்வொரு கலகத்தையும் ஆதரிக்கத் தயா

ராயுள்ளதாயும், முடிவான போராட்டத்துக்குத் தக்க முறையிலே போராட்டச் சக்திகளைத் திரட்டியமைக்கவும் கெட்டிப்படுத்தவும் அவற்றைப் பயன்படுத்தக் கூடியதாயும் உள்ள ஓர் அமைப்பு—உருவாக்கப்பட வேண்டும் என்று அறைகூவல் விடுப்பது'' அவசியம். எனினும் பிப்ரவரி மார்ச்சு மாத நிகழ்ச்சிகளுக்குப் பின் இன்று இதைக் கோட்பாடு ரீதியில் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று இஸ்க்ரா மேலும் தொடர்கிறது. ஆனால் இங்கே நமக்கு வேண்டுவது பிரச்சினைக்குக் கோட்பாடு ரீதியான தீர்வு அல்ல, நடைமுறை வகைப்பட்ட தீர்வுதான்; நாம் உடனடியாக ஒரு திட்டவட்டமான, ஆக்கபூர்வமான திட்டத்தை முன்வைக்க வேண்டும், அதன் மூலம் எல்லோரும் எல்லாப் பக்கங்களில் இருந்தும் உடனடியாக நிர்மாணிக்கும் வேலையில் இறங்கலாம். இன்று இந்த நடைமுறைவகைப்பட்ட தீர்விலிருந்து மீண்டும் அப்பால் இழுத்துச் செல்லப்படுகிறோம்; கோட்பாடு வகையிலே சரியானதாயும் மறுக்க முடியாததாயும் மகத்தானதாயும் இருந்தபோதிலும் அறவே போதாததாயும், திரளான தொழிலாளர்களுக்குப் புரியாததாயும் உள்ள ஒன்றை நோக்கி—அதாவது ''பலமான அரசியல் அமைப்புகளைப் பயிற்றுவித்து வளர்ப்பது'' என்பதை நோக்கி—நாம் இழுத்துச் செல்லப் படுகிறோம்! சர்ச்சையிருக்கும் விஷயம் இதுவல்ல, மதிப்புமிக்க ஆசிரியரே! எப்படிப் பயிற்றிவளர்க்கத் தொடங்குவது, எப்படி அதைச் செய்துமுடிப்பது என்பதே விஷயம்.

''அறிவொளி பெற்ற தொழிலாளரிடையேதான் நாம் முக்கியமாக வேலை செய்து கொண்டிருந்தோம், அதே நேரத்தில் அநேகமாக முற்றுகப் பொருளாதாரப் போராட்டத்திலே மக்கள் ஈடுபட்டிருந்தார்கள்'' என்று சொல்வது உண்மையல்ல. இந்த வடிவத்திலே ஆய்வுரையை முன்வைத்தால், அறிவொளி பெற்ற தொழிலாளர்களை ''மக்களுக்கு'' எதிராக நிறுத்தி ஸ்வபோதா வழக்கமாகவும் அடிப்படையாகவே பொய்யாகவும் காட்டுகிற நிலைக்கு அது தாழ்ந்துவிடுகிறது. அண்மை ஆண்டுகளில், அறிவொளி பெற்ற தொழிலாளிகளுங்கூட ''அநேகமாக முற்றுகப் பொருளாதாரப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தார்கள்.'' இது முதல் விஷயம். மறுபுறத்தில், அரசியல் போராட்டத்துக்கு அறிவொளி பெற்ற தொழிலாளர்களிடையேயிருந்தும் அறிவுஜீவி

களிடமிருந்தும் தலைவர்களைப் பயிற்றுவிக்க நாம் உதவாத வரை மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்த என்றைக்கும் கற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் நம் அரசியல் வாழ்க்கையின் எல்லா அன்றாட அம்சங்களையும், பல்வேறு வர்க்கங்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கண்டனம் தெரிவிக்கவும் போராடவும் செய்கிற எல்லா முயற்சிகளையும் முறைமையுடன் மதிப்பீடு செய்வதன் வழியாக மட்டுமே பயிற்சி பெறமுடியும். ஆகவே ''அரசியல் அமைப்புக்களைப் பயிற்றுவித்து வளர்ப்பது'' பற்றிப் பேசுவதும், அதே நேரத்தில் அரசியல் பத்திரிகை சம்பந்தப்பட்ட ''பத்திரிகை வேலையை'' ''உள்ளூர்களில் நடத்தும் துடிப்புள்ள அரசியல் வேலைக்கு'' எதிராக் நிறுத்திக் காட்டுவதும் கேலிக்குரியதாகும் என்பது தெளிவு. வேலையில்லாதோர் இயக்கம், விவசாயிகளின் கலகங்கள், ஸேம்ஸ்த்வோ மக்களின் அதிருப்தி, ''ஜார் ஆட்சியைச் சேர்ந்த யாராவது ஒரு கொடுங்கோலனின் வெறியாட்டத்தைக் கண்டு எழும் மக்களின் வெஞ்சினம்,'' முதலியவற்றை ஆதரிப்பதற்குச் ''செயல்துடிப்புடன் தயாராய் உள்ள நிலையை'' உண்டாக்குவதற்கான ''திட்டத்துக்கு'' உகந்த முறையில் பத்திரிகைக்கான தன் ''திட்டத்தை'' இஸ்க்ரா சரிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இவ் விஷயங்களைப் பற்றி மிகப் பெரும்பான்மையான உள்ளூர் அமைப்புகள் கனுக் கூடக் கண்டதில்லை; ''துடிப்புள்ள அரசியல் வேலைக்கு'' இங்கே குறிப்பிட்டுள்ள வாய்ப்புநிலைகளில் பலவற்றை ஒரமைப்பாயினும் என்றைக்கும் நடைமுறையில் சாதித்துக் கொள்ளவில்லை; எடுத்துக்காட்டாக, ஸேம்ஸ்த்வோ படிப்பாளிப் பகுதியினர் இடையே அதிருப்தியும், கண்டனமும் வளர்வதைச் சுட்டிக்காட்ட முயல்வது நதேழ்தினுக்குப் பீதியும் கலக்கமும் உண்டாக்குகிறது (''அட ஆண்டவனே, ஸேம்ஸ்த்வோ ஆசாமிகளுக்காகவா இந்தப் பத்திரிகையை நடத்துகிறீர்கள்?''—புரட்சி நடக்கவிருக்கும் காலம், பக்கம் 129), இதே போல் ''பொருளாதாரவாதிகளிடையேயும்'' (இஸ்க்ரா, 12ஆம் இதழுக்கு எழுதிய கடிதம்) பல நடைமுறை ஊழியர்களிடையேயும் பீதியையும், கலக்கத்தையும் உண்டாக்குகிறது; இயக்கத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்து வைத்துள்ள அனைவரும் இவற்றைப் பற்றி நன்றாக அறிவார்கள். இச்சூழ்நிலையில் இவ்விஷயங்

களைப் பற்றிச் சிந்திக்கும் படியும் கொந்தளிப்பையும் தீவிர மான போராட்டத்தையும் சுட்டிக்காட்டக்கூடிய பல்வேறு அறிகுறிகளைச் சுருக்கிப் பொதுமைப்படுத்தும்படியும் மக்களைத் தூண்டுவது மூலமாக மட்டுமே ''துவக்கம்'' என்பது சாத்தியப்படும். சமூக-ஜனநாயகவாதப் பணிகள் இழிநிலைக்குத் தாழ்த்தப்பட்டுவரும் நம் காலத்தில், ''துடிப்புள்ள அரசியல் வேலையைத்'' துவக்க முடிவதற்கு உயிர்ப்புள்ள அரசியல் கிளர்ச்சி ஒன்றே வழியாகும்; அடிக்கடி வெளியிடப்பட்டும் ஒழுங்காக வினியோகிக்கப்பட்டும் வரக்கூடிய ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகை நம்மிடம் இல்லையேல் இது அறவே சாத்தியமில்லை.

இஸ்க்ராவின் ''திட்டம்'' ''ஏட்டறிவுத் தனத்தை'' வெளியிடுவதாக நினைப்பவர்கள் அதன் மெய்ப் பொருளைப் புரிந்துகொள்ள அறவே தவறியிருக்கிறார்கள்; தற்சமயத்திற்கு மிகப்பொருத்தமான சாதனமாகக் குறிப்பிட்டதையே அவர்கள் குறிக்கோளாக எடுத்துக் கொள்கிறார்கள். திட்டத்தைத் தெளிவாகக் காட்டுவதற்காகக் கொடுத்த இரண்டு ஒப்புமைகளை அவர்கள் ஊன்றிக் கவனிக்க முயலவில்லை. இஸ்க்ரா எழுதியதாவது: ஓர் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகையை வெளியிடுவதுதான் முதன்மையான பாதையாக இருக்க வேண்டும், அதைக் கொண்டு நாம் அமைப்பை (அதாவது, ஒவ்வொரு கண்டனத்தையும் ஒவ்வொரு கலகத்தையும் ஆதரிக்க எப்போதும் தயாரான நிலையில் இருக்கும் புரட்சிகரமான அமைப்பை) வழி பிறழாமல் வளர்க்கவும், ஆழப்படுத்தவும், விரிவாக்கவும் செய்யலாம். நீங்களே சொல்லுங்கள்: முன்னெப்போதும் கண்டிராத ஒரு மிகப் பெரிய கட்டடத்தின் பல்வேறு பகுதிகளில் கொத்தனார் செங்கல் வைக்கும் போது அவற்றை ஒழுங்காகச் சரியான இடத்தில் வைக்க உதவும் முறையில் நேர் கோடாகக் கயிறு பிடிப்பது — பொதுவான வேலையின் இறுதிக் குறிக்கோளைக் காட்டுவதற்காகவும், ஒவ்வொரு செங்கல் மட்டுமின்றி முன்னும் பின்னுமுள்ள செங்கல்லுடன் பொருத்திப் பதித்த ஒவ்வொரு செங்கல் துண்டும் ஓர் இறுதியான இடையறாத கோட்டிலே அமைந்திருக்கும்படியாகப் பயன்படுத்த உதவும் முறையில் நேர்கோடாகக் கயிறு பிடிப்பது—''காகிதம் சம்பந்தப்பட்ட'' வேலையா? நம்மிடம் செங்கல்லும், கொத்தனா

ரும் நிறையவே இருக்கிறுர்கள், ஆனுல் எல்லோரும் பார்க்கக் கூடியதாய், பின்பற்றக் கூடியதாய் வழிகாட்டும் பாதை நம்மிடம் இல்லை—நம் கட்சி வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒரு காலத்தைத் தானே இன்று நாம் கடந்து வருகிருேம்? நேர் கோடாகக் கயிறு பிடிப்பதைக் கண்டு நாம் ஆணையிட விரும்புவதாக அவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டு இருக் கட்டும். பெருமான்களே, நாங்கள் ஆணையிட விரும்பியிருந் தால் தலைப்புப் பக்கத்தில் "இஸ்க்ரா, இதழ் 1" என்று போடாமல் "ரபோச்சயா கஸேத்தா, இதழ் 3" என்று போட்டிருப்போம் — அப்படிப் போடும்படிதான் சில தோழர்கள் வேண்டிக் கொண்டார்கள், மேலே வர்ணித்த நிகழ்ச்சிகளுக்குப் பின் அவ்வாறு போடுவதற்கும் நமக்கு முழு உரிமை இருந்திருக்கும். ஆனுல் நாம் அதைச் செய்ய வில்லை. எல்லாப் போலி சமூக-ஜனநாயகவாதிகளையும் எதிர்த்துச் சமரசமற்ற போராட்டம் நடத்துவதில் சுதந்தர முள்ளவர்களாக இருக்க விரும்பினுேம்; நமது பாதை முறை யாகப் போடப்பட்டால் அது சரியான பாதை என்பதற்காக மதிக்கப்பட வேண்டுமே தவிர ஓர் அதிகாரபூர்வமான பத்திரிகையால் போடப்பட்டது என்பதற்காக மதிக்கப் படக்கூடாது என்றே விரும்பினுேம்.

"உள்ளூர் நடவடிக்கையை மந்திய உறுப்புகளில் ஒன்று படுத்தும் பிரச்சினை ஒரு விஷச்சுழலில் சுழன்று வருகிறது" என்று நம்மிடம் அளக்கிறுர் நதேழ்தின்; "ஒற்றுமைப்படுத்து வதற்கு அந்தந்த அம்சங்களிடையே (பகுதிகளுக்கிடையே) உள்ளியைபு இருக்கவேண்டும், ஒன்றுபடுத்தக் கூடிய ஒன்று தான் இந்த உள்ளியையை உண்டாக்கித் தரமுடியும்; இந்த ஒன்றுபடுத்தும் அம்சம் பலமான உள்ளூர் அமைப்புகளி லிருந்து விளைவதாக இருக்கலாம், ஆனுல் இந்த உள்ளூர் அமைப்புகளிடம் தற்சமயம் இந்த உள்ளியைபு கிடையாது." பலமான அரசியல் அமைப்புகளைப் பயிற்றுவிக்க வேண்டும் என்னும் உண்மைபோலவே இந்த உண்மையும் மதிப்புடை யது, மறுக்கமுடியாதது. ஆனுல் அதைப்போலவே இதுவும் மலட்டுத்தனமானது. ஒவ்வொரு பிரச்சினையும் "ஒரு விஷச் சுழலில் சுழன்று வருகிறதுதான்"; காரணம், அரசியல் வாழ்க்கை முழுவதுமே எண்ணற்ற கண்ணிகளோடு கூடிய முடிவே இல்லாத ஒரு சங்கிலியாகும். எந்தக் கண்ணியை

நம் கையிலிருந்து தட்டிப் பறிக்க முடியாதோ, எந்தக் கண்ணி அந்தந்தத் தருணத்தில் மிக முக்கியமாய் உள்ளதோ, எந்தக் கண்ணியை வைத்திருந்தால் சங்கிலி முழுவதும் நம் கை வசமாகிவிடும் உத்தரவாதம் இருக்கிறதோ* அந்தக் கண்ணியைத் தேடிக் கண்டுபிடித்து ஆனமட்டும் பலமாகக் கையில் பிடித்துக் கொள்வதுதான் அரசியல்வாதியின் கலையாகும். வழிகாட்டிக் கோடில்லாமலே செங்கல்லை வேண்டிய இடத்தில் சரியாக வைக்கக் கூடிய முறையில் (கருத்தியலாகச் சொன்னால் இது அசாத்தியமல்ல) நன்ருகக் கூடி வேலை செய்யக் கற்றுக்கொண்டுள்ள அனுபவமிக்க கொத்தனர்கள் நம்மிடம் இருந்திருந்தால் அப்போது ஒருவேளை நாம் வேருெரு கண்ணியை எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனல் துரதிருஷ்டவசமாக இன்னமும் நம்மிடம் கூட்டு வேலைக்குப் பயிற்சி பெற்ற அனுபவமுள்ள கொத்தனர்கள் இல்லை; வேண்டாதவிடத்தில் செங்கல் அடிக்கடி வைக்கப்படுகிறது, பொதுவான கோட்டை ஒட்டி செங்கல் போடப்படுவதில்லை. மிகவும் ஒழுங்கற்ற முறையில் வைக்கப்பட்டுள்ளதால், செங்கல்லால் கட்டப்படாமல் மணலால் கட்டப்பெற்ற கட்டடம் போல் அதை எதிரி நொறுக்கித்தள்ள முடியும்.

மற்ருெரு ஒப்புமை: ''பத்திரிகை என்பது ஒரு கூட்டுப் பிரச்சாரகனும், கூட்டுக் கிளர்ச்சியாளனும் மட்டுமல்ல, அது ஒரு கூட்டான அமைப்பாளனுமாகும். இவ்விஷயத்தில், கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடத்தைச் சுற்றி எழுப்பப்பட்ட சாரக்கட்டுக்கு அதை ஒப்பிடலாம்; அது கட்டடத்தின் உருவரைகளைக் காட்டுகிறது, கொத்தனர்களிடையே தொடர்பிற்கு வசதி செய்கிறது, வேலையைப் பங்கிட்டுக் கொடுக்கவும், தமது ஒழுங்கமைத்த உழைப்பால் சாதிக்கப்பட்ட

---

* தோழர் கிரிச்சேவ்ஸ்கி, தோழர் மார்தீனவ்! இதைக் கவனியுங்கள். ''எதேச்சாதிகாரம்'', ''கட்டுப்பாடற்ற அதிகாரம்'', ''தலைமையான ஒழுங்கு செலுத்துதல்'' என்றெல்லாம் மானக்கேடாக வெளிப்படுத்திக்கொள்கிருர்கள். சங்கிலி முழுவதையும் கைவசமாக்கிக்கொள்ள விரும்புகிருர், பார்த்தீர்களா!! உடனே குறை கூறி எழுதுங்கள். கைமேல் கிடைத்திருக்கிறது விஷயம், நீங்கள் இரண்டு தலையங்கக் கட்டுரைகள் எழுதிவிடலாம் ரபோச்சியே தேலோவின் 12ம் இதழுக்கு!

பொதுவான விளைவைப் பார்க்கவும் இடமளிக்கிறது''.* செயல்தொடர்பற்ற பேச்சுப் பேசும் ஓர் ஆசிரியர் தன் பாத்திரத்தை மிகைப்படுத்திக் காட்டிக் கொள்ளும் முயற்சி போல் இது தொனிக்கிறதா? கட்டடத்திற்கு சாரக்கட்டு அவசியமேயில்லை; மேலும், மலிவான பொருளைக் கொண்டு செய்யப்பட்டதே அது. தற்காலிகமாகத்தான் அது எழுப்பப் படுகிறது; கட்டடத்தின் வெளிப்புற அமைப்பைக் கட்டிமுடித் ததும் அது பிரிக்கப்பட்டு விறகாக்கப்படுகிறது. புரட்சிகர மான அமைப்புகளைக் கட்டுவதைப் பொறுத்தவரை, 1870-80களில் கண்டபடி, சாரக்கட்டில்லாமலே சில சமயம் அவற் றைக் கட்டிவிடலாம் என்று அனுபவம் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் தற்சமயம் சாரக்கட்டு இல்லாமலே நமக்கு வேண்டிய கட்டடத்தைக் கட்டக் கூடும் என்று நினைத்துப் பார்க்கக்கூட முடியாது.

நதேஜ்தின் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சொல்வ தாவது: ''தன்னைச் சூழ்ந்தும், தன் சார்பில் நடக்கும் நட வடிக்கைகளிலும் மக்கள் திரண்டு ஒழுங்கமைத்துக் கொள் வார்கள் என்று இஸ்க்ரா நினைக்கிறது. ஆனால் இதைவிட ஸ்தூலமான நடவடிக்கைகள்பால் திரண்டு ஒழுங்கமைத்துக் கொள்வது எவ்வளவோ சுலுவாயிருக்கக் காண்பார்கள் மக்கள்!'' என்று. ''இதைவிட ஸ்தூலமான நடவடிக்கைகள் பால்... எவ்வளவோ சுலுவானது.'' — உண்மைதான். ''கிணற்றில் உமிழாதே, அதே கிணற்றிலிருந்து நீ நீர் பருக விரும்பக் கூடும்'' எனும் ஒரு ருஷ்யப் பழமொழி உண்டு. என்றாலும் அப்படி உமிழ்ந்த கிணற்றிலிருந்து நீர் பருகினால் பரவாயில்லை என்கிற பேர்வழிகளும் இருக்கிறார்கள். நமது பெருமை சான்ற, சட்டபூர்வமான ''மார்க்ஸியத்தின் விமர் சகர்களும்'' ரபோச்சயா மிஸ்லின் சட்டவிரோதமான பாராட் டாளர்களும் இந்த மேலும் ஸ்தூலமான ஏதோ ஒன்றின்

---

* இப்பகுதியின் முதல் வாக்கியத்தை மார்தீனவ் ரபோச் சியே தேலோவில் (இதழ் 10, பக்கம் 62) மேற்கோள் காட்டு கையில் இரண்டாம் வாக்கியத்தை விட்டுவிட்டார். பிரச்சினை யின் முக்கியாம்சங்களைப் பற்றி விவாதிக்கத் தாம் விரும்ப வில்லை என்றோ அவற்றைப் புரிந்துகொள்ளத் தமக்குத் திறமை இல்லை என்றோ வலியுறுத்திக் காட்ட விரும்பியே இப்படி விட்டுவிட்டார் போலும்!

பெயரால் எவ்வளவோ வெறுக்கத்தக்க விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா! நம் சொந்தக் குறுகிய போக்காலும் முன்முயற்சியின்மையாலும் தயக்கத்தாலும் நம் இயக்கம் எப்படிக் குறுக்கிக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது! ''மேலும் ஸ்தூலமான ஏதோ ஒன்றின்பால் திரள்வது எவ்வளவோ சுளுவானது'' என்று கண்டுகொள்வது பற்றிய சம்பிரதாய வாதத்தைக் கொண்டு இவை நியாயப்படுத்தப்படுகின்றன. ''வாழ்க்கையின் உண்மைகள்'' பற்றிக் குறிப்பாக ஒரு கூரான அறிவுணர்ச்சி தமக்கு இருப்பதாக நதேழ்தின் கருதிக் கொள்கிறார், ''செயல்தொடர்பற்ற'' ஆசிரியர்களை அவர் கடுமையாகக் கண்டிக்கிறார், எங்கும் ''பொருளாதார வாதமயமாக'' இருப்பதாகப் பார்க்கும் பலவீனம் இஸ்க்ராவுக்கு உண்டு என்று (நகைச்சுவையுடன் சொல்வதாக நினைத்தும் கொண்டு) இஸ்க்ராவைக் குற்றம் சாட்டுகிறார், சுத்தமான மார்க்ஸியவாதிகளுக்கும் விமர்சகர்களுக்கும் இடையேயுள்ள பிளவினின்று விலகி எவ்வளவோ மேலே தாம் நிற்பதாகக் கருதிக் கொள்கிறார். இதே நதேழ்தினிடம் வெஞ்சினத்தைக் கிளப்பிவிடும் குறுகிய போக்குக்குத் தமது வாதங்களைக் கொண்டு தாமே பங்கு செலுத்துவதைப் பார்க்கத் தவறுகிறார், உமிழ்ந்து அசுத்தப்படுத்தப்பட்ட கிணற்றிலிருந்து தாம் நீர் பருகுகிறோமே என்பதையும் பார்க்கத் தவறுகிறார்! குறுகிய போக்கை எதிர்த்து உளப்பூர்வமான வெஞ்சினம் காட்டுவதும், குறுகிய போக்கின் பக்தர்களை மண்டியிடுவதினின்று தூக்கிவிடுவதில் ஆர்வமிக்க விருப்பம் காட்டுவதும் போதவே போதாது—அப்படிச் சினம்கொள்பவர் சரியான வழியில் செல்லக் கதியின்றி அடித்துச்செல்லப்பட்டாலும் சரி, 1870-80களில் புரட்சியாளர்கள் செய்தது போல் ''தன்னியல்பாக'' ''உணர்ச்சியைத் தூண்டும் பயங்கரவாதம்'', ''நிலப் பிரச்சினையில் பயங்கரவாதம்'', ''போர் முரசு கொட்டுவது'' முதலிய விஷயங்களை இறுகப் பிடித்துக் கொண்டாலும் சரி. மக்கள் திரண்டு ஒழுங்கமைத்துக் கொள்ள ''எவ்வளவோ சுளுவாக'' வாய்ப்பளிக்கும் என்று அவர் கருதும் ''மேலும் ஸ்தூலமான'' நடவடிக்கைகளைச் சற்றே பார்ப்போம். அவையாவன: (1) உள்ளூர்ப் பத்திரிகைகள்; (2) ஆர்ப்பாட்டங்களுக்குத் தயாரிப்புகள்; (3) வேலையில்லாதவர்களிடையே பணிபுரிவது. இவையாவும்

ஏதோ ஒன்றைச் சொல்வதற்குச் சாக்கு வேண்டுமே என்ப தற்காக இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பறித்து எடுத்துக் கொள்ளப்பட்டவையே என்று உடனே தெரிந்துவிடுகிறது. ஏனெனில், இவற்றை எப்படிப் பார்த்தாலும் சரி, ''திரண்டு ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு'' அப்படியொன்றும் குறிப் பான தகுதியுடையவையாக இவற்றைக் கருதுவது அபத்த மாயிருக்கும். இதே நதேழ்தின்தான் சில பக்கங்கள் தள்ளி இவ்வாறு சொல்கிறுர்: ''உள்ளூர்களில் மிகவும் இரங்கத் தக்க வகைப்பட்ட நடவடிக்கைகள் செய்துகொண்டிருக்கி ருர்கள், செய்யமுடிகிறதில் பத்தில் ஒரு பங்கு கூட கமிட்டி கள் செய்கிறதில்லை என்கிற உண்மையைப் பச்சையாகச் சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது... தற்சமயம் நம் மிடம் உள்ள ஒருமுகப்படுத்தும் மையங்கள் வெறும் கற்பனைப் புனைவுகளே, அவை ஒரு விதமான புரட்சிகரமான அதிகார வர்க்க முறையாகவே உள்ளன, அவற்றின் உறுப்பினர்கள் தளபதியாக நீ இரு நீ இரு என்று ஆளுக்கு ஆள் பரஸ்பரமாகப் பதவி கொடுத்துக்கொண்டிருக்கிறுர்கள்; பலமான உள்ளூர் அமைப்புகள் வளர்ந்தெழும் வரை இது நீடித்து வரும்'' என்று. இக்குறிப்புரைகள் நிலைமையைச் சற்று மிகைப் படுத்திக் கூறினுலும் பல கசப்பான உண்மைகளை வெளியிடு கின்றன என்பதில் ஐயமேயில்லை. என்றபோதிலும், உள்ளூர் களில் நடக்கும் இரங்கத்தக்க நடவடிக்கைகளுக்கும் ஊழியர்களின் குறுகிய பார்வை, அவர்களுடைய நடவடிக் கைகளுக்குரிய குறுகிய வாய்ப்பெல்லை ஆகியவற்றிற்கும் இடையேயுள்ள தொடர்பை நதேழ்தின் பார்க்கவில்லை என்று சொல்ல முடியுமா? உள்ளூர் அமைப்புகளிலே அடைபட்டுள்ள கட்சி ஊழியர்கள் பயிற்சியற்று இருக்கிற சூழ்நிலைமைகளில் அவை தவிர்க்கமுடியாதவையாயிற்றே! ஸ்வபோதாவில் வெளியான அமைப்பு பற்றிய கட்டுரையின் ஆசிரியர் போல், விரிந்தகன்ற உள்ளூர்ப் பத்திரிகைத் துறைக்கு (1898லிருந்து) மாறிச் சென்றதைத் தொடர்ந்து ''பொருளாதாரவாதமும்'' ''பக்குவமின்மையும்'' எப்படிப் பலமாகத் தீவிரமடைந்தன என்கிற விஷயத்தை இவரும் மறந்துவிட்டாரா? திருப்திகர மாக ஒரு ''விரிந்தகன்ற உள்ளூர்ப் பத்திரிகைத் துறை'' ஏற் படுத்த முடிந்தாலுங்கூட (மிக விதிவிலக்கான வழக்குகளில் தவிர மற்றபடி இது சாத்தியமில்லை என்று மேலே காட்டி

யிருக்கிறோம்) யதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து ஒரு பொதுவான தாக்குதல் நடத்துவதற்கும் ஒன்றுபட்ட போராட்டத்துக்குத் தலைமை வகிப்பதற்கும் எல்லாப் புரட்சிச் சக்திகளையும் இந்த உள்ளூர்ப் பத்திரிகைகளால் ''திரட்டி ஒழுங்கமைத்திட'' முடியாது. இங்கே ''ஒன்றுதிரட்டும்'', ஒழுங்கமைக்கும் வேலையிலே பத்திரிகை வகிக்கும் முக்கியத்துவத்தைப்பற்றி மட்டுமே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறக்கவேண்டாம். துண்டுபட்டிருக்கும் நிலையைத் தாங்கிப் பேசும் நதேழ்தினிடம் அவரே நையாண்டியுடன் போட்ட கேள்வியை நாமும் போடமுடியும்: ''இரண்டு லட்சம் புரட்சிகரமான அமைப்பாளர்களை ஆஸ்தியாக யாராவது நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிறார்களா?'' என்று. மேலும், ''ஆர்ப்பாட்டங்களுக்கான தயாரிப்புகளை'' இஸ்க்ராவின் திட்டத்துக்கு எதிராக நிறுத்த முடியாது; ஏனெனில், ஆனமட்டும் விரிவான ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைப்பதை இத்திட்டம் தனது குறிக்கோள்களில் ஒன்றாக வைத்துக் கொண்டிருக்கிறது. நடைமுறைச் சாதனத்தைத் தேர்ந்துகொள்வதே விவாதத்திலிருக்கும் விஷயம். இவ்விஷயத்திலும் நதேழ்தின் குழம்பிப்போயிருக்கிறார்; காரணம், ''திரட்டப்பட்டு ஒழுங்கமைக்கப்பெற்ற'' சக்திகள்தாம் ஆர்ப்பாட்டங்களுக்குத் ''தயாரிப்பு'' செய்யமுடியும் (இதுவரை மிகப் பெரும்பான்மையான ஆர்ப்பாட்டங்கள் தன்னியல்பாகவே நடந்துள்ளன) என்பதையும் மக்களை ஒன்றுதிரட்டி ஒழுங்கமைத்திடும் திறமை நம்மிடம் இல்லை என்பதையும் அவர் மறந்துவிட்டிருக்கிறார். ''வேலையில்லாதோரிடையே பணிபுரிவது.'' மீண்டும் அதே குழப்பந்தான்; ஏனெனில், அணிதிரட்டிய நிலையிலுள்ள சக்திகள் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகுமே தவிர, இதுவே சக்திகளைத் திரட்டுவதற்கான திட்டமாகாது. நாம் துண்டுபட்டுள்ள நிலையும், நம்மிடம் ''இரண்டு லட்சம் அமைப்பாளர்கள்'' இல்லாதிருக்கும் நிலையும் உண்டாக்கியுள்ள தீங்கை எந்த அளவுக்கு நதேழ்தின் குறைத்து மதிப்பிடுகிறார் என்பதைப் பின்வரும் உண்மையிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும்: அதாவது, வேலையில்லாமை பற்றி இஸ்க்ரா மிகக் குறைவாகவே செய்திகள் தருகிறதென்றும் கிராம வாழ்க்கை சம்பந்தப்பட்ட மிகச் சாதாரணமான விவகாரங்

களைப் பற்றி அது வெளியிடும் கடிதங்களும் என்றைக்கோ ஒரு தடவை வருகிறவையாயிருக்கிறதென்றும் (நதேழ்தின் உட்பட) பல பேர் இஸ்க்ராவைக் குறை கூறியுள்ளனர். இப்படிக் குறைகூறியது நியாயமே; ஆனல் இஸ்க்ரா ''பாவம் செய்யாமலே அபராதியாக உள்ளது.'' நாம் கிராமப்புறத்திலுங்கூட ''நேர் கோடாகக் கயிறு பிடிக்க'' முயல்கிறோம், அங்கே கொத்தனர் கிடைப்பது அரிதாகவே இருக்கிறது. மிகப் பொதுவான விஷயங்களைப் பற்றியுங்கூட செய்தி தருகிற ஒவ்வொருவரையும் நாம் உற்சாகப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்; இதனல் அந்தந்தத் துறையில் நமது செய்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், கடைசியிலே உண்மையில் மிக முக்கியமானவையாயுள்ள விஷயங்களைப் பொறுக்கிக் கொள்ள இது நம் எல்லோருக்கும் பயிற்சியளிக்கும் எனும் நம்பிக்கையில் இப்படிச் செய்கிறோம். ஆனல் பயிற்சிக்குப் பயன்படுத்தத்தக்க விஷயாதாரம் மிகவும் கொஞ்சமாயுள்ளது. அதை ருஷ்யா முழுவதற்கும் பொதுமைப்படுத்தினலொழிய நம்மிடம் பயிற்சிக்கென்று ஏதும் இராது. கிளர்ச்சியாளர் என்கிற வகையில் நதேழ்தினிடமுள்ள திறமை, நாடோடி வாழ்க்கை பற்றி நதேழ்தினிடமுள்ள அறிவு—குறைந்தபட்சம் இதற்குச் சமமாகவாயினும் திறமையும் அறிவும்—உள்ள ஒருவர் வேலையில்லாதவரிடையே கிளர்ச்சி செய்துவந்தால் இயக்கத்திற்கு விலைமதிக்கவொண்ணத பணி புரிந்திட முடியும் என்பதில் ஐயமில்லை; ஆனல் அப்படிப்பட்ட நபர் தம் வேலையில் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கை பற்றியும் ருஷ்யாவிலுள்ள தோழர்கள்அனைவருக்கும் தெரிவிக்கத்தவறினல், அவர் திறமையும் அறிவும் குடத்திலிட்ட விளக்குபோல் ஆகிவிடும்; ஏனெனில் மொத்தத்தில் மற்றவர்கள் புதியவிதமான வேலைகளை மேற்கொள்வதற்கு இன்னமும் திறமையின்றி இருக்கிறார்கள், அவர்கள் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும்.

ஒற்றுமையின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ''ஒன்றுதிரட்டி ஒழுங்கமைப்பதின்'' அவசியத்தைப் பற்றியும் இன்று பேசாதவர் இல்லை. ஆனல் ஒற்றுமைக்கு எங்கிருந்து தொடங்குவது, ஒற்றுமையை எப்படிச் சாதிப்பது என்பது பற்றிப் பெரும்பாலோரிடம் உருப்படியான கருத்து ஒன்றும் இல்லை.

ஒருக்கால் இதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்: அதாவது, ஒரு குறிப்பிட்ட நகரத்தின் வட்டக் குழுக்களை ''ஒன்று படுத்தினல்'' (இதை எடுத்துக்காட்டிற்குக் கூறுகிறேம்) இதற்கு என்று பொதுவான நிறுவனங்கள் இருக்க வேண்டியது அரசியமாகும்—அதாவது ''சங்கம்'' எனும் பொதுவான பட்டம் மட்டுமல்ல, உண்மையிலேயே பொதுவான வேலை, விஷயாதாரங்களையும் அனுபவத்தையும் சக்திகளையும் பரிமாறிக் கொள்வது, வட்டவாரியாக மட்டுமின்றி நகரம் முழுவதையும் தழுவிய வகையில் தனித்தேர்ச்சி மூலமாக வேலைகளை வினியோகிப்பது ஆகியவை இருப்பது அவசியம். ஒரு தனி வட்டத்தின் ''வழிதுறைகளைக் கொண்டு மட்டும்'' (பணம், ஆள்பலம் இரண்டையும் இங்கே குறிப்பிடுகிறேம்) ஓர் பெரிய இரகசிய அமைப்பு தன்னைச் சரிக்கட்டிக் கொண்டு போகமுடியாது (வர்த்தகத் துறைச் சொல்லைப் பயன்படுத்துகிறேம்) என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஒரு தனித்தேர்ச்சியாளர் தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு இந்தக் குறுகிய செயற்களம் போதிய வாய்ப்பு அளிக்காது என்பதையும் ஒப்புக் கொள்வார்கள். ஆனல், பல நகரங்களின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் விஷயத்திற்கும் இது பொருந்தும்; ஏனெனில் ஒரு குறிப்பிட்ட உள்ளூர் வட்டாரமும் கூட மிகவும் குறுகிய செயற்களமாகவே இருக்கிறது, அப்படித்தான் இருந்தது என்று நம் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் வரலாறு மெய்ப்பித்திருக்கிறது. மேலே சொன்னதை அரசியல் கிளர்ச்சி, அமைப்புத்துறைப் பணி சம்பந்தமாக நாம் விபரமாக நிரூபித்துள்ளோம். செயற்களத்தை விரிவுபடுத்துவது, ஒழுங்கு முறையான பொதுவான வேலையின் அடிப்படையில் நகரங்களிடையே உண்மையான தொடர்புகள் ஏற்படுத்துவது இவைதான் நமக்கு முதன்மையாகவும் அவசியமாகவும் தேவை. துண்டுபட்டுள்ள நிலை நம் ஊழியர்களை அழுத்தி வைத்துள்ளது. (இஸ்க்ராவில் ஒரு நிருபர் சொன்ன சொற்ருெடரைப் பயன்படுத்துவதானல்) அவர்கள் ''குழியில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்'', உலகத்தில் என்ன நடக்கிறது, யாரிடம் கற்றுக் கொள்வது, எப்படி அனுபவம் பெறுவது, விரிவான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் எனும் தங்கள் விருப்பத்தை எப்படி நிறைவேற்றிக் கொள்வது என்று அறியா

மலே இருக்கிறார்கள். ஒரு பொதுவான பத்திரிகையின் உதவியைக் கொண்டு மட்டுமே நாம் உண்மையான தொடர்புகளை ஏற்படுத்தத் தொடங்க முடியும் என்று தொடர்ந்து வலியுறுத்துகிறேன். அது ஒன்றே ஒழுங்குமுறையான, அனைத்து ருஷ்ய முயற்சியாக இருக்கும், பல்வேறு வகையான நடவடிக்கை வடிவங்களின் விளைவுகளை அது சுருக்கித் தொகுத்துத் தந்து அதன் வழியாக (எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்கு இட்டுச் செல்வது போல்) புரட்சிக்கு இட்டுச் செல்லும் எண்ணற்ற எல்லாப் பாதைகளிலும் மக்கள் அயராது நடையிட்டு முன்னேறும்படி தூண்டிவிடும். பெயரளவிலான ஒற்றுமையை நாம் விரும்பவில்லையானால், எல்லா உள்ளூர்ப் பயிற்சிக் குழுக்களும் உடனடியாகத் தம் சக்திகளில் கால்வாசியை (எடுத்துக்காட்டாகச் சொல்கிறோம்) பொதுவான இலட்சியப் பணிக்காகத் தீவிரமாக வேலைசெய்வதற்கு ஒதுக்கித் தர நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்; அந்தப் பத்திரிகை நம் இலட்சியப் பணியின் உருவரையையும் வாய்ப்பெல்லையையும் தன்மையையும் அவற்றிற்கு* உடனடியாகத் தெரிவிக்கும்; கிளர்ச்சியற்ற நிலையிலும் தொடர்புகள் பலவீனமாய் உள்ள நிலையிலும் இருக்கும் அனைத்து ருஷ்ய நடவடிக்கையில் மிகவும் கூராக உணரப்பட்டுள்ள குறைபாடுகளைப் பற்றி அவர்களுக்குச் சரி நுட்பமான குறிப்புரை தரும். மிகப் பெரிதான பொதுவான இயந்திரத்தில் ஒரு குறிப்பிட்ட பயிற்சிக் குழு எந்தெந்தச் சிறிய சக்கரங்களைப் பழுதுபார்க்கலாம் அல்லது அவற்றை எடுத்துவிட்டு நல்லவற்

---

* ஒரு வில்லங்கம்: அதாவது அந்தந்தக் குறிப்பிட்ட பயிற்சிக் குழு இந்தப் பத்திரிகையின் கொள்கையில் அனுதாபங் கொண்டு அத்துடன் கூட்டாளியாக—கூட்டுப்பணி என்று சொல்லும் பொழுது விஷயதானம் செய்வதில் ஒத்துழைப்பது மட்டுமல்ல, பொதுவாகவே புரட்சி நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதுமாகும் எனும் அர்த்தத்தில் கூட்டாளியாக—இருப்பதில் பயனுண்டு என்று கருதினால். ''ரபோச்சியே தேலோவிற்குக்'' குறிப்பு: ஜனநாயகத்தை வைத்து விளையாடிக் கொண்டு இருப்பதில் மதிப்பு வைக்காமல் இலட்சியப் பணியில் மதிப்பு வைக்கிற புரட்சியாளர்களிடையே—மிகவும் தீவிரமாகவும் துடிப்புடனும் பங்கு கொள்வதினின்று ''அனுதாபத்தை''ப் பிரிக்காத புரட்சியாளர்களிடையே—இந்த வில்லங்கம் சொல்லாமலே ஏற்கப்படுகிற ஒன்றாகும்.

றைப் போடலாம் என்று அது சுட்டிக்காட்டும். இன்னும் வேலைதொடங்காமல் எப்படிவேலை செய்யலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பயிற்சிக் குழு அப்பொழுது தொடங்க முடியும்—''தொழிலில்'' முன்னிகழ்ந்த வளர்ச்சியைப் பற்றியோ தொழிலில் நிலவும் உற்பத்தி வழிமுறைகளின் பொதுவான தரத்தைப் பற்றியோ ஒன்றும் அறியாமல் தனித்து ஒதுங்கிய சிறு பட்டறையில் உள்ள ஒரு கைவினைஞனைப் போலல்ல, எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து நடக்கும் பொதுவான புரட்சித் தாக்குதல் முழுவதையும் பிரதிபலிக்கும் ஒரு விரிந்தகன்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள பங்காளி போல. எந்த அளவிற்கு ஒவ்வொரு சிறு சக்கரமும் நேர்த்தியுடன் செய்யப்பட்டிருக்கிறதோ, எந்த அளவிற்குப் பொதுவான இலட்சியப் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் தொகை பெரிதாக இருக்கிறதோ அந்த அளவிற்கு நமது வலைப்பின்னலமைப்பு நெருக்கமாக இருக்கும், தவிர்க்க முடியாத போலீஸ் கைதுகளின் விளைவாக அணிகளிடையே ஏற்படும் குழப்பமும் அந்த அளவிற்குக் குறைவாக இருக்கும்.

பத்திரிகையை வினியோகிக்கும் வேலையே அசல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள உதவும் (ஆனால் அது பத்திரிகை எனும் பெயருக்குத் தகுதி பெற்றதாய் இருக்கவேண்டும்— அதாவது, ஒரு சஞ்சிகை மாதிரி மாதத்துக்கு ஒரு தடவை என்று இல்லாமல் குறைந்தபட்சம் நான்கு தடவையாவது முறையாக வெளியிடப் பட வேண்டும்). தற்சமயம், புரட்சி வேலைக்காக நகரங்களிடையே போக்குவரத்து வைத்துக் கொள்வது மிகவும் அரிதாக உள்ளது; விதி விலக்காக நிகழ்கிறதே அல்லாமல் வழக்கமாக இல்லை. ஆனால், நம்மிடம் பத்திரிகை இருந்தால் இவ்வகைப் போக்குவரத்து வழக்கவிதியாகி விடும்; இதனால் பத்திரிகை வினியோகமாவது மட்டுமல்ல, (அதைவிட முக்கியமாக) அனுபவமும் விஷயாதாரமும் சக்திகளும் வழிதுறைகளும் பரிமாறிக் கொள்வதும் நடக்கும். உடனடியாக அமைப்புத்துறைப் பணியின் பரப்பு மேலும் விரிந்து பெரிதாகிவிடும். ஓர் உள்ளூர் சாதித்த வெற்றி மேலும் பல உச்சிகளை நோக்கி முன்னேறுவதற்கு உற்சாகமூட்டுவதாய் இருந்துவரும்; நாட்டின் வேறு பல பகுதிகளில் பணியாற்றிவரும் தோழர்களின் அனுபவத்தைப்

பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனும் விருப்பத்தைத் தூண்டிவிடும். உள்ளூர் வேலே இன்று இருப்பதைவிட மேலும் வளம் பெறும், மேலும் பல்வகைத்தன்மை பெறும். ருஷ்யா முழுவதிலிருந்தும் திரட்டப்பட்ட அரசியல், பொருளாதார அம்பலப்படுத்தல்கள் எல்லாத் தொழில்களிலும், எல்லா வளர்ச்சிக் கட்டங்களிலும் இருக்கிற தொழிலாளிகளின் அறிவு வளர்ச்சிக்கும் ஊட்டம் அளிக்கும். மிகவும் வேறுபட்ட பல விஷயங்களேப் பற்றிப் பேசவும் கூடிப்படிக்கவும் இந்த அம்பலப்படுத்தல்கள் விஷயாதாரமும் வாய்ப்பும் அளிக்கும்; இவற்ருேடுகூட சட்டபூர்வமான பத்திரிகைகளில் வெளியாகும் சூசகமான குறிப்புகளும் மக்களிடையே நடக்கும் பேச்சுகளும் ''தலேக்குனிவான'' அரசாங்க அறிக்கைகளும் விஷயங்கள் தரும். ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலும் ஒவ்வொரு கலகமும் ஒவ்வொரு ஆர்ப்பாட்டமும் எல்லா அம்சங்களேயும் வைத்து மதிப்பிடப்பட்டு விவாதிக்கப்படும்; மற்றவர்களே எட்டிப்பிடிக்கவேண்டும், தாண்டிச் செல்லவேண்டும் என்றுங்கூட ஒரு விருப்பத்தைத் தூண்டிவிடும் (எல்லாப் பின்பற்றுதலேயும் 'போட்டியையும்' சோஷலிஸ்டுகளாகிய நாம் அடியோடு நிராகரிப்பதில்லே!); முதலில் தன்னியல்பாக என்று சொல்லத்தக்க முறையில் தோன்றிய ஒன்றை உணர்வு பூர்வமாகப் பேணிவளர்க்கத் தூண்டிவிடும்; தாக்குதல் திட்டத்தைத் திருத்தியமைத்துக் கொள்வதற்கு அந்தந்த மாவட்டத்திலோ அந்தந்த தருணத்திலோ கிடைக்கிற சாதகமான நிலேமைகளேப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனும் விருப்பத்தையும் தூண்டிவிடும்; இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். அதே நேரத்தில், உள்ளூர் வேலே இப்படி மீண்டும் துவங்குவதானது, இப்பொழுதெல்லாம் ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்திற்கும் உள்ளூர்ப் பத்திரிகையின் இதழ் ஒவ்வொன்றை வெளியிடுவதற்கும் மிகத் துணிவுடனும் ''ஜன்னித் துடிப்புடனும்'' எல்லா முயற்சிகளேயும் செலுத்தும்படியும் எல்லாச் சக்திகளேயும் இடர்ப்படும் நிலேயில் ஈடுபடுத்தும்படியும் அடிக்கடி நேரிடும் நிலேமையைத் தவிர்த்திடும். ஒரு புறத்தில், ''வேர்களேப்'' பிடுங்கியெறிய எந்த நகர வட்டத்தில் தோண்டிப் பார்ப்பது என்று போலீஸுக்குத் தெரியாவிட்டால் இந்த ''வேர்களேப்'' பிடித்துக் கொள்வது மேலும் கஷ்டமாகிவிடும். மறுபுறத்தில், ஒழுங்கு

முறையோடு செய்யப்படுகிற பொதுவான வேலையானது பொதுவான படையின் அந்தந்தக் குறிப்பிட்ட பிரிவுக்குள்ள பலத்துக்குத் தக்கபடி அந்தந்தக் குறிப்பிட்ட தாக்குதலின் வலுவைச் சரிசெய்துகொள்வதற்கு நம்மவர்க்குப் பயிற்சி தரும் (இப்படிச் செய்யவேண்டும் என்று தற்சமயம் நினைப்பவர்கள் இல்லை என்றே சொல்லிவிடலாம்; காரணம், இத்தாக்குதல்கள் 90 சதவீத வழக்குகளில் தன்னியல்பாக நிகழ்கின்றன). இப்படி ஒழுங்குமுறையோடு செய்யப்படும் பொதுவான வேலை இலக்கியங்களை மட்டுமின்றிப் புரட்சிச் சக்திகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் ''கொண்டு போவதற்கும்'' வசதியளிக்கும்.

பெரும்பான்மையான வழக்குகளில் இச்சக்திகள் குறுகிக் கட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் வேலையில் இன்று ஆற்றல் முழுவதும் உறிஞ்சப்பட்டு வீணடிக்கப்படுகின்றன. ஆனால் நாம் விவாதித்துவரும் சூழ்நிலைமைகளின் கீழ் ஓரளவுக்குத் திறமையுள்ள கிளர்ச்சியாளரையோ அமைப்பாளரையோ நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு மாற்றுவது சாத்தியப்படும், அதற்கான சந்தர்ப்பமும் இடையறாது எழும். தோழர்கள் கட்சி வேலை நிமித்தமாகக் கட்சிச் செலவில் சிறு பயணங்கள் மேற்கொள்ளத் தொடங்கி, கட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதற்கும் முழுநேரப் புரட்சியாளர்களாக ஆவதற்கும் தங்களை உண்மையான அரசியல் தலைவர்களாகப் பயிற்றுவித்துக் கொள்வதற்கும் பழக்கப்படுத்திக் கொள்வார்கள்.

எல்லா, அல்லது கணிசமான பெரும்பான்மையான, உள்ளூர்க் கமிட்டிகளும் உள்ளூர்க் குழுக்களும் பயிற்சிக் குழுக்களும் பொதுவான இலட்சியத்துக்காகத் தீவிரமாக வேலை செய்யும் நிலையை எட்டுவதில் நாம் வெற்றி பெற்றால் நெருங்கிய எதிர்காலத்திலேயே ருஷ்யா முழுவதிலும் பல்லாயிரக் கணக்கிலே பிரதிகளை முறையாக விநியோகித்துவரும் வகையில் ஒரு வாரப் பத்திரிகை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். வர்க்கப் போராட்டத்தின் ஒவ்வொரு தீப்பொறியையும் மக்கள் வெஞ்சினத்தின் ஒவ்வொரு தீப்பொறியையும் காட்டுத் தீ போல் விசிறி வளர்த்துவிடும் மாபெரும் கொல்லன் துருத்தியின் ஒரு பகுதிபோல் இந்தப் பத்திரிகை ஆகிவிடும். இன்னமும் மிகவும் வினைவிளைவின்றியும் சிறிதாயும்

இருந்தபோதிலும் ஒழுங்குமுறையாகவே நடந்துவரும் பொதுவான (முழுப் பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறேம்) முயற்சியைச் சூழ்ந்து தேர்ந்த போராளிகளைக் கொண்ட ஓர் ஒழுங்கான படை முறைமையுடன் திரண்டு பயிற்சி பெறும். இப்பொதுவான அமைப்பின் கட்டுக்கோப்புக்கு ஏணிகளாகவும் சாரக்கட்டாகவும் இருப்பவற்றின் மீதிருந்து புரட்சியாளர்களிடையே ஜெலியாபொவ் போன்ற சமூக-ஜனநாயகவாதிகளும் தொழிலாளிகளிடையே பேபெல் போன்றவர்களும் தோன்றி முன்னணிக்கு வருவார்கள், அணிதிரண்டு நிற்கும் படைக்குத் தலைமை தாங்கி ருஷ்யாவுக்கு மானக் கேடாகவும் சாபத்தீடாகவும் வாய்த்துள்ள எதேச்சாதிகாரமுறையுடன் கணக்குத் தீர்க்க மக்கள் அனைவரையும் கிளர்ந்தெழச் செய்வார்கள்.

இதைப் பற்றித்தான் நாம் கனவு காணவேண்டும்!

* * *

''நாம் கனவு காணவேண்டும்!'' என்று எழுதினேன், எழுதிவிட்டுப் பயந்துபோனேன். நான் ஓர் ''ஒற்றுமை மாநாட்டில்'' உட்கார்ந்திருப்பது போலவும் எதிரே ரபோச்சியே தேலோ ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் உட்கார்ந்திருப்பது போலவும் கற்பனை செய்தேன். தோழர் மார்தினவ் எழுந்து என் பக்கம் திரும்பி கடுங்கண்டிப்புடன் ''கட்சிக் கமிட்டிகளின் கருத்தை முதலில் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் சுயேச்சையுள்ள ஓர் ஆசிரியர் குழுவுக்குக் கனவுகாண உரிமையுண்டா?'' என்று சொல்கிருர். அவரைத் தொடர்ந்து தோழர் கிரிச்சேவ்ஸ்கி வருகிருர். (வெகு காலத்திற்கு முன்பே தோழர் பிளெஹானவை விட ஆழமாகப் பார்த்த தோழர் மார்தினவை மெய்யறிவு விஷயத்தில் மிஞ்சி ஆழமாகப் பார்க்கும்) இவர் மேலும் கடுங்கண்டிப்புடன் ''நான் இன்னும் மேலே போய் கேட்கிறேன்: மார்க்ஸின் கருத்துப்படி தன்னுல் நிறைவேற்றக்கூடிய பணிகளைத்தான் எப்போதும் மனிதகுலம் எடுத்துக் கொள்கிறது என்பதை அறிந்திருந்தும், கட்சியோடு கூடவே வளர்கிற கட்சிப் பணிகளின் வளர்ச்சியைச் சேர்ந்த நிகழ்வுப்போக்குதான் போர்த்தந்திரம் என்பதையும் அறிந்திருந்தும் ஒரு மார்க்ஸியவாதிக்குக் கனவு காண உரிமையுண்டா?'' என்கிருர்.

இந்தக் கடுங்கண்டிப்புள்ள கேள்விகளை நினைத்துப்பார்த்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது, எங்காவது போய் ஒளிந்து கொள்ளலாம் போலிருக்கிறது. நான் பீசரெவிடம் தஞ்சம் புகலாம் என்று நினைக்கிறேன்.

கனவுகளுக்கும், எதார்த்தத்துக்குமுள்ள வேற்றுமை பற்றி பீசரெவ் எழுதியதாவது: ''வேற்றுமைகளில் பலவகை உண்டு. நிகழ்ச்சிகளின் இயல்பான நடையைத் தாண்டி என் கனவு முன்னே ஓடக்கூடும், அல்லது நிகழ்ச்சிகளின் எந்த இயல்பான நடையும் என்றைக்கும் போகாத ஒரு திசையில் அது பாய்ந்தோடலாம். முதலில் சொன்ன வழக்கில் என் கனவு தீங்கெதுவும் செய்யாது. அது தொழிலாளியின் ஆற்றலை ஆதரித்து அதிகப்படுத்தவும் கூடும்... உழைப்புச் சக்தியை உருக்குலைக்கவோ முடமாக்கவோ செய்கிற வகையில் இக்கனவுகளில் ஏதுமில்லை. மாறாக இவ்வடிவில் கனவுகாணும் திறமை மனிதனிடமிருந்து முற்றாகப் பறிக்கப்பட்டால், தன் கைகள் உருவங்கொடுக்கத் தொடங்கியிருக்கும் பொருளைப் பற்றி மனிதன் அவ்வப்பொழுது முன்னே ஓடி ஒரு முழுமையான முடிவுற்ற சித்திரத்தை மனதில் உருவாக்கிக் கொள்ள முடியாமற்போனால் அவன் கலைத் துறையிலோ விஞ்ஞானத் துறையிலோ நடைமுறை செயல்துறையிலோ விரிவான, கடுமையான பணியை மேற்கொள்ளும் படி செய்யக்கூடிய தூண்டுகோல் வேறெது என்று என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை... கனவு காண்பவர் காரியப்பற்றோடு தன் கனவை நம்பினால் போதும், வாழ்க்கையை அவர் உன்னிப்புடன் கவனித்துத் தன் ஆகாயக் கோட்டைகளுடன் தன் கூர்நோக்குகளை ஒப்பிட்டுப் பார்த்து, பொதுவாகவே தன் கற்பனைகளை ஸ்தாபித்துக் கொள்ள உண்மையாக உழைத்தால் போதும், கனவுக்கும் எதார்த்தத்திற்குமுள்ள வேற்றுமையினால் எந்தத் தீங்கும் விளையாது. கனவுக்கும் வாழ்க்கைக்கும் இடையே கொஞ்சம் தொடர்பிருந்தால் எல்லாம் சரி.''

துரதிருஷ்டவசமாக, இப்படிக் கனவு காண்பது நம் இயக்கத்தில் அரிதாகவே உள்ளது. நிதானப் புத்தியுள்ள கருத்துக்கள் உள்ளவரென்றும் ''ஸ்தூலமான'' அம்சத்தோடு ''நெருக்கமான'' பிணைப்புள்ளவரென்றும் பெருமையடித்துக் கொள்கிறவர்கள் தான், சட்டபூர்வமான விமர்சனத்திற்கும்

சட்டவிரோதமான ''வால்பிடிக்கும் போக்குக்கும்'' பிரதிநிதிகளாக இருப்பவர்கள்தான் இதற்குப் பெரிதும் பொறுப்பாளிகளாவர்.

## இ. என்ன மாதிரியான அமைப்பு நமக்கு வேண்டும்?

தாக்குதலுக்கு உடனடியாக அறைகூவல் விடுப்பதை நிராகரிப்பது; ''எதிரியின் கோட்டையைச் சரியான முறையில் முற்றுகையிடுமாறு'' கோருவது; அல்லது, வேறுவிதமாகச் சொன்னால், ஒரு நிரந்தரமான படையைத் திரட்டுவதிலும் ஒழுங்கமைப்பதிலும் அணியமைப்பதிலும் முயற்சிகள் அனைத்தையும் செலுத்தக் கோருவது—இதுவே நம் ''திட்ட வழிப்பட்ட போர்த்தந்திரம்'' என்று மேலே சொன்னதிலிருந்து வாசகர் புரிந்து கொள்வார். ரபோச்சியே தேலோ ''பொருளாதாரவாதத்தை'' விட்டுத் தாக்குதலுக்காகக் கூச்சலிடும் நிலைக்குத் தாவியதற்காக (1901 ஏப்ரல் மாதத்தில் லிஸ்டோக் ''ரபோச்சிவோ தேலா'',[99] இதழ் 6ல் இவ்வாறு கூச்சலிட்டது) நாம் கேலி செய்த பொழுது நாம் ''வறட்டுத் தத்துவவாதிகளாக'' இருப்பதாகவும், நம் புரட்சிக் கடமையைப் புரிந்துகொள்ளத் தவறுவதாகவும், எச்சரிக்கையாக இருக்கும்படி நாம் அழைப்பதாகவும், மற்றபடியும் நம்மீது குற்றச்சாட்டுகளை வீசிற்று. உண்மைதான், கோட்பாடு அறவே இல்லாதவர்களும் ஆழ்ந்த பொருளுள்ள ஓர் ''இயக்கப்போக்கு வழிப்பட்ட போர்த்தந்திரத்தைக்'' குறிப்பிட்டுக் காட்டி எல்லா வாதங்களையும் தட்டிக்கழிப்பவர்களும் இந்தக் குற்றச்சாட்டுகள் போடுவதைக் கண்டு நாம் சிறிதும் வியப்படையவில்லை; இவற்றை நதேழ்தின் திருப்பிச் சொன்னதைக் கண்டும் நாம் வியப்படையவில்லை; அவருக்குப் பொதுவாகவே திடமான வேலைத்திட்டங்கள் பாலும் போர்த்தந்திரத்தின் அடிப்படைக் கூறுகள் பாலும் அளவற்ற வெறுப்புண்டு.

நிகழ்ந்த வரலாறு திரும்ப அப்படியே நிகழ்வதில்லை என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால் வரலாற்றைத் திரும்ப அப்படியே நிகழும்படி செய்ய நதேழ்தின் எல்லா முயற்சிகளும் எடுக்கிறார்; ''புரட்சிகரமான பண்பாடுவாதத்தை''

வன்மையாகக் கண்டிப்பதிலும் ''போர்முரசு கொட்டுவது'' பற்றியும் ஒரு தனி ''புரட்சி நடக்கவிருக்கும் காலத்துக்குரிய நோக்குநிலை'' முதலானவை பற்றியும் கூச்சலிடுவதிலும் அவர் த்காச்சோவை ஆர்வமிகுதியுடன் காப்பியடிக்கிறார். வரலாறு வகைப்பட்ட ஒரு முதல் நிகழ்ச்சி துன்பியலாக இருக்கிறதென்றால் அதன் மறுபிரதி கேலிக்கூத்தேயாகும்[100] எனும் பிரசித்திபற்ற பொதுமொழியை அவர் மறந்து விட்டார் போலும். த்காச்சோவின் பிரசாரத்தால் தயாரிக்கப் பட்டு உண்மையாகவே பயமுறுத்திய ''பயமுறுத்தும்'' பயங்கரவாதத்தின் மூலமாக நிறைவேற்றப் பார்த்த அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் மேன்மை இருந்தது; ஆனால் ஒரு குட்டி த்காச்சோவின் ''உணர்ச்சியைத் தூண்டிவிடும்'' பயங்கரவாதம் வெறுமே நகைக்கத்தக்கதாய் உள்ளது, சராசரி நபர்களைக் கொண்ட அமைப்பு என்கிற கருத்தை இந்த பயங்கரவாதத்துடன் இணைத்தளிக்கும்போது அது மேலும் நகைக்கத்தக்கதாயுள்ளது.

நதேழ்தின் எழுதுகிறார்: ''இஸ்க்ரா மட்டும் தன் ஏட்டறிவுத்தனத்திலிருந்து விடுபட்டு வருமேயானால், இவை[ இஸ்க்ரா, இதழ் 7ல் வெளிவந்த தொழிலாளியின் கடிதம் போன்ற உதாரணங்கள்] விரைவிலே, வெகு விரைவிலே 'தாக்குதல்' துவங்க இருப்பதின் அறிகுறிகள் என்றும், இன்று (இன்று தான் என்று அவர் சொன்னார்!) ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகையுடன் இணைக்கப்பட்ட அமைப்பு பற்றிப் பேசுவது செயல்தொடர்பற்ற கருத்துக்களையும் செயல்தொடர்பற்ற நடவடிக்கையையும் பிரச்சாரம் செய்வதாகவே பொருள் என்றும் உணர்ந்து கொள்ளும்'' என்று. சிந்தனைக்கெட்டாத குளறுபடி இது—ஒரு புறத்தில், உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய பயங்கரவாதம், ''சராசரி மக்களைக் கொண்ட அமைப்பு,'' அவற்றுடன் கூடவே உள்ளூர்ப் பத்திரிகை போன்ற ''மேலும் ஸ்தூலமான '' ஒன்றைச் சூழ்ந்து திரள்வது ''மேலும் சுளுவானது'' என்கிற கருத்து; மறுபுறத்தில், ஓர் அனைத்து ருஷ்ய அமைப்பைப் பற்றி ''இன்று'' பேசுவது செயல்தொடர்பற்ற கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதாகவே பொருள் எனும் கருத்து—அல்லது, பச்சையாகச் சொன்னால், அது ''இன்று'' ஏற்கெனவே காலங்கடந்ததாகிவிட்டது! அப்படியானால், ''உள்ளூர்ப் பத்திரிகைகளை விரிந்தகன்ற முறையிலே அமைப்

பது'' எனும் விஷயம் எப்படி? அருமை நண்பர் நதேழ்தின் அவர்களே, இதுவும் காலங்கடந்ததாகவில்லையா? இத்துடன் இஸ்க்ராவின் பார்வைநிலையையும் போர்த்தந்திரத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்: உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய பயங்கரவாதம் முட்டாள்தனமானது; சராசரி மக்களைக் கொண்ட அமைப்பு பற்றியும் உள்ளூர்ப் பத்திரிகைகளை விரிந்தகன்ற முறையிலே வெளியிடுவது பற்றியும் பேசுவது ''பொருளாதாரவாதத்துக்கு'' நன்ருகக் கதவைத் திறந்து விடுவதாகவே பொருள். புரட்சியாளர்களைக் கொண்ட ஒரு தனி அனைத்து ருஷ்ய அமைப்பு பற்றி நாம் பேசித்தீர வேண்டும்; வெறும் காகிதத் தாக்குதல் அல்ல, உண்மையான தாக்குதல் தொடங்கும் வரை அதைப் பற்றிப் பேசுவது என்றைக்கும் காலங் கடந்ததாகிவிடாது.

நதேழ்தின் தொடர்கிருர்: ''அமைப்பு பொறுத்தவரை நிலைமை ஒன்றும் ஒளிமயமாக இல்லை. ஆம், நம் போராட்டச் சக்திகளில் பெருந்திரள் தொண்டர்களும் எழுச்சியாளர்களும் ஆவர் என்று இஸ்க்ரா சொல்வது முற்றிலும் சரி... நம் சக்திகளின் நிலை பற்றி இவ்வளவு நிதானப்புத்தியுள்ள சித்திரம் கொடுப்பது நல்லதுதான். எனினும், அதே நேரத்தில், **மக்கள் நம்முடன் இருக்கவில்லை** என்பதையும் எனவே எப்பொழுது இராணுவ நடவடிக்கைகளைத் துவக்கலாம் என்று அவர்கள் **நம்மைக் கேட்டுக் கொள்ள** மாட்டார்கள் என்பதையும் ஏன் மறக்கிறீர்கள்? அவர்களாகவே போய் 'கலகம்' செய்வார்கள், அவ்வளவுதான்... மக்கள் கும்பல் இயற்கைச் சக்தி போன்ற அழிவுச் சக்தியுடன் தாஞகவே எழுச்சியில் ஈடுபடும்போது 'நிரந்தரத் துருப்புக்களை' அது மூழ்கடித்து **ஒதுக்கித் தள்ளிச் செல்லக் கூடும்; இந்த** 'நிரந்தரத் துருப்**புகளிடையேதான்'** நாம் மிகவும் முறைமையுள்ள அமைப்**பைப் புகுத்தக் காலமெல்லாம் தயாரித்துவந்தும் சமாளிக்க முடியாமல் போஞேம்.''** (கொட்டையெழுத்தில் போட்டது நாம்.)

திகைப்பூட்டும் தர்க்கம் இது! ''மக்கள் நம்முடன் இருக்கவில்லை'' என்கிற காரணத்திற்காகவே உடனடியான ''தாக்குதல்'' பற்றிக் கூச்சலிடுவது முட்டாள்தனமாகும், அசிங்கமாகும். ஏனெனில், தாக்குதலுக்குப் பொருள் நிரந்தரத் துருப்புகளின் தாக்குதல்தான், தன்னியல்பாக வெடிக்கும் மக்களின் எழுச்சியல்ல. நிரந்தரத் துருப்புகளை மக்கள் மீறி ஒதுக்கித்

தள்ளிவிடக் கூடும் என்கிற காரணத்திற்காகவே நிரந்தரத் துருப்புகளின் இடையே ''மிக முறைமையான அமைப்பைப் புகுத்தும்'' நம் வேலையின் மூலமாக மக்களின் தன்னியல்பான எழுச்சியுடன் ''சம நடை போட்டுச் செல்ல'' தவறக்கூடாது. ஏனெனில், எந்த அளவிற்கு இவ்வகை அமைப்பைப் புகுத்து வதைச் ''சமாளிக்கிறோமோ'' அந்த அளவுக்கு மக்கள் இந்தத் துருப்புக்களை மீறிச்செல்வது பெரும்பாலும் நடக்காது, அதற்கு மாறாக இத்துருப்புகள் மக்களுக்குத் தலைமை வகித்துச் செல்லும். நதேழ்தின் குழம்பிப் போயிருப்பதற்குக் காரணம், முறைமையான அமைப்புக்கு உட்பட்டு வரும் துருப்புகள் மக்களிடமிருந்து தம்மைப் பிரித்துத் தனிமைப் படுத்துகிற ஏதோ ஒரு வேலையில் ஈடுபடுவதாக அவர் நினைப் பதேயாகும். உண்மையில் நடப்பது அப்படியல்ல. எல்லாப் பக்கங்களில் இருந்தும் நடத்தப்படுகிற, எல்லாவற்றையும் தழுவி நிற்கிற அரசியல் கிளர்ச்சியில் அந்தத் துருப்புகள் முற்றாக ஈடுபட்டுள்ளன; அதாவது, மக்களின் தன்னியல் பான முறையில் செல்லும் அழிவுச் சக்தியையும் புரட்சியா ளர்களுடைய அமைப்பின் உணர்வுபூர்வமான அழிவுச் சக்தியையும் நெருங்கி வரச் செய்து ஒரே முழுமையாகச் சந்தித்து கலக்கச் செய்யும் வேலையில் அத்துருப்புகள் முற்றாக ஈடுபட் டுள்ளன. பெருமான்களே, பழிசேராதவர் மீது நீங்கள் பழி போடுகிறீர்கள். ஏனெனில் தன் வேலைத்திட்டத்தில் பயங்கர வாதத்தைச் சேர்த்துக் கொண்டுள்ள ஸ்வபோதா குழுதான் பயங்கரவாதிகளைக் கொண்ட ஓர் அமைப்பு வேண்டுமென்று அறைகூவுகிறது, இவ்வகை அமைப்பு மக்களோடு மேலும் நெருங்கிய தொடர்புகளை வைக்காதபடி உண்மையிலே நம் துருப்புகளைத் தடுத்துவிடுகிறது—துரதிர்ஷ்டவசமாக இந்த மக்கள் இன்னும் நம் பக்கம் வந்தவர்களாயில்லை; துர திர்ஷ்டவசமாக, தங்கள் இராணுவ நடவடிக்கைகளை எப் போது, எப்படித் தொடங்குவது என்று இம்மக்கள் இன்னும் நம்மைக் கேட்கிறவர்களாயில்லை, அல்லது மிகமிக அரி தாகவே கேட்கிறார்கள்.

இஸ்க்ராவுக்குப் பயங்காட்டும் முயற்சியில் ஈடுபட்டு நதேழ்தின் மேலும் சொல்வதாவது: ''வானைக் கீறிய இடி யேறு போல் நிகழ்ந்த அண்மைக்கால நிகழ்ச்சிகளை நாம் தவறவிட்டது போலவே புரட்சியையும் தவறவிடத்தான்

போகிறேம்.'' மேலே மேற்கோள் காட்டப்பட்டதுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இந்த வாக்கியம் ஸ்வ போதா புனைந்துவிட்ட ''புரட்சி நடக்கவிருக்கும் காலத்துக் குரிய நோக்கு நிலை''* அபத்தம் என்று தெளிவாகப் புலப்ப டுத்துகிறது. பச்சையாகச் சொன்னல், இந்தத் தனி ''நோக்கு நிலைக்கு'' அர்த்தம் விவாதிப்பதும் தயாரிப்புச் செய்வதும் ''இப்போது'' காலங்கடந்ததாகிவிட்டன என்பதே. அப்படி யானல், ''ஏட்டறிவுத் தனத்தை'' எதிர்க்கும் இந்த மாவீர ரைக் கேட்கிறேம்: ''தத்துவம்,** போர்த்தந்திரம் பற்றிய பிரச்சினைகள்'' குறித்து நீங்கள் 132 பக்கங்கள் கொண்ட குறுநூல் எழுதியதின் பயன் என்ன? ''அடியுங்கள், வீழ்த் துங்கள்!'' என்று சுருக்கமாக அறைகூவல் விடுக்கும் 132,000 துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதுதானே,—அதுவல்லவா

---

* ''புரட்சி நடக்கவிருக்கும் காலம்'', பக்கம் 62.

** நதேழ்தின் தம் ''தத்துவப் பிரச்சினைகள் பற்றிய மதிப் புரையில்'' தத்துவப் பிரச்சினைகள் பற்றிய விவாதத்திற்கு ஒரு பங்கும் செலுத்தவில்லை; பின்வரும் வாசகப் பகுதியைத் தவிர என்று ஒருக்கால் சொல்லலாம், ஆனல் அது ''புரட்சி நடக்கவிருக்கும் காலத்துக்குரிய நோக்கு நிலையிலிருந்து'' பார்த்தால் மிகமிக வேடிக்கையாயிருக்கிறது: ''மொத்தத்தில் பெர்ன்ஷ்டைன்வாதம் இன்றைய தருணத்தில் நமக்கு அவசர அவசியமற்றதாகி வருகிறது; அதே போலத்தான் திரு. ஸ்துரூவே ஏற்கெனவே பதவி சம்பாதித்துக் கொண்டு விட் டதை திரு. ஆதமோவிச் நிரூபிப்பாரா அல்லது திரு. ஸ்துரூவே திரு. ஆதமோவிச்சை மறுத்துப்பேசிப் பதவியை விட்டு விலக மறுப்பாரா என்கிற பிரச்சினையும் அவசர அவசியமற்ற தாகி வருகிறது—இதனல் ஒரு வித்தியாசமும் ஏற்படவில்லை, ஏனெனில் புரட்சிக்கான தருணத்துக்கு மணியடித்தாகிவிட் டது'' (பக்கம் 110). நதேழ்தின் தத்துவத்தின்பால் காட்டும் முடிவற்ற புறக்கணிப்புக்கு இதைவிட எடுப்பான உதாரணத் தைச் சிந்தித்துப்பார்க்க முடியாது. ''புரட்சி நடக்க விருக் கும் காலத்தை'' நாங்கள் பிரகடனப்படுத்திவிட்டோம், எனவே சுத்தமான மார்க்ஸியவாதிகள் விமர்சகர்களை அவர்களின் நிலைகளினின்று துரத்தியடிப்பதில் இறுதியாக வெற்றி பெறுகி ருர்களா இல்லையா என்பதிலே ''ஒரு வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை''யாம்!! நாம் விமர்சகர்களுடன் நடத்தும் தத் துவார்த்தப் போர்களின் விளைவுகள் புரட்சியின்போதுதான் நமக்கு மிகவும் தேவைப்படும், அப்போதுதான் அவர்களின் நடைமுறை நிலைகளை எதிர்ந்து நாம் உறுதியாகப் போராட முடியும்; இதை நம் போலி அறிஞர் காணத் தவறுகிருர்!

''புரட்சி நடக்கவிருக்கும் காலத்துக்குரிய நோக்கு நிலைக்கு'' அழகாயிருந்திருக்கும்?

இஸ்க்ரா செய்வது போல், நாடு தழுவிய அரசியல் கிளர்ச்சியைத் தமது வேலைத் திட்டத்துக்கும் தமது போர்த்தந்திரத்துக்கும் தமது அமைப்புத் துறைப் பணிக்கும் மூலைக்கல்லாக வைத்துக் கொள்கிறவர்கள் புரட்சியைத் தவற விடுவது அரிதினும் அரிதாகும். அனைத்து ருஷ்யப் பத்திரிகையினின்று விரிந்து படர்ந்து வரும் தொடர்புகளைக் கொண்ட வலைப் பின்னலை அமைப்பதில் இன்று ருஷ்யா முழுவதிலும் ஈடுபட்டிருப்பவர்கள் அந்த வசந்தகால நிகழ்ச்சிகளைத் தவறவிடவில்லை என்பது மட்டுமல்ல, அதற்குப் பதிலாக அந்நிகழ்ச்சிகளை முன்னறிந்து கூறும் வாய்ப்பையும் அவர்கள் நமக்கு அளித்தார்கள். இஸ்க்ராவின் 13ஆம், 14ஆம் இதழ்களில் வர்ணிக்கப்பட்டிருந்த ஆர்பாட்டங்களையும்[101] அவர்கள் தவறவிடவில்லை; மாறாக, அவற்றில் கலந்து கொண்டார்கள், தன்னியல்பாக நிமிர்ந்து எழும் மக்களுக்குத் துணை போவது தங்கள் கடமை என்று தெளிவாக உணர்ந்து இருந்தார்கள்; அதே நேரத்தில், பத்திரிகை வாயிலாக இந்த ஆர்பாட்டங்களைப் பற்றி ருஷ்யாவிலுள்ள எல்லாத் தோழர்களும் தெரிந்துகொள்ள உதவுவதும் தாங்கள் சேகரித்த அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ள உதவுவதும் தங்கள் கடமை என்றும் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். அவர்கள் உயிரோடு இருக்கும் வரை புரட்சியைத் தவறவிட மாட்டார்கள். புரட்சி நம்மிடம் முதன்மையாகக் கோருவது கிளர்ச்சி செய்வதில் அனுபவம், ஒவ்வொரு கண்டனத்தையும் (சமூக-ஜனநாயகவாத வகையில்) ஆதரிக்கும் திறமை, தன்னியல்பான இயக்கத்தை நண்பர்களின் தவறுகளினின்றும் எதிரிகளின் சூழ்ச்சிகளினின்றும் பாதுகாத்தபடியே வழிகாட்டிச் செலுத்தும் திறமை ஆகியவையே.

ஆக, பொதுப் பத்திரிகைக்காகக் கூட்டாக வேலை செய்வதின் மூலமாக ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகையை மையமாகக் கொண்ட அமைப்புக்கான திட்டத்தை இவ்வளவு விரிவாக வற்புறுத்தும்படி நம்மைக் கட்டாயப்படுத்தும் கடைசி காரணத்திற்கு வந்திருக்கிறோம். ஒரு செயல்துடிப்புள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்புக்கு வேண்டிய நெளிவு சுளிவுத் தன்மையை இவ்வகை அமைப்பு ஒன்றுதான் உறுதிப்

படுத்திக் கொடுக்கும். நெளிவுசுளிவுத் தன்மை என்ருல், மிகவும் வேறுபட்ட, விரைவாக மாறிவருகிற போராட்ட நிலைமைகளுக்கு ஏற்ப உடனுக்குடன் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும் ஆற்றல், ''ஒரு புறத்தில் எதிரி தன் சக்திகள் அனைத்தையும் ஓரிடத்தில் குவித்து வலிமை மிகுந்திருக்கும் போது அந்த எதிரியுடன் பகிரங்கமான போரில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது; மறுபுறத்தில், அந்த எதிரியின் எளிதிலியங்காத் தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு அவன் சிறிதும் எதிர்பாராத நேரத்திலும், இடத்திலும் தாக்குவது என்பதாம்.''* எழுச்சிகளையும் தெருப்போராட்டத்தையும் மட்டும் எதிர்பார்த்தோ, ''சுவையற்ற அன்ருடப் போராட்டத்தின் முன்னேற்ற நடையை'' மட்டும் வைத்தோ கட்சி அமைப்பைக் கட்டுவது உண்மையிலே ஒரு கொடிய தவருக இருக்கும். நாம் எப்போதும் நமது அன்ருட வேலையை நடத்திக் கொண்டிருக்க வேண்டும். எப்போதும் எந்த ஒரு நிலைமைக்கும் தயாராக இருக்க வேண்டும், ஏனெனில் எப்போது

---

* இஸ்க்ரா, இதழ் 4: ''எங்கிருந்து தொடங்குவது?''. நதேழ்தின் எழுதுகிருர்: ''புரட்சி நடக்கவிருக்கும் காலத்துக்குரிய நோக்கு நிலை ஏற்காதவர்களான புரட்சிப் பண்பாடுவாதிகள் நீண்ட காலத்துக்கு வேலை செய்து வரவேண்டியிருக்கும் வாய்ப்புநிலை பற்றிச் சிறிதும் கலக்கம் அடையவில்லை'' என்று (பக்கம் 62). இதற்கு நாம் சொல்ல வேண்டியிருப்பது இதுதான்: மிகவும் நீண்ட காலத்துக்கான வேலைக்கு அரசியல் போர்த்தந்திரத்தையும் அமைப்புத்துறைத் திட்டத்தையும், அதே நேரத்தில் இந்த வேலையைச் செய்து வரும் நிகழ்வுப் போக்கிலேயே நம் கட்சி தன் தலைமை இடத்தில் நின்றபடியே நிகழ்ச்சிகளின் முன்னேற்ற நடை வேகமடையும் பொழுது எந்த மாற்றத்திலும் தன் கடமையை நிறைவேற்றுவதற்கான தயார்நிலையையும் உறுதிப்படுத்தாவிட்டால்—இதைச் செய்வதில் நாம் வெற்றிபெருவிட்டால் நாம் இரங்கத்தக்க அரசியல் சாகஸவாதிகளாகக் காட்டிக் கொண்டவர்களாவோம். சமூக-ஜனநாயகவாதத்தின் இலட்சியம் மனிதகுலம் முழுவதின் வாழ்க்கை நிலைமைகளை அடிப்படையாகவே உருமாற்றிவிடுவதாகும், எனவே வேலை செய்யவேண்டியிருப்பதின் கால நீளத்தைப் பற்றி ஒரு சமூக-ஜனநாயகவாதி ''கலக்கமடைவதற்கு'' இடமே கிடையாது; நதேழ்தின் ஒருவர்தான் இதை மறக்கமுடியும், ஏனெனில் அவர் நேற்றைய தினத்திலிருந்துதான் தம்மை ஒரு சமூக-ஜனநாயகவாதியாகச் சொல்லிக் கொள்ளத் தொடங்கினுர்.

எழுச்சி நிகழும் காலம் போய் அமைதி நிலவும் காலம் வருமென்று முன்கூட்டி அறிவது பெரும்பாலும் அசாத்தியம். என்றபோதிலும் அவ்வாறு முன்கூட்டி அறிய சாத்தியப்படும் வழக்குகளில் நம் அமைப்பை மறுநிர்மாணம் செய்துகொள் வதற்கு இந்த முன்னறிவை நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை; காரணம், ஓர் எதேச்சாதிகார நாட்டில் இம் மாற்றங்கள் திகைக்கத்தக்க விரைவுடன் நிகழ்கின்றன, சில சமயங்களில் ஜாராட்சி யானிச்சாரிகள்[102] நடத்திய இரவுத் தாக்கு ஒன்றிலிருந்தே இவை தொடரக்கூடும். புரட்சியை யுங்கூட தனியொரு செயலாகக் கருதவே கூடாது (நதேழ் தின் வகையறு இப்படித்தான் கருதுவதாகத் தெரிகிறது). ஏறத்தாழ பலமான எழுச்சிகளும் ஏறத்தாழ முழுமையான அமைதி நிலவும் காலங்களும் விரைவாக மாறிமாறி நிகழக் கூடிய ஒரு வரிசைத் தொடராகவே புரட்சியைக் கருத வேண்டும். இக்காரணம் பற்றியே, நம் கட்சியமைப்பின் நடவடிக்கையின் முதன்மையான உள்ளடக்கமாகவும் குவி மையமாகவும் இருக்கவேண்டியது மிகவும் பலமான எழுச்சிக் காலத்திலும் முழு அமைதி நிலவும் காலத்திலும் ஒருங்கே சாத்தியமானதும் அவசியமானதுமான வேலையாகும், அதா வது அரசியல் கிளர்ச்சி நடத்தும் வேலையாகும். இந்த அரசி யல் கிளர்ச்சி வேலை ருஷ்யா முழுவதிலும் தொடர்புபடுத்தப் பட்டிருக்க வேண்டும், எல்லா வாழ்க்கைத் துறைகளின் மீதும் ஒளி பாய்ச்ச வேண்டும், ஆனமட்டும் பரவலான மக்கட் பகுதியினரிடையே நடத்தப்பட வேண்டும். ஆனால் மிக அடிக் கடி வெளியிடப்பட்டுவரும் ஓர் அனைத்து ருஷ்யப் பத்திரிகை இல்லாமல் இன்றைய ருஷ்யாவில் இவ்வேலையைப்பற்றிச் சிந்திக்கவே முடியாது. இந்தப் பத்திரிகையைச் சுற்றிச் சூழ்ந்து உருவாகக்கூடிய அமைப்பு, அதன் கூட்டாளிகளின் (அதாவது, அந்தப் பத்திரிகைக்காக வேலை செய்யும் எல்லோரையும் குறிக்கும் பரந்த அர்த்தத்தில் இச்சொல்லைப் பயன்படுத்து கிறோம்) அமைப்பு எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கும்; தீவிரமான புரட்சித் ''தளர்ச்சி'' நிலவும் காலங்களில் கட்சி யின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் தொடர்ச்சியை யும் உயர்த்திப்பிடிப்பதிலிருந்து நாடுதழுவிய ஆயுதமேந்திய எழுச்சிக்குத் தயாரிப்பது, நேரம் குறிப்பது, நடத்திமுடிப் பது வரை எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கும்.

ஏதாவது உள்ளூர் ஒன்றிலோ பலவற்றிலோ எல்லாத் தோழர்களும் சிறைப்படுத்தப்படுவது போன்ற மிகச் சாதாரணமான நிகழ்ச்சியைச் சித்திரித்துப் பாருங்கள். எல்லா உள்ளூர் அமைப்புகளையும் இணைக்கும்படியான தனியொரு பொதுவான, ஒழுங்குமுறையான நடவடிக்கை இல்லாத நிலையில் இப்படிப்பட்ட கைதுகள் அடிக்கடி பல மாதங்களுக்கு வேலை நின்று போய்விடுகிற நிலைமையை உண்டாக்குகின்றன. ஆனால், எல்லா உள்ளூர் அமைப்புகளுக்கும் ஒரே பொதுவான நடவடிக்கை இருந்திருந்தால் அப்போது, மிகப் பலபேர் கைது செய்யப்படும் நிலைமை ஏற்பட்டாலும் கூட இரண்டு மூன்று செயல்முனைப்புள்ள நபர்கள் ஒருசில வாரங்களுக்குள்ளே பொது மையத்திற்கும் புதிய இளைஞர் குழுக்களுக்கும் (இவை இன்றுகூட வெகு விரைவிலே முளைத்தெழுவதை நாம் அறிவோம்) இடையே தொடர்பு ஏற்படுத்தி விட முடியும். கைதுகளினால் இடர்ப்படுத்தப்பட்ட பொதுவான நடவடிக்கை எல்லோருக்கும் தெரிகிறதாயிருக்கும் நிலை ஏற்படும்போது புதிய குழுக்கள் தோன்றவும் மையத்துடன் மேலும் விரைவாக தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

மறுபுறத்தில் ஒரு மக்கள் திரளின் புரட்சியெழுச்சியைச் சித்திரித்துப் பாருங்கள். இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும் இதற்காக நாம் தயார் செய்ய வேண்டும் என்று அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் எப்படி? என்பதே விஷயம். புரட்சியெழுச்சியைத் தயாரிப்பதற்கு மத்தியக் குழு எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகளை நியமிக்க முடியாதென்பது உறுதி. நம்மிடம் ஒரு மத்தியக் குழு இருந்திருந்தாலுங்கூட இன்றைய ருஷ்ய நிலைமைகளில் இப்படி நியமிப்பதின்மூலம் அது எதையும் சாதித்திருக்க முடியாது. ஆனால் பொதுவான பத்திரிகையை நிலைநிறுத்தியும் வினியோகித்தும் வரும் போக்கில் உருவாகக் கூடிய ஏஜெண்டுகளைக்* கொண்ட வலைப்பின்னலமைப்பு ஒரு புரட்சி

---

* அந்தோ, என்ன கஷ்டம்! மீண்டும் ''ஏஜெண்டுகள்'' எனும் அந்த மோசமான வார்த்தையை உதிர்த்துவிட்டேனே! மார்தீனவ் வகையறாவின் ஜனநாயக ரசனை மிக்க காதுகளுக்கு அது கடூரமாகப் படுகிறதாம். 1870-80களில் இருந்த

எழுச்சிக்கான அறைகூவலுக்காக ''கை கட்டிக் காத்திருக்க'' வேண்டியிராது, ஒரு புரட்சி எழுச்சி நிகழ்வதாயிருந்தால் மிகப் பெரும்பாலும் வெற்றி பெறுவதை உறுதிசெய்யக் கூடியதான ஒழுங்குமுறையான நடவடிக்கையை அது செய்து கொண்டிருக்க முடியும். இவ்வகை நடவடிக்கை உழைப்பாளி மக்களின் மிக விரிந்து பரந்த பகுதியினருடனும் எதேச்சாதிகார ஆட்சி மீது அதிருப்தி கொண்டுள்ள எல்லாச் சமுதாயப் பிரிவினருடனும் நமக்குள்ள தொடர்புகளைப் பலப்படுத்தும்; இது ஒரு புரட்சியெழுச்சிக்கு எவ்வளவோ முக்கியமானதாகும். இவ்வகை நடவடிக்கைதான் பொதுவான அரசியல் நிலைமையைச் சரியாக மதிப்பிடும்படியான திறமையையும், அதன் வழியாக ஒரு புரட்சியெழுச்சிக்குச் சரியான தருணத்தைத் தேர்ந்தெடுக்கும் திறமையையும் வளர்த்துக் கொள்ள உதவும். இவ்வகை நடவடிக்கைதான் ருஷ்யா முழுவதையும் கிளர்ச்சிகொள்ளச் செய்துவரும் அரசியல் பிரச்சினைகளுக்கும் இடைநிகழ்ச்சிகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் எல்லா உள்ளூர் அமைப்புகளும் ஒரே நேரத்தில் பதிலளிக்கும்படியும் இவ்வகை ''இடைநிகழ்ச்சிகளுக்கு'' மிகவும் வீறுடனும் சீராகவும் சூழ்வினைத்திறத்துடனும் எதிர் செயல் புரிந்திடவும் பயிற்சி தரும்; ஏனெனில் அரசாங்கத்திற்கு (மக்களை

---

வீரர்களைப் புண்படுத்தாத இந்தச் சொல் 1890-1900களின் கற்றுக்குட்டிகளைப் புண்படுத்துகிறதேனோ தெரியவில்லை. இந்தச் சொல் எனக்குப் பிடித்திருக்கிறது; ஏனெனில் எல்லா ஏஜெண்டுகளும் தங்கள் சிந்தனைகளையும் செயல்களையும் அர்ப்பணித்துப் பேணும் பொதுவான இலட்சியத்தை இது தெளிவாகவும் நறுக்காகவும் குறிக்கிறது. இதை விட்டு வேறு சொல் ஒன்று நான் எடுத்தாளவேண்டியேற்பட்டால் ''கூட்டாளி'' எனும் சொல்லைத்தான் தேர்ந்தெடுப்பேன், எனினும் அதில் ஓரளவுக்கு ஏட்டறிவுத்தனமும் தெளிவின்மையும் தொனிக்கிறது. இராணுவ முறையில் அமைந்த ஏஜெண்டுகளின் அமைப்புதான் நமக்கு வேண்டும். ஆனால் மார்தினவ் கூட்டத்துக்கு (குறிப்பாக வெளிநாட்டிலிருக்கிறவர்களுக்கு) ''தளபதியாக நீ இரு நீ இரு என்று பரஸ்பரம் பதவி கொடுத்துக் கொள்வதே'' பிடித்தமான விளையாட்டாக இருக்கிறதல்லவா, எனவே அவர்கள் ''நாடுகடவுச் சீட்டு ஏஜெண்டுகள்'' என்பதற்குப் பதிலாக ''புரட்சியாளர்களுக்கு நாடுகடவுச் சீட்டு வழங்குவதற்கான தனிப் பிரிவின் தலைவர்'' என்றெல்லாம் சொல்ல விரும்பக் கூடும்.

வரும் மிகவும் வீறுடனும் மிகவும் சீராகவும் மிகவும் சூழ்வினைத்திறத்துடனும் அளிக்கும் ''பதில்'' என்பதே ஒரு புரட்சியெழுச்சியின் சாராம்சமாகும். கடைசியாக, இவ்வகை நடவடிக்கைதான் ருஷ்யா முழுவதிலுமுள்ள எல்லாப் புரட்சிகரமான அமைப்புகளும் ஒன்றோடொன்று மிகத் தொடர்ச்சியான, அதே நேரத்தில் மிகவும் இரகசியமான தொடர்புகளை வைத்து வருவதற்குப் பயிற்சி தரும், அவ்வழியே உண்மையான கட்சி ஒற்றுமையையும் தோற்றுவிக்கும். ஏனெனில் இவ்வகைத் தொடர்புகளில்லாமல் புரட்சியெழுச்சிக்குரிய திட்டத்தைக் கூட்டாக விவாதிப்பதோ, புரட்சியெழுச்சி நிகழவிருக்கும் நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமான தயாரிப்பு நடவடிக்கைகளை (இவை மிகவும் கண்டிப்புடன் இரகசியமாக வைக்கப்பட வேண்டியவை) எடுத்துக் கொள்வதோ சாத்தியமாயிராது.

சுருங்கச் சொன்னால், ''ஓர் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகைக்கான திட்டம்'' என்பது வறட்டுத் தத்துவவாதத்தாலும், ஏட்டறிவுத்தனத்தாலும் பீடிக்கப்பட்டுள்ள செயல் தொடர்பற்ற ஊழியர்களுடைய உழைப்பிலே விளைந்த பயன் அல்லவே அல்ல (இவ்விஷயத்தைப் பற்றி அதிகமாகச் சிந்திக்காதவர்களுக்குத்தான் அப்படித் தோன்றியது), அவசர அவசியமான அன்றாட வேலையை ஒரு கணமேனும் மறவாமல் புரட்சியெழுச்சிக்காக உடனடியான முழுவிரிவான தயாரிப்புச் செய்வதற்கு வேண்டிய மிகவும் நடைமுறை வகைப்பட்ட திட்டமே அது.

## முடிவு

ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வரலாற்றை மூன்று காலப்பகுதிகளாகத் தெளிவாகப் பிரிக்கலாம்:

முதலாவது காலப்பகுதி சுமார் பத்தாண்டுகள், அதாவது 1884இலிருந்து 1894வரை அடங்கியது. இக்காலப்பகுதியில் சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவமும் வேலைத்திட்டமும் தோன்றி வளர்ந்து கெட்டிப்பட்டது. இந்தப் புதிய போக்கின் ஆதரவாளர்கள் ருஷ்யாவில் வெகுசிலரே இருந்தனர். தொழிலாளி வர்க்க இயக்கம் இல்லாமலே சமூக-ஜனநாயகவாதம் இருந்து வந்தது, ஓர் அரசியல் கட்சி என்கிற வகையில் அது கரு நிலையிலேயே இருந்தது.

இரண்டாவது காலப்பகுதி மூன்று-நான்கு ஆண்டுகள், 1894லிருந்து 1898வரை, உள்ளது. இக்காலப்பகுதியில் சமூக-ஜனநாயகவாதம் ஒரு சமுதாய இயக்கமாக, திரளான மக்களின் எழுச்சியாக, ஓர் அரசியல் கட்சியாக அரங்கிலே தோன்றியது. இந்தக் காலப்பகுதி அதன் குழந்தைப் பருவமும் இளமைப் பருவமுமாகும். நரோதியத்தை எதிர்த்துப் போராட வேண்டும், தொழிலாளிகளிடையே சென்று பணியாற்ற வேண்டும் எனும் ஒரு மாபெரும் பொதுவான் ஆர்வம் படிப்பாளிப் பகுதியினரைப் பற்றிக் கொண்டது; தொழிலாளர்கள் வேலைநிறுத்தச் செய்கையில் ஒரு பொதுவான உற்சாகத்தைக் காட்டினர். இயக்கம் மாபெரும் முன்னேற்றம் கண்டது. பெரும்பான்மையான தலைவர்கள் இளைஞர்களே, ''முப்பத்தைந்து வயது'' (திரு நி. மிகைலோவ்ஸ்கிக்கு இது ஒரு மாதிரியான இயல்பான எல்லைக்கோடாகத் தோன்றி

யது) எட்டாதவர்களே. இளமையின் காரணமாக அவர்கள் நடைமுறை வேலையில் பயிற்சியற்றவர்கள் எனக் காட்டிக் கொண்டு திகைப்பூட்டும் வேகத்திலே அரங்கை விட்டகன் றனர். என்றாலும் அவர்களுடைய நடவடிக்கையின் வாய்ப் பெல்லை பெரும்பாலும் மிகவும் விரிந்தகன்றிருந்தது. அவர் களில் பலருடைய புரட்சிச் சிந்தனை நரோத்னயா வோல்யா வின் ஆதரவாளர்கள் என்கிற வகையிலிருந்து தொடங்கி யது. அநேகமாக அனைவருமே தம் இளமைப் பிராயத்தில் பயங்கரவாத வீரர்களை உற்சாகமாகப் போற்றி வணங்கினர். அந்த வீர மரபுகளின் உள்ளத்தை அள்ளும் மனப்பதிகை களைக் கைவிடுவதற்கு ஒரு போராட்டமே நடத்த வேண்டி யிருந்தது, அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து, நரோத் னயா வோல்யாவிடம் நீடித்துப் பற்றுறுதியுடன் பின்பற்றி வரத் தீர்மானித்துக் கொண்ட நபர்களுடன் (அவர்கள்பால் இளம் சமூக-ஜனநாயகவாதிகள் ஆழ்ந்த மதிப்பு வைத்திருந் தனர்) தனிப்பட்ட உறவுகளை அறுத்துக் கொள்ள வேண்டி யிருந்தது. இந்தப் போராட்டத்தால் இளந்தலைவர்களும் ஒவ்வொரு போக்கையும் சேர்ந்த சட்டவிரோதமான இலக்கி யத்தைப் படிக்கும்படியும் சட்டபூர்மான நரோதியத்தின் பிரச்சினைகளை உன்னிப்பாகப் பயிலும்படியும் சுயமுயற்சியாக வே போதனை பெறும்படியும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இப்போராட்டத்தில் பயிற்சி பெற்று சமூக-ஜனநாயகவாதி கள் தொழிலாளிவர்க்க இயக்கத்தில் இறங்கினார்கள்; அப் படிச் செய்ததில் அவர்கள் தங்கள் பாதையிலே ஒளி பெய்து தடம் காட்டிய மார்க்ஸியத் தத்துவத்தையோ எதேச்சாதி கார ஆட்சியைத் தூக்கியெறியும் பண்பையோ ''ஒரு கண மேனும்'' மறக்கவில்லை. 1898ம் ஆண்டு வசந்தகாலத்தில் கட்சி உருவாகியது,[103] இது இக்காலப்பகுதியைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகளின் மிகவும் எடுப்பான, அதே நேரத்தில் கடைசியான, செய்கையாகும்.

மூன்றாவது காலப்பகுதி 1897ம் ஆண்டில் தயாரானது, இதை நாம் மேலே பார்த்தோம், இது 1898 இல் *(1898—?)* இரண்டாவது காலப்பகுதியைத் திட்டவட்டமாக வெட்டி விட்டது. இந்த மூன்றாவது காலப்பகுதி கருத்து வேற்று மையையும் அணிக் குலைவையையும் ஊசலாட்டத்தையும் கண்ட காலப்பகுதியாகும். இளமைப் பிராயத்தில் இளை

ஞனின் குரல் உடைகிறது. எனவே இக்காலப் பகுதியில் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் குரலில் உடைவு ஏற்படத் தொடங்கியது, அபஸ்வரம் கேட்கத் தொடங்கியது—ஒரு புறத்தில் திருவாளர்கள் ஸ்துருவே, புரொகபோவிச், புல்காக்கொவ், பெர்தியாயிவ் ஆகியோரின் எழுத்துக்களிலும், மறுபுறத்தில் வி.இ., ஆர்.எம்., ப.கிரிச்சேவ்ஸ்கி, மார்தீனவ் ஆகியோரின் எழுத்துக்களிலும். எனினும், பிரிந்து திசை கெட்டுத் திரிந்தவர்களும் பின்வாங்கியவர்களும் தலைவர்கள் மட்டுமே; இயக்கம் என்னவோ தொடர்ந்து வளர்ந்து அசுர நடையில் முன்னேறியது. பாட்டாளி வர்க்கப் போராட்டம் தொழிலாளர்களின் புதிய பகுதிகளுக்குப் பரவி ருஷ்யா வெங்கும் விரிந்தது, அதே நேரத்தில் அது மாணவரிடையேயும் மக்களின் பிற பகுதியினரிடையேயும் ஜனநாயக உணர்ச்சி மீண்டும் தலையெடுக்கத் தூண்டிவிட்டது. இருந்த போதிலும், தன்னியல்பான எழுச்சியின் விரிவுக்கும் வலுவுக்கும்முன்னே தலைவர்களின் அரசியல் உணர்வு மண்டியிட்டது: சமூக-ஜனநாயகவாதிகளிடையே வேறொரு வகையினர், ''சட்டபூர்வமான'' மார்க்ஸிய இலக்கியத்தை மட்டும் படித்துப் பயிற்சிபெற்ற வகைப்பட்ட ஊழியர்கள், ஆதிக்க நிலைக்கு வந்துவிட்டனர்; எவ்வளவுக்கெவ்வளவு மக்களின் தன்னியல்பு தலைவர்களிடமிருந்து அதிகமாக அரசியல் உணர்வைக் கோரியதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த இலக்கியம் தனது போதாமையைக் காட்டிக் கொண்டது. தலைவர்கள் தத்துவ விஷயத்திலும் (''விமர்சன சுதந்தரம்'') நடைமுறை விஷயத்திலும் (''பக்குவமின்மை'') பின்னடைந்திருந்தது மட்டுமன்றி எல்லாவிதமான படாடோபமான வாதங்களைக் கொண்டு தம் பிற்பட்ட நிலையை நியாயப்படுத்தவும் முயன்றனர். சட்டபூர்வமான இலக்கியத்தில் பிரென்டானோவின் ஆதரவாளர்களும் சட்டவிரோதமான இலக்கியத்தில் வால்பிடிக்கும் போக்கைச் சேர்ந்தவர்களும் சமூக-ஜனநாயகவாதத்தைத் தொழிற்சங்கவாதத்தின் தரத்திற்குத் தாழ்த்திவிட்டனர். "Credo" வேலைத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப் படலாயிற்று—குறிப்பாக, சமூக-ஜனநாயகவாதிகளின் ''பக்குவமற்ற வழிமுறைகள்'' சமூக-ஜனநாயகவாத ரீதியில் இல்லாத புரட்சிகரமான போக்குகள் மீண்டும் தலையெடுக்கும்படி செய்தபோது.

என்னமோ ஒரு ரபோச்சியே தேலோவிற்காக இத்தனைப் பக்கங்கள் எழுதி விளக்க வேண்டுமா? என்று வாசகர் விமர்சிக்கத் தலைப்படுவாரேயானால் நான் சொல்லக் கூடியது இதுதான்; ரபோச்சியே தேலோ இந்த மூன்றாவது காலப் பகுதியின் ''உணர்ச்சியை'' மிக எடுப்பாகப் பிரதிபலித்ததினாலேதான் அதற்கு ''வரலாற்று ரீதியான'' குறிபொருள் கிடைத்தது.* அரசியல் பச்சோந்திகளான கிரிச்சேவ்ஸ்கி மார்தீனவ் வகையறாவுக்குத்தான் கருத்து வேற்றுமையையும் ஊசலாட்டத்தையும், ''விமர்சனத்திற்கும்'' ''பொருளாதாரவாதத்திற்கும்'' பயங்கரவாதத்திற்கும் சலுகை காட்டத் தயாராயிருக்கும் நிலையையும் சரிவர வெளியிட முடிந்தது, முன்பின் முரணற்ற ஆர்.எம்.க்கு முடியவில்லை. ''பரம நிலையிலுள்ளதை'' வணங்கும் ஒருவன் நடைமுறை வேலைபால் காட்டும் இறுமாந்த இளக்காரம் அல்ல, சின்னத்தனமான நடைமுறையும் தத்துவத்தின்பால் முற்றான உதாசீனமும் கலந்த கலவைதான் இந்தக் காலப்பகுதியை இனம் குறித்துக் காட்டியது. இக்காலப்பகுதியில் வெளிச்சம் போட்ட வீரர்கள் ''பகட்டான சொற்றொடர்களை'' நேரடியாக நிராகரிப்பதில் ஈடுபடுவதை விட அவற்றைக் கொச்சைப் படுத்துவதிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்தார்கள். விஞ்ஞான சோஷலிஸம் ஓர் உள்ளொற்றுமையுள்ள புரட்சித் தத்துவமாய் இருப்பது போய், புதிதாக வெளிவந்த ஒவ்வொரு ஜெர்மன் பாடப்புத்தகத்திலும் இருக்கிறதை எடுத்துத் ''தாராளமாகக்'' கலந்துவிட்ட ஒரு களேபரம் ஆகிவிட்டது; ''வர்க்கப் போராட்டம்'' எனும் கோஷம் மேன்மேலும் விரிவான முனைப்பான நடவடிக்கைக்குத் தூண்டிவிடவில்லை,

---

* Den Sack schlägt man, den Esel meint man (கழுதையை நினைத்துக் கொண்டு சாக்குப்பையை அடிப்பது) எனும் ஜெர்மன் பழமொழியைக் காட்டியும் நான் பதில் சொல்லமுடியும். ரபோச்சியே தேலோ மட்டுமல்ல, பெருந்திரளான நடைமுறை ஊழியர்களும் தத்துவாசிரியர்களுங்கூட அன்றைய ஃபேஷன் ஆக இருந்த ''விமர்சனத்தால்'' அடித்துச் செல்லப்பட்டார்கள், தன்னியல்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் குழம்பிப்போனார்கள், நம் அரசியல், அமைப்புத் துறைப் பணிகள் பற்றிய சமூக-ஜனநாயகவாதக் கருத்தோட்டத்தினின்று நழுவித் தொழிற்சங்கவாதக் கருத்தோட்டத்தில் விழுந்தார்கள்,

''பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது'' என்றதனால் அது ஒரு பூச்சுமருந்தாகவே பயன்பட்டது; கட்சி எனும் கருத்து புரட்சியாளர்களைக் கொண்ட ஒரு செயல்துடிப்புள்ள அமைப்பைத் தோற்றுவிப்பதற்கு வாய்த்த அறைகூவலாகப் பயன்படவில்லை, ஒரு தினுசான ''புரட்சிகரமான அதிகார வர்க்கத்தை'' நியாயப்படுத்துவதற்கும் குழந்தைத்தனமாக ''ஜனநாயக'' வடிவங்களை வைத்து விளையாட்டு காட்டுவதை நியாயப்படுத்துவதற்கும் அது பயன்படுத்தப்பட்டது.

மூன்றாவது காலப்பகுதி எப்போது முடிவடையும், (பல அறிகுறிகள் இன்று முன்னறிவித்து வரும்) நான்காவது காலப் பகுதி எப்போது தொடங்கும் என்பதை நாமறியோம். நாம் வரலாற்றைவிட்டு நிகழ்காலத்திற்கும் ஓரளவுக்கு எதிர் காலத்தை நோக்கியும் வந்து கொண்டிருக்கிறோம். எனினும் ஒரு விஷயத்தை நாம் உறுதியுடன் நம்புகிறோம்; நான்காவது காலப்பகுதி செயல்துடிப்புள்ள மார்க்ஸியம் கெட்டிப்படுவதில் கொண்டு போய் விடும், ருஷ்ய சமூக-ஜனநாயகவாதம் நெருக்கடியிலிருந்து வெளிப்பட்டு முழு வளர்ச்சி உருவிலே நிற்கும், சந்தர்ப்பவாதப் பின்னணிப் படையை ''விலக்கி'' மிகப் புரட்சிகரமான வர்க்கத்தின் உண்மையான முன்னணிப் படை அதனிடத்தில் வரும் என்று.

இவ்வகையான ''விலக்கலைச்'' சாதிக்க அறைகூவி அழைக்கும் அர்த்தத்திலும் மேலே விளக்கியதனைத்தையும் சுருக்கித் தரும் வகையிலும் ''என்ன செய்ய வேண்டும்?'' எனும் கேள்விக்கு நாம் கொடுக்கக்கூடிய சுருக்கமான பதில் இது தான்:

மூன்றும் காலப்பகுதிக்கு முற்றுப்புள்ளியிடுக.

## "ரபோச்சியே தேலோவுடன்" "இஸ்க்ராவை" ஒன்றுபடுத்தும் முயற்சி

இனி பாக்கியிருக்கும் வேலை, ரபோச்சியே தேலோவுடன் வைத்திருந்த அமைப்புத்துறை உறவுகளில் இஸ்க்ரா வகுத்துக்கொண்டு முரணின்றி பின்பற்றி வந்த போர்த்தந்திரத்தை வர்ணிப்பதுதான். இந்த போர்த்தந்திரம் இஸ்க்ரா இதழ் 1ல் ''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கத்தில் பிளவு'' என்று தலைப்பிட்ட கட்டுரையில் முழுமையாக வெளியிடப்பட்டது. நம் கட்சியின் முதல் காங்கிரஸில் தன் வெளிநாட்டுப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்ட உண்மையான ''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'' இரண்டு அமைப்புகளாகப் பிளவுபட்டு விட்டது எனும் நோக்கு நிலையை நாம் துவக்கத்தில் இருந்தே எடுத்துக் கொண்டிருந்தோம்; கட்சியின் பிரதிநிதித்துவம் சம்பந்தப்பட்ட பிரச்சினை முடிவு செய்யப்படாமலே இருந்தது எனும் நோக்கு நிலையையும் துவக்கத்தில் இருந்தே எடுத்துக் கொண்டிருந்தோம்; நிரந்தரமான சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவில்[104] ருஷ்யாவின் பிரதிநிதிகளாக இரண்டு உறுப்பினர்களை [பிளவுண்ட ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' இரு பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியாக] பாரிஸில் நடந்த சர்வதேச காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்டதானது தற்காலிகமாகவும் நிபந்தனையின் பேரிலும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருந்தது. அடிப்படையாகவே ரபோச்சியே தேலோவின் நிலை தவருனது என்று நாம் கூறினோம்; கோட்பாடு வகையில் திண்ணமாக ''உழைப்பாளர் விடுதலை''க் குழுவின் பக்கம் நின்றோம், அதே நேரத்தில் பிளவு சம்பந்தப்

பட்ட விபரங்களில் இறங்க மறுத்துவிட்டோம், சுத்தமாக நடைமுறை சம்பந்தப்பட்ட வேலைத்துறையில் ''வெளிநாட்டுச் சங்கம்'' புரிந்த சேவைகளைக் குறிப்பிட்டோம்.*

எனவே, நம் கொள்கை பொறுத்துப் பார்க்கும் கொள்கையாகவே ஓரளவுக்கு இருந்தது. தத்துவம், போர்த்தந்திரங்கள் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளில் ஒரு சுதந்திரமான நிலை வகிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே இந்த ''வெளிநாட்டுச் சங்கம்'' ''உழைப்பாளர் விடுதலை''க் குழுவுடன் கோட்பாடு வகையிலே உடன்பாடு கொண்டிருப்பதாக திரும்பத் திரும்ப கூறியிருக்கிற காரணத்தால், ''பொருளாதாரவாதத்தை'' உறுதியாக எதிர்ப்பவர்கள் அத்துடன் கைகோத்து வேலை செய்ய முடியும் என்று பெரும்பான்மையான ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே நிலவி வந்த கருத்துக்களுக்கு நாம் சலுகை தந்தோம். நம் நிலை சரியானதே என்று பின்வரும் விபரம் மறைமுகமாக நிரூபித்தது: இஸ்க்ராவின் முதல் இதழ் (டிசம்பர், 1900) வெளிவந்த கிட்டத்தட்ட அதே நேரத்தில் ''அச்சங்கத்தின்'' மூன்று உறுப்பினர்கள் பிரிந்துசென்று ''துவக்குவோர் குழு'' எனப்பட்டதை அமைத்துக்கொண்டு சமரசப் பேச்சுக்களில் நடுவர்களாக வேலை செய்யத் தயாராக இருப்பதாக (1) இஸ்க்ரா அமைப்பின் வெளிநாட்டுப் பிரிவுக்கும், (2) புரட்சிகரமான சோசியல் டெமாக்ரட்[105] அமைப்புக்கும், (3) ''வெளிநாட்டுச் சங்கத்திற்கும்'' தெரிவித்தனர். முதல் இரண்டு அமைப்புகளும் உடனே தமது உடன்பாட்டைத் தெரிவித்தன. மூன்றுவது அமைப்பு அந்த யோசனையை நிராகரித்தது. சென்ற ஆண்டின் ''ஒற்றுமை'' காங்கிரஸில்[106] இந்த விபரங்களை ஒரு பேச்சாளர் தெரிவித்தபோது ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர் ஒருவர் இம்மாதிரி சங்கம் நிராகரித்ததற்கான ஒரே காரணம் அந்தத் துவக்குவோர் குழுவின் உறுப்பினர் அமைவு பற்றி ''வெளிநாட்டுச் சங்கத்திற்கு'' இருந்த அதிருப்திதான் என்று கூறியது

---

* இந்தப் பிளவு பற்றிய நமது மதிப்பீடு அது சம்பந்தப்பட்ட இலக்கியத்தைப் பயின்றதை மட்டும் அடிப்படையாகக் கொள்ளவில்லை, நம் அமைப்பின் பல உறுப்பினர்கள் வெளிநாட்டில் சேகரித்த தகவலையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

உண்மைதான். இந்த விளக்கத்தைக் குறிப்பிடுவது என் கடமையென்றே கருதுகிறேன்; அதே நேரத்தில், அந்த விளக்கம் திருப்திகரமானது அல்ல என்றும் என்னுல் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. காரணம், இரண்டு அமைப்புகள் பேச்சு வார்த்தைகளில் இறங்க ஒப்புக் கொண்டிருந்ததை அறிந்திருந்த நிலையில் ''இவ்வெளிநாட்டுச் சங்கம்'' வேருெரு நடுவர் மூலமாகவோ நேரடியாகவோ அவற்றை அணுகியிருக்க முடியும்.

*1901* வசந்த காலத்தில் ஸார்யா (இதழ் *1*, ஏப்ரல்), இஸ்க்ரா (இதழ் *4*, மே) ஆகிய இரண்டும் ரபோச்சியே தேலோவுடன் பகிரங்கமான வாதப்போரில் இறங்கின.* ரபோச்சியே தேலோவில் வெளியான ''ஒரு வரலாற்றுத் திருப்பம்'' எனும் கட்டுரையை இஸ்க்ரா குறிப்பாகத் தாக்கியது. ரபோச்சியே தேலோ தனது ஏப்ரல் இணைமலரில்—அதாவது, வசந்தகால நிகழ்ச்சிகளுக்குப் பின்—பயங்கரவாதம், ''இரத்தப் பழி'' கோரும் அறைகூவல்கள் (இவற்றிலே, அக்காலத்தில் பலபேர் அடித்துச் செல்லப்பட்டனர்) பற்றிய பிரச்சினைகளில் உறுதியற்ற நிலையைக் காட்டிக் கொண்டது. வாதப்போர் இருந்துங்கூட, ஒரு புதிய ''மத்தியஸ்தர்'' குழுவின்[107] மூலமாக சமரசப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு ''வெளிநாட்டுச் சங்கம்'' ஒப்புக்கொண்டது. மேலே சொன்ன மூன்று அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பூர்வாங்க மாநாடு ஜூனில் நடந்தது. ஒரு விபரமிக்க ''கோட்பாடுகள் பற்றிய உடன்பாடு'' அடிப்படையில் அது ஒரு நகல் ஒப்பந்தத்தை உருவாக்கியது. அதை ''வெளிநாட்டுச் சங்கம்'' இரண்டு மாநாடுகள் எனும் குறுநூலிலும், ''வெளிநாட்டு லீக்'' ''ஒற்றுமை'' மாநாட்டு ஆவணங்கள் எனும் குறுநூலிலும் வெளியிட்டன.

பொதுவான சந்தர்ப்பவாதத்தின், குறிப்பாக ருஷ்யச் சந்தர்ப்பவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் மிக்க வலுவுடன் நிராகரிப்பதை ஒற்றுமைக்கு ஒரு அடிப்படை நிபந்தனையாக நாம் முன்வைத்தோம் என்பதை கோட்பாடுகள் பற்றிய இந்த உடன்பாட்டின் (ஜூன் மாநாட்டுத்

---

** பார்க்க: வி. இ. லெனின், ''எங்கிருந்து தொடங்குவது?''—(ப-ர்.)*

தீர்மானங்கள் என்று இவை பொதுவாக அழைக்கப்படுகின்றன) உள்ளடக்கம் தெட்டத்தெளிவாக்குகிறது. முதல் பாரா பின்வருமாறு: ''பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தில் சந்தர்ப்பவாதத்தை நுழைக்கும் எல்லா முயற்சிகளையும்—'பொருளாதாரவாதம்', பெர்ன்ஷ்டைன்வாதம், மில்லெராண்ட் வாதம் என்றெல்லாம் சொல்லப்படுபவற்றில் உருத்தாங்கியுள்ள முயற்சிகளை—நாங்கள் நிராகரிக்கிறோம்.'' ''சமூக-ஜனநாயகவாத நடவடிக்கைகளுக்கு உரிய துறையில் புரட்சிகரமான மார்க்ஸியத்தின் எதிராளிகள் அனைவரையும் எதிர்க்கும் தத்துவார்த்தப் போராட்டமும்... அடங்கும்'' (4, இ); ''அமைப்பு, கிளர்ச்சி ஆகிய நடவடிக்கையின் ஒவ்வொரு துறையிலும் எதேச்சாதிகாரத்தைத் தூக்கி எறிவதே ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் உடனடியான பணி என்பதை சமூக-ஜனநாயகவாதம் ஒரு கணமேனும் மறக்கக் கூடாது'' (5, அ); ''...கிளர்ச்சி என்பது கூலி உழைப்புக்கும் மூலதனத்திற்கும் இடையே நடக்கும் அன்றாடப் போராட்டம் எனும் அடிப்படையில் மட்டுமல்லாமல்'' (5, ஆ); ''...வெறும் பொருளாதாரப் போராட்டத்திற்கும் சில்லறை அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டத்திற்கும் உரிய கட்டத்தை... நாங்கள் அங்கீகரிக்கவில்லை'' (5, இ); ''...இயக்கத்தின் கீழ்நிலை வடிவங்களின் குறுகிய தன்மையையும்... துவக்க நிலையையும் ஒரு கோட்பாடாக நிறுத்தும் போக்குகளை விமர்சிப்பது இயக்கத்திற்கு முக்கியம் என்று நாங்கள் கருதுகிறோம்'' (5, ஈ). இவ்விவகாரங்களில் சம்பந்தமில்லாத ஓர் அயலான் கூட இத்தீர்மானங்களைக் கவனமாகப் படித்தபின் அவற்றின் வரையறுப்புகளில் இருந்து தெரிந்துகொள்வான்: இத்தீர்மானங்கள் சந்தர்ப்பவாதிகளாகவும் ''பொருளாதாரவாதிகளாகவும்'' இருந்த நபர்களுக்கு எதிராகவும், எதேச்சாதிகாரத்தைத் தூக்கியெறியும் பணியை ஒரு கணமேனும் மறந்து விட்ட நபர்களை எதிர்த்தும், கட்டங்கள் பற்றிய தத்துவத்தை அங்கீகரித்த நபர்களை எதிர்த்தும், குறுகிய தன்மையை ஒரு கோட்பாட்டின் நிலைக்கு உயர்த்தி வைத்த நபர்களை எதிர்த்தும், இது போன்ற பிற நபர்களை எதிர்த்தும் போடப்பட்டவை என்று. ''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவும், ஸார்யாவும், இஸ்க்ராவும் ரபோச்சியே தேலோவை எதிர்த்து நடத்திய வாதப்போரைப்

பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்துள்ள எவருக்கும் ஒரு கண மேனும் ஐயமிருக்க முடியாது: **ரபோச்சியே தேலோ** வழி கெட்டுப் புரிந்த தவறுகளைத் தான் ஒவ்வொரு அம்சமாக எடுத்து இத்தீர்மானங்கள் நிராகரிக்கின்றன என்று. ஆகவே **ரபோச்சியே தேலோவின்** 10ஆம் இதழில் உள்ள கட்டுரைகள் ''வெளிநாட்டுச் சங்கம்'' கண்ட ஒரு புதிய ''வரலாற்றுத் திருப்பத்தால்'' தூண்டப்பட்டவை அல்ல, இத்தீர்மானங்களின் மித மிஞ்சிய ''சூட்சுமத்தன்மையாலேயே''* தூண்டப்பட்டவை என்று வெளிநாட்டுச் சங்கத்தின் ஓர் உறுப்பினர் ஒற்றுமை மாநாட்டில் கூறியபோது அந்த வன்கூற்றை ஒரு பேச்சாளர் நியாயமாகவே கேலிசெய்தார். அத்தீர்மானங்கள் சூட்சுமமாய் இருப்பதற்குப் பதிலாக நம்பமுடியாத அளவிற்கு ஸ்தூலமாய் உள்ளன, ''அவை யாரையோ கவர்ந்து இழுக்க முயல்கின்றன'' என்பதை மேலோட்டமாகக் கூட பார்க்க முடியும் என்று சொன்னார் அவர்.

இக்குறிப்புரையால் மாநாட்டில் ஓர் இனக்குறிப்பான இடைநிகழ்ச்சி நிகழ்ந்தது. ஒரு புறத்தில், இந்தக் ''கவர்ந்திழுப்பது'' எனும் சொல் வாய்தவறிவந்த சொல் என்றும், அது நமது கெட்ட நினைப்புகளை (''வலைவீசிப் பிடிப்பது'') வெளிப்படுத்தியுள்ளன என்றும் கிரிச்சேவ்ஸ்கி நம்பிக் கொண்டு ''யாரைக் கவர்ந்திழுக்கப் பார்க்கிறார்கள்?'' என்று அழாக்குறையாகக் கூவினார். ''யாரை என்று உண்மையிலேயே கேட்கிறேன்'' என்று பிளெஹானவ் நையாண்டியாகத் திருப்பிக் கேட்டார். ''கூரறிவின்மைக்காகத் தோழர் பிளெஹானவின் உதவிக்கு நான் வருகிறேன்'' என்று பதிலளித்தார் கிரிச்சேவ்ஸ்கி. ''அவருக்கு விளக்கிச் சொல்கிறேன்: ''**ரபோச்சியே தேலோவின்**'' **ஆசிரியர் குழுவிற்காகத் தான்** வலைவீசி இருக்கிறார்கள் [அவையில் சிரிப்பு]. ஆனால் மாட்டிக்கொள்ள நாங்கள் இடங்கொடுக்கவில்லை!'' (இடது புறத்திலிருந்து ஒரு குறிப்புரை: ''அதனால் நஷ்டம் உங்களுக்குத்தான்!'') மற்றொரு புறத்தில் ''பரிபா'' குழுவின் (சமரசவாதிகளைக் கொண்ட ஒரு குழு இது) ஓர் உறுப்பினர் தீர்மானங்களுக்கு ''வெளிநாட்டுச் சங்கம்'' கொடுத்த திருத்தங்களை எதிர்த்தும் நம் பேச்சாளரைத் தாங்கிப்பேச விரும்பி

---

* இவ்வன்கூற்று **இரண்டு மாநாடுகள்**, பக்கம் 25ல் திருப்பிச் சொல்லப்படுகிறது.

யும் ''கவர்ந்திழுப்பது'' எனும் சொல் வாதப்போரின் சூட்டிலே தற்செயலாக உதிர்க்கப்பட்டது என்பது வெளிப்படை என்று கூறினர்.

என்னைப் பொறுத்தவரை, ''இப்படித் தாங்கிப் பேசியது'' அந்த வார்த்தையைச் சொன்ன பேச்சாளருக்குத் திருப்தி அளித்திருக்காது என்றே நினைக்கிறேன். ''யாரையோ கவர்ந்திழுக்க முயல்கின்றனர்'' எனும் சொற்கள் ''கேலியாகச் சொன்ன உண்மையான வார்த்தைகள்'' என்றே நினைக்கிறேன்; ரபோச்சியே தேலோ உறுதியின்மையும் ஊசலாட்டமும் உள்ளது என்று நாம் எப்போதுமே குற்றஞ் சாட்டி வந்திருக்கிறோம்; எனவே அந்த ஊசலாட்டத்திற்கு முற்றுபுள்ளியிட நாம் அதைக் கவர்ந்திழுக்க முயற்சிக்க வேண்டியிருந்தது இயல்புதான். இதில் கெட்ட நினைப்பு கடுகளவேனும் இல்லை, ஏனெனில் நாம் கோட்பாடுகள்பால் உறுதியின்மையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். மற்றும், மிகவும் தோழமையுள்ள முறையிலே* ''வெளி

---

* அதுதான் விஷயம்: மொத்தத்தில் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதம் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவின் கோட்பாடுகளை எப்போதும் ஆதரித்து வந்துள்ளது என்றும் ''வெளிநாட்டுச் சங்கம்'' ஆற்றிய குறிப்பான சேவை அதன் பிரசுர வெளியீடு, அமைப்புத்துறை நடவடிக்கையே என்றும் ஜூன் தீர்மானங்களின் முகவுரையில் நாம் சொன்னோம். அதாவது, நடந்துபோனதை முற்றாக மறந்துவிடவும் ''வெளிநாட்டுச் சங்கத்தைச்'' சேர்ந்த தோழர்கள் (இலட்சியத்துக்காக) ஆற்றிய பணியின் பயனுள்ள தன்மையை அங்கீகரிக்கவும் நாம் முழுக்க முழுக்கத் தயாராயிருப்பதாகவும் ஆனல் அதற்கு நிபந்தனையாக அது ஊசலாட்டத்தை முற்றாக நிறுத்திவிட வேண்டும் (இந்த ஊசலாட்டத்தைத்தான் நாம் ''பிடிக்க'' முயன்றோம்) என்றும் நாம் தெரிவித்தோம். ஜூன் தீர்மானங்களைப் படிக்கும் பாரபட்சமற்ற வாசகர் எவரும் இப்படித் தான் அவற்றை வியாக்கியானப்படுத்துவார். ஆனல், ''வெளிநாட்டுச் சங்கம்'' ''பொருளாதாரவாதத்தை'' நோக்கித் திரும்பியுள்ள தனது புதிய திருப்பத்தின் (அதன் 10ம் இதழ் கட்டுரைகளிலும் திருத்தங்களிலும் இதைக் காணலாம்) மூலமாகப் பிளவை உண்டாக்கிவிட்ட பின் நாம் அதன் சேவைகளைப்பற்றிச் சொன்னவற்றிற்காக நாம் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டுகிறதென்றால் (இரண்டு மாநாடுகள், பக்கம் 30) அப்படிப்பட்ட குற்றச்சாட்டு சிரிப்பைத்தான் உண்டாக்க முடியும்.

நாட்டுச் சங்கத்தைக்'' ''கவர்ந்திழுப்பதில்'' வெற்றியும் பெற்ருேம், ஏனெனில் கிரிச்சேவ்ஸ்கியும் ''சங்க'' நிர்வாகக் கமிட்டியின் மற்ெருரு உறுப்பினரும் ஜூன் தீர்மானங்களில் கையெழுத்திட்டார்கள்.

ரபோச்சியே தேலோவின் 10ம் இதழில் உள்ள கட்டுரைகள் (நம் தோழர்கள் மாநாடு நடப்பதற்குச் சில நாட்களுக்குமுன் வந்தபோதுதான் இவ்விதழை முதல் தடவையாகப் பார்த் தார்கள்) தெளிவாகக் காட்டின: கோடைக்காலத்திற்கும் இலையுதிர்காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ''வெளிநாட்டுச் சங்கத்திலே'' ஒரு புதிய திருப்பம் ஏற் பட்டிருந்தது, என்று. அதாவது, ''பொருளாதாரவாதிக ளின்'' கை மீண்டும் மேலோங்கிவிட்டது. ஒவ்வொரு''சூழ லுக்கும்'' ஏற்ப நிறம் மாறும் பச்சோந்தியான ஆசிரியர் குழுவும்''மிகவும் முனைப்புள்ள பெர்ன்ஷ்டைன்வாதிகளையும்'' ''விமர்சன சுதந்தரத்தையும்'' ''தன்யியல்புகளையும்'' மீண் டும் தாங்கிப்பேசப் புறப்பட்டது, நம் அரசியல் செல்வாக் கின் வட்டத்தை (இந்த செல்வாக்கை மேலும் பல்கலப்பான தாக செய்யப்போவதாகச் சொல்லிக் கொண்டு) ''குறுக்கிக் கட்டுப்படுத்தும் தத்துவத்தை'' மார்தீனவ் வாய்மூலமாகப் பிரச்சாரம் செய்யவும் புறப்பட்டது! ஒரு சூத்திரத்தை வைத்து சந்தர்ப்பவாதியைப் பிடிப்பது கடினம் என்று பார் வஸ் பொருத்தமாக குறிப்பிட்டது சரியே என்று மறுபடியும் நிருபிக்கப்பட்டது. சந்தர்ப்பவாதி எந்த ஒரு சூத்திரத்தை யும் ஆதரிக்கவும் தயாராக இருப்பான், அதைக் கைவிடவும் தயாராக இருப்பான். ஏனெனில் சந்தர்ப்பவாதம் என்ருல் திட்டவட்டமான, உறுதியான கோட்பாடுகள் இல்லாமை என்பதே பொருள். இன்றைய தினம், சந்தர்ப்பவாதத்தை நுழைக்கும் எல்லா முயற்சிகளையும், எல்லா குறுகிய போக் கையும் அவர்கள் நிராகரித்திருக்கிருர்கள். ''ஏதேச்சாதி காரத்தைத் தூக்கியெறியும் பணியை ஒரு கணமேனும் மறக்க மாட்டோம்'' என்றும் ''கூலி உழைப்புக்கும் மூலதனத்திற் கும் இடையே நடக்கும் அன்ருடப் போராட்டத்தின் அடிப் படையில் மட்டுமின்றி மற்ற அடிப்படைகளிலும் கிளர்ச்சி யை'' நடத்தி வருவோம் என்றெல்லாம் உளப்பூர்வமாக வாக்குறுதி அளித்திருக்கிருர்கள். ஆனுல் நாளைக்கே, தன் னியல்பையும் சுவையற்ற அன்ருடப் போராட்டத்தின் முன்

னேற்றத்தையும் தாங்குவதாக சாக்குச் சொல்லிக் கொண்டும் தொட்டறியத்தக்க பலன்களை அளிக்கக்கூடிய கோரிக்கை களை ஏற்றிப் போற்றிக் கொள்ளும் சாக்கிலும் தங்கள் சொல்லை மாற்றிக் கொண்டு பழைய தந்திரங்களுக்குத் திரும்பி விடுவார்கள். 10ம் இதழில் உள்ள கட்டுரைகளில் ''மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நகலின் பொதுக் கோட் பாடுகளை மறுத்து விலகும் போக்கு எதையும் 'வெளிநாட் டுச் சங்கம்' கண்டதில்லை, இன்றும் காணவில்லை'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 26) என்று தொடர்ந்து அடித்துப்பேசு வதினுல் ''வெளிநாட்டுச் சங்கத்துக்குக்'' கருத்து வேற்று மைகள் உள்ள முக்கியமான அம்சங்களைப் புரிந்து கொள்ளும் திறமையோ விருப்பமோ அறவே கிடையாது என்று காட் டிக்கொள்கிறது.

ரபோச்சியே தேலோ பத்தாம் இதழுக்குப் பின், மேலும் ஒரு முயற்சிதான் நம்மால் எடுக்க முடிந்தது: ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' உறுப்பினர்கள் அனைவரும் இக்கட்டுரை களுடனும் ஆசிரியர் குழுவுடனும் உடன்படுகிருர்களா என்று கண்டுகொள்வதற்காக ஒரு புது விவாதத்தைத் துவக்கிவைத் தோம். இதற்காக நம்மீது ''வெளிநாட்டுச் சங்கத்திற்குக்'' குறிப்பாக அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது, தன் அணி களிடையே வேற்றுமை உண்டாக்க முயற்சிப்பதாகவும் மாற் ருன் காரியத்தில் தலையிடுவதாகவும் மற்றபடியும் நம்மைக் குற்றம் சாட்டுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் வெளிப் படையாகவே ஆதாரமற்றவை; காரணம் மிக இலேசான காற்ருயினும் கூட அது அடிக்கும் திசையில் திரும்பி நிற்கும் போக்குள்ள ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் குழுவின் விஷயத்தில் எல்லாமே காற்றடிக்கும் திசையைப் பொருத்துத் தான் உள்ளது, ஒன்றுபட நினைத்த அமைப்புகளின் உறுப்பி னர்கள் தவிர வேறு யாரும் இல்லாத தனிப்பட்ட கூட்டங் களில் இத்திசையை நாம் வரையறுத்தோம். ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' பேரால் ஜூன் தீர்மானங்களுக்கு அளிக்கப் பட்ட திருத்தங்கள் உடன்பாடு காண்பதற்கான கடைசி நம்பிக்கையின் நிழலையும் அகற்றிவிட்டன. ''பொருளாதார வாதத்தின்'' திசையில் திரும்பியுள்ள புதிய திருப்பத்திற்கும், ரபோச்சியே தேலோவின் 10ம் இதழுடன் ''வெளிநாட்டுச் சங்கத்தின்'' பெரும்பான்மையான உறுப்பினர்கள்

உடன்படுகிருர்கள் என்கிற உண்மைக்கும் இந்தத் திருத்தங்கள் ஆவணச்சான்ருக உள்ளன. சந்தர்ப்பவாதத்தின் வெளிப்பாடுகளைப்பற்றிய குறிப்பிலிருந்து ''பொருளாதார வாதம் எனப்படுவது'' எனும் சொற்களை நீக்கும்படியும் (இச்சொற்களின் ''அர்த்தம் தெளிவாக இல்லை'' என்று சொல்லி அவற்றை நீக்கச் சொன்ஞர்கள்; ஆனுல் அப்படி இருந்திருந்தால், பரவலாக நிலவும் இந்தத் தவற்றின் தன்மை பற்றி மேலும் துல்லியமாக வரையறுத்துக் கொடுத்திருந்தால் போதும்) ''மில்லெராண்ட் வாதம்'' எனும் சொல்லை நீக்கும்படியும் (ரபோச்சியே தேலோ, இதழ் 2-3, பக்கங்கள் 83-84லும் அதைவிட பகிரங்கமாக "Vorwärts"*லும் கிரிச்சேவ்ஸ்கி இதைத் தாங்கிப் பேசியிருந்த போதிலும்) முன்மொழியப்பட்டது. ''அரசியல், பொருளாதார, சமுதாய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் எதிர்க்கும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் வழிகாட்டி நடத்துவது'' சமூக-ஜனநாயகவாதத்தின் பணி என்று ஜூன் தீர்மானங்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு இருந்தன, இதன் காரணமாக போராட்டத்தின் இந்த வெளிப்பாடுகள் அனைத்திலும் முறைமையையும், ஒற்றுமையையும் புகுத்த வேண்டும் என்றும் அவை கேட்டுக் கொண்டன; அவ்வாறிருந்தும் ''பொருளாதாரப் போராட்டம் மக்கள் திரளின் இயக்கத்திற்கு ஒரு வலுமிக்க தூண்டுகோலாகும்'' என்கிற அறவே தேவையில்லாத சொற்களை ''வெளிநாட்டுச் சங்கம்'' கூடுதலாகச் சேர்த்தது (தன்னளவில் இந்த வன் கூற்று மறுக்க முடியாததே, ஆனுல் குறுகிய ''பொருளாதார வாதம்'' இருந்து வரும் நிலைமையில் இது பொய்யான வியாக்கியானங்களுக்கு இடமளிக்காமல் இருந்திருக்க முடியாது). மேலும், ''ஒரு கணமேனும்'' (எதேச்சாதிகாரத்தைத் தூக்கியெறியும் குறிக்கோளை மறக்கக் கூடாது) எனும் சொற்களை நீக்கச் சொல்லியும் ''திரளான மக்களைத் தீவிரமான அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு மிகவிரிவாகச் செயல்

---

* இவ்விஷயத்தைப்பற்றி "Vorwärts" பத்திரிகையில் அதன் இன்றைய ஆசிரியர்குழுவுக்கும் காவுட்ஸ்கிக்கும் ஸாரியாவின் ஆசிரியர்குழுவுக்கும் இடையே வாதப் போர்[108] தொடங்கியது. இந்த சர்ச்சையைப் பற்றி ருஷ்ய வாசகருக்குத் தெரிவிக்கத் தவறமாட்டோம்.

படுத்தக்கூடிய சாதனம் பொருளாதாரப் போராட்டமாகும்'' எனும் சொற்களைச் சேர்க்கச் சொல்லியும் ''அரசியலை'' நேரடியாக வரம்பிட்டுக் குறுக்குவதையும் கூட ஜுன் தீர்மானங்களில் போடச் சொன்னார்கள். இவ்வகைத் திருத்தங்கள் வைக்கப்பட்டதினால் நம் தரப்புப் பேச்சாளர்கள் மேடைக்கு வந்து பேச ஒருவருக்குப் பின் ஒருவராக மறுத்துவிட்டார்கள், ''பொருளாதாரவாதத்தை'' நோக்கி மீண்டும் திரும்பும் நபர்களோடும் ஊசலாட்டத்திற்குச் சுதந்தரம் தேடிக்கொள்ள முயற்சிக்கும் நபர்களோடும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதில் பயனில்லை என்று கருதினார்கள்.

''ரபோச்சியே தேலோவின் சுதந்தரமான முனைப்புக்கூறுகளையும் சுயேச்சையையும் நீடித்துக் காப்பதை (நம் எதிர்கால உடன்பாடு நீடித்துப் பயன்படுவதற்கு இது sine qua non* என்று 'வெளிநாட்டுச் சங்கம்' கருதியது) உடன்பாட்டிற்குத் தடைக்கல்லாக இஸ்க்ரா கருதியது'' (இரண்டு மாநாடுகள், பக்கம் 25). இது மிகவும் சரிநுட்பமற்ற கூற்று. ரபோச்சியே தேலோவின் சுயேச்சையைக் கெடுக்கும் நோக்கங்கள் எதுவும் நமக்கு இருந்ததே கிடையாது.** ஆனால், அதன் முனைப்புக்கூறுகளின் சுதந்தரத்தை—''சுதந்தரமான முனைப்புக்கூறுகள்'' என்பதற்குத் தத்துவத்திலும் போர்த்தந்திரங்களிலும் கோட்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் சுதந்தரம் என்று அர்த்தம் கற்பித்தால்—அங்கீகரிக்க நாம் முற்றாக மறுத்தது உண்மையே. முனைப்புக்கூறுகள் விஷயத்தில் இப்படிப்பட்ட சுதந்தரத்தை ஜுன் தீர்மானங்கள் முற்றாக நிராகரிக்கின்றன; காரணம், நாம் சுட்டிக்காட்டியபடி நம்மிடையே இருந்து வரும்—கட்சியின் பார்வை நிலையில் சகிக்கவொண்ணாததான—வேற்றுமையை வளர்க்கும்படியான எல்லாவகைப்பட்ட ஊசலாட்டங்களையும் இவ்வகைப்பட்ட ''முனைப்புக்கூறுகளின் சுதந்தரம்'' எப்போதுமே நடைமுறையில் குறித்து வந்துள்

---

* இன்றியமையாத் தேவை.—(ப-ர்.)

** அதாவது, ஒன்றிணைந்த அமைப்புகளின் ஒரு கூட்டுத் தலைமைக் குழு நிறுவுவது சம்பந்தமான ஆசிரியர் குழுக்களிடையே ஆலோசனைகள் நடத்துவது சுயேச்சையை வரம்பிட்டுக் குறுக்குவதாகக் கருதப்படக் கூடாது என்றால். எனினும் ஜுனில் ரபோச்சியே தேலோ இதற்கு ஒப்புக் கொண்டது.

ளது. ரபோச்சியே தேலோவின் பத்தாம் இதழில் உள்ள கட்டுரைகளும், கூடவே அதன் திருத்தங்களும், இவ்வகைப்பட்ட முனைப்புக்கூறுகளின் சுதந்தரத்தைக் காத்துப் பேணும் அதன் விருப்பத்தைத் தெளிவாக வெளிப்படுத்தின; இவ்வகை விருப்பம் பிளவுக்கும் போர்ப் பிரகடனத்திற்கும் கொண்டு போய் விட்டது இயல்புதான், தவிர்க்கவியலாததுதான். ரபோச்சியே தேலோ திட்டவட்டமான இலக்கிய வேலைகளில் ஒருமுகமாகக் கவனம் செலுத்தவேண்டும் எனும் அர்த்தத்தில் அதன் ''முனைப்புக்கூறுகளின் சுதந்தரத்தை'' நாம் அனைவரும் அங்கீகரிக்கத் தயாராய் இருந்தோம். இந்த வேலைகளை முறையாக வினியோகிப்பதற்கு (1) ஒரு தத்துவார்த்த சஞ்சிகையும், (2) ஓர் அரசியல் பத்திரிகையும், (3) எளிதாகப் புரியக்கூடிய கட்டுரைத் தொகுதிகளும் குறுநூல்களும் இயல்பாகவே தேவைப்படுகின்றன. இவ்வகையில் வேலைகளை வினியோகிப்பதை ரபோச்சியே தேலோ ஒப்புக்கொள்வதால் மட்டுமே தன் தவறுகள் அனைத்தையும் (இவற்றைத் தான் ஜூன் தீர்மானங்கள் தாக்கின) நிரந்தரமாகக் கைவிட உளப்பூர்வமாக விரும்புவதாக நிரூபித்துக் கொண்டிருக்க முடியும். இவ்வகைப்பட்ட வேலைகளின் வினியோகந்தான் உராய்வுகளே சாத்தியமில்லாதபடி செய்திருக்கும், நீடித்துப் பயன்தரும் உடன்பாட்டிற்கு உத்தரவாதம் செய்திருக்கும், அதே நேரத்தில் நம் இயக்கத்தின் மறுவுயிர்ப்புக்கும் புதிய வெற்றிகளுக்கும் ஓர் அடிப்படையாகப் பயன்பட்டிருக்கும்.

புரட்சிகரமான போக்கிற்கும் சந்தர்ப்பவாதப் போக்கிற்கும் இடையே இறுதியான பிளவு ஏற்படக் காரணம் எந்த ''அமைப்புத் துறையைச் சேர்ந்த'' சூழ்நிலைமைகளும் அல்ல, சந்தர்ப்பவாதத்தின் சுதந்தரமான முனைப்புக்கூறுகளைக் கெட்டிப்படுத்திக் கொள்ளவும் கிரிச்சேவ்ஸ்கி, மார்தீனவ் வகையறுக்களின் விளக்கவுரைகளைக் கொண்டு தொடர்ந்து மனக்குழப்பத்தை விளைக்கவும் விரும்பிய சந்தர்ப்பவாதிகளின் விருப்பமேயாகும்; இதில் எந்த ஒரு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிக்கும் இன்று ஐயமிருக்க முடியாது.

## "என்ன செய்ய வேண்டும்?" ஒரு திருத்தம்

என்ன செய்ய வேண்டும்? எனும் குறுநூலின் 141ம்* பக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ள ''துவக்குவோர் குழு'' வெளிநாட்டிலுள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்புகளைச் சமரசப்படுத்தும் முயற்சியில் தான் எடுத்துக்கொண்ட பங்கைப் பற்றிய என் வர்ணனைக்குப் பின்வரும் திருத்தம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு இருக்கிறது: ''இக்குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒரே ஒருவர்தான் 1900 ஆண்டு முடிவில் 'வெளிநாட்டுச் சங்கத்திலிருந்து' வெளியேறினர்; வெளிநாட்டிலுள்ள இஸ்க்ரா அமைப்புடனும் புரட்சிகர மான சோசியல் டெமாக்ரட் அமைப்புடனும் கூடி ஒரு மாநாடு நடத்தவேண்டுமென்று 'துவக்குவோர் குழு' முன் வைத்த யோசனைக்கு 'வெளிநாட்டுச் சங்கத்தின்' ஒப்புதலைப் பெறுவது சாத்தியமில்லை என்கிற முடிவுக்கு வந்தபிறகுதான் மற்ற இருவரும் 1901 ஆண்டில் அதை விட்டு வெளியேறி னார்கள். 'துவக்குவோர் குழுவிலுள்ள' நபர்கள் நடுவர் களாகச் செயல்படுவதற்குத் 'தகுதியற்றவர்கள்' என்று கூறி 'வெளிநாட்டுச் சங்கத்தின்' நிர்வாகக் கமிட்டி இந்த யோசனையை நிராகரித்து விட்டது. வெளிநாட்டிலுள்ள இஸ்க்ரா அமைப்புடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள விருப்பம் தெரிவித்தது. ஆன போதிலும், அதற்குப்பின் வெகு விரை விலேயே, 'வெளிநாட்டுச் சங்கத்தில்' ஏற்பட்ட பிளவு பற்றிய ரிப்போர்ட் உள்ள இஸ்க்ராவின் முதல் இதழ் வெளி வந்ததைத் தொடர்ந்து தன் முடிவை மாற்றிக் கொண்ட

---

* இந்நூல், பக்கம் 279 பார்க்க.—(ப-ர்.)

தாகவும் இஸ்க்ராவுடன் மேற்கொண்டு தொடர்புகள் வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்றும் 'துவக்குவோர் குழு விடம்' 'வெளிநாட்டுச் சங்கத்தின்' நிர்வாகக் கமிட்டி தெரி வித்தது. இவ்வளவும் ஆனபிறகு, 'வெளிநாட்டுச் சங்கம்' மாநாட்டை நிராகரித்ததற்கு உரிய ஒரே காரணம் 'துவக்கு வோர் குழுவின்' உறுப்பினர் அமைவு விஷயத்தில் அதற் கிருந்த அதிருப்திதான் என்று 'அச்சங்கத்தின்' நிர்வாகக் கமிட்டியின் ஓர் உறுப்பினர் கூறிய கூற்றை எப்படி விளக்கு வது? அதேபோல், 'வெளிநாட்டுச் சங்கத்தின்' நிர்வாகக் கமிட்டி சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் ஏன் ஒரு மாநாட் டிற்கு ஒப்புக் கொண்டது என்பதை விளக்குவதும் கடினமே; ஏனெனில், இஸ்க்ராவின் முதல் இதழில் உள்ள கட்டுரை தொடர்ந்து அமுலில் இருந்தது, 'வெளிநாட்டுச் சங்கத்தின்' பால் இஸ்க்ரா வைத்திருந்த 'எதிர்ப்பயனுள' கண்ணோட்டம் ஸார்யாவின் முதல் இதழிலும், இஸ்க்ராவின் நான்காம் இதழி லும் மேலும் பலமாக வெளியிடப்பட்டிருந்தது; இவை இரண்டும் ஜூன் மாநாட்டிற்கு முன் வெளிவந்தவை.''

நி. லெனின்

இஸ்க்ரா,
இதழ் 19,
ஏப்ரல் 1, 1902

நூல் திரட்டு
தொகுதி 6
பக்கங்கள் 1-192

## பதிப்பாளர் குறிப்புகள்

1 என்ன செய்ய வேண்டும்? நம் இயக்கத்தின் சூடேறிய பிரச்சினைகள்—இந்நூலை 1901 கடைசியிலும் 1902 துவக்கத்திலும் லெனின் எழுதினர். 1901 டிசம்பரில் ''இஸ்க்ராவின்'' 12ம் இதழில் ''பொருளாதாரவாதத்தை ஆதரிப்பவர்களுடன் ஓர் உரை'' என்று தலைப்பிட்ட ஒரு கட்டுரை அவர் வெளியிட்டார்; பிற்காலத்தில் இதை ''என்ன செய்ய வேண்டும்?'' என்னும் நூலின் பொழிப்பு என்று வர்ணித்தார். 1902 பிப்ரவரியில் இந்நூலுக்கு முகவுரியும் எழுதினர். மார்ச்சு மாதத் துவக்கத்தில் டிட்ஸ் பதிப்பகத்தார் இதை ஸ்டுட்கார்ட்டில் வெளியிட்டனர். இவ்வெளியீட்டின் அறிவிப்பு 1902 மார்ச்சு 10ல் ''இஸ்க்ராவின்'' 18ம் இதழில் வெளியாயிற்று.

ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மார்க்ஸியக் கட்சியின் படைப்புக்காக நடந்த போராட்டத்திலும், ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் கமிட்டிகளிலும் அமைப்புகளிலும் லெனின் வழிப்பட்ட, ''இஸ்க்ரா'' வழிப்பட்ட போக்கு வெற்றிபெறுவதிலும், பின்னல் 1903ல் இரண்டாவது கட்சிக் காங்கிரசில் அப்போக்கு வெற்றி பெறுவதிலும் இந்நூல் ஒரு தலையாய பாத்திரம் வகித்தது.

1902-1903ம் ஆண்டுகளில் ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாத அமைப்புகளிடையே இது பரவலாக வினியோகிக்கப்பட்டது.—1

2 ''எங்கிருந்து தொடங்குவது?'' எனும் லெனின் கட்டுரை ''இஸ்க்ராவின்'' நான்காம் இதழில் ஒரு தலையங்கமாகப் பிரசுரிக்கப்பட்டது. அரசியல் கிளர்ச்சியின் தன்மை, முதன்மையான உள்ளடக்கம்; அமைப்புத்துறைப் பணிகள்; ஒரு செயல்துடிப்புள்ள அனைத்து ருஷ்ய மார்க்ஸியக் கட்சி

யைப் படைப்பதற்குரிய திட்டம்—என்று அக்காலத்தில் ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தில் இருந்த உயிர்நிலையான பிரச்சினைகளுக்கு அது விடை தந்தது. ''எங்கிருந்து தொடங்குவது?'' என்பது ஒரு ஆதாரத்திட்டம் என்று வர்ணித்தார் லெனின், அது பின்னால் ''என்ன செய்ய வேண்டும்?'' என்னும் நூலில் வளர்க்கப்பட்டது.

இந்தக் கட்டுரை புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதத்திற்கு வேலைத் திட்டம் அளிக்கும் ஆவணமாக அமைந்தது. ருஷ்யாவிலும் வெளிநாட்டிலும் இது பரவலாக வினியோகிக்கப்பட்டது.—7

8 ''இஸ்க்ரா'' (தீப்பொறி)—முதன்முதலான சட்டவிரோதமான அனைத்து ருஷ்ய மார்க்ஸியப் பத்திரிகை; 1900ல் இதை லெனின் நிறுவினார். ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மார்க்ஸியக் கட்சியைப் படைப்பதில் இது நிர்ணயமான பாத்திரம் வகித்தது.

போலீஸ் தொல்லையின் காரணமாக ருஷ்யாவில் ஒரு புரட்சிகரமான பத்திரிகையை வெளியிடுவது அசாத்தியமாகிவிட்டதால் லெனின் தண்டிக்கப்பட்டுச் சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டிருந்த காலத்திலேயே அப்பத்திரிகையை வெளிநாட்டிலிருந்து வெளியிடுவதற்கான திட்டத்தை உருவாக்கினார். தண்டனைக் காலம் 1900ல் முடிந்தவுடன் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் லெனின் முனைந்தார்.

லெனினுடைய ''இஸ்க்ராவின்'' முதல் இதழ் 1900 டிசம்பரில் லைப்ஸிக் நகரில் வெளிவந்தது. பிந்தைய இதழ்கள் மூனிக் நகரில் வெளியிடப்பட்டன; 1902 ஜூலை முதலாக லண்டனிலிருந்தும், 1903 வசந்தகாலத் துவக்கத்தில் ஜினீவாவில் இருந்தும் வெளியிடப்பட்டது. செயலளவில் ''இஸ்க்ராவின்'' உண்மையான தலைமை ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் வி. இ. லெனின் இருந்தார்.

கட்சியின் சக்திகளை ஒன்றுபடுத்துவதில் இப்பத்திரிகை மையமாக ஆயிற்று. ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ''இஸ்க்ரா'' வழிப்பட்ட குழுக்களும் கமிட்டிகளும் பல ருஷ்ய நகரங்களில் நிறுவப்பட்டன.

''இஸ்க்ராவின்'' ஆசிரியர் குழு விவாதத்திற்கென்று ஒரு நகல் கட்சி வேலைத்திட்டத்தைத் தயாரித்து வெளியிட்டது, ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குத் (1903) தயாரிப்புகள் செய்தது. எல்லா ருஷ்ய சமூக-ஜனநாயகவாத அமைப்புகளையும் ஓர் ஒன்றுப்பட்ட கட்சியாக ஒற்றுமைப்படுத்துவதில் ''இஸ்க்ரா'' வகித்த தனிச்சிறப்பான பாத்திரத்தை இந்த இரண்டாவது காங்கிரஸ் அங்கீகரித்து அதைக்

கட்சியின் மத்தியப் பத்திரிகையாகப் பிரகடனப்படுத்தியது.

என்றபோதிலும், ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (ரு. ச. ஜ. தொ. க.) இரண்டாவது காங்கிரஸ் முடிந்தபின் விரைவிலேயே ஆசிரியர் குழுவில் லெனினுக்கும் சந்தர்ப்பவாதப் போக்கின் பிரதிநிதிகளான மென்ஷிவிக்குகளுக்கும் இடையே போராட்டம் துவங்கியது. ஆசிரியர் குழுவிலிருந்து லெனின் விலகினர்; ''இஸ்க்ரா'' புரட்சிகரமான மார்க்ஸியத்தின் பத்திரிகையாக இருந்துவந்த நிலை அதன் 52ம் இதழிலிருந்து (1903, நவம்பர்) ஒழிந்துவிட்டது.—7

4 வெளிநாட்டு சமூக-ஜனநாயகவாத அமைப்புகளிடையே (''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'', வெளிநாட்டு புந்த் சங்கக் கமிட்டி, புரட்சிகரமான ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்பு, வெளிநாட்டு ''இஸ்க்ரா'', ''ஸார்யா'' அமைப்பு) உடன்பாடும் ஒற்றுமையும் ஏற்படுத்துவதற்காக 1901ன் வசந்தகாலத்திலும், கோடைக்காலத்திலும் ''பரிபா'' (''போராட்டம்'') குழுவின் மத்தியஸ்தத்தாலும் முன்முயற்சியாலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஒற்றுமைப்படுத்துவதற்கான காங்கிரஸ் ஒன்று தயாரிப்பதற்காக 1901 ஜூனில் ஜினீவாவில் இவ்வமைப்புகளின் பிரதிநிதிகளின் ஒரு மாநாடு கூட்டப்பட்டது (எனவேதான் அதற்கு ஜூன் அல்லது ஜினீவா மாநாடு என்று பெயர்). சமூக-ஜனநாயகவாத அமைப்புகள் அனைத்தையும் அணிதிரட்டுவதின் அவசியத்தை அங்கீகரித்தும், ''பொருளாதாரவாதம்'', பெர்ன்ஷ்டைன் வாதம், மில்லிராண்ட்வாதம் முதலான எல்லா வெளிப்பாடுகளும் சாயைகளும் கொண்ட சந்தர்ப்பவாதத்தைக் கண்டித்தும் ஒரு தீர்மானத்தை (''கோட்பாடு பற்றிய உடன்பாட்டை'') மாநாடு உருவாக்கியது. எனினும் ''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கத்திலும்'' ''ரபோச்சியே தேலோ'' எனும் அதன் பத்திரிகையிலும் ஒரு புதிய சந்தர்ப்பவாதப் போக்கு இருந்த காரணத்தால் ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகள் தோற்றன.

வெளிநாட்டு ரு. ச. ஜ. தொ. க. அமைப்புகளின் ஒற்றுமை மாநாடு 1901, செப்டம்பர் 21-22ல் (அக்டோபர் 4-5ல்) ஜூரிக் நகரில் நடந்தது. ''இஸ்க்ரா'', ''ஸார்யா'' அமைப்புகள், புரட்சிகரமான ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்பு, ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'', ''பரிபா'' குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

அந்த மாநாடு சந்தர்ப்பவாத முடிவுகள் எடுத்ததால் பிரதிநிதிகளில் புரட்சிகரமான பிரிவைச் சேர்ந்தவர்கள் (''இஸ்க்ரா'', ''ஸார்யா'', ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்புகளின் உறுப்பினர்கள்) ஒற்றுமைப்படுவதின் சாத்தியமின்மையைப் பற்றி ஓர் அறிக்கையை வாசித்து விட்டு மாநாட்டை விட்டு வெளியேறினர்.—7

5 ''ரபோச்சியே தேலோ'' (''தொழிலாளர்களின் இலட்சியம்'')—''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கத்தின்'' பத்திரிகை; 1899 ஏப்ரல் முதல் 1902 பிப்ரவரி வரை ஜினீவாவில் வெளியிடப்பட்டது. மொத்தம் 12 இதழ்கள் (9 புத்தகங்கள்) வெளியாயின. ''ரபோச்சியே தேலோவின்'' ஆசிரியர் குழு வெளிநாட்டிலிருந்த ''பொருளாதாரவாதிகளுக்கு''மையமாக இருந்தது. மார்க்ஸியத்தை ''விமர்சிக்கும் சுதந்தரம்'' வேண்டும் எனும் பெர்ன்ஷ்டைன் கோஷத்தை இப்பத்திரிகை ஆதரித்தது, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் போர்த்தந்திரங்கள் அமைப்புத்துறைப்பணிகள் பற்றிய பிரச்சினைகளில் சந்தர்ப்பவாத நிலை எடுத்துக் கொண்டது. இரண்டாவது ரு. ச. ஜ. தொ. க. காங்கிரசில் ''ரபோச்சியே தேலோ'' குழு இக்கட்சியின் தீவிரமான வலதுசாரி தந்தர்ப்பவாதப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.—7

6 பொருளாதாரவாதம் — பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்திலும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் தோன்றிய ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு.

மிதவாத முதலாளி வர்க்கத்தினர்தான் அரசியல் போராட்டத்தை நடத்தவேண்டும் என்று ''பொருளாதாரவாதிகள்'' அடித்துப் பேசி, சம்பள உயர்வு வேலை நிலைமைகளின் மேம்பாடு முதலானவற்றிற்கான பொருளாதாரப் போராட்டத்தோடு தொழிலாளி வர்க்கத்தின் பணிகளை வரம்பிட்டுத் தளையிட்டனர். அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை நிராகரித்தனர், கட்சியின் வேலை இயக்கத்தின் தன்னியல்பான நிகழ்வுப் போக்கைப் பார்த்து வருவதே, நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதே என்று நம்பினர். தொழிலாளர் இயக்கத்தின் தன்னியல்பான தன்மையை மிகையாக மதிப்பிட்டு, அவர்கள் புரட்சிகரமான தத்துவத்தின், உணர்வின் முக்கியத்துவத்தைத் தாழ்த்தினர்; தன்னியல்பான தொழிலாளர் இயக்கத்திலிருந்தே சோஷலிஸ்டுத் தத்துவம் பிறக்கமுடியும் என்று அடித்துப்பேசினர்.—7

7 ''ரபோச்சயா கஸேத்தா'' (''தொழிலாளர் பத்திரிகை'') —கீவ் நகரத்து சமூக-ஜனநாயகவாதிகளின் சட்ட விரோதமான பத்திரிகை. 1897 ஆகஸ்டில் முதலிதழ், டிசம்பரில் (நவம்பர் என்று போட்டிருந்தது) மற்ெருரு இதழ் என்று மொத்தம் 2 இதழ்கள் வெளியாயின. ரு. ச. ஜ. தொ. க. வின் முதல் காங்கிரஸ் ''ரபோச்சயா கஸேத்தாவை'' கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையாகத் தீர்மானித்தது. காங்கிரசிற்குப்பின் மூன்ரும் இதழ் அச்சேற்றுவதற்குத் தயாராகியிருந்தும் பிரசுரிக்கப்படவில்லை; காரணம், அச்சகத்தைப் போலீஸ் சோதனையிட்டு மத்தியக் குழுவையும் ஆசிரியர் குழுவையும் கைது செய்துவிட்டது. 1899ல் இதை மீண்டும் துவக்க முயற்சி நடந்தது. ''என்ன செய்ய வேண்டும்?'' அத்தியாயம் 5, பிரிவு அ-வில் (இந்தப் பதிப்பில் பக்கங்கள் 239-241 பார்க்க) இம்முயற்சியைப் பற்றி லெனின் எழுதுகிறுர்.—8

8 லஸ்ஸால்வாதிகளும் ஐஸனுக்வாதிகளும் —சென்ற நூற்ருண்டின் அறுபதுகளிலும் எழுபதுகளின் துவக்கப் பகுதியிலும் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்த இரண்டு கட்சிகள். முக்கியமாக போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைகளிலும், முதன்மையாக அவ்வாண்டுகளில் ஜெர்மனியில் மிகவும் அவசரமான அரசியல் பிரச்சினையாயிருந்த நாட்டை ஒன்றுபடுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய பிரச்சினையிலும் அவர்கள் ஒருவரையொருவர் கடுமையாக எதிர்த்துக் கொண்டனர்.

லஸ்ஸால்வாதிகள் — ஃபெர்டினன்ட் லஸ்ஸால் என்பவரின் ஆதரவாளர்கள்; அவர் ஜெர்மனியைச் சேர்ந்த சிறு முதலாளித்துவப் போக்கான சோஷலிஸ்டு. 1863ல் லேப்ஸிக் நகரத்தில் நடந்த தொழிலாளர் சங்கங்களின் காங்கிரஸில் நிறுவப்பெற்ற ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தில் அவர்கள் உறுப்பினர்கள். அதன் முதல் தலைவர் லஸ்ஸால், அதன் வேலைத்திட்டத்தையும் அடிப்படைப் போர்த்தந்திரங்களையும் வகுத்தவரும் அவரே. லஸ்ஸாலும் அவரது ஆதரவாளர்களும் தங்கள் நடவடிக்கைகளில் பிஸ்மார்க்கின் வல்லரசுக் கொள்கையை ஆதரித்தனர். ''புறநிலையில் பார்க்கும் போது இது பிரஷ்யர்களுக்காகத் தொழிலாளி வர்க்கம் முழுவதையும் படுமோசமாகக் காட்டிக் கொடுத்ததாகும்'' என்று 1865, ஜனவரி 27ல் எங்கெல்ஸ் மார்க்ஸுக்கு எழுதினுர். லஸ்ஸால்வாதம் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் உள்ள ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு என்று கூறி அதன் தத்துவத்தையும் போர்த்தந்திரங்களையும்அமைப்புக் கோட்

பாடுகளையும் மிகக் கடுமையாக மார்க்ஸூம் எங்கெல்ஸூம் திரும்பத் திரும்ப விமர்சித்தனர்.

**ஐஸனுக்வாதிகள்** — *1869ல் ஐஸனுக் நகரில் நடந்த துவக்கக் காங்கிரஸில் நிறுவப்பெற்ற ஜெர்மன் சமூக-ஜன நாயகவாதத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்கள். அவர்களின் தலைவர்களான ஒளகுஸ்ட் பேபெலும் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட்டும் மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவார்த்தச் செல்வாக்கின் கீழ் இருந்தனர். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத் தொழிலாளர் கட்சி தன்னை ''சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் ஒரு பிரிவாக கருதிக் கொள்கிறது. அதன் கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறது'' என்று அவர்களின் வேலைத்திட்டம் கூறியது. ஜெர்மனியை ஒன்றுபடுத்துவது பற்றிய பிரச்சினைகளில் ஐஸனுக்வாதிகள் ''ஜனநாயக, தொழிலாளிவர்க்கப் பாதையை ஆதரித்தனர், பிரஷ்யவாதத்திற்கோ பிஸ்மார்க்வாதத்திற்கோ தேசியவாதத்திற்கோ எவ்வகை சலுகை அளிப்பதையும் எதிர்த்துப் போராடினர்'' (வி. இ. லெனின்).*

*1871ல் ஜெர்மன் பேரரசு ஏற்பட்டதின் காரணமாக லஸ்ஸால்வாதிகளுக்கும் ஐஸனுக்வாதிகளுக்கும் இடையே இருந்த போர்த்தந்திரங்கள் பாற்பட்ட முக்கியமான வேற்றுமை அகன்றது. தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி எழுச்சி உண்டாக்கிய நிர்ப்பந்தத்தாலும் அரசாங்கத்தின் தீவிரமான பழிவாங்குதல்களின் நிர்ப்பந்தத்தாலும் இவ்விரண்டு கட்சிகளும் கோத்தா நகரில் நடந்த காங்கிரஸில் ஒன்றித்த ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியாக (பின்னல் ஜெர்மன் சமூக-ஜன நாயகவாதக் கட்சியாக) ஒன்றுபட்டனர்.—12*

9 **கெட்டுவாதிகள், சாத்தியப்பாடுவாதிகள்** — *பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் இருந்த புரட்சிகரமான போக்கையும் சந்தர்ப்பவாதப் போக்கையும் முறையே குறிப்பவர்கள். 1882ல் ஸான் எத்தியேன் காங்கிரஸில் பிரஞ்சுத் தொழிலாளர் கட்சி பிளவுபட்டதைத் தொடர்ந்து அவர்கள் இரண்டு கட்சிகள் அமைத்தார்கள்.*

**கெட்டுவாதிகள்** — *ழூல் கெட்டு, போல் லஃபார்க் ஆகியோரின் ஆதரவாளர்கள். தொழிலாளி வர்க்கம் ஒரு சுதந்தரமான புரட்சிகரமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்திய இடதுசாரி மார்க்ஸியப் போக்கைக் குறிக்கிறவர்கள். ''பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சி'' என்னும் பெயரை நீடித்து வைத்துக் கொண்டார்கள், 1880ல் ஹாவர் நகரத்தில் நிறைவேற்றிய கட்சியின் வேலைத்திட்டத்துக்கு உண்மையாக நடந்து கொண்டனர். இவ்வேலைத்திட்டத்தின் தத்துவார்த்தப்பகுதியை*

எழுதியவர் மார்க்ஸ். பிரெஞ்சு நாட்டின் தொழில் மையங்களில் அவர்களுக்குப் பரவலான செல்வாக்கு இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதிகளை அவர்கள் ஒன்றுபடுத்தி இருந்தனர். 1901ல் கெட்டுவாதிகள் ''சோஷலிஸ்டு பார்ட்டி ஆப் பிரான்ஸ்'' எனும் கட்சியை நிறுவினர்.

சாத்தியப்பாடுவாதிகள் (பி. புரூஸ், பி. மலோன் முதலியவர்கள்)—புரட்சிகரமான போராட்ட முறைகளிலிருந்து தொழிலாளி வர்க்கத்தைத் திசை திருப்பிவிட்ட ஒரு சிறுமுதலாளித்துவ வகைப்பட்ட சீர்திருத்தவாதப் போக்கைக் குறிப்பவர்கள். அவர்கள் ''தொழிலாளர் சமுதாயப் புரட்சிக் கட்சியை'' நிறுவினர், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான வேலைத்திட்டத்தையும் புரட்சிகரமான போர்த்தந்திரங்களையும் நிராகரித்தனர், தொழிலாளர் இயக்கத்தின் சோஷலிஸ்டுக் குறிக்கோள்களை மழுங்கடித்தனர்; ''சாத்தியமானவற்றிற்காக'' மட்டும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தை நடத்துவதோடு நின்றுகொள்ள வேண்டும் என்று எடுத்துப் பேசினர் (எனவே தான் அவர்களுக்கு இந்தப் பெயர்). சாத்தியபாடுவாதிகளின் செல்வாக்கு பிரான்சில் பொருளாதார வகையில் பிற்பட்டிருந்த பகுதிகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் அவ்வளவாக முன்னேறாத பகுதிகளிடையேயும் முக்கியமாகப் பரவியிருந்தது. 1902ல் சாத்தியபாடுவாதிகளும் மற்ற சீர்திருத்தவாதக் குழுக்களும் சேர்ந்து பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர். அதன் தலைவர் ழ. ஜொரேஸ்.

1905ல் சோஷலிஸ்டு பார்ட்டி ஆப் பிரான்ஸும் பிரஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியும் ஒன்று கலந்து பிரஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியாக உருவெடுத்தது. 1914-1918 ஏகாதிபத்தியப் போரில் இக்கட்சியின் தலைமை (கெட்டு, ஸம்பா முதலானவர்கள்) தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியத்திற்குத் துரோகம் செய்து ஒரு சமூக-தேசியவெறிப் போக்கான நிலை வகித்தனர்.—12

10 ஃபேபியஸ்வாதிகள் — 1884ல் இங்கிலாந்தில் நிறுவப்பெற்ற ஃபேபியன் சங்கத்தின் உறுப்பினர்கள். இச்சங்கம் சீர்திருத்தவாதப் போக்குள்ளது. கி. மு. மூன்றும் நூற்றாண்டில் இருந்த உரோமானிய இராணுவத் தலைவன் ஃபேபியஸ் மாக்ஸீமின் பெயரைத் தாங்கியது இச்சங்கம். அவருக்கு "cunctator" (''மெள்ளப் போ'') எனும் கேலிப் பெயரும் உண்டு. ஏனெனில் ஹானிபால் என்பவரை எதிர்த்து நடந்த போரில் அவர் பொறுத்திருந்து பார்க்கும் போர்த்தந்திரங்களைக் கையாண்டார், நிர்ணயமான போர்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து வந்தார். இச்சங்

கத்தின் உறுப்பினர்கள் முக்கியமாக முதலாளித்துவப் போக்கான அறிவுஜீவிகளே: புலவர்கள், எழுத்தாளர்கள், பிரமுகர்கள் (சிட்னேய் வெப், பியாட்ரீஸ் வெப், பெர்ஞர்டு ஷா, ராம்சே மாக்டொனுல்டு முதலியவர்கள்) என்று. தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமும் சோஷலிஸ்டுப் புரட்சியும் அவசியமில்லை என்று அவர்கள் நிராகரித்தனர், சீர்திருத்தங்கள் மூலமாகவும் சமூதாயத்தைப் படிப்படியாக மாற்றுவதின் மூலமாகவும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச்செல்வது சாத்தியம் என்று அடித்துப் பேசினர். ஃபேபியஸ்வாதம் ''ஒரு தீவிரமான சந்தர்ப்பவாதப் போக்கு'' என்று லெனின் வர்ணித்தார். 1900ல் ஃபேபியன் சங்கம் உழைப்பாளர் கட்சியில் (லேபர் கட்சியில்) சேர்ந்து விட்டது. உழைப்பாளர் கட்சியின் தத்துவார்த்தத்திற்கு ''ஃபேபியன்வாத சோஷலிசம்'' ஒரு தோற்றுவாய் ஆகும்.—12

11 **நரோத்னயா வோல்யா ஆதரவாளர்கள்** (நரோத்னிக்குகள்)— ''நரோத்னயா வோல்யா'' (''மக்கள் சித்தம்'') எனும் அமைப்பின் உறுப்பினர்கள்; இது நரோத்னிக்-பயங்கரவாதிகளின் புரட்சிகரமான இரகசிய அமைப்பு, 1879 ஆகஸ்டில் நிறுவப்பெற்றது.

எதேச்சாதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரு ஜனநாயகக் குடியரசை நிலைநாட்டுவது உடனடிப் பணி என்று அவர்கள் கருதினர். நாரோதியத்தின் வரலாற்றிலேயே முதல் தடவையாக ''நரோத்னயா வோல்யா'' உறுப்பினர்கள் ஓர் அரசியல் போராட்டத்தின் அவசியம் பற்றிய பிரச்சினையைக் கிளப்பினுர்கள், ஆனுல் அதை வெறும் சதிவேலையாகவும் தனிநபர் பயங்கரவாதச் செயலாகவும் தாழ்த்தினர்.

பல முயற்சிகள் தோற்ற பிறகு கடைசியாக 1881, மார்ச் 1ல் ஜார் மன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் கொல்லப்பட்டார். இதற்குப் பொறுப்பானவர்கள் தலைவாங்கப்பட்டனர், பல வழக்குகள் தொடர்ந்தன. விரைவிலே ''நரோத்னயா வோல்யா'' செயலாற்றுவது நின்றுவிட்டது. வீரமும் தன்னலமின்மையும் அதன் உறுப்பினர்களிடையே இருந்துங்கூட தவருன தத்துவமும் போர்த்தந்திரங்களும் வைத்திருந்ததாலும் மக்களோடு விரிந்து பரந்த தொடர்புகள் இல்லாததாலும் இவ்வமைப்பு முறிந்து போயிற்று.

**சமூக-ஜனநாயகவாதிகள்** — இச்சொல் ருஷ்ய மார்க்ஸியவாதிகளாகிய கி. வ. பிளெஹானவ், வி. இ. லெனின் முதலியவர்களைக் குறிக்கிறது. இவர்கள் சென்ற நூற்ருண்டின் 80களிலும் 90களிலும் தங்கள் நூல்களிலும் கட்டு

ரைகளிலும் ''நரோத்னயா வோல்யா'' உறுப்பினர்களின் சித்தாந்தத்தையும் அரசியல் போராட்ட முறைகளையும் விமர்சித்தனர்.

**சமூக-ஜனநாயகவாதிகள்** — *1884ல் பிரிட்டனில் நிறுவப்பெற்ற சமூக-ஜனநாயகவாதக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை லெனின் குறிப்பிடுகிறார். சீர்திருத்தவாதிகள் (ஹைண்ட்மன் முதலானோர்), அராஜகவாதிகள் ஆகியவர்களோடுகூட, புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகளாகவும் மார்க்ஸியத்தின் ஆதரவாளர்களாகவும் இருந்த ஒரு குழுவும் (ஹா. குவெல்ச், தா. மேன், ஏ. எவ்லிங், எலியனோர் மார்க்ஸ் முதலியவர்கள்) அதில் இருந்தனர். பின்சொல்லப்பட்டவர்கள் பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவாக இருந்தனர். வறட்டுத் தத்துவப் போக்கிற்காகவும் குறுங்குழுவாதத்திற்காகவும் பிரிட்டனின் திரளான இயக்கத்தினின்று தனிமைப்பட்டிருப்பதற்காகவும் அவ்வியக்கத்தின் தனியியல்புகளைப் புறக்கணித்ததற்காகவும் பிரிட்டிஷ் சமூக-ஜனநாயகவாதக் கூட்டமைப்பை எங்கெல்ஸ் கடுமையாக விமர்சித்தார். 1907ல் சமூக-ஜனநாயகவாதக் கூட்டமைப்பு சமூக-ஜனநாயகவாதக் கட்சி என்று பெயர் மாற்றிக் கொண்டது; 1911ல் சுயேச்சைத் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த இடதுசாரி நபர்களுடன் சேர்ந்து அது பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவியது. 1920ல் இக்கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கெடுத்துக் கொண்டனர்.—12*

12 **அமைச்சரவைவாதிகள்** *(மில்லெராண்ட்வாதிகள்)—பிரெஞ்சு சோஷலிஸ்டான அ. மில்லெராண்ட் என்பவரின் ஆதரவாளர்கள்; இவர் 1899ல் வால்டக்-ரூஸோ தலைமையில் இருந்த பிற்போக்கான பிரெஞ்சு முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார்.—12*

13 **பேர்ன்ஷ்டைன்வாதிகள்** — *ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலும், சர்வதேச சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலும் மார்க்ஸியத்திற்குப் பகைமையாக இருந்த ஒரு போக்கின் ஆதரவாளர்கள்; இது 19ம் நூற்றாண்டின் இறுதியில் தலைதூக்கியது; திருத்தல்வாதத்தின் தத்துவ ஆசிரியரான எடுவார்ட் பேர்ன்ஷ்டைன் பெயரைத் தாங்கியது.*

*அவர் 1896-98 ஆண்டுகளில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின்* "Die Neue Zeit" *(''புதிய காலம்'') எனும் பத்திரிகையில் ''சோஷலிசத்தின் பிரச்சினைகள்'' என்று*

தலைப்பிட்ட ஒரு கட்டுரைத்தொடர் வெளியிட்டார். அது ''விமர்சனச் சுதந்தரம்'' என்பதின் பெயரால் புரட்சிகரமான மார்க்ஸியத்தின் தத்துவஞானம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படைகளைத் திருத்த முயன்றது (எனவேதான் ''திருத்தல்வாதம்'' என்று பெயர் பெற்றது), அவற்றிற்குப் பதிலாக வர்க்க முரண்பாடுகளைச் சமரசப்படுத்துவது, வர்க்கக் கூட்டுறவு சம்பந்தப்பட்ட முதலாளித்துவப் போக்கான தத்துவங்களை வைக்க முயன்றது. ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின் வலதுசாரிப் பிரிவினரும் இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த பிற கட்சிகளிலுள்ள சந்தர்ப்பவாத நபர்களும் பெர்ன்ஷ்டைன் கருத்துக்களை ஆதரித்தனர்.—12

14 **ருஷ்ய விமர்சகர்கள்** — ருஷ்யாவில் பெர்ன்ஷ்டைன்வாதத்தைப் பின்பற்றியவர்கள், ''சட்டபூர்வமான மார்க்ஸியவாதிகள்'' எனப்பட்டவர்கள் (ஸ்துருவே, புல்காக்கொவ், பெர்தியாயிவ் முதலானோர்); இவர்கள் ''விமர்சனச் சுதந்தரம்'' என்று சொல்லிக் கொண்டு மார்க்ஸியத்தைத் திருத்தவேண்டும் என்று கோரினர்; சோஷலிஸத்துக்காக, சோஷலிஸ்டுப் புரட்சிக்காக, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காகப் போராடுவதை நிராகரித்தனர்.—12

15 **ஜூபிட்டர், மினர்வா** — பண்டைக்கால உரோமானியக் கடவுளர்கள். ஜூபிட்டர் வானத்துக்கும் இடியேறுக்கும் கடவுள். உரோமானிய அரசின் தலையாய கடவுள். மினர்வா போர், அறிவு, கலைகள், தொழில்கள் விஞ்ஞானம் ஆகியவற்றின் கடவுள்.—13

16 **''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்''** —''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவின் முன்முயற்சியால் 1894ல் நிறுவப்பெற்றது; இதன் வெளியீடுகளைப் பதிப்பிக்கும் பொறுப்பு ''உழைப்பாளர் குழுவிடம்'' ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரு. ச. ஜ. தொ. கட்சியின் முதல் காங்கிரஸ் (1898 மார்ச்சு) இதைத் தனது வெளிநாட்டுப் பிரதிநிதியாக அங்கீகரித்தது. பிற்காலத்தில், சந்தர்ப்பவாத நபர்கள் (''பொருளாதாரவாதிகள்'' அல்லது ''இளம்'' சமூக-ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்பட்டவர்கள்) அதில் ஆதிக்கம் பெற்றனர். 1899 ஏப்ரலில் ''பொருளாதாரவாதிகளின்'' ''ரபோச்சியே தேலோ'' பத்திரிகையை ''இச்சங்கம்'' வெளியிடத் தொடங்கியது.

''உழைப்பாளர் விடுதலைக்'' குழு ''இச்சங்கத்தின்'' சந்தர்ப்பவாதக் கொள்கையை எதிர்த்தது, அதன் பிரசுரங்களைப் பதிப்பிக்க மறுத்துவிட்டது.

''இச்சங்கத்தின்'' இரண்டாம் காங்கிரஸில் (1900) அது பிளவுண்டது; காங்கிரஸிலிருந்து ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு வெளியேறி ''சோசியல் டெமாக்ரட்'' எனும் சுதந்தரமான அமைப்பை நிறுவியது. ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் (1903) ''இச்சங்கத்தைக்'', கலைத்துவிடத் தீர்மானித்தது.—17

17 மௌண்டன், ஜிரோந்த்—18ம் நூற்றாண்டு இறுதியில் நடந்த பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின்போது முதலாளி வர்க்கத்திடையே இருந்த இரண்டு அரசியல் பிரிவுகள்.

மௌண்டன் — அக்காலத்திய மிகவும் புரட்சிகரமான வர்க்கமாயிருந்த முதலாளி வர்க்கத்தின் உறுதிமிக்க பிரதிநிதிகளான ஜாகொபின்களுக்கு இடப்பட்ட பெயர் இது. அவர்கள் எதேச்சாதிகாரத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிக்கக் கோரினர். இதற்கு மாருக, ஜிரோந்த்வாதிகள் புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையே ஊசலாடினர், முடியரசுடன் சமரசமாடினர்.

சமூக-ஜனநாயகவாதத்திலிருந்த சந்தர்ப்பவாதப் பிரிவுக்கு ''சோஷலிஸ்டு ஜிரோந்த்'' என்ற சொல்லை லெனின் பயன்படுத்தினுர், புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகளுக்கு ''மௌண்டன்'', அல்லது தொழிலாளிவர்க்க ஜாகொபின்கள் எனும் சொல்லைப் பயன்படுத்தினுர். போல்ஷிவிக்குகளாகவும் மென்ஷிவிக்குகளாகவும் ரு. ச. ஜ. தொ. க. பிளவுபட்டபின், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மென்ஷிவிக்குகள் ஜிரோந்த் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அடிக்கடி லெனின் வலியுறுத்தினுர்.—17

18 ''ஸார்யா'' (''விடிவெள்ளி'') — மார்க்ஸிய வழிப்பட்ட விஞ்ஞான, அரசியல் சஞ்சிகை; 1901-02ல் ''இஸ்க்ரா'' ஆசிரியர்கள் ஸ்டுட்கார்ட்டிலிருந்து வெளியிட்டனர். மொத்தம் நான்கு இதழ்கள் (மூன்று புத்தகங்கள்) வெளிவந்தன.

சர்வதேசச் சந்தர்ப்பவாதத்தையும் ருஷ்யச் சந்தர்ப்பவாதத்தையும் ''ஸார்யா'' விமர்சித்தது, மார்க்ஸியத் தத்துவத்தை ஆதரித்தது.—17

19 கடேட்டுகள் — ருஷ்யாவில் மிதவாத-முடியாட்சிப் போக்கான முதலாளி வர்க்கத்தாரின் முதன்மையான கட்சியான அரசியல்-சட்ட-ஜனநாயகக் கட்சியின் (கான்ஸ்டிட்யூஷனல்-டெமாக்ராடிக் கட்சியின்) உறுப்பினர்கள்; இது 1905 அக்டோபரில் நிறுவப்பெற்றது. இதில் முதலாளி வர்க்

கத்தினர், நிலச்சொந்தக்காரர்கள், முதலாளித்துவப் போக்குள்ள படிப்பாளிப் பகுதியினர் ஆகியோரின் பிரதிநிதிகள் இருந்தனர். விவசாயிகளைத் தம்பக்கம் இழுத்துக் கொள்வதற்காகப் போலி ''ஜனநாயகக்'' கோஷங்களைப் பயன்படுத்தியபடியே கடேட்டுகள் ஜாராட்சியுடன் பேரம் செய்துகொள்ள முயன்றனர்; அரசியல் சட்டத்துக் குட்பட்ட முடியாட்சிமுறை வேண்டும் என்றனர், குடியரசு வேண்டும் என்கிற கோரிக்கையை எதிர்த்தனர், பிரபுத்துவ நிலவுடைமைமுறையைக் காத்துப் பேண வேண்டும் என்று கோரினர்.—18

20 பெஸாகிளாவ்ட்ஸி — ருஷ்ய முதலாளி வர்க்கப் படிப்பாளிப் பகுதியினரிடையே இருந்த ஒரு அரை-கடேட்டு அரை-மென்ஷிவிக் குழு; 1905-07ம் புரட்சி தோற்று நலிந்து வந்த காலத்தில் நிறுவப் பெற்றது. புரொகபோவிச் என்பவரை ஆசிரியராகக் கொண்டு செயின்ட் பீடர்ஸ்புர்க் நகரிலிருந்து 1906 ஜனவரி முதல் மே வரை வெளிவந்த ''பெஸ்ஸாகிளாவியா'' (''தலைப்பு அற்றது'') எனும் அரசியல் வாரப் பத்திரிகையின் பெயரிட்டுக் கொண்டது. தாங்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல என்று சொல்லிக்கொண்டு முதலாளித்துவப் போக்கான மிதவாத சந்தர்ப்பவாதக் கருத்துக்களை எடுத்துரைத்தனர், ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்திலும் சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்திலும் திருத்தல்வாதிகளை ஆதரித்தனர்.—18

21 மென்ஷிவிக்குகள் — ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதப் போக்கின் பிரதிநிதிகள். மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்ற பெயரை அவர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) பெற்றனர். இந்தக் காங்கிரசின் இறுதியில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் இவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து சிறுபான்மை வாக்குகளையே பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றனர். இவர்கள் போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர். 1905-1907ஆம் ஆண்டுகளின் புரட்சியின்போது மென்ஷிவிக்குகள் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி மக்களுக்கும் இடையிலான கூட்டணியையும் எதிர்த்தனர். புரட்சி தோல்வியுற்றபின்

*பிற்போக்கு தலைவிரித்தாடிய 1907-1910ஆம் ஆண்டுகளில் மென்ஷிவிக்குகள் கட்சிக் கலைப்பாளர்களாகி, சட்டவிரோதமாக இயங்கிவந்த புரட்சிகரக் கட்சியை ஒழித்திட முயன்றனர். முதலாம் உலகப் போரின்போது மென்ஷிவிக்குகள் சமூக-தேசியவெறிவாத நிலையைப் பின்பற்றினர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரின் உறுப்பினர்களாகி, அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர்: மூண்டுவந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்துப் போராடினர்.*

*அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பகிரங்கமாகவே எதிர்ப்புரட்சிக் கட்சியாகி சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர்.—18*

22 பாரிஸ் கம்யூன் — *தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக வரலாறு கண்ட முதல் சோதனை; பாரிஸில் நடந்த தொழிலாளி வர்க்கப் புரட்சி தோற்றுவித்த தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான அரசாங்கம். 1871 மார்ச்சு 18 முதல் மே 28 வரை 72 நாள் நீடித்தது பாரிஸ் கம்யூன். —20*

23 சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் — *ஜெர்மனியில் 1878ல் பிஸ்மார்க் அரசாங்கம் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் சோஷலிஸ்டு இயக்கத்துக்கும் எதிராகப் புகுத்தியது. சமூக-ஜனநாயகவாத அமைப்புகள், திரளான தொழிலாளி வர்க்க அமைப்புகள், தொழிலாளர் பத்திரிகைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன; சோஷலிஸ்டு இலக்கியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன, சமூக-ஜனநாயகவாதிகள் துன்புறுத்தப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர்.*

*1890ல் தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நிர்ப்பந்தத்தால் இச்சட்டம் ரத்து செய்யப்பட்டது.—20*

24 *1877 மே 27-29ல், ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் காங்கிரஸ் கோத்தா நகரில் நடந்தது. கட்சிப் பத்திரிகை பற்றிய பிரச்சினையைக் குறித்து அது விவாதித்தது. டூரிங்கை எதிர்த்து எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகளை (இவை ''டூரிங்குக்கு மறுப்பு. விஞ்ஞானத்தில் திரு. ஒய்கேன் டூரிங் நிகழ்த்திய புரட்சி'' என்று தனி நூலாக 1878ல் பிரசுரிக்கப்பட்டன) வெளியிட்டதற்காக* “Vorwärts” *எனும் கட்சியின் மத்தியப் பத்திரிகையைக் கண்டிக்கவும் எங்கெல்ஸ் கடுமையான முறையில் வாதப்போர் நடத்தியதை விமர்சிக்கவும் சில பிரதிநிதிகள் (மோஸ்த், வால்*

டைஷ்) செய்த முயற்சியைக் காங்கிரஸ் நிராகரித்தது.
—20

25 "Vorwärts" (''முன்னேறுக'')—நாளேடு; ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் மத்தியப் பத்திரிகை, 1876ல் நிறுவப்பெற்றது. அதன் முதல் ஆசிரியர் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட். சந்தர்ப்பவாதத்தின் எல்லா வெளிப்பாடுகளையும் எதிர்த்து அதில் எங்கெல்ஸ் எழுதினார். 1890களின் பிற்பகுதியில், எங்கெல்ஸ் மறைந்தபின், கட்சியின் வலதுசாரிப் பிரிவின் கையில் "Vorwarts" சிக்கி, சந்தர்ப்பவாதிகளின் கட்டுரைகளை முறையாக வெளியிடத் தொடங்கியது; அவர்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியிலும் இரண்டாம் அகிலத்திலும் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். முதல் உலகப் போர் நடந்த காலத்தில் "Vorwarts" சமூக-தேசியவெறிக் கொள்கை நிலை வகித்தது. 1933ல் அது நின்றுவிட்டது.—20

26 கதீடர்-சோஷலிஸ்டுகள் (பீட-சோஷலிஸ்டுகள்) — 1870, 1880களில் முதலாளித்துவப் போக்கான அரசியல் பொருளாதாரத்தில் கண்ட ஒரு போக்கின் பிரதிநிதிகள். பல்கலைக்கழகப் பீடங்களிலிருந்து (கதீடர் எனும் ஜெர்மன் சொல்லுக்குப் பீடம் என்று பொருள்) சோஷலிஸத்தின் பேரால் முதலாளித்துவப் போக்கான மிதவாதச்-சீர்திருத்தவாதத்தைப் பிரச்சாரம் செய்தனர்.

முதலாளித்துவ அரசு வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது, பகையான வர்க்கங்களைச் சமரசப்படுத்திவைக்கத் திறனுள்ளது, முதலாளிகளின் நலன்களில் கை வைக்காமலும் அதே நேரத்தில் கூடுமானவரை தொழிலாளிகளின் கோரிக்கைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டும் படிப்படியாக ''சோஷலிஸத்தை'' புகுத்தத் திறனுள்ளது என்றெல்லாம் அவர்கள் வாதாடினர்.

கதீடர்-சோஷலிஸத்தின் பிற்போக்கான சாராம்சத்தை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மீண்டும் மீண்டும் அம்பலப்படுத்திவந்தனர்.

ருஷ்யாவில் கதீடர்-சோஷலிஸ்டுகளின் கருத்துக்களைச் ''சட்டபூர்வமான'' மார்க்ஸியவாதிகள் போதித்தனர்.—20

27 நொஸ்திரியோவ் — நி. வ. கோகல் எழுதிய இறந்த ஆன்மாக்கள் எனும் நாவலில் வர்ணிக்கப்படும் ஒரு வகையான நிலச்சொந்தக்காரன், தொந்தரவு கொடுக்கும் போக்கிரி. போன இடங்களிலெல்லாம் பல விதமான ''கதைகளும்''

பழிச்சேதிகளும் கிளம்பியதால் அவரை ''வரலாற்றுக் குரிய'' பாத்திரமாகக் கோகல் குறிப்பிட்டார்.—21

28 *1899 அக்டோபர் 9-14* இடையே ஹனேவர் நகரில் நடந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சி காங்கிரஸின் ''கட்சியின் அடிப்படைக் கருத்துக்கள் போர்த்தந்திரங் கள் மீது தாக்குதல்கள்'' எனும் தீர்மானத்தை லெனின் குறிப்பிடுகிறார். இப்பிரச்சினை குறித்து ஒளகுஸ்ட் பேபெல் ஓர் அதிகாரபூர்வமான அறிக்கை வைத்தார். சமூக-ஜன நாயகவாதக் கட்சியின் தத்துவத்தையும் போர்த்தந்திரங் களையும் திருத்தும் முயற்சிகளை நிராகரிக்கும் பேபெலின் தீர்மானத்துக்குக் காங்கிரஸில் மிகப் பெரும்பான்மையான பிரதிநிதிகள் வோட்டளித்தனர். என்றபோதிலும், அதில் பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களைப்பற்றித் தீவிரமான விமர்சனம் இல்லாததால் பெர்ன்ஷ்டைனும் அவருடைய ஆதரவாளர்களும் அதற்கு வோட்டளித்தனர். —21

29 *1901 செப்டம்பர் 22-28* இடையே லியுபெக் நகரில் நடந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் காங் கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தை லெனின் குறிப்பிடு கிறார். அது பெர்ன்ஷ்டைனுக்கு எதிராகப் போடப்பட்ட தாகும். 1899ல் நடந்த ஹனேவர் காங்கிரஸுக்குப்பின் அவர் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் வேலைத்திட்டத் தையும் போர்த்தந்திரங்களையும் தாக்குவதை நிறுத்தி விடுவதற்கு மாறாக தீவிரப்படுத்தினார், கட்சிக்கு வெளி யேயும் பகிரங்கமாக நடத்திவந்தார். விவாதங்களின் போக்கிலும் பேபெல் முன்மொழிந்து மிகப் பெரும் பாலான பிரதிநிதிகளால் ஏற்கப்பட்ட தீர்மானத்திலும் பெர்ன்ஷ்டைன் நேரடியாக எச்சரிக்கப்பட்டார். ''விமர் சனச் சுதந்தரம்'' கோரியும் பெர்ன்ஷ்டைன் விஷயத்தில் மௌனம் சாதித்தும் வந்த சந்தர்ப்பவாதியான ஹைனே கொடுத்த மாற்றுத் தீர்மானத்தைக் காங்கிரஸ் நிராகரித் தது. என்றபோதிலும், சமூக-ஜனநாயகவாதக் கட்சி உறுப் பினராக இருந்துகொண்டே மார்க்ஸியத்தைத் திருத்து வது பொருத்தமற்றது எனும் பிரச்சினையைக் காங்கிரஸ் கோட்பாடு முறையில் எழுப்பவில்லை.—21

30 ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் ஸ்டுட்கார்ட் காங்கிரஸ் *1898 அக்டோபர் 3-8* இடையே நடந்தது. ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தில் நிலவிய திருத்தல் வாதத்தை முதன்முதலாக விவாதித்த காங்கிரஸ் இதுவே.

பெர்ன்ஷ்டைன் இதற்கு விரவில்லை; அவரது அறிக்கை காங்கிரஸில் வாசிக்கப்பட்டது. ஏற்கெனவே தாம் பல கட்டுரைகளில் விவரித்திருந்த சந்தர்ப்பவாதக் கருத்துக்களை அதில் அவர் எடுத்துரைத்துத் தாங்கிப்பேசினார். காங்கிரஸில் பெர்ன்ஷ்டைனின் எதிர்ப்பாளர்களிடையே ஒற்றுமை இருக்கவில்லை. அ. பேபெலும் கா. காவுட்ஸ்கியும் மற்றவர்களும் பெர்ன்ஷ்டைனுக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டமும் அவரது தவறுகளைப் பற்றிய விமர்சனமும் வேண்டும் என்றனர், ஆனால் பெர்ன்ஷ்டைன் விஷயத்தில் அமைப்பு வகைப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதை எதிர்த்தனர். ரோஸா லுக்ஸம்பர்க் தலைமையிலிருந்த சிறுபான்மையினர் பெர்ன்ஷ்டைன்வாதத்தை மேலும் உறுதியாக எதிர்த்தனர்.—22

31 **''சட்டபூர்வமான மார்க்ஸியம்''** — 1890களில் ருஷ்யாவில் முதலாளித்துவ-மிதவாத அறிவுஜீவிகளிடையே தோன்றிய ஒரு சமுதாய-அரசியல் போக்கு. மார்க்ஸியத்தை எடுத்தியம்புகிறவர்களாகச் சொல்லிக்கொண்ட ஸ்துருவே, புல்காக்கோவ், துகான்-பாரனோவ்ஸ்கி முதலியவர்கள் மார்க்ஸியத் தத்துவத்திலிருந்து ஒரு பகுதியை மட்டும்—அதாவது, தவிர்க்க முடியாதவாறு நிலப்பிரபுத்துவச் சமுதாய-அரசியல் அமைப்புமுறையை விலக்கி முதலாளித்துவ அமைப்புமுறை வருவதைப் பற்றிக் கூறும் பகுதியை மட்டும் — எடுத்துக் கொண்டனர். மார்க்ஸியத்தின் ''புரட்சிகரமான ஆன்மாவை''—தவிர்க்கமுடியாதவாறு முதலாளித்துவம் நொறுங்கி சோஷலிஸ்டுப் புரட்சி நடக்கும் என்பது பற்றிய போதனையை—முற்றாக நிராகரித்தனர். ருஷ்யாவில் முதலாளித்துவம் வளர்வதின் தவிர்க்க முடியாத்தன்மையை நிராகரித்த நரோதியவாதிகளை ''சட்டபூர்வமான மார்க்ஸியவாதிகள்'' சட்டபூர்வமான பத்திரிகைகளிலே விமர்சித்து முதலாளித்துவத்தைப் போற்றிப் பேசினர். பிற்காலத்தில் ''சட்டபூர்வமான மார்க்ஸியவாதிகள்'' மார்க்ஸியத்தின் பகைவர்களாயினர், முதலாளி வர்க்கப் போக்கான, அரசியல்-சட்ட ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தனர்.—25

32 **தலைக்கனத்துப் போன ஆசிரியர்** — மக்ஸீம் கோர்க்கியின் துவக்கக்காலத்திய சிறுகதை ஒன்றின் தலைப்பு.—26

33 ''நம் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய ஒரு பண்புரைக்குரிய விஷயாதாரங்கள்'' எனும் தொகுதியை இங்கே லெனின் குறிப்பிடுகிறார்; இது 1895 ஏப்ரலில் ஒரு சட்ட

பூர்வமான அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. இதில் லெனின் கட்டுரை ஒன்றும் இருந்தது; அதன் தலைப்பு ''நரோதியத்தின் பொருளாதார உள்ளடக்கமும் திரு. ஸ்துரூவே நூலில் ('முதலாளி வர்க்கப் போக்கான இலக்கியத்தில் மார்க்ஸியத்தின் பிரதிபலிப்பு') அதைப்பற்றிய விமர்சனமும்'' என்பதாகும். இக்கட்டுரை ''சட்டபூர்வமான மார்க்ஸிய வாதிகளை'' எதிர்த்து எழுதப்பட்டது.

இத்தொகுதியை விற்பதைத் தடை செய்த ஜார் அரசாங்கம் ஓராண்டு கழித்து அதைப் பறிமுதல் செய்து எரித்துவிட ஆணையிட்டது. நூறு பிரதிகள் மட்டுமே காப்பாற்றப்பட்டு இரகசியமாக செயின்ட் பிடர்ஸ்பர்க் நகரிலும் பிற நகரங்களிலும் சமூக-ஜனநாயகவாதிகளிடையே விநியோகிக்கப்பட்டன.—27

34 எ. பெர்ன்ஷ்டைன் எழுதிய ''சோஷலிஸத்தின் அடிக்கோள்களும் சமூக-ஜனநாயகவாதத்தின் பணிகளும்'' எனும் நூல் குறிப்பிடப்படுகிறது. இந்நூல் புரட்சிகரமான மார்க்ஸியத்தை முதலாளிவர்க்கப் போக்கான சீர்திருத்தவாத வழியிலே திருத்தியது. 1901ல் ருஷ்ய மொழியில் 1) ''வரலாற்றுரீதியான பொருள்முதல்வாதம்'', 2) ''சமுதாயப் பிரச்சினைகள்'', 3) ''சோஷலிஸத்தின் பிரச்சினைகளும் சமூக-ஜனநாயகவாதத்தின் பணிகளும்'' எனும் பல்வேறு தலைப்புகளின்கீழ் இது பிரசுரிக்கப்பட்டது. —29

35 ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் ஒரு கண்டனம் — லெனின் நாடுகடத்தப்பட்டிருந்த போது 1899 ஆகஸ்டில் எழுதியது. இது "Credo" எனும் அறிக்கையைத் தாக்கியது. செ. நி. புரொகபோவிச், எ. டி. குஸ்கோவா முதலியவர்களைக் கொண்ட ''பொருளாதாரவாதிகளின்'' குழு ஒன்று எழுதிய அறிக்கையே இது. இக்குழு பிற்காலத்தில் கடேட்டுகளோடு சேர்ந்துவிட்டது.

மினுஸின்ஸ்க் மாவட்டத்தைச் சேர்ந்த எர்மகோவ்ஸ்கயே கிராமத்தில் லெனின் கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்ட 17 மார்க்ஸியவாதிகள் இந்தக் ''கண்டனத்தை'' விவாதித்து ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர். துருகான்ஸ்க் (சைபீரியா) ஓரியோல் (வியாட்கா மாநிலம்) ஆகிய இடங்களில் நாடுகடத்தப்பட்டிருந்தவர்களும் இந்தக் ''கண்டனத்தை'' ஏற்றுக்கொண்டனர்.

லெனின் இந்த ஆவணத்தின் ஒரு பிரதியை வெளிநாட்டிலிருந்த ''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவுக்கு அனுப்பிவைத்தார். இதை 1900 துவக்கத்தில் கி. வ. பிளெஹானவ் ''ரபோச்சியே தேலோ'' ஆசிரியர்களுக்

*குரிய* Vademecum *(வழிகாட்டி) நூல்தொகுதியில் வெளியிட்டார்.—30*

[36] ''ரபோச்சயா மிஸ்ல்'' *(''தொழிலாளர் சிந்தனை'')—''பொருளாதாரவாதப்'' பத்திரிகை; 1897 அக்டோபர் முதல் 1902 டிஸம்பர் வரை மொத்தம் 16 இதழ்கள் வெளியிடப்பட்டன.*

*''ரபோச்சயா மிஸ்ல்'' விரித்துரைத்த கருத்துக்கள் சர்வதேச சந்தர்ப்பவாதத்தின் ருஷ்யப் பதிப்பாகும் என்று லெனின் பல கட்டுரைகளில், குறிப்பாக ''இஸ்க்ராவிலும்'' இந்நூலிலும் விமர்சித்தார்.—31*

[37] ''ரபோச்சியே தேலோ'' ஆசிரியர்களுக்குரிய Vademecum (வழிகாட்டி) நூல். கி. வ. பிளெஹானவ் முகவுரையுடன் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு வெளியிட்ட ஒரு விஷயாதாரத் தொகுதி, *ஜினீவா, 1900 பிப்ரவரி. ரு. ச. ஜ. தொ. கட்சியிலிருந்த சந்தர்ப்பவாதத்தை எதிர்த்தும், ''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கமும்'' அதன் பத்திரிகையான ''ரபோச்சியே தேலோவும்'' வெளிப்படுத்திய ''பொருளாதாரவாதத்தை'' முக்கியமாக எதிர்த்தும் இது எழுதப்பட்டது.—31*

[38] "Profession de foi" *(நம்பிக்கைச் சின்னம், வேலைத்திட்டம், உலகப் பார்வை விளக்கம்)—1899 இறுதியில் கீவ் கமிட்டி சந்தர்ப்பவாதக் கருத்துக்களை முன்வைத்துப் பிரசுரித்த ஒரு துண்டுப்பிரசுரம். அது பல அம்சங்களில் ''பொருளாதாரவாதிகளின்'' பழிகேடான* "Credo" *உடன் ஒத்திருந்தது.—31*

[39] ''ரபோச்சயா மிஸ்லின்'' தனி இணைமலர் — *1899 செப்டம்பரில் ''பொருளாதாரவாதப்'' போக்குள்ள ''ரபோச்சயா மிஸ்லின்'' ஆசிரியர்கள் வெளியிட்ட ஒரு குறுநூல். இந்நூல், குறிப்பாக* R. M. *எழுதிய ''நமது எதார்த்த நிலை'' எனும் கட்டுரை, சந்தர்ப்பவாதக் கருத்துக்களைப் பச்சையாக வெளியிட்டது.—36*

[40] ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு—*1883ல் ஜினீவா நகரில் பிளெஹானவ் நிறுவிய முதன்முதலான ருஷ்ய மார்க்ஸியக் குழு.*

*இக்குழு ருஷ்யாவில் மார்க்ஸியத்தைப் பரப்புவதில்*

பெரும் பணி புரிந்தது; மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுதிய நூல்களை ருஷ்ய மொழியில் பெயர்த்து, வெளிநாட்டில் பிரசுரித்து, ருஷ்யாவில் வினியோகித்தது. தனது பதிப்புகளிலும் மார்க்ஸியத்தை மக்கள்திரளிடையே பரப்பியது. இக்குழு நரோதியத்துக்குப் பலமான அடி கொடுத்தது. பிளெஹானவ் (1883லும் 1885லும்) எழுதிய ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் இரண்டு நகல் வேலைத்திட்டங்களை இக்குழு வெளியிட்டது. ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதக் கட்சியைத் தொற்றுவிக்கத் தயாரிப்புச் செய்வதிலும் தோற்றுவிப்பதிலும் இவை ஒரு முக்கியமான நடவடிக்கையாக இருந்தன.

''உழைப்பாளர் விடுதலைக்'' குழு சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டது. இரண்டாவது அகிலத்தின் (பாரிஸ் மாநகரில் 1889ல் நடந்த) முதல் காங்கிரசிலிருந்து அதன் எல்லாக் காங்கிரஸ்களிலும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்துக்குப் பிரதிநிதியாக இருந்தது. எனினும் இக்குழு மோசமான தவறுகளும் செய்தது: மிதவாத முதலாளி வர்க்கத்தினரின் பாத்திரத்தை மிகையாக மதிப்பிட்டது, தொழிலாளி வர்க்கப் புரட்சியில் ஒரு துணைச் சக்தியாக உள்ள விவசாயிகளின் புரட்சிகரமான மனோநிலையைக் குறைத்து மதிப்பிட்டது. பிற்காலத்தில் பிளெஹானவும் பிற குழு உறுப்பினர்களும் மென்ஷிவிக் கருத்துக்களைத் தழுவி நின்றதற்கு இந்தத் தவறுகள் கருவாக இருந்தன.—37

41 ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் சங்கத்தின் மூன்றாவது காங்கிரஸ் 1901 செப்டம்பர் பிற்பகுதியில் ஜூரிக் நகரில் நடந்தது. வெளிநாட்டுச் சமூக-ஜனநாயகவாத அமைப்புகளை ஒன்றுபடுத்துவதற்கான நகல் உடன்படிக்கைக்கு இது திருத்தங்களும் கூடுதலான பகுதிகளும் அளித்தது. (இந்த உடன்பாட்டை 1901 ஜூனில் நடந்த ஜினீவா மாநாடு ஏற்றுக்கொண்டிருந்தது). ''ரபோச்சியே தேலோ'' ஆசிரியர் குழுவுக்கு வகுத்தளித்த கட்டளைகளை இது ஏற்றுக் கொண்டதால் திருத்தல்வாதிகள் உற்சாகமடைந்தனர். ''சங்கத்'' தலைவர்களிடையே சந்தர்ப்பவாத மனோநிலைகள் மேலோங்கிவிட்டதையும் அவர்கள் ஜூன் மாநாட்டு முடிவுகளை நிராகரித்ததையும் இந்தக் காங்கிரஸ் முடிவுகள் நிரூபித்தன.—37

42 1875 மே 5 என்று தேதியிட்டு கா. மார்க்ஸ் வி. பிராக்கேவுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.—38

43 கோத்தா வேலைத்திட்டம் — 1875ல் கோத்தா நகரில் நடந்த காங்கிரசில் ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி ஏற்றுக்கொண்ட வேலைத்திட்டம். ஐஸனுக்வாதிகள் என்றும் லஸ்ஸால்வாதிகள் என்றும் முன்பு பிரிந்திருந்த இரண்டு ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சிகளும் இக்காங்கிரஸில் ஒன்றிணைந்தன. சுதம்பவாதத்தால் இந்த வேலைத் திட்டம் பாதிக்கப்பட்டிருந்தது, அது ஒரு சந்தர்ப்பவாத வேலைத்திட்டமுமாகும்; காரணம், முக்கியமான அம்சங்களில் ஐஸனுக்வாதிகள் லஸ்ஸால்வாதிகளுக்கு விட்டுக் கொடுத்து அவர்களின் வரையறுப்புகளை ஏற்றுக்கொண்டனர். மார்க்ஸும் எங்கெல்ஸும் இவ்வேலைத்திட்டத்தைக் கடுமையாக விமர்சித்தனர், 1869ன் ஐஸனுக் வேலைத் திட்டத்துடன் ஒப்புநோக்கும்போது இது ஒரு திட்டவட்டமான பின்னடைவு என்று கருதினர்.—38

44 புருதோன்வாதம் — மார்க்ஸியத்துக்குப் பகையான ஒரு சிறு முதலாளித்துவப் போக்கு; அதன் தத்துவாசிரியரான புருதோன் எனும் பிரெஞ்சு அராஜகவாதியின் பெயர் தாங்கியது. அவர் முதலாளித்துவத்தைக் கடுமையாக விமர்சித்தபோதிலும், தொழிலாளி வர்க்கத்தின் வறுமையையும் சமமின்மையையும் சுரண்டலையும் தவிர்க்கமுடியாதவாறு பெருக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழிப்பதே அவற்றிற்குத் தீர்வு என்று பார்க்கவில்லை. முதலாளித்துவத்தைத் ''திருத்திவிடலாம்,'' சில சீர்திருத்தங்களின் வழியாக அதன் குறைபாடுகளை நீக்கிவிடலாம் என்றுதான் பார்த்தார். சிறு உடைமையாளரின் தனிச் சொத்துடைமையை நீடித்துக்காக்க முடியும் என்று கனவு கண்டார். ''மக்களைச் சார்ந்த'' வங்கிகளை, ''பரிமாற்ற'' வங்கிகளை அமைக்கும் யோசனை வைத்தார்; தொழிலாளிகள் சொந்தத்தில் உற்பத்திச் சாதனங்கள் பெறவும், கைவினைஞர்களாகிவிடவும், தங்கள் உற்பத்திப் பொருளை ''நியாயமான விலைக்கு'' விற்க உத்தரவாதம் செய்யவும் அவை உதவும் என்று கூறினார். அவர் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளவில்லை. வர்க்கப் போராட்டம், தொழிலாளிவர்க்கப் புரட்சி, தொழிலாளிவர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றையெல்லாம் எதிர்த்தார். அராஜகவாத நிலைகளில் நின்றுகொண்டு அரசின் அவசியத்தை மறுத்தார். புருதோன் தமது கருத்துக்களை முதலாவது அகிலத்தின் மீது சுமத்த முயன்றதை எதிர்த்து முரணின்றி மார்க்ஸும் எங்கெல்ஸும் அவர்களின் ஆதரவாளர்களும் போராடினர். இந்தப் போராட்டம் மார்க்ஸியத்தின் வெற்றியிலே போய் முடிந்தது.—42

45 1896ல் செயின்ட் பீடர்ஸ்புர்க் நகரில் நடந்த பஞ்சாலைத் தொழிலாளர் திரளின் வேலைநிறுத்தத்தை இங்கே லெனின் குறிப்பிடுகிறார். ஆலை முதலாளிகள் கூலி முழுவதையும் கொடுக்க மறுத்ததால் வேலைநிறுத்தம் நடந்தது. கலிங்கின் பட்டறையில் மே 23ல் தொடங்கி விரைவிலே நகரின் எல்லா பஞ்சாலைகளுக்கும் பிற நெசவாலைகளுக்கும் பரவியது, பிறகு இயந்திரநிர்மாணத் தொழிற்சாலைகளுக்கும் பிற தொழிற்சாலைகளுக்கும்பரவியது. முதன் முதலாக விரிந்த அளவிலே பீடர்ஸ்புர்க் தொழிலாளி வர்க்கம் சுரண்டுக் வர்க்கத்தினரை எதிர்த்துப் போராடக் கிளம்பியது. முப்பதாயிரத்துக்கும் மேலான தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தனர். செயின்ட் பீடர்ஸ்புர்க் ''பாட்டாளி வர்க்க விடுதலைக்கான போராட்டக் குழு'' இவ்வேலைநிறுத்தத்துக்குத் தலைமை தாங்கியது.

செயின்ட் பீடர்ஸ்புர்க் வேலைநிறுத்தங்கள் மாஸ்கோவிலும் மற்ற ருஷ்ய நகரங்களிலும் தொழிலாளர் இயக்கத்தைத் தீவிரப்படுத்தின, ஜார் அரசாங்கம் தொழிற்சாலைச் சட்டத் திருத்தத்தைத் துரிதப்படுத்தும்படி கட்டாயப்படுத்தின, தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை $11^1/_2$ மணியாகக் குறைத்திடும் 1897 ஜூன் 2 (14) தேதிய சட்டத்தைப் போடும்படியும் கட்டாயப்படுத்தின. —46

46 ''பாட்டாளி வர்க்க விடுதலைக்கான போராட்டக் குழு'' —1895 இலையுதிர்காலத்தில் செயின்ட் பீடர்ஸ்புர்க் நகரத்தில் நிறுவப்பெற்ற ஒரு சட்டவிரோதமான அமைப்பு. வி. இ. லெனின், அ. அ. வானேயிவ், பி. க. ஸபரோஜெட்ஸ், கி. ம. கிரிழிழனேவ்ஸ்கி, ந. க. குருப்ஸ்கயா, யூ. ஓ. மார்த்தவ் முதலியோர் இதை நிறுவினர். ''போராட்டக் குழு'' சுமார் இருபது மார்க்ஸியத் தொழிலாளர் வட்டங்களை இணைத்திருந்தது. அதன் பணிகள் அனைத்தும் மத்தியத்துவம், கண்டிப்பான கட்டுப்பாடு கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு நடந்தன. பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக நடக்கும் தொழிலாளர் போராட்டத்தையும் ஜாராட்சியை எதிர்த்து நடக்கும் அரசியல் போராட்டத்தையும் இணைத்த வகையிலே அது தொழிலாளி வர்க்க இயக்கத்தை வழிநடத்தி வந்தது. லெனின் சொன்னதுபோல, இக்குழு தொழிலாளிவர்க்கத்தின் புரட்சிகரமான கட்சிக்குக் கருவாக இருந்தது.

1895 டிஸம்பரில், லெனினையும் பிற ''போராட்டக் குழுத்'' தலைவர்களையும் ஜார் அரசாங்கம் சிறைப்படுத்தி சைபீரியாவுக்கு நாடுகடத்தியது. ''பொருளாதாரவாதக்'' கருத்துக்களை ஆதரித்துப் பேசிய ''இளைஞர்கள்'' என்று

சொல்லப்பட்டவர்கள் வசம் குழுத்தலைமை சிக்கியது.—49

47 "ருஸ்காயா ஸ்டரினு" (ருஷ்யப் பழங்காலம்) — வரலாற்று விஷயங்களைக் கவனிக்கும் மாதப் பத்திரிகை. 1870 முதல் 1918 வரை செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் வெளியிடப்பட்டது. ருஷ்ய அரசுக்கலை, பண்பாடு ஆகிய துறைகளில் முக்கியமானவர்களின் நினைவுகள், நாட்குறிப்பேடுகள், குறிப்புகள், கடிதங்கள் ஆகியவற்றையும் பல்வேறு வரலாற்று ஆவணங்களையும் பெரிதும் (கவனித்து) அதில் வெளியிடப்பட்டன.—49

48 1895 ஏப்ரல் 27 (மே 9)ல் யாரஸ்லாவல் நகரிலிருந்த ஒரு பெரிய நெசவாலையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் படுகொலை செய்யப்பட்டதை இது குறிப்பிடுகிறது. ஆலை நிர்வாகம் புகுத்திய புதிய கூலி விகிதங்கள் கூலியைக் குறைத்ததால் 4000க்கு மேலான தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தனர். வேலைநிறுத்தம் கொடியமுறையில் நசுக்கப்பட்டது.

இவ்வேலைநிறுத்தத்தைப்பற்றி லெனின் ஒரு கட்டுரை எழுதினர், ஆனால் அது இன்னும் கிடைக்கவில்லை.—50

49 "பீடர்ஸ்புர்க் ரபோச்சி லிஸ்டோக்" (செயின்ட் பீடர்ஸ்புர்க் தொழிலாளர் பத்திரிகை)—"செயின்ட் பீடர்ஸ்புர்க் தொழிலாளிவர்க்க விடுதலைப் போராட்டக் குழுவின்" பத்திரிகை. இரண்டு இதழ்கள் வெளிவந்தன; முதல் இதழ் ருஷ்யாவில் 1897 பிப்ரவரியிலும் (ஜனவரி என்று போடப்பட்டிருந்தது), இரண்டாம் இதழ் ஜினீவாவில் 1897 செப்டம்பரிலும் வெளியிடப்பட்டன.—50

50 முதலாம் ரு. ச. ஜ. தொ. கட்சிக் காங்கிரஸின் ஆணைக்கிணங்கவும் ரு. ச. ஜ. தொ. க. மத்தியக் குழுவின் சார்பாகவும் 1898ல் வெளியிடப்பட்ட "ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத் . தொழிலாளர் கட்சியின் அறிக்கையை" இது குறிக்கிறது. அரசியல் சுதந்தரத்துக்காகவும் யதேச்சாதிகாரமுறையைத் தூக்கியெறிவதற்காகவும் போராடுவதை ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் முதன்மையான பணியாக இவ்வறிக்கை வகுத்துத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பொதுப் பணிகளுடன் அரசியல் போராட்டத்தை இணைத்தது.—50

51 லெனின் குறிப்பிடும் இந்தத் தனிப்பட்ட கூட்டம் செயின்ட்

பீடர்ஸ்புர்க்கில் 1897 பிப்ரவரி 14-17 இடையில் (பிப்ரவரி 26—மார்ச் 1 இடையில்) நடந்தது. இதில் வி. இ. லெனின், அ. அ. வானேயிவ், கி. ம. கிரிழிழனேவ்ஸ்கி, மற்றும் செயின்ட் பீடர்ஸ்புர்க் ''தொழிலாளிவர்க்க விடுதலைக்கான போராட்டக் குழுவின்'' பிற உறுப்பினர்களும் (சைபீரியாவுக்கு நாடுகடத்தப்படுமுன் மூன்று நாட்களுக்குச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்த ''அனுபவஸ்தர்கள்'' இவர்கள்), லெனின் சிறைப்படுத்தப்பட்டபின் ''விடுதலைக்கான போராட்டக் குழுவின்'' தலைமையை எடுத்துக் கொண்டுவிட்ட ''இளந்'' தலைவர்களும் கலந்து கொண்டனர்.—52

52 ''லிஸ்டோக் 'ரபோத்னிகா' '' ('' 'தொழிலாளர்' பத்திரிகை'')—''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'' வெளியிட்டுவந்த மலர். மொத்தம் பத்து மலர்கள் 1896 முதல் 1898 வரை ஜினீவாவிலிருந்து வெளிவந்தன. முதல் எட்டு மலர்களை ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு பதிப்பித்தது. ''இச்சங்கத்தின்'' பெரும்பான்மையினர் ''பொருளாதாரவாதத்தின்'' பக்கம் சரிந்துவிட்டதால் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு மேற்கொண்டு அதன் பிரசுரங்களைப் பதிப்பிக்க மறுத்துவிட்டது. இதன் 9-10 மலர்களை (1898 நவம்பர்) ''பொருளாதாரவாதிகளே'' பதிப்பித்தனர்.—53

53 வி. இ. எழுதிய கட்டுரை — விளாதீமிர் பாவ்லவிச் இவான்ஷின் எனும் ''பொருளாதாரவாதத்'' தலைவர்.—54

54 ஜாராட்சியின் போலீஸ் நீலச் சீருடை அணிந்திருந்தார்கள்.—55

55 வி. வி.—1880, 1890களில் மிதவாத நரோதியத்தின் தத்துவாசிரியர்களில் ஒருவரான வஸீலி பாவ்லவிச் வரன்ட்ஸோவ் என்பவரின் மாறுபெயர். ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் வி. வி.க்கள்'' எனும் லெனின் சொற்கள் ''பொருளாதாரவாதிகளைக்'' குறிப்பவை. ''பொருளாதாரவாதிகள்'' ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் இருந்த சந்தர்ப்பவாதப் போக்குக்குப் பிரதிநிதிகள்.—58

56 "Die Neue Zeit" (''புதிய காலம்'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் தத்துவார்த்தப் பத்திரிகை; 1883-1923 இடையே ஸ்டுட்கார்ட் நகரில் வெளியிடப்

பட்டு வந்தது. மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் பல கட்டுரைகளை இப்பத்திரிகை பிரசுரித்தது. இதன் ஆசிரியர் களுக்கு எங்கெல்ஸ் இடையறாது அறிவுரை வழங்கிவந் தார், அவர்கள் மார்க்ஸியத்தினின்று திரிந்து செல்வதை அடிக்கடி விமர்சித்தார். 1890 மத்தியிலிருந்து இப்பத்தி ரிகை திருத்தல்வாதிகளின் கட்டுரைகளை முறையாகப் பிர சுரித்துவந்தது. அவற்றில் பெர்ன்ஷ்டைன் எழுதிய ''சோஷலிஸத்தின் பிரச்சினைகள்'' என்னும் கட்டுரைத் தொடரும் உண்டு; இக்கட்டுரைத் தொடர் மார்க்ஸிய வாதிகளுக்கு எதிரான திருத்தல்வாதிகளின் தாக்குதலைத் துவக்கி வைத்தது.—59

57 ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் வியென்னு காங் கிரஸ் 1901 நவம்பர் 2-6 இடையே நடந்தது; அது பழைய ஹெய்ன்ஃபெல்ட் வேலைத்திட்டத்துக்குப் (1888) பதிலாக ஒரு புதிய வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. 1899ல் நடந்த பிரியூன் காங்கிரஸின் கட்டளைக்கிணங்க ஒரு சிறப்புக் கமிஷனால் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய வேலைத்திட்டத்தின் நகல் பெர்ன்ஷ்டைன்வாதத்துக்குப் பெரிதும் விட்டுக் கொடுத்திருந்தது.—59

58 ஸுபாத்தவ்வாதத்தை இது குறிக்கிறது. எதேச்சாதிகா ரத்தை எதிர்த்து அரசியல் போராட்டம் நடத்தாதபடி தொழிலாளிகளைத் திசை திருப்பிவிடுவதற்காகப் போலீஸ் கையாட்களின் தலைமையில் ''தொழிலாளர் சொஸைட் டிகளை'' அமைத்திட ஜாராட்சிப் போலீஸ் செய்த முயற் சியே ஸுபாத்தவ்வாதம். போலீஸ் கர்னல் ஸுபாத் தவ் இந்த அமைப்புகளைத் துவக்கி வைத்தார். முதன் முதலான ஸுபாத்தவ் அமைப்பு 1901 மே மாதத்தில் மாஸ்கோவில் ''மெக்கானிகல் தொழிலாளர்களின் பரஸ் பர உதவி சொஸைட்டி'' எனும் பெயரில் நிறுவப்பட் டது. செயின்ப் பீடர்ஸ்புர்க், மின்ஸ்க், கீவ், மற்றும் பிற நகரங்களிலும் ஸுபாத்தவ் அமைப்புகள் நிறுவப்பட்டன.

புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் ஸுபாத்தவ் வாதத்தின் பிற்போக்கான தன்மையை அம்பலப்படுத் தினர், அதே நேரத்தில் ஜாராட்சியை எதிர்க்கும் போ ராட்டத்தில் பரவலான தொழிலாளிவர்க்கப் பகுதிகளை ஈடுபடுத்துவதற்கு அவர்கள் சட்டபூர்வமான தொழிலா ளர் அமைப்புகளைப் பயன்படுத்தினர். புரட்சிகரமான இயக்கத்தின் எழுச்சியின் பலத்தால் 1903ல் ஜார் அரசாங் கம் இந்த அமைப்புகளை மூடவேண்டியதாயிற்று.—63

59 ஹிர்ஷ்-டுங்கர் சங்கங்கள்—1868ல் ஜெர்மனியில் முதலாளித்

துவ முற்போக்குக் கட்சி என்பதின் தீவிரமான ஊழியர்களான ஹிர்ஷ், டுங்கர் என்பவர்கள் அமைத்த சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள் இவை. மூலதனத்தின் நலன்களுக்கும் உழைப்பின் நலன்களுக்கும் இடையே ''இணக்கம்'' உண்டு எனும் கருத்தை ஆதரித்துப் பேசிய இச்சங்கங்களின் அமைப்பாளர்கள் தொழிலாளிகளோடு கூடவே முதலாளிகளையும் இச்சங்கங்களில் சேர்த்துக் கொள்ளமுடியும் என்று கருதினர், வேலைநிறுத்தப் பேராட்டங்களின் அவசியத்தை மறுத்தனர். முதலாளித்துவ அரசின் சட்டங்கள் மூலமாகவும் தொழிற்சங்கங்களின் மூலமாகவும் முதலாளித்துவச் சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்குள் இருந்தபடியே மூலதனத்தின் சுமையைத் தொழிலாளிகள் அகற்றிவிடமுடியும் என்று பேசினர். தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதும் பணம் திரட்டுவதுமே தங்களுடைய முக்கியமான பணி என்று நினைத்தனர். பரஸ்பர நல உதவிச் சங்கங்களிலும் கல்வி நிறுவனங்களிலுமே பெரும்பாலும் பணியாற்றி வந்தனர்.—64

60 **''தொழிலாளர் சுயவிடுதலைக் குழு''** — *1898 இலையுதிர் காலத்தில் செயின்ட் பீடர்ஸ்புர்க் நகரில் ''பொருளாதாரவாதிகளைக்'' கொண்டமைந்த ஒரு சிறு குழு. அது சில மாதங்களே நீடித்தது. அது தன் பணிகளை விவரித்து ஓர் அறிக்கை 1899 மார்ச்சு தேதியிட்டு வெளியிட்டது (''நகனுரனே'' எனும் சஞ்சிகையில் 1899 ஜூலையில் பிரசுரிக்கப்பட்டது). அமைப்பு விதிகளும் தொழிலாளிகளுக்கான பல துண்டுப்பிரசுரங்களுங்கூட வெளியிட்டது.—67*

61 **''நகனுரனே''** — *நரோதியக் கருத்துக்களைப் பரப்பும் ஒரு மாத சஞ்சிகை. ருஷ்ய மொழியில் லண்டன் நகரத்திலிருந்து 1899 ஜனவரி முதல் 1902 பிப்ரவரி வரை மொத்தம் முப்பத்தேழு இதழ்கள் வெளியிடப்பட்டன.—67*

62 **நரோதியம்**—*ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் 1860-70களிடையே தோன்றிய ஒரு சிறுமுதலாளித்துவப் போக்கு. நரோதியவாதிகள் எதேச்சாதிகார முறையை ஒழிக்கவும் நிலப்பிரபுக்களின் நிலத்தை விவசாயிகளுக்கு மாற்றிவிடவும் விரும்பினார்கள். அவர்கள் தங்களைச் சோஷலிஸ்டுகள் என்று கருதிக்கொண்டார்கள். அது ஒரு கற்பனை சோஷலிஸமேயாகும்.*

ருஷ்யாவில் தவிர்க்கமுடியாதவாறு முதலாளித்துவ உறவுகள் வளர்ந்து வருவதை அவர்கள் மறுத்தனர். எனவே, முக்கியமான புரட்சிச் சக்தி தொழிலாளி வர்க்கமல்ல விவசாயி மக்களே என்று கருதினர். சோஷலிஸத்தின் கரு கிராமக் கம்யூனில் (கூட்டுச் சமூகத்தில்) இருக்கிறதாக நினைத்தார்கள். வரலாற்றில் மக்கள்திரள் வகிக்கும் பாத்திரத்தை அவர்கள் மறுத்தார்கள், மாமனிதர்களே வரலாற்றைப் படைக்கிறதாகச் சொன்னார்கள். செயலற்றதாகத் தாங்கள் கருதும் மக்கள் அல்ல, ''வீரர்களே'' வரலாற்றைப் படைக்கிறதாகச் சொன்னார்கள். ஜாராட்சியை எதிர்த்துப் போராடும்படி விவசாயிகளைத் தட்டியெழுப்புவதற்காக அவர்கள் ''மக்களிடம்'' (மக்கள் என்பதற்கு ருஷ்ய மொழியில் நரோத் என்பார்கள்; எனவே தான் நரோதியவாதிகள் என்று பெயர் பெற்றனர்) சென்றார்கள். ஆனால் அவர்களிடம் ஆதரவு கிடைக்கவில்லை.

நரோதியம் பல கட்டங்களைக் கடந்து புரட்சிகரமான ஜனநாயகவாதத்திலிருந்து மிதவாதமாகப் பரிணமித்தது. 1880 களிலும் 1890களிலும் நரோதியவாதிகள் ஜாராட்சியுடன் சமரசம் செய்து கொள்ளும் பாதையில் இறங்கினர், பணக்கார விவசாயிகளின் (குலாக்குகள்) நலன்களை வெளியிட்டனர், மார்க்ஸியத்தை எதிர்த்துப் போராடினர். —74

63 இது Der Sozialdemokrat (''சமூக-ஜனநாயகவாதி'') எனும் பத்திரிகையைக் குறிக்கிறது. இது ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் மையப் பத்திரிகையாக, அவசரகால சோஷலிஸ-எதிர்ப்புச் சட்டம் செயல்பட்டுவந்த காலத்தில், இருந்தது. 1879 செப்டம்பர் 28 முதல் 1888 செப்டம்பர் 22 வரை ஜூரிக் நகரிலும் 1888 அக்டோபர் 1 முதல் 1890 செப்டம்பர் வரை லண்டன் நகரிலும் வெளியிடப்பட்டது.—75

64 நி. பேல்டொவ் எனும் புனைபெயரில் கியோர்கி வலென்தீனவிச் பிளெஹானவ் ''வரலாறு பற்றிய ஒருமைவாதப் பார்வையின் வளர்ச்சி'' எனும் தமது புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். இது செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் 1895ல் சட்டபூர்வமாக வெளியிடப்பட்டது.—78

65 இது ''மிக நவீன ருஷ்ய சோஷலிஸ்டின் பாடல்'' எனும் ஓர் அங்கதக் கவிதையைக் குறிப்பிடுகிறது. நார்ட்ஸீஸ் துபொரீலொவ் எனும் பெயரின் கீழ் ''ஸார்யா'' இதழ் 1ல் (1901 ஏப்ரல்) வெளிவந்தது. தன்னியல்பான இயக்கத்

துக்கு இசைவாகத் தங்களைச் சரிப்படுத்துக் கொள்கிற ''பொருளாதாரவாதிகளை'' இது கேலி செய்தது. இதை எழுதியவர் யூ. ஓ. மார்த்தவ்.—79

66 இது ''வெளிநாட்டு ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகள் சங்கத்தைக்'' குறிப்பிடுகிறது. குறிப்பு 16 பார்க்க.—89

67 விவசாயிகள் மீது நிலப்பிரபுக்களுக்கு மேலும் அதிகமான அதிகாரம் கொடுப்பதற்காக 1889ல் ஜார் அரசாங்கம் கிராம சூபரின்டென்டென்ட் (மேலாணையாளர்) பதவியை ஏற்படுத்தியது. உள்ளூர் நிலப்பிரபுக்களிடையேயிருந்து பொறுக்கி நியமிக்கப்பட்ட இவர்கள் விரிவான நிர்வாக உரிமைகள் மட்டுமின்றி நீதி மன்றத்தீர்ப்பு வழங்கும் உரிமைகளும் அனுபவித்துவந்தனர்; விவசாயிகளைக் கைது செய்து சித்திரவதைத் தண்டனை அளிக்கவுங்கூட முடிந்தது.—90

68 **புந்த்**—''லிதுவேனியா, போலந்து, ருஷ்யா பகுதிகளைச் சேர்ந்த அனைத்து யூத தொழிலாளர் லீக்'';1897ல் வில்னோ நகரில் நடந்த யூதச் சமூக-ஜனநாயகவாதக் குழுக்களின் துவக்கக் காங்கிரஸில் நிறுவப்பட்டது. ருஷ்யாவின் மேற்கத்திய பகுதிகளில் வாழ்ந்த யூதக் கைவினைஞர்களிடையே இருந்த அரைகுறையான தொழிலாளர்களையே இது பெரும்பாலும் இணைத்து ஒன்றுபடுத்தியிருந்தது.

ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தேசியவாதத்துக்கும் பிரிவுவாதத்துக்கும் பெட்டகமாகப் புந்த் இருந்தது. சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் முக்கியமான அம்சங்களில் சந்தர்ப்பவாத நிலை வகித்து வந்தது. —91

69 **மீட்புக் கட்டணங்கள்** — ருஷ்யாவில் பண்ணையடிமை முறையை ஒழிப்பதற்காக 1861 பிப்ரவரி 19ம் தேதி நிறைவேற்றப்பட்ட சட்டப்படி விவசாயிகள் பெற்ற நிலத்துக்கு நிலப்பிரபுக்களுக்குச் செலுத்தவேண்டியிருந்த கட்டணங்கள் இவை. விவசாயிகளுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் அசல் விலையை விட இக்கட்டணச் செலுத்தல் தொகைகள் பல மடங்கு அதிகமாக இருந்தன. வெகு நாளாக விவசாயிகள் பயன்படுத்திவந்த நிலங்களுக்கு மட்டுமின்றித் தங்கள் சொந்த விடுதலைக்காகவும் நிலப்பிரபுக்களுக்குப் பணம் செலுத்தினர். இந்த மீட்புக் கட்டணங்களை விவசாயிகளால் தாங்கமுடியவில்லை, அவற்றைச் செலுத்தியதிலே வறியவர்களாயினர்.

முதல் ருஷ்யப் புரட்சி நடந்த (1905-1907) காலத்தில் விவசாயி இயக்கத்தின் நிர்ப்பந்தத்தால் ஜார் அரசாங்கம் இக்கட்டணச் செலுத்தல்களை 1907 ஜனவரியில் ரத்து செய்யவேண்டியதாயிற்று.—97

70 1891-1892ல் ஏற்பட்ட பஞ்சத்திற்குப் பின் ருஷ்யாவில் பஞ்சங்கள் ஏற்படுவது சகஜமாகிவிட்டது. பஞ்சத்தில் அடிபட்ட மக்களுக்கு ஜார் அரசாங்கம் உதவியளிக்கவில்லை. அதற்கு மாருக, பணமும் உணவும் சேகரித்தும் உணவுச் சாலைகள் மருத்துவ உதவி மையங்கள் முதலியவற்றை ஏற்படுத்தியும் பட்டினிக்கிரையான மக்களுக்கு உதவி புரிந்த பொது நிறுவனங்களையும் ஸேம்ஸ்த்வோக்களையும் (ருஷ்யாவில் 1864-1917 இடையேயிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட கவுன்ஸில்கள் இவை) மருத்துவர்களையும் தனிப்பட்ட நபர்களையும் எதிர்த்துப் போராடுவதிலேதான் முக்கியமாக ஈடுபட்டிருந்தது. 1901ல் மீண்டும் பஞ்சம் பல குபெர்னியாக்களில் ஏற்பட்டபோது ஜார் அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சர் ஸிப்யாகின் குபெர்னியாத் தலைமையதிகாரிகளுக்கு ஒரு ஆணை போட்டார். பட்டினியால் அவதியுறும் மக்களுக்கு உதவி புரியும் பொது நிறுவனங்களையும் தனிப்பட்ட நபர்களையும் அது கண்டித்தது. இந்த நிறுவனங்களையும் நபர்களையும் கண்காணித்து அவற்றின் நடவடிக்கைகளைத் தடுக்கும்படி அது கவர்னர்களைப் பணித்தது. ''முழுவதாகத் தேவைகள் பூர்த்தி செய்யப் படாமற்போனுல் தவிர்க்க முடியாதபடி ஏற்படும் நோய் நொடிகளும் பொருளாதாரக் கஷ்டங்களும் அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சி எழுவதற்குச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கும்'' என்று காரணம் சொல்லியது. பஞ்சத்தால் அடிபட்ட பல குபெர்னியாக்களில் உணவுச்சாலைகள் ஏற்படுத்ாதபடியும் பட்டினி கிடக்கும் மக்களுக்குப் பிற உதவிகள் செய்யாதபடியும் கவர்னர்கள் தனிப்பட்ட நபர்களையும் நிறுவனங்களையும் தடை செய்தனர். —98

71 1901 செப்டம்பர் 15ல் ஜார் அரசாங்கம் பிறப்பித்த ''தற்காலிக விதிகளை'' இது குறிப்பிடுகிறது. பஞ்சம் நிலவும் குபெர்னியாக்களைச் சேர்ந்த விவசாயிகளை ரயில் பாதை நிர்மாண வேலைக்கும் பிற வேலைகளுக்கும் அனுப்பும்படி இவை ஸேம்ஸ்த்வோ தலைவர்களைப் பணித்தன. விவசாயிகளின் அற்பசொற்பமான உரிமைகளையுங்கூட இவை குறைத்துவிட்டன. கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் போல் தனி அதிகாரிகளின் மேற்

பார்வையின்கீழ் தொழிலாளிகள் வேலையிடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.—98

72 1901 பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் செயின்ட் பீட்டர்ஸ்புர்க், மாஸ்கோ, கீவ், கார்கவ், காஸான், தோம்ஸ்க், மற்றும் பிற பல ருஷ்ய நகரங்களில் நடந்த தொழிலாளர் மாணவர் திரளின் புரட்சி நடவடிக்கையை இது குறிக்கிறது. அரசியல் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

கல்விச்சாலைகளினுள் சுதந்தரம் வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில் 1900-1901 காலத்தில் தோன்றிய மாணவர் இயக்கம் ஜார் அரசாங்கத்தின் பிற்போக்கான கொள்கையை எதிர்க்கும் புரட்சிகரமான அரசியல் நடவடிக்கைகளின் தன்மை பெற்றது. முன்னணியிலுள்ள ருஷ்யத் தொழிலாளிகளின் ஆதரவு அதற்குக் கிடைத்தது, ருஷ்யச் சமுதாயத்தின் அனைத்துப் பகுதிகளின் ஆதரவும் கிடைக்கச் செய்தது. ஒரு மாணவர் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்காக கீவ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 183 மாணவர்கள் வலுக்கட்டாயமாக இராணுவச் சேவையில் சேர்க்கப்பட்டதே 1901 பிப்ரவரி-மார்ச்சு மாத ஆர்ப்பாட்டங்களுக்கும் வேலைநிறுத்தங்களுக்கும் நேரடிக் காரணமாகும்.

புரட்சி இயக்கத்தில் கலந்துகொண்டவர்கள் மீது அரசாங்கம் அடக்குமுறையைச் செலுத்தியது. போலீஸும் கோஸாக்குப் படையும் ஆர்ப்பாட்டங்களைக் கலைத்து ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்களை அடித்து நொறுக்கின, நூற்றுக்கணக்கான மாணவர்கள் கைது செய்யப்பட்டு உயர்நிலைக் கல்வி நிறுவனங்களினின்று வெளியேற்றப்பட்டனர். செயின்ட் பீட்டர்ஸ்புர்க் காஸான் மாதாகோவில் முன் 1901 மார்ச்சு 4 (17)ல் நடந்த ஆர்ப்பாட்டம் தனி மிருகத்தனத்துடன் நசுக்கப்பட்டது.—110

73 ''ஸ்வபோதா'' (''சுதந்தரம்'')—1901-1902ல் ''ஸ்வபோதா'' குழு ஸ்விட்ஸர்லாந்தில் வெளியிட்டுவந்த ஒரு சஞ்சிகை. இக்குழு 1901 மே மாதத்தில் நிறுவப்பட்டது; ''புரட்சிகரமான சோஷலிஸ்டுக்'' குழு என்று தன்னை அழைத்துக் கொண்டது. இச்சஞ்சிகையின் இரண்டு இதழ்கள் 1901ல் ஒன்றும் 1902ல் மற்றொன்றுமாக வெளிவந்தன. ''ஸ்வபோதா'' குழுவின் பிரசுரங்கள் ''பொருளாதாரவாதத்தையும்'' பயங்கரவாதத்தையும் பிரச்சாரம் செய்தன, ருஷ்யாவில் ''இஸ்க்ராவுக்கு'' எதிரான குழுக்களை ஆதரித்தன. இக்குழு 1903ல் மறைந்துபோயிற்று.—114

74 பார்க்க: கார்ல் மார்க்ஸ், ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய ''கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை''. இரு தொகுதி களைக் கொண்ட நூல்திரட்டு, முதல் தொகுதி, 1955, பக்கம் 39.—127

75 **ஸேம்ஸ்த்வோக்கள்**—ஜாராண்ட ருஷ்யாவின் மத்திய குபெர் னியாக்களில் 1864ல் பிரபுவம்சத்தினரின் தலைமையில் இருந்த சுய ஊராட்சி நிர்வாக அமைப்புகள் எனப்பட்டவை இவை. மருத்துவமனைகள் கட்டுதல், சாலை போடுதல், புள்ளிவிபரக் கணக்கெடுத்தல், காப்பீடு முதலிய முற்றி லும் உள்ளூர் வகைப்பட்ட பொருளாதாரப் பிரச்சினை களை மட்டுமே கவனித்துக் கொள்ளும் தகுதி பெற்றிருந் தவை. இவற்றின் நடவடிக்கையைக் கவர்னர்களும் உள் நாட்டு அமைச்சகமும் கண்காணித்துவந்தன, அரசாங்கத் துக்குப் பிடிக்காத ஊராட்சி முடிவுகளை ரத்து செய்யும் அதிகாரம் அவற்றிற்கு இருந்தது.

ஸேம்ஸ்த்வோக்களில் பணியாற்றியவர்களில் பெரும் பான்மையினர் மருத்துவர்களும் வேளாண்மையியலாளர் களும் பள்ளியாசிரியர்களும் போன்ற மிதவாதப் போக் கான அறிவுஜீவிகளேயாவர். 19ம் நூற்றுண்டு முடிந்து 20ம் நூற்றுண்டு துவங்கிய காலத்தில் இந்த மிதவாதப் போக்கான ஸேம்ஸ்த்வோ பணியாளர்களின் எதிர்ப்பு இயக்கம் பலப்பட்டது. ஸேம்ஸ்த்வோ கூட்டங்கள் தம் உரிமைகளை விரிவாக்கும் திட்டங்களை முன்வைக்கலாயின, சீர்திருத்தங்கள் முதலியவற்றைக் கோரி ஜாரிடம் மனுக் களைக் கொடுத்தன. ஜார் அரசாங்கம் அடக்குமுறை கொண்டு ஸேம்ஸ்த்வோ இயக்கத்தை நசுக்கமுயன்றது. —140

76 ருஷ்யாவில் பண்ணையடிமை முறையை ஒழிப்பதற்காக இரண்டாம் அலெக்சாண்டர் எனும் ஜார் மன்னர் 1861 பிப்ரவரி 19ல் அறிக்கை ஒன்று பிறப்பித்தார். இந்நிகழ்ச்சி யின் 40ம் ஆண்டு விழாவை யொட்டி ''இஸ்க்ராவின்'' 3ம் இதழ் லெனின் எழுதிய ''தொழிலாளர் கட்சியும் விவசாயிகளும்'' எனும் கட்டுரையை வெளியிட்டது.—143

77 ஜார் மன்னரிடம் நிதி அமைச்சர் செ. யூ. வீட்டே வைத்த இரகசியக் ''குறிப்பை'' இது குறிப்பிடுகிறது; ர. என். எஸ். (பி. ப. ஸ்துருவேயின் புனைபெயர் இது) எழுதிய முன்னுரையுடன்கூடிய இதை ''எதேச்சாதிகார ஆட்சி யும் ஸேம்ஸ்த்வோவும்'' எனும் தலைப்பில் ''ஸார்யா'' பத்திரிகை 1901ல் ஸ்டுட்கார்ட் நகரில் வெளியிட்டது.

வீட்டே ''குறிப்பு'' ஸேம்ஸ்த்வோக்களைக் கடுமையாக எதிர்ப்பதாயிருந்தது. ஸேம்ஸ்த்வோ இருப்பது எதேச் சாதிகாரத்துக்கு முரணானது என்று நிருபிக்க முயன்றது. ஸேம்ஸ்த்வோ புகுத்தப்பட்ட காலத்திலிருந்து அதன் உரிமைகளை ஜார் அரசாங்கம் கட்டுப்படுத்திக் குறைத்து விடும்படியான கொள்கையை முரணின்றிப் பின்பற்றி வந்துள்ளதை பலமான விஷயாதாரச் சான்றுடன் காட்டியது. ஸ்துருவேயின் முன்னுரை முதலாளித்துவப் போக்கான மிதவாத நிலைகளிலிருந்து ''குறிப்பை'' விமர்சித்தது. வீட்டேயின் ''குறிப்பையும்'' ஸ்துருவேயின் முன்னுரையையும் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ''ஸேம்ஸ்த்வோவை விரட்டுகிறவர்களும் மிதவாத ஹானிபால்களும்'' எனும் வி. இ. லெனின் கட்டுரையைப் பார்க்க.—143

78 1901, ஜூன் 8ல் ஜார் அரசாங்கம் போட்ட சட்டத்தை இது குறிப்பிடுகிறது. இது சைபீரியாவிலுள்ள அரசாங்க நிலங்களைத் தனிநபர்களுக்கு ஒதுக்கீடு செய்வதைப் பற்றியது. சைபீரியாவில் நிலங்களை வாங்கிக் குத்தகைக்கு விடும் பிரபுவம்சத்தினருக்கு இச்சட்டம் பெரும் சலுகைகள் அளித்தது. இச்சட்டத்தைப்பற்றி ''பண்ணையடிமைச் சொந்தக்காரர்கள் செய்யும் வேலை'' எனும் தலைப்பில் வி. இ. லெனின் எழுதிய கட்டுரையை இஸ்க்ரா 8ம் இதழ் வெளியிட்டது.—143

79 ரொஸீயா (''ருஷ்யா'') — 1899-1902 இடையே செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் வெளியிடப்பட்ட ஒரு மிதவாதப் பத்திரிகை.—144

80 கோட்பாடு இல்லாமையையும் அடிமைப்புத்தியையும் மேலதிகாரிகளுக்குத் தொண்டு புரியத் தயாராயிருக்கும் புத்தியையும் குறிக்கும் வகையில் ருஷ்ய இலக்கியத்தில் ''அடியேன் தாசன்!'' எனும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.—146

81 வர்க்கப் போராட்டத்தைப் பற்றி பிரென்டானோ புரிந்து கொண்டிருப்பது, ''பிரென்டானோவாதம்'' — தொழிற்சாலைச் சட்டங்கள், தொழிற்சங்கங்களிலே தொழிலாளிகளை ஒழுங்கமைத்தல் மூலமாக முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்புக்குள் இருந்தபடியே உழைப்புப் பிரச்சினையைத் தீர்க்கச் சாத்தியப்பாடு உண்டு என்று பேசும் மிதவாத-முதலாளித்துவப் போக்கான போதனை. மூனிக் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரத் துறைப்

பேராசிரியர் லு. பிரென்டானோ பெயர் தாங்கியது. அவர் கதீடர்-சோஷலிஸத்தின் முக்கியமான பிரதிநிதிகளில் ஒரு வர்.—147

82 ''மூலதனத்தை எதிர்த்துப் போராடுவதற்கான தொழிலாளர் குழு'' செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் 1899ல் வசந்த காலத்தில் வி. அ. குத்தோவ்ஸ்கி என்பவரால் நிறுவப்பட்டது. இதில் சில தொழிலாளிகளும் அறிவுஜீவிகளும் இருந்தனர். செயின்ட் பீடர்ஸ்புர்க் தொழிலாளர் இயக்கத்துடன் இதற்குப் பலமான தொடர்பு எதுவும் இருக்கவில்லை. 1899 கோடைக்காலத்தில் இதன் உறுப்பினர்கள் அநேகமாக எல்லோரும் கைது செய்யப்பட்டுவிட்டபின் இது மறைந்துவிட்டது. இக்குழுவின் கருத்துக்கள் ''பொருளாதாரவாதத்தை'' நெருங்கி இருந்தன.—157

83 நார்ட்ஸீஸ் — கிரேக்க புராணத்தில் வரும் ஓர் ஆணழகன்; நீரில் தன் நிழலைப் பார்த்துத் தன் மீதே மையல் கொண்டவன்.—161

84 ''இன்றையப் பணிகள் பற்றிய பிரச்சினை, ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகளின் போர்த்தந்திரம் பற்றியது'' எனும் அக்செல்ரோட் எழுதிய குறுநூலுக்கு என். என். (செ. நி. புரொகபோவிச் என்பவரின் புனைபெயர் இது) எழுதிய பதில் இது; ''பொருளாதாரவாத'' நிலைகளிலிருந்து அவர் அக்செல்ரோடை விமர்சித்தார்; கி. வ. பிளெஹானவ் இதை 1900ல் ''ரபோச்சியே தேலோவுக்காக'' Vademecum என்பதில் பிரசுரித்தார்.—167

85 1901ல் முதன்முறையாக அ.ஸ. மார்தீனவை வி.இ. லெனின் சந்தித்த கூட்டத்தை இது குறிப்பிடுகிறது என்று தெரிகிறது.—169

86 ஸுபாத்தவ்வாதத்தைப் பற்றி குறிப்பு 58 பார்க்க.—173

87 ஸ்துருவேவாதம் — ''சட்டபூர்வமான மார்க்ஸியம்'', முதலாளித்துவப் போக்கான மிதவாதம். இதன் பிரதிநிதி பி. ப. ஸ்துருவே.—175

88 அஃபஞஸி இவானவிச், புல்கேரியா இவானவ்ஞ—''பழங்கால நிலப்பிரபுக்கள்'' எனும் சிறுகதையில் நி. வ. கோகல்

எனும் எழுத்தாளர் சித்திரித்த கதாபாத்திரங்கள், மிகவும் குறுகிய பார்வையுடைய நிலப்பிரபுத்துவத் தம்பதிகள். —175

89 வி. இ. லெனின் தம் தலைமையில் இயங்கிவந்த செயின்ட் பீடர்ஸ்புர்க் சமூக-ஜனநாயகவாதிகளின் குழுவை (''மூத னுபவமுள்ளவர்கள்'') இங்கே குறிப்பிடுகிறார்; இதன் அடிப்படையில் 1895ல் ''பாட்டாளி வர்க்க விடுதலைக் கான போராட்டக் குழு'' அமைக்கப்பெற்றது.—192

90 ஸெம்லிவோல்ட்ஸி — ''ஸெம்லியா-இ-வோல்யா'' (''நில மும் சுதந்தரமும்'') எனும் அமைப்பின் உறுப்பினர்கள். 1876 இலையுதிர்காலத்தில் செயின்ட் பீடர்ஸ்புர்க்கில் புரட்சிகரமான நரோதியவாதிகள் நிறுவிய இரகசிய அமைப்பு.

இது கண்டிப்புள்ள மத்தியத்துவத்தையும் கட்டுப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது. சோஷலிஸத்தை இறுதி இலட்சியமாக அங்கீகரித்த இந்த அமைப்பு ''அந்தந்த நேரத்தில் நிலவும் மக்களின் கோரிக்கைகளை''— அதாவது, ''நிலமும் சுதந்தரமும்'' பற்றிய கோரிக்கைகளை—நிறைவேற்றுவது உடனடிப் பணி என்று கருதியது.

ருஷ்யாவில் விவசாயிகளே முக்கியமான புரட்சிச் சக்தி என்று கருதிய ஸெம்லிவோல்ட்ஸி ஜாராட்சியை எதிர்த்துக் கலகம் செய்யுமாறு விவசாயிகளை தூண்டியெழுப்ப முயன்றனர். பல ருஷ்ய குபெர்னியாக்களில் கிளர்ச்சிப் பணி புரிந்துவந்தனர்.

விவசாயிகளிடையே சோஷலிஸ்டுக் கிளர்ச்சி தோல்வியுற்றதினாலும் அரசாங்கத்தின் அடக்குமுறை தீவிரப்பட்டதினாலும் இந்த அமைப்புக்குள்ளே ஒரு பயங்கரவாதக் குழு 1879ல் ஏற்படுத்தப்பட்டது; இது விவசாயிகளிடையே புரட்சிகரமான கிளர்ச்சி நடத்துவதை மறுத்தது, ஜாராட்சியை எதிர்க்கும் புரட்சிப் போராட்டத்தின் முக்கியமான சாதனம் ஜாராட்சி அதிகாரிகளைத் தாக்கும் பயங்கரவாதந்தான் என்று கருதியது. அதே ஆண்டில் வரோனிஷ் நகரில் நடந்த காங்கிரஸில் இந்த அமைப்பு இரண்டு அமைப்புகளாக—பயங்கரவாதப் பாதையில் சென்ற ''நரோத்னயா வோல்யா'' (''மக்கள் சித்தம்'') என்றும், ''ஸெம்லியா-இ-வோல்யா'' நிலைகளின்மீது நிலைத்துநின்ற ''சோர்னிய் பெரிடெல்'' (''பொது மறுப் பங்கீடு'') என்றும்—பிளவுண்டது. பிற்காலத்தில் ''சோர்னிய் பெரிடெலின்'' பல உறுப்பினர்கள் (பிளெஹானவ், அக்செல்ரோட், ஸஸூலிச், டாய்ட்ஷ், இக்னடவ்) மார்க்

*ஸியத்தின் பக்கம் வந்துவிட்டனர். 1883ல் இவர்கள் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு எனும் முதன்முதலான ருஷ்ய மார்க்ஸிய அமைப்பை வெளிநாட்டில் நிறுவினர்.—204*

91 **1900ல் பாரிஸில் நடந்த சர்வதேச சோஷலிஸ்டு காங்கிரஸுக்கு ருஷ்ய சமூக-ஜனநாயகவாத இயக்கத்தைப்பற்றி அளிக்கும் ரிப்போர்டு** *எனும் குறுநூல் இங்கே குறிப்பிடப்படுகிறது. இதை வெளிநாட்டு ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம் 1901ல் ஜினீவாவில் வெளியிட்டது. இச்சங்கத்தின் கட்டளைக்கிணங்க ''ரபோச்சியே தேலோவின்'' ஆசிரியர் குழு இந்த ரிப்போர்டை எழுதியது.—218*

92 *''நம் எதார்த்த நிலை'' எனும்* R.M. *எழுதிய கட்டுரையில் உள்ள வாதப்போர் வகைப்பட்ட குறிப்பை வி. இ. லெனின் குறிப்பிடுகிறார், இக்கட்டுரை* **ரபோச்சயா மிஸ்லின்** *(1899 செப்டம்பர்) ஒரு தனி இணைமலரில் பிரசுரிக்கப்பட்டது. இதை மூன்றும் அத்தியாயத்தில் ''ஆ'' பாராவில் (இந்தப் பதிப்பில் பக்கம் 105 பார்க்க) லெனின் மேற்கோள் காட்டுகிறார்.—226*

93 **''யூழ்னிய் ரபோச்சிய்''** *(''தெற்கத்திய தொழிலாளி'') — 1900 ஜனவரி முதல் 1903 ஏப்ரல் வரை அதே பெயர் கொண்ட குழுவால் சட்டவிரோதமாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த சமூக-ஜனநாயகவாதப் பத்திரிகை. பனிரண்டு இதழ்கள் வெளிவந்தன. தெற்கு ருஷ்யாவில் உள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்புகளிடையேதான் பெரும்பாலும் வினியோகமாகிவந்தது.—228*

94 *''ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் நிலை பற்றியப் பிரச்சினைகள்'' (1898) எனும் துண்டுப்பிரசுரத்தையும் ''ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை பற்றித் தகவல் சேகரிப்பதற்குரிய கேள்விகள்'' (1899) எனும் குறுநூலையும் லெனின் குறிப்பிடுகிறார். இரண்டையும் ''ரபோச்சயா மிஸ்ல்'' ஆசிரியர்கள் வெளியிட்டனர். தொழிலாளர்களின் வேலை நிலைமைகள் வாழ்க்கை நிலைமைகள் பற்றி முறையே 17 கேள்விகளும் 158 கேள்விகளுமாக அவற்றில் இருந்தன.—231*

95 *1885ன் வேலைநிறுத்த இயக்கம் தொழில்வளர்ச்சி மையத்தைச் சேர்ந்த விளாதீமிர், மாஸ்கோ, ட்வெர், மற்றும் பிற மாநிலங்களில் உள்ள பல ஜவுளியாலைகளுக்குப் பரவி*

யது. அவற்றில் முக்கியமானது ஸாவ்வா மரோஸொவுக்குச் சொந்தமான நிகோல்ஸ்கயா ஜவுளியாலேயில் நடந்த வேலைநிறுத்தம் (மரோஸொவ் வேலைநிறுத்தம்). இது 1885 ஜனவரியில் நடந்தது. தண்டப் பணத்தைக் குறைத்தல், வேலையில் சேர்த்துக் கொள்ளுதலின் நிபந்தனைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தல் முதலியவை தொழிலாளிகளின் முக்கியக் கோரிக்கைகள். மிக முற்போக்கான தொழிலாளிகள் வேலைநிறுத்தத்துக்குத் தலைமை வகித்தனர். 8000 தொழிலாளிகள் கலந்துகொண்ட இந்த வேலைநிறுத்தம் துருப்புகளின் உதவி கொண்டு நசுக்கப்பட்டது. 33 வேலைநிறுத்தக்காரர்கள் மீது வழக்கு போடப்பட்டது, 600க்கு மேலான தொழிலாளிகள் நாடு கடத்தப்பட்டனர். 1885-1886ன் வேலைநிறுத்த இயக்கத்தின் விளைவாக ஜார் அரசாங்கம் 1886 ஜூன் 3 (15)ல் ஒரு சட்டம் (''தண்டப்பணம் பற்றிய சட்டம்'') போடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.—232

96 **அவுகியஸ் இலாயங்கள்** — கிரேக்க புராணத்தில் வரும் அவுகியஸ் எனும் மன்னரின் அழுக்கு மண்டிக்கிடந்த இலாயங்கள். ஹெர்குலீஸ் எனும் இதிகாச வீரன் இவற்றை ஒரே நாளில் துப்புரவாக்கினான்.—234

97 இரகசியத்தை உத்தேசித்து லெனின் இந்த அடிக்குறிப்பைக் கூடுதலாக எழுதினார். அசலில் நடந்த கால ஒழுங்குப்படியேதான் லெனின் இந்த உண்மைகளை விவரிக்கிறார். —239

98 **''வெளிநாட்டு ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தின் லீக்''** —1901 அக்டோபரில் லெனின் முன்முயற்சியால் அமைக்கப்பட்டது. இதில் வெளிநாட்டிலிருக்கும்' ''இஸ்க்ரா'' அமைப்பும், புரட்சிகரமான ''சோசியல்-டெமாக்ரட்'' அமைப்பும் (இதில் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு இருந்தது) இருந்தன. புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதத்தின் கருத்துக்களைப் பரப்புவதும் செயல்துடிப்புள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்பைத் தோற்றுவிப்பதை ஊக்கிவிட்டதும் இந்த லீக்கின் பணியாகும். இது வெளிநாட்டில் ''இஸ்க்ராவின்'' பிரதிநிதியாயிருந்தது. வெளிநாட்டிலிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே இருந்த ''இஸ்க்ரா'' ஆதரவாளர்களை ஒன்றுபடுத்தியது, ''இஸ்க்ராவுக்கு'' பண உதவி அளித்தது, ''இஸ்க்ரா'' பத்திரிகையை ருஷ்யாவுக்குக் கொண்டுசென்று

கொடுக்கும் பணியைச் செய்தது, எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய மார்க்ஸிய இலக்கியத்தைப் பிரசுரித்தது. பல ''புல்லெடின்களையும்'' குறுநூல்களையும் இந்த லீக் வெளியிட்டது. இரண்டாவது ரு. ச. ஜ. தொ. கட்சி காங்கிரஸ் இந்த லீக்கை வெளிநாட்டிலுள்ள ஒரேயொரு கட்சி அமைப்பாக ஒப்புதல் அளித்து ரு. ச. ஜ. தொ. க. வின் மத்தியக் குழுவின் தலைமையின் கண்காணிப்பின் கீழ் வேலை செய்யுமாறு பணித்தது.

இரண்டாம் ரு. ச. ஜ. தொ. கட்சி காங்கிரஸுக்குப் பின் லீக்கில் மென்ஷிவிக்குகள் ஆதிக்கம் பெற்று லெனினையும் போல்ஷிவிக்குகளையும் எதிர்த்துப் போராட்டம் துவக்கினர். 1903 அக்டோபரில் நடந்த லீக்கின் இரண்டாம் காங்கிரஸில் அவர்கள் போல்ஷிவிக்குகளை அவதூறு செய்யவே லெனினும் அவரது ஆதரவாளர்களும் வெளியேறிவிட்டனர். இரண்டாம் ரு. ச. ஜ. தொ. கட்சி காங்கிரஸில் ஏற்கப்பட்ட கட்சி விதிகளுக்கு முரணாக இருக்கும் லீக்கின் புது விதிகளை மென்ஷிவிக்குகள் ஆதரித்து ஏற்றுக் கொண்டனர். அதன்பிறகு லீக் மென்ஷிவிக்குகளின் கொத்தளமாக ஆகிவிட்டது. அது 1905 வரை இருந்தது. —240

99 ''லிஸ்டோக் 'ரபோச்சிவோ தேலா' '' ('' 'தொழிலாளர் இலட்சியத்தின்' துண்டுப்பிரசுரம்'') — ''ரபோச்சியே தேலோ'' சஞ்சிகையின் இணைமலர் இது. 1900 ஜூன் முதல் 1901 ஜூலை வரை ஜினீவாவில் பிரசுரிக்கப்பட்டது. மொத்தம் எட்டு இதழ்கள் வெளிவந்தன.—262

100 மார்க்ஸ் எழுதிய ''லுயீ போனபார்த்தின் பதினெட்டாம் புரூமெர்'' எனும் நூலில் வரும் பகுதியை லெனின் குறிப்பிடுகிறார். அது பின்வருமாறு: ''உலக வரலாற்றில் மிகவும் முக்கியமான விஷயங்களும் நபர்களும் இரு தடவை தோன்றுகின்றன என்று ஹெகல் எங்கோ குறிப்பிடுகிறார். முதல் தடவையில் துன்பியலாகவும் இரண்டாம் தடவையில் கேலிக்கூத்தாகவும் நிகழ்கின்றன என்று கூட்டிச் சொல்ல அவர் மறந்து விட்டார்''. (பார்க்க: மார்க்ஸ் எங்கெல்ஸ், இரண்டு தொகுப்புகளான நூல்திரட்டு, முதல் தொகுப்பு, 1955, பக்கம் 212).—263

101 *1901 நவம்பர்-டிஸம்பர் மாதங்களில் ருஷ்யாவில் தொழிலாளர் ஆதரவுடன் மாணவர் ஆர்ப்பாட்டங்களின் அலை வீசியெழுந்தது.—267*

102 யானிச்சாரிகள் — *14ம் நூற்றுண்டில் அட்டோமான் துருக்கியில் ஏற்படுத்தப்பட்ட நிரந்தரத் துருப்புகள். இது சுல்தான் ஆட்சியின் முக்கியமான போலீஸ் படையாக இருந்தது. மிருகத்தனத்துக்கும் கொடுமைக்கும் பெயர் பெற்ற படை இது. ஜார் போலீஸை லெனின் யானிச்சாரிகள் என்று அழைத்தார்.—269*

103 *முதல் ரு. ச. ஜ. தொ. க. காங்கிரஸ் மின்ஸ்க் நகரில் 1898 மார்ச்சு 1-3 (13-15)ல் நடந்தது. 6 அமைப்புகளைச் சேர்ந்த 9 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அது கட்சியின் மத்தியக் குழுவைத் தேர்ந்தெடுத்து ஓர் ''அறிக்கையும்'' வெளியிட்டது. காங்கிரஸ் முடிந்தபின் வெகு விரைவிலேயே மத்தியக் குழு உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். அக்காலத்தில் உள்ளூர் அமைப்புகளை ஒரு கட்சியாக ஒன்றுபடுத்துவது உண்மையில் நிகழவில்லை.—274*

104 சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ — *இரண்டாம் அகிலத்தின் நிரந்தர நிர்வாகக் குழுவும் தகவல் உறுப்பும் ஆகும். அகிலத்துடன் இணைந்த எல்லா சோஷலிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகித்தனர். ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகளின் பிரதிநிதிகளாக கி. வ. பிளெஹானவும், ப. நி. கிரிச்சேவ்ஸ்கியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். 1905லிருந்து இதில் ரு. ச. ஜ. தொ. கட்சியின் பிரதிநிதியாக வி. இ. லெனின் இருந்தார். இது 1914ல் மறைந்தது.—278*

105 புரட்சிகரமான ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்பை *''உழைப்பாளர் விடுதலைக்'' குழுவும் அதன் ஆதரவாளர்களும் 1900 மே மாதத்தில் அமைத்தனர். ''வெளிநாட்டு ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகள் சங்கம்'' அதன் இரண்டாம் காங்கிரஸில் பிளவுண்டபின் இது ஏற்பட்டது. ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்பு மார்க்ஸியத்தை உருக்குலைக்கும் சந்தர்ப்பவாத முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்துப் போராடியது. ''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையையும்,'' பிளெஹானவின் பல குறுநூல்களையும் காவுட்ஸ்கி முதலியவர்களின் பல குறுநூல்களையும் அது வெளியிட்டது. 1901 அக்டோபரில் லெனின் யோசனையின் பேரில் அதுவும் ''இஸ்க்ராவின்'' வெளிநாட்டு அமைப்பும் ஒன்றுக இணைந்து ''வெளிநாட்டுப் புரட்சிகரமான ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதத்தின் லீக்காக'' அமைந்தது. —279*

106 *குறிப்பு 4 பார்க்க.—293*

107 வெளிநாட்டு சமூக-ஜனநாயகவாத ''பரிபா'' (''போராட்டம்'') குழுவை லெனின் குறிப்பிடுகிறார். இது 1900 கோடைக்காலத்தில் பாரிஸில் அமைக்கப்பட்டது; 1901 மே மாதத்தில் ''பரிபா'' எனும் பெயரை எடுத்துக் கொண்டது. ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதத்தில் இருந்த புரட்சிகரமான போக்கையும் சந்தர்ப்பவாதப் போக்கையும் சமரசப்படுத்த முயன்ற இந்தக் குழு 1901 ஜூனில் ஜினீவாவில் வெளிநாட்டு சமூக-ஜனநாயகவாத அமைப்புகளின் பரதிநிதிகளைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்ட முன்முயற்சி எடுத்தது. ''இஸ்க்ரா'' ''ஸார்யா'' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள், ''சோசியல் டெமாக்ரட்'' அமைப்பு, வெளிநாட்டு ''புந்த்'' கமிட்டி, ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கம்'' ஆகியன இந்த வெளிநாட்டு சமூக-ஜனநாயகவாத அமைப்புகளாகும். 1901 அக்டோபரில் நடந்த ஒற்றுமைக் காங்கிரஸின் பணியிலும் ''பரிபா'' குழு கலந்து கொண்டது. சமூக-ஜனநாயகவாதக் கோட்பாடுகளினின்றும் போர்த்தந்திரத்தினின்றும் திரிந்து சென்றதாலும், பிளவுபடுத்தும் செயல்களில் ஈடுபட்டதாலும், ருஷ்யாவிலுள்ள சமூக-ஜனநாயகவாத அமைப்புகளுடன் தொடர்பின்மையாலும் இந்தக் குழு இரண்டாம் ரு. ச. ஜ. தொ. க. காங்கிரஸில் அனுமதிக்கப்படவில்லை. இந்தக் காங்கிரஸ் இதைக் கலைத்துவிட்டது.—280

108 1902 மார்ச் 10 தேதியிட்ட ''இஸ்க்ரா'' இதழ் 18ல் ''கட்சியிலிருந்து'' எனும் பகுதியில் '''ஸார்யா' 'Vorwärts' உடன் நடத்திய வாதப்போர்'' என்று ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. இது இவ்வாதப்போர் சம்பந்தமாக ''ஸார்யா'', ''இஸ்க்ரா'' ஆசிரியர் குழுக்களின் கருத்து நிலையை விளக்கியது.—286

## பெயர்ப் பட்டியல்

**அக்ஸெல்ரோத், பா. ப.** [Axelrod, P. B.] *(1850-1928)—1870லிருந்து புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டவர்; 1883ல் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு அமைப்பதில் கலந்துகொண்டார். 1900லிருந்து ''இஸ்க்ரா'', ''ஸார்யா'' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் உறுப்பினராக இருந்தார். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் பின் மென்ஷிவிக் ஆகிவிட்டார்.—39, 68, 69, 100, 117, 140.*

**அலெக்சேயிவ், பி. அ.** [Alexeyev, P. A.] *(1849-1891)—1870களில் தலை சிறந்த புரட்சியாளராக இருந்தவர். நெசவுத் தொழிலாளி.—161.*

**ஆவுயெர், இ.** [Auer, Ignaz] *(1846-1907)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் பெயர்பெற்ற தலைவர்.—202.*

**இலொவைஸ்கி, தி. இ.** [Ilovaisky, D. I.] *(1832-1920)—பிற்போக்கான வரலாற்றாசிரியர், பொதுவிவகார எழுத்தாளர். புரட்சிக்கு முந்தைய ருஷ்யாவில் துவக்கப் பள்ளி உயர்நிலைப் பள்ளிகளுக்கு அதிகாரவகைப்பட்ட வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் எழுதியவர். அந்தப் பாடப் புத்தகங்கள் வரலாற்றை வெறுமே ஜார் மன்னர்களின், இராணுவத் தலைவர்களின் நடவடிக்கைகளாகக் குறுக்கித் தாழ்த்திவிட்டன.—19.*

**இவான்ஷின், வி. பா.** *(வி. இ.)* [Ivanshin, V. P.] *(1869-1904)—சமூக-ஜனநாயகவாதி, ''பொருளாதாரவாதத்தின்'' தலைவர்களில் ஒருவர்.—54, 67, 69, 70, 275.*

**எங்கெல்ஸ், ஃபிரீட்ரிஹ்** [Engels, Friedrich] *(1820-1895)* — *விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் மூலவர்களில் ஒருவர், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஆசான், தலைவர். மார்க்ஸின் நண்பர், போர்க்கூட்டாளி.—14, 20, 36, 40, 44, 48, 84, 125.*

**ஓவன், ராபர்ட்** [Owen, Robert] *(1771-1858)* — *மாபெரும் பிரிட்டிஷ் கற்பனு சோஷலிஸவாதி.—42.*

**ஓஸிரொவ், இ. க.** [Ozerov, I. Kh.] *(1869-1942)*— *முதலாளித்துவப் பொருளாதாரவாதி. மாஸ்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்.—173, 175, 176, 182.*

**கரேயிவ், நி. இ.** [Kareyev, N. I.] *(1850-1931)* — *மிதவாத முதலாளித்துவ வரலாற்றுசிரியர், பொதுவிவகார எழுத்தாளர். சமுதாயவியலில் அகநிலைப் பிரிவினரின் பிரதிநிதி.—78.*

**காட்கோவ், மி. நி.** [Katkov, M. N.] *(1818-1887)*—*பிற்போக்கான பொதுவிவகார எழுத்தாளர்.—136.*

**காவுட்ஸ்கி, கார்ல்** [Kautsky, Karl] *(1854-1938)* — *ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின், இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதலில் மார்க்ஸியவாதியாக இருந்து பின் மார்க்ஸியத்தை விட்டு மாறியவர். தொழிலாளர் இயக்கத்தில் மத்தியவாதம் எனும் சந்தர்ப்பவாதப் போக்கின் சித்தாந்தி—59, 60, 103, 104, 216, 286.*

**கிரிச்சேவ்ஸ்கி, ப. நி.** [Krichevsky, B. N.] *(1866-1919)*—*சமூக-ஜனநாயகவாதி, பொதுவிவகார எழுத்தாளர், ''பொருளாதாரவாதத்தின்'' தலைவர்களில் ஒருவர், ''ரபோச்சியே தேலோ'' பத்திரிகையின் ஆசிரியர்.—18, 19, 21, 72, 99, 126, 160, 171, 225, 233, 249, 260, 275, 276, 282, 284, 286.*

**குஸ்கோவா, எ. டி.** [Kuskova, Ye. D.] *(1869-1958)* — *ருஷ்ய முதலாளித்துவப் பிரமுகர், பொதுவிவகார எழுத்தாளர். பெர்ன்ஷ்டைன் போக்கில் இந்த அம்மையார் எழுதிய* "Credo" *எனும் ஆவணம் ''பொருளாதாரவாதத்தின்'' சாராம்சத்தை மிகவும் எடுப்பாக வெளியிட்டது.—30.*

**கெட்டு, ழூல்** [Guesde, Jules] *(1845-1922)—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம் இரண்டாம் அகிலம் ஆகியவற்றின் அமைப்பாளர்களில், தலைவர்களில் ஒருவர்.—103.*

**சல்திக்கோவ்-ஷெத்ரீன், மி. எ.** [Saltykov-Shchedrin, M. Ye.] *(1826-1889)—மாபெரும் ருஷ்ய நையாண்டி இலக்கிய எழுத்தாளர், புரட்சிகரமான ஜனநாயகவாதி.—200.*

**சாவின்கவ், ப. வ.** [Savinkov, B. V.] *(1879-1925) — சோஷலிஸ்டு-புரட்சிவாதக் கட்சியின் முக்கியமான ஊழியர், பயங்கரவாதி.—155, 159, 160,193—195, 198, 200, 210.*

**செரெப்ரியக்கோவ், எ. அ.** [Serebrykov, Ye. A.] *(1854-1921)—ருஷ்யாவின் புரட்சிகரமான நரோதியவாதி. 1879ல் ''நரோத்னயா வோல்யா'' கட்சியில் சேர்ந்தார். 1883ல் வெளிநாட்டில் குடியேறினர். 1899-1902 இடையே லண்டனிலிருந்து ''நகனுனே'' பத்திரிகை வெளியிட்டார்.—212, 213.*

**செர்னிஷேவ்ஸ்கி, நி. க.** [Chernyshevsky, N. G.] *(1828-1889)—மாபெரும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, அறிஞர், எழுத்தாளர், இலக்கிய விமர்சகர்.—40.*

**டூரிங், ஒய்கேன்** [Dühring, Eugen] *(1833-1921)—ஜெர்மன் கதம்பவாத தத்துவஞானி, விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி; தம்முடைய தத்துவஞானத்தில் கருத்துமுதல்வாதத்தையும் விஞ்ஞானச் சிறப்பற்ற பொருள் முதல்வாதத்தையும் நேர்காட்சிவாதத்தையும் இணைத்தார்; இயக்கமறுப்பியல்வாதி.—20.*

**த்காச்சோவ், பி. நி.** [Tkachyov, P. N.] *(1844-1885) — புரட்சிகரமான நரோதியத்தின் சித்தாந்திகளில் ஒருவர், பொது விவகார எழுத்தாளர், இலக்கிய விமர்சகர்.—263.*

**நி.நி.**—*புரொகபோவிச் செ.நி. பார்க்க.*

**நதேழ்தின், ல.** *(செலென்ஸ்கி, யெ. ஓ.)* [Nadezhdin L. (Zelensky, Ye. O.)] *(1877-1905)—அவருடைய அரசியல் வாழ்க்கை நரோதியத்திலிருந்து துவங்கியது. 1898லிருந்து சமூக-ஜனநாயகவாதி. 1900ல் ஸ்வித்ஸர்லாந்தில் குடியேறினர். அவருடைய நூல்களில் ''பொருளாதாரவாதிகளை'' ஆதரித்தார், பயங்கரவாதத்தை எடுத்துப் பேசி*

ஞர். லெனினுடைய ''இஸ்க்ராவை'' எதிர்த்தார்.—*234, 237, 238, 243, 246, 248, 250, 252-254, 262, 263, 265, 266, 268, 269.*

**நார்ட்ஸீஸ், துபொரீலொவ்** — *மார்த்தவ், லெ. பார்க்க.*

**நைட், ராபர்ட்** [Knight, Robert] — *பிரிட்டிஷ் தொழிற் சங்க இயக்கத்தின் தலைசிறந்த தலைவர்.—124, 125.*

**B-v**—*சாவின்கவ், ப.வ. பார்க்க.*

**பக்கூனின், மி. அ.** [Bakunin, M. A.] *(1814-1876)* — *ருஷ்யப் புரட்சியாளர் பொதுவிவகார எழுத்தாளர்; 1848-49 ஜெர்மன் புரட்சியில் பங்கெடுத்தவர்; நரோதியம், அராஜகவாதம் ஆகியவற்றின் சித்தாந்தி. முதலாவது அகிலத்தில் மார்க்ஸியத்தின் கொடிய பகைவனாக இருந் தார். பிளவு வேலையில் ஈடுபட்டிருந்ததற்காக அவர் 1872ல் ஹேக் நகரில் நடந்த காங்கிரஸில் அகிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்டார்.—42.*

**பால்ஹோர்ன், இயோஹான்** [Balhorn, Johann] — *16ம் நூற் றுண்டைச் சேர்ந்த ஜெர்மன் நூற் பதிப்பாளர்.— 104.*

**பீசரெவ், தி. இ.** [Pisarev, D. I.] *(1840-1868)* — *தலைசிறந்த ருஷ்யப் புரட்சியாளர், ஜனநாயகவாதி, பொதுவிவகார எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், பொருள்முதல்வாதி. —261.*

**பிரென்டானோ, லூயோ** [Brentano, Lujo] *(1844-1931)* — *ஜெர்மன் முதலாளித்துவப் பொருளாதாரவாதி, ''அரசு வழி சோஷலிஸம்'' என்கிற கொள்கையை எடுத்துப் பேசியவர். சீர்திருத்தங்களின் மூலமாகவும் முதலாளிகள் தொழிலாளிகள் நலன்களைச் சமரசப்படுத்துவதின் மூல மாகவும் முதலாளித்துவக் கட்டுக் கோப்புக்குள்ளேயே சமுதாயச் சமநிலையைச் சாதிக்க முடியும் என்று சொன்ன வர். பிரென்டானோவும் அவருடைய ஆதரவாளர்களும் மார்க்ஸியச் சொற்றொடர்களின் திரை மறைவிலே பாட் டாளி வர்க்க இயக்கத்தை முதலாளி வர்க்க நலன் களுக்குப் பலியிட முயன்றனர்.—147.*

**பிளெஹானவ், கி. வ.** *(பேல்ட்டொவ் நி.)* [Plekhanov, G. V. (Beltov N.)] *(1856-1918)* — *ருஷ்யத் தொழிலாளர்*

இயக்கத்திலும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திலும் முக்கியமான தலைவர்; ருஷ்யாவில் முதன்முதலாக மார்க்ஸியத்தைப் பிரச்சாரம் செய்தவர். 1883ல் ஜினீவா நகரில் ''உழைப்பாளர் விடுதலைக்'' குழு எனும் முதன்முதலான மார்க்ஸியக் குழுவை உண்டாக்கினார். லெனினுடன் சேர்ந்து ''இஸ்க்ரா'', ''ஸார்யா'' பத்திரிகைகளில் ஆசிரியர் பணி புரிந்தார்.—*18, 68, 78, 100-102, 104, 159, 161, 162, 212, 213, 260, 282.*

**புருதோன், பி. ஜோ.** [Proudhon, Pierre Joseph] *(1809-1865)*—பிரெஞ்சு பொதுவிவகார எழுத்தாளர், பொருளாதாரவாதி, சமுதாயவியலாளர், சிறுமுதலாளித்துவச் சித்தாந்தி, அராஜகத்தை நிறுவியவர்களில் ஒருவர்.—*42, 61.*

**புரொகபோவிச், செ. நி.** *(நி. நி.)* [Prokopovich, S. N. (N. N.)] *(1871-1955)*—முதலாளித்துவப் பொருளாதாரவாதி, பொதுவிவகார எழுத்தாளர்; பொருளாதாரவாதத்தின் சிறந்த பிரதிநிதி.—*29, 30, 63, 64, 97, 167, 275.*

**புல்காக்கொவ், ஸெ. நி.** [Bulgakov, S. N.] *(1871-1944)*—முதலாளித்துவப் பொருளாதாரவாதி, கருத்துமுதல்வாதி.—*35, 275.*

**பெர்தியாயிவ், நி. அ.** [Berdyayev, N. A.] *(1874-1948)*—பிற்போக்கான கருத்துமுதல்வாதி, மாயாவாதி. 1890களின் இறுதியில் சமூக-ஜனநாயகவாத இயக்கத்துக்கு உதவினார். மார்க்ஸ் தத்துவத்தைத் திருத்த முற்பட்டு விரைவில் அதன் பகிரங்கமான எதிரி ஆகிவிட்டார்.—*275.*

**பெலீன்ஸ்கி, வி. கி.** [Belinsky, V. G.] *(1811-1848)*—ருஷ்யாவின் மாபெரும் புரட்சிகரமான ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், பொதுவிவகார எழுத்தாளர், பொருள்முதல்வாதி.—*40.*

**பெர்ன்ஷ்டைன், எடுவார்டு** [Bernstein, Eduard] *(1850-1932)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின், இரண்டாம் அகிலத்தின் மிகத்தீவிரமான சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்; திருத்தல்வாதத்தின், சீர்திருத்தவாதத்தின் தத்துவாசிரியர்.—*12, 14, 18, 19, 21—23, 29, 33, 72, 75, 78, 95, 97, 171, 216, 266, 281, 284.*

**பேபெல், ஔகுஸ்ட்** [Bebel, August] *(1840-1913)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலும் இரண்டாவது

அகிலத்திலும் மிகவும் பெயர் பெற்ற தலைவர்.—22, 103, 104, 184, 201, 260.

பேல்ட்டொவ், நி. [Beltov, N.] — பிளெஹானவ் கி. வ. பார்க்க.

பொத்ரேசவ், அ. நி. (ஸ்டரொவேர், அ. நி.) [Potresov, A. N. (Starover, A. N.)] *(1869-1934)—1890களில் மார்க்ஸிய வாதிகளுடன் சேர்ந்தார்; ''இஸ்க்ரா'', ''ஸார்யா'' பத்திரிகைகளைத் துவக்குவதில் பங்கு கொண்டார். பிற்காலத்தில் மென்ஷிவிக் ஆனார்.—24.*

மார்க்ஸ், கார்ல் [Marx, Karl] *(1818-1883) — விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் மூலவர், ஒப்பற்ற சிந்தனையாளர், பாட்டாளி வர்க்கத்தின் தலைவர், ஆசான் எனத் திகழ்கிறவர்.—5, 14, 38, 39, 48, 125, 281.*

மார்தினவ், அ. (பீக்கெர், அ. ஸ.) [Martynov, A. (Piker, A. S.)] *(1865-1935)—''பொருளாதாரவாதத்தின்'' தலைவர்களில் ஒருவர், முக்கியமான மென்ஷிவிக்.—72, 82, 83, 86, 89, 93—97, 99—105, 109—112, 116, 121, 124 126, 130—132, 139, 140, 160, 165, 171, 234, 249, 250, 270, 275, 276, 284, 288.*

மார்த்தவ் லெ. [Martov, L.] (ஸெதெர்பௌம் யூ. ஓ., நார்ட் ஸீஸ் துபொரீலொவ்) *(1873-1923)—மென்ஷிவிக் தலைவர், 1890களிலிருந்து சமூக-ஜனநாயகவாத இயக்கத்தில் பங்கெடுத்தவர். 1895ல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ''பாட்டாளி வர்க்க விடுதலைக்கான போராட்டக் குழுவை'' அமைப்பதிலும் ''இஸ்க்ரா'' பத்திரிகையைத் துவக்குவதற்கான தயாரிப்புகளிலும் கலந்து கொண்டார். ''இஸ்க்ரா'' ஆசிரியர் குழு உறுப்பினர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் பின் மென்ஷிவிக் தலைவரானார்.—79, 98.*

மிகைலோவ்ஸ்கி, நி. க. [Mikhailovsky, N. K.] *(1842-1904)—மிதவாத நரோதியத்தின் தலைசிறந்த தத்துவாசிரியர், பொதுவிவகார எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், நேர் காட்சிவாத தத்துவஞானி.—78, 273.*

மியுல்பெர்கர், அர்ட்டூர் [Mülberger, Arthur] *(1847-1907)—ஜெர்மன் சிறுமுதலாளித்துவப் போக்கான பொதுவிவகார எழுத்தாளர், புருதோனைப் பின்பற்றியவர்.—20.*

**மில்லெராண்ட், அலெக்ஸாந்தர் எதியேன்** [Millerand, Alexander Etienne] *(1859-1943)* — *பிரெஞ்சு அரசியல் தலைவர். 1890களில் சோஷலிஸ்டுகளுடன் சேர்ந்தார், பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் போக்குக்குத் தலைமை தாங்கினார். 1899ல் பிற்போக்கான முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து அதில் தளபதி கலீபேயுடன் (பாரிஸ் கம்யூனைப் படுகொலை செய்தவன்) ஒத்துழைத்தார்.—12, 14, 281, 286.*

**மீஷ்கின், இ. நி.** [Mishkin, I. N.] *(1848-1885)* — *நரோதியத்தின் தலைசிறந்த தலைவர்.—161, 213.*

**மெஷேர்ஸ்கி, வி. ப.** [Meshchersky, V. P.] *(1839-1914)* — *பிற்போக்கான பொதுவிவகார எழுத்தாளர்.—136.*

**மேரிங், பிரான்ஸ்** [Mehring, Franz] *(1846-1919)* — *ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த தலைவர், ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில், தத்துவாசிரியர்களில் ஒருவர்.—75.*

**மோஸ்த், யோஹன் யோஸிப்** [Most] *(1846-1906)* — *முதலில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதியாய் இருந்தார்; பிறகு அராஜகவாதி ஆனார்.—20, 75, 185.*

**ஆர்.எம்.**—*''நம் எதார்த்தம்'' எனும் கட்டுரையை எழுதியவர்; இது ''ரபோச்சயா மிஸ்ல்'' (தொழிலாளர் சிந்தனை) பத்திரிகையில் (1899 செப்டம்பரில்) தனி இணை மலராக வெளியிடப்பட்டது. இது பொருளாதாரவாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறியது.—74, 97, 105, 165, 275, 276.*

**ரிட்டிங்ஹவுசன், மோரிட்ஸ்** [Rittinghausen, Moritz] *(1814-1890)* —*ஜெர்மன் ஜனநாயகவாதி.—216.*

**லஃபார்க், போல்** [Lafargue, Paul] *(1842-1911)* — *சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் தலைசிறந்த தலைவர்; கெட்டுடன் சேர்ந்து பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியை நிறுவியவர். பிரான்ஸில் விஞ்ஞானக் கம்யூனிஸத்தை முதன்முதலில் தழுவியவர்களில் ஒருவர். மார்க்ஸ் எங்கெல்ஸ் அகியோரின் நண்பர், போர்க்கூட்டாளி.—103.*

**லஸ்ஸால், ஃபெர்டினண்ட்** [Lassalle, Ferdinand] *(1825-1864)*—*ஜெர்மன் சிறுமுதலாளித்துவப்போக்கான பொது*

*விவகார எழுத்தாளர், வழக்குரைஞர்; ஜெர்மன் பொதுத் தொழிலாளர் சங்கத்தை நிறுவியவர். பிரஷ்யாவின் தலைமையின்கீழ் ''மேலிருந்து'' ஜெர்மனியை ஒன்றுபடுத்தும் கொள்கையை ஆதரித்தவர். ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கின் தந்தை. —5, 12, 20, 63.*

**லாவ்ரோவ், பி. எல்.** [Lavrov, P. L.] *(1823-1900) — நரோதியத்தின் தலைசிறந்த சித்தாந்தி, சமுதாயவியலில் அகநிலைப் பிரிவினரின் பிரதிநிதி.—206.*

**லீப்க்னெஹ்ட், வில்ஹெல்ம்** [Liebknecht, Wilhelm] *(1826-1900)—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின், உலகத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த தலைவர்; ஜெர்மன் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தின் மூலவர்களில், தலைவர்களில் ஒருவர். மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் நண்பர், போர்க்கூட்டாளி.—75, 125, 184.*

**வரன்ட்ஸோவ், வ.பா.** *(வி. வி.)* [Vorontsov, V. P.] *(1847-1918) —பொருளாதாரவாதி, பொதுவிவகார எழுத்தாளர்; 1880களிலும் 1890களிலும் மிதவாத நரோதியத்தின் சித்தாந்தி. ருஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ந்துவருவதை அங்கீகரிக்க மறுத்தவர், விவசாயிகளின் கம்யூன்களை இலட்சியநிலைக்கு உயர்த்திப் போற்றியவர். ஜாராட்சியுடன் சமரசம் செய்துகொள்வதை ஆதரித்துப் பேசி மார்க்ஸியத்தைக் கடுமையாக எதிர்த்தவர்.—56, 57, 68, 72, 77.*

**வஸீலியெவ், நி. வ.** [Vasilyev, N. V.] *(பிறப்பு 1855) — போலீஸ் கர்னல், ஸுபாத்தவின் ''போலீஸ் சோஷலிஸத்தை'' எடுத்துப் பேசியவர்.—173, 174.*

**வால்டைஹ், கார்ல் யூலியஸ்** [Vahlteich, Karl Julius] *(1893-1915)—ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி.—20.*

**வானேயிவ், அ. அ.** [Vaneyev, A. A.] *(1872-1899) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. 1895ல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ''பாட்டாளி வர்க்க விடுதலைப் போராட்டச் சங்கத்தை'' அமைப்பதில் தீவிரமாகப் பங்கெடுத்தார்; தொழிலாளர்களின் சமூக-ஜனநாயகவாதப் பயிற்சி வட்டங்களில் பிரச்சாரகர். 1897ல் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.—49, 52.*

வி.இ.—இவான்ஷின் வி.பா. பார்க்க.

வி.வி.—வரன்ட்ஸோவ், வ.பா. பார்க்க.

வில்ஹெல்ம், இரண்டாவது (ஹோஹென்ட்ஸோலர்ன் அரசவம்சம்) [Wilhelm II (Hohenzollern)] *(1859-1941)* — *ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் (1888-1918).—149.*

வே.இ.—*ஸஸூலிச், வே.இ. பார்க்க.*

வைட்லிங்கு, வில்ஹெல்ம் [Weitling, Wilhelm] *(1808-1871)* —*ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியத் தலைவர்; சமத்துவவாத கற்பனை சோஷலிஸத்தின் தத்துவாசிரியர்களில் ஒருவர்.—61.*

வெப் [Webb], ஸிட்னேய் *(1859-1947),* பியாட்ரீஸ் *(1858-1943)—பெயர்பெற்ற பிரிட்டிஷ் பிரமுகர்கள், சீர்திருத்தவாதிகள்; பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, தத்துவம் பற்றிப் பல நூல்கள் எழுதியவர்கள்.—94, 214.*

வீட்டே, செ. யூ. [Vitte, S. Yu.] *(1849-1915)* — *19ம் நூற்றுண்டின் முடிவிலும் 20ம் நூற்றுண்டின் துவக்கத்திலும் இருந்த பிற்போக்கான ருஷ்ய அரசியலாளர்.—143.*

வோர்ம்ஸ், அ. எ. [Vorms, A. E.] *(1868-1937)* — *மாஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர், மிதவாதி.—173.*

வோல்ட்மன், லுத்விக் [Woltman, Ludwig] — *பிற்போக்கான ஜெர்மன் சமுதாயவியல் மானிடவியல் வல்லுநர்; பொருளாதாரப் போராட்டமே தொழிலாளர் இயக்கத்தின் முதல் முக்கியப் பணி என்று கருதியவர்.—72.*

வோல்மர், ஜார்ஜ் ஹைன்ரிஹ் [Vollman, Georg Heinrich]*(1850-1922)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் சந்தர்ப்பவாதப் பிரிவினரின் தலைவர்களில் ஒருவர், பத்திரிகையாளர்.—14.*

ழெலியாபொவ், அ. இ. [Zhelyabov, A. I.] *(1850-1881)—தலைசிறந்த ருஷ்யப் புரட்சியாளர், ''நரோத்னயாவோல்யா'' கட்சியின் அமைப்பாளர், தலைவர்.—161, 213, 260.*

ஷுல்ஸ்-டெலிட்ஷ், கெர்மான் [Schulze-Delitzsch, Germann] *(1808-1883)*—*விஞ்ஞானச்சிறப்பற்ற ஜெர்மன் பொருளாதாரவாதி, பிரமுகர். முதலாளி தொழிலாளி நலன்களிடையே இசைவிணக்கம் காண முடியும் என்று எடுத்துப்பேசியவர்.—63.*

ஷ்ராம், கார்ல் ஔகுஸ்த் [Schramm, Karl August] — *ஜெர்மன் பொருளாதாரவாதி.—75.*

ஷ்வைட்ஸர், இயோஹான் பப்தீஸ்த் [Schweitzer, Johann Baptist] *(1833-1875)* — *ஜெர்மன் பிரமுகர், எழுத்தாளர், லஸ்ஸால் ஆதரவாளர், வழக்குரைஞர்.—75.*

ஸஸூலிச், வே. இ. [Zasulich, V. I.] *(1849-1919)* — *ருஷ்யாவின் நரோதிய இயக்கத்திலும், பிற்காலத்தில் சமூக-ஜனநாயகவாத இயக்கத்திலும் அரும் பங்காற்றியவர்.—208.*

ஸான்-ஸிமோன், ஹென்ரி கிளோட் [Saint-Simon, Henri Claude] *(1760-1825)*—*மாபெரும் பிரெஞ்சு கற்பனு சோஷலிஸ்டு.—42.*

ஸுபாத்தவ், செ. வ. [Zubatov, S. V.] *(1864-1917)* — *போலீஸ் கர்னல், ''போலீஸ் சோஷலிஸத்தை'' அமைத்தவர்; தொழிலாளிகளை அரசியல் இயக்கத்திலிருந்து திசை திருப்பிவிடுவதற்காக 1901-1903 இடையே போலீஸின் கீழ் தொழிற்சங்கங்களை அமைத்தார்.—29, 63, 66, 173, 175, 176.*

ஸ்டரொவேர் [Starover]—*பொத்ரேசவ், அ. நி. பார்க்க.*

ஸ்துருவே, பி. ப. [Struve, P. B.] *(1870-1944)*—*ருஷ்ய முதலாளித்துவப் பொருளாதாரவாதி, பொதுவிவகார எழுத்தாளர். 1890களில் ''சட்டபூர்வமான மார்க்ஸியத்தின்'' மிக முக்கியமான பிரதிநிதி.—27, 63, 64, 97, 175, 266, 275.*

ஹால்தூரின், செ. நி. [Khalturin, S. N.] *(1856-1882)*—*ருஷ்யாவில் முதன்முதலான புரட்சிகரமான தொழிலாளிகளில் ஒருவர்.—161.*

ஹாஸல்மான், வில்ஹெல்ம் [Hasselmann, Wilhelm] *(பிறப்பு 1844)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, பிற்காலத்தில் அராஜகவாதியானவர்.—75, 185.*

**ஹிர்ஷ், மாக்ஸ்** [Hirsch, Max] *(1832-1905) — ஜெர்மன் முதலாளித்துவப் பொருளாதாரவாதி, பொதுவிவகார எழுத்தாளர். அவருடைய நூல்களில் மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே ''இசைவிணக்கத்தை'' ஏற்படுத்தும் கருத்தை முன்வைத்தார், சீர்திருத்தவாதத்தை ஆதரித்தார்.—57, 64.*

**ஹெகல், கியோர்க் வில்ஹெல்ம்** [Hegel, Georg Wilhelm] *(1770-1831)—மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் உன்னதமான தலைவர், புறநிலைக் கருத்துமுதல்வாதி, கருத்துமுதல்வாத இயக்கவியலை முழுவடிவில் வகுத்து விளக்கியவர்.—41.*

**ஹெர்ட்ஸன், அ. இ.** [Hertzen, A. I.] *(1812-1870)—மாபெரும் ருஷ்யப் புரட்சியாளர், ஜனநாயகவாதி, பொருள்முதல்வாதி, பொதுவிவகார எழுத்தாளர்.—40.*

**ஹெர்ட்ஸ், ஃபிரீட்ரிஹ் ஆட்டோ** [Hertz, Friedrich Otto] *(பிறப்பு 1878) — ஆஸ்திரிய நாட்டுப் பொருளாதாரவாதி, சமூக-ஜனநாயகவாதி, திருத்தல்வாதி.—35.*

**ஹொஹ்பெர்க், கார்ல்** [Hoechberg, Karl] *(1853-1885) — ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி, பத்திரிகையாளர்.—75.*

**ஃபூரியே, ஷார்ல்** [Fourier, Charles] *(1772-1837)—மாபெரும் பிரெஞ்சு கற்பனு-சோஷலிஸ்டு.—42.*

**வாசக நேயர்களுக்கு**

*இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.*

*கடிதங்களைத் தயை செய்து,*

"Progress Publishers, 17,
Zubovsky Boulevard, Moscow, USSR"

*என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

வாசகர் தெரிவிப்பு

இந்நூலின் மொழிபெயர்ப்பு, வடிவமைப்பு பற்றிய உங்கள் கருத்துகளைத் தெரிவித்தால் நாங்கள் நன்றியுடையோம். உங்களுடைய பிற ஆலோசனைகளையும் பெற மகிழ்ச்சியடைவோம்.

எங்கள் முகவரி: முன்னேற்றப் பதிப்பகம்,

"Progress Publishers, 17

Zubovsky Boulevard, Moscow, USSR"

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41, பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்
136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி., மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்
3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

**В. И. Ленин**
ЧТО ДЕЛАТЬ?
*На тамильском языке*